# ஞான லோகம்

# என்னும் யுக்திசாகரம்

அரவக்குறிச்சி

திருப்பதி சுவாமிகள்.

த

உ

# ஞானலோகம் என்னும் யுக்தி சாகரம்

இ:ஃது

மூலம், பதவுரை, பொழிப்புரையுடன்

அடியார்க்கடியாரென்னும் (அரவக்குறிச்சி)

ஸ்ரீலஸ்ரீ திருப்பதி சுவாமிகளால் இயற்றப்பட்டு,

ஸ்ரீ பரிபூரணாநந்த சுவாமிகளென்னும்

இராமலிங்க பிர்ம்மேந்திரரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

— திரிசிரபுரம் ஜில்லா —

சுவாமிகளின் சீடர்

வாங்கல், ரெ. வேங்கடசாமி அடியார்,

கரூர், V. R. துரைசாமி அடியார்

இவர்களின் பொருளுதவியையும் பெற்று

கரூர்,

## T. K. இராமசாமி நாயுடு அவர்களால்

பிரசுரிக்கப்பட்டுள்ளது.

[காபிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது]

தஞ்சாவூர்

லாலி எலக்டிரிக் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1950-ம் வருஷம் நவம்பர் ௴ } இதன் விலை ரூ. 5. { விகிருதி ஆண்டு கார்த்திகைத் திங்கள்

ஸ்ரீகணேசாயநம :

# நூன்முகம்

இந்நூல், யாம் இதுவரையுங் கண்டிராத இனிய அத்துவிதச் சுவை ததும்பும் அருமை வாய்ந்தது. இந்நூலாசிரியராகிய அடியார்க் கடியாரென்னும் திருப்பதி சுவாமிகள் திரிசிரபுரம் ஜில்லா கரூரைச் சார்ந்த அரவக்குறிச்சியில் முத்தரசவமிசத்தில் அவதரித்தவர்.

2. சுவாமிகளது முன்னோர்கள் ஓரிடத்தை அன்புடன்காத்து இப்பெயர் பெற்றிருப்பார்கள். ஆனால் நம் சுவாமிகளோ, இவ்வுலக முழுதும் இகபரமெனு மிரண்டு பலனையுமெவ்வித இடையூறுமின்றி யெய்தும் வண்ணம், உலகுக்கெல்லாம் ஆதிமூலமாந் தலைவன்றன் கட்டளைப்படி காத்து, உள்ளும் வெளியுமே ஓயாது உலவிப் பேத வலையிற் பேதுறச்செய்தே அவித்தையிருளி லல்லற்படுத்தும் அகங்கரக்கள்வர் தம்மினத்தொடு மாய்ந்திட, அபரசூரியனாக விளங்கி, அறியாமையினால் அலைந்திடும் உலகுக்கறிவுச்சுடர் கொளுத்தி, சச்சிதானந்த பூரணபயனைப் பெற்றிடச் செய்து, தலைவன் றன்னைக்கண்டு அன்புடனணுகி நின்றனர். இவரது காவற் றிறமையும் பேரன்புங்கண்ட பெருமான், தன்னுடைமை யாவு மிவரதாக்கி, அபேதமாயனுபவிக்கும் வண்ணம் அருளினன். நம் சுவாமிகள், பெருமானருட் பேறுபெற்றதனால், எல்லாவுலகமும் இறைவன் மயமாக இலங்குதல் கண்டு, ஞானலோகமாக்கத் துணிந்தனர். உலகெலாம் பல்துறையிலும் பக்தியும், ஞானமும் பரவி முத்திப்பயன் பெற்று உவக்கவைத்தனர். முத்தமிழ் முனிவரன் உவர் நீர்க்கடல் உண்டுவிருத்திரனை வெளிப்படச் செய்தனன். நம் நற்றமிழ் முனிவரன் நன்னீர்க் கடலுண்டு அவித்தையளறுடன் அகங்கார வசுரனை அறவே ஒழித்தனன்.

## இவர் இயற்றிய நூல்களாவன.

3. (1) ஞானலோகம் என்னும் யுக்திசாகரம்.
(2) வித்தியாகீதை.
(3) பழமொழிப் போதம்.
(4) பக்திநெறி.
(5) முக்திநெறி.
(6) திருநாமமாலை,
(7) தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்.
(8) சிவசூத்ர விமரிசனம்.
(9) தேவீஸ்தோத்திரம் முதலியன.

இவர் இன்னும் அநேக தனிக்கவிகளும் வேண்டியவர்க்கிணங்க இயற்றியுள்ளனர். இவர் பேரருள் பெற்ற ஓர் வரகவியாவர். இவர் இயற்றிய நூல்களும் கவிகளும் நாற்கவிப் புலமையும் இலக்கணச் செறிவும் இலக்கிய வமைதியும் உண்மை யுணர்ச்சியும் அமையப்பெற்றுள்ளன.

### நூற்பயன்.

4. இந்நூற்களை வெளிப்படுத்தி, உபகரிப்பவர்களுக்கும், வாங்கியன்புடன் படித்துப் பயனடைய விரும்பும் பாக்கியசாலிகளுக்கும் யான் தெரிவிக்கவேண்டிய தொன்றுண்டு. அது என் கடமையாகும். உலகின்கண் சிறுநோய்தீரப் பெரும்பொருள் செலவிடும் நாம், ஸ்ரீ சுவாமிகள், உலகெலாம் பிறவிப் பிணி தீரவும் பிறவிநோய் வராமற்றடுக்கவும், நோய்வாய்க்குங் காரண முணரவும் பிறவிப்பகை யொழிந்து இறவா இன்பம் எய்தவும், உலவா அமுத ஊற்றெனும் உண்மையனுபவ மொழிகளால் நலம்பெற இயற்றியருளிய நன்னூற்களை, அன்புடன் ஏற்று உண்மை அறிவுற்று பரமானந்தப் பெரும் பேறுபெற்று, சுவாமிகளின் அதிட்டான மடாலயத் திருப்பணிக்கு இயன்றவரை உள்ளன்புடன் பொருளுதவி செய்து, நோயற்ற வாழ்வுங் குறைவற்ற செல்வமும் பொருந்தி, நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவன் இனிது அருள் புரிவாராக.

இங்ஙனம்,
ஸ்ரீபரிபூரணாநந்த ஸ்வாமிகள் என்னும்
இராமலிங்க பிர்ம்மேந்திரர்.

அடியார்க் கடியாரென்னும் ஸ்ரீலஸ்ரீ திருப்பதி சுவாமிகளின்மீது
ஸ்ரீபரிபூரணாநந்த ஸ்வாமிகளென்னும் இராமலிங்க
பிர்ம்மேந்திரர் இயற்றிய

## சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

சீர்திகழ் பொன்னிசூழ் திரிசிர புரஞ்சேர்
பார்புகழ் பசுபதிச் சுரருறை கரூர்பால்
ஏர்மலியரவக் குறிச்சி யெழில்பெற
ஆரணி யையங்கர னருளி னுதித்தநன்
நீரணி திருப்பதி நின்மலப்பெ யரோன்
சார்தரு மன்பினிற் சற்குரு கடாட்சம்
வாய்ந்திடப் பெற்று மெய்ஞ் ஞானவாநந்தம்
தோய்ந்து நற்பிரம சரியத் தூய்மையோ
டார்ந்தன னழியா வத்துவி தச்சுவை
ஓர்ந்தன னடக்க வொழுக்கமோ டுண்மைநூல்
ஆய்ந்தனன் ஞான லோகமாம் உத்திப்
பௌவ மதனுடன் பழமொழிப் போதமும்
நார்மிகு பக்தி நெறியுநன் முத்தி
நேர்படு நெறியொடு வித்தியா கீதையும்
ஏர்பெற வியற்றின னியாவரும்
சீரிய ராகத் திகழ்வகை தேர்ந்தென்.

வாழ்த்துப்பா.

திருப்பதி யாதோரென்றுஞ் சேருதற்கரிய வொண்ணைத்
திருப்பதி யுளத்தனென்று தேர்ந்திடுவோர்கள் முத்தித்
திருப்பதியடைய ஞானலோக மாநூலைச்செய்த
திருப்பதியென்னு ஞான தேசிகனன்பர் வாழி

உ

ஓம்

# அணிந்துரை.

ஞானலோகம் அல்லது யுக்திசாகரம் என்னும் அரியநூலைப் படித்துப் பார்த்தேன். என் அகத்தையுருக்கிச் சாந்தியுறச்செய்தது. இந்நூலின் செய்யுட்போக்கும், உரைநடைப்போக்கும் கற்றவர்கள் உவக்குங் கற்பகத்தருப் போன்று மிளிர்கின்றது. ஞானவுலகத்துக்குக் கொண்டு கூட்டும் நல்லேணியாகவே அமைந்துள்ளது. ஞானக் கண்ணாடியாகவே காட்சியளிக்கின்றது. இத்தகைய சீரிய நூலை நம் மக்களுய்யத் தந்த ஞானப் பெரியார், திருப்பதியாகிய, அரவக்குறிச்சியிற் றோன்றி ஆன்மாக்களுய்ய அருள்நெறி காட்டுவான் தவக்கோலம்பூண்டு உண்மைத் துறவியாய் உலகம் உவப்ப வலம்வந்து, கடம்பர் கோவிலென்னும் திருப்பதியில், ஒழிவிலொடுக்க சமாதி உற்ற தவஞானச் செல்வர், திருப்பதி சுவாமிகள் ஆவார்கள்.

இஞ்ஞான சம்பந்தன் அருள்வாக்கினின்று தோன்றிய இவ்வுயரிய நூலை ஒவ்வொரு அறிஞர் பெருமக்களும் கற்று இறைவன் திருவருட்பேற்றை பெற்றுய்யுமாறு விரும்புகின்றேன். அன்பு ஓங்குக ; இன்பம் வளர்க.

திருப்பதியா முயரரவக் குறிச்சிதவம்
பயனாகத் தேய முய்வான்
திருப்பதியென் பெயர்தாங்கித் திருஞானம்
உலகுய்யத் திகழ நின்ற
கருப்பதியா நல்லருளோன் கலைஞான
லோகமெனக் கவினுர் நூலைத்
திருப்பதியா யுவந்தளித்த திருஞானத்
தீஞ்செல்வன் திருத்தாள் போற்றி

சங்கேந்தி குக. சதாசிவ அடிகள்,
சிவானந்த நிலயம்,
திருத்துறைப்பூண்டி தாலூக்கா.

உ
சிவமயம்

## சா த் து க் க வி

ஞான வுலகமெனு நல்யுக்தி சாகரத்தை
யானென தென்பதற யாவருக்கும்—ஞானத்
திருப்பதியாந் தெய்வகுரு செய்தானல் லுள்ளத்
திருப்பதிகங் கொண்டா னிவண்

கற்றுங் கறிந்தடங்கிக் கண்டெவரும் போற்றவரும்
பற்றேதுமின்றிப் பரம்பொருளாய்—எற்றைக்கும்
நின்ற திருப்பதியா நின்மலன்சொல் லேவருக்கும்
மன்ற பிறப்பறுக்கு மன்.

இங்ஙனம்,

பண்டித, சித. நாராயணசாமி
திருவையாறு.

---

உ

## சாற்றுக்கவி

மெய்ஞ்ஞானப் பனுவல்பல மேலோர்கள் முன்னுளில்
விளம்பி னூர்கள்
இஞ்ஞாலத் தறிவுடையார் அவற்றைநனி யோர்ந்துள்ளத்
தின்புற் றூர்கள்
அஞ்ஞான மகற்றுதற்காக் குருவையடைந் தருள்பெற்றூர்
அநபூ திக்கண்
எஞ்ஞான்றுந் திளைத்தார்கள் அவர்உரைத்த உரையெல்லாம்
இனிக்கு மாலோ. (1)

அறிவாலே கல்வியால் கேள்வியால் நனியுணர்ந்த
அவற்றி னூங்குச்
செறிவாகும் அநுபவத்தால் உணர்ந்தவுண்மை சிறப்பாகும்;
தேரின் அங்ஙன்
குறிவாயாப் பொருளுணர்ந்த மெய்ஞ்ஞான அனுபவிகள்
கூறும் வாக்கு
முறிவாகாத் தேனுக அமுதாக மிகமணந்து
முகிழ்க்கு மம்மா (2)

அத்தகைய பனுவல்களில் ஞானலோ கப்பெயர்கொள்
அதுவும் ஒன்றும்
யுக்திசா கரமென்னு மொருபெயரும் அதற்குண்டாம
உருவ கத்தால்
நத்துபல வுண்மைகளை நனிவிளக்கி அறிவூட்டும்
நலநூல் இந்நூல்
உத்தமமாம் இதையியற்றிப் புகழ்பெற்ற பெரியோன்யார்
உரையென் பீரேல். (3)

இயம்பிடுவேன் : கல்வியினல் கேள்வியினல் ஒழுக்கத்தால்
ஏற்றம் வாய்ந்து
நயம்புகுந்த மெய்ஞ்ஞான சாதனத்தாற் சேகேறி
நவைகள் தேய்ந்து
பயம்புகுதா நெஞ்சினெடும் சாந்தவுரு இவனெனவே
பாரோர் போற்றி
வியந்திறைஞ்ச விளங்கினவன் திருப்பதியை யாவென்னும்
மெய்ம்மை ஞானி. (4)

அடக்கமெனுங் குணமுருவம் எடுத்தனைய திருக்கோலம்
அமைந்தோன் யாரும்
கடக்கஅறி யாவன்பு மொழிபகரும் நயகுணத்தான்
கலங்கா நெஞ்சன்
விடக்கரும்பாம் படக்குகின்ற ஒருவன்போல் பொல்லாரை
வெகுளி தீர்த்து
நடக்குநடை யினிற்சாந்தம் படரும்வகை செய்தருளும்
நல்ல சாது (5)

ஞானத்தின் மணம்வீசும் உளமுடையோன் அன்புமணம்
நன்கு வீசி
ஈனத்தின் நிழலில்லா நல்லுரையான் சாந்தமென
இசைக்கும் கோலன்
வானத்தில் விரிவடையும் புகழாளன் திருப்பதிப்பேர்
வாய்த்த சாது
மோனத்தில் இன்படையும் முழுநல்லோன் அநுபவத்தில்
முதிர்ந்தோன் அம்மா. (6)

கி. வா. ஜெகந்நாதன்,
1, நார்ட்டன்லேன்,
மயிலாப்பூர் - சென்னை.

ஓம் தத் ஸத் ஸத்குருவே நம:

ஸ்ரீ அடியார்க்கடியார் என்னும்

# ஸ்ரீலஸ்ரீ திருப்பதி ஸ்வாமிகளின் திவ்ய சரிதம்.

ஸ்வாமிகள் திரிசிரபுரம் ஜில்லா, கரூரைச் சார்ந்த அரவக் குறிச்சி என்னும் ஸ்தலத்தில் அவதரித்தவர்:—ஸ்வாமிகள் முத்தரச வம்சத்திலே உதித்தவர் - ஸ்வாமிகளின் தாயார், வெள்ளையம்மாள் என்னும் கற்பரசி; தந்தையார், திரு. சுப்பிரமணிய முத்தரசரென்னும் தர்மவான்; 'இவர்கள் இல்லறமல்லது நல்லறமன்று' என்பதைக் கடைப்பிடித்து, பசுநிரைகாத்தல், விருந்தினர் ஓம்பல், தேவ பூசை செய்தல், ஆதுலர்க்கு அன்னம் கொடுத்தல், முதலிய தங்களால் இயன்ற தருமங்களைச் செவ்வனே செய்து வந்தனர், கன்றுகள் நிரம்ப ஊட்டி மிகுந்த பாலையே கறந்து சேர்த்திடுவர். அநாதைக் குழந்தைகளுக்கு இலவசமாக தினம் பால்கொடுத்து உதவிவந்தனர்.

ஜனனம்: பெற்றோர்கள் செய்த புண்ணியத்தின் பயனாக கலியுகாதி 4975-க்கு ஸ்ரீமுக ஆண்டு மார்கழித்திங்கள் புதவாரம் அமரபக்ஷத் திரயோதசி 45-33 விசாகம் 14-5 அமிர்தகெடிகை கூடிய சுபதினத்தில் சூரிய உதயாதி, நாழிகை 12-41-க்கு கும்ப லக்கினத்தில் அரவநகர், ஸ்ரீ மு. சுப்பிரமணிய முத்தரசர் அவர்களின் 15-வது புண்ணிய ஞான குமாரர், ஸ்ரீ திருப்பதி ஸ்வாமிகளின் திவ்ய சுபஜெனனம்.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| ல<br>மா | இராசி | | |
| செ<br>சனி | | | |
| சூ | சந்-பு<br>சுக் | கே | வி |

ஸ்ரீ ஸ்வாமிகளது குலத்தினர் யாவரும், மாமிச உணவு ஏற்பவர்களெனினும் ஸ்வாமிகள் பிறவிச்சைவராகவே யமைந்தனர்.

ஸ்வாமிகள் தாய்ப்பால் அருந்துங்காலத்தில் தம் தாயார் மாமிசவுணவு உட்கொள்ளும் காலங்களில் தாய்ப்பா லருந்த இச்சிப்பதே இல்லை.

மாமிசசாரம் வாடை முற்றும் நீங்கும் வரையிலும் பால் குடிப்பது இல்லை. இப்படிப் பலதடவை நிகழ்ந்து வந்ததைக்கண்ட ஸ்வாமிகளின் வமிசத்தவராகிய வைத்தியநிபுணரும் அனுபவசாலியும்

மகானுமாகிய ஸ்ரீ திருமலை வைத்தியர் என்னும் சாது அதன் காரணத்தை யுணர்ந்து பெற்றோர்களிடம் சொன்னதின் பேரில் வீட்டிலுள்ளோர் அனைவரும் மாமிசவுணவை நீக்கிச் சைவ ராயினர்.

ஆரம்பக்கல்வி: ஸ்வாமிகள் 5-வது ஆண்டிலே பெற்றோர்கள் வழக்கப்படி ஸ்வாமிகளை பள்ளிக்கூடத்திலே படிக்கவைத்தனர் ஸ்வாமிகளும் ஆறுவது வகுப்பு முடிய படித்துத்தேர்ந்தனர். கல்விச் சாலைக்குப்போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் ஸ்வாமிகள் தமது இளைய சகோதரர் இராமலிங்க முத்தரசருடன் கூடி, கற்களை விக் கிரகங்களாக வைத்து உரியபூசை நிவேதனம் செய்து, அவல் கடலை, சர்க்கரை, முதலிய நிவேதனப் பண்டங்களை எல்லோருக்குங் கொடுத்து மகிழ்வதே ஸ்வாமிகளது நித்தியப்படி விளையாட்டுச் செய்கையாகும். கெட்டசொற்களை வசனிக்கும் வழக்கமே இவ ரிடம் கிடையாது. அச்சொற்களை கேட்கவும் சகியார், கெட்டகுண முள்ள பிள்ளைகளோடு பழகுவதுமில்லை.

மேல்படிப்பு: அரவநகருக்கு அருகாமையிலுள்ள நல்ல மாகாளிப்பட்டியில் குருக்கள் பரம்பரையிலுதித்த ஸ்ரீ தெய்வசிகா மணிக்குருக்கள் அவர்களை ஆசிரியராக அடுத்து அவரிடம் நன்னூல், நிகண்டு, தொல்காப்பியம், திருக்குறள், முதலிய இலக்கண இலக்கி யங்களை திறம்படக் கற்றுத்தேர்ந்தனர், அவரிடம் சில உபாசனைக் குரிய உபதேசங்களும் பெற்றனர்.

பாலிய விசேஷம்: அரவநகரிலிருந்து கரூர்போகும் பாதையிலே சுமார் 3-பர்லாங்கு தூரத்தில் ஸ்வாமிகளது தந்தைய ரின் தோட்டம் உண்டு. அதிலுள்ள நாவல்மரத்தின் கீழ்பாகத்தில் விக்கினேசுரர் கோவிலும், சத்திரமடமும், ஒன்றுகக்கட்டி கூரை வேயப்பட்டிருந்தது. அதில் வந்து தங்கும் ஏழைகளுக்கு நம்ஸ்வாமி களும் பிள்ளையாருக்கு பூசை நைவேத்தியம் செய்து அங்குவந்திருக் கும் அகதிகளுக்கு தம் தந்தையாரைப்போல் தாமும் அன்னமளித்து வருவதாயினர். அக்கோவிலும் மடமும் இப்போது மண்டபக் கட்டடமாக அமைந்திருக்கின்றன.

திருமணம்: ஸ்வாமிகளது தந்தையார் உலக வழக்கம்போல் ஸ்வாமிகளுக்குத் திருமணம் செய்துவைக்க ஏற்பாடு செய்தனர். இதையறிந்த நம் ஸ்வாமிகளோ தனக்கு மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளிலும் அகப்பட்டு அழிந்திட இஷ்டமில்லையென்று தெரிவித்துவிட்டு, அப்பொழுதே உள்ளத்தில் விரக்திகொண்டு முற் றத்துறந்து பேரின்பமணம் எய்தும் வண்ணம் சற்குரு தரிசனத் திற்கு ஆவல்கொண்டு உள்ளம் உருகுவாராயினர். அக்காலத்தில் ஸ்வாமிகளது கனவில் ஓர் உருவம் தோன்றி தனக்கு உபதேசம் செய்வதாகக் கண்டனர். அதுமுதல் அவ்வுருவம் ஸ்வாமிகளின் உள் ளத்தில் பதிந்திடவே அவ்வுருவத்தை நேரில்காண அன்புடன்

தியானித்து வருவாராயினர். சிலநாள் சென்றபின் திருவையாறு, என்னும் ஸ்தலத்துக்கு, ஸ்ரீ தெய்வசிகாமணி குருக்கள் சொல்லிய குறிப்பின்படி, பெற்றோர்களுடன் செல்வாராயினர்.

ஸத்குரு தரிசனம்: நம் ஸ்வாமிகள் திருவையாற்றில் தன் உள்ளத்தில் தியானித்துவந்த வடிவமாகிய பிரம்மஸ்ரீ சுயம்பிரகாச சிவானந்த ஸ்வாமிகளை நேரில்கண்டு சேவித்து ஸத்குருதரிசனம் அடையப்பெற்றார்; அதுமுதல் குருவுக்குப் பணிவிடையாற்றி, குருநாதரால் மகாவாக்கிய உபதேசம்பெற்று, வேதாந்த விசாரம் உற்று, அதற்கேற்ற நூல்களைக்கற்று, உண்மையுணர்ந்து ஒழுக்கமும் அடக்கமும் ஒன்றுசேரப்பொருந்தி, அபரோட்ச அனுபவமடைந்து, மோன நிலையிலமர்ந்து, குருநாதன் சந்நிதானத்திலேயேயிருந்து, அவரது தொண்டாற்றி வருவாராயினர்.

ஊருக்குத் திரும்பிவருதல்: ஸ்வாமிகளுக்கு குருநாதனைப் பிரிந்திருக்க மனதில்லாதிருந்தும் குருவின் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து அவர்கட்டளைப்படி ஊர்வந்து சேர்ந்தனர். வந்தகாலத்தில் இளைய சகோதரர் ராமலிங்க முத்தரசரின் பத்தினியார் ஓர் ஆண்மகவை ஈன்றனர். ஸ்வாமிகள் அக்குழந்தைக்குத் தனது ஞானசாரியரின் திருநாமத்தைச் சூட்டி மகிழ்வெய்தியிருந்தனர்; அப்படியிருக்கும் பொழுதும் பிள்ளையார்கோவில் மடத்தில் தான் தங்கியிருப்பது வழக்கம். இளைய சகோதரர், ராமலிங்க முத்தரசர் வீட்டிலிருந்து தான் ஆகாராதிகள் தவராமல் கொண்டுவந்து கொடுக்கப்பட்டன.

ஸ்வாமிகள் கரையில்லாத வெள்ளை வஸ்திரத்தை இடுப்புக்கொன்றும்மேலுக்கொன்றுமாக அணிவது வழக்கம். இவைகளையே தினம் துவைத்து அழுக்கின்றித் தூய்மையாக அணிந்துகொள்வர். ஓலைப்பாயில் மரக்கட்டையைத் தலையணையாகவைத்துக்கொண்டுபடுப்பது வழக்கம். நாணயங்களைக் கையால் தொடுவதுமில்லை, பெண்களை நிமிர்ந்து பார்ப்பதுமில்லை. தமது பிதுரார்ச்சித சொத்துக்களைக்கூட இச்சித்ததில்லை. மனத்திலும் பார்வையிலும் வாக்கிலும் ஸ்வாமிகளுக்கு விகாரமென்பதே கிடையாது. ஸ்வாமிகள் கூட்டங்களில் கலவாமல் ஏகாந்தமாக மோன நிலையிலிருப்பதிலேயே நாட்டமுள்ளவர்; ஸ்வாமிகளின் தாயார் வெகுகாலம் ஜீவித்திருந்ததால் ஸ்வாமிகள் தமது 40-வயது வரையில் சமீபித்த ஸ்தலங்களுக்கு மட்டும் போவதும் தாயின் நினைவால் திரும்பிவருவதுமாக இருந்தனர்; ஊரிலிருக்குங்காலத்தில் பிள்ளையார் கோவில் மடத்தில் தங்கியிருப்பதும் கணேசருக்குப் பூசை செய்துவருவதும் தம்மை அடைந்த சீடர்களுக்குப் போதித்து வருவதுமாயிருந்தனர். ஸ்வாமிகள் இரண்டு வருடகாலம் நிர்விகற்ப சமாதியில் நிலைத்து ஞானம் ததும்ப அத்வைத உணர்வு பொங்கி உள்ளும் புறமும் ஒரே பிர்ம்மமயமாக விளங்கசகச சமாதியுற்று, உலகம் உய்யும் வண்ணம் ஸ்ரீ விநாயக மூர்த்தியின் அருளால் கருமம், பக்தி, ஞானம்

இவற்றால் முத்தியை எய்துவிக்கும் அரிய ஞான நூல்களை வெளிப் படுத்தலாயினர், அவையாவன :—

| | | |
|---|---|---|
| ஞானலோகம் என்னும் யுக்தி சாகரம் | - | முக்திநெறி |
| சிவசூத்திர விமர்சனி | - | பழமொழிப்போதம் |
| வித்தியாகீதை | - | பக்திநெறி |
| திருநாமமாலை | - | தேவிஸ்தோத்திரம் |

தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் முதலியன.

ஷை நூல்களுக்கு ஸ்வாமிகள் அரவநகர், கரூர், கடம்பர் கோவில் ஆகிய ஸ்தலங்களில் வசித்த காலங்களில் பதவுரை, பொழிப் புரைகளை வெளிப்படுத்தி அடியார்களைக்கொண்டு எழுதுவித்தனர்.

ஸ்வாமிகள் அரவநகரிலிருந்த காலத்தில் வாங்கல், ரெ வேங் கடசாமி என்னும் அடியேன் ஸ்வாமிகளை வந்தடுத்து மாணக்கனாகி மகாவாக்கிய உபதேசம்பெற்று ஸ்வாமிகளுக்கு அக்கால முதற் கொண்டே தொண்டு செய்து வருபவனாயிருக்கின்றனன்.

இன்னும் பல அடியார்களும் அன்பர்களும் ஸ்வாமிகளிடம் வந்து பணிந்து தொண்டாற்றிக் கல்வி கற்று சந்தேகந்தெளிந்து உப தேசம் பெற்றும் வருவாராயினர். அநேக சித்த புருஷர்களும் யோகி களும் சாதுக்களும் நம் ஸ்வாமிகளிடம் வந்து ஸ்வாமிகளின் ஆசை யகம்பாவமற்ற சுயம்பிரகாச சச்சிதானந்த விளக்கத்தைக்கண்டு, ஸ்வாமிகளிடம் தங்கி ஞானச் செல்வத்தையும் அருள் பிரகாசத்தை யும் பெற்றுச் செல்வராயினர்; அக்காலத்தில் ஸ்வாமிகளுக்கு ஆகா ராதிகள்கொடுத்துத் தொண்டு செய்துகொண்டு வந்த இளைய சகோ தரர் காலஞ் சென்றமையால் அவரால் ஏற்கனவே வாங்கப்பட் டிருந்த கடன் தொகைக்காக ஸ்வாமிகளது முன்னோர்கள் வைத் திருந்த பிள்ளையார்கோவில் மடத்தைச் சேர்ந்த நிலங்கள் ஏலத் திற்கு வருந் தருவாயிலிருந்ததைக் கண்ட அடியேனும் மற்ற அடியாரும் பெருமுயற்சி செய்து கடனைத் தீர்த்துவைத்து ஷை நிலங்களை ஷை ராமலிங்க முத்தரசருடைய குமாரராகிய சிவா னந்த முத்தரசர் தம் வார்சு பரம்பரையாக எவ்வித பராதீனமும் செய்யாமல் அனுபவித்துக்கொண்டு ஷை பிள்ளையாருக்கு பூசை நைவேத்தியமும் மடத்துக் காரியமும் பழுது வாராமல் சாசுவத மாக நடத்திவரும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**ஸ்தல யாத்திரை:** ஸ்வாமிகள் தம் தாயார் சமாதியானவுடன் ஸ்தல யாத்திரை செய்யத்தொடங்கி இமயமலை முதல் - கன்னியா குமாரிவரை, உள்ள பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும் ஸ்தலங் களில் வசித்தும் மூர்த்திகளை தரிசித்தும் ஆங்காங்குள்ள வுண்மை விசேஷங்களை ஆராய்ந்தறிந்து அனுபவித்து வருவாராயினர். அவ் வவ்விடங்களிலுள்ள வடமொழி தென்மொழிப் புலமைவாய்ந்த பெரி யோர்களும் ஸ்வாமிகளிடம் வந்து ஐயந்திரிபு அற, தெளிந்து

சீடர்களாகினர். அடியார்கள் பலர் ஸ்வாமிகளுக்கு ஆங்காங்கு சீடராகி உண்மையுணர்ந்து வேண்டிய உதவிசெய்து பணியாற்றி வருவாராயினர்; கடைசியாக ஸ்வாமிகளது உள்ளம் அகண்டகாவிரி தீரத்தில் வசிக்க விருப்பமுற்றது, அதனால் ஸ்வாமிகள் திருப்பராய்த்துறை, கொடுமுடி, கரூர், வேலூர், முதலிய இடங்களில் வசித்து வந்தனர். நஞ்சையிடையார் மிராசுதாரும் கண்டர் ஆஸ்டலுக்கு மானேஜருமான திரு. M. பரிமளகண்டர் அவர்களும்; ஷெயூர் திரு. வெள்ளக்குட்டி சாமி என்கிற அடியாரும், கரூர் பனியன் பாக்டரி திரு. C, கிருஷ்ணசாமி நாயுடு, திரு சுந்தரஞ் செட்டியார், திரு ராமசாமி முதலியார், வாங்கல் வைத்தியம், ராமு என்பவரும், திரு காகாவாடி முத்துசாமி கவுண்டர் அவர்களும் ஆங்காங்கு வசித்தபொழுது வேண்டிய உதவிசெய்து தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். வேலூரில் மாணிக்கம்பிள்ளை என்பவர் காலந்தவராமல் ஆகாராதிகள் கொடுத்து தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். ஸ்வாமிகள் அதன்பின் அகண்டகாவேரியின் தென்கரையிலுள்ள தென்கடம்பந்துறை என்னும் கடம்பர் கோவிலில் நிரந்தரமாக வசிக்கலாயினர். ஸ்வாமிகள் தினம் நித்திய கடன்கள் முடித்து ஆகாராதிகள் எடுத்துக்கொள்ளும் நேரம் தவிர மற்றய காலங்களில் கோவிலிலேயே சகச சமாதியிலிருந்து வருவாராயினர். அக்காலத்திலே குளித்தலை உயர்தரக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த பிரம்மஸ்ரீ ராமசுப்பய்யர் என்னும் அந்தணர், ஸ்வாமிகளையடைந்து சீடராகி ராமாயணம் முதலிய நூல்களில் தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களை எல்லாம் முறையாகக் கேட்டுத் தெரிந்தும் ஸ்வாமிகளால் முக்கிய உண்மைகளை உணர்ந்தும் வருவாராயினர்.

கடம்பர்கோவிலில் வசித்துவரும் பரம பாகவதராகிய ஸ்ரீரெங்கராமாநுஜ தாசர் என்பவர் ஸ்வாமிகளையடைந்து சீடராகி தம்மில்லத்திலேயே ஆகாராதிகளை ஏற்றுக்கொள்ளும்படி ஸ்வாமிகளை வேண்டினர். ஸ்வாமிகளும் அவரது பக்திக்குக் கட்டுப்பட்டு அவரில்லத்திலேயே உணவருந்தி வருவாராயினர். ஸ்வாமிகளை அடிக்கடி தரிசிக்கவரும் ஸ்வாமிகளது சீடர்களுக்கும் சீடபரம்பரையினருக்கும் கூட பாகவதர் உணவளிப்பாராயினர். பாகவதருடைய மனைவியாரும் இக்கைங்கரியத்தைத் தவறாமல் செய்து பணியாற்றி வந்தனர். இதற்காக, முக்கியமாக அடியேனும் கரூர் மண்டி T. K. ராமசாமி நாயுடு அவர்களும் ஷெயூர் V. R. துரைசாமி நாயுடு அவர்களும் பாகவதர் வீட்டிற்கு வேண்டிய எல்லா உதவியும் செய்துவந்தோம். மற்றும் சில அன்பர்களும் பொருளுதவி செய்திருக்கின்றனர். கடம்பர்கோவில் திரு. ஞானசம்பந்த முதலியார் தம் வீட்டில் இரவில் தங்கியிருக்க ஸ்வாமிகளுக்கு வேண்டியவசதி செய்து கொடுத்து பணியாற்றி வந்திருக்கிறார்கள். ஷெ T. K. ராமசாமி நாயுடு, V. R. துரைசாமி நாயுடு இருவரும் அடிக்கடி ஸ்வாமிகளிடம் வந்து பணியாற்றி தங்களனுபவத்தில் ஏற்பட்ட எல்லா சந்தே

கங்களையும் ஸ்வாமிகளைக் கேட்டு அவர் அருளால் தெளிந்து உண்மை யுணர்ந்து கொள்வாராயினர்.

இப்படி நடந்து வருகையில் ஏற்கனவே பாகவதர் வாங்கி யிருந்த கடனுக்காக, கடன் கொடுத்தவர்கள் பாகவதரின் வீட்டை ஏலத்திற்குக் கொண்டுவர ஏற்பாடாக இருப்பதையறிந்த அடியே னும், சில முக்கிய அன்பர்களும் சேர்ந்து ஸ்வாமிகளின்பொருட்டு, அக்கடனைத் தீர்த்து வைத்தோம். ஸ்வாமிகள் பரிபூரண தசையை அடைவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னதாக என்னை வரவழைத்து எனக்கு ஆத்மார்த்தமாக வேண்டிய திட அபரோக்ஷ அனுபவ நிலையைக் காட்டி நிலைபெறச் செய்து பிறவாநெறியை உணர்த்தி யருளினர்.

சத்து, சித்து, ஆனந்தமென்னும் முத்தலங்களின் மேன்மை பொருந்தியுள்ள திரு. கடம்பவனேச்வரர் இடப்பாகமமர்ந்த ஸ்ரீ பால குசாம்பிகா அம்மன் சன்னதியிலேயே சதாகாலமும் சமாதி கூடி இருந்துவந்த நம் குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ திருப்பதி ஸ்வாமிகள் தமது 64-வது ஆண்டாகிய ஈசுவர ஆண்டு ஐப்பசித் திங்கள் 26-ம்நாள் குருவாரம் பூர்வபட்ச அஷ்டமி அவிட்டம்கூடிய நன்னாளில் பகல் $22\frac{1}{2}$-நாழிகை அளவில் அகண்ட பரிபூரண சச்சி தானந்த சொப்பிரகாச மோன சாசுவத நிர்விகற்ப சமாதியிலமர்ந்த னர். ஸ்வாமிகள் பரிபூரண தசையடைந்தபிறகு ஸ்வாமிகளின் சீடர்களில் ஒருவராகிய பிர்ம்மஸ்ரீ ராமசுப்பையர் என்பவர் தாம் கொண்ட பேரன்பு பொங்கிப் பெருகிட சுவாமிகளின் பிரிவாற்றா மையைப் பிறரும் அறியும்வண்ணம் ஸ்வாமிகளின்பேரில் கையறு நிலைப்பதிகம் என்னும் நூலை இயற்றியுள்ளார்.

### ஸ்வாமிகளின் அதிஷ்டான வைபவம்.

ஸ்ரீலஸ்ரீ திருப்பதி ஸ்வாமிகளின் அதிஷ்டானம் கடம்பர் கோவிலுக்கும் அதற்கு நேரே உள்ள அகண்ட காவேரி தீர்த்த கட்டத்திற்கும் நடுவில் ஆற்றங்கரையின் தென்பக்கத்தில் பாதைக்கு மேற்கே கிழக்கு முகமாக ஸ்ரீ பால குசாம்பிகாவின் இருதய ஸ்தா னமாக அமைந்துள்ளது. அதிஷ்டானத்தின் முன்புறம் வலது கைப்பக்கத்தில் அரசும் வேம்பும் அழகாக அமைந்துள்ள ஸ்தலத் தில் நம் ஸ்வாமிகளின் சகுண மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் ஸ்வாமிகளின் அதிஷ்டானம் அமையவேண்டிய இடத்தை அறி விப்பவர்போல் முன்னரே வந்து அமர்ந்திருக்கின்றனர். நவக் கிரக தேவதைகளும் விநாயகரை வேண்டியே பக்கத்தில் அமைந் திருக்கின்றனர்.

அதிஷ்டானம் அமைந்த தினத்திலிருந்து மண்டலாபிஷேகம் முடியும் வரையிலும் அன்றாடம் நடக்கவேண்டிய வைபவங்களெல் லாம் வெகு விமரிசையாக நடைபெற்று வந்தன. அதிலிருந்து வருடந்தோறும் ஐப்பசி-மீ அவிட்ட நக்ஷத்திரத்தன்று ஸ்ரீலஸ்ரீ

ஸ்வாமிகளின் குருபூசையும் மகேசுவர பூசையும் ஸ்வாமிகளின் திருவுருவப்பட திருவுலாக் காட்சியும் வெகு விமரிசையாக நடத்தி வருகிறோம். ஸ்வாமிகளின் அதிஷ்டான மடாலயத்துக்கு நிரந்தரத் தலைவராக ஏற்பட்டுள்ள அடியேனும், கரூர் T. K. ராமசாமிநாயுடு, ஷெயூர் V. R. துரைசாமிநாயுடு, வாங்கல் திரு. வே. மருதபிள்ளை ஷெயூர் சு. ஷண்முகம்பிள்ளை ஆகியவர்கள் முக்கியமாக ஸ்வாமிகளின் அதிஷ்டான மடாலயத் திருப்பணிக்கும் மகா.கும்பாபிஷேகத்திற்கும் பெரும் பொருளுதவி, பெருந்தொண்டு செய்தவராவர். மற்ற அன்பர்களும் அங்கத்தினர்களும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்துள்ளார்கள்.

கரூர் T. K. ராமசாமி நாயுடு அவர்கள் பொக்கிஷதாரரும் காரியதரிசியுமாக இருந்து, ஷெயூர் V. R. துரைசாமி நாயுடு அவர்களின் முயற்சியையும் கொண்டு கர்ப்பக் கிரகம், அர்த்த மண்டபம், முன் கட்டடம் முதலியன கட்டுவித்து, காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட பாணலிங்கப் பிரதிஷ்டையும், நந்தி பலிபீட பிரதிஷ்டையும், கலச கும்ப யக்ஞமும், வேத மந்திர பூர்வமாக பார்த்திப-ஞு ஆனிமாதம் 14ந்தேதி புதவாரத்தன்று நல் முகூர்த்தத்தில் நடத்தப்பட்டு கலச மகா கும்பாபிஷேகமும் வெகு விமரிசையுடன் பரிபூரணமாக நிறைவேறிற்று.

ஆரம்ப முதலாகவே தினம் மூன்று கால பூசையும் நிவேதனமும், தவராமல் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. மேல்புறத்தில் நந்தவனமும் கிணறும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் மடாலய அதிஷ்டான பூசை, நைவேத்தியம் நந்தவனப் பணி, ஊழியம் செய்து வருபவர்களுக்கு மூன்று காலமும் ஆகாராதிகள் குறைவற நடைபெற்று வருகின்றன. பூசை, நிவேதனம் சாசுவதமாக நடைபெற்றுவரும் நிமித்தம் நன்செய் நிலங்களும் வாங்கி வைக்கப் பெற்றிருக்கின்றன.

அடியேனது வணக்கமான முடிவுரை.

ஸ்வாமிகளது சரித்திரத்தை ஸ்வாமிகளின் தம்பி குமாரன் ரா. சிவானந்தமும், கரூர் ஆரம்பப் பாடசாலை ரிடயர் ஆசிரியராகிய ராமசாமி முதலியாரும் தனித்தனி எழுதி வைத்திருந்ததைப் பார்த்து என் அனுபவத்தையும் கலந்து எனக்குத் தெரிந்தவரை எழுதலானேன். ஸ்வாமிகளது ஜீவிய காலம் முதற்கொண்டு நாளது வரைக்கும் என்னுடன் இடைவிடாது கூடவேயிருந்து சிரமத்தைப் பாராட்டாது எல்லாக் கைங்கரியங்களுக்கும் பொருளுதவியும் பணியாற்றியும் நிர்வகித்து வருபவர்களுமாகிய கரூர் மண்டி T. K. ராமசாமி நாயுடு ஷெயூர் வியாபாரம் திரு. V. R. துரைசாமி நாயுடு ஆகிய இருவருக்கும் மற்றும் ஸ்வாமிகளுடைய அதிஷ்டான மடாலய சகல கைங்கரியத்துக்கும் பொருளுதவி செய்து தொண்டாற்றி வருகின்ற பேரன்பர்களுக்கும் ஸ்ரீ ஞான

லோகமென்னும் யுக்தி சாகரமாகிய இந்த நூலை, நாங்கள் அச்சிடுவதற்கு முயற்சியுடன் சிரமத்தை பாராட்டாது பிழை திருத்தம் செய்து ஊக்கமளித்து நிறைவேற்றிக் கொடுத்து நூன்முகம், சிறப்புப்பாயிரம், வாழ்த்துப்பா ஆகியவற்றை இயற்றியுதவிய பிர்ம்மஸ்ரீ பரிபூரணானந்த ஸ்வாமிகள் என்கிற ஸ்ரீ ராமலிங்க பிர்ம்மேந்திரர் அவர்களுக்கும், சாத்துக்கவி இயற்றியுதவிய பண்டித சித. ஸ்ரீ நாராயணசாமி அவர்களுக்கும் மயிலாப்பூர் கி. வா. ஸ்ரீ ஜெகந்நாதன் அவர்களுக்கும், அணிந்துரை யியற்றியுதவிய சங்கேந்தி குக. ஸ்ரீ சதாசிவ அடிகள் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டுள்ளேன். முக்கியஸ்தர்களாகிய எங்கள் மூவரில் நிர்வாகத் திறமை வாய்ந்த திரு. T. K. ராமசாமி நாயுடு என்பவர் பேருக்கு ஸ்வாமிகள் இயற்றிய நூல்களை வெளியிடுவதற்கு காபிரைட் ரிஜிஸ்டர் உரிமை ஏற்பட்டிருக்கிறது. இம்மூவரின் செலவில் அச்சிடப்பட்டிருக்கும் ஸ்ரீஞான லோகமென்னும் யுக்தி சாகரமாகிய இந்த நூலை விற்பனை செய்து மடாலயத் திருப்பணிக்கு உபயோகப்படுத்த எண்ணியுள்ளோம்.

ஸ்வாமிகள் என்னிடம் நேரில் சொல்லிய உண்மையை யாவருக்கும் இப்பொழுது தெரிவிக்கவேண்டியவனாயிருக்கிறேன்.

அதாவது, "ஞான லோகமென்னும் இவ்வரிய நூலை நான் என் அகங்காரத்தால் இயற்றவில்லை; நூல் செய்யவேண்டுமென்ற முயற்சியில்லாமலிருந்தும், எனக்கு 20-வது வயதிலேயே எழுந்த உண்மையின் ரகசியத்தை வருடக்கணக்காக அடக்கி வைத்துக் கொண்டு சும்மா இருந்து வந்த நான் எனது தியான மூர்த்தியான ஸ்ரீ விக்கினேசுவரர் தூண்டுதலின்பேரில் எழுதி வைக்கலாயினேன்" என்று எனது ஸத்குருநாதராகிய ஸ்வாமிகள் உண்மை உரைத்தனர்.

இந்நூலானது, ஆத்மானுபவமுள்ளவர்களாய பல பெரியோர்களுக்கும் அன்பர்களாகிய எல்லோருக்கும் உபயோகப்படும்படி அச்சிடப்பட்டுள்ளது. யான் எழுதியவற்றுள் பிழையிருப்பினும் பெரியோர்கள் மன்னித்து அறிவிப்பார்களாக. ஸ்ரீ ஸ்வாமிகளின் பிறப்பு முதல் நடந்துள்ள நிகழ்ச்சிகள் யாவற்றையும் எழுதுவதென்றால் ஏட்டிலடங்காது என்னும் விரிவஞ்சி என் திறமைக்குத் தக்கவாறு சுருக்கமாக எழுதியுள்ளேன், ஓம்தத்ஸத். சாந்திசாந்தி.

ஸ்ரீ ஸத்குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ திருப்பதி சுவாமிகளின் திருவடிகளே சரணம்.

அடிமை ரெ. வேங்கடசாமி,

வாங்கல், பழயவூர்.

சுபமங்களம்,

ஸ்ரீ கணேசாய நம:

அடியார்க் கடியார் எழுதிய

# ஞானலோகம் என்னும் யுக்தி சாகரம்.

## விநாயகர் காப்பு.

—o—

### குறள் வெண்பா.

சீரார் பரப்பிரமத் திவ்யப் பிரகாசம்
ஆரார் விநாயகர் காப் பாம். (க)

(பதவுரை) சீர் ஆர் = சிறப்பு மிகுந்த, பரப்பிரம = மேலான பிரமத்தின், திவ்ய = இனிமையான தெய்வீக, பிரகாசம் = விளக்கம், ஆர் = ஆத்திமாலை, ஆர் = அணிந்த, விநாயகர் = விநாயகமூர்த்தியினது, காப்பு ஆம் = காத்தலாம்.

(பிரமம் = விநாயகர்) (விளக்கம் = காத்தல்)

(பொழிப்புரை) சிறப்பு மிகுந்த மேலான பிரமத்தின் இனிமையான தெய்வீக விளக்கம் ஆத்திமாலை யணிந்த விநாயகமூர்த்தியினது காத்தலாம்.

சத்தே சகஞ் சித்துத் தான்சீவ ஞனந்தம்
ஒத்தாய வீசனென வோர். (உ)

(ப-ரை) சத்து (ஏ) = இருப்பது, சகம் = உலகமாம், சித்துத் (தான்) = விளங்குவது, சீவன் = உயிராம், ஆனந்தம், ஒத்து ஆய = பொருந்தாமற் பொருந்தியிருக்கிற, ஈசனென = ஈசுவரனுமென்று, ஓர் = அறி. (ஏ. அசை) (தான் = சாரியை)

(போ-ரை) இருப்பது உலகமாம், விளங்குவது உயிராம், ஆனந்தம் பொருந்தாமற் பொருந்தியிருக்கிற ஈசுவரனும் என்று அறி.

அறுசீர் விருத்தம்.

பூதபவு திகவுருவாம் பலகோடி சடத்திரண்மட்
புனையண் டங்கள்
மீதுமிது படர்நினைவாம் பின்னுசத் திப்புனலான்
மேவு மிவ்வா
றீதுதனை ஞானமெனு மபின்னுசத் திக்கனல்சூழ்ந்
திடவு மேலாய்ப்
பேதமற வெலாந்தானு வுறும்பரன்கான் மிசைமவுனப்
பிரமம் விண்ணே. (ந)

(ப-ரை) பூத=பஞ்சபூதங்களும், பவுதிக=அப் பூதங்களாலான காரியங்களுமாகிய, உருவு ஆம்=வடிவமான பலகோடி, சடத் திரள்=சடக்கூட்டங்கள், மண்புனை=பிருதிவியாற் செய்யப்பட்ட, அண்டங்கள்=அண்டங்களாம், மீதும்=தன்னைச் சுற்றிலும், இது=இச்சடக்கூட்டம், படர்=சூழ்ந்திருக்கின்ற, நினைவுஆம்=நினைவென்னும், பின்னு சத்தி=பின்னு சத்தியாகிய, புனலால்=அப்புவினால், மேவும்=விளங்கும், இவ்வாறு=இவ்விதம் ஈதுதனை=அப்பு அண்டமான இதனை, ஞானமெனும், அபின்னு சத்திக்கனல்=அபின்னு சத்தியாகிய தேயு, சூழ்ந்திடவும், மேலாய்=தேயு அண்டத்தின் மேலாக, பேதம் அற, எலாந்தானு=முன்கூறிய மூவகையண்டங்களும் தானுக, உறும்=பொருந்தும், பரன்=ஈசுவரன், கால்=வாயுவண்டமாம், மிசை=இவற்றை யெல்லாம் வியாபித்து மேலாக விருக்கும், மவுன=மவுன சொரூபமாகிய, பிரமம் விண்ணே=பிரமமே ஆகாய வண்டமாம். (சடம்=அறிவின்மை) (மவுனம்=சங்கற்பம் அறல்)

(பொ-ரை) பஞ்ச பூதங்களும் அப்பூதங்களாலான காரியங்களுமாகிய வடிவமான பலகோடி சடக் கூட்டங்கள் பிருதிவியாற் செய்யப்பட்ட அண்டங்களாம். இச்சடக் கூட்டம் தன்னைச்சுற்றிலும் சூழ்ந்திருக்கின்ற நினைவென்னும் பின்னு சத்தியாகிய அப்புவினால் விளங்கும், இவ்விதம் அப்பு அண்டமான இதனை ஞானமெனும் அபின்னு சத்தியாகிய தேயுசூழ்ந்திடவும்தேயுவண்டத்தின் மேலாகப் பேதமற முன் கூறிய மூவகையண்டங்களுந் தானுகப் பொருந்தும் ஈசுவரன் வாயுவண்டமாம். இவற்றையெல்லாம் வியாபித்து மேலாக விருக்கும் மவுன சொரூபமாகிய பிரமமே ஆகாய வண்டமாம்.

வேண்பா.

அகங்கரமண், சித்தநீ ராம்புத்தி செந்தீ
மிகுந்தமனங் காற்றுள்ளம் விண்ணே—புகுந்தவபி
மானமா லோசனைதீர் மானஞ்சங் கற்பமறி
வானமுறை யைம்புலன்கா ணங்கு. (௪)

(ப-ரை) அகங்கரம்=அகங்காரம், மண்=மண்ணும், சித்தம் நீராம், புத்தி, செந்தீ=சிவந்த அக்கினியாம், மிகுந்த=பரவுகின்ற, மனம், காற்று=காற்றும், உள்ளம், விண் (ஏ)= ஆகாயமாம், புகுந்த=சரீரத்திற் பற்றியிருக்கிற, அபிமானம், ஆலோசனை, தீர்மானம் = நிச்சயம், சங்கற்பம், அறிவு, ஆன = ஆகிய இவை, முறை=கிரமத்தால், ஐம்புலன் = (கந்தம் இரசம் ரூபம் பரிசம் சத்தம் என்னும்) ஐம்புலன்களாம், காண் = இதை அறி. ஆங்கு, ஏ = அசைகள்) (அபிமானம் = கந்தம்) (ஆலோசனை = இரசம்) (நிச்சயம் = ரூபம்) (சங்கற்பம் = பரிசம்) (அறிவு = சத்தம்.)

(போ-ரை) அகங்காரம் மண்ணும், சித்தம் நீராம், புத்தி சிவந்த அக்கினியாம், பரவுகின்ற மனம் காற்றும், உள்ளம் ஆகாயமாம் சரீரத்திற் பற்றியிருக்கிற அபிமானம் ஆலோசனை நிச்சயம் சங்கற்பம் அறிவு ஆகிய இவை கிரமத்தால் கந்தம் இரசம் ரூபம் பரிசம் சத்தம் என்னும் ஐம்புலன்களாம். இதை அறி.

கலி விருத்தம்.

இனைச டச்சேற் றிடைப்பிள்ளைப் பூச்சியும்
நினைவு நீரி னிகழ்தா மரையிலை
முனியஞ் ஞான முகிலி னிரவியும்
தனிமை யாத்தும தத்துவ மாவதே. (௫)

(ப-ரை) இனை = வருந்துதற்குக் காரணமாகிய, சடச் சேற்றிடை = சரீரமென்னும் சேற்றினிடத்தில், பிள்ளைப்பூச்சியும், நினைவு = நினைவென்கிற, நீரில், நிகழ் = விளங்குகின்ற, தாமரையிலை = தாமரையிலையும், முனை = பகைக்கின்ற, அஞ்ஞான முகிலின் = அஞ்ஞானமென்னும் மேகத்துள், இரவியும் = சூரியனும், தனிமை = (ஒன்றிலும் சம்பந்தமின்றித்) தனித்திருக்கிற, ஆத்தும தத்துவம் = ஆத்மாவாகிய உண்மைப்பொருள், ஆவது = ஆகும். (ஏ, அசை)

(போ - ரை) வருந்துதற்குக் காரணமாகிய சரீரமென்னுஞ் சேற்றினிடத்திற் பிள்ளைப்பூச்சியும் நினைவென்கிற நீரில் விளங்குகின்ற தாமரையிலையும் பகைக்கின்ற அஞ்ஞானமென்னும் மேகத்துள் சூரியனும் ஒன்றினுஞ் சம்பந்தமின்றித் தனித்திருக்கிற ஆத்மாவாகிய உண்மைப் பொருளாகும்.

வெண்பா.

ஆன்மா நெருப்பா மதினின் றெழுஞ்சகத்துத்
தான் மூடிடும்புகையாஞ் சங்கற்பப்—பான்மரத்தை
உற்றிடினீ தாகு முறுமுனுமுற் றேநனிவெந்
தற்றிடினு மப்புகையின் றால். (சா)

(ப - ரை) ஆன்மா நெருப்பாம், அதில் நின்று எழும் சகத்து, (தான்), மூடிடும் = அதை மூடும், புகையாம், சங்கற்பப்பால் = சங்கற்பமென்னும் பாலையுடைய, மரத்தை, உற்றிடின் = பொருந்தினுல், ஈது = இந்தச் சகமென்னும் புகை, ஆகும் = உண்டாகும், உறும் முனும் = சங்கற்ப மென்கிற பால் மரத்தை ஆன்மாவாகிய நெருப்புப் பொருந்துவதற்கு முன்னும், உற்று (ஏ) = பொருந்தி, நனி = நன்ருக, வெந்து, அற்றிடினும் = ஒழிந்தாலும், அப்புகை = அந்தச்சகமென்னும் புகை, இன்று (ஆல்) = இல்லை.

(தான், சாரியை) (ஏ, ஆல், அசைகள்.)

(போ - ரை) ஆன்மா நெருப்பாம். அதில் நின்று எழும் சகத்து அதை மூடும் புகையாம். சங்கற்ப மென்னும் பாலையுடைய மரத்தைப் பொருந்தினுல் இந்தச் சகமென்கிற புகை உண்டாகும். சங்கற்பமென்னும் பால் மரத்தை ஆன்மாவாகிய நெருப்புப் பொருந்துவதற்கு முன்னும் பொருந்தி நன்ருக வெந்து ஒழிந்தாலும் அந்தச் சகமென்னும் புகை இல்லை.

உயிர்க்கலங்க னீர்தன்னி லோர்விருத்தி ஞான
அயிர்க்கதகத் தூளிட் டவித்தைச்—செயிர்ச்சேறு
போக்கி னதனுடனே போமக் கதகத்துள்
நீக்க மறுசிவந்தெண் ணீர். (எ)

(ப - ரை) உயிர் = சீவனென்னும், கலங்கல் நீர் தன்னில் = கலங்கல் ஜலத்தில், ஓர் = உணர்கின்ற, விருத்திஞான = விருத்திஞானமாகிய, அயிர் = நுணுக்கமான, கதகத்தூள் = தேற்ரும் பொடியை,

இட்டு=சேர்த்து, அவித்தை=அஞ்ஞான மென்னும், செயிர்ச் சேறு=குற்றமுள்ள சேற்றை, போக்கின்=போக்கினால், அதனுடன் (ஏ), போம்=போகும், அக்கதகத்தூள்=அந்தவிர்த்தி ஞான மென்கிற தேற்றும் பொடி, நீக்கம் அறு=ஒன்றிலும் பிரிவில்லாத, சிவம்=சிவமே, தெள்நீர்=தெளிந்த ஜலம். (ஏ. அசை).

(பொ-ரை) சீவனென்னும் கலங்கல் ஜலத்தில் உணர்கின்ற விருத்தி ஞானமாகிய நுணுக்கமான தேற்றும் பொடியைச் சேர்த்து அஞ்ஞானமென்னும் குற்றமுள்ள சேற்றைப் போக்கினால் அந்த விர்த்திஞானமென்கிற தேற்றும் பொடி. அதனுடன் போகும். தெளிந்த ஜலம் ஒன்றிலும் பிரிவில்லாத சிவமே.

விடயத்திற் போமனங் கீழ் மேவு முதகம்
நடையற்ற வீடுபெறு ஞானம்—படர்மேற்செல்
வன்னியா மேசீவன் வாயுவா மாகாயம்
மன்னுமான் மாவா மதி. (அ)

(ப-ரை) விடயத்தில் போம்=விஷயங்களிற் செல்லுகின்ற, மனம், கீழ்மேவும் உதகம்=பள்ளத்திலோடுகின்ற நீராம், நடை அற்ற=சென்றடைதலை வேண்டாத, வீடு பெறும்=முத்திபெறுதற்குக் காரணமாகிய, ஞானம், படர்=படர்ந்து, மேற்செல்=மேல் எழும், வன்னி ஆம் (ஏ)=அக்கினியாம், சீவன் வாயுவாம், ஆகாயம், மன்னும்=நிலைபெற்ற, ஆன்மா=ஆத்மா, ஆம், மதி=என நிச்சயி. (ஏ. அசை)

(பொ-ரை) விஷயங்களிற் செல்லுகின்ற மனம் பள்ளத்திலோடுகின்ற நீராம். சென்றடைதலை வேண்டாத முத்திபெறுதற்குக் காரணமாகிய ஞானம் படர்ந்து மேலெழும் அக்கினியாம். சீவன் வாயுவாம். நிலைபெற்ற ஆத்மா ஆகாயமாம் என நிச்சயி.

கலி விருத்தம்.

இதய நீர்கலங் கின்னத னூடுசிற்
கதிர்பன் மாறுருக் காணல் விடயமால்
அதுக லங்க லறிற்சிற் கதிரவன்
எதிர்த லுள்ளவா றீதுபே ரின்பமே. (கூ)

(ப-ரை) (க) இதய நீர் கலங்கின்=இருதயமென்னும் ஜலம் கலங்கினால், அதனூடு=அதற்குள், சிக்கதிர்=ஞானமென்கிற சூரி

யன், பல்மாறு உரு=பல மாறுதலான வடிவங்களாக, காணல்= தோற்றுதல், விடய மால்=விஷய இச்சையாம், அது=அவ்விருதயம், கலங்கல் அறில்= கலங்காதிருக்கின், சித்கதிரவன்=ஞானமென்னும் சூரியன், எதிர்தல்=தோன்றுதல், உள்ளவாறு=உள்ளபடி, ஈது=ஆகிய இந்நிலே, பேரின்பமே.

(போ - ரை) இருதயமென்னும் ஜலங் கலங்கினல் அதற்குள் ஞானமென்கிற சூரியன் பலமாறுதலான வடிவங்களாகத் தோற்றுதல் விஷய இச்சையாம். அவ்விருதயம் கலங்காதிருக்கின் ஞானமென்னும் சூரியன் உள்ளபடி தோன்றுதலாகிய இந்நிலே பேரின்பமே.

வேண்பா.

சுத்தவறி வாகாயத் தோற்றமாஞ் சங்கற்ப
மத்தியத்தான் முற்றுணர்வா மாயைச்சொர்க்—கத்துடனே
அற்பவுணர் வாகு மவித்தையெனும் பாதலமும்
கற்பிதமா மவ்வெளிமெய் காண். (கo)

(ப-ரை) சுத்த அறிவு=சுத்த அறிவென்னும், ஆகாயத்தோற்றம் ஆம்=ஆகாயத்தில் தோற்றமான, சங்கற்ப மத்தியத்தால்= சங்கற்ப மென்கிற மத்திய பாகமாகிய பூமியினல், முற்றுணர்வு ஆம்=எல்லாமறியுந் தன்மையான, மாயைச் சொர்க்கத்துடன் (ஏ)=மாயையென்னுஞ் சொர்க்கமும், அற்ப உணர்வு ஆகும்=சிற்றறிவாகிய, அவித்தை எனும்=அஞ்ஞானமென்கிற, பாதலமும், கற்பிதமாம், அவ்வெளி= அந்தச்சுத்த அறிவென்னு மாகாயம், மெய்=உண்மையாகும். (காண். முன்னிலே அசை) (ஏ, அசை)

(போ - ரை) சுத்த அறிவென்னும் ஆகாயத்தில் தோற்றமான சங்கற்பமென்கிற மத்திய பாகமாகிய பூமியினல் எல்லா மறியுந் தன்மையான மாயை யென்னுஞ் சொர்க்கமும் சிற்றறிவாகிய அஞ்ஞானமென்கிற பாதலமும் கற்பிதமாம். அந்தச் சுத்த அறிவென்னு மாகாயம் உண்மையாகும்.

அனந்தன் பிரகிருதி யாம்புவன மாயை
மினும்பொன் வரைசாத்து வீக—மனம் பெரிதாம்
அட்டகிரி யெண்குணங்க ளாழிமறை வீழ்நதிகள்
இட்டகலே மேகமிறை யே. (கக)

(ப-ரை) அனந்தன் = ஆதிசேடன், பிரகிருதியாம், புவனம் = பூமி மாயை = மாயையாம், மினும் = பிரகாசிக்கின்ற, பொன், வரை = மலையாகிய மகாமேரு, சாத்துவீக, மனம் = மனமாம், பெரிதாம் = பெரிதான, அட்டகிரி = அஷ்டகுல பர்வதங்கள், எண் குணங்கள் = எட்டுக்குணங்களாம், ஆழி = சமுத்திரம், மறை = வேதமாம், வீழ் நதிகள் = அதில் வந்து சேர்கின்ற நதிகள், இட்டகலை = ஏற்பட்ட புராண முதலியசாஸ்திரங்களாம், மேகம், இறை (ஏ) = ஈசுவரனும். (ஏ, அசை) (மினும், மின்னும் என்பதன் இடைக்குறை)

(பொ-ரை) ஆதிசேடன் பிரகிருதியாம், பூமி மாயையாம், பிரகாசிக்கின்ற பொன் மலையாகிய மகாமேரு சாத்வீக மனமாம், பெரிதான அஷ்டகுல பர்வதங்கள் எட்டுக்குணங்களாம், சமுத்திரம் வேதமாம், அதில் வந்து சேர்கின்ற நதிகள் ஏற்பட்ட புராணம் முதலிய சாஸ்திரங்களாம், மேகம் ஈசுவரனும்.

பன்னிரு சீர் விருத்தம்.

பரஞான வடவையனன் மேவுறச் சலனவுவர்
படுசுத்த சங்கற்பமாம்
பௌவம்வளை சத்யசங் கற்பமா நிலமீது
பலசித்த ரென்னும் வரைகள்
இரியாம லுறநூ லுணர்ச்சிச் சாயுசம
தில்லாத வுணர்வண்ட சம்
இழியுணர்ச் சிச்சுவே தசமுணர் விலாததா
யிடுமுற் பிசத்தேதுவின்
ஒருவாத சகசானு பூதியினர் நரர்நூ
லுரைத்தகன் மத்தர்மாக்கள்
ஒழிகன்ம முடையர்பற வைகடைய கன்மத்த
ரூர்வன வெளிக்கு நன்றாய்த்
தெரிதீய கபடகன் மத்தர்நீர் வாழ்வன
திரட்சோம் புளார்தாபரம்,
திகழ்துரியம் வளியதீ தம்வின் சமாதியினர்
தேவரிப் புவனிபரனே. (கஉ)

(ப-ரை) பரஞான = மேலான ஞான மென்னும், வடவை அனல் = வடவா முகாக்கினி, மேவுற = பொருந்த, சலன = அசைவு என்கிற, உவர், படு = சேர்ந்த, சுத்த சங்கற்பம், ஆம் = ஆகிய,

பௌவம் வளை = சமுத்திரம் சூழ்ந்த, சத்ய = சத்திய, சங்கற்பம், ஆம் = ஆன, நிலம் மீது = பூமியின்மேல், பல சித்தர் என்னும், வரைகள் = மலைகள், இரியாமல் உற = கெடாதிருக்க, நூலுணர்ச்சி = சாஸ்திர உணர்வு என்னும், சராயுசம், அது இல்லாத = அந்நூலுணர்ச்சியில்லாத, உணர்வு = உணர்வென்கிற, அண்டசம், இழியுணர்ச்சி = இழிவான உணர்வாகிய, சுவேதசம், உணர் விலாதது ஆயிடும் = ஓர் உணர்வுமில்லாததான, உற்பிசத்து ஏதுவின் = உற்பிசமென்கிற காரணத்தால் பொருந்துகின்ற, ஒருவாத = நீங்காத, சகச அனுபூதியினர் = சகச நிஷ்டை அனுபவமுடையோர், நரர் = மனிதர், நூலுரைத்த = சாஸ்திரங்களிற்சொல்லப்பட்ட, கன்மத்தர் = கர்மங்களையுடையவர் மாக்கள் = மிருகங்கள், ஒழி = சாஸ்திரங்களிற் சொல்லப்படாத, கன்ம முடையர் = கர்மங்களையுடையவர், பறவைகள், தீய கன்மத்தர் = கெட்ட கர்மங்களையுடையவர், ஊர்வன, வெளிக்கு, நன்றாய்த்தெரி = நல்லதாகத் தெரிகின்ற, தீய கபட, கன்மத்தர் = கர்மங்களையுடையவர், நீர்வாழ்வன, திரள்சோம்பு உளார் = மிகுந்த சோம்பலையுடையவர், தாபரம், திகழ் = விளங்குகின்ற, துரியம், வளி = காற்று, அதீதம் = துரியாதீதம், விண் = ஆகாயம், சமாதியினர் = நிர்விகற்ப நிஷ்டையுடையோர், தேவர், இப்புவனி = இவ்வாறுகிய உலகம், பரனே = மேலான ஈசுவரனே. (வடவை = பெட்டைக் குதிரை) (தாபரம் = மரம் செடி கொடி முதலியன)

(பொ-ரை) மேலான ஞான மென்னும் வடவா முகாக்கினி பொருந்த அசைவு என்கிற உவர் சேர்ந்த சுத்த சங்கற்பமாகிய சமுத்திரஞ் சூழ்ந்த சத்திய சங்கற்பமான பூமியின்மேல் பலசித்தர் என்னும் மலைகள் கெடாதிருக்கச், சாஸ்திர உணர்வு என்னும் சராயுசம், அந்நூலுணர்ச்சி யில்லாத உணர்வென்கிற அண்டசம், இழிவான உணர்வாகிய சுவேதசம், ஒருணர்வுமில்லாததான உற்பிசம் என்கிற காரணத்தாற் பொருந்துகின்ற நீங்காத சகசநிஷ்டை அனுபவமுடையோர் மனிதர், சாஸ்திரங்களிற் சொல்லப்பட்ட கர்மங்களையுடையவர் மிருகங்கள், சாஸ்திரங்களிற் சொல்லப்படாத கர்மங்களையுடையவர் பறவைகள், கெட்ட கர்மங்களையுடைவர் ஊர்வன வெளிக்கு நல்லதாகத் தெரிகின்ற தீயகபட கர்மங்களையுடையவர் நீர்வாழ்வன, மிகுந்த சோம்பலையுடையவர் தாபரம், விளங்குகின்ற துரியம் காற்று, துரியாதீதம் ஆகாயம், நிர்விகற்பநிஷ்டையுடையோர் தேவர். இவ்வாறுகிய உலகம் மேலான ஈசுவரனே.

அறுசீர்விருத்தம்.

அவிசார முவர்வேலே சிரவணந்தான் கருப்பஞ்சாற்
றம்பு ராசி
தவியாத மனனந்தேன் கடனிதித்தி பாலாழி
சவிகற் பானு
பவமாகுந் ததிவாரி நிர்விகற்ப வனுபவநெய்ப்
பாரா வாரம்
திவசாட்சாத் காரஞ்சுத் தோதகசிந் திவையுறும்விர்த்
திகளேழ் தீவே. (கரு)

(ப-ரை) அவிசாரம் = விசாரமின்மை, உவர்வேலே = உப்புக்கடல் சிரவணம் (தான்) கருப்பஞ்சாற்று, அம்புராசி = கடல், தவியாத = வருத்தமற்ற, மனனம், தேன்கடல், நிதித்தி = நிதித்தியாசனம், பால் ஆழி = பாற்கடல், சவிகற்ப அனுபவம், ஆகும் = இனிமையாகிய, ததிவாரி = தயிர்க்கடல். நிர்விகற்ப அனுபவம், நெய்ப் பாராவாரம் = நெய்க்கடல், திவ = விளக்கமான, சாட்சாத்காரம் = சகச அனுபவம், சுத்த உதக சிந்து = நன்னீர்க் கடல், இவை உறும் = இவைகளைத் தனித்தனியே பொருந்திய, விர்த்திகள், ஏழ் தீவு (ஏ) = ஏழு தீவுகள். (தான், சாரியை) (ஏ, அசை) (விர்த்தி = சங்கற்பம் = நினைவு).

(பொ-ரை) விசாரமின்மை உப்புக்கடல், சிரவணம் கருப்பஞ்சாற்றுக்கடல், வருத்தமற்ற மனனம் தேன் கடல், நிதித்தியாசனம் பாற்கடல், சவிகற்ப அனுபவம் இனிமையாகிய தயிர்க்கடல், நிர்விகற்ப அனுபவம் நெய்க்கடல், விளக்கமான சகச அனுபவம் நன்னீர்க்கடல், இவைகளைத் தனித்தனியே பொருந்திய விர்த்திகள் ஏழு தீவுகள்.

பன்னிரு சீர் விருத்தம்.

நவிலுமந் தக்கரண மாமேரு மனிதர்பவ
நாவலந் தீவிவர் கண்முன்
நண்ணுவா சனையுப்பு வாரிவா னோர்பிறவி
நளிர்சாக மிவர்வாதனை
எவமிலாப் பாற்கடல் விலங்கின் பவங்குசை.
யிவற்றின்வா சனை தயிரலே
ஏற்றபுட் பிறவிகிர வுஞ்சமிவை வாதனை
யிசைந்தநெய்க் கடலூர்வன

பவமதோ சான்மலி யிவற்றின்வா சனைகருப்
பஞ்சாறு நீர்வாழ்வவுற்
பத்திகோ மேதமிவை வாதனை மதுத் தா
பரப்பவம் புட்கரமிவை
கவியும்வா சனைசுத்த நீர்மலைப் பிறவிகன
கப்புவனி, மாயையது சக்
கரவாள கிரி, பகுதி யிருள்புவி பெரும்புறக்
கடலபினை துரிய மோடே. (௧௪)

(ப-ரை) நவிலும்=உள்ளமென்று சொல்லப்படுகிற, அந்தக்கரணம், மாமேரு=மகாமேரு, மனிதர்பவம்=மானிடப்பிறவி, நாவலந்தீவு, இவர்கள்=இம்மனிதர்கள், முன்=பூர்வம், நண்ணு=பொருந்திய, வாசனை, உப்புவாரி=உப்புக்கடல், வானோர்=தேவர், பிறவி, நளிர்=பெரிய, சாகம்=சாகத்தீவு, இவர் வாதனை=இத்தேவர்களின் பூர்வ வாசனை, எவமிலா=குற்றமில்லாத, பாற்கடல், விலங்கின் பவம்=மிருகங்களின் பிறவி, குசை=குசைத்தீவு, இவற்றின் வாசனை=இம்மிருகங்களின் பூர்வ வாசனை, தயிர் அலை=தயிர்க்கடல், ஏற்ற=ஏற்பட்ட, புள்=பட்சியின், பிறவி, கிரவுஞ்சம்=கிரவுஞ்சத்தீவு, இவைவாதனை=இப்பட்சிகளின் பூர்வவாசனை இசைந்த=தகுதியான, நெய்க்கடல், ஊர்வன பவம் அதோ=ஊர்வனவாகிய ஜந்துக்களின் பிறவியோ, சான்மலி=சான்மலித்தீவு, இவற்றின் வாசனை = இவ்வூர்வனவாகிய ஜந்துக்களின் பூர்வ வாசனை, கருப்பஞ்சாறு=கருப்பஞ்சாற்றுக்கடல், நீர்வாழ்வ = நீர் வாழ்வனவாகிய ஜந்துக்களின், உற்பத்தி=பிறவி, கோமேதம்=கோமேதத்தீவு, இவை வாதனை=இந்நீர் வாழ்வனவாகிய ஜந்துக்களின் பூர்வ வாசனை, மது=தேன்கடல், தாபரப்பவம் = தாபரப்பிறவி, புட்கரம்=புட்கரத்தீவு, இவை=இத்தாவரப் பிறவியின், கவியும்=மூடுகின்ற, வாசனை=பூர்வ வாசனை, சுத்தநீர்=நன்னீர்க்கடல், மலைப்பிறவி, கனக, புவனி=பூமி, மாயை (அது) சக்கரவாள கிரி, பகுதி=பிரகிருதி, இருள்புவி=இருட்பூமி, பெரும்புறக்கடல், அபினை=அபின்னசத்தி, துரியம், ஓடு(ஏ)=அண்டச்சுவர், (அது, அது, சொல்லுருபுகள்) (ஏ, அசை) (சாகம்=தேக்கமரம்) கிரவுஞ்சம்=அன்றில் என்னும் பக்ஷிவடிவமான ஒருமலை (குசை=தார்ப்பை) (சான்மலி=இலவமரம்) (புஷ்கரம்=தாமரை)

(போ - ரை) உள்ளமென்று சொல்லப்படுகிற அந்தக் கரணம் மகாமேரு, மானிடப்பிறவி நாவலந்தீவு, இம்மனிதர்கள். பூர்வம் பொருந்திய வாசனை உப்புக்கடல், தேவர் பிறவி பெரிய சாகத்தீவு, இத்தேவர்களின் பூர்வ வாசனை குற்றமில்லாத பாற்கடல், மிருகங்களின் பிறவி குசைத்தீவு, இம்மிருகங்களின் பூர்வ வாசனை தயிர்க் கடல், ஏற்பட்ட பக்ஷியின் பிறவி கிரவுஞ்சத்தீவு, இப்பட்சிகளின் பூர்வவாசனை தகுதியான நெய்க்கடல், ஊர்வனவாகிய ஜந்துக்களின் பிறவியோ சான்மலித் தீவு, இவ்வூர்வனவாகிய ஜந்துக்களின் பூர்வ வாசனை கருப்பஞ்சாற்றுக்கடல், நீர் வாழ்வனவாகிய ஜந்துக்களின் பிறவி கோமேதத்தீவு, இந்நீர் வாழ்வனவாகிய ஜந்துக்களின் பூர்வ வாசனை தேன்கடல், தாபரப்பிறவி புட்கரத்தீவு, இத்தாபரப் பிறவியின் மூடுகின்ற பூர்வ வாசனை நன்னீர்க்கடல், மலைப்பிறவி கனக பூமி, மாயை சக்கரவாளகிரி, பிரகிருதி இருட்பூமி, பெரும்புறக் கடல் அபின்னசத்தி, துரியம் அண்டச்சுவர்.

## கலி விருத்தம்.

அட்ட செல்வத் தழுந்துதல் கண்டமோ
ரெட்ட தாகு மிவற்றின் கருமமே
இட்ட வெண்கிரி யென்பர்சத் கன்மநேர்
பட்ட தேநற் பரதகண் டம்மரோ. (கரு)

(ப - ரை) அட்ட செல்வத்து = அஷ்ட ஐச்வர்யங்களில், அழுந்துதல், கண்டம் ஓர் எட்டு (அது) = ஒப்பற்ற எட்டுக் கண்டங்கள், ஆகும், இவற்றின் கருமம் (ஏ) = இவைகளுக்கேதுவாகிய கர்மங்கள், இட்ட எண்கிரி = ஏற்பட்ட அஷ்டகுல பர்வதங்கள், என்பர் = என்று சொல்வார்கள், சத்கன்மம் = புண்ணிய கர்மங்கள், நேர் பட்டது (ஏ) = பொருந்துவது, நல் பரதகண்டம் = நல்ல பரத கண்டமாம். (அரோ, ஏ, ஏ, அசைகள்) (அது, சொல்லுருபு)

(போ-ரை) அஷ்ட ஐச்வர்யங்களில் அழுந்துதல் ஒப்பற்ற எட்டுக் கண்டங்களாகும், இவைகளுக்கேதுவாகிய கர்மங்கள் ஏற்பட்ட அஷ்டகுல பர்வதங்கள் என்று சொல்வார்கள். புண்ணிய கர்மங்கள் பொருந்துவது நல்ல பரதகண்டமாம்.

## அறுசீர் விருத்தம்.

அரசியலி னழுந்தலிளா விரதஞ்சுற் றம்பத்தி
ராசு வந்தான்
மருவடிமைத் திரள்கேது மாலமிரத் தினங்குருவாம்
வருடஞ் செம்பொன்
இரணியகண் டஞ்சாலி யிரமியம் வா கனமரியென்
றியம்பு கண்டம்
பருகுசுதர்ச் செல்வமயல் கிம்புருடஞ் சற்கன்மம்
பரத கண்டம். (௧௬)

(ப-ரை) அரசியலின் = இராச செல்வத்தில், அழுந்தல், இளா விரதம், சுற்றம் = பந்துக்கள் பிரீதி, பத்திராசுவம் (தான்), மருவு = பொருந்திய, அடிமைத்திரள் = அடிமைக் கூட்டங்களின் பொருத்தம், கேது மாலம், இரத்தினம் = இரத்தினங்களின் மிகுதி, குருவாம் வருடம் = குருகண்டம், செம்பொன் = நல்ல பொன்னின் நிறைவு, இரணியம் = இரணிய கண்டம், சாலி = நெல்லின் இராசி, இரமியம், வாகனம் = வாகனங்களின் கூட்டம், அரி, என்று இயம்பு = என்று சொல்லப்படும், கண்டம், பருகு = பால் முதலியவற்றை உண்ணுகிற, சுதர்ச்செல்வமயல் = புத்திர பாக்கியத்தின் பற்று, கிம்புருடம், சற்கன்மம் = புண்ணிய கர்மங்களின் தொடர்பு, பரத கண்டம். (தான் சாரியை)

(பொ-ரை) இராச செல்வத்தில் அழுந்தல் இளா விரதம், பந்துக்கள் பிரீதி பத்திராசுவம், பொருந்திய அடிமைக் கூட்டங்களின் பொருத்தம் கேதுமாலம், இரத்தினங்களின் மிகுதி குரு கண்டம், நல்ல பொன்னின் நிறைவு இரணிய கண்டம், நெல்லின் இராசி இரமியம், வாகனங்களின் கூட்டம் அரியென்று சொல்லப்படும் கண்டம், பால் முதலியவற்றை உண்ணுகிற புத்திர பாக்கியத்தின் பற்றுக்கிம் புருடம், புண்ணிய கர்மங்களின் தொடர்பு பரத கண்டம்.

## வெண்பா.

பரனு மசைவு பசுத்திரைக ளந்தக்
கரணக் குமிழிகளுங் காணிந்—திரியத்
துளியும் விடயச் சுழிகளுமா மேனும்
வெளியாஞ் சிவசிந்து வே. (௧௭)

(ப - ரை) பரன் ஆம் = ஈசுவரனுகிய, அசைவு = அசைவும், பசு = சீவர்களென்னும், திரைகள் = அலைகளும், அந்தக்கரணக் குமிழி களும், காண் = தெரிகின்ற, இந்திரியத் துளியும் = இந்திரியங்களா கிய துளிகளும், விடயச்சுழிகளும், ஆம் ஏனும் = போல விளங்கு மானுலும் அது, வெளி ஆம் = ஆகாயம்போலும், சிவசிந்துவே = சிவமென்னும் சமுத்திரமே யாம்.

(பொ - ரை) ஈசுவரனுகிய அசைவும் சீவர்களென்னும் அலைக ளும் அந்தக்கரணக் குமிழிகளும்தெரிகின்ற இந்திரியங்களாகிய துளி களும் விடயச்சுழிகளும்போல விளங்குமானுலும் அது, ஆகாயம் போலும் சிவமென்னும் சமுத்திரமே யாம்.

எண்சீர் விருத்தம்.

சடத்துவமா முவர்பொருந்து மாயைகட லவித்தை
தரங்கமதி குமிழிமனந் துளிபொறிக ணுரையே
திடப்படும்வான் றிமிங்கிலகி லஞ்சதுர்ப்பூ தங்க
டிமிங்கிலம் பௌ திகந்திமி கோ பங்கள்சுறு மீனம்
தடுக்குமவா முதலைபிற துர்க்குணங்கண் மற்றைச்
சந்துக்கண் மறைமுடிவு வங்கம் பூ ருவநூல்
வடுப்படுதெப் பங் குருமீ காணுயிர்வீழ்ந் திறவா
வகையுழல்வோர் பரன்காற்றுப் பிரமமெழிற் கரையே. (கஅ)

(ப - ரை) சடத்துவம் ஆம் = அறிவில்லாத் தன்மையாகிய, உவர் பொருந்தும் மாயை, கடல் = கடலாம், அவித்தை = அஞ்ஞானம், தரங்கம் = அலைகளாம், மதி = புத்தி, குமிழி = குமிழிகளாம், மனம், துளி = துளிகளாம், பொறிகள் = இந்திரியங்கள், நுரை (ஏ) = நுரை களாம், திடப்படும் = அசையாத, வான் = ஆகாயம்,திமிங்கிலகிலம் = திமிங்கிலகிலமாம், சதுர்ப்பூதங்கள் = வாயு தேயு அப்பு பிருதிவி என் னும் நான்கு பூதங்களும், திமிங்கிலம் = திமிங்கிலமாம், பௌதிகம் = பூதங்களின் காரியங்கள், திமி = திமியென்கிற மீனும், கோபங்கள், சுறுமீனம் = சுறுமீனும், தடுக்கும் = மோட்சத்தைத் தடுக்கும், அவா = ஆசை, முதலை = முதலையாம், பிற = மற்ற, துர்க்குணங்கள், மற்றைச்சந்துக்கள் = மற்ற ஜந்துக்களாம், மறைமுடிவு = வேதத் தின் அந்தம், வங்கம் = கப்பலாம். பூருவ நூல் = பூருவபட்ச சாஸ் திரங்கள், வடுப்படு = குற்றம் பொருந்திய, தெப்பம் = தெப்பமாம்,

குரு, மீகான் = மீ காமனும், உயிர் = சீவர், வீழ்ந்து = அம்மாயை யென்னுஞ் சமுத்திரத்தில் விழுந்து, இறவா வகை = இறவாதபடி, உழல்வோர் = உழல்பவர்களாம், பரன் = ஈசுவரன், காற்று = காற்றும், பிரமம், எழில் = அழகிய, கரையே = கரையேயாம்.

(போ - ரை) அறிவில்லாத் தன்மையாகிய உவர் பொருந்தும் மாயை கடலாம், அஞ்ஞானம் அலைகளாம், புத்தி குமிழிகளாம், மனம் துளிகளாம் இந்திரியங்கள் நுரைகளாம், அசையாத ஆகாயம் திமிங்கிலகிலமாம், வாயு தேயு அப்பு பிருதிவிஎன்னும் நான்கு பூதங்களும் திமிங்கிலமாம், பூதங்களின் காரியங்கள் திமியென்கிற மீனும், கோபங்கள் சுறுமீனும், மோட்சத்தைத் தடுக்கும் ஆசை முதலையாம், மற்ற துர்க்குணங்கள் மற்ற ஜந்துக்களாம், வேதத்தின் அந்தம் கப்பலாம், பூருவபட்ச சாஸ்திரங்கள் குற்றம் பொருந்திய தெப்பமாம், குருமீ காமனும், சீவர் அம்மாயையென்னுஞ் சமுத்திரத்தில் விழுந்து இறவாதபடி உழல்பவர்களாம், ஈசுவரன் காற்றும், பிரமம் அழகிய கரையேயாம்.

## அறுசீர் விருத்தம்.

ஆரியன் வருணன் வேத மளக்கருண் டெழுந்தன் சொற்கார்
பூருவ பட்ச வுப்புப் போக்கியே புகல்சித் தாந்தம்
ஈரமா மழைமு மூட்சு விதயநற் பூமி ஞானம்
சீரிய பைங்கூழ் மோட்சஞ் சிறந்திடும் விளைவு தானே. (கசூ)

(ப - ரை) ஆரியன் = குரு, வருணன் = வருணனும், வேதம் அளக்கர் = வேதம் சமுத்திரமாம், உண்டு = அதை உண்டு, எழும் = எழுகின்ற, தன் = அக்குருவின், சொல், கார் = மேகமாம், பூருவ பட்ச உப்பு = பூருவ பட்சமென்னும் உவரை, போக்கி (ஏ) = நீக்கி, புகல் = சொல்லுகின்ற, சித்தாந்தம், ஈரம் ஆம் = குளிர்ச்சியாகிய, மழை = மழையாம், முமூட்சு இதயம் = மோக்ஷ இச்சையுடையவனது மனம், நற்பூமி = நல்ல பூமியாம், ஞானம், சீரிய = அழகிய, பைங்கூழ் = பயிராம், மோட்சம், சிறந்திடும் = சிறப்பான, விளைவு (தான், ஏ) = விளைவாம். (ஏ, ஏ, அசைகள்) (தான், சாரியை)

(போ - ரை) குரு வருணனும், வேதம் சமுத்திரமாம், அதை உண்டு எழுகின்ற அக்குருவின் சொல் மேகமாம், பூருவபட்சமென்னும் உவரை நீக்கிச் சொல்லுகின்ற சித்தாந்தம் குளிர்ச்சியாகிய

மழையாம், மோட்ச இச்சையுடையவனது மனம் நல்ல பூமியாம், ஞானம் அழகிய பயிராம், மோட்சம் சிறப்பான விளைவாம்.

வஞ்சி விருத்தம்.

தகைவிசும் பொருதிமி தன்னைநுங்
கிகறிமிங் கிலமன மீதுணும்
வகைதிமிங் கிலகில மாயைதான்
றிகழ்பெருங் கடல்பர தெய்வமே. (உ0)

(ப-ரை) தகை=பெரிய, விசும்பு=ஆகாயம், ஒரு=ஒப்பற்ற, திமி=திமியென்னும் மீனும், தன்னை=அதை, நுங்கு=விழுங்குகிற இகல்=வலிமையுடைய, திமிங்கிலம், மனம்=மனமாம், ஈது=இம் மனத்தை, உணும்=உண்ணுகின்ற, வகை=தன்மையையுடைய, திமிங்கிலகிலம், மாயை (தான்)=மாயையாம், திகழ்=இவைகளுக் கிடமாகிய, பெருங்கடல்=பெரிய சமுத்திரம், பரதெய்வமே= மேலான ஈசுவரனே. (தான், சாரியை)

(போ-ரை) பெரிய ஆகாயம் ஒப்பற்ற திமியென்னும் மீனும், அதை விழுங்குகிற வலிமையுடைய திமிங்கிலம் மனமாம். இம் மனத்தை உண்ணுகின்ற தன்மையையுடைய திமிங்கிலகிலம் மாயை யாம், இவைகளுக்கிடமாகிய பெரிய சமுத்திரம் மேலானஈசுவரனே.

அறுசீர் விருத்தம்.

பெத்தரிப்பி யாயிரம் பிறங்கமுத்தி காமியாஞ்
சுத்தியொன்றி தாயிரத் தொகைக்குளோர் வலம்புரி
சித்தசாத கன்சகத் திரத்திதிற் சலஞ்சலம்
முத்தனேக னின்னரன்ன மொய்மெய்பாஞ்ச சன்யமே. (உக)

(ப-ரை) (க) பெத்தர் இப்பி=பெத்தர்களாகிய சிப்பிகள், ஆயி ரம், பிறங்க=சூழ்ந்திருக்க, முத்திகாமி ஆம் = முமூட்சுவாகிய, சுத்தி ஒன்று=இடம்புரிச்சங்கு ஒன்று விளங்கும், இது=இவ்வி டம் புரிச்சங்கு, ஆயிரத் தொகைக்குள்=ஆயிரம் சூழ்ந்திருக்க அக் கூட்டத்துள், (ந) ஓர்வலம்புரி=ஒருவலம் புரிச்சங்கு விளங்கும், (உ) சித்த சாதகன்=அப்பியாச சித்தமுடையவன் என, (ச) சகத் திரத்து இதில்=இவ்வலம்புரிச் சங்குஆயிரத்துள், (கூ) சலஞ்சலம் சலஞ்சலமெனும் சங்கு ஒன்று விளங்கும், (ரு) முத்தன் ஏகன்=சீவன்

முத்தன் ஒருவனென, (எ) இன்னர் = இப்படிப்பட்ட சீவன் முத்தர்களென்கிற சலஞ்சலங்கள், அன்ன = முன்போல ஆயிரக்கணக்கான தொகைகள், மொய் = சூழ்ந்திருக்க விளங்கும், மெய் = சத்தாகிய ஈசுவரன், பாஞ்ச சன்யம் (ஏ) = பாஞ்சசன்யமெனும் ஒரே சங்காகும். (ஏ, அசை)

(பெத்தர் = மாயையால் கட்டுப்பட்டவர்) (முத்தன் = மாயையிலிருந்து விடுபட்டவன்) (சாதகன் = அப்பியாசி) (பாஞ்ச சன்யம் = சமுத்திரத்தில் ஒளித்துக்கொண்ட பஞ்சசனன் என்னும் ஓர் அசுரனது மார்பைப்பிளந்து அதிலிருந்து மகாவிஷ்ணுவால் எடுக்கப்பட்டு அவர் தனது இடக்கரத்தில் தரித்துக்கொண்ட ஓர் சங்கு)

(போ-ரை) பெத்தர்களாகிய சிப்பிகள் ஆயிரம் சூழ்ந்திருக்க முமுட்சுவாகிய இடம்புரிச்சங்கு ஒன்று விளங்கும், இவ்விடம் புரிச்சங்கு ஆயிரம் சூழ்ந்திருக்க அக்கூட்டத்துள் அப்பியாச சித்தமுடையவனென ஒருவலம்புரிச் சங்கு விளங்கும், இவ்வலம்புரிச் சங்கு ஆயிரத்துள் சீவன் முத்தன் ஒருவனெனச் சலஞ்சலமென்னும் சங்கு ஒன்று விளங்கும், இப்படிப்பட்ட சீவன் முத்தர்களென்கிற சலஞ்சலங்கள் முன்போல ஆயிரக்கணக்கான தொகைகள் சூழ்ந்திருக்க விளங்கும் சத்தாகிய ஈசுவரன் பாஞ்சசன்யமெனும் ஒரே சங்காகும்.

அறுசீர் விருத்தம்.

சீவன் முத்தி யேரிகரை திகழு மேரிக் குட்பாகம்
பாவும் விதேக முத்திவெளிப் பாகம் பெத்தங் கடல்பிரமம்
தாவு மலைகள் சிற்சத்தி தக்க சுழியீச் சுரன் குமிழி
ஆவ துயிராந் துளிகணினை வாகு நுரையிந் திரியமரோ. (உஉ)

(ப-ரை) சீவன் முத்தி, ஏரிகரை = ஏரியின் கரையாம், திகழும் = விளங்கும், ஏரிக்கு உள்பாகம், பாவும் = வியாபகமான, விதேக முத்தி = விதேக முத்தியாம், வெளிப்பாகம், பெத்தம் = உலக விவகாரமாகிய பந்த நிசையாம். கடல், பிரமம் = பிரமமாம், தாவும் அலைகள், சிற்சத்தி = ஞான சத்தியாம், தக்க = பெரிய, சுழி, ஈச்சுரன் = ஈசுவரனும், குமிழி ஆவது, உயிர் ஆம் = சீவர்களாம், துளிகள் நினைவு ஆகும், நுரை, இந்திரியம் = இந்திரியங்களாம்.
(அரோ, அசை)

(போ - ரை) சீவன் முத்தி ஏரியின் கரையாம், விளங்கும் ஏரிக் குட்பாகம் வியாபகமான விதேக முத்தியாம் வெளிப்பாகம் உலக விவகாரமாகிய பந்த திசையாம். கடல் பிரமமாம், தாவும் அலைகள் ஞான சத்தியாம், பெரியசுழி ஈச்வரனும்,குமிழியாவது சீவர்களாம், துளிகள் நினைவாகும், நுரை இந்திரியங்களாம்.

கலி விருத்தம்.

இடைவி டாம வியலு நிதித்தியின்
படிவம் யாமப் பரம்பரம் யாமெனல்
மிடியில் சத்துவ விர்த்தியிக் கங்கையை
அடைவர் பாவ வவித்தையற் றாரரோ. (உரு)

(ப - ரை) இடை விடாமல், இயலும்=பொருந்துகின்ற, நிதித்தியின்=நிதித்தியாசனத்தின், படிவம்=சொரூபமாவது, யாம்=கூடஸ்தனாகிய நான், அப்பரம்=அந்தப் பிரமமே, பரம்=அப்பிரமம், யாம்=கூடஸ்தனாகிய நானே, எனல், மிடி இல்=குறைவற்ற, சத்துவவிர்த்தி=சாத்விக சித்தமாம், இக்கங்கையை, அடைவர்=அடைந்தவர், பாவ அவித்தை=அஞ்ஞானமென்னும் பாவம், அற்றார்=ஒழிந்தோராவர். (அரோ, அசை)

(போ - ரை) இடை விடாமல் பொருந்துகின்ற நிதித்தியாசனத்தின் சொரூபமாவது கூடஸ்தனாகிய நான் அந்தப்பிரமமே அப்பிரமம் கூடஸ்தனாகிய நானே எனல், குறைவற்ற சாத்விக சித்தமாம் இக்கங்கையை அடைந்தவர் அஞ்ஞானமென்னும் பாவம் ஒழிந்தோராவர்.

கட்டளைக் கலித்துறை.

இரக்கங் குமரி மகிழ்ச்சிகோ தாவரியே பொறுமை
நரர்க்குநற் காவிரி யுற்சாக மாதல் நருமதையே
சரச்சு வதியா றுபேட்சை விரத்தி தனியமுனை
திரத்து று சாந்தம் பகிரதி சத்தத் திருநதியே. (உச)

(ப - ரை) (உ) இரக்கம்=தயாளம், குமரி=கன்னியாகுமரித்தீர்த்தமாம்,மகிழ்ச்சி=திருப்தி, கோதாவரி(ஏ)=கோதாவரியாம்,பொறுமை=பொறுமையாவது,-(க)நரர்க்கு=மனிதர்க்கு,(ந)நற்காவிரி=நல்ல காவேரியாம், உற்சாகம் ஆதல்=ஆவது, நருமதை (ஏ)=நருமதையாம், (ரு) சரச்சுவதி ஆறு=சரஸ்வதி நதியாம், (சு) உபேட்சை=விருப்பு வெறுப்பு இன்மை, (சு) விரத்தி = வைராக்

கியம், தனி=ஒப்பற்ற, யமுனே=யமுனு நதியாம், திரத்து உறு= நிலேத்திருக்கிற, சாந்தம், பகீரதி=கங்காநதியாம் இவை, சத்த= ஏழு, திருநதி (ஏ)=திவ்ய நதிகளாகும். (ஏ,ஏ,ஏ, அசைகள்)

(பொ-ரை) மனிதர்க்குத் தயாளம் கன்னியாகுமரித் தீர்த்தமாம் திருப்தி கோதாவரியாம், பொறுமையாவது நல்ல காவேரியாம், உற்சாகமாவது நருமதையாம், விருப்பு வெறுப்பு இன்மை சரஸ்வதி நதியாம். வைராக்கியம் ஒப்பற்ற யமுனு நதியாம், நிலேத்திருக்கிற சாந்தம் கங்கா நதியாம், இவை ஏழு திவ்ய நதிகளாகும்.

கலி விருத்தம்.

தங்கு தாமிர பன்னி தருமநீர்
துங்க பத்திரை சுத்தி கிருட்டிணே
மங்கி லாத மதியுயர் சிந்துவோ
சங்க மற்ற தவநிலே தானரோ. (உரு)

(ப-ரை) தங்கு=விளங்குகின்ற, தாமிரபன்னி, தரும,நீர்=குணமாம், துங்க பத்திரை, சுத்தி=உள்வெளிச் சுத்தமாம்,கிருட்டிணே= கிருஷ்ணநதி, மங்கிலாத=மங்காத, மதி=புத்தியாம்,உயர்=மேலான சிந்துவோ, சங்கம் அற்ற=கலப்பில்லாத, தவநிலே தான். (அரோ, அசை)

(பொ-ரை) விளங்குகின்ற தாமிரபன்னி தருமகுணமாம். துங்க பத்திரை உள்வெளிச் சுத்தமாம், கிருஷ்ணநதி மங்காத புத்தியாம், மேலான சிந்துவோ கலப்பில்லாத் தவநிலே தான்.

வெண்பா.

விடய நதியிழுப்பின் மேவுவரோ வஃதி
னுடனேவை ராக்கியமென் ருேதுந்—திடனுல்
எதிர்த்தகன்று சாந்தி யெனுங் கரையைச் சேர்வார்
விதிக்கெதிரென் னென்றே விழார். (உசு)

(ப-ரை) (க) விடய=விஷயங்களென்னும், நதி, இழுப்பின்= இழுத்தால், (ங) மேவுவரோ=போவார்களோ, (உ) அஃதின் உடனே=அதனுடனே, (ச) வைராக்கியம் என்று, ஓதும்=சொல்லப் படுகிற, திடனுல்=வலிமையினுல், எதிர்த்து, அகன்று = நீங்கி சாந்தி=சாந்தம், எனும் கரையை, சேர்வார்=சேர்வார்கள், விதிக்கு

= இவ்வாறின்றி விதிக்கு, எதிர், என் என்று (ஏ) = என்ன இருக்கிறதென்று நினைத்துக்கொண்டு, விழார் = அதன் போக்கில் செல்லார். (ஏ அசை)

(போ - ரை) விஷயங்களென்னும் நதியிழுத்தால் அதனுடனே போவார்களோ, வைராக்கியமென்று சொல்லப்படுகிறவலிமையினுல் எதிர்த்து நீங்கிச் சாந்தமெனுங் கரையைச் சேர்வார்கள். இவ்வாறின்றி விதிக்கெதிர் என்ன இருக்கிறதென்று நினைத்துக்கொண்டு அதன் போக்கில் செல்லார்.

மெய்ச்சிரத்தைக் கோலூன்றி மேற்செலச்சிந் தைப்புணையை
இச்சகத்தின் வாசனையாற் றிற்குறுக்கே—உய்ச்சுயிராம்
அன்னோன்முத் திக்கரையே றாதந் நதியிடைப்போம்
என்னோ விராச தப்போக் கின். (உஎ)

(ப - ரை) (க) மெய்ச்சிரத்தை = உண்மையாகிய விச்வாசமென்னும், கோல் = கோலை, ஊன்றி, மேற்செல = மேலேபோக, சிந்தைப் புணையை = மனமென்கிற தெப்பத்தை, இச்சகத்தின் = இந்த உலகத்தின், வாசனை ஆற்றில் = வாசனையாகிய நதியில், குறுக்கே, உய்ச்சு = செலுத்தி, உயிராம் = சீவனாகிய, அன்னோன் = முன் சொன்ன அச் செய்கைக் குரியவன், முத்திக்கரை = மோட்ச மென்னும் கரையில், ஏறாது, (உ) அந்நதியிடை = அவ்வுலக வாசனையென்கிற நதியில், போம் = போவான், என்னோ = இது என்ன அறியாமை. (உ) இராசதப் போக்கின் = இராசத தாமதகுணங்களாகிய போக்கிலேயே, (உய்ச்சு, உய்த்து என்பதன் போலி)

(போ - ரை) உண்மையாகிய விசுவாச மென்னும் கோலை ஊன்றி மேலேபோக மனமென்கிற தெப்பத்தை இந்த உலகத்தின் வாசனையாகிய நதியில் குறுக்கே செலுத்திச் சீவனாகிய முன் சொன்ன அச் செய்கைக் குரியவன் மோட்சமென்னும் கரையில் ஏறாது இராசத தாமத குணங்களாகிய போக்கிலேயே அவ்வுலக வாசனையென்கிற நதியில் போவான் இது என்ன அறியாமை.

ஆற்றி னிறங்கின்மே டன்றிச் சுழிமடுவொன்
றாற்றத் துற வகிலொவ் வோரவத்தை—ஏற்றிடுதல்
தன்னிலவிட் டுள்ளஞ் சகநோக்கி விச்சைவெறுப்
பின்னலவற் றென்றுறுத லே. (உஅ)

(ப - ரை) ஆற்றில் இறங்கின் = நதியில் இறங்கினுல், மேடு, அன்றி = அல்லது, சுழி = சுழி அல்லது, மடு = மடுவாகிய, ஒன்று = ஒவ்வொன்று, ஊற்றத்து = நிச்சயமாக, உற = பொருந்த, அதில், ஒவ்வோர் அவத்தை = ஒவ்வொரு அவஸ்தையை, ஏற்றிடுதல் = அடைதலாவது, தன்னிலைவிட்டு = சங்கற்பமற்றிருத்தலாகிய தனது நிலையைவிட்டு, உள்ளம் = உள்ளமானது, சகம் நோக்கில் = உலகத்தை நோக்கினுல், இச்சை வெறுப்பு = இச்சை அல்லது வெறுப்பு, இன்னல் = அல்லது துன்பம் என்னும், இவற்று = இவைகளில், ஒன்று = ஒவ்வொன்றை, உறுதல் (ஏ) = சார்தலாம். (ஏ, அசை)

(போ - ரை) நதியில் இறங்கினுல் மேடு அல்லது சுழி அல்லது மடுவாகிய ஒவ்வொன்று நிச்சயமாகப் பொருந்த அதில் ஒவ்வொரு அவஸ்தையை அடைதலாவது சங்கற்பமற்றிருத்தலாகிய தனது நிலையைவிட்டு உள்ளமானது உலகத்தை நோக்கினுல் இச்சை அல்லது வெறுப்பு அல்லது துன்பம் என்னுமிவைகளில் ஒவ்வொன்றைச் சார்தலாம்,

கலி விருத்தம்.

தனிவி சாரணைச் சாக்கிரஞ் சொர்க்கமாம்
மனவ சத்துறு சொற்பன மத்தியம்
துனுமஞ் ஞானச் சுழுத்திபா தாளமீ
தனுப விப்பர்விண் ணுர்நரர் நாகரே. (உகூ)

(ப - ரை) தனி = ஒப்பற்ற தனிமையாகிய ஆத்மாவின், விசாரணை = விசாரணையென்னும், சாக்கிரம் = விழிப்பு, சொர்க்கமாம், மனவசத்து = மனதின் வாசனுவசத்தினுல், உறு, = பொருந்துகிற, சொற்பனம் = கற்பனையாகிய மத்தியம் = பூலோகமாம், துனும் = நெருங்கிய, அஞ்ஞானச் சுழுத்தி = அறியாமையாகிய நித்திரை, பாதாளம் = பாதாளமாம், ஈது = முறையே இம்மூன்றில் ஒவ்வொன்றை, அனுபவிப்பர் = அனுபவிப்பவர் விண்ணுர் = தேவர், நரர் = மனிதர், நாகர் (ஏ) = நாகர் ஆவார்கள். (ஏ, அசை)

(போ - ரை) ஒப்பற்ற தனிமையாகிய ஆத்மாவின் விசாரணையென்னும் விழிப்புச் சொர்க்கமாம், மனதின் வாசனு வசத்தினுல் பொருந்துகிற கற்பனையாகிய கனு பூலோகமாம், நெருங்கிய அறியாமையாகிய நித்திரை பாதாளமாம், முறையே இம்மூன்றில் ஒவ்வொன்றை அனுபவிப்பவர் தேவர் மனிதர் நாகர் ஆவார்கள்.

## எழுசீர் விருத்தம்.

சூக்கும வகந்தை யதலம் யா னென்று
தோன்றுதல் விதலம்யா னெனதாஞ்
சாக்கிரஞ் சுதலம் புதியவுட் சிந்தை
தனிநித லங் தரா தலமோ
தூக்கனு மகாத லங்கழி வுன்னல்
சுழுத்திபா தாளமீங் குறைவோர்
ஆக்குநற் றொழிலர் நாகர்மிச் சிரத்தா
ரசுரர் தீ வினையர்தைத் தியரே. (௩௰)

(ப-ரை) (க) சூக்கும அகந்தை=சூட்சுமமான அகங்காரம், அதலம்=அதலமாம், யானென்று=நானென்று, தோன்றுதல், விதலம்=விதலமாம், யான் எனது ஆம்=நான் எனது என்றுதோன்றுகிற, சாக்கிரம், சுதலம்=சுதலமாம், புதிய உள் சிந்தை=புதியமனோ கற்பனை, தனி=ஒப்பற்ற, நிதலம்=நிதலமாம், (௩) தராதலம் (ஓ) தராதலமாம், (உ) தூ=பற்றுகிய, கனு=சொற்பனம், (ரு) மகா தலம்=மகாதலமாம், (சு) கழிவு உன்னல்=சென்றதை நினைத்தல், (எ) சுழுத்தி, பாதாளம்=பாதாளமாம், ஈங்கு = இவ்வேழுலகங்களில் ஒவ்வொன்றிலும், உறைவோர்=வசிப்போர், ஆக்கும் = செய்யப்படுகிற, நற்றொழிலர்=நல்ல கர்மத்தையுடையவராகிய, நாகர்= நாகர்கள், மிச்சிரத்தார்=நன்மை தீமை கலந்த கர்ம முடையவராகிய, அசுரர்=அசுரர்கள், தீவினையர்=தீய கர்மங்களையுடையவராகிய, தைத்தியர் (ஏ)=இராட்சதர்கள் ஆவார். (ஓ,ஏ அசைகள்)

(பொ-ரை) சூட்சுமமான அகங்காரம் அதலமாம், நானென்று தோன்றுதல் விதலமாம், நான் எனது என்று தோன்றுகிற சாக்கிரம் சுதலமாம், புதிய மனோ கற்பனை ஒப்பற்ற நிதலமாம், பற்றுகிய சொற்பனம் தராதலமாம், சென்றதை நினைத்தல் மகாதலமாம் சுழுத்தி பாதாளமாம் இவ்வேழுலகங்களில் ஒவ்வொன்றிலும் வசிப்போர் செய்யப்படுகிற நல்ல கர்மத்தையுடையவராகிய நாகர்கள், நன்மை தீமைகலந்த கர்ம முடையவராகிய அசுரர்கள், தீய கர்மங்களையுடையவர்களாகிய இராட்சதர்கள் ஆவார்.

அறுசீர் விருத்தம்.

சுகவிச்சை பூமி விசா ரணைபுவலோ கஞ் சிந்தை
சுருங்கல் சொர்க்கம்
தகுசத்தின் மனமிசைதல் மகாலோகஞ் சகமறத்தல்
சனலோ கஞ்சீர்
திகழ்சற்சிற் சுகமாத றவலோக மதீதஞ்சத்
தியலோ கம்பின்
மகிழ்பெத்தர் முமூட்சுச்சா தகர்வித்து வரன்வரியான்
வரிட்டன் வாழ்வோர். (ருக)

(ப-ரை) (க) சுக இச்சை = சுகத்தின் ஆசை, பூமி = பூலோகமாம், விசாரணை, புவலோகம் = புவலோகமாம், சிந்தை சுருங்கல் = மனது அடங்குதல், சொர்க்கம் = சொர்க்கலோகமாம், தகு = அறியத்தக்க, சத்தின் = பிரமத்தில், மனம், இசைதல் = கலத்தல், மகாலோகம் = மகா லோகமாம், சகம் = உலகை, மறத்தல், சனலோகம் = சனலோகமாம், சீர்திகழ் = சிறப்பாக விளங்கும், சற்சிற் சுகமாதல் = சச்சிதானந்த சொரூபமாயிருத்தல், தவலோகம் = தவலோகமாம், அதீதம் சத்தியலோகம் = சத்தியலோகமாம், (ரு) பின் மகிழ் பெத்தர் = பிற்காலத்தில் மகிழத்தக்க பெத்தர், முமூட்சு, சாதகர் = அப்பியாசிகள், வித்து = பிரமவித்து, வரன் = பிரமவரன், வரியான் = பிரமவரியான், வரிட்டன் = பிரம வரிஷ்டன் என்பவர்களாம், (ரு) வாழ்வோர் = இவ்வேழு லோகங்களில் முறையே ஒவ்வொன்றில் வசிப்பவர்.

(பொ-ரை) சுகத்தின் ஆசை பூலோகமாம், விசாரணை புவலோகமாம், மனது அடங்குதல் சொர்க்கலோகமாம், அறியத்தக்க பிரமத்தில் மனம் கலத்தல் மகாலோகமாம், உலகை மறத்தல் சனலோகமாம், சிறப்பாக விளங்கும் சச்சிதானந்த சொரூபமாயிருத்தல் தவலோகமாம், அதீதம் சத்தியலோகமாம், இவ்வேழுலோகங்களில் முறையே ஒவ்வொன்றில் வசிப்பவர் பிற்காலத்தில் மகிழத்தக்க பெத்தர், முமூட்சு, அப்பியாசிகள், பிரமவித்து, பிரமவரன் பிரமவரியான், பிரமவரிஷ்டன் என்பவர்களாம்.

நலிமறதிப் பிரளயநீர் சுபேச்சைவிசா ரணை தனுமா
னசியா மேன்மூன்
றுலகினும்பொங் குபுசத்து வாபத்தி யெனுநாலா
மூலகிற் றூவ
அலருமவண் வாழ்பிரம வித்துக்க ளெனுந்தவரைந்
தாமு லோகத்
தலமெனு நல் லசஞ்சத்தி யாம்பிரம சமாதிநிலை
சார்ந்து வாழ்வார். (ருஉ)

(ப-ரை) நலிமறதி = வருத்துகின்ற மறதியெனும், பிரளய, நீர் = ஜலமானது, சுபேச்சை விசாரணை தனுமானசி, ஆம் = ஆகிய, மேல் மூன்று உலகினும் = மேலுலகம் மூன்றிலும், பொங்குபு = பொங்கி, சத்துவாபத்தி எனும் நாலாம் உலகில் தாவ, அலரும் = விளங்குகிற, அவண் = அவ்விடத்தே, வாழ் = வளர்கின்ற பிரமவித்துக்களென்னும், தவர் = தவத்தோர், ஐந்தாம் உலோகத்தலமெனும் = ஐந்தாவது லோகத்தினிடமாகிய, நல் அசஞ்சத்தி ஆம் = நல்ல அசஞ்சத்தியான, பிரமசமாதி நிலை, சார்ந்து = அடைந்து, வாழ் வார். (பதார்த்தா பாவனை தவலோகமாம்) (துரியம், சத்தியலோக மாம்.)

(பொ-ரை) வருத்துகின்ற மறதியெனும் பிரளய ஜலமானது, சுபேச்சை, விசாரணை, தனுமானசி, ஆகிய மேலுலகம் மூன்றிலும் பொங்கிச் சத்துவா பத்தியெனும் நாலாமுலகிற்றூவ விளங்குகிற அவ்விடத்தே வளர்கின்ற பிரமவித்துக்களென்னும் தவத்தோர் ஐந் தாவது லோகத்தினிடமாகிய நல்ல அசஞ்சத்தியான பிரமசமாதிநிலை யடைந்து வாழ்வார்.

கலி விருத்தம்.

அறிவு புண்ணிய மாமறி யாமையே
சறுகு பாதகஞ் சத்துவஞ் சொர்க்கமாம்
பொறியி ராசதம் பூமி தமோகுணம்
நிறுவு பாதல நிர்க்குண மூத்தியே. (ருரு)

(ப-ரை) அறிவு புண்ணியமாம், அறியாமை (ஏ), சறுகு = தவறுகின்ற, பாதகம் = பாவமாம், சத்துவம் = சாத்வீககுணம், சொர்க் கமாம், பொறி = குறிக்கின்ற, இராசதம் = இரஜோகுணம், பூமி =

பூமியாம், தமோகுணம், நிறுவு=நிறுத்துகிற, பாதலம்=பாதாளமாம், நிர்க்குணம்=முக்குணங்களையுங் கடந்த நிலை, முத்தி (ஏ)=மோட்சமாம். (ஏ, ஏ, அசைகள்)

(போ-ரை) அறிவு புண்ணியமாம், அறியாமை தவறுகின்ற பாவமாம், சாத்விக குணம் சொர்க்கமாம், குறிக்கின்ற இராஜோ குணம் பூமியாம், தமோகுணம் நிறுத்துகிற பாதாளமாம், முக்குணங்களையுங் கடந்த நிலை மோட்சமாம்.

எழுசீர் விருத்தம்.

பிணிக டூதர் முடிவுநாள் பிடித்தகாலன் மரணமோ
இணையிலா நமன் கருப்ப மேய்தலேழு நிரயமே
அணவுதேக புத்தியோ டழுங்கல்மண்ணின் வாழ்வு பின்
உணர்வு மேவி யான்மபுத்தி யொன்றல்விண்ணின்
[வாழ்வரோ. (௩௪)

(ப-ரை) பிணிகள்=வியாதிகள், தூதர்=தூதர்களாம், முடிவு நாள்=மரண காலம், பிடித்த, காலன்=காலனும், மரணமோ இணையிலா, நமன்=யமனும், கருப்பம் ஏய்தல்=கர்ப்பத்தையடைதல், ஏழு, நிரயம் (ஏ)=நரகமாம், அணவு=பொருந்துகிற, தேகபுத்தியோடு=தேகம் நானெனும் புத்தியோடு, அழுங்கல்=வருந்துதல், மண்ணின் வாழ்வு=பூமியில் வாழ்தலாம், பின்=பின்பு, உணர்வு மேவி=விசாரணைசெய்து, ஆன்மபுத்தி=ஆத்மாவை நானெனும் புத்தியை, ஒன்றல்=பெறல், விண்ணின் வாழ்வு=சொர்க்கத்தில் வாழ்வதாம். (அரோ, ஏ அசைகள்)

(போ-ரை) வியாதிகள் தூதர்களாம், மரணகாலம் பிடித்த காலனும், மரணமோ இணையிலாயமனும், கர்ப்பத்தையடைதல் ஏழு நரகமாம், பொருந்துகிற தேகம் நானெனும் புத்தியோடு வருந்துதல் பூமியில் வாழ்தலாம், பின்பு விசாரணை செய்து ஆத்மாவை நானெனும் புத்தியைப் பெறல் சொர்க்கத்தில் வாழ்வதாம்.

அறுசீர் விருத்தம்.

தந்தையின்வீ ரியவிரவு ரவந் தாய்சோ ணிதக்கூட
சாலத் தோடு
பைந்தசைக்கும் பீபாக மென்பாய பூதி நரம்
பாமா பூதி

வெந்துவக்குச் செந்துத்தா னங்கேச மாமள்ளல்
விளம்பு மோரேழ்
தொந்தநிர யங்களிவற் றின்பிரிவெண் ணிலவுயிர்கள்
சுழலு மாங்கே. (௩ரு)

(ப-ரை) (க) தந்தையின், வீரிய=வீரியமாகிய, இரவு ரவம், தாய், சோணித=சுரோணிதமாகிய, கூடசாலத்தோடு, பைந்தசை= மிருதுவான தசையாகிய, கும்பீபாகம், என்பு ஆய=எலும்பாகிய, பூதி, நரம்பு, ஆம்=ஆகிய, மாபூதி=மகாபூதி, வெம் துவக்கு= கொடியதோலாகிய, செந்துத்தானம், கேசம் ஆம்=உரோமமாகிய அள்ளல் = அள்ளல்என்பவை, விளம்பும் = சொல்லப்படுகிற, ஓர் ஏழ்=ஒப்பற்ற ஏழு, தொந்த நிரயங்கள்=தொடர்ச்சியான நரகங் களாம், இவற்றின் பிரிவு, எண் இல=கணக்கில்லா தனவாம், உயிர் கள்=சீவர்கள், (௩) சுழலும்=வருந்தி உழல்வார்கள், (௨) ஆங்கு (எ) அந்நரகங்களில் (ஏ அசை)

(பொ-ரை) தந்தையின் வீரியமாகிய இரவுரவம், தாய் சுரோணிதமாகிய கூடசாலத்தோடு, மிருதுவான தசையாகிய கும்பீ பாகம், எலும்பாகிய பூதி, நரம்பாகிய மகாபூதி, கொடியதோலாகிய செந்துத்தானம், உரோமமாகிய அள்ளல் என்பவை சொல்லப்படுகிற ஒப்பற்ற ஏழு தொடர்ச்சியான நரகங்களாம் இவற்றின் பிரிவு கணக் கில்லாதனவாம் சீவர்கள் அந்நரகங்களில் வருந்தி உழல்வார்கள்.

எண்சீர் விருத்தம்.

மனிதர்பவ மாநாவ லந்தீவிற் குரித்தாய்
மன்விருத்தி மேரு வதிற் குறைதமசு கீழாம்
துனுநடுவி ராசதமா நிறைசாந்த மேலாய்த்
துலங்குமதைச் சூழ்தரு ஞானுதித்த னுங்கே
நினைவுதய கிரிமறதி யத்தகிரி யதனு
னேரும்விசா ரப்பகலு மவிசார விரவும்
இனுமகந்தை முகில்மறைவுண் டிருக்குக்கீ ழெசுர்தெற்
கியல்சாம மேற்கு வடக் கதர்வணமெல் லைகளே. (௩௬)

(ப-ரை) மனிதர் பவம் ஆம்=மனிதப்பிறப்பாகிய, நாவலந் தீவிற்கு, உரித்தாகி=உரியதாகி, மன்=நிலைத்த, விருத்தி=உள்ளம், மேரு=மகாமேருவாம், அதில், குறை=குறைந்த, தமசு=தமோ

குணம், கீழாம் = கீழ்ப்பாகமாம், துனு = பொருந்துகின்ற, நடு இராசதமாம் = இராசதகுணம் மத்தியபாகமாம், நிறை = மிகுந்த, சாந்தம் = தத்துவகுணம், மேல் ஆய் = மேற்பாகமாகி, துலங்கும், அதை, சூழ்தரும்ஞான ஆதித்தன் = ஞானமென்னும் சூரியன் பிரதக்ஷிணமாய்ச் சுற்றிவருவான் ஆங்கு (ஏ) = அவ்விடத்தில், நினைவு, உதயகிரி = உதயகிரியாம், மறதி, அத்தகிரி = அஸ்தகிரியாம், அதனால், நேரும் விசாரப்பகலும் அவிசார இரவும் ஏற்படும், இனும் = மேலும், அகந்தை முகில் = அகங்காரமாகிய மேகத்தின். மறைவு உண்டு, இருக்கு = இருக்குவேதம், கீழ் = கிழக்கு, எசுர் = யஜுர்வேதம், தெற்கு, இயல் = பொருந்திய, சாமம் = சாமவேதம்' மேற்கு, வடக்கு அதர்வணம் = அதர்வணவேதம் வடக்கு, எல்லை கள் = இவைகள் எல்லைகளாம். (ஏ. ஏ. அசைகள்) (துனு, துன்று என்பதன் இடைக்குறை) (இனும், இன்னும் என்பதன் இடைக் குறை).

(போ - ரை) மனிதப்பிறப்பாகிய நாவலந் தீவிற்கு உரியதாகி நிலைத்த உள்ளம் மகாமேருவாம், அதில் குறைந்த தமோகுணம் கீழ்ப்பாகமாம், மிகுந்த சத்துவகுணம் மேற்பாகமாகித் துலங்கும், அதை ஞானமென்னுஞ் சூரியன் பிரதக்ஷிணமாய்ச் சுற்றிவருவான், அவ்விடத்தில் நினைவு உதயகிரியாம், மறதி அஸ்தகிரியாம், அதனால் விசாரமென்கிற பகலும் அவிசாரமென்னும் இரவும் ஏற்படும், மேலும் அகங்காரமாகிய மேகத்தின் மறைவு உண்டு, இருக்குவேதம் கிழக்கு, யஜுர்வேதம் தெற்கு, பொருந்திய சாமவேதம் மேற்கு, அதர்வணவேதம் வடக்கு, இவைகள் எல்லைகளாம்.

### அறுசீர் விருத்தம்.

கன்மநினை வாமுடுக்க ளிச்சையுரு மயற்புந்தி
களங்கத் திங்கள்
சின்மயவா தித்தனெழும் விசாரணையாம் பகற்கண்ணே
திகழ்ந்தி டாது
புன்மையுறு மவிசார விரவினிலங் கிடுமெந்தப்
புந்திச் சோமன்
மன்விளங்க விடந்தந்தே தேயும்வகை கவர்ந்தி டுஞ்சின்
மயவெய் யோனே. (நஎ)

(ப-ரை) (க) கன்ம = கர்ம, நினைவு ஆம் உடுக்கள் = நினைவுகள் நக்ஷத்திரங்கள், இச்சை உரு = ஆசைவடிவாகிய, மயல் புந்தி = மயக்கமான புத்தி, களங்கத்திங்கள் = களங்கமுடைய சந்திரன் இவைகள், சித்மய = ஞான உருவமென்னும், ஆதித்தன் = சூரியன், எழும் = உதயமாகும், விசாரணை, ஆம் = ஆகிய, பகற்கண் (ஏ) = பகலில், திகழ்ந்திடாது = தோன்றாமல், புன்மை உறும் = தாழ்வான, அவிசார = அவிசாரமாகிய, இரவில், இலங்கிடும் = பிரகாசிக்கும், (௩) அந்த, புந்திச்சோமன் = புத்தியாகிய சந்திரன், மன் = நன்றாக, விளங்க, இடம்தந்து (ஏ) = இடங்கொடுத்து, தேயும் வகை = பின்தேயும் விதமாக, கவர்ந்திடும் = அதைக் கவர்ந்து கொள்ளும், (உ) சித்மய = அந்த ஞானவடிவமான, வெய்யோன் (ஏ) = சூரியன் (ஏ. ஏ. ஏ. அசைகள்).

(போ-ரை) கர்ம நினைவுகள் நக்ஷத்திரங்கள், ஆசைவடிவமாகிய மயக்கமான புத்தி களங்கமுடைய சந்திரன், இவைகள் ஞான உருவமென்னும் சூரியன் உதயமாகும் விசாரணையாகிய பகலில் தோன்றாமல் தாழ்வான அவிசாரமாகிய இரவில் பிரகாசிக்கும் அந்த ஞானவடிவமான சூரியன் அந்தப்புத்தியாகிய சந்திரன் நன்றாக விளங்க இடங்கொடுத்துப் பின் தேயும் விதமாக அதைக்கவர்ந்து கொள்ளும்.

எண் சீர் விருத்தம்.

ஆன்மவுணர் விரவியத னல்வளர்வுந் தேய்வும்
அடையுமுல கறிவுமதி யுலகறிவு மிகலாம்
பான்மையபூ ருவபக்கத் தான்முற்ற நிறையப்
படுஞ்சித்தி பூரணையிவ் வுலகறிவான் மாவின்
மேன்மையுணர் வைச்சேருங் கிருட்டினபக் கத்தான்
மீளாதெல் லாமொடுங்கு முத்திதனி யமையாம்,
சான்மையுல கறிவுநிறை வொடுக்கத்தி லகந்தைச்
சர்ப்பத்தான் மூடல்விடல் சாருதலு முளவே (௩௪)

(ப-ரை) ஆன்ம உணர்வு = ஆத்ம ஞானம், இரவி = சூரியன், அதனல்வளர்வும் தேய்வும், அடையும், உலகு = உலக, அறிவு, மதி = சந்திரன், உலகு = உலக, அறிவு, மிகல் ஆம் = மிகுவ தாகிய, பான்மைய = தன்மையையுடைய, பூருவ, பக்கத்தால் = பக்ஷத்தால், முற்ற நிறையப்படும் = நன்றாக நிறைவுற்ற, சித்தி, பூரணை = பௌர்

ணிமியாம், இவ்வுலகு = இந்த உலக, அறிவு, ஆன்மாவின் = ஆத்மாவின், மேன்மை உணர்வை = மேலான ஞானத்தை, சேரும் = சேர்வதாகிய, கிருட்டின = அபர, பக்கத்தால் = பக்ஷத்தால், மீளாது = திரும்பாது, எல்லாம், ஒடுங்கும் = ஒடுங்குவதாகிய, முத்தி = மோக்ஷமானது, தனி = ஒப்பற்ற, அமை = அமாவாசை, ஆம், சான்மை = மிகுந்தன்மையுடைய, உலகு = உலக, அறிவு = அறிவின், நிறைவு = நிறைவாகிய பூரணையிலும், ஒடுக்கத்தில் = ஒடுக்கமாகிய அமாவாசையிலும், அகந்தைச் சர்ப்பத்தால் = அகங்கார மென்னும் இராகு அல்லது கேதுவாகிய சர்ப்பத்தினுல், மூடல் = மூடுதலும், சாருதலும் = ஒவ்வொரு சமயத்தில் ஏற்படுதல், உள (ஏ) = உண்டு (ஏ. அசை)

(போ - ரை) ஆத்மஞானம் சூரியன், அதனுல் வளர்வும் தேய்வும் அடையும் உலக அறிவு சந்திரன், உலக அறிவு மிகுவதாகிய தன்மையையுடைய பூருவ பக்ஷத்தால் நன்ருக நிறைவுற்றசித்தி பௌர்ணிமியாம் இந்த உலக அறிவு ஆத்மாவின் மேலான ஞானத்தைச் சேர்வதாகிய அபரபக்ஷத்தால் திரும்பாது எல்லாம் ஒடுங்குவதான மோக்ஷமானது ஒப்பற்ற அமாவாசையாம், மிகுந்தன்மையுடைய உலக அறிவின் நிறைவாகிய பூரணையிலும் ஒடுக்கமாகிய அமாவாசையிலும் அகங்காரமென்னு மிராகு அல்லது கேதுவாகிய சர்ப்பத்தினுல் மூடுதலும் பின்விடுதலும் ஒவ்வொரு சமயத்திலேற்படுதலுண்டு.

வெண்பா.

இராசதவாங் கார மியம்பிடுசெம் பாம்பு
கராவனைய தாமதவாங் காரம் — இராகுவெனல்
சத்துவமே யாண்மைத் தகவா மிராச தம்பெண்
வைத்தவலி தாமதநீர் மை. (௩௬)

(ப-ரை) இராசத, ஆங்காரம் = அகங்காரம், இயம்பிடு = சொல்லப்படுகிற, செம்பாம்பு = கேது, கரா அனைய = முதலையைப்போன்ற, தாமத, ஆங்காரம் = அகங்காரம், இராகு, எனல் = என்று தெரிந்து கொள்க, சத்துவம் (ஏ) = சாத்விககுணம், ஆண்மைத் தகவு = ஆண்மைப் பண்பாம், இராசதம் = இராசதகுணம், பெண் தன்மையாம், வைத்த = இழிவாகவைக்கப்பட்ட, அலிதாமத நீர்மை = தாமதகுணம் அலித்தன்மையாம், (ஏ. அசை)

(போ-ரை) இராசத அகங்காரம் சொல்லப்படுகிற கேது, முதலையைப்போன்ற தாமத அகங்காரம் இராகு என்று தெரிந்து கொள்க. சாத்வீககுணம் ஆண்மைப் பண்பாம், இராசதகுணம் பெண் தன்மையாம், இழிவாக வைக்கப்பட்ட தாமதகுணம் அலித் தன்மையாம்.

சுதசாத் தீகமனஞ் சூழ்தருமோர் சக்கரத்தேர்
இத்திலொளிர் சாட்சி யெனுங்கதிரோன்—பத்தோ
டிரண்டவத்தை யாகு மியன்மதிக டோறு
முரண்டவிர்த்து நின்றிலங்கு முன். (௬௦)

(ப-ரை) (க) சுத்த, சாத்தீக=சத்துவ, மனமானது, சூழ்தரும்=சூழ்கின்ற, ஓர்சக்கரத்தேர், இத்தில்=இதில், ஒளிர்=விளங்குகிற, சாட்சி எனும், கதிரோன்=சூரியன், பத்தோடு இரண்டு=பன்னிரண்டு, அவத்தை ஆகும்=அவஸ்தையாகிய, இயல்மதிகள்=இயல்பான மாதங்கள், தோறும், முரண் தவிர்த்து=மாறுகிய இருளை நீக்கி, (௩) நின்று இலங்கும்=நிலைத்துப் பிரகாசிக்கும், (உ) முன்=முதன்மையாக. (இத்தில், இதில் என்பதன் வலித்தல் விகாரம்.)

(போ-ரை) சுத்த சத்துவ மனமானது சூழ்கின்ற ஓர்சக்கரத்தேர், இதில் விளங்குகிற சாட்சியெனும் சூரியன் பன்னிரண்டவஸ்தையாகிய இயல்பான மாதங்கள் தோறும் மாறுகிய இருளைநீக்கி முதன்மையாக நிலைத்துப் பிரகாசிக்கும்.

அவித்தையிரா வீறுறவுண் டாம்விருத்தி ஞானத்
தவத்தருணன் பின்பரபோ தானு—பவச்சுடரோன்
சற்பிரம விண்ணினெழுஞ் சர்வசாட் சித்துவமாம்
எற்சகத்தி ரங்கதிரோ டே. (௬௧)

(ப-ரை) (க) அவித்தை=அஞ்ஞான மென்னும், இரா=இரவு, ஈறு இற=முடிய, உண்டாம்=தோற்றுகிற, விருத்திஞான=விர்த்தி ஞானமாகிய, தவத்து=தவவடிவ, அருணன்பின்=அருணனுக்குப்பின், பரபோத அனுபவ=மேலான ஞான அனுபவமென்கிற, சுடரோன்=சூரியன், (௩) சத்=இருப்புமாத்திரமாகிய, பிரமவிண்ணின்=பிரமமென்னும் ஆகாயத்தில், எழும்=உதயமாவான், (உ) சர்வ, சாட்சித்துவம் ஆம்=சாக்ஷித்தன்மையாகிய, எல்=ஒளியான, சகத்திரம் கதிரோடு(ஏ)=ஆயிரங்கதிர்களோடு. (ஏ. அசை).

(போ-ரை) அஞ்ஞானமென்னும் இரவு முடியத் தோற்றுகிற விர்த்தி ஞானமாகிய தவவடிவ அருணனுக்குப்பின் மேலான ஞான அனுபவமென்கிற சூரியன் சர்வசாக்ஷித் தன்மையாகிய ஒளியான ஆயிரங்கதிர்களோடு இருப்புமாத்திரமாகிய பிரமமென்னும் ஆகாயத்தில் உதயமாவான்.

அறுசீர் விருத்தம்.

உலகவா சனைமட் டாய வோர்கலை சிதையாத் திங்கள்
திலகவைங் கரண ஞானேந் தியங்கரு மேந்தி யப்பேர்
மலருமூ வைந்தி திக்கண் வளர்ச்சியுங் குறைவு மேவும்
நிலைபிர விர்த்தி யோடு நிவிர்த்தியா மிருபக் கத்தே. (௬௨)

(க) உலகவாசனை, மட்டு ஆய = மாத்திரமாகிய, ஓர்கலை, சிதையா = கெடாத, திங்கள் = சந்திரன், திலக = மேலான, ஐங்கரணம் = ஐந்து அந்தக்கரணங்கள், ஞான இந்தியம் = ஐந்து ஞானேந்திரியங்கள், கரும இந்தியப்பேர் = ஐந்து கருமேந்திரியங்களென்னும் பெயரையுடைய, மலரும் = விளங்கிய, மூவைந்திதிக்கண் = பதினைந்து திதிகளால், (௩) வளர்ச்சியும் குறைவும், மேவும் = அடையும், (௨) நிலை பிரவிர்த்தியோடு = முறையாகப் பிரவிர்த்தி நிலைமையும், நிவிர்த்தி = நிவிர்த்தி நிலைமையும், ஆம் = ஆன, இருபக்கத்து = சுக்கிலபக்ஷத்திலும், கிருஷ்ண பக்ஷத்திலும். (ஏ. அசை). (சுக்கிலம் = வெள்ளை) (கிருஷ்ணம் = கறுப்பு) (சுக்கிலம் = பூர்வம்) (கிருஷ்ணம் = அபரம்) (பூர்வம் = முன்) (அபரம் = பின்)

(போ-ரை) உலகவாசனை மாத்திரமாகிய ஓர்கலை கெடாத சந்திரன் மேலான ஐந்து அந்தக்கரணங்கள் ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்க ளென்னும் பெயரையுடைய, விளங்கிய பதினைந்து திதிகளால் முறையாகப் பிரவிர்த்தி நிலைமையும் நிவிர்த்தி நிலைமையுமான சுக்கில பக்ஷத்திலும், கிருஷ்ண பக்ஷத்திலும் வளர்ச்சியுங் குறைவுமடையும்.

சாட்சித் துவமே லத்திசையிற் சனித்த விருத்தி ஞானநிலா
மாட்சிப் பரஞா னக்கதிரால் வளர்ந் தஞ்ஞான விருளொழிய
ஆட்சித் தனிப்பூ ரணமாகி யனுபூ தியெனும் பகுளமதாய்
சூட்சப் படத்தேய்ந் தேபரசிற் சுடரோன் றுதல்வீ டெனு
[மமையே. (௬௩)

(ப - ரை) சாட்சித்துவ = சாட்சித்தன்மைஎன்னும், மேலைத்திசையில் = மேற்குத்திக்கில், சனித்த = உதயமான, விருத்திஞான = விருத்திஞானமாகிய, நிலா = பிறையானது, மாட்சி = சிறப்பையுடைய, பரஞானக்கதிரால் = மேலான சொரூபஞானமென்கிற சூரியனால், வளர்ந்து அஞ்ஞான இருள், ஒழிய = நீங்க, ஆட்சி = உரிமையாகிய, தனி = ஒப்பற்ற, பூரணமாகி, அனுபூதி = அனுபவம், எனும், பகுளம் (அது) ஆய் = பௌர்ணிமியாய், சூட்சப்பட = சூட்சுமமாக, தேய்ந்து (ஏ) = அடங்கி, பரசிற்சுடர் = மேலான சொரூபஞானமென்னுஞ் சூரியனை, ஒன்றுதல் = அடைதல், வீடெனும் அமை (ஏ) = மோக்ஷமாகிய அமாவாசையாம். (அது, சொல்லுருபு) (ஏ. ஏ. அசைகள்) (சொரூப ஞானம் = அதீதஞானநிலை.)

(போ - ரை) சாட்சித்தன்மை என்னும் மேற்குத் திக்கில் உதயமான விருத்திஞானமாகிய பிறையானது சிறப்பையுடைய மேலான சொரூபஞான மென்கிற சூரியனால் வளர்ந்து அஞ்ஞான இருள் நீங்க உரிமையாகிய ஒப்பற்ற பூரணமாகி அனுபவமெனும் பௌர்ணமியாய்ச் சூட்சுமமாக அடங்கி மேலான சொரூப ஞானமென்னுஞ் சூரியனை யடைதல் மோக்ஷமாகிய அமாவாசையாம்.

## வெண்பா.

அவாவா மவிச்சையிரு ளாற்காணப் பட்ட
தவாமா லுலகுணர்வு தானு—முவாமதியம்
ஏற்றநிரா சைப்பே ரியன்ஞான தித்தனுளம்
தோற்றிற் புலப்படுமோ சொல். (௪௪)

(ப - ரை) (க) அவா ஆம் = ஆசையாகிய, அவிச்சை இருளால் = அஞ்ஞானமென்னும் இரவில், காணப்பட்ட = தோன்றுகிற, தவா = குறையாத, மால் = மயக்கமுடைய, உலகுஉணர்வு (தான்) ஆம் = உலக அறிவான, உவாமதியம் = பூரணசந்திரன், (௩) ஏற்ற = மேலான நிராசை = நிராசையென்னும், பேர் இயல் = பெருங்குணத்தையுடைய ஞான ஆதித்தன் = ஞானசூரியன், (உ) உளம் = உள்ளமெனு மாகாயத்தில், (௪) தோற்றில் = உதயமானால், புலப்படுமோ = விளங்குமோ சொல் = தெரிந்து சொல். (தான், சாரியை) (உளம், உள்ளம் என்பதன் இடைக்குறை ஏழாம் வேற்றுமைத்தொகை.)

(போ - ரை) ஆசையாகிய அஞ்ஞானமென்னு மிரவில் தோன்றுகிற குறையாத மயக்கமுடைய உலக அறிவான பூரண சந்திரன்,

உள்ளமெனு மாகாயத்தில் மேலான நிராசையென்னும் பெருங் குணத்தையுடைய ஞானசூரியன் உதயமானால் விளங்குமோ தெரிந்து சொல்.

தீதிரவு நன்மைத் திவாவுஞ்சிற் சத்தியென
ஓதலுறு நாளே யுரைத்தவதும்—சோதிப்
பிரமமெனுங் காலமே பேறிழப்பு மூடந்
தெரிவு பெரி தற்பமுமீ தே. (௬௫)

(ப-ரை) (க) தீது=தீமையென்னும், இரவும். நன்மைத்திவாவும்=நன்மை யென்னும் பகலும், சித்சக்திஎன=ஞானசத்திஎன்று ஓதல்உறு=சொல்லப்படுகிற, நாளே, உரைத்த=சொல்லிய, அதும்=அதுவும், சோதி=விளக்க சொரூபமாகிய, பிரமமெனும், காலமே (௩) பேறு=இலாபம், இழப்பு=நஷ்டமும், மூடம் தெரிவு=அறிவு அறியாமையும், பெரிது, அற்பமும்=சிறிதும் ஆகும், (௨) ஈதே=இவ்விதமே. (அதும், அதுவும் என்பதன் இடைக்குறை.)

(போ-ரை) தீமையென்னு மிரவும் நன்மையென்னும் பகலும் ஞானசத்தியென்று சொல்லப்படுகிற நாளே, சொல்லிய அதுவும் விளக்க சொரூபமாகிய பிரமமெனுங் காலமே, இவ்விதமே இலாபம் நஷ்டமும், அறிவு அறியாமையும், பெரிது சிறிதும் ஆகும்.

சுழுத்தியுறு மான்ம சுகவுணர்வு வெய்யோன்
விழிப்புறுநிச் சிந்தை விதுவாம்—செழிப்புள்ளம்
சேய்மனமால் புத்திகுரு சித்தம் புகரகந்தை
ஏய்சனியாம் விர்த்திநா ளேழு. (௬௬)

(ப-ரை) சுழுத்தி உறு=நித்திரையிலிருக்கின்ற, ஆன்ம சுக உணர்வு=பிரமானந்தத்தின் உணர்ச்சி, வெய்யோன்=சூரியனும், விழிப்புஉறு=விழிப்பை யடைந்த, நிச்சிந்தை=சங்கற்பமற்றநிலே, விது ஆம்=சந்திரனும், செழிப்பு உள்ளம்=சாந்தமான உள்ளம், சேய்=செவ்வாயாம், மனம், மால்=புதனும், புத்தி, குரு=வியாழனும், சித்தம், புகர்=வெள்ளியாம், அகந்தை=அகங்காரம், ஏய் சனி ஆம்=பொருந்திய சனியாம், (௩) விர்த்திநாள்=விருத்தியென்கிற நாட்களாம், (௨) ஏழு=இவ்வேழும்.

(போ-ரை) நித்திரையிலிருக்கின்ற பிரமானந்தத்தின் உணர்ச்சி சூரியனும் விழிப்பை யடைந்த சங்கற்பமற்ற நிலே சந்திரனும்.

சாந்தமான உள்ளம் செவ்வாயாம், மனம் புதனும், புத்தி வியாழனும், சித்தம் வெள்ளியாம் அகங்காரம் பொருந்திய சனியாம் இவ்வேழும் விருத்தி யென்கிற நாட்களாம்.

கட்டளைக் கலித்துறை.

பிறப்பிள வேனி லிருப்பு முதிர்வேனில் தன்வளர்வு
குறித்திடு காராம் விகாரங் குளிரே குறைவது தா
னுறப்படு முன்பனி மாரணம் பின்பனி யோதிருமுக்
கறிப்பின் வகையாம் பருவங்கள் பாவனைக் காலத்தவே. (சஎ)

(ப-ரை) பிறப்பு, இளவேனில்=இளவேனிலாம், இருப்பு=இருத்தல், முதிர்வேனில்=முதிர்வேனிலாம், பின்வளர்வு=பின்பு வளர்தல், குறித்திடு=குறிக்கின்ற, காராம்=கார்காலமாம், விகாரம்=மாறுபடுதல், குளிர்(ஏ)=குளிர்காலமாம், குறைவு, (அது, தான்)=குறைதலானது, உறப்படு=பொருந்துகின்ற, முன்பனி=முன்பனியாம், மாரணம்=மரணம், பின்பனி=பின்பனிக்காலமாம், ஓது=சொல்லப்படுகிற இந்த, இருமுக்கறிப்பின்=ஆறுவித புசிப்பென்னு மனுபவத்தின், வகை ஆம்=வகையாகிய, பருவங்கள், பாவனைக் காலத்தவே=பாவனையாகிய காலத்தின் பிரிவுகளே. (ஏ,அசை) (அது, சொல்லுருபு) (தான், சாரியை.)

(பொ-ரை) பிறப்பு இளவேனிலாம் இருத்தல் முதிர்வேனிலாம் பின்பு வளர்தல் குறிக்கின்ற கார் காலமாம் மாறுபடுதல் குளிர்காலமாம் குறைதலானது பொருந்துகின்ற முன்பனியாம் மரணம் பின்பனிக் காலமாம் சொல்லப்படுகிற இந்த ஆறுவித புசிப்பென்னு மனுபவத்தின் வகையாகிய பருவங்கள் பாவனையாகிய காலத்தின் பிரிவுகளே.

அறுசீர் விருத்தம்.

பாவனுப் பியாச தட்சி ணயன பருவ மாய்ந்த
சீவனர் தியான யோக மாம்பிதிர் யானத் தேகும்
ஓவறும் விசாராப் யாச வுத்தரா யணத்தில் வீந்த
தீவிரர் ஞான யோகத் தெய்வயா னத்தாற் செல்வர் (சஅ)

(ப-ரை) பாவனுப்பியாச=பாவனுப்பியாச மென்னும், தக்ஷிணயன பருவம்=தக்ஷிணயன பருவத்தில், மாய்ந்த, சீவனர்=சீவன், தியான யோகம், ஆம்=ஆகிய, பிதிர்யானத்து=திரும்பி வருகிற

று

பிதிர்யானத்தால், ஏகும்=செல்வான், ஓவு அறும்=ஓய்வற்ற, விசார அப்யாச = விசாராப்பியாச மென்கிற, உத்தராயணத்தில், வீந்த=இறந்த, தீவிரர்=தீவிர பக்குவமுடைய சீவர், ஞானயோக =ஞான யோகமென்னும் திரும்பிவராத, தெய்வயானத்தால், செல்வர்=அடைவர். (மானம்=விமானம்.)

(போ - ரை) பாவனுப்பியாசமென்னும் தக்ஷிணுயன பருவத்தில் மாய்ந்த சீவன் தியானயோகமாகிய திரும்பிவருகிற பிதிர்யானத்தாற் செல்வான். ஓய்வற்ற விசாராப்பியாச'மென்கிற உத்தராயணத்தில் இறந்த தீவிரபக்குவமுடைய சீவர் ஞானயோகமென்னுந் திரும்பி வராத தெய்வ யானத்தால் அடைவர்.

வெண்பா.

காமப் பனி, கோபக் காற்றுப் பிசுனவெயில்
தாமுற் றிதய சரீரத்தில்—தோமியலா
வண்ணஞ்சாத் தீகமா மாறிலா வெண்போர்வை
திண்ணமாப் போர்த்தல் சிறப்பு. (சகூ)

(ப - ரை) காமப்பனி=காமமாகியபனி, கோபக்காற்று=கோபமாகிய காற்று, பிசுனவெயில்=உலோபமாகிய வெய்யிலெனுமிவைகள், (தாம்), உற்று=பொருந்தி, இதய=உள்ளமென்கிற, சரீரத்தில், தோம் இயலா=குற்றமுருத, வண்ணம்=விதம், சாத்தீகம் ஆம்=சத்துவ குணமாகிய, மாறு இலா வெண்போர்வை=மாறுதலற்ற வெள்ளைப்போர்வையை, திண்ணம் ஆ=நன்ருக, போர்த்தல், சிறப்பு=சிறப்பாகும். (தாம், சாரியை.)

(போ - ரை) காமமாகிய பனி, கோபமாகிய காற்று, உலோபமாகிய வெய்யிலெனுமிவைகள் பொருந்தி உள்ளமென்கிற சரீரத்திற் குற்றமுருதவிதம் சத்துவ குணமாகிய மாறுதலற்ற வெள்ளைப் போர்வையை நன்ருகப் போர்த்தல் சிறப்பாகும்.

கலி விருத்தம்.

அறிவற் றேய்விலா தமைத்திடு கருமச்
செறிவி ராசதச் சிவப்புவா ணுளை
வறிதிற் போக்குமுன் மயறமோ நீல
முறவொ ணுதியர்ந் தோர்குணத் துகிற்கே. (ருo)

(ப - ரை) (உ) அறிவற்று ஓய்விலாது, அமைத்திடு=செய்கின்ற கருமச்செறிவு=கர்ம மிகுதியென்னும், இராசதச்சிவப்பு=இராசத குணமாகிய சிவப்புநிறமும், வாழ்நாளை=ஆயுளை, வறிதில்=வீணாக போக்கும், உள்மயல்=மனமயக்க மென்கிற, தமோநீலம்=தாமத குணமான கறுப்பு நிறமும், உறவொணாது=பொருந்தலாகாது, (க) உயர்ந்தோர்=நல்லோர்களின், குணத்துகிற்கு(ஏ) = குண மென்னும் வஸ்திரத்தில். (ஏ, அசை.)

(போ - ரை) நல்லோர்களின் குணமென்னும் வஸ்திரத்தில் அறிவற்று ஓய்விலாது செய்கின்ற கர்மமிகுதி யென்னும் இராசதகுண மாகிய சிவப்பு நிறமும், ஆயுளை வீணாகப் போக்கும் மனமயக்க மென்கிற தாமதகுணமான கறுப்பு நிறமும் பொருந்தலாகாது.

வெண்பா.

மாதரவாச் சூறு வளிதான் பரஞான
பூதரமாய் நிற்கும் புனிதர்தமை—யாதுசெயும்
ஊனுடல்மட் டாஞ்சிற் றுயிர்ப்பஞ் சினையுழல்வித்
தீனமுறத் தேய்ப்ப தலா தே. (ருக)

(ப - ரை) (க) மாதர்அவா=பெண்களின் இச்சை யென்னும், சூறுவளி(தான்)=சூறைக்காற்றானது, (ந) பரஞானபூதரமாய்= மேலான ஞானமென்கிற மலையாய், நிற்கும்=நிலைத்திருக்கும், புனிதர்தமை=ஜீவன் முத்தர்களாகிய பரிசுத்தர்களை, யாதுசெயும்= என்ன செய்யும், (உ) ஊன் உடல் மட்டு ஆம்=மாமிசமயமான சரீர மாத்திரமாயிருக்கும், சிற்றுயிர்ப்பஞ்சினை=அற்பஜீவனாகியபஞ்சை உழல்வித்து=அலைத்து, ஈனமுற=குறைவுபட, தேய்ப்பது அலாது (ஏ)=கெடுப்பதல்லாது. (தான், சாரியை) (ஏ, அசை.)

(போ - ரை) பெண்களினிச்சை யென்னுஞ் சூறைக்காற்றானது மாமிச மயமான சரீரமாத்திரமாயிருக்கு மற்ப ஜீவனாகிய பஞ்சை அலைத்துக் குறைவுபடக் கெடுப்பதல்லாது மேலான ஞானமென்கிற மலையாய் நிலைத்திருக்குஞ் சீவன் முத்தர்களை என்ன செய்யும்.

கலி விருத்தம்.

வெறுப்புக் காலை வெயில்விருப் புப்பனி
ஒறுத்தி டுஞ்சின முச்சி வெயிலதாம்
குறிப்பு லோபங் கொடுமுட் கவலைதான்
அறுக்குஞ் சூறை யசூயை கனலரோ. (ருஉ)

(ப - ரை) வெறுப்புக் காலே, வெயில்=வெய்யிலாம், விருப்பு. பனி=பனியாம், ஒறுத்திடும்=வருத்தும், சினம்=கோபம், உச்சி வெயில் (அது) ஆம்=உச்சி வெய்யிலாம், குறிப்பு=குறிக்கின்ற, உலோபம், கொடுமுள்=கொடிய முள்ளாம், கவலே(தான்), அறுக்கும், சூறை=சூறைக்காற்றும், அசூயை=பொறாமை, கனல்=அக்கினியாம். (அரோ, அசை) (அது, சொல்லுருபு) (தான், சாரியை)

(போ - ரை) வெறுப்புக் காலே வெய்யிலாம் விருப்புப் பனியாம் வருத்தும் கோபம் உச்சிவெய்யிலாம் குறிக்கின்ற உலோபம்கொடிய முள்ளாம் கவலே அறுக்குஞ் சூறைக்காற்றும். பொறாமை அக்கினியாம்.

## வஞ்சி விருத்தம்.

வயிராக்கிய மாலே வெயிற்றான்
மயலாப்பிர மான்ம விசாரச்
செயல்வாய்த்துள தென்றன் மனேமெய்
யயலேற்றிடி னலன் வீடே. (ருரு)

(ப - ரை) வயிராக்கியம் மாலே, வெயில்(தான்)=வெய்யிலாம், மயலா=மயங்காத, பிரம ஆன்ம விசாரச் செயல், வாய்த்துள = பொருத்தமான, தென்றல்=தென்றற் காற்றும், மனேமெய்=மனமென்னுஞ் சரீரத்தின், அயல்=இடத்து, ஏற்றிடின்=இவைகளே ஏற்றுக்கொண்டால், ஆம்நலன் = உண்டாகுஞ்சுகம், வீடே = மோக்ஷமே. (தான், சாரியை.)

(போ - ரை) வயிராக்கியம் மாலே வெய்யிலாம், மயங்காத பிரமான்ம விசாரச்செயல் பொருத்தமான தென்றற் காற்றும், மனமென்னுஞ் சரீரத்தினிடத்து இவைகளே ஏற்றுக்கொண்டால் உண்டாகுஞ் சுகம் மோக்ஷமே.

## கலி விருத்தம்.

நினேவு சன்ம நிகழ்த்து மறதியே
வனேவி லாத மரண மறிவுதான்
பனியொ ழிந்த பகலறி யாமையே
இனிமை யற்ற விராவென வோர்கவே. (ருசா)

(ப - ரை) நினைவு, சன்மம்=பிறப்பாம், நிகழ்த்தும்=சொல்லுகின்ற, மறதி(ஏ), வனைவு இலாத=அலங்காரமற்ற, மரணம்=மரணமாம், அறிவு(தான்), பனி ஒழிந்த பகல்=துன்பமில்லாத பகலாம், அறியாமையோ, இனிமையற்ற=நன்மை நீங்கிய, இரா=இரவாம், என ஓர்க(ஏ)=என அறிக. (ஏ, ஏ, அசைகள்) (தான், சாரியை.)

(போ-ரை) நினைவு பிறப்பாம் சொல்லுகின்ற மறதி அலங்காரமற்ற மரணமாம் அறிவு துன்பமில்லாத பகலாம் அறியாமையோ நன்மை நீங்கிய இரவாம் என அறிக.

விவேக மிந்திரன் மேன்மதி யேசசி
தவாத மற்றைய சற்குணந் தேவர்கள்
நிவார மோக நிருதர்க் கிறைவன் மற்
றவாவு தீப்பண் பனைத்து மசுரரே, (ருரு)

(ப - ரை) விவேகம், இந்திரன்=இந்திரனும், மேன்மதி (ஏ)=மேலானபுத்தி, சசி=இந்திராணியாம், தவாத=குறையாத, மற்றைய சற்குணம் = மற்ற நற்குணங்கள், தேவர்கள் = தேவர்களாம், நிவார=தடையான, மோகம்=அவிவேகம், நிருதர்க்கு இறைவன் =அசுரர்களுக்கு அரசனும், மற்று=மற்ற, அவாவு=இச்சிக்கின்ற, தீப்பண்பு அனைத்தும்=தீக்குணங்களெல்லாம், அசுரர் (ஏ) =அசுரர்களாம். (ஏ, ஏ, அசைகள்.)

(போ - ரை) விவேகம் இந்திரனும் மேலான புத்தி இந்திராணியாம் குறையாத மற்ற நற்குணங்கள் தேவர்களாம், தடையான அவிவேகம் அசுரர்களுக்கு அரசனும் மற்ற இச்சிக்கின்ற தீக்குணங்களெல்லாம் அசுரர்களாம்.

இதய கும்பத் தெழுந்துள சாட்சியா
மதிய கத்தியன் மாந்து மவித்தைவா
ரிதியுள் வன்மன தென்னும் விருத்திரன்
எதிர நன்மன விந்திரன் மாய்க்குமால். (ருசு)

(ப - ரை) இதய கும்பத்து=உள்ளமென்னும் கும்பத்தில், எழுந்துள=தோன்றிய, சாட்சி, ஆம் மதி=ஆகிய புத்தியுடைய, அகத்தியன்=அகஸ்திய முனிவர், மாந்தும்=உண்ணும், அவித்தைவாரிதி

யுள் = அஞ்ஞானமென்னுஞ் சமுத்திரத்துள், வன்மனதென்னும் = தீயமனமாகிய, விருத்திரன் = விருத்திராசுரன், எதிர = எதிர்ப்பட, நல்மன இந்திரன் = நல்ல மனமென்னு மிந்திரன், மாய்க்கும் = மாய்ப்பான். (ஆல், அசை.)

(போ - ரை) உள்ளமென்னும் கும்பத்திற் றோன்றிய சாட்சியாகிய புத்தியுடைய அகஸ்திய முனிவர் உண்ணும் அஞ்ஞானமென்கிற சமுத்திரத்துள் தீயமனமாகிய விருத்திராசுரன் எதிர்ப்பட நல்ல மனமென்னு மிந்திரன் மாய்ப்பான்.

அறுசீர் விருத்தம்.

இதயஞா லத்தி னூக்க மிந்திரன் வெறுப்புச் செந்தீச்
சுதமுறு மறதி காலன் சோம்பலே நிருதி யன்பு
மதிபெறு வருண னாசை வாயுவா மமைதி தானே
நிதிபதி யான்ம ஞான நிலைமையீ சான னன்றே. (௫௭)

(ப - ரை) இதயஞாலத்தின் = மனமென்னும் உலகில், ஊக்கம் = உற்சாகம், இந்திரன் = இந்திரனும், வெறுப்பு, செந்தீ = அக்கினியாம் சுதம் உறு = கேடுற்ற, மறதி, காலன் = யமனும், சோம்பல்(ஏ), நிருதி = நிருதியாம், அன்பு, மதிபெறு = புத்தியையுடைய, வருணன் = வருணனும், ஆசை வாயுவாம், அமைதி(தான், ஏ) = கிடைத்ததைக்கொண்டு மகிழ்தல், நிதிபதி = குபேரனும், ஆன்ம ஞான நிலைமை, ஈசானன் = ஈசானனும். (அன்று, ஏ) (ஏ, ஏ, ஏ, அன்று, அசைகள் தான், சாரியை.)

(போ - ரை) மனமென்னு முலகில் உற்சாகம் இந்திரனும் வெறுப்பு அக்கினியாம் கேடுற்ற மறதி யமனும், சோம்பல் நிருதியாம், அன்பு புத்தியையுடைய வருணனும், ஆசை வாயுவாம் கிடைத்ததைக்கொண்டு மகிழ்தல் குபேரனும் ஆன்ம ஞான நிலைமை ஈசானனும்.

வெண்பா.

அகண்ட விருத்திநிலை யாங்கற் பகந்தான்
மிகும்புதுமைச் சாட்சி விருத்தி — தகுங்காம
தேனு விசாரச் செயலிற் றிகழ்ஞான
மானமுறு சிந்தா மணி. (௫௮)

(ப - ரை) அகண்ட விருத்தி நிலை = அகண்டாகார விருத்தியின் நிலைமை, ஆம் கற்பகம் (தான்) = கற்பகவிருட்சமாம், மிகும்புதுமை = மிகுந்த அற்புதமாகிய, சாட்சிவிருத்தி, தகும் = தகுதியுடைய, காமதேனு = காமதேனுவாம், விசாரச் செயலில் = விசாரச் செய்கையில், திகழ்ஞானம் = விளங்குகிற ஞானம், மானம் உறு = பெருமை பொருந்திய, சிந்தாமணி = சிந்தாமணியாம். (தான், சாரியை.)

(போ - ரை) அகண்டாகார விருத்தியின் நிலைமை கற்பகவிருட்சமாம், மிகுந்த அற்புதமாகிய சாட்சிவிருத்தி தகுதியுடைய காமதேனுவாம், விசாரச் செய்கையால் விளங்குகின்ற ஞானம் பெருமை பொருந்திய சிந்தாமணியாம்.

கலி நிலைத்துறை.

அசுத்த கற்பனை யிரவினில் வல்லவ ரசுரர்
விசுத்த கற்பனைப் பகற்கணே சமர்த்தர்கள் விபுதர்
பிசைத்தி ரண்டையும் விரும்புமா லையில்வலார் பிதிரர்
வசைத்த மூன்றுமில் காலைஞா னத்தவர் மனிதர். (௫௧)

(ப - ரை) (க) அசுத்த கற்பனை = அசுத்த சங்கற்பமென்னும், இரவினில், வல்லவர் = வல்லமையுடையவர், அசுரர் = அசுரராவார், விசுத்த கற்பனை = மிகுந்த சுத்த சங்கற்பமென்கிற, பகற்கண் (ஏ) = பகலில், சமர்த்தர்கள், விபுதர் = தேவர்கள், (௩) பிசைத்து = கலந்ததாக, (௨) இரண்டையும் = இரவையும், பகலையும், (௪) விரும்பும் — விரும்பப்படுகிற, மாலையில் = மாலைக் காலத்தில், வலார் = வலிமையுடையவர், பிதிரர் = பிதிர்களாவர், வசைத்த = பழிப்புடையவையான, மூன்றுமில் = முன் சொன்ன மூன்று வகையுமில்லாத, காலை = அதிகாலையாகிய, ஞானத்தவர் = ஞானத்தையுடையவர், மனிதர் = மனிதராவார்கள். (ஏ, அசை) (பிசைத்து, பிசைந்து என்பதன் வலித்தல் விகாரம்.)

(போ-ரை) அசுத்த சங்கற்ப மென்னும் இரவில் வல்லமையுடையவர் அசுரராவர் மிகுந்த சுத்த சங்கற்ப மென்கிற பகலில் சமர்த்தர்கள் தேவர்கள் இரவையும் பகலையும் கலந்ததாக விரும்பப்படுகிற மாலைக் காலத்தில் வலிமையுடையவர் பிதிர்களாவர் பழிப்புடையவையான முன் சொன்ன மூன்றுவகையுமில்லாத அதிகாலையாகிய ஞானத்தையுடையவர் மனிதராவார்கள்.

அறுசீர் விருத்தம்

பரமுணர்ஞா னியைத்தரிசி யாதவனந் தகன் ஞானப்
பனுவல் கேளா
நரன்வெதிரன் ஞானநிலை விசாரியா தவன்மூகை
நனியா சானைப்
புரியுடன்றே டாதவனுந் தேசிகற்குப் பணிவிடைசெய்
பொறியில் லோனும்
அரியசரண் கரமிழந்த முடவர்பர ஞானமிலா
ரலிக ளாமே. (சுo)

(ப - ரை) பரம் உணர் = மேன்மையான பிரமத்தையுணர்ந்த, ஞானியைத் தரிசியாதவன், அந்தகன் = குருடனும், ஞானப்பனுவல் = ஞான சாஸ்திரத்தை, கேளா, நரன் = மனிதன், வெதிரன் = செவிடனும், ஞான, நிலை = நிலையை, விசாரியாதவன், மூகை = ஊமையாம், நனி = நன்றாக, ஆசானை = குருவை, புரியுடன் = அன்போடு, தேடாதவனும், தேசிகற்கு = குருவுக்கு, பணிவிடை, செய் = செய்யும், பொறி இல்லோனும் = புத்தியில்லாதவனும், அரிய = முறையே அருமையான, சரண் கரம் இழந்த = கால்களும் கைகளுங்குறைந்த' முடவர் = முடவர்களாம், பர = மேலான அனுபவ, ஞானம் இலார் = இல்லாதவர், அலிகளாம். (ஏ, அசை)

(போ - ரை) மேன்மையான பிரமத்தை யுணர்ந்த ஞானியைத் தரிசியாதவன் குருடனும், ஞானசாஸ்திரத்தைக் கேளா மனிதன் செவிடனும், ஞானநிலையை விசாரியாதவன் ஊமையாம், நன்றாகக் குருவை அன்போடு தேடாதவனும் குருவுக்குப் பணிவிடை செய்யும் புத்தியில்லாதவனும் முறையே அருமையான கால்களும் கைகளுங் குறைந்த முடவர்களாம் மேலான அனுபவஞானமில்லாதவர் அலிகளாம்.

கலி விருத்தம்.

உடல மாயமர் வோன்மர முத்தியி
னிடம்வி ருப்ப மிலான்மிரு கம்பல
படர்வ குப்பினிற் பார்ப்ப னிராக்கதன்
தொடர்கு தர்க்க சொரூபி யலகையே. (சுக)

(ப - ரை) உடலமாய்=சரீரமே நானென்று, அமர்வோன்=நிச்சயித்து இருப்போன், மரம்=மரமாம், முத்தியின் இடம்=மோக்ஷத்தில், விருப்பம், இலான்=இல்லாதவன், மிருகம்=மிருகமாம், பல=பலவாய், படர்=பரவிய, வகுப்பினில்=பேதங்களாக, பார்ப்பன்=பார்ப்பவன், இராக்கதன்=இராக்ஷசனும், தொடர்=தொடர்ச்சியான, குதர்க்க சொரூபி=குதர்க்கஞ் செய்தலையே வடிவமாயுடையவன், அலகை(ஏ)=பிசாசாம். (ஏ. அசை.)

(பார்ப்பன், பார்ப்பான் என்பதன் கடைக்குறுக்கம்.)

(போ - ரை) சரீரமே நானென்று நிச்சயித்திருப்போன் மரமாம், மோக்ஷத்தில் விருப்பமில்லாதவன் மிருகமாம், பலவாய்ப் பரவிய பேதங்களாகப் பார்ப்பவன் இராக்ஷசனும், தொடர்ச்சியான குதர்க்கஞ் செய்தலையே வடிவமா யுடையவன் பிசாசாம்.

நேம நஞ்ச நெருப்புடன் முட்களும்
பீம வெட்சசு பேயொடு பூதமும்
ஏமன் கால னெதிர்த்திடு தூதரும்
காமங் கோபங் கழறு முலோபமே. (சுஉ)

(ப - ரை) நேம நஞ்சம்=முறையே நியமமான நஞ்சு, நெருப்புடன்=நெருப்பு, முட்களும், பீமவெட்சசு=முறையே பயங்கரமான பிரமராக்ஷசன், பேயொடு=பேய், பூதமும், ஏமன்=முறையே இயமன், காலன், எதிர்த்திடு தூதரும், காமம் கோபம், கழறும்=சொல்லப்படுகிற, உலோபம்(ஏ)=உலோபம் என்பனவாம். (ஏ, அசை.)

(போ - ரை) முறையே நியமமான நஞ்சு நெருப்பு முட்களும் முறையே பயங்கரமான பிரம ராக்ஷசன் பேய் பூதமும், முறையே இயமன் காலன் எதிர்த்திடு தூதரும், காமம் கோபம் சொல்லப்படுகிற உலோபம் என்பனவாம்.

எழுசீர் விருத்தம்.

நினைவுமர்க்கட மாமுலோப நெடுஞ்சுவான மிராகமோ
முனைசருப்ப மகந்தைசிங்க முளைத்தவஞ்சனை யெண்குவே
சினமடம்புலி மதமியானை தெறும்பொறாமை விருச்சிகம்
அனலமோகமொர் பூதமாகு மவித்தைதீய பசாசமே. (சுங)

(ப - ரை) நினைவு, மர்க்கடம் ஆம் = குரங்காம், உலோபம், நெடுஞ் சுவானம் = பெரிய நாயாம், இராகமோ = ஆசையோ, முனைசருப்பம் = எதிர்க்கின்ற பாம்பாம், அகந்தை = அகங்காரம், சிங்கம் = சிங்க மாம், முளைத்த = தோன்றிய, வஞ்சனை = வஞ்சகம், எண்கு(ஏ) = கரடியாம், சினம் = கோபம், அடும்புலி = கொல்லுகின்ற புலியாம், மதம், யானை = யானையாம், தெறும் = கெடுக்கின்ற, பொறாமை, விருச்சிகம் = தேளாம், அனலமோகம் = அக்கினிபோன்ற மோகம், ஓர் = ஒப்பற்ற, பூதமாகும், அவித்தை = அஞ்ஞானம், தீய, பசாசம் = பசாசமாம். (ஏ, ஏ, அசைகள்.)

(ஒர், ஓர் என்பதன் குறுக்கல்விகாரம்.)

(பொ - ரை) நினைவு குரங்காம் உலோபம் பெரிய நாயாம், ஆசையோ எதிர்க்கின்ற பாம்பாம் அகங்காரம் சிங்கமாம் தோன்றிய வஞ்சகம் கரடியாம், கோபம் கொல்லுகின்ற புலியாம், மதம் யானை யாம் கெடுக்கின்ற பொறாமை தேளாம், அக்கினி போன்ற மோகம் ஒப்பற்ற பூதமாகும் அஞ்ஞானந்தீய பசாசமாம்.

வெண்பா.

தன்னிடத்து நின்று சகத்தெனும்நூ லைத்தந்து
பின்னியத னுள்ளாய்ப் பிறங்குபர—மென்னும்
சிலந்திபினு மந்தச் செகத்தெனு நூலைத்தான்
கலந்துணும்வே றின்றியே காண். (௬௪)

(ப - ரை) (க) தன் இடத்து நின்று = தன்னிடத்திலிருந்து, சகத்து எனும் = உலகமென்னும், நூலைத்தந்து = பட்டுநூலை யுண் டாக்கி, பின்னி = அதைக்கூடாகச் செய்து, அதன் உள் ஆய் = அதற்குள்ளாக, பிறங்கு = விளங்குகின்ற, பரம் என்னும் = மேலான பிரமம் என்னும், சிலந்தி = சிலந்திப் பூச்சியானது, பினும் = மறுபடி யும், அந்த, செகத்து = உலகம், எனும் நூலை, தான் = தானே, (௩) கலந்து = ஏகத்தன்மையாக, உணும் = உண்டுவிடும், (௨) வேறின் றியே = பேதமில்லாமலே, (௪) காண் = இதை உணர்.

(பொ - ரை) தன்னிடத்திலிருந்து உலகமென்னும் பட்டுநூலை உண்டாக்கி அதைக்கூடாகச் செய்து அதற்குள்ளாக விளங்கு கின்ற மேலான பிரமமென்னும் சிலந்திப்பூச்சியானது மறுபடியும் அந்த உலகமெனும் நூலைத்தானே பேதமில்லாமலே ஏகத்தன்மை யாக உண்டுவிடும் இதை உணர்.

அறுசீர் விருத்தம்.

இரவாம் வியவ காரமுணர்ந் திட்டே பகலாம் பரமார்த்தம்
தெரியாக் கூகைத் திரள்பெத்தர் திகழவ் விரண்டு மறிந்துமயல்
தரியாச் சகச நிட்டர்கண்மார்ச் சாலம் வியவ காரவிராத்
திரியோர் வொழிந்த காகமவை செறிநிர் விகற்ப ஞானியரே.
(சரு)

(ப - ரை) (க) இரவுஆம்=இராத்திரி எனும், வியவகாரம்= உலக விவகாரங்களை, உணர்ந்திட்டு(ஏ)=அறிந்தும், பகல்ஆம்= பகலென்னும், பரமார்த்தம் = சத்தியமான பிரமானுபவத்தை, தெரியா=அறியாத, கூகைத்திரள்பெத்தர்=பெத்தர்கள் கூகைக் கூட்டமாய், திகழ்=விளங்குகின்ற, அவ்விரண்டும்=வியாவகாரிக மெனும் இரவையும், பாரமார்த்தீகமெனும் பகலையும், அறிந்து, மயல்தரியா=மயக்கமுறாத, சகசநிட்டர்கள், மார்ச்சாலம்=பூனை யாம், (௩) வியவகார=விவகாரமென்கிற, இராத்திரி = இரவில், ஓர்வு ஒழிந்த=அறிவு பொருந்தாத, காகம்(அவை)=காகங்களாம், (உ) செறி=பிரமத்தி லயிக்கியமாகிய, நிர்விகற்பஞானியர் (ஏ)= நிர்விகற்ப நிஷ்டையுடைய ஞானிகள். (ஏ, ஏ, அசைகள்) அவை, (சொல்லுருபு.)

(பெத்தர்=மாயையில் கட்டுப்பட்டவர்.)

(போ - ரை) இராத்திரியெனும் உலக விவகாரங்களை அறிந்தும் பகலென்னுஞ் சத்தியமான பிரமானுபவத்தை அறியாத பெத்தர்கள் கூகைக் கூட்டமாம். விளங்குகின்ற வியாவகாரிகமெனும் இரவை யும், பாரமார்த்தீகமெனும் பகலையும் அறிந்து மயக்கமுறாத சகச நிட்டர்கள் பூனையாம். பிரமத்திலயிக்கியமாகிய நிர்விகற்ப நிஷ்டை யுடைய ஞானிகள் விவகாரமென்கிற இரவில் அறிவு பொருந்தாத காகங்களாம்.

அறுசீர் விருத்தம்.

சடநீ ரொழியச் சித்தமுதந் தனையுண் ணுஞ்சா தகரன்னம்
படருந் துரிய நிலவருந்திப் பயில்சாத் தியராஞ் சகோரங்கள்
விடலாச் சவிகற் பத்தொடுநிர் விகற்ப நிட்டை யாமிருகண்
தடவும் விருத்தி யோர்மணிகொள் சகச ஞானி வாயசமே
(சசு)

(ப - ரை) சடநீர் = சரீரமுதலிய அறியாமை வடிவமாகிய ஜலத்தை, ஒழிய = விட்டு, சித்து அமுதம் தனை = ஞானமென்னும் பாலை, உண்ணும், சாதகர் = அப்பியாசிகள், அன்னம் = அன்னப் பக்ஷியாம், படரும் = வியாபகமான, துரிய நிலவு = துரியமென்கிற நிலாவை, அருந்தி = உண்டு, பயில் = விளங்குகிற, சாத்தியர் = அனுபவிகள், ஆம்சகோரங்கள் = சகோரங்களாம், விடலா = விடாத, சவிகற்பத்தொடு = சவிகற்ப நிஷ்டையும், நிர்விகற்பநிட்டை = நிர்விகற்பநிட்டையும், ஆம் = ஆகிய, இருகண் = இரண்டு கண்களிலும், தடவும் = செல்லத்தக்க, விருத்தி = விருத்தியென்னும், ஓர்மணி கொள் = ஒரு மணியைப் பெற்ற, சகசஞானி, வாயசம்(ஏ) = காக்கையாம். (ஏ, அசை) (விடு அலா) (விடு, முதனிலைத் தொழிற் பெயர்) (அலா, இடைக்குறை) (விடுதல் அல்லா.)

(போ - ரை) சரீரமுதலிய அறியாமை வடிவமாகிய ஜலத்தை விட்டு ஞானமென்னும் பாலை, உண்ணும் அப்பியாசிகள் அன்னப் பக்ஷியாம், வியாபகமான துரியமென்கிற நிலாவை உண்டு விளங்குகிற அனுபவிகள் சகோரங்களாம். விடாதசவிகற்ப நிஷ்டையும், நிர்விகற்ப நிஷ்டையும் ஆகிய இரண்டு கண்களிலும் செல்லத்தக்க விருத்தியென்னும் ஒரு மணியைப்பெற்ற சகசஞானி காக்கையாம்.

வெண்பா.

ஈசன் குறிப்பே யிசைக்குஞ் சுருதிகளே
பேசுங் கிளிகள் பெரியோர்தம்—வாசகமா
மன்மிருதி நாகணவாய் மற்றபுரா ணங்குயில்கள்
நன்முகில்போ தம் மனமஞ் ஞை. (சுஎ)

(ப - ரை) ஈசன் குறிப்பே = ஈசுவரனது கருத்தையே, இசைக்கும் சுருதிகள்(ஏ) = சொல்லுகின்ற வேதங்கள், பேசும், கிளிகள் = கிளிகளாம், பெரியோர்(தம்) = மகான்களின், வாசகம் ஆம் = வாக்கியமாகிய, மன்மிருதி = நிலைபெற்ற தர்மசாஸ்திரம், நாகணவாய் = நாகணவாய்ப் பக்ஷியாம், மற்ற, புராணம் = புராணங்களெல்லாம், குயில்கள் = குயில்களாம், நல்முகில் போதம் = ஞானம் நல்ல மேகமாம், மனம் = அதைக்கண்டு ஆனந்திக்கும் மனம், மஞ்ஞை = மயிலாம். (ஏ, அசை) (தம், சாரியை.)

(பொ-ரை) ஈசுவரனது கருத்தையே சொல்லுகின்ற வேதங்கள் பேசும் கிளிகளாம். மகான்களின் வாக்கியமாகிய நிலைபெற்ற தர்ம சாஸ்திரம் நாகணவாய்ப் பக்ஷியாம். மற்ற புராணங்களெல்லாம் குயில்களாம். ஞானம் நல்லமேகமாம். அதைக்கண்டு ஆனந்திக்கும் மனம் மயிலாம்.

அறுசீர் விருத்தம்.

விருத்தியி னினையுமனம் வளைவுகளாற் சரிக்குமரா
மேலா யுற்றே
உரத்தினினை வாஞ்சாட்சி விர்த்திபறந் தேவெண்மை
யுடன்சி வப்பா
யிருக்குமுவ ணஞ்சீவன் பசுஞான தேசிகனே
யெதிர்சார்த் தூலம்
நரிப்பினகங் கரம்யானை பரவகந்தை யரி சொரூப
ஞானஞ் சிம்புள். (௬௮)

(ப-ரை) விருத்தியினால் நினையும் மனம் வளைவுகளால், சரிக்கும்=சஞ்சரிக்கின்ற, அரா=பாம்பாம், மேலாய், உற்றே=விளங்கியே, உரத்தின் நினைவு ஆம்=ஞான நினைவாகும், சாட்சிவிர்த்தி, பறந்தே=இறகு அசையாமலே பறந்து, வெண்மையுடன் சிவப்பாயிருக்கும், உவணம்=கருடனும், சீவன், பசு=மாடாம், ஞான, தேசிகனே=குருவே, எதிர்சார்த்தூலம்=அதை எதிர்த்துக் கொல்லுகின்ற புலியாம், நரிப்பின்=சரீரத்திரயங்களை நானென்கிற இகழ்ச்சியுற்ற, அகங்கரம்=அகங்காரம், யானை=யானையாம், பரஅகந்தை=சர்வ சாக்ஷியாகிய ஞான சொரூபமே நானென்னும் பரமாகங்காரம், அரி=சிங்கமாம், சொரூபஞானம்=அதீதஞானம், சிம்புள்=சக்ரவாளப்பக்ஷியாம்.

(பொ-ரை) விருத்தியினால் நினையுமனம் வளைவுகளாற் சஞ்சரிக்கின்ற பாம்பாம். மேலாய்விளங்கியே ஞானநினைவாகும் சாக்ஷி விர்த்தி இறகு அசையாமலே பறந்து வெண்மையுடன் சிவப்பாயிருக்குங் கருடனும். சீவன் மாடாம், ஞானகுருவே அதை எதிர்த்துக் கொல்லுகின்ற புலியாம், சரீரத்திரயங்களை நானென்கிற இகழ்ச்சியுற்ற அகங்காரம் யானையாம். சர்வ சாக்ஷியாகிய ஞான சொரூபமே நானென்னும் பரமாகங்காரம் சிங்கமாம். அதீதஞானம் சக்கரவாளப்பக்ஷியாம்.

### வெண்பா.

அசுத்தஞ்சங் கற்ப மசங்கற்பஞ் சுத்தம்
விசிக்கங்கு லஞ்ஞானம் வித்தை—மிசைச்சோதி
சற்குணவத்து க்கடமைச்சிதைக்கு மிச்சையெலி
இற்புலிவை ராக்கியமன் றே. (சுசுசு)

(ப-ரை) அசுத்தம், சங்கற்பம்=சங்கற்பமாம், அசங்கற்பம் சுத்தம்=சுத்தம் அசங்கற்பமாம், விசி=கட்டுவதைப்போன்ற, கங்குல்=இருள், அஞ்ஞானம்=அஞ்ஞானமாம், வித்தைமிசைச்சோதி=மேலான பிரகாசம் ஞானமாம், சற்குணவத்துக்கள் தமை=பதார்த்தங்களாகிய சற்குணங்களை, சிதைக்கும்=கெடுக்கின்ற, இச்சை எலி=எலி இச்சையாம், இல்புலி=வீட்டுப் புலியாகிய பூனை, வைராக்கியம்=வைராக்கியமாம். (அன்று, ஏ, அசைகள்.)

(பொ-ரை) அசுத்தம் சங்கற்பமாம். சுத்தம் அசங்கற்பமாம். கட்டுவதைப்போன்ற இருள் அஞ்ஞானமாம். மேலான பிரகாசம் ஞானமாம். பதார்த்தங்களாகிய சற்குணங்களைக் கெடுக்கின்ற எலி இச்சையாம். வீட்டுப் புலியாகிய பூனை வைராக்கியமாம்.

### அறுசீர் விருத்தம்.

முட்டில் பரமாங் குருக்குளவி முமுட்சுப் புழுவை யுபதேசக்
கொட்டி னுண்ணோக் கெனுங்குடம்பை குறுக வைப்ப வாங்கதனுட்
பட்டக் குருவை மறவாத பண்பாற் பரமாங் குளவியதா
யிட்டுண் முகக்கூ டகன்றேயெய் திடும்பூ ரணமாம் பறத்தலையே.
(எம)

(ப-ரை) முட்டு இல்=தடையற்ற, பரம் ஆம்—மேலான பிரம சொரூபமாகிய, குரு=குருவென்னும், குளவி, முமுட்சுப்புழுவை, உபதேசக்கொட்டின்=உபதேசமாகிய கொட்டினால், உள், நோக்கு எனும்=நோக்கமென்கின்ற, குடம்பை=கூட்டில், குறுகவைப்ப=அடங்கியிருக்கும்படிவைக்க, (ஆங்கு), அதன் உள்பட்டு=அதனுள்ளாக வசித்து, அக்குருவை மறவாத, பண்பால்=தன்மையினால் பரம்ஆம்=பிரமமாகிய, குளவி, (அது), ஆயிட்டு=ஆகி, உள்முகக்கூடு=அவ்வுள் நோக்கமெனுங் கூட்டை, அகன்று(ஏ)=நீங்கி, எய்திடும் பூரணமாம் பறத்தலை(ஏ)=பரிபூரணத் தன்மையாகிய பறக்குஞ் செயலையடையும். (ஆங்கு ஏ, ஏ, அசைகள்) (அது சொல் லுருபு.)

(போ-ரை) தடையற்ற மேலான பிரமசொரூபமாகிய குருவென்னும் குளவி முமூட்சுவான புழுவை உபதேசமாகிய கொட்டினால் உள்நோக்க மென்கின்ற கூட்டி லடங்கியிருக்கும்படி வைக்க அதனுள்ளாக வசித்து அக்குருவை மறவாத தன்மையினால் பிரமமாகிய குளவியாகி அவ்வுள் நோக்கமென்னுங் கூட்டை நீங்கிப் பரிபூரணத் தன்மையாகிய பறக்குஞ் செயலை அடையும்.

## கலி விருத்தம்.

கேணி யிற்றுளி கிளைமரத் தணிலாற்
பீணி றுத்திடல் பிரமமா மிறையால்
மாண வப்பசு மன்னிய போதம்
பேண முத்திதான் பெற்றிடு மாறே. (எக)

(ப-ரை) (க) கேணியில்=கிணற்றி னுள்ளிருக்கிற, துளி=பெண் ஆமையானது, கிளைமரத்து=கிளையோடுகூடிய மரத்தின் மேலுள்ள, அணிலால், பீள்=கர்ப்பம், நிறுத்திடல்=தரித்தல், (௩) பிரமம் ஆம் இறையால்=பிரமமென்னுங் குருவால், (௨) மாணவப்பசு=ஜீவனாகிய மாணாக்கன், (௪) மன்னியபோதம்=நிலைத்த ஞானத்தைப்பெற்று, பேண=காத்துக்கொள்ள, முத்தி(தான்)=முத்தியை, பெற்றிடும்=அடையும், ஆறு(ஏ)=விதமாம். (தான், சாரியை) (ஏ, அசை.)

(போ-ரை) கிணற்றினுள்ளிருக்கிற பெண் ஆமையானது, கிளையோடுகூடிய மரத்தின்மேலுள்ள அணிலால் கர்ப்பந் தரித்தல், ஜீவனாகிய மாணாக்கன் பிரமமென்னுங் குருவால் நிலைத்த ஞானத்தைப் பெற்றுக் காத்துக்கொள்ள முத்தியையடையும் விதமாம்.

## கலித்தாழிசை.

ஆன்மாப்பச் சோங்கிக் கதின்மாயா சத்திநிறம்
மேன்மேற்பல் வண்ணம் விளங்கிடினு மென்குறையே. (எ௨)

(ப-ரை) ஆன்மா=ஆத்மாவென்னும், பச்சோங்கிக்கு, அதின் மாயாசத்தி=அதினுள்ளமாயாசக்தியாகிய, நிறம், மேன்மேல்=மேலும் மேலும், பல்வண்ணம்=பலவிதமாய், விளங்கிடினும்=தோன்றினாலும், என்குறை(ஏ)=என்ன குறையாம் ஒன்றுமில்லை. (ஏ, அசை.)

(பொ - ரை) ஆத்மாவென்னும் பச்சோந்திக்கு அதிலுள்ளமாயா சத்தியாகிய நிறம் மேலும் மேலும் பலவிதமாய்த் தோன்றினாலும் என்ன குறையாம் ஒன்றுமில்லை.

கலித்துறை.

பலகோடி யண்டக் கருக்கொளேம் பூதநுணல் பஞ்சவிடயத்
தொலிபாட வதனையிந் திரியவைந் தலையர வொருங்குண்டுமேற்
றலையாடல் கண்டுமன வுவணமது கொண்டுயர் தரச்சூனிய
வலையூடு பட்டதது முணர்வேட னுள்ளாய் வழக்கற்றதே (எஙு)

(ப - ரை) பலகோடி, அண்டக்கருக்கொள் = அண்டங்களென்னுங் கருவைக்கொண்ட, ஐம்பூதநுணல் = பஞ்சபூதமாகிய தவளைகள், பஞ்சவிடயத்து ஒலிபாட = சத்தம் முதலிய ஐந்து விஷயங்களென்கிற ஓசையைச் செய்ய, அதனை = அப்பஞ்ச பூதமாகிய தவளைகளை, இந்திரிய ஐந்தலை அரவு = இந்திரியங்களென்னும ஐந்து தலை நாகம், ஒருங்கு உண்டு = முழுமையும் விழுங்கி, மேல் = மேலே, தலை ஆடல் கண்டு = தலைகள் விளங்குதலைக் கண்டு, மன உவணம் = மனமென்கிற கருடன், அதுகொண்டு = அவ்விந்திரியங்களென்னும் நாகத்தை தன்னுட்கொண்டு, உயர்தர = மேற்பட, சூனியவலையூடு = சூனியமாகிய வலையில், பட்டது = அகப்பட்டது, அது = அதுவும், உணர்வேடன் = அறிவென்கின்ற வேடனுக்கு, உள் ஆய் = உள்ளாகி வழக்கற்றது(ஏ) = வழக்கற்றதாம் (ஏ, அசை) (அதும், அதுவும் என்பதன் இடைக்குறை) (உணர். முதலிலைத் தொழிற்பெயர்.)

(பொ - ரை) பலகோடி அண்டங்களென்னும் கருவைக்கொண்ட பஞ்சபூதமாகிய தவளைகள் சத்தம் முதலிய ஐந்து விஷயங்களென்கிற ஓசையைச் செய்ய அப்பஞ்சபூதமாகிய தவளைகளை இந்திரியங்களென்னும் ஐந்துதலை நாகம் முழுமையும் விழுங்கி மேலே தலைகள் விளங்குதலைக்கண்டு மனமென்கிற கருடன் அவ்விந்திரியங்களென்னும் நாகத்தைத் தன்னுட்கொண்டு மேற்படச் சூனியமாகிய வலையில் அகப்பட்டது. அதுவும் அறிவென்கின்ற வேடனுக்குள்ளாகி வழக்கற்றதாம்,

## கட்டளைக் கலித்துறை.

சிகண்ட மயிலனை யார்பொய் சடந்துயர்ச் சிற்றின்பமாம்
நகண்ட சிலமின் மினியவித் தைத்தம நண்ணுமல்லால்
அகண்ட பரிபூரணசச்சி தானந்த வான்மவத்தாய்
உகண்ட சிவாதித்தன் முன்விளங் காவென் றுணர்ந்திடவே. (எச)

(ப - ரை) சிகண்ட மயில்=உச்சிக் கொழுந்தையுடைய மயிலை, அனையார்=போன்றமாதர்களின், பொய் சடம் துயர்ச்சிற்றின்பம் ஆம்=பொய்யும், அறியாமையும் துன்பமுமாகிய சிற்றின்பமென்னும், நகண்ட சில மின்மினி=நகர்ந்த சில மின்மினிப் பூச்சிகள், அவித்தைத்தமம்=அஞ்ஞான விருளில், நண்ணும்=தோன்றும், அல்லால்= அல்லாமல், அகண்டபரிபூரண சச்சிதானந்த, ஆன்மவத்து ஆய்=ஆன்மாவென்கிற சத்திய வஸ்துவான, உகண்ட=எல்லாவற்றையுங் கடந்த, சிவ ஆதித்தன்முன்=சிவ சூரியன்முன்பு, விளங்கா என்று, உணர்ந்திட(ஏ)=அறிக. (ஏ, அசை.)

(போ - ரை) உச்சிக்கொழுந்தையுடைய மயிலைப்போன்ற மாதர்களின் பொய்யும், அறியாமையும் துன்பமுமாகிய சிற்றின்பமென்னும், நகர்ந்த சிலமின்மினிப் பூச்சிகள் அஞ்ஞானவிருளிற்றோன்றுமல்லாமல் அகண்ட பரிபூரண சச்சிதானந்த ஆன்மாவென்கிற சத்திய வஸ்துவான எல்லாவற்றையுங் கடந்த, சிவசூரியன் முன்பு விளங்கா என்றறிக.

## வெண்பா.

அப்புறுமண் ணுற்சுவர்வைத் தாங்கும் பினுமதனுற்
செப்பமுறத் தீற்றுந் திறமதுதான்—இப்புவிமெய்
யாதியெல்லாம் புத்திநினை வாற்றோன்றப் பின்னுமதன்
மீதிலுறல் புத்திநினை வே. (எரு)

(ப - ரை) அப்புஉறும்=நீர் கலந்த, மண்ணுற் சுவர் வைத்து, ஆங்கு=அச்சுவரில், பினும்=மறுபடியும், அதனுல்=அந்நீர் மண்ணுல், செப்பமுற=செவ்வையாக, தீற்றுந்திறம்=பூசுதலென்னுந் தன்மையானது, (அது, தான்), இப்புவி=இவ்வுலகம், மெய்=சரீரம், ஆதியெலாம்=முதலான சர்வமும், புத்தி நினைவால் தோன்ற, பின்னும், அதன்மீதில்=அதில், உறல் புத்தி நினைவு(ஏ)=புத்தி

நினைவின் விகாரங்கள் பொருந்துதலாம். (அது, சொல்லுருபு) (தான் = சாரியை) (ஏ, அசை) (பினும், பின்னும் என்பதன் இடைக் குறை.)

(போ - ரை) நீர் கலந்த மண்ணாற் சுவர்வைத்து அச்சுவரில் மறு படியும் அந்நீர் மண்ணால் செவ்வையாகப் பூசுதலென்னுந்தன்மை யானது, இவ்வுலகம் சரீரம், முதலான சர்வமும் புத்தி நினைவால் தோன்றப் பின்னும் அதில் புத்தி நினைவின் விகாரங்கள் பொருந்து தலாம்.

நிலம்பிரமஞ் சிற்சத்தி நீர் தருக்கள் சீவர்
இலங்கியிடுந் தோப்பாவ தீசன்—துலங்கும்
சிதாகாயத் தில்விருத்தி சேர்ந்து நிலைத்தல்
சுதாவான் கமனத் துவம். (எசு)

(ப - ரை) (க) நிலம், பிரமம் = பிரமமாம், சித் சத்தி நீர் = நீர் ஞான சத்தியாம், தருக்கள் = விருட்சங்கள், சீவர் = சீவர்களாம், இலங்கியிடும் = விளங்குகிற, தோப்பு ஆவது, ஈசன் = ஈசுவரனும், (ங) துலங்கும் = பிரகாசிக்கின்ற, சித் = ஞான, ஆகாயத்தில், விரு த்தி = சத்துவசித்தம், சேர்ந்து = கலந்து, நிலைத்தல் = நிலைத்தலாம், (உ) சுதா = தானாக, வான் = ஆகாயத்தில், கமனத்துவம் = செல் லுந்தன்மை.

(போ - ரை) நிலம் பிரமமாம், நீர் ஞான சத்தியாம், விருட்சங் கள் சீவர்களாம், விளங்குகிற தோப்பாவது ஈசுவரனும். தானாக ஆகாயத்தில் செல்லுந்தன்மை பிரகாசிக்கின்ற ஞானாகாயத்தில் சத் துவ சித்தம் கலந்து நிலைத்தலாம்.

மண்கல் லயங்கனகம் வான்சுவர்கா னற்கிளிஞ்சில்
திண்பழுதை வந்திமுயல் சித்துருவே—எண்சகமோ
பானை பிரதிமைவாள் பைம்பூண்மை சித்திர நீர்
கூன்வெள்ளி பாம்புசுதன் கொம்பு. (எஎ)

(ப - ரை) (க) மண்கல், அயம் = இரும்பு, கனகம் = பொன், வான் = ஆகாயம், சுவர், கானல் = அளர்ப்பூமி, கிளிஞ்சில், திண் = வலிய, பழுதை, வந்தி = மலடி, முயல் = முயல் என்னும் இவைகள், சித்து உருவே = ஞான சொரூபமாகிய ஆத்மாவே, (ங) எண்சகம்

(ஓ)=நினைக்கப்படுகின்ற உலகமாம், (உ) பானை, பிரதிமை, வாள் =கத்தி, பைம்பூண் =நல்ல ஆபரணம், மை=நீலநிறம், சித்திரம், நீர், கூனுடையதுபோன்ற வெள்ளி, பாம்பு, மகன், கொம்பு, என்னுமிவைகள். (ஓ, அசை.)

(பொ - ரை) மண், கல், இரும்பு, பொன், ஆகாயம், சுவர், அளர்ப்பூமி, கிளிஞ்சில், வலிய பழுதை, மலடி, முயல், என்னுமிவைகள் ஞான சொரூபமாகிய ஆத்மாவே, பானை, பிரதிமை, கத்தி, நல்ல ஆபரணம், நீலநிறம், சித்திரம், நீர், கூனுடையதுபோன்ற வெள்ளி பாம்பு, மகன், கொம்பு, என்னுமிவைகள் நினைக்கப்படுகின்ற உலகமாம்.

பிரமநிலத் துற்ற பொருமாயை யத்தி
மாமதனிற் சீவ மசகத்—திரள்செறியு
ளண்டக் கனிக ளளவற் றுளவவற்றை
உண்டற் குரியனிறை யோர். (எஅ)

(ப - ரை) பிரம = பிரமமென்னும், நிலத்து உற்ற=நிலத்தில் தோன்றிய, பெருமாயை=பெரியமாயாசத்தி, அத்திமரம்=அத்திமரமாம், அதனில்=அதில், சீவ மசகத்திரள்=சீவர்களாகிய கொசுக் கூட்டங்கள், செறி=நெருங்கிய, உள்=உட்பாகமுடைய, அண்டக்கனிகள்=அண்டங்களென்னும் பழங்கள், அளவு அற்று=அளவில்லாமல், உள=இருக்கின்றன, அவற்றை=அவைகளை, உண்டற்கு உரியன்=உண்ணுதற்கு உரியவன், இறை=ஈசுவரனென, ஓர்=அறி.

(பொ - ரை) பிரமமென்னும் நிலத்திற்றோன்றிய பெரியமாயாசத்தி அத்திமரமாம் அதில் சீவர்களாகிய கொசுக் கூட்டங்கள் நெருங்கிய உட்பாகமுடைய அண்டங்களென்னும் பழங்கள் அளவில்லாமலிருக்கின்றன அவைகளை உண்ணுதற்கு உரியவன் ஈசுவரனென அறி.

வஞ்சி விருத்தம்.

விரையவித்தை வேர்மனம்—மாமுடம்பு வார்கிளைத்
திரள்சகந் தெருட்சிதீ—வருவிராகம் வாளரோ. (எகூ)

(ப-ரை) (௧) விரை அவித்தை=விதை அஞ்ஞானமாம், வேர், மனம்=மனமாம், மரம், உடம்பு=உடம்பாம், வார்=நீண்ட, கிளைத் திரள்=கிளைக்கூட்டங்கள், சகம்=உலகமாம், (௩) தெருட்சிதீ= அதைத்தகிக்கும் நெருப்பு ஞானமாம், (௨) வருவிராகம் வாள், (அரோ)=அதைவெட்டுங் கத்தி உண்டாகின்ற வைராக்கியமாம் (அரோ, அசை).

(பொ-ரை) விதை அஞ்ஞானமாம், வேர்மனமாம், மரம்உடம்பாம், நீண்டகிளைக்கூட்டங்கள் உலகமாம், அதைவெட்டுங் கத்தி உண்டாகின்றவைராக்கியமாம் அதைத்தகிக்கும் நெருப்புஞானமாம்

வெண்பா.

ஆன்மநிலத் தின்வித் தவிசாரம் வாசனைவேர்
ஊன்மெய் பராரை யுலகுகிளை—பான்மை
நினைவிலைக ளூற் றுதிர நிற்குமனந் தாருத்
தனையுணர்தல் வேர்ப்புழுவே தான் (அய)

(பொ-ரை) ஆன்ம நிலத்தின்=ஆத்மாவாகிய நிலத்தில், வித்து அவிசாரம்=விசாரமின்மை விதையாம், வாசனைவேர்=வாசனைவேராம், ஊன்மெய்=மாமிசமயமான சரீரம், பராரை=பருத்த அடிப்பாகமாம், உலகுகிளை=உலகம் கிளைகளாம், பான்மை=பலவகை, நினைவு=நினைவாகிய இலைகள், உற்று=அநேகந்தரம் உண்டாகவும், உதிர=உதிரவும், நிற்கும்மனம்=இருக்கின்றமனம், தாரு=மரமாம், தனையுணர்தல்=ஞானசொரூபமாகிய தன்னை அறிதல் வேர்ப்புழு (ஏ) (தான்)= வேர்ப்புழுவாம். (ஏ, அசை) (தான், சாரியை) (பான்மை, பன்மை யென்பதன் முதல் நீட்சி) (ஆத்மா = தான்) (வாசனை=பழக்கத்தின் சக்தி).

(பொ-ரை) ஆத்மாவாகிய நிலத்தில் விசாரமின்மை விதையாம், வாசனைவேராம். மாமிசமயமான சரீரம் பருத்த அடிப்பாகமாம், உலகம் கிளைகளாம். பலவகை நினைவாகிய இலைகள் அநேகந்தரம் உண்டாகவும் உதிரவும் இருக்கின்ற மனம் மரமாம் ஞானசொரூபமாகிய தன்னையுணர்தல் வேர்ப்புழுவாம்.

## அறுசீர் விருத்தம்.

தாவரநீர் வாழ்பவையூர் வனபறவை விலங்குநரர்
 தனிப்புத் தேளிர்
மாவிடயம் பொறிபுலன்பூ தம்புவனஞ் சித்தமக
 மதிசீ வப்பேர்
மேவுதருத் திரண்மாயைக் காடெறிந்து சிற்கனலான்
 வெளிசெய் வான்மெய்க்
காவலவன் மனத்தறியை விவேகவுரக் கோடரிக்குக்
 காம்பாக் கொண்டே (அக)

(ப - ரை) (உ) தாவரம் = மரம் செடிகொடிகள் முதலியன, நீர் வாழ்பவை, ஊர்வன, பறவை = பட்சிகள், விலங்கு = மிருகங்கள் நரர் = மனிதர்கள், தனி = ஒப்பற்ற, புத்தேளிர் = தேவர்கள், மா = பெரிய, விடயம் = சப்த பரிச ரூபரச கந்தங்கள் எனும் விஷயங்கள், பொறி = வாக்கு பாணி பாதம் பாயுரு உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்கள், சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்ராணம் என்னும் ஞானேந்திரியங்கள், புலன் = இப்பத்து இந்திரியங்களின் செயல்கள், பூதம் = ஆகாயம் வாயு அக்கினி அப்பு பிருதிவி, புவனம் = உலகங்கள் பதினான்கு, சித்தம், அகம் = அகங்காரம், மதி = புத்தி, சீவப்பேர் = சீவன் என்னும் பெயர்களை, மேவு = பொருந்திய தருத்திரள் = விருட்சங்களின் கூட்டமாகிய மாயைக்காடு = மாயையென்கிற வனத்தை, எறிந்து = வெட்டி, சிற்கனலான் = சொரூப ஞானக்கினியினால் தகித்து, வெளிசெய்வான் = வெளியாக்குவான், (க) மெய்க்காவலவன் = சத்தாகிய ஆத்மாவென்னும் தன்னைக் காத்துக் கொள்வதில் வல்லவனான முமூட்சு, மனத்தறியை = மனமென்னுந் தடியை, விவேக உரக்கோடரிக்கு = விசாரஞானமென்கிற கோடாலிக்கு, காம்பா = பிடியாக, கொண்டே.

(பொ - ரை) சத்தாகிய ஆத்மாவென்னுந் தன்னைக் காத்துக் கொள்வதில் வல்லவனான முமூட்சு, மனமென்னுந் தடியை விசாரஞானமென்கிற கோடாலிக்குப் பிடியாகக்கொண்ட மரம் செடி கொடிகள் முதலியன, நீர்வாழ்பவை, ஊர்வன பட்சிகள் மிருகங்கள் மனிதர்கள் ஒப்பற்ற தேவர்கள், பெரிய சப்த பரிச ரூப ரச கந்தங்கள் எனும் விஷயங்கள் வாக்கு, பாணி பாதம் பாயுரு உபஸ்தம் என்

னும் கன்மேந்திரியங்கள் சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்ராணம் என்னும் ஞானேந்திரியங்கள் இப்பத்து இந்திரியங்களின் செயல்கள், ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி, உலகங்கள் பதினான்கு, சித்தம், அகங்காரம் புத்தி, சீவன் என்னும் பெயர்களைப் பொருந்திய விருக்ஷங்களின் கூட்டமாகிய மாயை யென்கிற வனத்தை வெட்டிச் சொரூப ஞானக்கினியால் தகித்து வெளியாக்குவான். (இந்திரியங்களின் செயல்கள் :—பேசல், ஈதலேற்றல், நடத்தல், மலங்கழித்தல், சலங்கழித்தல், கேட்டல், பரிசித்தல், பார்த்தல், உருசித்தல், முகர்தல் முதலியன.) (பாணி=கை) (பாயுரு=மலத்துவாரம்) (உபஸ்தம்=ஜலத்துவாரம்)(சுரோத்திரம்=காது) (தொக்கு=தோல்) (சட்சு=கண்) (சிங்குவை=நாக்கு) (ஆக்ராணம்=மூக்கு.)

## கலி விருத்தம்.

அசத்தி யஞ்சட மல்லன்மெய்க் குற்றியின்
மிசைத்த வான்ம விசாரக் கடைதல்செய்
நிசச்சி தானந்த நீள்கன லோங்கிடும்
பசைச்சு வானு பவவிளக் கத்தொடே. (௬௨)

(ப - ரை) (௧) அசத்தியம்=பொய், சடம்=அறியாமை, அல்லல்=துன்பம் என்பவைகளான, மெய்க்குற்றியில்=சரீரமாகிய கட்டையில், மிசைத்த=மேலான, ஆன்ம=ஆத்தும, விசாரக்கடைதல்=விசாரமென்னும் கடைதலை, செய்=செய்க (அப்போது), (௩) நிச=உண்மை, சிதானந்த=ஞானனந்தமென்கிற, நீள் கனல்=பெரிய அக்கினி, ஓங்கிடும்=ஜொலித்து விளங்கும், (௨) பசை=சாரமான, சுவானுபவ=தனது அனுபவமென்னும், விளக்கத்தொடு(ஏ)=பிரகாசத்துடன். (ஏ, அசை.)

(போ - ரை) பொய் அறியாமை துன்பம் என்பவைகளான சரீரமாகிய கட்டையில் மேலான ஆத்ம விசாரமென்னுங் கடைதலைச் செய்க, அப்போது சாரமான தனது அனுபவமென்னும் பிரகாசத்துடன் உண்மை ஞானனந்தமென்கிற பெரிய அக்கினி ஜொலித்து விளங்கும்.

## வெண்பா.

நனவாங் கிளைகனவாம் நாப்பண் சுழுத்தித்
தனிமூலங் கொண்மாயைத் தாரு—மனதுள்
விரியும் விசாரமெனும் வேர்ப்புழுவாற் பட்டால்
துரிய வனலெரிக்குஞ் சூழ்ந்து. (அரு)

(ப - ரை) (க) நனவாங்கிளை = சாக்கிரமென்னுங் கிளைகள், கனவாம் நாப்பண் = சொற்பனமாகிய நடுப்பாகம், சுழுத்தி = சுழுத்தியென்கிற, தனி = ஒப்பற்ற, மூலம் = அடிப்பாகம், கொள் = கொண்ட, மாயைத்தாரு = மாயையென்னும் விருக்ஷம், மனதுள் = மனதில், விரியும், விசாரமெனும் = விசாரஞான மென்கிற, வேர்ப் புழுவால், பட்டால் = கெட்டால் அதை, (ந) துரிய அனல் = துரிய ஞானமாகிய அக்கினி, எரிக்கும் = எரித்துத் தன்மயமாக்கும், (உ) சூழ்ந்து.

(போ - ரை) சாக்கிரமென்னுங் கிளைகள் சொற்பனமாகிய நடுப் பாகம் சுழுத்தியென்கிற ஒப்பற்ற அடிப்பாகம் கொண்ட மாயை யென்னும் விருக்ஷம் மனதில் விரியும் விசார ஞானமென்கிற வேர்ப் புழுவால் கெட்டால் அதைச் சூழ்ந்து துரியஞானமாகிய அக்கினி எரித்துத் தன்மயமாக்கும்.

## அறுசீர் விருத்தம்.

அதிகார மனநன்செய் விசாரணையா முழவுசெயற்
காம்வி வேகம்
திதிநீர்சா தகயூக மெருநிறைசான் றகமென்னுந்
திடநன் றூறு
பதிவாமவ் விவேகமிக னீர்ப்பாய்ச்சல் சற்சங்கம்
பரமாங் காவல்
விதிர்வாய சங்கைதெறல் களைகட்டல் பரஞானம்
விளைவு தானே. (அச)

(ப - ரை) அதிகார = யோக்கியதையுடைய, மனம், நன்செய் = நன்செய்யாம் அதில், விசாரணையாம் உழவு, செயற்கு = செய்வதற்கு, ஆம் விவேகம் = தகுந்த விவேகம், திதிநீர் = நிலையான ஜலமாம், சாதகயூகம் = சகாயமான யுக்திகள், எரு = எருவாம் நிறை

சான்று=சர்வசாக்ஷி, அகம்=நான் என்னுந்திடம், நல்நாறு=நல்ல நாற்று, பதிவாம்=பதித்தலாம், அவ்விவேகமிகல்=பின்னும் அந்த விவேகம் மிகுதல், நீர் பாய்ச்சல்=நீர் பாய்ச்சலாம், சற்சங்கம்= நல்லோர் சகவாசம், பரமாம் காவல்=மேலான காவலாம், விதிர்வு ஆய=அசைப்பதாகிய, சங்கைதெறல்=சந்தேகங்களைத் தீர்த்தல், களை, கட்டல் = பிடுங்குதலாம், பரஞானம் = அனுபவ ஞானம், விளைவு=விளைவாம். (தான், சாரியை) (ஏ, அசை.) (நன்செய்= நல்ல வயல்.)

(பொ - ரை) யோக்கியதையுடைய மனம் நன்செய்யாம், அதில் விசாரணையாம் உழவு செய்வதற்குத் தகுந்த விவேகம் நிலையான ஜலமாம், சகாயமான யுக்திகள் எருவாம், சர்வ சாக்ஷி நான் என்னுந் திடம் நல்ல நாற்றுப் பதித்தலாம், பின்னும் அந்த விவேகம் மிகுதல் நீர் பாய்ச்சலாம், நல்லோர் சகவாசம் மேலான காவலாம், அசைப்பதாகிய சந்தேகங்களைத் தீர்த்தல் களை பிடுங்குதலாம், அனுபவ ஞானம் விளைவாம்.

வெண்பா.

சீவனே சாலி செறியு மவித்தையுமி
தாவுசங் கற்பந் தவிடாகும்—ஓவில்
விசாரஞ் சமாதியினன் மேயவவை போக்கின்
உசாவி லரிசிசிவ மோர். (அரு)

(ப - ரை) சீவன்(ஏ), சாலி=நெல்லாம், செறியும் அவித்தை= நெருங்கிய அஞ்ஞானம், உமி=உமியாம், தாவு=தாவுகின்ற, சங் கற்பம் தவிடாகும், ஓவுஇல்=ஓய்வற்ற, விசாரம்=விசாரஞானம், சமாதியினல்=சமாதி ஞானம் என்னும் உபாயங்களால், மேய அவை=பொருந்திய அவைகளை, போக்கின்=நீக்கினல், உசா இல் =வினவுதற்கிடமில்லாத, அரிசி சிவம்=சிவம் அரிசியாம், ஓர்= இதனை அறிக. (ஏ, அசை.)

(பொ - ரை) சீவன் நெல்லாம், நெருங்கிய அஞ்ஞானம் உமி யாம், தாவுகின்ற சங்கற்பம் தவிடாகும், ஓய்வற்ற விசாரஞானம் சமாதி ஞானம் என்னும் உபாயங்களால் பொருந்திய அவைகளை நீக்கினல் வினவுதற்கிடமில்லாத சிவம் அரிசியாம், இதனை அறிக.

### கலித்தாழிசை.

உடலுமியிலே றுஞ லுயிர் நெற்கஞ் ஞான
அடல்முளையின் றுன்மா வரிசி யகந்தவிடே (எசா)

(ப - ரை) உடல் உமி = உடலாகிய உமி, வேறுனல், உயிர்நெற்கு = சீவனென்கிற நெல்லுக்கு, அஞ்ஞான = அஞ்ஞான மென்னும், அடல் = வலிய, முளை, இன்று = இல்லை, ஆன்மா = ஆத்மா, அரிசி அரிசியாம், அகம் = நினைவு, தவிடு(ஏ) தவிடாம். (ஏ, அசை.)

(போ - ரை) உடலாகிய உமி வேறுனல் சீவனென்கிற நெல் லுக்கு அஞ்ஞானமென்னும் வலிய முளை இல்லை. ஆத்மா அரிசி யாம். நினைவு தவிடாம்.

### அறுசீர் விருத்தம்.

மனிதசன னக்கிணற்றி னுணர்வாய நன்னீரை
மனது வாக்குத்
தனுவெனுமுத் துலையிட்டே நல்லுயிர்வேள் முத்தியின்சா
தனமாஞ் செங்நெற்
கனகழனிக் கிறைத்துப்பே ரானந்தப் பயன்பெறுதல்
காணு தந்தோ
தினமுயல்வார் பலர்பந்த சாதனமா கியவிழற்புற்
செறிகாட் டிற்கே. (எஎ)

(ப - ரை) (க) மனித, சனன = சனனமென்கிற, கிணற்றில், உணர்வு ஆய = அறிவாகிய, நன்னீரை, மனது வாக்கு, தனு = காயம், எனும் முத்துலை இட்டு(ஏ) = மூன்று துலையிட்டு, நல்லுயிர் வேள் = நல்ல ஜீவனென்கிற வேளாளன், முத்தியின் சாதனம், ஆம் = ஆன, செங்நெல் = செங் நெல் விளைகின்ற, கன கழனிக்கு = பெரிய வயலுக்கு, இறைத்து, பேரானந்தப் பயன், பெறுதல் = பெறுதலை, காணுது = அறியாமல், அந்தோ = ஐயோ, (ங) தினம் முயல்வார் = அவ்வாறு இறைத்தலில் எப்போதும் முயல்வார், (உ) பலர், பந்த சாதனமாகிய விழற்புல், செறி = நெருங்கிய, காட் டிற்கே. (ஏ, அசை.)

(போ - ரை) மனித சனனமென்கிற கிணற்றில் அறிவாகிய நன்னீரை மனது வாக்குக் காயம் என்னும் மூன்று துலையிட்டு

நல்ல ஜீவனென்கிற வேளாளன் முத்தியின் சாதனமான செந்நெல் விளைகின்ற பெரிய வயலுக்கு இறைத்துப் பேரானந்தப் பயன் பெறுதலை அறியாமல் ஐயோ பலர் பந்த சாதனமாகிய விழற்புல் நெருங்கிய காட்டிற்கே அவ்வாறு இறைத்தலில் எப்போதும்முயல் வார்கள்.

வீறிதய நிலத்தின்மண் ணறியாமை யையங்கல்
விபரீ தம்வன்
பாறைசிர வணமனன நிதித்தியவற் றினைமுறையே
பற்ற றுக்குந்
தேறுபடை யிவற்றின்முய லப்யாச மாந்தொடலாற்
றிகழ்செய்ஞ் ஞானம்
ஊறிநிறை நன்னீர்சத் துவவிருத்தி யதின்மூழ்கி
யுண்டு வப்போன். (அச)

(ப - ரை) வீறு இதய நிலத்தில் = பெருமையுடைய உள்ளமென்னும் நிலத்தில், மண் அறியாமை = அறியாமை மண்ணும், ஐயம்கல் = சந்தேகம் கல்லாம், விபரீதம், வன்பாறை = கெட்டியான பாறையாம், சிரவணம் மனனம், நிதித்தி = நிதித்தியாசனம் ஆகிய மூன்றும், அவற்றினை = அவைகளை, முறையே = கிரமமாக, பற்றறுக்கும் = அடியோடு பேர்த்தெடுக்கின்ற, தேறு படை = உயர்ந்த ஆயுதங்களாம், இவற்றின் = இச்செயல்களில், முயல் = முயல்கிற, அப்பியாசம், ஆம் = ஆகிய, தொடலால் = தோண்டுதலால், திகழ் = விளங்குகின்ற, மெய்ஞ்ஞானம், ஊறி, நிறை = நிறைகின்ற, நன்னீர் = நல்ல ஜலமாம், சத்துவவிருத்தி = சாத்துவீக விருத்தி, அதில் மூழ்கி, உண்டு, உவப்போன் = மகிழ்வோனும்.

(போ - ரை) பெருமையுடைய உள்ளமென்னும் நிலத்தில் அறியாமை மண்ணும். சந்தேகம் கல்லாம். விபரீதம் கெட்டியான பாறையாம். சிரவணம் மனனம் நிதித்தியாசனம் ஆகிய மூன்றும் அவைகளைக் கிரமமாக அடியோடு பேர்த்தெடுக்கின்ற உயர்ந்த ஆயுதங்களாம், இச்செயல்களில் முயல்கிற அப்பியாசம் ஆகிய தோண்டுதலால் விளங்குகின்ற மெய்ஞ்ஞானம் ஊறி நிறைகின்ற நல்ல ஜலமாம். சாத்துவீக விர்த்தி அதில் மூழ்கி உண்டு மகிழ் வோனும்,

### வெண்பா.

மனித பவக்கழனி வாய்ந்தவதி காரி
தனுவா முதிர்கரும்பு சார்ந்த—கனநேதிப்
புத்தி யியந்திரத்தாற் போதவிர சம்பிரிந்திம்
முத்திக் கடாரமல்கன் முன். (அகூ)

(ப - ரை) மனித பவக்கழனி=மனிதப் பிறவி யென்னும் வயலில், வாய்ந்த=பொருந்திய, அதிகாரி=நான்கு சாதனங்களுடையவனது, தனுவாம் முதிர் கரும்பு=சரீரமாகிய விளைந்த கரும்பு, சார்ந்த=அடைந்த, கனநேதிப் புத்தி=நன்ருக நேதி செய்யும்புத்தியென்னும், இயந்திரத்தால்=ஆலையினுல், போதஇரசம் = ஞானமென்கிற இரசம், பிரிந்து, இம்முத்தி=இச்சரீரத்தோடு விளங்கும் சீவன் முத்தியாகிய, கடாரம்மல்கல்=கொப்பரையில் நிறைதலை, முன்=கவனி.

(நேதி=தத்துவங்களை இதுவல்ல இதுவல்ல என்று தள்ளல்.)

(போ - ரை) மனிதப் பிறவி யென்னும் வயலில், பொருந்திய நான்கு சாதனங்களையுடையவனது சரீரமாகிய விளைந்த கரும்பு, அடைந்த, நன்ருக நேதி செய்யும் புத்தி யென்னும் ஆலையினுல் ஞானமென்கிற இரசம் பிரிந்து இச்சரீரத்தோடு விளங்கும் சீவன் முத்தியாகிய கொப்பரையில் நிறைதலைக் கவனி,

இக்கு மனதுகொழுந் தென்ன றமோகுணமாம்
சக்கை யிராசதமே சாத்திகம்—தொக்கரசம்
விர்த்திஞா னம்பாகு மெய்ஞ்ஞானம் வெல்லமலாற்
சர்க்கரையான் மாவெனவுஞ் சாற்று. (கூ0)

(ப - ரை) இக்கு=கரும்பு, மனது = மனமாம், கொழுந்து= அதன் கொழுந்து, என்னல்=என்பது, தமோ குணமாம், சக்கை, இராசதம்(ஏ) = இராசத குணமாம், சாத்திகம் தொக்கரசம் = எடுத்த ரசம் சத்துவ குணமாம், விர்த்தி ஞானம் பாகு=பாகு விர்த்தி ஞானமாம், மெய்ஞ்ஞானம் வெல்லம்=வெல்லம் மெய்ஞ் ஞானமாம், அலால்=மேலும், சர்க்கரை, ஆன்மா=ஆன்மாவாம், எனவும் சாற்று=என்று உணர்ந்து சொல். (ஏ, அசை) (அலால், அல்லால் என்பதன் இடைக்குறை.) (மெய்ஞ்ஞானம=அனுபவ ஞானம்) (ஆன்மா=அதீதம்.)

(போ - ரை) கரும்பு மனமாம், அதன் கொழுந்து என்பது தமோ குணமாம், சக்கை இராசத குணமாம், எடுத்த ரசம் சத்துவகுண மாம், பாகு விர்த்தி ஞானமாம், வெல்லம் மெய்ஞ்ஞானமாம், மேலும் சர்க்கரை ஆன்மாவாம் என்று உணர்ந்து சொல்.

ஆன்மாக் குலால னவன்சத்தை யாமிருத்தில்
தான்மேவு சிற்பாவ சக்கரத்தால்—மேன்மேற்காண்
பூன்றசுக பாண்டம் பொலியுந் துரியமென
ஏன்றகனற் சூளையிசைந் தே. (௬௧)

(ப - ரை) (க) ஆன்மா, குலாலன் = குயவனும், அவன், சத்தை யாம் = இருப்பாகிய, மிருத்தில் = மண்ணில், தான், மேவு = அடைந்த சிற்பாவ = விளக்கத் தன்மையென்னும், சக்கரத்தால், மேல் மேல் காண் = மேலும் மேலும் தோன்றிய, பூன்ற சுக = பூரண சுகமென் கிற, பாண்டம் = பாத்திரங்கள், (௩) பொலியும் = விளங்கும், (உ) துரியமென = துரியானுபவமென, ஏன்ற = பொருந்திய, கனல் சூளை இசைந்து (ஏ) = அக்கினி சூளையைச் சேர்ந்து. (ஏ, அசை.)

(போ - ரை) ஆன்மா குயவனும், அவன் இருப்பாகிய மண்ணில் தான் அடைந்த விளக்கத் தன்மை யென்னும் சக்கரத்தால் மேலும் மேலுந் தோன்றிய பூரண சுகமென்கிற பாத்திரங்கள் துரியானுபவ மெனப் பொருந்திய அக்கினிச் சூளையைச் சேர்ந்து விளங்கும்.

எண்சீர் விருத்தம்.

பிரவிருத்திக் கெதிரின்முமுட் சுத்துவமாம் பசியைப்
பெற்றிந்தப் பவபாண்டத் தீசுரஞா னமதாம்
அரிசியிற்சற் குணப்பால்பெய் துறுமுயற்சி நன்னா
லறிவுகுரு கருணேயெனு மடுப்பில்மன னத்தீச்
சிரவணக்காற் றூற்பெருக்கி நிதித்தியெனும் பாகஞ்
செய்துதிக ழும்பிரம ஞானவமு தத்தைப்
புருடனனி சமாதியெனு மருந்தல்செயிற் பந்தப்
புன் கணற முத்தியெனு நித்தியசிற் சுகத்தோன். (௬௨)

(ப - ரை) பிரவிருத்திக்கு எதிரில் = நிவர்த்தி மார்க்க அனுஷ்டா னத்தால், முமுட்சுத்துவமாம் பசியைப் பெற்று, இந்தப் பவ பாண் டத்து = இந்தப் பிறவியென்னும் பாத்திரத்துள், ஈசுரஞானம் (அது)

ஆம்=ஈசுவர ஞானமாகிய, அரிசியில், சற்குணப்பால்=சத்துவ குணமென்கிற பாலை, பெய்து=சேர்த்து, உறுமுயற்சி=மிகுந்த தனது முயற்சி, நல்நூல் அறிவு=நல்ல சாஸ்திர ஆராய்ச்சி, குரு கருணை=குருவின் உபதேசம், எனும் அடுப்பில், மனனத்தீ=மனன மென்கின்ற அக்கினியை, சிரவணக் காற்றால்=சிரவணமாகிய காற்றினால், பெருக்கி=விருத்தியாக்கி, நிதித்தியெனும்=நிதித்தியாசன மென்கிற, பாகம் செய்து=சமையல் செய்து, திகழும்=அதனாலாகிய, பிரமஞானவமுதத்தை=பிரமஞானமென்னும் சாதத்தை, புருடன், நனி=நன்றாக, சமாதியெனும், அருந்தல் செயில்=உண்ணுதலைச் செய்தால், பந்தப்புன்கண்=பந்தமென்கிற துன்பம், அற=நீங்க, முத்தியெனும் நித்திய, சித் சுகத்தோன்=ஞானசுக சொரூபியாவன். (அது, சொல்லுருபு) (ஏ, அசை.)

(போ - ரை) நிவர்த்தி மார்க்க அனுஷ்டானத்தால் முமுட்சுத்துவமாம் பசியைப் பெற்று இந்தப் பிறவி யென்னும் பாத்திரத்துள் ஈசுவர ஞானமாகிய அரிசியில் சத்துவ குண மென்கிற பாலைச் சேர்த்து மிகுந்த தனது முயற்சி நல்ல சாஸ்திர ஆராய்ச்சி குருவின் உபதேசம் எனும் அடுப்பில் மனனமென்கின்ற அக்கினியைச் சிரவணமாகிய சாற்றினால் விருத்தியாக்கி நிதித்தியாசன மென்கிற சமையல் செய்து அதனாலாகிய பிரம ஞானமென்னும் சாதத்தைப் புருடன் நன்றாகச் சமாதியெனும் உண்ணுதலைச் செய்தால் பந்தம் என்கிற துன்பம் நீங்க முத்தியெனும் நித்திய ஞான சுக சொரூபியாவான்.

அறு சீர் விருத்தம்.

ஆற்றலிறைக் கருமான்மெய்த் தூருத்தியின்முன் வினையூத
லாற்பி ராணக்
காற்றிலுயிர்த் தழல்கரண விந்தியமாங் கரியுமியாற்
கனல வாங்கே
சாற்றுவிட யக்கருந்தா திட்டனுபோ கக்காய்விற்
சான்றாங் கூடத்
தேற்றகுணக் கருவிகளான் ஞானகடச் செயல்கள்புரிந்
திலங்கு மன்றே. (கூ௩)

(ப - ரை) ஆற்றல் இறை = வல்லமையுடைய ஈசுவரனாகிய, கருமான் = கொல்லன், மெய்த்துருத்தியின் = சரீரமென்னுந் துருத்தியில், முன்வினை ஊதலால் = பூர்வசனன வினையென்கிற ஊதுதலால், பிராண = பிராணனென்னும், காற்றில், உயிர்த்தழல் = ஜீவனாகிய அக்கினியானது, கரண இந்தியம் ஆம் = அந்தக்கரணங்கள் இந்திரியங்களான, கரிஉமியால் = கரியினாலும் உமியினாலும், கனல = எரிய, ஆங்கே = அதனிடத்தே, சாற்று = சொல்லப்படுகிற, விடயக் கருந்தாது = விஷயமென்கின்ற இரும்பை, இட்டு = சேர்த்து, அனுபோகக் காய்வில் = அனுபவமென்னுங் காய்ச்சலால், சான்று ஆம் = சாக்ஷியாகிய, கூடத்து = கூடத்தில், ஏற்ற = செய்துகொண்ட, குணக்கருவிகளால் = குணங்களென்னுங் கருவிகளால், ஞான, நடச் செயல்கள் = நடனச் செய்கைகளை, புரிந்து = செய்து, இலங்கும் = விளங்குவான். (அன்று) (ஏ) அசைகள்.

(சாக்ஷித்தன்மையால் இன்ன இன்ன குணமென்று அறிதலே கருவிகளைச்செய்தல்) (காய்வு = சீவனென்னும் அக்கினி மயமாதல்).

(போ - ரை) வல்லமையுடைய ஈசுவரனாகிய கொல்லன் சரீரமென்னுந் துருத்தியில் பூர்வசனன வினையென்கிற ஊதுதலால் பிராணனென்னும் காற்றில் ஜீவனாகிய அக்கினியானது அந்தக்கரணங்கள் இந்திரியங்களான கரியினாலும் உமியினாலும் எரிய அதனிடத்தே சொல்லப்படுகிற விஷயமென்கின்ற இரும்பைச்சேர்த்து அனுபவமென்னுங் காய்ச்சலால் சாக்ஷியாகிய கூடத்திற் செய்துகொண்ட குணங்களென்னுங் கருவிகளால் ஞான நடனச்செய்கைகளைச் செய்து விளங்குவான்.

### கட்டளைக் கலித்துறை.

நிபக்குரு வாகுந் தபதி யதீத நிலைத்தருவை
உபக்கிர மோபசங் காரநல் யுத்தி யுயர்வினையாற்
சுபத்துரீ யானு பவமனை காணச் சுகிக்குமவண்
தபத்தொளி ராஜ்ம புருடனும் விர்த்தித் தலைவியுமே. (௬௪)

(ப - ரை) (க) நிப = காரண, குரு, ஆகும் தபதி = ஆகிய தச்சன், அதீத, நிலைத்தருவை = நிலையென்னும் மரத்தை, உபக்கிரம, உபசங்கார = உபசங்காரமென்கிற, நல்யுத்தி = நல்லயுக்தியான, உயர் வினையால் = உயர்ந்த வேலையினால், சுப = சுகமாகிய, துரிய, அனு

பவ = அனுபவமென்னும், மனைகாண = மனையை உண்டாக்க, (ங) சுகிக்கும் அவண் = அவ்விடத்தில் வாழ்வார்கள், (உ) தபத்து ஒளிர் = தபோநிலையால் விளங்கிய, ஆன்ம = ஆத்மா வென்னும், புருடனும், விர்த்தி = சத்துவ விர்த்தியென்கிற, தலைவியும் (ஏ) = மனைவியும், (ஏ அசை) (உபக்கிரம உபசங்காரயுக்தி = ஆதி அந்தங்களின் ஒற்றுமையான விளக்கம்.)

(போ - ரை) காரண குருவாகிய தச்சன் அதீத நிலையென்னும் மரத்தை உபக்கிரம உபசங்காரமென்கிற நல்லயுக்தியான உயர்ந்த வேலையினால் சுகமாகிய துரிய அனுபவமென்னும் மனையையுண்டாக்கத் தபோநிலையால் விளங்கிய ஆத்மாவென்னும் புருடனும் சத்துவ விர்த்தியென்கிற மனைவியும் அவ்விடத்தில் வாழ்வார்கள்.

## வெண்பா.

ஈரே ழுலகவடுக் கேய்ந்தவண்ட மாளிகையுட்
சாரோர் புவியடுக்கிற் றன்னுடலா—மேரார்
அறையுட் சிவோகநினை வாசனத்திற் சான்றாம்
இறைசிற் சுகசொருப மே. (கூடு)

(ப - ரை) ஈரேழ் = பதினான்கு, உலக அடுக்கு = அடுக்காகிய உலகங்கள், ஏய்ந்த = பொருந்திய, அண்டமாளிகை = அண்டமென்னும் மாளிகையின், உள்சார் = உட்பக்கத்தில், ஓர் புவி அடுக்கில் = பூலோகமென்கிற ஒரு அடுக்கில், தன்உடல் ஆம் = தனது சரீரமான ஏர் ஆர் = அழகுபொருந்திய, அறையுள் = வீட்டில், சிவோகநினைவு = சிவோகமெனும் சிந்தனையாகிய, ஆசனத்தில் = ஆசனத்தின்மேல், சான்று ஆம் = சாக்ஷியென்ற, இறை = தலைவன், சித்சுகசொரூபம் (ஏ) = ஞானனந்த வடிவமாயிருப்பன் (ஏ, அசை.)

(போ - ரை) பதினான்கு அடுக்காகிய உலகங்கள் பொருந்திய அண்டமென்னும் மாளிகையின் உட்பக்கத்தில் பூலோகமென்கிற ஒரு அடுக்கில் தனது சரீரமான அழகுபொருந்திய வீட்டில் சிவோகமெனும் சிந்தனையாகிய ஆசனத்தின்மேல் சாக்ஷியென்கிற தலைவன் ஞானனந்த வடிவமாயிருப்பன்.

எழு சீர் விருத்தம்.

பவங்களா மூரூர் தொறுமிறப் பென்னும்
பயணமாய்ப் பலதுவா ரங்கள்
இவர்ந்தமெய்க் குடிலிற் பசுத்துவத் துச்சி
லிசைந்ததை யெனதென வெண்ணிக்
கவன்றுமா முத்தி நகருறு ஞானு
காயமாஞ் சொந்தநன் மனையை
உவந்துநிற் பதுவா மனுபவ வாச
மொழிந்திட மறந்துள துயிரே. (௬௬)

(ப-ரை) (க) பவங்களாம் = எழுவகைப் பிறவிகளாகிய, ஊரூர், தொறும் = தோறும், இறப்பென்னும் = மரணமென்னும், பயணம் = பிரயாணம், ஆய், பல = ஒன்பது, துவாரங்கள், இவர்ந்த = பொருந்திய, மெய்க்குடிலில் = சரீரமென்னும் குடிசையில். பசுத்துவத் துச்சில் = ஜீவத்தன்மையான ஒதுக்குக்குடி, இசைந்து = ஆகி, அதை = அவ்வீட்டை, எனதென, எண்ணி = நிச்சயித்துக்கொண்டு கவன்று = வருந்தி, மா = பெருமையுடைய, முத்திநகர் = மோக்ஷமென்னும் பட்டணத்தில், உறு = உள்ள, ஞானுகாயம், ஆம் = ஆகிய சொந்த நல் மனையை = நல்ல சொந்த வீட்டை, (௩) உவந்து = மகிழ்ந்து, நிற்பது ஆம் = நிலைத்திருப்பதான, அனுபவவாசம் = தனது அனுபவமென்னும் வாழ்க்கை, ஒழிந்திட = நீங்கும்படி, மறந்து உளது = மறந்தவனாக இருக்கிறான், (உ) உயிர்(ஏ) = ஜீவனானவன். (ஏ, அசை.)

(பொ-ரை) எழுவகைப் பிறவிகளாகிய ஊரூர்தோறும் மரணமென்னும் பிரயாணமாய் ஒன்பது துவாரங்கள் பொருந்திய சரீரமென்னும் குடிசையில் ஜீவத் தன்மையான ஒதுக்குக் குடியாகி அவ்வீட்டை எனதென நிச்சயித்துக்கொண்டு வருந்திப் பெருமையுடைய மோக்ஷமென்னும் பட்டணத்தில் உள்ள ஞானுகாயமாகிய நல்ல சொந்த வீட்டை ஜீவனானவன் மகிழ்ந்து நிலைத்திருப்பதான தனது அனுபவமென்னும் வாழ்க்கை நீங்கும்படி மறந்தவனாக இருக்கிறான்.

அறுசீர் விருத்தம்.

முத்திமா நகர்க்க னந்த முறையினப் யாச மார்க்க
பத்ததி யுளவோர் மார்க்கம் பற்றியங் நகரின் மேவி
யொத்திருக் கின்றோர் தம்மு ளொருவனு மோரா சான்காண்
பித்தவங் நெறிமீ ளாது பிடித்தேகங் நகர்போ மட்டே. (சுஎ)

(ப-ரை) முத்திமாநகர்க்கு = மோக்ஷமென்னும் பெரிய பட்டணத்திற்கு, அனந்த = அநேக, முறையின் = கிரமங்களில், அப்யாச, மார்க்கபத்ததி = மார்க்கமென்னும் முறைகள், உள = இருக்கின்றன அவற்றுள், ஓர் மார்க்கம்பற்றி, அந்நகரின் மேவி = அப்பட்டணத்தை யடைந்து, ஒத்து இருக்கின்றோர் தம் உள் = வாழ்ந்திருப்பவர்களுக்குள், ஒருவனும், ஓர் ஆசான் = ஒப்பற்ற குருவானவர், காண்பித்த, அந்நெறி = அம்மார்க்கத்தை, மீளாது பிடித்து = பற்றி மீளாமல், ஏகு அந்நகர்போமட்டு(ஏ) = அப்பட்டணத்தை யடையு மட்டும் செல்லுக. (ஏ, அசை.)

(போ-ரை) மோக்ஷமென்னும் பெரிய பட்டணத்திற்கு அநேக கிரமங்களில் அப்யாச மார்க்கமென்னும் முறைக ளிருக்கின்றன அவற்றுள் ஓர் மார்க்கம்பற்றி, அப்பட்டணத்தை யடைந்து வாழ்ந்திருப்பவர்களுக்குள்ளே ஒருவனும் ஒப்பற்ற குருவானவர் காண்பித்த அம்மார்க்கத்தைப்பற்றி மீளாமல் அப்பட்டணத்தை யடையு மட்டுஞ் செல்லுக.

மட்டிணை யறுமம் முத்தி மாநகர்ப் பேரின் பந்தேக்
கிட்டவர் விடயக் கூழுண் கீழ்நமை யழைப்பான் காணப்
பட்டுளா ரருளா லீங்கும் பரமசிற் சுகக்க ளிப்பின்
நிட்டையர் சமசாந் தத்தர் நிதிபெண்ணின் மயங்கார் காணே. (சுஅ)

(ப-ரை) (க) மட்டு இணை அறும் = அளவும் சமானமுமில்லாத, அம்முத்திமாநகர் = அந்த மோக்ஷமென்னும் பெரிய பட்டணத்தில், பேரின்பம், தேக்கிட்டவர் = அநுபவித்து நித்ய திருப்தி யடைந்தோர், விடயக்கூழ் = விஷயாநுபவமென்கிற கூழை, உண் = உண்ணும், கீழ்நமை = கீழோராகிய நம்மை, அழைப்பான் = அவ்விடத்திற்கு அழைக்கும்பொருட்டு, (௩) காணப்பட்டு உளார் = காணும்படி சஞ்சரிக்கிறார்கள், (௨) அருளால் ஈங்கும் = கிருபையி

ளுல் இவ்விடத்து நாமும், (ச) பரம=(அவர்கள்) மேலான, சித் சுகக்களிப்பின்=ஞானனந்த மகிழ்ச்சியின், நிட்டையர்=நிலைமை யையுடையவரும், சமசாந்தத்தர்=சம திருஷ்டி உபசாந்தம் அடைந்தவரும், நிதிபெண்ணின்=திரவியத்திலும் பெண்களிடத் தும், மயங்கார்=மயங்காதவருமாகி யிருப்பார்கள், காண்(ஏ)= இவை, அவர்கள் இலக்ஷணமென்று தெரிந்துகொள். (ஏ, அசை.)

(போ - ரை) அளவும் சமானமுமில்லாத அந்த மோக்ஷமென் னும் பெரிய பட்டணத்தில் பேரின்பமனுபவித்து நித்திய திருப்தி யடைந்தோர் விஷயானுபவமென்கிற கூழை உண்ணும் கீழோரா கிய நம்மை அவ்விடத்திற்கு அழைக்கும்பொருட்டுக் கிருபையினுல் இவ்விடத்து நாமும் காணும்படி சஞ்சரிக்கிறுர்கள் அவர்கள் மேலான ஞானனந்த மகிழ்ச்சியின் நிலைமையை யுடையவரும் சம திருஷ்டி உபசாந்தம் அடைந்தவரும் திரவியத்தும் பெண்களிடத் தும் மயங்காதவருமாகி யிருப்பார்கள். இவை, அவர்கள் இலக்ஷ ணமென்று தெரிந்துகொள்.

துரியா தீதம் பஞ்சியதே துரியந் தந்து சத்துத்தான்
குருவா நெடுமை நூல்சித்துக் குறுக்கு நூலா மானந்தம்
சரியாம் பின்ன லபின்னையெனுஞ் சத்தியாடை பஞ்சதன்மாத்
திரையாம் பின்னை யெனுமாயை திகழைந் நிறச்சித் திரப்
[பொய்யே. (௬௬)

(ப - ரை) துரியாதீதம், பஞ்சி (அது) (ஏ)=பஞ்சாம், துரியம், தந்து=நூலாம், சத்து(தான்), குரு ஆம்=பெருமை பொருந்திய நெடுமைநூல்=நீளமான பாவு நூலாம். சித்து, குறுக்கு நூலாம், ஆனந்தம், சரி ஆம் பின்னல்=ஒழுங்கான பின்னலாம், அபின்னை யெனும் சத்தி, ஆடை=ஆடையாம், பஞ்சதன் மாத்திரையாம் பின்னை எனும் மாயை, திகழ்=விளங்குகின்ற, ஐந்நிற=பஞ்சவர் ணத்தாலாகிய, சித்திரப்பொய்(ஏ)=சித்திரமென்னும் கற்பனையாம், (அது, ஏ, ஏ, அசைகள்) (தான், சாரியை) (அபின்னை=அபேத கற்பனை) (பின்னை=பேத கற்பனை) (பஞ்சதன் மாத்திரை=சப் தாதி ஐந்து விஷயங்களென்னும் சூட்சும பூதங்கள்.)

(போ - ரை) துரியா தீதம் பஞ்சாம், துரியம் நூலாம், சத்து பெருமை பொருந்திய நீளமான பாவு நூலாம், சித்து குறுக்கு

நூலாம், ஆனந்தம் ஒழுங்கான பின்னலாம், அபினே யெனும் சத்தி ஆடையாம், பஞ்சதன் மாத்திரையாம் பின்னே யெனும் மாயை விளங்குகின்ற பஞ்சவர்ணத்தாலாகிய சித்திரமென்னும் கற்பனையாம்.

வெண்பா.

அறிவுருவி னான்மாவே யாம்வெண் பருத்தி
மறவியெனும் பஞ்சாகி மற்று—முறுநினைவாந்
தந்துவாய்த் தூல சகத்தா டையுமாகி
வந்தும்வே றுண்டோ மதி. (௬௦௦)

(ப - ரை) அறிவு உருவின் = ஞான வடிவமாகிய, ஆன்மா(ஏ) ஆம் = ஆத்மாவான, வெண்பருத்தி, மறவி யெனும் = மறதி யென்னும், பஞ்சாகி, மற்றும் = மறுபடியும், உறுநினைவுஆம் = பொருந்திய நினைவென்கிற, தந்து ஆய் = நூலாய், தூலசகத்து = பூதபௌதிகமென்னும் ஸ்தூல உலகமான. ஆடையும் ஆகி, வந்தும் = தோன்றியும், வேறு உண்டோ, மதி = ஆராய்ந்து பார். (ஏ, அசை.)

(போ - ரை) ஞானவடிவமாகிய ஆத்மாவான வெண் பருத்தி மறதியென்னும் பஞ்சாகி மறுபடியும் பொருந்திய நினைவென்கிற நூலாய்ப் பூத பௌதிகமென்னும் ஸ்தூல உலகமான ஆடையுமாகித் தோன்றியும் அவ்வான்மாவென்கிற பருத்தியைத் தவிரச் சிறிதும் வேறான துண்டோ ஆராய்ந்து பார்.

அறுசீர் விருத்தம்.

தாமதநெய்ச் சிக்கொடிரா சதமாசார் மனத்துகிலைச்
சற்கன் மங்க
ளாமுவர்சேர்த் துபாசனை வெள்ளாவிபிடித் தான்மவிசா
ராப்பி யாசத்
தூமணிநீ ரிடையழுத்தி யுத்தியெனும் பலகைதனிற்
றோய்த்தல் செய்யிற்
பூமலிசத் துவவெண்மை யாமிதனு லானந்தப்
புனிதங் காணே. (௬௦௧)

(ப - ரை) தாமத = தாமத குணமென்னும், நெய்ச்சிக்கோடு = நெய்ச்சிக்கும், இராசத = இராசத குணமென்கிற, மாசு = அழுக்கும்,

ஆர் = பொருந்திய, மனத்துகிலை = மனமென்னும் வஸ்திரத்தை, சற்கன்மங்கள் ஆம் = நிஷ்காம புண்ணிய கர்மங்களாகிய, உவர் = உவர் மண்ணை, சேர்த்து, உபாசனை = ஈசுவர உபாசனை யென்கிற, வெள்ளாவி பிடித்து, ஆன்ம விசார, அப்பியாச = அப்பியாசமாகிய, தூ = சுத்தமான, மணிநீரிடை = நல்ல நீரில், அழுத்தி = நனைத்து, யுத்தியெனும் பலகைதனில், தோய்த்தல் செய்யில் = தோய்த்தால், பூமலி = நலம் மிகுந்த, சத்துவ = இயல்பான சாத்துவீக குணமென்னும், வெண்மை ஆம், இதனால், ஆனந்தப் புனிதம் = ஆனந்தமாகிய பரிசுத்தத் தன்மை ஏற்படுதலை, காண்(ஏ) = தெரிந்துகொள். (ஏ, அசை.)

(பொ - ரை) தாமத குணமென்னும் நெய்ச்சிக்கும் இராதகுணமென்கிற அழுக்கும் பொருந்திய மனமென்னும் வஸ்திரத்தை நிஷ்காம புண்ணிய கர்மங்களாகிய உவர்மண்ணைச் சேர்த்து ஈசுவர உபாசனை யென்கிற வெள்ளாவி பிடித்து ஆன்ம விசார அப்பியாசமாகிய சுத்தமான நல்ல நீரில் நனைத்து யுக்தியெனும் பலகைதனில் தோய்த்தால் நலமிகுந்த இயல்பான சாத்துவீக குணமென்னும் வெண்மையாம். இதனால் ஆனந்தமாகிய பரிசுத்தத் தன்மை ஏற்படுதலைத் தெரிந்துகொள்.

### கலி விருத்தம்.

நடுநிலைச் சத்துவ ஞானக் குஞ்சிவைத்
தடரிரா சததமோ வறிவுக் கேசமற்
றிடவெறி கத்திகூ ரியவிவேகநோக்
கொடிவறு சௌளமா முயரப் யாசமே. (௧0௨)

(ப - ரை) நடுநிலை = நடுவு நிலைமையாகிய, சத்துவ ஞானக்குஞ்சி வைத்து = ஞானமென்னும் குடுமியை வைத்து, அடர் = சுற்றிலும் நெருங்கிய, இராசத, தமோ அறிவு = தாமத உணர்வென்கிற, கேசம் அற்றிட = உரோமம் நீங்க, எறி = வெட்டுகிற, கத்தி, கூரிய = சூட்சுமமான, விவேக, நோக்கு = திருஷ்டியாம். ஒடிவு அறு = கெடுதலற்ற, சௌளம் ஆம் உயர் அப்பியாசம்(ஏ) = சௌளம் உயர்ந்த அப்பியாசமாம். (ஏ, அசை.)

(பொ - ரை) நடுவு நிலைமையாகிய சத்துவ ஞானமென்னும் குடுமியை வைத்துச் சுற்றிலும் நெருங்கிய இராசத தாமத உணர்

வென்கிற உரோமம் நீங்க வெட்டுகிற கத்தி சூட்சுமமான விவேக திருஷ்டியாம். கெடுதலற்ற சௌளம் உயர்ந்த அப்பியாசமாம்.

வெண்பா.

சுருதிகுரு வாக்குச் சுவா னுபவஞ் சுக்குத்
தருமிளகு திப்பிலியாச் சாற்றுந்—திரிகடுகம்
சாத்திகமி ராசதமே தாமதம்வா தம்பித்தம்
சேத்துமமாம் விர்த்தியுட றோர். (௧௦௩)

(ப - ரை) சுருதி = வேதம், குருவாக்கு = யுக்தி, சுவ அனுபவம் = தனது அனுபவம் என்பவை முறையே, சுக்கு, தரும் = நன்மையைத் தருகின்ற, மிளகு, திப்பிலியா = திப்பிலி என்பவையாக, சாற்றும் = சொல்லப்படும், திரி, கடுகம் = கடுகாம், சாத்திகம் = சாத்துவீகம், இராசதம்(ஏ), தாமதம் என்பன முறையே), வாதம், பித்தம், சேத்துமம் ஆம் = சிலேத்துமமாம், விர்த்தி, உடல் = சரீரமாம், தேர் = இதை அறி. (ஏ, அசை) (விர்த்தி = நினைவு.)

(பொ - ரை) வேதம் யுக்தி தனது அனுபவ மென்பவை முறையே சுக்கு நன்மையைத் தருகின்ற மிளகு திப்பிலி என்பவையாகச் சொல்லப்படும் திரிகடுகாம், சாத்துவீகம் இராசதம் தாமதம் என்பன முறையே வாதம் பித்தம் சிலேத்துமமாம் விர்த்தி சரீரமாம். இதை அறி.

கலித்துறை.

பந்தத் துவமா மக்கினி மந்தம் படுசீவர்
வந்திப் புறுநிட் காமிய கன்மம ருந்துண்டால்
சந்திப் பரியமு முட்சுத் வப்பசி தான்மேவி
நந்தற் பாஞா னத்தமு துண்டுறு நலன்வீடே. (௧௦௪)

(ப - ரை) பந்தத்துவம் ஆம் = பந்தத் தன்மையாகிய, அக்கினி மந்தம், படு = அடைந்த, சீவர், வந்திப்பு உறு = வணக்கமான, நிட்காமிய, கன்ம = கர்ம மென்னும், மருந்து உண்டால், சந்திப்ப அரிய = சேர்தற்கு அரிய, முமுட்சுத்துவ = முமுட்சுத்வமாகிய, பசி (தான்) மேவி = பசியைப் பெற்று, நந்தல் = பூரணமான, பாஞானத்து அமுது = அனுபவ ஞான மென்கிற சாதத்தை, உண்டு,

உறும் நலன் வீடு(ஏ) = மோக்ஷமென்னும் நித்திய திருப்தியை அடைவான். (நலன், நலம் என்பதன் போலி) (தான், சாரியை) (ஏ, அசை.)

(போ - ரை) பந்தத் தன்மையாகிய அக்கினி மந்தம் அடைந்த சீவர் வணக்கமான நிஷ்காமிய கர்மமென்னும் மருந்து உண்டால் சேர்தற்கரிய முமுட்சுத்வமாகிய பசியைப் பெற்றுப் பூரணமான அனுபவ ஞானமென்கிற சாதத்தை உண்டு மோக்ஷமென்னும் நித்திய திருப்தியை யடைவான்.

அறுசீர் விருத்தம்.

பந்த நிவிர்த்தி விழையுமுயிர் படர்நோ யொழிவின் விருப்பமுற்ற
முந்து பிணியா ளன்சீவன் முத்த குருவே வியாதியிலா
விந்தை மருத்து வன்ஞான விளக்கந் தக்க வவுடதந்தான்
சிந்தை விராகம் பத்தியமாந் திகழு முத்தி சுகநிலையே. (௧௦௫)

(ப - ரை) பந்த நிவர்த்தி = பந்தத்தின் நிவிர்த்தியை, விழையும் உயிர் = விரும்புகிற சீவன், படர் நோய் = சூழ்ந்த வியாதியை, ஒழிவின் = நீக்குதலில், விருப்பு உற்ற = விருப்ப மடைந்த, முந்து பிணியாளன் = முற்பட்ட பிணியாளனும், சீவன் முத்த குரு(ஏ) வியாதியிலா, விந்தை = அற்புதமான, மருத்துவன் = வைத்தியனும், ஞான விளக்கம், தக்க, அவுடதம்(தான்) = மருந்தாம், சிந்தை விராகம் = மனதில் வைராக்கியம், பத்தியமாம், திகழும் = விளங்குகின்ற, முத்தி, சுக நிலை(ஏ) = வியாதி நீங்கிச் சுகத்தில் எப்போதும் நிலைத்தலாம் (ஏ, ஏ, அசைகள்) (தான், சாரியை.)

(போ - ரை) பந்தத்தின் நிவிர்த்தியை விரும்புகிற சீவன் சூழ்ந்த வியாதியை நீக்குதலில் விருப்பமடைந்த முற்பட்ட பிணியாளனும் சீவன்முத்தகுரு வியாதியிலா அற்புதமான வைத்தியனும், ஞானவிளக்கம், தக்கமருந்தாம், மனதில் வைராக்கியம் பத்தியமாம், விளங்குகின்ற முத்தி வியாதி நீங்கிச் சுகத்தில் எப்போதும் நிலைத்தலாம்.

இச்சகஞ் சீவ னீச னென்றமு வகைய வுப்பை
மெச்சுதத் துவவி ருத்தி வியன்சய நீரி லிட்டே
விச்சைநா லெருவி னுண்மை விசாரவக் கினிப்பு டத்தால்
சச்சிதா னந்த போதத் தகையமுப் பூச்சுண் ணங்காண். (௧௦௬)

(ப - ரை) இச்சகம் = இந்த உலகம், சீவன், ஈசன் = ஈசுவரன், என்ற மூவகைய உப்பை, மெச்சு = புகழத்தக்க, சத்துவவிருத்தி = சாத்விக விருத்தியென்னும், வியன் = பெருமையுற்ற, சயநீரில் இட்டு (ஏ,) விச்சைநூல் = ஞானசாஸ்திரமாகிய, எருவில் உண்மை, விசார = ஆராய்ச்சி யென்கிற, அக்கினிப்புடத்தால், சச்சிதானந்த, போத = உணர்ச்சியான, தகைய = மேன்மை பொருந்திய, முப்பூச் சுண்ணம், காண = உண்டாதலைப்பார். (ஏ, அசை)

(பொ - ரை) இந்த உலகம் சீவன் ஈசுவரன் என்கிற மூவகைய உப்பைப் புகழத்தக்க சாத்விக விருத்தியென்னும் பெருமையுற்ற சயநீரில் இட்டு ஞானசாஸ்திரமாகிய எருவில் உண்மை ஆராய்ச்சி யென்கிற அக்கினிப்புடத்தால் சச்சிதானந்த உணர்ச்சியான மேன்மை பொருந்திய முப்பூச்சுண்ணம் உண்டாதலைப்பார்.

### கட்டளைக் கலிப்பா.

சச்சி தானந்த ஞானமுப் பூச்சுண்ணந்
தன்னிற் காலசூ தந்தேய கந்தகம்
நச்சு வத்துப்பா டாணங்க ணீற்றிட
நண்ணு நித்திய பூன்றசர் வான்மக
விச்சைப் பற்பங் களையவை யானென
மேவு முண்ணல்செய் சீவ னனித்தியப்
பிச்சு மேகநோய் கண்டத் தொழுப்பிணி
பேத மாஞ்சுரந் தீர்ந்து பிரமமே. (ச0எ)

(ப - ரை) சச்சிதானந்த, ஞான = உணர்ச்சியென்னும், முப்பூச் சுண்ணந் தன்னில் = முப்பூச்சுண்ணத்தால், காலசூதம் = காலமென் கிற பாதரசத்தையும், தேயகந்தகம் = இடமென்னும் கந்தகத்தையும், நச்சு = நஞ்சுபோன்ற, வத்து = வஸ்துக்களென்கிற, பாடாணங்கள் = பாஷாணங்களையும், நீற்றிட = பஸ்பமாக்க, நண்ணு = முறையே பொருந்திய, நித்திய = நித்தியத்தன்மை, பூன்ற = பூரணத்தன்மை, சர்வ ஆன்மக = சர்வமும் தானாக இருக்குந்தன்மை என்னும், விச்சைப்பற்பங்களை = ஞானவடிவமாகு மப்பஸ்பங்களை, அவையா னெனமேவும் = அவையானே என நிச்சயித்தலாகிய, உண்ணல் செய் = உண்ணுதலைச் செய்யும், சீவன், அனித்திய = அனித்தியத் தன்மை யென்னும், பிச்சு = பித்துற்ற, மேகநோய் = மேகவியாதி

யும், கண்டத்தொழுப்பிணி=பகுப்பென்கிற குஷ்டவியாதியும், பேத மாம் சுரம்=பேதத் தன்மையான சுரமும் தீர்ந்து, பிரமமே=பிரம மாகிய நித்திய பூரணசுக சொரூபியாவன். (பகுப்பு=துண்டு)

(பொ - ரை) சச்சிதானந்த உணர்ச்சியென்னும் முப்பூச்சுண்ணத் தால் காலமென்கிற பாதரசத்தையும் இடமென்னும் கந்தகத்தையும் நஞ்சுபோன்ற வஸ்துக்களென்கிற பாஷாணங்களேயும் பஸ்பமாக்க முறையே பொருந்திய நித்தியத் தன்மை பூரணத்தன்மை சர்வமுந் தானுக இருக்குந்தன்மை என்னும் ஞானவடிவமாகும் அப்பஸ்பங் களே அவையானேயென நிச்சயித்தலாகிய உண்ணுதலேச்செய்யும் சீவன் அனித்தியத் தன்மையென்னும் பித்துற்றமேக வியாதியும் பகுப்பு என்கிற குஷ்டவியாதியும் பேதத்தன்மையான சுரமும் தீர்ந்து பிரமமாகிய நித்திய பூரணசுக சொரூபியாவன்.

கலி நிலேத்துறை.

விடய நீரினிற் கசிந்திடா விதமண வுப்போ
டடர்வி சாரநற் பச்சிலேச் சாறுநெஞ் சகலின்
இடையு றச்சமா திப்புடத் திருத்திடிற் றுரிய
வடிவக் கட்டதாங் தத்துவச் சரக்கெலாம் வசமே. (கoஅ)

(ப - ரை) விடயநீரினில் = விஷயமென்னும் நிரில், கசிந்திடா விதம்=கசியாதபடி, மனஉப்போடு=மனமென்கிற உப்பில், அடர் விசாரம் = மிகுந்த ஆத்மவிசாரமாகிய, நற்பச்சிலேச்சாறு = நல்ல பச்சிலேச்சாற்றை, நெஞ்சு அகலின் இடை = இருதயமாகிய அகலி னிடத்து, உற = பொருந்தச்செய்து, சமாதி = சமாதியென்னும், புடத்து இருத்திடல்=புடத்தில் வைத்தால், துரிய, வடிவ=சொரூப மென்கிற, கட்டு (அது) ஆம்=கட்டு ஏற்படும் இதனுல், தத்துவச் சரக்கெலாம், வசம் (ஏ) = வசமாகும். (ஏ,அசை) (அது, சொல் லுருபு.)

(பொ - ரை) விஷயமென்னும் நீரில் கசிந்திடாதபடி மனமென்கிற உப்பில் மிகுந்த ஆத்மவிசாரமாகிய நல்ல பச்சிலேச்சாற்றை இருதய மாகிய அகலினிடத்துப் பொருந்தச்செய்து சமாதியென்னும் புடத் தில் வைத்தால் துரியசொரூப மென்கிற கட்டு ஏற்படும் இதனுல் தத்துவச் சரக்கெலாம் வசமாகும்.

வெண்பா.

காதற் கனலிற் கலங்கா வகைவிருத்திச்
சூதத் தினைநற் றுரியான்ம—போதச்
சயநீராற் கட்டியிடிற் சத்தாதி பஞ்ச
மயலோக முஞ்சிவவே மம். (க0கூ)

(ப - ரை) காதற் கனலில் = ஆசையென்னும் அக்கினியில், கலங்கா வகை = கெடாதபடி, விருத்திச் சூதத்தினை = விருத்தியென்கிற பாதரசத்தை, நல் = நல்ல, துரிய, ஆன்மபோத = ஆத்மஞானமாகிய, சயநீரால், கட்டியிடில் = கட்டினுல், சத்தஆதி = சப்தம் முதலிய ஐந்து விஷயங்களென்கிற, பஞ்சமய = பஞ்சவித, லோகமும் = லோகங்களும், சிவ ஏமம் = சிவமென்னும் பொன்னுகி விளங்கும்.

(போ - ரை) ஆசையென்னும் அக்கினியில் கெடாதபடி விருத்தியென்கிற பாதரசத்தை நல்ல துரிய ஆத்மஞானமாகிய சயநீரால் கட்டினுல் சப்தம் முதலிய ஐந்து விஷயங்களென்கிற பஞ்சவித லோகங்களும் சிவமென்னும் பொன்னுகி விளங்கும்.

உயிர்ப்பித் தளைமனச்செம் போடுமதிக் கஞ்சம்
கயிர்ச்சிந்தை வங்கமகங் கார—அயத்திரளும்
ஆன்ம விசாரவுணர் வாம்பரிச வேதியினுல்
மேன்மைச் சிவசுவண மே. (ககம)

(ப - ரை) உயிர்ப்பித்தளை = உயிரென்னும் பித்தளை, மனச்செம்பு (ஓடு) = மனமென்கிற செம்பு, மதிக்கஞ்சம் = புத்தியாகிய வெண்கலம், கயிர் = தவறுடைய, சிந்தைவங்கம் = சித்தமெனும் ஈயம், அகங்கார அயத்திரளும் = அகங்காரமான இரும்புக்கட்டியாகிய இவைகள், ஆன்மவிசாரணை உணர்வு, ஆம் = என்கிற, பரிசவேதியினுல், மேன்மை = மேன்மை பொருந்திய, சிவசுவணமே = சிவமென்னும் சுவர்ணமாம்.

(போ - ரை) உயிரென்னும் பித்தளை மனமென்கிற செம்பு புத்தியாகிய வெண்கலம் தவறுடைய சித்தமெனும் ஈயம் அகங்காரமான இரும்புக் கட்டியாகிய இவைகள் ஆன்ம விசார உணர்வு என்கிற பரிசவேதியினுல் மேன்மை பொருந்திய சிவமென்னும் சுவர்ணமாம்.

ஆன்ம விசாரநிரோ தாப்பியா சங்களெனும்
வான்மந் திரமருந்தின் வல்லோர்க்கே— மான்மனமாம்
நாகமிசை மன்விருத்தி ஞானமெனு மாமணிகைக்
காகுமவித் தைத்தமம்நீப் பான். (கககக

(ப - ரை) (க) ஆன்ம = ஆத்ம, விசார, நிரோத = மனோ நிக்ரக, அப்பியாசங்களெனும், வான் = பெருமை பொருந்திய, மந்திர மருந்தின் = மந்திரத்திலும், மருந்திலும், வல்லோர்க்கே, (ங) மால் மனம் ஆம் = மயக்கஞ் செய்யும் மனமாகிய, நாகமிசை = நாக சர்ப்பத்தின் சிரசில், நிலைத்திருக்கும் விருத்திஞானமெனும், மாமணி = மாணிக்கம், கைக்கு ஆகும் = அகப்படும், (உ) அவித்தைத்தமம் = அஞ்ஞானமென்கிற இருளை, நீப்பான் = நீக்கும்பொருட்டு.

(போ - ரை) ஆத்ம விசார மனோ நிக்ரக அப்பியாசங்களெனும் பெருமை பொருந்திய மந்திரத்திலும் மருந்திலும் வல்லோர்க்கே அஞ்ஞானமென்கிற இருளை நீக்கும்பொருட்டு மயக்கஞ் செய்யும் மனமாகிய நாக சர்ப்பத்தின் சிரசில் நிலைத்திருக்கும் விருத்தி ஞானமெனும் மாணிக்கம் அகப்படும்.

அறுசீர் விருத்தம்.

அவித்தைநிலத் துளகன்மச் செல்லெழுப்பு நவவாயி
லாக்கைப் புற்றில்
தவிக்கமுறை யேவலிதாஞ் சங்கற்ப நிச்சயஞ்சிந்
தனையி னோடு
விவத்தையபி மானபற் களின்வேட்கை விடஞ்சாத்து
வீக வுச்சி
நவத்தலத்தி னன்ஞான மாணிக்கங் கொளுங்கரண
நாகப் பாம்பே. (ககஉ)

(ப - ரை) அவித்தை நிலத்து உள = அஞ்ஞானமென்னும் நிலத்திலுள்ள, கன்மச்செல் = கர்மமாகிய கறையான்களால், எழுப்பும் = எழுப்பப்படுகின்ற, நவவாயில் = ஒன்பது துவாரங்கள் பொருந்திய ஆக்கை = சரீரமாகிய, புற்றில், தவிக்க = இளைப்படையச் செய்தலில், முறையே, வலிது ஆம் = வல்லமை மிகவுடையதான, சங்கற்பம், நிச்சயம், சிந்தனையின் (ஓடு) = சிந்தனை, விவத்தை = ஆபத்தை

யுண்டாக்குகிற, அபிமான = அகங்காரமென்னும், பற்களின் = நான்கு பற்களில், வேட்கை விடம் = ஆசை யென்கிற விஷமும், சாத்துவிக = சத்துவ குணமாகிய, உச்சி = உச்சியெனும், நவத் தலத்தின் = புதுமையான இடத்தில், நல் = நல்ல, ஞான = ஞான மென்கிற, மாணிக்கம் = மாணிக்கமும், கொளும்கரணம் = உடைய தாயிருக்கிற அந்தக் கரணம், நாகப்பாம்பு(ஏ) = நாக சர்ப்பமாம். (ஏ, அசை) (ஒடு, மூன்றும் வேற்றுமை யுருபு.)

(பொ - ரை) அஞ்ஞான மென்னும் நிலத்திலுள்ள கர்மமாகிய கறையான்களால் எழுப்பப்படுகின்ற ஒன்பது துவாரங்கள் பொருந் திய சரீரமாகிய புற்றில் இளைப்படையச் செய்தலில் முறையே வல்லமை மிகவுடையதான சங்கற்பம் நிச்சயம் சிந்தனை ஆபத்தை யுண்டாக்குகிற அகங்காரமென்னும் நான்குபற்களில் ஆசையென் கிற விஷமும் சத்துவ குணமாகிய உச்சியெனும் புதுமையான இடத்தில் நல்ல ஞானமென்கிற மாணிக்கமும் உடையதாயிருக்கிற அந்தக்கரணம் நாகசர்ப்பமாம்.

### கலி நிலைத்துறை.

எண்ணில் வாசனைச் சிதல்களா லமைந்தவைக் கிடமா
யொண்ணு சிந்தையாம் புற்றதின் மனப்பணி யுள்ளாய்
நண்ணி யேவெளி திரிவதாங் கட்செவி நசைநஞ்
சண்ணு மாத்தும விசாரமந் திரத்ததை யடக்கே. (கக௩)

(ப-ரை) எண் இல்வாசனை = அளவில்லாத வாசனைகளென்னும், சிதல்களால் = கறையான்களால், அமைந்து = ஏற்பட்டு, அவைக் கிடமாய் = அவைகளுக்கு இடமாகி, ஒண்ணு = பொருந்தும், சிந்தை ஆம் = உள்ளம் என்னும், புற்று (அது) இல் = புற்றில், மனப்பணி = மனமென்கிற சர்ப்பம், உள்ளாய் = உள்ளே வசித்து, நண்ணி (ஏ) = இருந்தும், வெளிதிரிவது ஆம் = வெளியிற் சஞ்சரிப்பதாகிய கட்செவி = கண்ணேகா தாகுந்தன்மையும், நசை நஞ்சு = ஆசை யென்கிற நஞ்சை யுடையதாயிருத்தலையும், அண்ணும் = பெற்றிருக் கும், ஆத்தும, விசாரமந்திரத்து = விசாரமென்னும் மந்திரத்தால், அதை, அடக்கு (ஏ) = அடக்குக (ஏ, ஏ, அசைகள்) (அது சொல் லுருபு.)

(பொ - ரை) அளவில்லாத வாசனைகளென்னும் கறையான்களால் ஏற்பட்டு அவைகளுக்கு இடமாகிப் பொருந்தும் உள்ளமென்னும் புற்றில் மனமென்கிற சர்ப்பம் உள்ளே வசித்து இருந்தும் வெளியிற் சஞ்சரிப்பதாகிய கண்ணேகா தாகுந்தன்மையும் ஆசையென்கிற நஞ்சையுடைய தாயிருத்தலையும் பெற்றிருக்கும். ஆத்தும விசாரமென்னும் மந்திரத்தால் அதை அடக்குக.

வெண்பா.

பைமறித்துண் ணோக்கல் பலகாற் குணதோடச்
செய்கைவிசா ரித்த றிடஞான—வைபவத்தின்
மார்க்கமுற லென்னும் மணிமந் திரமருந்தாற்
றீர்க்குவர்பெண் மால்விடத்தைத் தேர். (ககசு)

(ப - ரை) (க) பைமறித்து உள்நோக்கல், பலகால்=பலதரமும், குண, தோடச்செய்கை = தோஷங்களாகிய செயலை, விசாரித்தல், திடஞான, வைபத்தின்=மகத்துவத்தின், மார்க்கமுறல் = வழியிற் செல்லல், என்னும்= என்று கிரமமாகச் சொல்லப்படும், மணி மந்திர மருந்தால், (ந) தீர்க்குவர்= தீர்ப்பார்கள், (உ) பெண்மால் விடத்தை=பெண்ணாசையாகிய விஷத்தை, (ச) தேர்= இதை அறி.

(பைமறித்து உள்நோக்கல்=பையின் உட்பக்கம் வெளிப்படத் திருப்புதல்போல உடலின் உட்பாகம் வெளிப்பட மனத்தினாற் பாவித்தல்) (குணதோடம்=இலாப நஷ்டம்.)

(பொ - ரை) பை மறித்து உள்நோக்கல் பலதரமும் குணதோஷங்களாகிய செயலை விசாரித்தல் திடஞான மகத்துவத்தின் வழியிற் செல்லல் என்று கிரமமாகச் சொல்லப்படும் மணிமந்திர மருந்தால் பெண்ணாசையாகிய விஷத்தைத் தீர்ப்பார்கள் இதை அறி.

கோச்சகக் கலிப்பா.

ஆய்ந்த சடஞ்சிந்தை யஞ்ஞான ஞானமதும்
ஓய்ந்த கரிகம்பி யுப்போடு கந்தகந்தீத்
தோய்ந்த துரியந் துரியாதீ தச்சுகமுங்
காய்ந்த வயத்திரளுங் கர்ப்பூர தீபமுமே (ககரு)

(ப - ரை) ஆய்ந்தசடம்= ஆராயப்பட்ட சரீரம், சிந்தை=மனம், அஞ்ஞானம், ஞானம் (அது) உம்=ஞானம் என்னுமிவைகள்

முறையே, ஓய்ந்த = எரிந்து ஆறிய, கரி = அடுப்புக்கரி, கம்பி உப்பு (ஓடு) = வெடியுப்பு, கந்தகம், தீ = நெருப்பு ஆகும், தோய்ந்த = கலந்த, துரியம் துரியாதீதச்சுகமும் = துரிய சுகமும் துரியாதீதமும் முறையே, காய்ந்த அயத்திரளும் = தீயிற் காய்ந்த இரும்பின் கட்டியும், கர்ப்பூர, தீபமுமே = தீபமுமேயாம். (ஓடு, மூன்றும் வேற்றுமை யுருபு).

(போ - ரை) ஆராயப்பட்ட சரீரம் மனம் அஞ்ஞானம் ஞானம் என்னுமிவைகள் முறையே எரிந்து ஆறிய அடுப்புக்கரி வெடியுப்பு கந்தகம் நெருப்பு ஆகும். கலந்ததுரிய சுகமும் துரியா தீதமும் முறையே தீயிற்காய்ந்த இரும்பின் கட்டியும் கர்ப்பூர தீபமுமாம்.

கலி வெண்பா.

அஞ்சனமை வல்லா னருள்பெற் றிருநிதியம்
வஞ்சமறக் கண்டு வருங்குறளுக்—கஞ்சா
இகலாற் றகர்ப்பலியீந் தீடறக்கைக் கொண்டு
மகிழ்வார் பெருஞ்செல்வ மல்கல்—சகமீ
தனுபூதி ஞானி யருள்பெற்றே ஞான
தனுநோக்கி மாயைத் தடையின்—மனமாழ்கா
தேற்றபசு போத மிறப்பித்து ஞானசுகத்
தேற்ற முறுவார் செயல். (கககூ)

(ப - ரை) அஞ்சன, மை = மையில், வல்லான் = வல்லவனது, அருள் = தயவை, பெற்று, இருநிதியம் = பெருந் திரவியத்தை, வஞ்சமறக் கண்டு = மறைப்பில்லாமற் பார்த்து, வரும் குறளுக்கு = எதிர்ப்படுகின்ற பூதத்திற்கு, அஞ்சா = அஞ்சாத, இகலால் = வலிமையால், தகர் = ஆட்டுக் கடாவை, பலி ஈந்து = பலியாகக் கொடுத்து, ஈடுஅற = தளர்வின்றி, கைக்கொண்டு = அந்நிதியைப்பெற்று, மகிழ்வு ஆர் = மகிழ்ச்சி பொருந்திய, பெருஞ் செல்வம் மல்கல் = பெரிய ஐசுவரியத்தை அடைதல், சகமீது = உலகில், அனுபூதி = சுவானுபவமுடைய, ஞானி அருள் = ஞானியின் அருளை, பெற்று (ஏ), ஞான தனு நோக்கி = ஞானவடிவைத் தெரிந்து, மாயைத் தடையின் = மாயை யென்னுந் தடையினால், மனம், மாழ்காது = கலங்காமல், ஏற்ற = பற்றி யிருந்த, பசு போதம் = ஜீவ அறிவை, இறப்பித்து = விட்டு, ஞானசுக, தேற்றம் = தெளிவை, உறுவார் செயல் = அடைபவர்களது செயலாம். (ஏ, அசை.)

(போ - ரை) அஞ்சன மையில் வல்லவனது தயவைப் பெற்றுப் பெருந் திரவியத்தை மறைப்பில்லாமற் பார்த்து எதிர்ப்படுகின்ற பூதத்திற்கு அஞ்சாத வலிமையால் ஆட்டுக் கடாவைப் பலியாகக் கொடுத்துத் தளர்வின்றி அந்நிதியைப்பெற்று மகிழ்ச்சி பொருந்திய பெரிய ஐசுவரியத்தை அடைதல், உலகில் சுவானுபவமுடைய ஞானியின் அருளைப் பெற்று, ஞானவடிவைத் தெரிந்து மாயை யென்னுந் தடையினல் மனங் கலங்காமல் பற்றி யிருந்த ஜீவ அறிவை விட்டு ஞான சுகத் தெளிவை அடைபவர்களது செய லாம்.

கலி விருத்தம்.

தேக மான சிலைதனைப் புந்தியென்
றோகு நல்லுளி யாற்பொளிந் தாங்குநான்
ஏக வான்மா வெனுந்தியா னத்தினற்
சேகி லான்மநிட் சேப மடையலாம். (கக௭)

(ப - ரை) தேகமான, சிலைதனை = கல்லை, புந்தி என்று ஆகும் = நேதிப் புத்தியென்று சொல்லப்படுகின்ற, நல் உளியால் = நல்ல உளி யினல், பொளிந்து = சிதைத்து நீக்கிவிட்டு, ஆங்கு = அவ்விடத் தில், நான் ஏக ஆன்மா = ஒரே சாக்ஷியாக விளங்குகின்ற ஆன் மாவே நான், எனுந் தியானத்தினல், சேகுஇல் = கடினமற்ற சூட் சுமமாகிய, ஆன்ம நிட்சேபம் = ஆத்மவனுபவ மென்னும் புதையலை, அடையலாம்.

(போ - ரை) தேகமான கல்லை நேதிப் புத்தியென்று சொல்லப் படுகின்ற நல்ல உளியினல் சிதைத்து நீக்கிவிட்டு அவ்விடத்தில் ஒரே சாக்ஷியாக விளங்குகின்ற ஆன்மாவே நான் எனுந் தியானத் தினல் கடினமற்ற சூட்சுமமாகிய ஆத்மவனுபவ மென்னும் புதை யலை அடையலாம்.

அறுசீர் விருத்தம்.

இதயமனைக் குண்ஞான திரவியத்தை மனவுளவ
னிசைந்து நிற்கும்
உதவியினு லிந்திரியக் கள்வர்கவர்ந் தேவிடய
வுறுவ னத்தில்

நிதமுலவி நவவாயிற் காயபுரி மறைந்துறையு
நிகழ்ச்சி யின்றாம்
மதியின்விசா ராப்யாச நயச்செயலான் மனவுளவன்
வசமாங் காலே. (கக௭)

(ப - ரை) (க) இதய மனைக்குள் = உள்ளமென்னும் வீட்டினுள் ஞான திரவியத்தை = இருக்கிற அறிவு என்கிற திரவியத்தை, மன உளவன் = மனமாகிய உளவன், இசைந்து நிற்கும் = இசைந்திருக்கும், உதவியினால் = உதவியைக்கொண்டு, இந்திரியக்கள்வர் = பத்து இந்திரியங்களாகிய கள்வர்கள், கவர்ந்து(ஏ) = கிரகித்து, விடய உறு வனத்தில் = விஷயங்களென்னும் பெரிய காட்டில், நிதம் உலவி = பலகாலும் சஞ்சரித்து, நவ வாயில் = ஒன்பது வாயில்கள் உள்ள, காயபுரி = சரீரமென்கிற கோட்டையுள், மறைந்து, உறையும் = வசிக்கும் நிகழ்ச்சி = செய்கையானது, (ங) இன்றாம் = இல்லையாம், (உ) மதியின் = நல்ல புத்தியினால், விசார அப்பியாச = ஆத்ம விசாரணை அப்பியாசமென்கிற, நயச் செயலால் = நயமான செயலினால், மன உளவன் = மனமாகிய உளவன், வசம் ஆம் கால்(ஏ) = வசமாகுங் காலத்தில். (ஏ, ஏ, அசைகள்.)

(பொ - ரை) உள்ளமென்னும் வீட்டினுள் இருக்கிற அறிவென்கிற திரவியத்தை மனமாகிய உளவன் இசைந்திருக்குமுதவியைக் கொண்டு. பத்து இந்திரியங்களாகிய கள்வர்கள் கிரகித்து விஷயங்களென்னும் பெரிய காட்டில் பலகாலுஞ் சஞ்சரித்து ஒன்பது வாயில்களையுடைய சரீரமென்கிற கோட்டையுள் மறைந்து வசிக்குஞ் செய்கையானது, நல்ல புத்தியினால் ஆத்ம விசாரணை அப்பியாசமென்கிற நயமான செயலினால் மனமாகிய உளவன் வசமாகுங் காலத்தில் இல்லையாம்.

### வெண்பா.

தன்னையறி யாமை தனிக்கொலைமெய் யானென்னல்
மன்னுகள வுன்னன் மதுபானம்—என்னதெனல்
காமம் பிறிதுளதாகக் காணல் சினமிவைகள்
தாமைந்து மாபா தகம். (கக௮)

(ப - ரை) தன்னை அறியாமை, தனி = ஒப்பற்ற, கொலை = கொலையாம், மெய் = சரீரத்தை, யானென்னல், மன்னுகளவு = பெரிய

களவாம், உன்னல்=சங்கற்பித்தல், மதுபானம் = கட்குடியாம், என்னது=இது என்னுடையது, எனல்=என்று நினைத்தல், காமம்=காமமாம், பிறிது உளதா=அன்னியமானவைகள் இருப்பதாக, காணல்=அறிதல், சினம்=கோபமாம், இவைகள்(தாம்)= இவைகளே, ஐந்து மாபாதகம்=பஞ்சமாபாதகங்களாகும். (தாம், சாரியை.)

(போ - ரை) தன்னை அறியாமை ஒப்பற்ற கொலையாம், சரீரத்தை யானென்னல் பெரிய களவாம், சங்கற்பித்தல் கட்குடியாம், இது என்னுடையதென்று நினைத்தல் காமமாம். அன்னியமானவைகள் இருப்பதாக அறிதல் கோபமாம், இவைகளே பஞ்சமாபாதகங்களாகும்.

கட்டளைக் கலித்துறை.

ஓசை பரிச வுருச்சுவை கந்த வுறுப்புகளின்
வீசுசங் கற்பப் பணிகள் புனைந்தவிட் சேபமெனப்
பேசு கணிகை வசப்பட் டுயிர்மைந்தர் பேருணர்வாந்
தேசுப சாந்திப் பொருண்முற் றொழிந்துந் தெரிந்திலரே. (கஉ௦)

(ப - ரை) ஓசை, பரிச, உரு=ரூபம், சுவை, கந்த=கந்தங்களென்னும், உறுப்புகளின்=அவயவங்களில், வீசு=பரவிய, சங்கற்பப்பணிகள்=சங்கற்பங்களென்கிற ஆபரணங்களை, புனைந்த=தரித்த, விட்சேபமென, பேசு=சொல்லப்படும், கணிகை=வேசியின், வசப்பட்டு, உயிர் மைந்தர்=சீவர்களாகிய புருஷர்கள், பேர் உணர்வு ஆம் =பேரறிவெனும், தேசு=தேஜசும், உபசாந்திப் பொருள்=உபசாந்தி யென்கிற திரவியமும், முற்று=முழுமையும், ஒழிந்தும், தெரிந்திலரே=தெரிந்துகொள்ளாம லிருக்கிறார்களே. (விட்சேபம் =தோற்றம்.)

(போ - ரை) ஓசை பரிச ரூபம் சுவை கந்தங்களென்னும் அவயவங்களில் பரவிய சங்கற்பங்களென்கிற ஆபரணங்களைத் தரித்த விட்சேபமெனச் சொல்லப்படும் வேசியின் வசப்பட்டுச் சீவர்களாகிய புருஷர்கள் பேரறி வென்னும் தேஜசும் உபசாந்தி யென்கிற திரவியமும் முழுமையும் ஒழிந்துந் தெரிந்துகொள்ளாமலிருக்கிறார்களே.

## எழுசீர் விருத்தம்.

அகங்கரச் சிரமீ துடலெனும் பாரம்,
அலைமன மிடற்றவாச் சுமையும்
முகந்திடு சிந்தை யிடையின்வா சனையாம்
மூட்டையும் வீக்கியே புந்தித்
தொகுங்கரம் விடயப் புன்புசிப் பேந்தித்
துளங்குதொல் லவித்தைவன் மிடியோர்
தகுங்குரு வள்ளல் சரண்புகி லவைபோய்ச்
சாற்றொணு ஞானசம் பன்னர். (கஉக)

(ப-ரை) அகங்கரச் சிரமீது = அகங்காரமென்கிற தலையின்மீது, உடலெனும், பாரம் = பாரமும், அலைமன = அலைகின்ற மனமாகிய, மிடற்று = கழுத்தில், அவா = ஆசை யென்கிற, சுமையும், முகந்திடு = பற்றுகிற, சிந்தை இடையின் = சிந்தையான இடுப்பில், வாசனை, ஆம் = ஆகிய மூட்டையும், வீக்கி(ஏ) = கட்டி, புந்தி = புத்தியென்னும், தொகுங்கரம் = கூடுகிற கையில், விடய = விஷயமென்கிற, புன் புசிப்பு = தாழ்ந்த உணவை, ஏந்தி = ஏந்திக்கொண்டு, துளங்கு = சஞ்சல மடைகிற, தொல் = அனாதியான, அவித்தை = அஞ்ஞான மென்னும், வல்மிடியோர் = மிகுந்த தரித்திரத்தையுடையவர், தகும் = வணங்கத்தக்க, குருவள்ளல் = குருவாகிய வள்ளலின், சரண்புகில் = சரணத்தை அடைந்தால், அவை போய் = அச்சுமைகளும் தரித்திரமும் நீங்கி, சாற்றொணு = சொல்லுதற்கரிய, ஞானசம்பன்னர் = ஞானசம்பன்னராவார்கள். (ஏ, அசை) (வள்ளல் = வேண்டியதைத் தாராளமாய்க் கொடுப்பவர்.)

(பொ-ரை) அகங்காரமென்கிற தலையின்மீது உடலெனும் பாரமும் அலைகின்ற மனமாகிய கழுத்தில் ஆசை யென்கிற சுமையும் பற்றுகிற சிந்தையான இடுப்பில் வாசனையாகிய மூட்டையும் கட்டிப் புத்தியென்னுங் கூடுகிற கையில் விஷயமென்கிற தாழ்ந்த உணவை ஏந்திக்கொண்டு சஞ்சல மடைகிற அனாதியான அஞ்ஞானமென்னும் மிகுந்த தரித்திரத்தை யுடையவர்கள் வணங்கத் தக்க குருவாகிய வள்ளலின் சரணத்தை யடைந்தால் அச்சுமைகளும் தரித்திரமும் நீங்கிச் சொல்லுதற்கரிய ஞானசம்பன்னராவார்கள்.

பன்னிருசீர் விருத்தம்.

இசைதுற் குணங்களைக் கோபித்து நற்குணத்
திச்சையுறு வார்தன தறத்
தினைமற் றுளார்பணிந் தேற்றிடற் கிசையாத
வியல்பா முலோபமுடனே
நிசமா தவர்க்கேவல் செய்தவர்த நற்புண்
ணியங்கைக் கொளுங்களவினர்
நிகழுமன் னியர்துகண் மறப்பர்பிர விர்த்திவினை
நெறியில்வல் லவரிவரியான்
ஓசிவன் கொலோநிவிர்த் தித்தொழிலி லென்றுமிக
வுற்றுப் பொறுமைபவமாய்
வுன்னித் தளர்ந்துபா வச்செயற் கஞ்சியே
யுளமாயை நோயில்வாடி
மிசையா மவித்தைமிடி யான்மிக வருந்தியிம்
மேதினியில் யானுய்வதெவ்
விதமோ வெனப்பதைப் புறுமுத்தி காமியே
மெய்க்குரு சரண்பெறுவனே. (கஉஉ)

(ப-ரை) இசை=தோன்றுகிற, துற்குணங்களைக் கோபித்து, நற்குணத்து=நற்குணங்களில், இச்சை, உறுவார்=அடைவாராகி, தனது அறத்தினை=தன்னிடத்துள்ள புண்ணியத்தை, மற்றுளார்=தன்னை அடுத்த மற்றவர்கள், பணிந்து=நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து, ஏற்றிடற்கு=ஏற்றுக்கொள்வதற்கு, இசையாத, இயல்பாய்=தன்மை யென்னும், உலோபமுடன்(ஏ)=உலோபமும் நிச=உண்மையான, மாதவர்க்கு=மகா தவசையுடைய பெரியோர்களுக்கு, ஏவல் செய்து, அவர்(தம்)=அவர்களின், நல்=நல்ல, புண்ணியம்=புண்ணியங்களை, கைக்கொளும் = கவர்ந்துகொள்ளுகிற, களவினர்=களவுமுடையவராய், நிகழும்=தோற்றுகிற, அன்னியர், துகள் = குற்றங்களை, மறப்பர் = மறப்பவராகி, (௩) பிரவிர்த்தி, வினை நெறியில்=செய்கையின் மார்க்கத்தில், வல்லவர்=வல்லவர்கள், (௨) இவர்=இவ்வுலகத்தார், (௪) யான்=நான், (௫) ஓ சிவன் கொல்(ஓ)=தளர்ச்சி யடைவேனோ, (௫) நிவிர்த்தித் தொழிலில்=நிவர்த்தி மார்க்கச் செய்கையில், (எ) என்று, மிகவுற்றுப் பொறுமை=மிகுந்த பொறுமை யடைந்து, பவ மாய்வு உன்னி=பிறப்பு இறப்புத் துன்பங்களை நினைந்து, தளர்ந்து=

சோர்ந்து, பாவச் செயற்கு=பாவச் செய்கைகளுக்கு, அஞ்சி(ஏ), உளமாயை நோயில்=மனமாயை யென்னும் நோயினால், வாடி, மிசையாம் அவித்தை=மேலிட்டிருக்கிற அஞ்ஞானமாகிய, மிடியால்=வறுமையால், மிக=மிகவும், வருந்தி இம்மேதினியில் யான் உய்வது எவ்விதமோ என, பதைப்புறு=பதைக்கின்ற, முத்தி காமியே, மெய்க்குரு=உண்மையான குருவின், சரண்=சரணத்தை பெறுவண்(ஏ)=பெறுவான். (ஏ, ஏ, ஓ, அசைகள்) (தம், சாரியை) (முத்திகாமி=முமூட்சு.)

(போ - ரை) தோன்றுகிற துற்குணங்களைக் கோபித்து நற்குணங்களில் இச்சை அடைவாராகித் தன்னிடத்துள்ள புண்ணியத்தைத் தன்னை அடுத்த மற்றவர்கள் நமஸ்காரம் முதலியவைகளைச் செய்து ஏற்றுக்கொள்வதற்கு இசையாத தன்மை என்னும் உலோபமும் உண்மையான மகா தவசையுடைய பெரியோர்களுக்கு ஏவல் செய்து அவர்களின் நல்ல புண்ணியங்களைக் கவர்ந்துகொள்ளுகிற களவுமுடையவராய்த் தோற்றுகின்ற அன்னியர் குற்றங்களை மறப்பவராகி இவ்வுலகத்தார் பிரவிர்த்திச் செய்கையின் மார்க்கத்தில் வல்லவர்கள் நான் நிவர்த்தி மார்க்கச் செய்கையில் தளர்ச்சியடைவேனே என்று மிகுந்த பொறாமையடைந்து பிறப்பு இறப்புத் துன்பங்களை நினைந்து சோர்ந்து பாவச்செய்கைகளுக்கு அஞ்சி மனமாயை யென்னும் நோயினால் வாடி மேலிட்டிருக்கிற அஞ்ஞானமாகிய வறுமையால் மிகவும் வருந்தி இம்மேதினியில் யான் உய்வது எவ்விதமோ வெனப் பதைக்கின்ற முத்தி காமியே உண்மையான குருவின் சரணத்தைப் பெறுவான்.

எண்சீர் விருத்தம்.

இறையருள்சேர் சாதகன்கா யத்தை நீந்தித்
திவ்வுடல்யா னெனுமதியை மாய்த்துத் தேகம்
அறைசகமின் றெனவான்மா வாமா ரூடன்
அனைத்தினுக்கு மேலோன்யா னெனவே யாவும்
நெறியினென ஞானமது பானத் தோகை
நிறைந்துசமா தியிற்றுயின்று பொறிபு லன்கள்
அறிவகல மூகவனு போக மாமிவ்
வனுபவமு மிறந்திடுவ தநித மன்னே, (கஉரு)

(ப - ரை) (க) இறை அருள்சேர் = குருவின் அருளைப் பெற்ற, சாதகன் = அப்பியாசி, காயத்தை = சரீரத்தை, நிந்தித்து, இவ்வுடல், யான் = நான், எனும், மதியை = புத்தியை, மாய்த்து = ஒழித்து, தேகம் = தேகமும், அறைசகம் = சொல்லப்படுகிற உலகமும், இன்றென = இல்லையென்று நிச்சயித்து, ஆன்மா ஆம் = ஆத்மாவாய் விளங்கிய, ஆரூடன் = அனுபவி (ங) அனைத்தினுக்கும் = எல்லாவற்றிற்கும், மேலோன் = சாக்ஷியாகிய மேலானவன், யான், எனதே யாவும் = சகலமும் எனது நினைவே, (உ) நெறியின் = முறையாக, (ரு) என = என்று, ஞான, மதுபானத்து = மதுவை யருந்தலால், ஓகை = மகிழ்ச்சி, நிறைந்து = பெருகி, சமாதியில், துயின்று = தூங்கி, பொறி புலன்கள் = இந்திரியங்கள், விஷயங்கள் என்னும் இவற்றின், அறிவு, அகல = ஒழிய, மூக அனுபோகம் ஆம் = மவுன அனுபவமடைந்து, இவ்வனுபவமும், இறந்திடுவது = கடந்தது, அதீதம் = அதீத நிலையாம், (மன்றே, அசை.)

(பொ - ரை) குருவின் அருளைப்பெற்று அப்பியாசி சரீரத்தை நிந்தித்து இவ்வுடல் நான் எனும் புத்தியை ஒழித்துத் தேகமும் சொல்லப்படுகிற உலகமும் இல்லை என்று நிச்சயித்து ஆத்மாவாய் விளங்கிய அனுபவி முறையாக எல்லாவற்றிற்கும் சாக்ஷியாகிய மேலானவன் யான் சகலமும் எனது நினைவே என்று ஞான மதுவை யருந்தலால் மகிழ்ச்சி பெருகிச் சமாதியில் தூங்கி இந்திரியங்கள் விஷயங்க ளென்னுமிவற்றின் அறிவு ஒழிய மவுன அனுபவமடைந்து இவ்வனுபவமுங் கடந்தது அதீத நிலையாம்.

வெண்பா.

அசடன்பொல் லாதபர மாங்காரி யாவும்
பசையின்றிக் கெட்டவன்சு பாவி—வசையறியாப்
பித்தன் மதியில் பிராணியம சாதகன்மா
சத்துருவே கேவலன்முத் தன். (கஉ௯)

(ப - ரை) அசடன் = சரீரமல்லாதவன், பொல்லாத = குறைபடாத, பரமாங்காரி = எல்லாம் யானே யென்னும் மேலான அகங்காரமுடையவன், யாவும், பசையின்றி = பற்றற, கெட்டவன் = விட்டவன், சுபாவி = தானா யிருப்பவன், வசை யறியா = பழிப்பை யறியாத, பித்தன் = பித்தனைப் போன்றவன், மதிஇல் = சுட்டும்

புத்தியில்லாத, பிராணி = ஆன்ம சொரூபி, யமகாதகன் = அஞ்ஞானமாகிய யமனைக் கொன்றவன், மா = மகா, சத்து உரு(ஏ) = சத்து ரூபி, கேவலன் = தனித்தவன் என இவ்வாறு விளங்குபவன், முத்தன் = ஜீவன் முத்தன். ஏ, அசை (பொல்லா = துளைபடாத = குறைபடாத.)

(பொ - ரை) சரீரமல்லாதவன், குறைபடாத எல்லாம் யானே என்னும் மேலான அகங்காரமுடையவன், யாவும் பற்றற விட்டவன், தானுயிருப்பவன், பழிப்பை யறியாத பித்தனைப்போன்றவன், சுட்டும் புத்தியில்லாத ஆன்ம சொரூபி, அஞ்ஞானமாகிய யமனைக் கொன்றவன், மகா சத்துரூபி, தனித்தவன் என இவ்வாறு விளங்குபவன் ஜீவன் முத்தன்.

கலி விருத்தம்.

குணமிலி குலமிலி குருட ஞசிபூ
றுணர்விலி நபுஞ்சக ஞூமை மெய்யிலி
துணையிலி வறியவன் சோம்பன் கைகழ
லிணையிலி செவிடனென் றிவற் பழிச்சுமே. (கஉரு)

(ப - ரை) குணம் இலி = குணாதீதன், குலம் இலி = குலாபிமானமற்றவன், குருடன் = பேத திருஷ்டியில்லாதவன், நாசி ஊறு உணர்வு இலி = வாசனை யறிவு பரிசவறிவு கடந்தவன், நபுஞ்சகன் = சிற்றின்பம் ஒழித்தவன், துணை இலி = சமானமற்றவன், வறியவன் = அன்னியமொன்று மில்லாதவன், சோம்பன் = பிரவிர்த்தியற்றவன், கை கழல் இணை இலி = நிஷ்கிரியன், போக்கு வரவற்ற பூரணன் அல்லது (பாணிபாதேந்திரியரகிதன்), செவிடன் = பேத கற்பனை யேற்காதவன், என்று, இவற் பழிச்சும்(ஏ) = இந்தச் ஜீவன்முத்தனை ஸ்துதியுங்கள். (ஏ, அசை), (கழல் இணை = இரண்டு பாதம்) (ரகிதம் = அதீதம் = கடத்தல்.)

(பொ - ரை) குணாதீதன், குலாபிமானமற்றவன், பேத திருஷ்டியில்லாதவன், வாசனை யறிவு பரிசவறிவு கடந்தவன், சிற்றின்பம் ஒழித்தவன், மௌனி சரீரமல்லாதவன், சமானமற்றவன், அன்னியமொன்றுமில்லாதவன், பிரவிர்த்தி யற்றவன், நிஷ்கிரியன் போக்கு வரவற்ற பூரணன், அல்லது பாணிபாதேந்திரிய ரகிதன், பேதகற்பனை யேற்காதவன், என்று இந்த ஜீவன்முத்தனை ஸ்துதியுங்கள்.

கலி நிலைத்துறை.

ஐந்த டக்கிகா லாயுதஞ் சலமக லாத
செந்து வேட்டுவ னடைந்தவ ருயிர்பொரு டேகம்
பந்து விற்கவர் வோனென வையனைப் பழிச்சல்
முந்த வீசனுட் டுக்குற வன்னென மொழிவாம். (கஉசூ)

(ப - ரை) ஐந்தடக்கி = ஐந்து உறுப்புகளை அடக்கிக்கொள்ளும் ஆமை போலப் பஞ்சேந்திரியங்களை வசஞ் செய்தவன், காலாயுதம் = கோழியைப்போல உலகப் பார்வையில் ஞான சாதகமான யுக்திகளைத் தெரிந்துகொண்டு மற்றவைகளை உபேக்ஷித்தவன் அல்லது தத்துவங்களை எல்லாம் தள்ளித் தன்னை அறிந்துகொண்டவன், சலம் அகலாத செந்து = நீரைவிட்டு நீங்காத பிராணியாகிய மீனைப் போலத் தனது அன்பர்களை ஆத்ம திருஷ்டியால் தன்னைப்போல ஆக்குவோன், வேட்டுவன் = குளவிபோலத் தனது சீடனுக்கு ஞான உபதேசத்தால் பிரமமாகிய தன்னை நினைக்கும்படி செய்து அவன் பிரம சொரூபமாகும்படி செய்பவன், அடைந்தவர் = தன்னைச்சரணமென்றடைந்தவர்களுடைய, உயிர் பொருள் தேகம் = உடல் பொருள் ஆவி என்னும் இம்மூன்றையும், பந்துவில் கவர்வோன் = உறவுத் தன்மையால், அபிமானம் விடும்படி பற்றிக்கொள்வோன், என, ஐயனை = குருவை, பழிச்சல் = ஸ்துதித்தலில், முந்த = முதன்மையாக, ஈசன் = ஈசுவரனது, ஆட்டுக்கு = திருவிளையாடலுக்கு, உறவன் = உரியவன், என = எனவும், மொழிவாம் = சொல்வோம்.

உபேக்ஷை = உதாசீனம், நொதுமல் = விருப்பு வெறுப்பு இன்மை.

(போ - ரை) ஐந்து உறுப்புக்களை அடக்கிக்கொள்ளும் ஆமை போலப் பஞ்சேந்திரியங்களை வசஞ்செய்தவன் கோழியைப்போல உலகப் பார்வையில் ஞான சாதகமான யுக்திகளைத் தெரிந்து கொண்டு மற்றவைகளை உபேக்ஷித்தவன் அல்லது தத்துவங்களை யெல்லாம் தள்ளித் தன்னை அறிந்துகொண்டவன் நீரைவிட்டு நீங்காத பிராணியாகிய மீனைப் போலத் தனது அன்பர்களை ஆத்ம திருஷ்டியால் தன்னைப்போல் ஆக்குவோன் குளவிபோலத் தனது சீடனுக்கு ஞான உபதேசத்தால் பிரமமாகிய தன்னை நினைக்கும்படி செய்து அவன் பிரம சொரூபமாகும்படி செய்பவன் தன்னைச் சரணமென்றடைந்தவர்களுடைய உடல் பொருள் ஆவி யென்னும் இம்

மூன்றையும் உறவுத் தன்மையால், அபிமானம் விடும்படி பற்றிக் கொள்வோன் எனக் குருவை ஸ்துதித்தலில் முதன்மையாக ஈசுவரனது திருவிளையாடலுக்கு உரியவன் எனவும் சொல்வோம்.

வெண்பா.

சுத்தசங் கற்பத் தொழில்கா லரைமுக்கால்
மெத்தமுழுப் பங்கும் விடுஞ்சாந்தி—வித்தையெனும்
மெய்ச்சோம் பினர்பிரம வித்து வரன்வரியான்
அச்சோ வெனவரிட்ட னாம். (கஉஎ)

(ப-ரை) சுத்த சங்கற்பத் தொழில்=சுத்த சங்கற்பமாகிய செய்கையில் முறையே, கால் அரை முக்கால் மெத்த முழுப்பங்கும்=காற்பாகமும் அரைப்பாகமும் முக்காற்பாகமும் நன்றாக முழுப்பாகமும், விடும்=விடுகின்ற, சாந்தி வித்தை எனும்=சாந்தமாகிய ஞானமென்னும், மெய்ச் சோம்பினர்=உண்மையான சோம்பலை யுடையவர், பிரமவித்து, வரன்=பிரமவரன், வரியான்=பிரம வரியான், அச்சோ என=அகோவென அதிசயிக்கத்தக்க, வரிட்டன்=பிரமவரிட்டன், ஆம்=என ஆவர்.

(போ-ரை) சுத்த சங்கற்பமாகிய செய்கையினால் முறையே காற்பாகமும் அரைப்பாகமும் முக்காற்பாகமும் நன்றாக முழுப் பாகமும் விடுகின்ற சாந்தமாகிய ஞானமென்னும் உண்மையான சோம்பலையுடையவர் பிரமவித்து பிரமவரன் பிரமவரியான் அகோ வென அதிசயிக்கத்தக்க பிரமவரிட்டன் என ஆவர்.

அறுசீர் விருத்தம்.

துரிதசிதா பாசனெனுந் துணைவன்பா லவாவின்றிச்
சுயஞ்சித் தாய
பரபுருடன் றனைத்தனிமை யிற்கலந்து மங்கினைவே
பயின்று பின்னும்
மருவுபிரா ரத்தமெனுந் தொழில்யாக்கை மனையிற்செய்
மனப்பெண் ணேயிச்
சுரனெனுந்தா யூழுணவூட் டிடப்புசித்தோர் வறுதூங்காத்
தூக்கச் சேயாம். (கஉஅ)

(ப-ரை) துரித=கலக்க முடைய, சிதாபாசன்=சித்தைப் போன்றவனான ஜீவன், எனும், துணைவன்பால்=நண்பனிடத்து,

அவாவின்றி = ஆசையில்லாமல், சுயம் சித்து ஆய = தானாக விளங்கும் ஞானவடிவமாகிய, பரபுருடன்றனை = மேலான புருடனை, தனிமையில் = தனித்து, கலந்தும், அந்நினைவே பயின்று பின்னும் = மறுபடியும் அந்த அனுபவ நினைவோடே கூடி, மருவு = பொருந்திய, பிராரத்தமெனும், தொழில் = தொழிலை, யாக்கை மனையில் = சரீரமாகிய வீட்டில், செய் = செய்கிற, மனப்பெண்ணே = மனமென்கிற பெண்ணே மேலும், ஈச்சுரனெனும் = ஈசுவரனெனும், தாய், ஊழ் = பிராரத்துவ மென்கிற, உணவு = உணவை, ஊட்டிட = ஊட்ட. புசித்து = அதை உண்டும், ஓர்வு அறு = அறியாத, தூங்கா = தூங்காத, தூக்கச் சேய் ஆம் = தூக்கத்தையுடைய குழந்தையுமாம்.

(பொ - ரை) கலக்கமுடைய சித்தைப் போன்றவனான ஜீவன் எனும் நண்பனிடத்து ஆசையில்லாமல் தானாக விளங்கும் ஞான வடிவமாகிய மேலான புருஷனைத் தனித்துக் கலந்தும் மறுபடியும் அந்த அனுபவ நினைவோடே கூடிப் பொருந்திய பிராரத்தமெனுந் தொழிலைச் சரீரமாகிய வீட்டிற் செய்கிற மனமாகிய பெண்ணே, மேலும் ஈசுவரனெனும் தாய் பிராரத்துவமென்கிற உணவை ஊட்ட அதை உண்டும் அறியாத, தூங்காத தூக்கத்தையுடைய குழந்தையுமாம்.

வெண்பா.

புலைமா மிசப்பாவை பூணவத்து வார
மலமூத் திரபாண்டம் வன்சுக்—கிலவூற்று
நாடிக் கயிற்றிறுகு நாறூன் பொதியெலுப்புக்
கூடுதிரத் தோற்புரையான் கொல். (கஉகூ

(ப - ரை) புலை = புலைத் தன்மையான, மாமிசப்பாவை = தசையாலாகிய பொம்மை, பூண் = ஏற்பட்ட, நவத்துவார = ஒன்பது துவாரத்தையுடைய, மல மூத்திர பாண்டம், வன்சுக்கில = வலிய சுக்கில, ஊற்று, நாடிக்கயிற்று = நரம் பென்னுங் கயிறுகளால், இறுகு = கட்டப்பட்ட, நாறு = நாறுகின்ற, ஊன் பொதி = மாமிசப் பொதி, எலுப்புக் கூடு = எலும்புக் கூடு, உதிர = இரத்தத்தால் நிறைந்த, தோற்புரை = தோற்புரையாகிய இவ்வுடல், யான் கொல் நானோ அன்று. (தோற்புரை = தோலின் பை.)

(போ - ரை) புலைத் தன்மையான தசையாலாகிய பொம்மை, ஏற்பட்ட ஒன்பது துவாரத்தையுடைய மல மூத்திர பாண்டம், வலிய சுக்கில ஊற்று, நரம்பென்னுங் கயிறுகளால் கட்டப்பட்ட நாறுகின்ற மாமிசப் பொதி, எலும்புக் கூடு, இரத்தத்தால் நிறைந்த தோற்புரை ஆகிய இவ்வுடல் நானே அன்று.

நாலாட் சுமையே நரிக்குப் பொதிசோறு
மேலோயாக் காற்றின் விசைத்துருத்தி—தோலாய்
நரப்புக் கயிற்று னடிக்குமலப் பாவை
விரிப்பிற் புழுக்குடிலிம் மெய். (கநூ0)

(ப - ரை) (நூ) நாலாள் சுமை(ஏ), நரிக்கு, பொதி சோறு = கட்டுச்சாதம், மேல்ஓயா = வெளியும் உள்ளும் ஓய்வில்லாமல் ஓடுகின்ற, காற்றின் விசைத்துருத்தி, தோல், ஆய் = ஆகி, நரப்புக் கயிற்றால் = நரம்பென்னும் கயிற்றினால், நடிக்கும் = நடிக்கின்ற, மலப் பாவை = மலப் பொம்மை (க) விரிப்பின் = விவரித்துச் சொல்லின், (ச) புழுக்குடில் = புழுக்களின் குடிசை எனும் இவையாம், (உ) இம் மெய் = இவ்வுடல், (ஏ, அசை) (காற்று = பிராண வாயு.)

(போ - ரை) விவரித்துச் சொல்லின் இவ்வுடல் நாலாள் சுமை நரிக்குக் கட்டுச்சாதம் வெளியும் உள்ளும் ஓய்வில்லாமலோடுகின்ற காற்றின் விசைத்துருத்தி தோலாகி நரம்பென்னுங் கயிற்றினால் நடிக்கின்ற மலப் பொம்மை புழுக்களின் குடிசை எனும் இவையாம்.

கலி விருத்தம்.

சரீர மேசிறைச் சாலை யதனிடை
விராவு நெஞ்ச மிடற்றுட னைம்பொறிப்
பராவு சென்னி படரகங் காரமே
அராவெ னப்படு மாசை விலங்கரோ. (கநூக)

(ப - ரை) சரீரமே, சிறைச்சாலை = சிறைச்சாலையாம், அதனிடை = அதில், விராவு = கலந்த, நெஞ்ச = மனமாகிய, மிடற்றுடன் = கழுத்துடன், ஐம்பொறி = சுரோத்திர முதலிய ஐம்பொறிகளென்னும், பராவுசென்னி = பரவுதலான தலைகள், படர் = அடர்ந்த, அகங்காரமே, அரா = சர்ப்பம், எனப்படும், ஆசை, விலங்கு = விலங்காம். (அரோ, அசை) (சுரோத்திரம் = காது) (பொறி = இந்திரியம்)

(ப - ரை) சரீரமே சிறைச்சாலையாம் அதில், கலந்த மனமாகிய கழுத்துடன் சுரோத்திர முதலிய ஐம்பொறிக ளென்னும் பரவுத லான தலைகள் அடர்ந்த அகங்காரமே சர்ப்ப மெனப்படும் ஆசை விலங்காம்.

பிரவி ருத்திப் பிரிய முளார்மனம்
கரும நீரிற் கலக்க விலவணம்
அருநி விர்த்தி யவாவினர் நெஞ்சகந்
துரிய ஞான சுசிக்குச் சசியகோ. (கூரு௨)

(ப - ரை) பிரவிருத்திப்பிரியம் = பிரவிர்த்தி மார்க்கத்தின் இச்சை, உளார் = உள்ளவர்களது, மனம், கரும நீரில் = கர்ம மென்னும் நீரில், கலக்க = கலந்துபோகத் தக்க, இலவணம் = உப்பாம், அரு நிவிர்த்தி = அருமையான நிவிர்த்தி மார்க்கத்தின், அவாவினர் = இச்சையுடையவரது, நெஞ்சகம் = மனம், துரிய, ஞான = ஞான மெனும், சுசிக்கு = அக்கினியிற் கலந்துபோகத்தக்க, சசி = கர்ப்பூர மாம், அகோ = ஆச்சரியம்.

(போ - ரை) பிரவிர்த்தி மார்க்கத்தின் இச்சை உள்ளவர்களது மனம் கர்மமென்னும் நீரில் கலந்துபோகத்தக்க உப்பாம் அருமை யான நிவர்த்தி மார்க்கத்தின் இச்சையுடையவரது மனம் துரிய ஞானமெனும் அக்கினியிற் கலந்துபோகத்தக்க கர்ப்பூரமாம். ஆச் சரியம்.

வெண்பா.

மீதுறுமஞ் ஞான வினைச்சூத் திரத்துவமற்
றேதிதழ்சச் சிற்சுகம்யா மென்னுமுப—வீதமொடு
நின்றான்ம ஞானத்தீ நேர்துவிச ரேபிரமத்
தொன்றும் பிராமணரா வோர். (கூருரு)

(ப - ரை) மீது உறும் = மேலிட்டிருக்கிற, அஞ்ஞான, வினை = கர்மமென்னும், சூத்திரத்துவம் = சூத்திரத் தன்மை, அற்று(ஏ) = நீங்கி, திகழ் = விளங்குகின்ற, சத்சித் சுகம் = சச்சிதானந்த சொரு பமே, யாம், என்னும் = என்னும் நிச்சயமாகிய, உபவீதம், ஒடு = உடன், நின்று = நிலைத்து, ஆன்ம ஞானத் தீ = ஆத்ம ஞானமாகிய அக்கினியை, நேர் துவிசரே = உடைய துவிஜரே, பிரமத்து = பிரமத்

தில், ஒன்று ஆம்=ஏகத் தன்மை யடைந்த, பிராமணர் ஆவோர்= ஆவார். (ஏ, அசை) (உபவீதம்=பூணூல்) (துவிஜர்=இரு பிறப்பாளர்.)

(போ - ரை) மேலிட்டிருக்கிற அஞ்ஞான கர்ம மென்னும் சூத்திரத் தன்மை நீங்கி விளங்குகின்ற சச்சிதானந்த சொரூபமேயாம் என்னும் நிச்சயமாகிய உபவீதமுடன் நிலைத்து ஆத்ம ஞானமாகிய அக்கினியை யுடைய துவிஜரே பிரமத்தில் ஏகத் தன்மை யடைந்த பிராமணராவார்.

## எண்சீர் விருத்தம்.

பருவநன்மா ணுக்கனெனு மிலக்க ணஞ்சார்
பசுவையுப தேசமெனும் யூபஞ் சேர்த்துச்
சிரவணஞ்செய் வித்தலெனு மைவாய்ப் பந்தஞ்
செய்துடல்யா னெனுமதியா முயிரை யோட்டி
விரவுறுசத் துவச்சித்த வபையை மேலாம்
விவேகவவி சொரியான்மாக் கினியி லிட்டே
பரமெனுமெக் கியபுருட னேற்க மோட்சப்
பதிபுகுத்தும் ஞானகுருப் பார்ப்பான் மன்னே. (காரு௪)

(ப - ரை) பருவ=முமுட்சுப் பருவமடைந்த, நல் = நல்ல, மாணுக்கனெனும், இலக்கணஞ்சார்=தகுந்த இலக்ஷணமுடைய, பசுவை, உபதேசம், எனும்=என்கிற, யூபம்=வேள்வி ஸ்தம்பத்தில், சேர்த்து, சிரவணம் செய்வித்தல், எனும்=என்னும், ஐவாய்ப் பந்தம்=ஐந்து வாயில்களைக் கட்டுதல், செய்து, உடல்யானெனும், மதியாம்=புத்தியாகிய, உயிரை ஓட்டி=பிராணவாயுவை வெளிப்படுத்தி, விரவுறு=கலக்கின்ற, சத்துவச் சித்த=சாத்விக சித்தமென்கிற, வபையை, மேலாம் விவேக=மேலாகிய விவேகமான, அவிசொரி=நெய்யூற்றப்படுகிற, ஆன்ம அக்கினியில் = ஆன்மாவென்னும் அக்கினியில் இட்டு (ஏ), பரம்=பிரமம், எனும்=என்கிற, எக்கிய புருடன்=எக்ய புருஷன், ஏற்க=ஏற்றுக்கொள்ள, மோட்சப்பதி புகுத்தும்=மோக்ஷமாகிய சொர்க்கத்தை யடைவிக்கிற, ஞான, குரு=குருவே, பார்ப்பான்=பார்ப்பானும். (மன்னே ஏ, அசைகள்) (பசு=வெள்ளாடாகிய மிருகம்) (வபை=உந்தியிலுள்ள வெள்ளை நிணம்.)

(போ - ரை) முமுட்சுப் பருவமடைந்த நல்ல மாணுக்கனெனும் தகுந்த இலக்ஷணமுடைய பசுவை உபதேச மென்கிற வேள்வி ஸ்தம்பத்திற் சேர்த்துச் சிரவணம் செய்வித்தலென்னும் ஐந்து வாயில்களைக் கட்டுதல் செய்து உடல் யானெனும் புத்தியாகிய பிராணவாயுவை வெளிப்படுத்திக் கலக்கின்ற சாத்விக சித்தமென்கிற வபையை மேலாகிய விவேகமான நெய்யூற்றப்படுகிற ஆன்மாவென்னும் அக்கினியிலிட்டுப் பிரமம் என்கிற எக்ய புருஷன் ஏற்றுக்கொள்ள மோக்ஷமாகிய சொர்க்கத்தை யடைவிக்கிற ஞான குருவே பார்ப்பானும்.

அறுசீர் விருத்தம்.

புறக்கருமப் பஞ்சமர்சற் கருமச்சூத் திரர்பத்திப்
பொருவில் செல்வச்
சிறப்புறும்வை சியர்யோக சத்திரியர் பரஞானத்
தீவ ளர்ப்போர்
உறப்பரத கண்டமெனு மிராசதா னியிற்சமிராட்
டொருவ ரானும்
பெறற்கரிய வனுதிபர ஞானயோ கீச்சுரனே
பிரமந் தெய்வம். (கூரு)

(ப - ரை) (க) புறக்கரும = அன்னிய கர்மங்களைச் செய்பவர்களாகிய, பஞ்சமர் = பஞ்சமரும், சற்கருமச் சூத்திரர் = புண்ணிய கர்மங்களைச் செய்பவர்களாகிய சூத்திரரும், பத்தி = பக்தி யென்னும், பொருவு இல் = சமானமில்லாத, செல்வச் சிறப்பு, உறும் = பொருந்திய, வைசியர் = வைசியரும், யோகசத்திரியர் = யோகிகளாகிய க்ஷத்திரியர்களும், பர = மேலான, ஞானத்தீ = ஞானமென்னும் அக்கினியை, வளர்ப்போர் = வளர்ப்போர்களான பிராமணர்களும், உற = சூழ்ந்து வசிக்க, பரதகண்டமெனும், இராசதானியில் = இராசதானியில் விளங்குகின்ற, (ங) சமிராட்டு = சக்கிரவர்த்தியாம், (உ) ஒருவரானும், பெறற்கரிய, அனுதி = அனுதியான, பரஞான, யோக ஈச்சுரனே = யோகங்களையுடைய ஈசுவரனே, (ச) பிரமம், தெய்வம் = தெய்வமாம்.

(போ - ரை) அன்னிய கர்மங்களைச் செய்பவர்கள்ாகிய பஞ்சமரும் புண்ணிய கர்மங்களைச் செய்பவர்களாகிய சூத்திரரும் பக்தி யென்னும் சமானமில்லாத செல்வச் சிறப்புப் பொருந்திய வைசி

யரும் யோகிகளாகிய க்ஷத்திரியர்களும் மேலான ஞானமென்னும் அக்கினியை வளர்ப்போர்களான பிராமணர்களும் சூழ்ந்து வசிக்கப் பரதகண்டமெனும் இராசதானியில் விளங்குகின்ற, ஒருவரானும் பெறற்கரிய அனுதியான பரஞான யோகங்களையுடைய ஈசுவரனே சக்கிரவர்த்தியாம். பிரமம் தெய்வமாம்.

ஆசிரியப்பா.

இயம்புதன் மகிமை யெனும்பெருந் தேயம்
வயங்கிய முத்தி மாநகர தனில்
ஆன்ம பூபதி தான்சத் துவமன
நன்மந் திரியொடு தொன்மறை நெறிவல்
லரண்மனைக் கண்ணே பரவுணர் வாசனம்
வீற்றிருந் தருளத் தேற்றிய நற்குணச்
சேனைகள் சூழச் செறிஞா னேந்தியம்
ஆன வுயர்தொழிலாளர்கள் கரும
இந்திய மென்ன வியல்புற வினைஞர்
தந்தந் நெறியிற் றூழ்வர முயலத்
துற்குண மாய துட்டரு மவித்தைப்
பகையுமற் றொழியப் பத்திசற் கன்மந்
தியான யோகந் தெரிதவ ஞான
அதிகா ரத்துவ ரவ்வவ நெறிசெலப்
பங்கமி றன்மயப் பார்வைச்
செங்கோ னடாத்தித் திகழுநித் தியமே. (கூசு)

(ப - ரை) (உ) இயம்பு=சொல்லப்படுகிற, தன்மகிமையெனும் =தனது மகிமை யென்னும், பெருந்தேயம்=பெரிய தேசத்தில், வயங்கிய=இருக்கின்ற, முத்தி=மோக்ஷமெனும், மாநகர் அதனில் =சிறந்த பட்டணத்தில், ஆன்மபூபதி=ஆன்மாவாகிய அரசன், (தான்). சத்துவ, மன=மனமென்கிற, நல்=நல்ல, மந்திரியொடு, தொல்மறை=பழமையான வேத, நெறி=மார்க்கமாகிய, வல்= வலிய, அரண்மனை, கண்(ஏ)=இடத்தில், பர உணர்வு=மேலான அனுபவ ஞானமென்னும், ஆசனம்=சிம்மாசனத்தில், வீற்றிருந்து அருள, (க) தேற்றிய=தெளிந்த, நற்குண=நல்ல குணங்களாகிய, சேனைகள் சூழ, (ரு) செறி ஞான இந்தியம்=நெருங்குகின்ற

ஞானேந்திரியங்கள், ஆன, உயர்=உயர்ந்த, தொழிலாளர்கள்= தொழிலாளர்களும், கரும இந்தியம்=கருமேந்திரியங்கள், என்ன இயல்=எனப்படும், புறவினைஞர்=மற்ற வேலைக்காரர்களும், தம் தம், நெறியில்=நெறிகளில், தாழ்வு அற=குறைவின்றி, முயல= முயற்சி செய்ய, துற்குணம் ஆய=தீய குணங்களாகிய, துட்டரும்=துஷ்டர்களும், அவித்தைப் பகையும்=அஞ்ஞான மென்னும் பகையும், அற்று ஒழிய=இல்லாது ஒழிய, பத்தி, சற்கன்மம்= புண்ணிய கர்மம், தியான யோகம், தெரி தவம்=தெரிகின்ற தவம், ஞான = ஞானமென்னும், அதிகாரத்தவர்=அதிகாரங்களையுடைய வர்கள், அவ் அவ்=அந்த அந்த, நெறிசெல=கிரமங்களிற் செல்ல, பங்கம் இல்=பேதமில்லாத, தன்மய, பார்வை=திருஷ்டியாகிய, செங்கோல், நடாத்தி=செலுத்தி, திகழும் நித்தியம்(ஏ)=நித்திய மாக விளங்குவன். (தான், சாரியை) (ஏ, ஏ, அசைகள்.)

(பொ-ரை) சொல்லப்படுகிற தனது மகிமை யென்னும் பெரிய தேசத்தில் இருக்கின்ற மோக்ஷமெனும் சிறந்த பட்டணத்தில் தெளிந்த நல்ல குணங்களாகிய சேனைகள் சூழ ஆன்மாவாகிய அரசன் சத்துவ மனமென்கிற நல்ல மந்திரியோடு பழமையான வேத மார்க்கமாகிய வலிய அரண்மனை யிடத்தில் மேலான அனுபவ ஞானமென்னும் சிம்மாசனத்தில் வீற்றிருந்தருள, நெருங்குகின்ற ஞானேந்திரியங்களான உயர்ந்த தொழிலாளர்களும் கர்மேந்திரியங்க ளெனப்படும் மற்ற வேலைக்காரர்களும் தம் தம் நெறிகளிற் குறை வின்றி முயற்சி செய்யத், தீக்குணங்களாகிய துஷ்டர்களும் அஞ் ஞானமென்னும் பகையும் இல்லாது ஒழியப் பக்தி புண்ணிய கர்மம் தியான யோகம் தெரிகின்ற தவம் ஞானமென்னும் அதிகாரங்களை யுடையவர்கள் அந்த அந்தக் கிரமங்களிற் செல்லப், பேதமில்லாத தன்மய திருஷ்டியாகிய செங்கோல் செலுத்தி நித்தியமாக விளங்கு வன்.

எழுசீர் விருத்தம்.

சத்திய மதிலே பொறுமையே யகழாஞ்
சத்துவ குணம்பதா திகளே
மெய்த்தவம் படைசற் பாத்திரத் தீதல்
மேவிய கோட்டையு முறப்பும்

பத்திமந் திரியின் சொற்களே கவசம்
பரிந்தநல் லொழுக்கமே யிரதம்
ஒத்திவை கோபங் காமமா தியமாய்த்
தொன்றுணர் முத்தியா சனத்தே. (கூஎ)

(ப - ரை) சத்தியம், மதில்(ஏ)=மதிலாம், பொறுமை(ஏ)=அகழாம், சத்துவகுணம், பதாதிகள்(ஏ)=சேனைகளாம், மெய்த் தவம் = உண்மையான தவம், படை= ஆயுதமாம், சற்பாத்திரத்து ஈதல் =நல்ல பாத்திரமானவர்களுக்குக் கொடுத்தல், மேவிய=சூழ்ந்த, கோட்டையும், உறுப்பும்=அதன் அங்கங்களுமாம், பத்தி, மந்திரி= மந்திரியாம், இன்சொற்கள்(ஏ)=இனிய வார்த்தைகள், கவசம்= கவசங்களாம், பரிந்த=அன்புடைய, நல் ஒழுக்கம் (ஏ), இரதம்= தேராம், ஒத்து இவை=இவற்றை யடைந்து, கோபம், காமம், ஆதிய=முதலிய தீக்குணங்களை, மாய்த்து = ஒழித்து, ஒன்று உணர் முத்தி ஆசனத்து(ஏ)=முத்தியென்னும் ஆசனத்தி லமர்ந்து சர்வமுந் தானாகிய ஒன்றேயென அறிக. (ஏ, ஏ, ஏ, ஏ, ஏ, ஏ அசைகள்.)

(பொ - ரை) சத்தியம் மதிலாம், பொறுமை அகழாம், சத்துவ குணம் சேனைகளாம், உண்மையான தவம் ஆயுதமாம், நல்ல பாத்திரமானவர்களுக்குக் கொடுத்தல் சூழ்ந்த கோட்டையும் அதன் அங்கங்களுமாம். பத்தி மந்திரியாம், இனிய வார்த்தைகள் கவசங்களாம், அன்புடைய நல்லொழுக்கம் தேராம், இவற்றை யடைந்து கோபம் காமம் முதலிய தீக்குணங்களை ஒழித்து முத்தி யென்னும் ஆசனத்திலமர்ந்து சர்வமுந் தானாகிய ஒன்றேயென அறிக.

அறுசீர் விருத்தம்.

புளகோல் லாச மெனுங்கவசம் புனைந்தா னந்த பாட்பமெனும்
வளமுத் தாரம் பூண்டுபிர மானு பூதி முடிசூடி
அளவில் சுகசிங் காதனத்தி னமர்ந்தே முத்தி காந்தைதனைத்
திளையா நின்ற ஞானியராந் தீர நிருபர்க் கிணையவரே. (கூஅ)

(ப-ரை) புளக=மயிர்க் கூச்செறிதலாகிய, உல்லாசமெனுங் கவசம், புனைந்து=தரித்து, ஆனந்தபாஷ்பம், எனும்=என்கிற, வள=செழித்த, முத்து ஆரம் பூண்டு, பிரம, அனுபூதி=அனுபவ

மான, முடிசூடி, அளவு, இல் = இல்லாத, சுக = சுகமாகிய, சிங்காதனத்தினமர்ந்து (ஏ), முத்தி காந்தை தனை = முத்தி என்கிற பெண்ணை, திளையா நின்ற = அனுபவிக்கின்ற, ஞானியராம் தீர நிருபர்க்கு = ஞானிகளெனும் தீரமுடைய அரசர்க்கு, இணை = சமானம், அவரே = அவரேயாவர். (ஏ, அசை) (பாஷ்பம் = நீர்) (ஆரம் = மாலை) (முடி = கிரீடம்) (ஆதனம் = ஆசனம்.)

(போ - ரை) மயிர்க்கூச்செறிதலாகிய உல்லாசமெனுங் கவசந்தரித்து ஆனந்தபாஷ்ப மென்கிற செழித்த முத்தாரம் பூண்டு பிரம அனுபவமான முடிசூடி அளவில்லாத சுகமாகிய சிங்காதனத்தினமர்ந்து முத்தி என்கிற பெண்ணை அனுபவிக்கின்ற ஞானிகளெனும் தீரமுடைய அரசர்க்குச் சமானம் அவரே யாவர்.

வெண்பா.

அசுத்தமனத் தீயமைச்சா லான்மாவா நல்வேந்
திசைத்தவுயிர்த் தீவேந்தா மீங்கே—விசுத்தமான
நல்லமைச்சாற் சீவ நவைவேந்து மான்மாவாச்
சொல்லியநல் வேந்தாந் துணி. (கூறுகூ)

(ப- ரை) (உ) அசுத்த, மன = மனமென்னும், தீ அமைச்சால் = தீய மந்திரியால், ஆன்மாவாம் = ஆத்மாவாகிய, நல் வேந்து = நல்ல அரசனும், இசைதத = இழிவாகச் சொல்லப்பட்ட, உயிர் = ஜீவனென்கிற, தீ வேந்தாம் = தீய அரசனனவன், (க) ஈங்கு(ஏ) = இவ்வுலகில், விசுத்தமன = மிகுந்த சுத்தமனமென்னும், நல் அமைச்சால் = நல்ல மந்திரியினுல், சீவ = ஜீவனுகிய, நவை வேந்தும் = குற்றமுடைய அரசனும், ஆன்மாவா = கூடஸ்தனென, சொல்லிய = சொல்லப்பட்ட, நல் வேந்தாம் = நல்ல அரசனுவான், துணி = என நிச்சயித்து உணர். (ஏ, அசை.)

(போ - ரை) இவ்வுலகில் அசுத்த மனமென்னுந் தீய மந்திரியால் ஆத்மாவாகிய நல்ல அரசனும் இழிவாகச் சொல்லப்பட்ட ஜீவனென்கிற தீய அரசனனவன், மிகுந்த சுத்த மனமென்னும் நல்ல மந்திரியினுல் ஜீவனுகிய குற்றமுடைய அரசனும் கூடஸ்தனெனச் சொல்லப்பட்ட நல்ல அரசனுவானென நிச்சயித்து உணர்.

அறுசீர் விருத்தம்.

தீயவியல் வாசனைச்சத் துருமறையா தேவெளியாத்
தென்படுங்கால்
ஆயிடையக் கணமேயீ திக்குணமன் றேவெனச்சுட்
டதுநின் வீரம்
ஓயுமித னலந்தப் பகைவலிபின் னின்னைநனி
யுணர்தலாய
தூயநல்வா சனைப்படையான் மாய்த்திடுபல் காலுமுயர்
சூழ்ச்சி யீதே. (கசo)

(ப-ரை) (க) தீய, இயல் = தன்மையுடைய, வாசனை = வாசனை யாகிய, சத்துரு = பகைவன், மறையாது(ஏ) = மறையாமல், வெளியா = வெளியாக, தென்படுங்கால் = தோற்றும் பொழுது, ஆயிடை = அவ்விடத்தில், அக்கணமே = அந்த க்ஷணத்திலேயே, ஈது = இது, இக்குணம், அன்றே = அல்லவா, எனச்சுட்டு = எனக் குறித்துப் பார், அது = அதுவே, நின்வீரம் = உனது வீரத் தன்மை யாம், ஓயும் இதனல் அந்தப்பகை வலி = இதனலே அப்பகைவனது வலிமை தளர்ந்து போம், பின் = பிற்பாடு, (௩) நின்னை = சாக்ஷி மாத்திரமாகிய உன்னை, நனி = நன்றாய், உணர்தல் ஆய = உணர்த லாகிய, தூய = பரிசுத்தமான, நல்வாசனைப் படையால் = நல்ல வாசனை யென்னும் ஆயுதத்தினல், மாய்த்திடு = அத்தீய வாசனை யாகிய பகைவனைக் கொல்வாய், (உ) பல்காலும் = பல தரமும், (ச) உயர் சூழ்ச்சி ஈதே = இதுவே மேலான உபாயமாம். (ஏ, அசை.)

(போ-ரை) தீய தன்மையுடைய வாசனையாகிய பகைவன் மறை யாமல் வெளியாகத் தோற்றும்பொழுது அவ்விடத்தில் அந்த க்ஷணத்திலேயே இது இக்குணமல்லவாவெனக் குறித்துப் பார் அதுவே உனது வீரத்தன்மையாம் இதனலே அப்பகைவனது வலிமை தளர்ந்துபோம் பிற்பாடு பலதாமும் சாக்ஷிமாத்திரமாகிய உன்னை நன்றாய் உணர்தலாகிய பரிசுத்தமான நல்ல வாசனை என் னும் ஆயுதத்தினல் அத்தீய வாசனையாகிய பகைவனைக்கொல்வாய் இதுவே மேலான உபாயமாம்.

### வெண்பா.

விந்தைச் சிவசொருப மேவாது மேவியுயிர்
பந்தம் விடாதுவிடு பண்புவன—மைந்தன்
இராசசுத னாகி யிசைவேடத் தன்மை
விராவா தொழித்த விதம். (கசக)

(ப-ரை) (உ) விந்தை=அற்புதமான, சிவ, சொருபம்=சொரூபத்தை, மேவாது மேவி=அடையாது அடைந்து, (க) உயிர்=சீவனானவன், (ரு) பந்தம்=பந்தத்தை, விடாது விடு=நீங்காது நீங்கிய, பண்பு=இயல்போ, வனமைந்தன்=வேடப் பிள்ளையானவன், இராசசுதன் ஆகி=இராச புத்திரனாகி, இசைவேடத் தன்மை=பொருந்திய வேடத் தன்மையை, விராவாது=சம்பந்தியாமல், ஒழித்த விதம்=விட்ட வகையாம்.

(பொ-ரை) சீவனானவன் அற்புதமான சிவ சொரூபத்தை அடையாது அடைந்து பந்தத்தை நீங்காது நீங்கிய இயல்போ, வேடப் பிள்ளையானவன் இராஜ புத்திரனாகிப் பொருந்திய வேடத் தன்மையைச் சம்பந்தியாமல் விட்டவகையாம்.

### கட்டளைக் கலித்துறை.

ஈசுர பத்திப்பொன் னான்முத்தி யிட்ட மெழிற்குருவின்
நேசநல் லான்கொண்டு ஞான முதநூ னெறியின்விசு
வாச மெனும்பூ வளத்தால் விவேக மகாவிளைவு
மாசறப் பெற்றுண் மகிழ்பவர்மூவகை வைசியரே. (சசஉ)

(ப-ரை) ஈசுர பத்தி=ஈசுவர பக்தி யென்னும், பொன்னால், முத்தி இட்டம்=முத்தியாகிய இஷ்ட பதார்த்தத்தையும், எழில்=மேலான, குருவின், நேச=பக்தி யென்கிற, நல் ஆன் கொண்டு=நல்ல பசுவினால், ஞான அமுதம்=ஞானமாகிய பாலையும், நூல் நெறியின்=சாஸ்திர மார்க்கத்தின், விசுவாசமெனும், பூவளத்தால்=பூமியின் திருத்தத்தால், விவேகம்=விவேக மென்கிற, மகா விளைவு=உயர்ந்த விளைவையும், மாசு அற=குற்றமற, பெற்று, உள்=உள்ளத்தில், மகிழ்பவர், மூவகை, வைசியர் (ஏ) = வைசியராவார். (ஏ, அசை.)

(போ - ரை) ஈசுவர பக்தி யென்னும் பொன்னால் முத்தியாகிய இஷ்ட பதார்த்தத்தையும் மேலான குருவின் பக்தி யென்கிற நல்ல பசுவினால் ஞானமாகிய பாலையும் சாஸ்திர மார்க்கத்தின் விசுவாச மெனும் பூமியின் திருத்தத்தால் விவேக மென்கிற உயர்ந்த விளைவையுங் குற்றமறப் பெற்று உள்ளத்தில் மகிழ்பவர் மூவகை வைசியராவர்.

சீவ பரசிவ சாக்கிரஞ் சொப்பனந் திண்சுழுத்தி
ஆவ வவத்தையொன் பானுங் கடந்த வவத்தையதாப்
பாவு சிவதுரி யத்தின் விளங்கும் பரப்பிரமம்
தாவி லொளிசெய்பத் தாவது மாற்றுத் தனித்தங்கமே.(௧௪௯)

(ப - ரை) சீவ பரசிவ = ஜீவன் ஈசுவரன் குரு என்னும் மூவருக்குரிய, சாக்கிரம் = சாக்கிரங்களும், சொப்பனம் = சொப்பனங்களும், திண்சுழுத்தி = திடமான சுழுத்திகளும், ஆவ = ஆகிய, அவத்தைஒன்பானும் = ஒன்பது அவஸ்தைகளையும், கடந்த, அவத்தை (அது) ஆ = பத்தாவது அவஸ்தையாக, பாவு = வியாபித்த, சிவ = குரு, துரியத்தின் விளங்கும் பரப் பிரமம், தாஇல் = கேடில்லாத, ஒளி செய் = பிரகாசம் வீசுகின்ற, பத்தாவது மாற்றுத் தனித் தங்கம்(ஏ) = ஒப்பற்ற பத்தாவதுமாற்றுத் தங்கமாம். (அது, சாரியை) (ஏ, அசை) (சிவம் எனினும் குருவெனினும் ஒக்கும்,)

(போ - ரை) ஜீவன் ஈசுவரன் குரு என்னும் மூவருக்குரிய சாக்கிரங்களும் சொப்பனங்களும் திடமான சுழுத்திகளும் ஆகிய ஒன்பது அவஸ்தைகளையுங் கடந்த பத்தாவது அவஸ்தையாக வியாபித்த குரு துரியத்தின் விளங்கும் பரப்பிரமம் கேடில்லாத பிரகாசம் வீசுகின்ற ஒப்பற்ற பத்துமாற்றுத் தங்கமாம்.

தாளந் துகிர்புட்ப ராகமுங் கோமே தக நீல நன்
மரகதம் வைடூ ரியஞ்சுடர் மாணிக்க மன்வயிரம்
சிரவணந் தாசியங் கீர்த்தனை யர்ச்சனை சேவையுடன்
நிரல்வந் தனையெண்ணங் தோழமை யான்ம நிவேதனமே.
(௧௫௦)

(ப - ரை) தரளம் = முத்து, துகிர் = பவளம், புட்பராகம்(உம்), கோமேதகம், நீலம், நல் = நல்ல, மரகதம், வைடூரியம், சுடர் = பிரகாசிக்கின்ற, மாணிக்கம், மன் = நிலைத்த, வயிரம் = வயிரம் என்னு

மிவ்வொன்பது இரத்தினங்களும் முறையே, சிரவணம் = கேள்வி, தாசியம் = அடிமைத் தன்மை, கீர்த்தனை, அர்ச்சனை, சேவை (உடன்) = வழிபாடு, நிரல் = ஒழுங்கான, வந்தனை = நமஸ்காரம், எண்ணம் = தியானம், தோழமை, ஆன்ம = ஆத்ம, நிவேதனம்(ஏ) = நிவேதன மென்னும் இந் நவவித பக்திகளாம். (உம், இடைச் சொல்) (உடன் மூன்றும் வேற்றுமை யுருபு) (ஏ, அசை) (ஆத்ம நிவேதனம் = தன்னை ஈசுவரனுக்கு அர்ப்பணஞ் செய்தல்.)

(போ - ரை) முத்து பவளம் புஷ்பராகம் கோமேதகம் நீலம் நல்ல மரகதம் வைடூரியம் பிரகாசிக்கின்ற மாணிக்கம் நிலைத்த வயிரம் என்னுமிவ் வொன்பது இரத்தினங்களும் முறையே கேள்வி அடிமைத் தன்மை கீர்த்தனை அர்ச்சனை வழிபாடு ஒழுங்கான நமஸ்காரம் தியானம் தோழமை ஆத்ம நிவேதன மென்னும் நவவித பக்திகளாம்.

### எண்சீர் விருத்தம்.

பிரமவிசா ரஞ்சவண மதனப்பி யாசம்
பெட்படிமைப் பண்பாகு மதுசற்சிற் சுகமாம்
உருவெனநிச் சயித்திடுதல் கீர்த்தனைசங் கற்பம்
ஒருங்குமதிற் சேர்த்தலருச் சனையதனை யறிதல்
வரமருவு சேவையதில் விர்த்திதனை யொடுக்கல்
வந்தனையா மதனையனு பவித்தலத னெண்ணம்
குருவதுநா னதுவென் றுணர்வதுதோ ழமையாம்
கூடத்த ரதுவாய்ப்போங் குறியான்மாற் பணமே. (௧௫௫)

(ப - ரை) பிரமவிசாரம், சவணம் = சிரவணமாம், அதன் = அப்பிரமத்தின், அப்பியாசம், பெட்பு = அன்பான, அடிமைப் பண்பு = அடிமைத் தன்மை, ஆகும், அது = அப்பிரமம், சற்சிற்சுகம் ஆம் = சச்சிதானந்த, உருவென = வடிவமென, நிச்சயித்திடுதல், கீர்த்தனை = கீர்த்தனையாம், சங்கற்பம், ஒருங்கும் = எல்லாம், அதில் சேர்த்தல் = அப்பிரமத்திற் சேர்த்தல், அருச்சனை = அர்ச்சனையாம், அதனை அறிதல், வரமருவு = மேன்மை பொருந்திய, சேவை = சேவையாம், அதில், விர்த்திதனை = விர்த்திகளை, ஒடுக்கல், வந்தனையாம், அதனை அனுபவித்தல், அதன், எண்ணம் = தியானமாம், குரு = பெருமை பொருந்திய குருவாகிய, அது நான் நான் அது

என்று உணர்வது, தோழமை ஆம், கூடத்தர்=ஆத்மா, அது வாய்ப்போம் குறி=பிரமமாகி விடுகிற நிலைமை, ஆன்ம அற்பணம் (ஏ =ஆத்ம நிவேதனமாம். (அது=பிரமம்) (நான்=ஆத்மா= கூடஸ்தர்) (ஏ, அசை.)

(போ - ரை) பிரம விசாரம் சிரவணமாம் அப்பிரமத்தின் அப்பியாசம் அன்பான அடிமைத் தன்மையாகும் அப்பிரமம் சச்சிதானந்த வடிவமென நிச்சயித்திடுதல் கீர்த்தனையாம் சங்கற்பமெல்லாம் அப்பிரமத்திற் சேர்த்தல் அர்ச்சனையாம் அதனை அறிதல் மேன்மை பொருந்திய சேவையாம் அதில் விர்த்திகளை ஒடுக்கல் வந்தனையாம் அதனை அனுபவித்தல் அதன் தியானமாம் பெருமை பொருந்திய குருவாகிய அது நான், நான் அது என்று உணர்வது தோழமையாம் ஆத்மா பிரமமாகிவிடுகிற நிலைமை ஆத்ம நிவேதனமாம்.

### கலி விருத்தம்.

சாந்த நீர்மை தனித்த விரசிதம்
காந்தி ஞானங் கனக முபரதி
வாய்ந்த நன்னார் மடிவயி ராக்கியம்
ஏய்ந்த பட்டுடை யென்ன வறிகவே. (கசகூ)

(ப - ரை) சாந்த, நீர்மை=குணம், தனித்தவிரசிதம்=சுத்தமான வெள்ளியாம், காந்தி=விளங்குகிற, ஞானம் கனகம்=பொன்னும், உபரதி, வாய்ந்த=பொருந்திய, நல் நார்மடி=நல்ல நார்மடியாம், வயிராக்கியம், ஏய்ந்த = சேர்ந்த, பட்டு, உடை = வஸ்திரமாம், என்ன=என்று, அறிக(ஏ)=அறிந்து கொள்க (ஏ, அசை.)

(போ - ரை) சாந்த குணம் சுத்தமான வெள்ளியாம், விளங்குகிற ஞானம் பொன்னும், உபரதி பொருந்திய நல்ல நார்மடியாம், வயிராக்கியம் சேர்ந்த பட்டு வஸ்திரமாம் என்று அறிந்துகொள்க.

வேத மாமளி கைக்கண் விரும்பிய
தேது முண்டெச மானவ னீச்சுரன்
வாதமில்விசு வாச மெனும் பொருள்
ஈதல் செய்பவர் யாவையு மெய்துவார். (கசஎ)

(ப - ரை) வேதம், ஆம் = ஆகிய, மளிகைக்கண் = மளிகைக் கடையில், விரும்பியது ஏதும் = விரும்பிய எந்த வஸ்துவும், உண்டு, எசமான் (அவன்), ஈச்சுரன் = ஈசுவரனும், வாதம் இல் = கலகமற்ற, விசுவாசமெனும், பொருள் = பொருளை, ஈதல் செய்பவர் = கொடுப்பவர், யாவையும் = வேண்டிய யாவையும், எய்துவார் = அடைவார். (அவன், சொல்லுருபு.)

(போ - ரை) வேதமாகிய மளிகைக் கடையில் விரும்பிய எந்த வஸ்துவும் உண்டு எசமான் ஈசுவரனும், கலகமற்ற விசுவாசமெனும் பொருளைக் கொடுப்பவர் வேண்டிய யாவையும் அடைவார்.

வஞ்சி விருத்தம்

பிரமானு பவத்தொளி பெற்றோர்
திரஞான தியான வியோகர்
பரமாகிய பத்தர்த மேவல்
சிரசானனி செய்பவர் நல்லோர். (௧௬௭)

(ப - ரை) பிரம, அனுபவத்து ஒளி = அனுபவ விளக்கத்தை, பெற்றோர் = பெற்றவராகிய பிராமணர், திர = நிலையான, ஞான = ஞான சாதனமாகிய, தியான வியோகர் = தியான யோகத்தையுடையோரென்னும் க்ஷத்திரியர், பரமாகிய = மேலாகிய, பத்தர் (தம்) = பக்தர்களான வைசியர் என்கிற இவர்களின், ஏவல் = ஏவலை, சிரசால் = தலை வணக்கத்துடன், நனி = நன்றாக, செய்பவர் = செய்பவரான சூத்திரர் அம்மூவர் பெறும் பலனைத் தாமும் பெற்று மகிழ்வார் ஆதலால், நல்லோர் = நல்லோராவர். (தம், சாரியை.)

(போ - ரை) பிரம அனுபவ விளக்கத்தைப் பெற்றவராகிய பிராமணர் நிலையான ஞான சாதனமாகிய தியான யோகத்தையுடையொரென்னும் க்ஷத்திரியர் மேலாகிய பக்தர்களான வைசியர் என்கிற இவர்களின் ஏவலைத் தலைவணக்கத்துடன் நன்றாகச் செய்பவரான சூத்திரர் அம்மூவர்பெறும் பலனைத் தாமும் பெற்று மகிழ்வார் ஆதலால் நல்லோராவர்.

மங்களகர மன்னு சிவத்திற்
பங்கமதறு பற்றினர் சைவர்
எங்கணுநிகழ் விட்டுணு வின்கண்
தங்குறுபவர் வைணவர் தாமே. (கசகூ)

(ப - ரை) மங்களகரம் = மங்களத்தன்மை, மன்னு = நிலைத்த, சிவத்தில், பங்கம் (அது) அறு = பிறிவற்ற, பற்றினர் = சம்பந்தமுடையவர், சைவர் = சைவராவார், எங்கணும் நிகழ் = சர்வ வியாபகமாக விளங்கும், விட்டுணுவின்கண் = அந்த விஷ்ணுவினிடத்து, தங்குறுபவர் = பொருந்தினவர், வைணவர் (தாம்) (ஏ) = வைணவராவார். (அது, சொல்லுருபு) (தாம், சாரியை) (ஏ, அசை.)

(போ - ரை) மங்களத்தன்மை நிலைத்த சிவத்தில் பிறிவற்ற சம்பந்தமுடையவர் சைவராவார். சர்வ வியாபகமாக விளங்கும் அந்த விஷ்ணுவினிடத்துப் பொருந்தினவர் வைணவராவார்.

## கலி விருத்தம்.

சுத்த சைவர் துரிய சொரூபம்யாம்
முத்த னுக்களு மன்றெனு முத்தரே
அத்தி யூனுரி யாகு முடம்பினை
நத்தி யானென நண்ணிற் புலையரே. (கரு0)

(ப - ரை) (ச) சுத்த, சைவர் = சைவராவார், (உ) துரிய, சொரூபம் = சொரூபமே யாம், (க) முத்தனுக்களும் = மூன்று சரீரங்களும் அன்று = யாமல்ல, (ங) எனும், முத்தர் (ஏ) = சீவன் முத்தர் (ரு) அத்தி = எலும்பு, ஊன் = தசை, உரிதோல் முதலியவை, ஆகும் உடம்பினை, நத்தி = விரும்பி, யானென, நண்ணில் = நிச்சயித்துக் கொண்டால் அவர், புலையர் (ஏ) = நீசராவார். (ஏ, ஏ, அசைகள்.)

(போ - ரை) மூன்று சரீரங்களும் யாமல்ல துரிய சொரூபமே யாம் எனும் சீவன் முத்தர் சுத்த சைவராவார். எலும்பு தசை தோல் முதலியவையாகும் உடம்பினை விரும்பி யானென நிச்சயித்துக்கொண்டால் அவர் நீசராவார்.

### அறுசீர் விருத்தம்.

சிற்குண விபுதர் சார்பாய்ச் சிறந்தஞா னப்பி யாச
வற்பினர் பசுக்கள் யோக மார்க்கர்கா ரான்கள் பத்தர்
பொற்புடை யசங்கள் பந்தம் போக்கியே விதேக முத்தி
பிற்பெறு சகச ஞானப் பெருமையா ரியர்கோ பாலர். (கருக)

(ப - ரை) சிற்குண விபுதர் = ஞான குணங்களாகிய தேவர்கள், சார்பாய் = தங்குமிடமாகி, சிறந்த = சிறப்புற்ற, ஞான அப்பியாச, வற்பினர் = உறுதியுடையோர், பசுக்கள் = பசுக்களாம், யோக, மார்க்கர் = மார்க்கத்தோர், காரான்கள் = எருமைகளாம், பத்தர் = பக்தர்கள், பொற்புடை = நல்ல, அசங்கள் = ஆடுகளாம், பந்தம் = இப்போது பந்தத்தை, போக்கி(ஏ) = நீக்கிச் சீவன் முத்தர்களாய், விதேக, முத்தி = முத்தியை, பின்பெறு = பின்பு அடைகின்ற, சகச, ஞான = ஞானமெனும், பெருமையார் = பெருந்தன்மை யுடையோர், இயல் = பொருந்திய, கோபாலர் = இடையராவார். (ஏ, அசை.)

(பொ - ரை) ஞான குணங்களாகிய தேவர்கள் தங்குமிடமாகிச் சிறப்புற்ற ஞான அப்பியாச உறுதியுடையோர் பசுக்களாம், யோக மார்க்கத்தோர் எருமைகளாம், பக்தர்கள் நல்ல ஆடுகளாம் இப்போது பந்தத்தை நீக்கிச் சீவன் முத்தர்களாம் விதேக முத்தியைப் பின்பு அடைகின்ற சகச ஞானமெனும் பெருந்தன்மை யுடையோர் பொருந்திய இடையராவார்.

### வஞ்சி விருத்தம்.

உடலை யானென வூனுணல்—நடைய றுமன நானெனல்
படியி லாசவ பானமிந்—நெடுமை யோருயிர் நீசரே. (கருஉ)

(ப - ரை) (உ) உடலை யானெனல், ஊன் உணல் = மாமிசம் புசித்தலாம், நடை அறு = அசைவு ஒழியாத, மனம் நானெனல், (க) படியில் = இப்பூமியில் குணமில்லாத, (ங) ஆசவ பானம் = கள் குடியாம், இந்நெடுமையோர் = இப் பெருங் குற்றத்தை யுடையோர், உயிர் = சீவரெனும், நீசர்(ஏ) கீழ் மக்களாம். (ஏ, அசை.)

(பொ - ரை) இப்பூமியில் குணமில்லாத உடலை யானெனல் மாமிசம் புசித்தலாம் அசைவு ஒழியாத மனம் நானெனல் கள் குடியாம் இப்பெருங் குற்றத்தை யுடையோர் சீவரெனும் கீழ் மக்களாம்.

கட்டளைக் கலித்துறை.

யானென தென்பவை யாவையு மீசனுக் கீதலறம்
ஆன திரிசியத் தைப்பொரு ளாவறி யாமைபொருள்
ஈனுலக கத்தின்ப துன்பமு நீங்குவ தின்பநிலை
மேனிலனைத்தும்விட் டேனென லும்விடல் வீடதுவே. (கருரூ)

(ப - ரை) யான் எனது என்பவை யாவையும் ஈசனுக்கு ஈதல்= அர்ப்பணஞ் செய்தல், அறம்=அறமாம், ஆன=எதிர்ப்பட்ட, திரியத்தை = தோற்றங்களை, பொருள் ஆ = ஓர் பொருளாக, அறியாமை=அறியா உதாசீனத் தன்மை, பொருள்=பொருளாம், ஈன் =பெறுகின்ற, உலகத்து=உலகத்தில், இன்ப துன்பமும்=இன்ப துன்பங்களின், நீங்குவது=வசப்படாமை, இன்ப நிலை=இன்பமாம், மேல் நில்=மேலாக நிற்கும், அனைத்தும்=அனைத்தையும், விட்டேன், எனலும்=என்னும் நினைவையும், விடல், வீடு (அது) (ஏ)=வீடாம்.

(அது, சொல்லுருபு) (ஏ, அசை.)

(பொ - ரை) யான் எனது என்பவை யாவையும் ஈசனுக்கு அர்ப்பணஞ் செய்தல் அறமாம். எதிர்ப்பட்ட தோற்றங்களை ஓர் பொருளாக அறியா உதாசீனத் தன்மை பொருளாம். பெறுகின்ற உலகத்தில் இன்ப துன்பங்களின் வசப்படாமை இன்பமாம். மேலாக நிற்கும் அனைத்தையும் விட்டேன் எனும் நினைவையும் விடல் வீடாம்.

அறுசீர் விருத்தம்.

சான்றாய் நிற்போன் பிரமசாரி யகண்ட விர்த்தி
ஏன்றான் கிரகத் தன்கா ணியனிர் விகற்ப நிட்டை
ஆன்றோன் வானப் பிரத்த னரிய சகச நிட்டா
வான்றான் சந்நியாசி மன்னு மதீதம் வீடே. (கருசு)

(ப - ரை) சான்று ஆய் = சாக்ஷிமாத்திரமாகி, நிற்போன் = இருப்பவன், பிரமசாரி=பிரமசாரியாம், அகண்டவிர்த்தி=எல்லாம் யானே என்னும் அகண்டாகார விர்த்தியை, ஏன்றான்=அடைந்தவன், கிரகத்தன் (காண்)=கிரகஸ்தனும், இயல்=பொருந்திய, நிர்விகற்ப, நிட்டை=நிஷ்டையில், ஆன்றோன்=மிகுந்தவன், வானப்பிரத்தன்=வானப்பிரஸ்தனும், அரியசகச, நிட்டாவான் (தான்)=

நிஷ்டையுடையவன், சந்நியாசி = சந்நியாசியாம், மன்னும் = நிலைத்த அதீதம் = அதீதத் தன்மை, வீடு(ஏ) = மோக்ஷமாம். (காண், முன்னிலையசை) (தா,ன் சாரியை) ஏ, அசை.)

(போ - ரை) சாக்ஷி மாத்திரமாகி இருப்பவன் பிரமசாரியாம், எல்லாம் யானே யென்னும் அகண்டாகார விர்த்தியை அடைந்தவன் கிரகஸ்தனும், பொருந்திய நிர்வி கற்ப நிஷ்டையில் மிகுந்தவன் வானப்பிரஸ்தனும், அரியசகச நிஷ்டையுடையவன் சந்நியாசியாம், நிலைத்த அதீதத் தன்மை மோக்ஷமாம்.

## எழுசீர் விருத்தம்.

தனுவையா னெனும்பெண் போகமற் றவற்றைத்
  தனதெனு மன்னிய போக
நினைவொழித் தெதிர்தோற் றங்களா மனைக
  ணின்று தன் னுணர்வெனும் பயிக்கம்
இனிதுகொண் டுளவாப் பிரமமா ராய்த
  லெனுங்குரு பரன்பணி யியற்றித்
தினமுமான் மாவை யேயனு சந்தித்
  திடுதல்வே தாத்யய னந்தான். (கருரு)

(ப - ரை) தனுவை = சரீரத்தை, யானெனும் பெண், போகம் = போகமும், மற்றவற்றை, தனது = எனது, எனும், அன்னிய = வேறு, போகம் = போகமும், ஆகிய, நினைவு ஒழித்து = நினைவுகளை விட்டு, எதிர் = எதிர்ப்படுகிற, தோற்றங்கள், ஆம் = என்கிற, மனைகள் நின்று = வீடுகளிலிருந்து, தன் உணர்வு = தன்னை யறிதல், எனும், பயிக்கம் = பிச்சையை, இனிது கொண்டு = பிரியமாயேற்று உள ஆ = உள்ளவாறு, பிரமம் = பிரமத்தை, ஆராய்தல் எனும், குரு பரன் பணி = மேலான குருவின் ஏவலை, இயற்றி = செய்து, தினமும் = எப்போதும், ஆன்மாவையே, அனுசந்தித்திடுதல் = தியானித்தலாகிய, வேதாத்யயனம் = வேதமோதுதல் பிரமசாரியின் செயலாம். (தான், சாரியை.)

(போ - ரை) சரீரத்தை யானெனும் பெண் போகமும், மற்றவற்றை எனது எனும் வேறு போகமும் ஆகிய நினைவுகளைவிட்டு எதிர்ப்படுகிற தோற்றங்களென்கிற வீடுகளிலிருந்து தன்னை யறி

தல் எனும் பிச்சையைப் பிரியமா யேற்று உள்ளவாறு பிரமத்தை ஆராய்தலெனும் மேலான குருவின் ஏவலைச் செய்து எப்போதும் ஆன்மாவையே தியானித்தலாகிய வேதமோதுதல் பிரமசாரியின் செயலாம்.

வெண்பா.

வித்தை நிதியகண்ட விர்த்திமனை யாள்சீவன்
முத்திவீ டாகு முதுதுரியம்—புத்திரராம்
சாத்தீகப் பண்பு தழுவுமுற விவ்வண்ணம்
வாய்த்தோனே யில்வாழ்ப வன். (கஙசு)

(ப - ரை) வித்தை நிதி = ஞானம் திரவியமாம், அகண்ட = அகண்டாகார, விர்த்தி, மனையாள் = மனைவியாம், சீவன் முத்தி, வீடு ஆகும் = வீடாம், முது = எப்போதும் உள்ளதாகத் தோற்றுகிற, துரியம், புத்திரராம், சாத்வீகப் பண்பு = சாத்துவீக குணங்கள், தழுவும் உறவு = சூழும் பந்துக்களாம், இவ்வண்ணம், வாய்த்தோனே = பொருந்தப் பெற்றவனே, இல் வாழ்பவன் = இல்லறத்தில் வாழ்பவனும்,

(போ - ரை) ஞானம் திரவியமாம், அகண்டாகார விர்த்தி மனைவியாம், சீவன் முத்தி வீடாம், எப்போதும் உள்ளதாகத் தோற்றுகிற துரியம் புத்திரராம், சாத்வீக குணங்கள் சூழும் பந்துக்களாம் இவ்வண்ணம் பொருந்தப் பெற்றவனே இல்லறத்தில் வாழ்பவனும்.

அறிவுமகள் சூக்குமமே யாதல் வளர்வாம்
உறுபிரம வான்ம வுணர்ச்சி—செறிதனங்கள்
பூன்ற சுபானுபவம் புட்பித் திடுநிதம்பம்
வான்றிகழு மான்மா மகன். (கஙஎ)

(ப - ரை) அறிவு, மகள் = பெண்ணும், சூக்குமம் (ஏ) = ஸ்தூலத் தன்மை விட்டுச் சூட்சுமம், ஆதல், வளர்வாம் = வளர்ச்சியாம், உறு = சமானங்களாகப் பொருந்திய, பிரம ஆன்ம உணர்ச்சி = பிரமம் ஆத்மா வென்னும் இவற்றின் உணர்வு, செறி தனங்கள் = நெருங்கிய ஸ்தனங்களாம், பூன்ற = பூரணமான, சுபானுபவம், புட்பித்திடும் = பக்குவமடைந்த, நிதம்பம் = பெண்குறியாம், வான் றிகழும் = பெருமையுற்ற, ஆன்மா = தான், மகன் = புருஷனும், (ஏ, அசை.)

(போ - ரை) அறிவு பெண்ணும், ஸ்தூலத் தன்மைவிட்டுச் சூட்சுமமாதல் வளர்ச்சியாம், சமானங்களாகப் பொருந்திய பிரமம் ஆத்மாவென்னும் உணர்வு நெருங்கிய ஸ்தனங்களாம் பூரணமான சுவானுபவம் பக்குவமடைந்த பெண்குறியாம் பெருமையுற்ற தான் புருஷனும்.

எண்சீர் விருத்தம்.

சீவர்மட வார்கர்த்தா போக்தாநா னெனல்கால்
செறியான்ம ஞானமது பகமனது மருங்குல்
பூவுறக்கங் குதஞ்சோம்பல் புறமறதி கூந்தல்
புத்திமுகங் குணதோஷ விவேகங்க ணயனம்
ஓவினிதா னங்கள்செவி கவனிப்பு நாசி
யோசனைவாய் நினைவுமிட றுற்சாக மார்பு
பாவயிராக் கியம்விரத்தி தனங்களியா னெனதென்
பனகரஞ்சிந் தனையுதரம் பகருறைகற் பனையே. (கரு௪)

(ப - ரை) (உ) சீவர், மடவார்=பெண்களாம், கர்த்தா=செய்கிறவனும், போக்தா=அனுபவிக்கிறவனும், நான் எனல், கால்=பாதங்களாம், செறி=பொருந்திய, ஆன்ம ஞானம்(அது)=தன் அறிவு, பகம்=குறியாம், மனது=உள்ளம், மருங்குல்=இடையாம், (க) பூ=பூமியில், (ஙு) உறக்கம்=நித்திரை, குதம்=மலத் துவாரமாம், சோம்பல், புறம்=முதுகாம், மறதி, கூந்தல்=கூந்தலாம், புத்தி, முகம்=முகமாம், குண தோஷ=குணத்தையும் குற்றத்தையும் ஆராய்கிற, விவேகங்கள், நயனம்=கண்களாம், ஓவு இல்=ஓய்வில்லாத, நிதானங்கள், செவி=செவிகளாம், கவனிப்பு கவனித்தல், நாசி=மூக்காம், யோசனை, வாய்=வாயாம், நினைவு, மிடறு=கழுத்தாம், உற்சாகம், மார்பு=மார்பாம், பா=விசாலமான வயிராக்கியம்=வெளியில் விட்டுவிடுதலும், விரத்தி=உள்ளத்தில் விடுதலும், தனங்கள்=ஸ்தனங்களாம், யான் எனது, என்பன, கரம்=கைகளாம், சிந்தனை, உதரம்=வயிறும், பகர் உரை கற்பனை(ஏ)=கற்பனை பேசுகின்ற பேச்சாம். (அது, சாரியை) (ஏ, அசை.)

(போ - ரை) பூமியில் சீவர் பெண்களாம், செய்கிறவனும் அனுபவிக்கிறவனும் நான் எனல் பாதங்களாம், பொருந்திய தன் அறிவு குறியாம், உள்ளம் இடையாம், நித்திரை மலத்துவாரமாம், சோம்

பல் முதுகாம், மறதி கூந்தலாம், புத்தி முகமாம், குணத்தையும் குற்றத்தையும் ஆராய்கிற விவேகங்கள் கண்களாம், ஓய்வில்லாத நிதானங்கள் செவிகளாம், கவனித்தல் மூக்காம், யோசனை வாயாம், நினைவு=கழுத்தாம், உற்சாகம் மார்பாம், விசாலமான வெளியில் விட்டுவிடுதலும் உள்ளத்தில் விடுதலும் ஸ்தனங்களாம், யான் எனது என்பன கைகளாம், சிந்தனை வயிறும், கற்பனை பேசுகின்ற பேச்சாம்.

அறுசீர் விருத்தம்.

நினைப்புமறப் பிருகுறங்கின் மேனுப்ப ணிகழறிவா
நிதம்ப மொன்றே
சனிப்புமரிப் பின்பமிட ரிச்சைவெறுப் பறம்பாவந்
தாழ்ச்சி மேன்மை
பனிப்புமகிழ் மறைவுவெளி யழகுகுரூ பம்பகர்தல்
பகரொ ணுதாய்த்
தனிற்பிறிதின் றென்னுமுரோ மச்செறிவி னெடுமுதிர்வாய்ச்
சருவ மாமே. (கடுகூ)

(ப - ரை) நினைப்பு மறப்பு=நினைப்பு மறப்பாகிய, இரு குறங்கின்=இரண்டு தொடைகளின், மேல் நாப்பண்=மேற்பாகத்தின் மத்தியில், நிகழ் அறிவு ஆம்=விளங்குகிற அறிவென்னும், நிதம்பம்=குறி, ஒன்றே, சனிப்பு மரிப்பு=இறப்புப் பிறப்பும், இன்பம், இடர்=துன்பமும், இச்சை, வெறுப்பு=வெறுப்பும், அறம்=புண்ணியம், பாவம்=பாவமும், தாழ்ச்சி=சிறுமை, மேன்மை=பெருமையும், பனிப்பு=பயம், மகிழ்=மகிழ்வும், மறைவு, வெளி=வெளிப்படையும், அழகு, குரூபம்=விகார வடிவும், பகர்தல்=சொல்லுதல், பகரொணுது=சொல்லக்கூடாததும், ஆய்=ஆகி, தனில்=தன்னைத் தவிர, பிறிது இன்று=வேறில்லை, என்னும், உரோமச் செறிவினெடு = உரோமத்தின் அடர்ச்சியுடையதாய், முதிர்வு ஆய்=முதிர்ந்து தளர்ச்சியாய் இவ்வாறு, சருவம் ஆம் (ஏ)=சர்வமுமாய் விளங்கும். (ஏ, அசை.)

(பொ-ரை) நினைப்பு மறப்பாகிய இரண்டு தொடைகளின் மேற்பாகத்தின் மத்தியில் விளங்குகிற அறிவென்னும் குறி ஒன்றே இறப்புப் பிறப்பும் இன்பம் துன்பமும் இச்சை வெறுப்பும் புண்

ணியம் பாவமும் சிறுமை பெருமையும் பயம் மகிழ்வும் மறைவு வெளிப்படையும் அழகு விகாரவடிவும் சொல்லுதல் சொல்லக்கூடா ததுமாகித் தன்னைத்தவிர வேறில்லை என்னும் உரோமத்தின் அடர்ச் சியுடையதாய் முதிர்ந்து தளர்ச்சியாய் இவ்வாறு சர்வமுமாய் விளங்கும்.

### கலி விருத்தம்.

பருவ மின்னின் படிவைப் புமானனி
புரிய மின்னும் புமானணி நத்துதல்
வருமு மூட்சு வடிவைப் பரன்பர
னுருவை வேட்ட வுயர்ந்த முமூட்சுவே. (கசூo)

(ப-ரை) (க) பருவ மின்னின்=பக்குவமான பெண்ணின், படிவை=உருவத்தை, புமான்=புருடன், நனி=மிகவும், புரிய= விரும்ப, மின்னும்=அப்பெண்ணும், புமான்=புருடனது, அணி, =அழகை, நத்துதல்=விரும்புதல், வரும்=மேல் நிலைக்கு வரும், முமூட்சுவடிவை=முமூட்சுவின் இயல்பை, பரன்=குருவானவர் விரும்ப, (ரூ) பரன் உருவை=குருவின் இயல்பை, வேட்டல்= விரும்புதலாம், (உ) உயர்ந்த முமூட்சு(ஏ)=மேலான அந்த முமூட் சுவும். (ஏ, அசை).

(பொ-ரை) பக்குவமான பெண்ணின் உருவத்தைப் புருடன் மிகவும் விரும்ப அப்பெண்ணும் புருடனது அழகை விரும்புதல், மேல்நிலைக்குவரும் முமூட்சுவின் இயல்பைக் குருவானவர் விரும்ப மேலான அந்த முமூட்சுவும் குருவின் இயல்பை விரும்புதலாம்.

### வெண்பா.

அன்னியமில் லாதிருப்ப வன்னியம்யா வைக்குமியான்
மன்னுகரி யென்னின் மகான்மற்றோ—ரின்னகலல்
காதலனைச் சாராத காலையினும் பூப்புனி
மீதுறிற்றீண் டாமைமகண் மெய். (கசூக)

(ப-ரை) (க) அன்னியம், இல்லாது இருப்ப=இல்லாமலிருக்க அன்னியம் யாவைக்கும் யான், மன்னுகரி என்னின்=நிலைத்த சாக்ஷி யென்றால், மகான் மற்றோரின்=அவ்வப்பியாசி முத்தர் பெத்தர்களிலிருந்து, அகலல்=வேறுதல், காதலனை=கணவனை,

சாராதகாலையினும்=சேராத காலத்திலும், பூப்பு, நனிமீது உறில்= நன்ருக மிகப் பெற்ருல், (ங) தீண்டாமை=மற்ற பெண்களும் புருஷர்களும் தொடாமையாம், (உ) மகள் மெய்=அப்பெண்ணின் சரீரத்தை.

(போ - ரை) அன்னியமில்லாதிருக்க அன்னியம் யாவைக்கும் யான் நிலைத்த சாக்ஷியென்ருல் அவ்வப்பியாசி முத்தர் பெத்தர்களிலிருந்து வேருதல் கணவனைச் சேராத காலத்திலும் பூப்பு நன்ருக மிகப் பெற்ருல் அப்பெண்ணின் சரீரத்தை மற்றப் பெண்களும் புருஷர்களும் தொடாமையாம்.

கட்டளைக் கலித்துறை.

நனவின் சான்றியா னெனுமுத னளினு நானே
கனவின் சாட்சியென் றிடுமிரண் டாம்பகற் கணும்யான்
இனது யிற்கரி யென்னுமூன் ருந்தினத் திடையும்
புனித மின்றுநான் சுயம்பெனுந் துரியமே புனிதம், (கசுஉ)

(ப - ரை) நனவின்=சாக்கிரத்தின், சான்றுயான்=சாக்ஷி நான் எனும் முதல் நாளினும், நான்(ஏ), கனவின் சாட்சி என்றிடும் இரண்டாம், பகற்கணும்=நாளிலும், யான்=நான், இனதுயிற்கரி =இத்தன்மைய சுழுத்தியின் சாக்ஷி, என்னும் மூன்ரும், தினத் திடையும்=நாளிலும், புனிதம் இன்று=சுத்தமில்லை, நான், சுயம்பு =அன்னியமின்றித் தானுக விளங்குகிற ஞான சொரூபி, எனும் துரியமே=என்னுந் துரியமாகிய நாலாவது நாளிலேயே, புனிதம் =சுத்தமாம்.

(ஏ, அசை) (இன, இன்ன என்பதன் இடைக்குறை) கணும் என்பது கண்ணும் என்பதன் இடைக்குறை.)

(போ - ரை) சாக்கிரத்தின் சாக்ஷி நான் எனும் முதல் நாளிலும் நான் கனவின் சாக்ஷியென்றிடு மிரண்டாம் நாளிலும், நான் இத்தன்மைய சுழுத்தியின் சாக்ஷியென்னும் மூன்ரும் நாளிலும் சுத்தமில்லை நான் அன்னியமின்றித் தானுக விளங்குகிற ஞான சொரூபி எனுந் துரியமாகிய நாலாவது நாளிலேயே சுத்தமாம்.

### வெண்பா.

பேதையே மங்கையுமாய்ப் பின்னி மகிழ்நனேத்தான்
ஓதொணுப் பேத மொழிந்துசுகம்—மீதுறுதல்
சீவனே யான்மாவாய்ச் சேர்ந்து பிரமத்தங்
காவதே சற்சிற்சு கம். (கசரு)

(ப - ரை) பேதையே=சிறு பெண்ணே, மங்கையுமாய்=பருவப் பெண்ணுமாகி, பின்னிமகிழ்நனேத்தான் = தான் கணவனேச் சேர்ந்து, ஓத ஒணு=சொல்லத்தகாத, பேதம் ஒழிந்து, சுகம் மீது உறுதல்=மிகுந்த சுகமடைதல், சீவனே, ஆன்மாவாய்=கூடஸ்தராகி, சேர்ந்து பிரமத்து=பிர்மத்தை யடைந்து, (அங்கு), ஆவது (ஏ) சற்சிற்சுகம்=சச்சிதானந்தமாக விளங்குதலாம். (ஏ, அசை) அங்கு, ஆங்கு என்னும் இடைச்சொல்லின் முதற்குறுக்கம்.)

(போ - ரை) சிறு பெண்ணே பருவப் பெண்ணுமாகித் தான் கணவனேச் சேர்ந்து சொல்லத்தகாத பேதமொழிந்து மிகுந்த சுகமடைதல் சீவனே கூடஸ்தராகிப் பிரமத்தையடைந்து சச்சிதானந்தமாக விளங்குதலாம்.

சிரத்தை யிருதுவுப தேசம்விந் தாகும்
கரத்தலறு மெய்ஞ்ஞானங் கர்ப்பம்—திரத்துறுவீட்
டானந்தஞ் சேயுயிர்மின் ஞர் தடைந்திலரேல்
ஈனம் பொய்ஞ் ஞானமல டே. (கசுசு)

(ப - ரை) சிரத்தை=விசுவாசம், இருது=இருதுவாம், உபதேசம், விந்தாகும்=வீரியமாம், கரத்தல் அறு =மறைப்பற்ற, மெய்ஞ்ஞானம், கர்ப்பம் = கர்ப்பமாம், திரத்து உறு = நிலேயை யடைந்த, வீட்டு=மோக்ஷ, ஆனந்தம், சேய்=புத்திரராம், உயிர் மின்ஞர்=சீவாகிய பெண்கள், ஈது அடைந்திலரேல்=இவ்வனுபவத்தை யடையாதவராஞல், ஈனம்=குறைவான, பொய்ஞ்ஞானம்=பொய்ஞ்ஞானமென்கிற, மலடே=மலடேயாவர்.

(போ - ரை) விசுவாசம் இருதுவாம், உபதேசம் வீரியமாம், மறைப்பற்ற மெய்ஞ்ஞானம் கர்ப்பமாம், நிலேயை யடைந்த மோக்ஷானந்தம் புத்திரராம், சீவராகிய பெண்கள் இவ்வனுபவத்தை யடையாதவராஞல் குறைவான பொய்ஞ்ஞானமென்கிற மலடே யாவர்.

கலி நிலைத்துறை.

விரியு மாயைவா ரியிற்குரு மூர்த்தமா விளம்பும்
அரிய சேதுவின் விளங்கிடத் தன்னுடை யந்தக்
கரண மாகிய நாகதா பிதஞ்செயிற் களிப்பால்
பிரம ஞானமா மாண்மக நிலையுறப் பெறுவார். (ககரு)

(ப - ரை) விரியும் மாயை வாரியில் = விஸ்தாரமான மாயை யென்னும் சமுத்திரத்தில், குரு, மூர்த்தமா = வடிவமாக, விளம் பும் = சொல்லப்படும், அரிய = அருமையான, சேதுவின் = சேது வில், விளங்கிட, தன்னுடை = தனது, அந்தக்கரணமாகிய, நாக தாபிதஞ்செயில் = நாகத்தைப் பிரதிஷ்டை செய்தால், களிப்பால் = மகிழ்ச்சியாக, பிரமஞானம், ஆம் ஆண்மக = ஆகிய புத்திரனை, நிலையுற = நிலைக்கும்படி, பெறுவார். (சேது = அணை)

(போ - ரை) விஸ்தாரமான மாயையென்னும் சமுத்திரத் தில் குருவடிமாகச் சொல்லப்படும் அருமையான சேதுவில் விளங் கிடத் தனது அந்தக்கரணமாகிய நாகத்தைப் பிரதிஷ்டை செய்தால் மகிழ்ச்சியாகப் பிரமஞானமாகிய புத்திரனை நிலைக்கும்படி பெறுவார்.

வெண்பா.

விருத்திச் சுடரால் விளங்குசகத் தென்னப்
பருத்துறுதன் னீழலையே பார்க்கிற் — றரித்த
சுவானுபவ மாந்தன் சொரூபமிளைத் துப்போம்
எவாறினுமப் யாசி மகார்க்கே. (ககசு)

(ப - ரை) (க) விருத்திச் சுடரால் விருத்தியென்னும் பிரகா சத்தில், விளங்கு = விளங்குகிற, சகத்து என்னப் பருத்து உறு = உலகமென்று பெரிதாகத் தோற்றுகின்ற, தன்னீழலை (ஏ) = தனது நிழலை, பார்க்கில் = பார்த்தால், தரித்த = பொருந்திய, (உ) சுவானு பவம், ஆம் = ஆகிய, தன்சொரூபம் = தனதுவடிவம், இளைத்துப் போம், (ங) எவாறினும் = எவ்விதத்தாலும், (௪) அப்யாசி = அப் பியாசிகளாகிய, மகார்க்கு (ஏ) = சிறுவர்களுக்கு (ஏ, ஏ, அசைகள்)

(எவ்வாற்றினும், என்பதில் வகர வொற்றும்
றகர வொற்றும் கெட்டு எவாறினும் என்று ஆயிற்று)

(போ - ரை) விருத்தி என்னும் பிரகாசத்தில் விளங்குகிற உலக மென்று பெரிதாகத் தோற்றுகின்ற தனது நிழலைப்பார்த்தால் பொருந்திய அப்பியாசிகளாகிய சிறுவர்களுக்கு எவ்விதத்தாலும் சுவானுபவமாகிய தனது வடிவம் இளைத்துப்போம்.

உபரதிவை ராகமா வுற்றதுணைக் கொங்கைத்
தபரதிஞா னப்பகத்தள் சார்வாய்ச்—சுபரதிக
மோட்சகா மன்பிரம மூர்த்தமாஞ் சுத்தமனத்
தாட்சகா வைப்பெறலாற் றான். (கசுஎ)

(ப - ரை) (௩) உபரதி, வைராகமா = வைராக்கியங்களாக, உற்ற = பொருந்திய, துணைக்கொங்கை = இரண்டு ஸ்தனங்களை யுடைய, தபரதி = தவநிலையாகிய இரதிபோன்றவளாய், ஞானப் பகத்தள் ஞானமென்னும் குறியைப் பெற்றவளான பெண்ணின், சார்வு ஆய் = சம்பந்தமடைந்து, (க) சுபரதிக = சுபவாசனையென் னும் இரதத்திலிருக்கும், மோட்சகாமன் = மோக்ஷ இச்சையுள்ள புருஷன், (௪) பிரமமூர்த்தமாம் = பிரமானந்த வடிவமாவன், (2) சுத்த, மன = மனத்தின், தாள் முயற்சியாகிய, சகாவைப் பெறலால் தான் = சகாயத்தைப் பெறுதலால். (தான், சாரியை)

(போ - ரை) சுபவாசனை யென்னு மிரதத்திலிருக்கும் மோக்ஷ இச்சையுள்ள புருஷன் சுத்தமனத்தின் முயற்சியாகிய, சகாயத்தைப் பெறுதலால். உபரதி வைராக்கியங்களாகப் பொருந்திய இரண்டு ஸ்தனங்களை யுடைய தவநிலையாகிய இரதி போன்றவளாய் ஞானமென்னும் குறியைப் பெற்றவளான பெண்ணின் சம்பந்த மடைந்து பிரமானந்த வடிவமாவன்.

எப்போது மூப்பி லெழின்ஞானப் பெண்ணெதிர்ந்தாற்
பப்பாஞ் சிரவணச்சம் பாடணமுந்—துப்பாய
நேர்மனனக் கேளி நிதித்தியா சக்கலவி
சார்கசதா சாதகமைந் தர். (கசுஅ)

(ப - ரை) (க) எப்போதும் = எக்காலமும், மூப்பு, இல் = இல்லாத, எழில் = நல்ல, ஞான = ஞானமென்னும், பெண், எதிர்ந் தால் = எதிர்ப்பட்டால், (௨) பப்பு ஆம் = விசாலமான, சிரவணச் சம்பாடணமும் = சிரவணமாகிய சம்பாஷணையும், துப்பு ஆயநேர் = அனுபவமானது பொருந்து தற்கேதுவான, மனனக்கேளி = மனன

மென்கிற இலீலையும், நிதித்தியாச=நிதித்தியாசன மென்னும், கலவி=கலத்தலும், சார்க=செய்யக் கடவர், (ங) சதா=எப்போதும், (உ) சாதகமைந்தர்=அப்பியாசிகளாகிய புருஷர்கள்,

(சம்பாஷணை = இனியபேச்சு) இலீலை = விளையாட்டு)

(போ-ரை) எக்காலமும் மூப்பில்லாத நல்ல ஞான மென்னும் பெண் எதிர்ப்பட்டால் அப்பியாசிகளாகிய புருஷர்கள் எப்போதும் விசாலமான சிரவணமாகிய சம்பாஷணையும் அனுபவமானது பொருந்து தற்கேதுவான மனனமென்கின்ற இலீலையும் நிதித்தியாசனமென்னும் கலத்தலும் செய்யக்கடவர்.

அறுசீர் விருத்தம்.

பலவிதலௌ கீகநூல் கன்மசாத் திரம்பத்திப்
பனுவல் யோக
கலையுணர்வோ ராந்தச்சர் கொற்றர்கரு மார்கன்னூர்
கலவா ஞான
நிலைபுகல்சாத் திரியக்க சாலையராற் றிகழ்சார
நிதித்தி வாக்காம்
மலர்திருநாண் குருப்பதியகண் மனமிடறேற் றருதுளர்சா
தகர்நன் மாதர், (கசுகூ)

(ப-ரை) (க) (முறையே) பலவித லௌகிக, நூல்=சாஸ்திரம், கன்மசாஸ்திரம்=கர்மசாஸ்திரம், பத்திப்பனுவல்=பக்திசாஸ்திரம், யோககலை = யோகசாஸ்திரம், உணர்வோராம் = அறிந்தவர்களென்கிற, தச்சர், கொற்றர், கருமார்=கொல்லர், கன்னூர், (ஆகிய இவர்களின் தொழில்களில் கலவா=கலவாத, ஞான நிலைபுகல் சாத்திரி=ஞானநிலையைச் சொல்லுகின்ற சாஸ்திரிகளென்னும், அக்கசாலையரால்=தட்டாரால், திகழ்சார=நிச்சயிக்கப்பட்ட சாரமான, நிதித்திவாக்காம்=நிதித்தியாசன வாக்கியமாகிய, மலர்திருநாண்=விளக்கமான மாங்கல்யத்தை, குருப்பதியால்= குருவாகிய தலைவனால், மனமிடறு ஏற்று=மனமென்கிற கழுத்தில் அணியப்பெற்று, (ந) அருது உளர்=அது நீங்காது உடையராய் இருப்பார்கள், (உ) சாதகர் நல்மாதர்=அப்பியாசிகளாகிய சுமங்கலிப் பெண்கள்

(போ - ரை) முறையே பலவித லௌகிக சாஸ்திரம் கர்மசாஸ்திரம் பக்தி சாஸ்திரம், யோக சாஸ்திரம், அறிந்தவர்களென்கிற தச்சர் கொற்றர் கொல்லர் கன்னர் ஆகிய இவர்களின் தொழில்களிற் கலவாத ஞானநிலையைச் சொல்லுகின்ற சாஸ்திரிகளென்னும் தட்டாரால் நிச்சயிக்கப்பட்ட சாரமான நிதித்தியாசன வாக்கியமாகிய விளக்கமான மாங்கல்யத்தைக் குருவாகிய தலைவனால் மனமென்கிற கழுத்திலணியப்பெற்று அப்பியாசிகளாகிய சுமங்கலிப் பெண்கள் அதுநீங்காது உடையராயிருப்பார்கள்.

எழுசீர் விருத்தம்.

ஈசனாகிய ஞானதேசிக னேபுமானோர் முமூட்சுவே
வாசவார்குழன் மாது போதக மங்கலத்திரு நாண்மிசைத்
தேசுலாய விவேகமாமெழில் சீலநற்குண மொள்ளிழை
தூசின்ஞான விசாரம்லீலை சுவானுபூதி கலப்பரோ. (கஎ0)

(ப - ரை.) ஈசன் = ஈசுவரன், ஆகியஞான, தேசிகன் (ஏ) = குரு, புமான் = புருடனும், ஓர்முமூட்சு (ஏ) = ஒப்பற்ற முமூட்சு, வாசவார் குழல்மாது = வாசனை பொருந்திய நீண்ட கூந்தலையுடைய பெண்ணும், போதகம் = உபதேசம், மங்கலத்திருநாண் = சிறந்த மாங்கல்யமாம், மிசைத்தேசு உலாய = மேலான விளக்கஞ்செய்யும், விவேகம், ஆம்எழில் = அழகாம், சீலம் நற்குணம் = ஒழுக்கமும் நற்குணங்களும், ஒள் இழை = உயர்ந்த ஆபரணங்களாம், தூசு இல் = குற்றமற்ற, ஞானவிசாரம், லீலை = இலீலையாம், சுவானுபூதி = சுவானுபவம், கலப்பு (அரோ) = கலத்தலாம். (அரோ ஏ, ஏ, அசைகள்)

(போ - ரை) ஈசுவரனாகிய ஞானகுரு புருஷனும் ஒப்பற்ற முமூட்சு வாசனை பொருந்திய நீண்ட கூந்தலையுடைய பெண்ணும் உபதேசம் சிறந்த மாங்கல்யமாம் மேலான விளக்கஞ்செய்யும் விவேகம் அழகாம் ஒழுக்கமும் நற்குணங்களும் உயர்ந்த ஆபரணங்களாம் குற்றமற்ற ஞானவிசாரம் இலீலையாம் சுவானுபவம் கலத்தலாம்.

வெண்பா.

சுவானுபூ திப்பெண்ணைச் சூழ்மோட்ச வீட்டின்
துவாரபா லர்க்கொண்டு தோய்க—தவாதவர்பேர்
சாந்திவிசாரஞ் சாது சங்கஞ்சந் தோடமதே
போந்தினிதி னன்மாப் புமான். (கஎக)

(ப - ரை) (௬) சுவானுபூதி = சுவானுபவ மென்னும், பெண்ணை, (௨) சூழ் = சூழ்ந்திருக்கின்ற, மோட்ச = முத்தி என்னும், வீட்டின், துவார, பாலர்க்கொண்டு = பாலகர்களின் சகாயத்தைப் பெற்று, (௫) தோய்க = சேர்க, தவாது = குறையாத, அவர்பேர் = அவர்களின்பேர், சாந்தி, விசாரம், சாதுசங்கம், சந்தோடம் (அது) (ஏ) = சந்தோஷம் என்பனவாம், (௩) போந்து இனி தின் = இனிமையாகச்சென்று, (௧) ஆன்மாப்புமான் ஆத்மாவாகிய புருஷன். (அது சொல்லுருபு). (ஏ. அசை)

(போ - ரை) ஆத்மாவாகிய புருஷன் சூழ்ந்திருக்கின்ற முத்தியென்னும் வீட்டின் பாலகர்களின் சகாயத்தைப் பெற்று இனிமையாகச் சென்று சுவானுபவமென்னும் பெண்ணைச்சேர்க குறையாத அவர்களின் பேர், சாந்தி, விசாரம், சாதுசங்கம், சந்தோஷம் என்பனவாம்.

அறிவாம் புருட னலைமனப்பெண் ணேகு
நெறியே யவண்மயமாய் நேரிற்—செறிசீவப்
பேதையாந் தான்றனித்தப் பெண்செயலை நோக்கினவள்
போதமாந் தன்மயமாய்ப் போம். (௧௭௨)

(ப - ரை) அறிவு, ஆம் = ஆகிய, புருடன், அலைமனப் பெண் = அலைகின்ற மனமென்னும் பெண், ஏகும் நெறியே = செல்லும் வழியே, அவள், மயமாய் நேரில் = வடிவமாகிச் சென்றால், செறி = நெருங்கிய, சீவப்பேதையாம் = சீவனெனும் மூடனானவான், தான் தனித்து = தான் தனியாகி, அப்பெண் செயலை = அம்மனமென்கிற பெண்ணின் செய்கையை, நோக்கின் = சாக்ஷியாயிருந்து பார்த்தால், அவள் = அப்பெண், போதமாம் = ஞானமாகிய, தன்மயமாய்ப் போம் = தனது வடிவாகிவிடுவாள்.

(போ - ரை) அறிவாகியபுருஷன் அலைகின்ற மனமென்னும் பெண் செல்லும்வழியே அவள் வடிவமாகிச் சென்றால் நெருங்கிய சீவனென்னும் மூடனானவான் தான் தனியாகி அம்மனமென்கிற பெண்ணின் செய்கையைச் சாக்ஷியாயிருந்து பார்த்தால் அப்பெண் ஞானமாகிய தனது வடிவமாகி விடுவாள்.

சின்மயவான் மாவாய்த் திகழுந் தனதிறைவன்
றன்மயமாய் நிற்குஞ் சமாதிக்கற்—பின்வலிசார்
சித்தமெனு நல்லாள் செயுஞ்சங்கற் பப்படியாம்
எத்தகைய தேனு மினிது. (கஎ௬)

(ப - ரை) (க) சின்மய ஆன்மாவாய் = ஞானசொரூபமாகிய ஆத்மாவாக, திகழும் = விளங்குகின்ற, தனது, இறைவன் = தலைவன், (தன்) மயமாய் நிற்கும் = வடிவமாகவே நிலைத்திருத்தலாகிய, சமாதி = சமாதியென்கிற, கற்பின் வலிசார் = கற்பின் வலிமையைப் பெற்ற, சித்தமெனும், நல்லாள் = நல்லபெண்ணானவள், செயும் = செய்யும், சங்கற்பப்படி = சங்கற்பப்படியே, (௩) ஆம் = ஆகும், (உ) எத்தகையதேனும் = எவ்வகைப்பட்டதாயினும், இனிது = அது நன்றாக. (தான் சாரியை)

(போ - ரை) ஞானசொரூபமாகிய ஆத்மாவாக விளங்குகின்ற தனது தலைவன் வடிவமாகவே நிலைத்திருத்தலாகிய சமாதியென்கிற கற்பின் வலிமையைப் பெற்ற சித்தமெனும் நல்ல பெண்ணனவள் செய்யும் சங்கற்பப்படியே எவ்வகைப் பட்டதாயினும் அது நன்றாக ஆகும்.

நாற்பத்தெண்சீர் விருத்தம்.

திருமருவு மீசன் புமான்பிரம முயிர்மாயை
தேகமா நித்யசன்மாத்
திரன்யா னெனும்மனு திப்பிரம ஞானமாண்
சின்னமே சீவகருணை
தெரிவைமயல் சீவர்மட வார்களான் மாவுயிர்
திகழ்த்தகக் கரணமுடல் யான்
சீவனெனல் பகமுமூட் சுத்துவம் பருவம்
திருந்துபர பத்தியாண்மால்
தேருமுப ரதிவிரா கந்தன மடக்கமே
சேலயிப் போழ்து நானே
செகவிலட் சணனெனும் விசேஷபர மாங்கார
தீரமிக வுற்றபூப்புத்
தெருண்டசின் மாத்திர சுபாவத்தன் யானெனுந்
தெளிவாய வான்மஞானம்
திரள்பூப் படங்கிய பகம்பின் விசேஷச்
செயற்பரம வாங்காரமே

பெருகிடுதன் மாதவிடை மற்றசங் கற்பமறல்
பேசுமே காந்தமான்ம
பிரமவொற் றுமைஞான மூலமாய்ச் சின்மயம்
பெற்றயா னேசன்மயப்
பிரமமச் சன்மயப் பிரமமே சின்மயம்
பிரியா வியானென்றிடப்
பெறுநிதித் யாசமே பெண்புமான் கலவிப்
பெருக்கமாஞ் சத்தினின் றும்
பேர்சித்தி னின்றும் வெளிப்படு சுகங்களே
பெயர்சுக் கிலஞ் சோணிதம்
பின்சச்சி தானந்த சர்வபரி பூரணப்
பெருநிலைமை யாய்விருத்தி
பிறழ்சீவன் முத்திசை யோகசுக வனுபவம்
பேணுமங் கான்மபிரமப்
பிரகாச ஞானமுஞ் சீவவீ சத்துவப்
பிறிவுமந் தக்கரணமும்

நிரவிவரு மாயையுந் தோற்று திருக்குமந்
நிர்விகற் பச்சமாதி
நிகர்பக மிலிங்கமா தாடவர் சரீரங்கள்
நிகழாமை நிருவிகற்ப
நிறைசுக விருத்திசவி கற்பச் சமாதியினும்
நேர்தல்சை யோகசுகமே
நினைவா வெளிப்படல் விசேஷபர மாங்கார
நெறிபடிற் சீவன்முத்தி
நிலைபெறு வாறறிதல் பின்சூத கத்தினல்
நீள்கருத் தரியாமையாம்
நீர்மைதோற் றிடுதலந் தக்கரண மாயையது
நிபவியா பகமதனுளே
நின்றிடு மெனத்தெளிதல் மாதுபூ மான்மெய்
நெருக்கமா முன்போல நல்
நிதித்தியா சஞ்செயல் கலத்தற் கிரீடையது
நீக்கமற முயல் காலையின்

விரவுமறி வின்மகிழ்வு பின்னமாய் வெளியாம்
விசேஷபர மாங்காரமோ
மேவா தொழிந்திடச் சீவன்முத் திச்சுக
விருத்திநிலை பெற்றதுணர்தல்
வீணே சுரோணித மகன்றிடுஞ் சூதகம்
விளையாமை யாற் கருப்பம்
மெய்யுற்ற தோர்ந்திடுதல், சர்வபரி பூரண
வியன்சச்சி தானந்தமாம்
மேல்நிலைமை மட்டாய் விருத்திலய முற்றொழி
விதேகமுத் திப்பதமதோ
மிக்கசுக மாயபுத் திரனும் பவித்திட
விளங்குதாய் தந்தைதானிவ்
விதமாயி னுரென வழங்கல் சீ வன்முத்தி
மிளிர்சுகத் தேட்டமதனல்
மீதுநிலை யுறல்காம வியலாற் சுதன்பெறல்
விவேகிப்ப துவமேயமே. (களச)

(ப - ரை) திருமருவும் ஈசன் = சிறப்பும் பொருந்திய ஈசுவரன், புமான் = புருஷனும், பிரமம், உயிர் = அவனது உயிராம், மாயை தேகமாம், நித்ய = நித்தியமாகிய, சன்மாத்திரன் = இருப்புமாத்திர மானவன், யான் எனும், அனுதிப்பிரம ஞானம் ஆண், சின்னம் (ஏ) = சின்னமாம், சிவகருணை, தெரிவைமயல் = பெண்ணை இச்சித்த லாம், சீவர், மடவார்கள் = பெண்களாம், ஆன்மா = கூடஸ்தர், உயிர் = அவர்கள் உயிராம், திகழ்த்து = விளக்குகின்ற, அகக்கரணம் = அந்தக்கரணம், உடல் = தேகமாம், யான்சீவனெனல், பகம் = பெண் சின்னமாம், முமுட்சுத்துவம், பருவம் = பக்குவமாம், திருந்து = திருத்தமான, பரபத்தி = ஈசுவரபக்தி, ஆண்மால் = புருஷனை இச்சித் தலாம், தேர்ந்த, உபாதி, விராகம் = வைராக்கியம், தனம் = ஸ்தனங் களாம், அடக்கம் (ஏ) சேலை = சேலையாம், இப்போழ்து = இப் போது, நானே, செகவிலட்சணன் = சகங்களுக்கு வேறானசாக்ஷி, எனும் விசேஷ பரம, ஆங்கார = அகங்காரத்தின், தீரம் = திடம், மிக = முதலில்மிக, உற்ற = பொருந்திய, பூப்பு = பூப்பாம், தெருண்ட = தேர்ந்த, சின்மாத்திர = அறிவுமாத்திரமான, சுபாவத்தன் = சுபாவத்தையுடையவன், யானெனும், தெளிவு, ஆய = ஆன, ஆன்ம

ஞானம்=கூடஸ்தஞானம், திரண்ட, பூப்பு அடங்கிய, பகம்= பெண்சின்னமாம், பின்=மறுபடியும், விசேஷ, செயல்=செய்கை யான, பரம, ஆங்காரம் (ஏ) = அகங்காரம், பெருகிடுதல், மாத விடாயாம், மற்ற சங்கற்பம், அறல் = விட்டிருத்தல், பேசும்= சொல்லப்படுகிற, ஏகாந்தம் = ஏகாந்தமாம், ஆன்ம = கூடஸ்த, பிரம, ஒற்றுமை=ஏகத்தன்மை, ஞானம், மூலமாய்=காரணமாக, சின்மயம் பெற்ற = அறிவுவடிவமாகிய, யானே, சன்மய = இருப்புவடிவமான, பிரமம், அச்சன்மய = அந்த இருப்புவடிவமா கிய, பிரமமே, சின்மயம் = ஞானவடிவம், பிரியா = நீங்காத, யான், என்றிடப் பெறும் என்னப்பட்ட, நிதித்தியாசமே, பெண்பு மான் கலவி = பெண்ணும் புருஷனும் கலத்தலின், பெருக்கமாம்= மிகுதியாம், சத்தினின்றும்=சத்திலிருந்தும், பேர் = பெருமை யான, சித்தினின்றும் = சித்திலிருந்தும், வெளிப்படு = வெளிப் பட்ட, சுகங்களே, பெயர்=விளங்குகிற, சுக்கிலம், சோணிதம்= சுரோணிதம், பின்=பின்பு, சச்சிதானந்த சர்வ, பரிபூரண = பரி பூரணமான, பெருநிலைமையாய் = பெரிய நிலையாகி, விருத்தி = விர்த்தி, பிறழ் = நிகழுகின்ற, சீவன் முத்தி, சையோக சுக, அனுபவம் = அனுபவமாம், பேணும் அங்கு = போற்றப்பட்ட அவ்விடத்தில், ஆன்மபிரம=கூடஸ்தப்பிரமங்களின், பிரகாச ஞான மும்=விளக்கமான ஞானமும், சீவ ஈசத்துவ = சீவத்தன்மை ஈசு வரத்தன்மையின், பிறிவும்=பேதங்களும், அந்தக்கரணமும், நிரவி வருமாயையும் = பரவியுள்ள மாயையும், தோற்றிருக்கும், அந் நிர்விகற்பச் சமாதி அந்தநிர்விகற்பசமாதி, நிகர்=பொருந்திய, பகம் பெண்சின்னம், இலிங்கம் = ஆண்சின்னங்கள், மாது ஆடவர் =பெண் புருஷர்களின், சரீரங்கள், நிகழாமை=தோன்றாமையாம், நிருவிகற்ப சுக விருத்தி=நிறைந்த நிர்விகற்ப சுகவிர்த்தி, சவிகற் பச் சமாதியினும், நேர்தல் = தோற்றுதல், சையோக சுகமே, நினைவா = நினைவுரூபமாக, வெளிப்படல் = மற்ற சமயத்திலும் விளங்குதலாம், விசேஷபரம, ஆங்கார = அகங்கார, நெறி = மார்க்கம், படில்=பின்னும் உண்டானால், சீவன்முத்தி, நிலைபெறு, ஆறு = விதத்தை, அறிதல், பின் = மறுபடியும், சூதகத் தினல்=சூதகம் ஏற்படுதலால், நீள்கரு=நல்லகர்ப்பம், தரியாமை, ஆம்=ஆகிய, நீர்மை = குறி, தோற்றிடுதல் = தோற்றுதலாம், அந்தக்கரணம் = அந்தக்கரணமானது, மாயையது நிபவியாபகம்

அதன் உள் (ஏ) = காரணமான மாயையின் வியாபகத்துள், நின்றிடும் எனத்தெளிதல் = அடங்குமெனத் தெளிதல், மாது பூமான் = பெண் புருஷர்களின், மெய்நெருக்கம் ஆம் = சரீர சம்பந்தமாம், முன்போல, நல் = நல்ல, நிதித்தியாசம், செயல் = செய்தல், கலத்தல் கிரீடை = கலத்தலாகிய கிரீடையாம், அது அச்செயலே, நீக்கமற = பிரியாது, முயல்காலையின் = செய்யுங்காலத்து, விரவும் அறிவின் மகிழ்வு = உண்டான அறிவின் சுகம், பின்னமாய் = பேதமாய், வெளி, ஆம் = ஆகும், விசேஷபரம, ஆங்காரம் (ஓ) = அகங்காரம், மேவாது ஒழிந்திட = உண்டாகாமல் நீங்கிவிட, சீவன்முத்தி, சுகவிருத்தி, நிலைபெற்ற துணர்தல், = நிலைத்ததையறிதல், வீணே = வீணாக, சுரோணிதம், அகன்றிடும் = வெளிப்படும், சூதகம், விளையாமையால் = உண்டாகாததால், கருப்பம் = கர்ப்பம், மெய் உற்றது = உண்மையாகத் தரித்திருப்பதை, ஓர்ந்திடுதல் = அறிந்ததாம், சர்வ பரிபூரண = பரிபூரணமான, வியன் = சிறப்புப்பொருந்திய, சச்சிதானந்தம், ஆம் = ஆகிய, மேல் நிலைமை, மட்டாய் = மாத்திரமாய், விருத்தி, லயம் உற்று = ஒடுங்கி, ஒழி = பேதமற்ற, விதேக முத்தி' பதம் (அது) ஓ = பதமோ, மிக்க = மிகுந்த, சுகம் ஆய = சுககாரணமான, புத்திரன், உற்பவித்திட, விளங்கு = விளங்குகிற, தாய் தந்தை தான் = தாய்தந்தையரே, இவ்விதம் ஆயினரென, வழங்கல் = வழங்குதலாம், சீவன் முத்தி மிளிர் சுகத்தேட்டம் அதனால் = பிரகாசிக்கின்ற சீவன் முத்திச்சுகத்தை வேண்டுதலால், மீது நிலையுறல் = மேலான நிலையை யடைதல், காமவியலால் = நீதியான காம குணத்தால், சுதன் பெறல் = புத்திரனைப் பெறுதலாம், விவேகிப்பது = இவ்விஷயத்தில் பகுத்தறியத்தக்கது, உவமேயமே = முன் சொல்லப்பட்டிருக்கிற தார்ஷ்டாந்தமேயாம்.

(ஏ, ஏ, ஏ, ஏ, அசைகள்) (அது, சொல்லுருபு)

(ஓ, இடைச்சொல்)

(போ - ரை) சிறப்புப் பொருந்திய ஈசுவரன் புருஷனும்; பிரமம் அவனது உயிராம் மாயை தேகமாம்; நித்தியமாகிய இருப்புமாத்திரமானவன் யான் எனும் அனுதிப் பிரமஞானம் ஆண்சின்னமாம்; சிவகருணை பெண்ணை இச்சித்தலாம்; சீவர் பெண்களாம் கூடஸ்தர் அவர்கள் உயிராம்; விளங்குகின்ற அந்தக்கரணம் தேகமாம்; யான் சீவனெனல் பெண்சின்னமாம்; முமூட்சுத்துவம் பக்குவமாம்; திருத்தமான ஈசுவரபக்தி புருஷனை இச்சித்தலாம்; தேர்ந்த உபாதி வைராக்

கியம் ஸ்தனங்களாம்; அடக்கம் சேலையாம்; இப்போது நானே சகங்களுக்கு வேறானசாக்ஷி யெனும் விசேஷபரம அகங்காரத்தின் திடம் முதலில் மிகப்பொருந்திய பூப்பாம்; தேர்ந்த அறிவுமாத்திரமான சுபாவத்தை யுடையவன் யானெனுந் தெளிவான கூடஸ்தஞானந் திரண்ட பூப்பு அடங்கிய பெண்சின்னமாம்; மறுபடியும் விசேஷச் செய்கையான பரம அகங்காரம் பெருகிடுதல் மாதவிடாயாம்; மற்ற சங்கற்பம் விட்டிருத்தல் சொல்லப்படுகிற ஏகாந்தமாம்; கூடஸ்த பிரம ஏகத்தன்மை ஞானம் காரணமாக அறிவு வடிவமாகிய யானே இருப்பு வடிவமான பிரமம் அந்த இருப்பு வடிவமாகிய பிரமமே ஞானவடிவம் நீங்காத யான் என்னப்பட்ட நிதித்தியாசமே பெண்ணும் புருஷனும் கலத்தலின் மிகுதியாம்; சத்திலிருந்தும் பெருமையான சித்திலிருந்தும் வெளிப்பட்ட சுகங்களே விளங்குகிற சுக்கில சுரோணிதமாம்; பின்பு சச்சிதானந்த சர்வபரிபூரணமான பெரிய நிலையாகி விர்த்தி நிகழுகின்ற சீவன் முத்திசையோக சுகவனுபவமாம்; போற்றப்பட்ட அவ்விடத்தில் கூடஸ்தப் பிரமங்களின் விளக்கமான ஞானமும் சீவத்தன்மை ஈசுவரத்தன்மையின் பேதங்களும் அந்தக்கரணமும் பரவியுள்ள மாயையும் தோற்றிருக்கும் அந்த நிர்விகற்பசமாதி பொருந்திய பெண்சின்னம் ஆண்சின்னங்கள் பெண்புருஷர்களின் சரீரங்கள் தோன்றாமையாம்; நிறைந்த நிர்விகற்ப சுகவிர்த்தி சவிகற்ப சமாதியினும் தோற்றுதல் சையோக சுகமே நினைவுரூபமாக மற்றசமயத்திலும் விளங்குதலாம்; விசேஷ பரம அகங்கார மார்க்கம் பின்னும் உண்டானால் சீவன் முத்தி நிலை பெறுவிதத்தை யறிதல் மறுபடியும் சூதகம் ஏற்படுதலால் நல்ல கர்ப்பந் தரியாமையாகிய குறி தோற்றுதலாம்; அந்தக்கரணமானது காரணமான மாயையின் வியாபகத்துள் அடங்குமெனத் தெளிதல் பெண்புருஷர்களின் சரீரசம்பந்தமாம்; முன்போல நல்ல நிதித்தியாசம் செய்தல் கலத்தலாகிய கிரீடையாம்; அச்செயலைப் பிரியாது செய்யுங்காலத்து உண்டான அறிவின் சுகம்பேதமாய் வெளியாகும் விசேஷபரம அகங்காரம் உண்டாகாமல் நீங்கிவிடச் சீவன் முத்திச் சுகவிருத்தி நிலைத்ததை யறிதல் வீணைகச்சுரோணிதம் வெளிப்படும் சூதகமுண்டாகாததால் கர்ப்பம் உண்மையாகத் தரித்திருப்பதை அறிந்ததாம்; சர்வபரிபூரணமான சிறப்புப்பொருந்திய சச்சிதானந்தமாகிய மேல்நிலைமை மாத்திரமாய் விருத்தியொடுங்கிப் பேதமற்ற விதேக முத்திப்பதமோ மிகுந்த சுககாரணமான புத்திரன் உற்பவித்

திட விளங்குகிற தாய்தந்தையரே இவ்விதம் ஆயினுரென வழங்கு தலாம்; பிரகாசிக்கின்ற சீவன் முத்திச்சுகத்தை வேண்டுதலால் மேலான நிலையையடைதல் நீதியான காமகுணத்தால் புத்திரனைப் பெறுதலாம்; இவ்விஷயத்தில் பகுத்தறியத்தக்கது முன்சொல்லப் பட்டிருக்கிற தார்ஷ்டாந்தமேயாம்.

வெவ்வி யற்கைக ளா நரர் சூழ்பிர விர்த்திநாடு
தவ்வ விட்டினி தாய குணங்கட ழைந்தசோலை
செவ்வி துற்ற நிவிர்த்தி வனத்திடை சென்றுநின்றூர்
எவ்வ மற்றவர் ஞான விசார மெனுந்தவத்தே. (கஎரு)

(ப - ரை) (க) வெவ்வியற்கைகள் ஆம் = தீக்குணங்களென்னும், நரர்சூழ் = மனிதர்கள் சஞ்சரிக்கின்ற, பிரவிர்த்தி நாடு = பிரவிர்த்திமார்க்கமாகிய நாட்டை, தவ்வவிட்டு = ஒழியவிட்டு, இனிது ஆய குண்ங்கள் = நன்மையாகிய குணங்கள் என்னும், தழைந்த, சோலைச் செவ்வித உற்ற = சோலை செம்மையாயுற்ற, நிவிர்த்தி வனத்திடை = நிவிர்த்திமார்க்க மென்கிற வனத்தினிடத்தில், சென்று, (ங) நின்றூர் = நிலைத்திருப்போர்கள், எவ்வமற்றவர் = குற்றமற்றவானப் பிரஸ்த ஆச்சிரமத்தினராவர், (உ) ஞான விசார மெனும், தவத்து (ஏ) = தவச்செயலில். (ஏ. அசை)

(பொ - ரை) தீக்குணங்களென்னும் மனிதர்கள் சஞ்சரிக்கின்ற பிரவிர்த்திமார்க்கமாகிய நாட்டை ஒழியவிட்டு நன்மையாகிய குணங்களென்னும் தழைந்த சோலை செம்மையாயுற்ற நிவிர்த்தி மார்க்கமென்கிற வனத்தினிடத்திற் சென்று ஞான விசார மெனும் தவச்செயலில் நிலைத்திருப்போர்கள் குற்றமற்ற வானப்பிரஸ்த ஆச்சிரமத்தினராவர்.

அறுசீர் விருத்தம்.

தனுவாக்கு மனந்தீய நெறிசெல்ல விடாததிரி
தண்டத் தோடு
மனமோர்வா சனையுமுறு தொழித்திடலா முண்டிதமும்
வையத்தின் கண்
கனல்போல வடுத்தவெலாந் தன்மயமாக் கொளு ஞானக்
காவி தோய்த்துப்
புனைசாந்த வுடையேக பாவனையுட் கமண்டலமும்
பூண்பார் நீத்தோர். (கஎசு)

(ப - ரை) (உ) தனு=சரீரம், வாக்கு, மனம்=மன தென்னு மிவைகளை, தீய, நெறி=மார்க்கத்தில், செல்ல, விடாத=விடாது தண்டித்தலாகிய, திரிதண்டத்தோடு, மனம்=சித்தத்தில், ஓர்வா சனையும், உறுது=பொருந்தாது, ஒழித்திடல் ஆம்=நீக்குதலாகிய, முண்டிதமும் (க) வையத்தின் கண்=பூமியில், (௩) கனல்போல =அக்கினியைப்போல, அடுத்தவெலரம்=எதிர்ப்பட்டவை யாவற் றையும், தன்மயமாக்கொளும் = தன்சொரூபமாகவே செய்கின்ற, ஞானக்காவி=ஞானமென்னும் காவி, தோய்த்து, புனை=தரித்த, சாந்த உடை = சாந்தமாகிய ஆடையும், ஏகபாவனை=ஏகபாவனை என்னும் நீரையுடைய, உள்கமண்டலமும்=உள்ள மென்கிற கமண்டலமும், பூண்பர்=பெற்றோர், நீத்தோர்=சந்நியாசிகளா வார்

(பொ - ரை) பூமியில் சரீரம் வாக்கு மனதென்னு மிவைகளைத் தீயமார்க்கத்தில் செல்லவிடாது தண்டித்தலாகிய திரிதண்டத்தோடு சித்தத்தில் ஓர்வாசனையும் பொருந்ாது நீக்குதலாகிய முண்டிதமும் அக்கினியைப்போல எதிர்ப்பட்டவை யாவற்றையும் தன் சொரூப மாகவே செய்கின்ற ஞானமென்னும் காவிதோய்த்துத் தரித்த சாந்தமாகிய ஆடையும் ஏகபாவனை என்னும் நீரையுடைய உள்ளக் கமண்டலமும் பெற்றோர் சந்நியாசிகளாவர்.

வெண்பா.

சூழமுடி வற்ற துரியாதீ தத்திசையே
கேழினுடை யாகக் கிளர்ந்திடவே—வாழும்
உவளா வகண்டவிர்த்தி யோன்றிகம்ப ரிப்பேர்
அவதூத னென்றே யறி. (கஎஎ)

(ப - ரை) சூழ=எங்கும், முடிவு அற்ற, துரியாதீத=துரியா தீதமென்னும், திசையே=திசைகளே, கேழின்=தன் பிரகாச மான, உடையாக = வஸ்திரமாக, கிளர்ந்திட (ஏ) = விளங்க, வாழும்=வாழ்கின்ற, உவளா=அசையாத, அகண்டவிர்த்தியோன் =அகண்டாகார விர்த்தியுள்ளோனே, திகம்பரிப்பேர்=திகம்பரன் என்னும் பெயரையுடைய, அவதூதன்=அவதூதனுவன், என்று (ஏ), அறி=அறிவாய், (ஏ. ஏ. அசைகள்) (திக் அம்பரம் = திசை யென்னும் வஸ்திரம்.)

(போ - ரை) எங்கும் முடிவற்ற துரியாதீத மென்னும் திசைகளே தன்பிரகாசமான வஸ்திரமாக விளங்க வாழ்கின்ற அசையாத அகண்டாகார விர்த்தியுள்ளோனே திகம்பரன் என்னும் பெயரையுடைய அவதூதனுவனென்றறிவாய்.

அம்மா சகலத் தயர்ந்தசெயல் பூரையெனச்
சும்மா விருப்பிற் சுழுத்தியுறல் — இம்மாயைப்
பந்தத் துழன்றதுயர்ப் பாடமையு மென்றுதனைச்
சந்திக்கின் முத்திசுகந் தான். (களஅ)

(ப - ரை) (அம்மா,) சகலத்து = நினைவுகளாலே, அயர்ந்த = இளைப்பை யடைந்த, செயல், பூரைஎன = போதுமென்று, சும்மா, இருப்பில் = இருந்தால், சுழுத்தியுறல் = நித்திரை வருதல், இம்மாயைப்பந்தத்து = இம்மாயையின் கட்டுக்குள், உழன்ற, துயர்ப்பாடு = துன்பங்கள், அமையும் = போதும், என்று, தனைச்சந்திக்கின் = தன்னையறிந்தால், முத்திசுகம் (தான்) = முத்திசுகம் விளங்குதலாம். (தான், சாரியை)

(அம்மா, உரையசைச்சொல்)

(போ - ரை) நினைவுகளாகவே இளைப்பை யடைந்த செயல் போதுமென்று சும்மா இருந்தால் நித்திரை வருதல் இம்மாயையின் கட்டுக்குள் உழன்ற துன்பங்கள் போதுமென்று தன்னையறிந்தால் முத்திசுகம் விளங்குதலாம்.

### கலி விருத்தம்.

அவித்தை நித்திரை யான்மூ வவத்தையாய்ப்
பவித்து றும்பிர பஞ்சங் கனவதாம்
சுவத்தி யாய துரிய வனுபவம்
விவத்தை யற்ற விழிப்பென வோர்கவே. (களகூ)

(ப - ரை) அவித்தை = அஞ்ஞான மென்னும், நித்திரையால், மூவவத்தையாய்=சாக்கிரம் சொற்பனம் சுழுத்திகளாக, பவித்து உறும் = தோற்றுகிற, பிரபஞ்சம், கனவு (அது) ஆம்=கனவாம், சுவத்தி ஆய = நன்மையான, துரியவனுபவம், விவத்தை அற்ற= ஆபத்து இல்லாத, விழிப்பு = விழிப்பாம், என, ஓர்க (ஏ)=அறிக. (அது, சொல்லுருபு) (ஏ, அசை).

(போ - ரை) அஞ்ஞானமென்னும் நித்திரையால் சாக்கிரம் சொற்பனம் சுழுத்திகளாகத் தோற்றுகிற பிரபஞ்சம் கனவாம் நன்மையான துரியவனுபவம் ஆபத்து இல்லாத விழிப்பாம் என அறிக.

வெண்பா.

ஆகமன மூடநா னன்றென் பதுதானம்
ஏகமியான் சித்தே யெனன்மேற் செய்—மாகருமம்,
தன்னிடத்திற் றோன்றுவன தானே யெனு முறுதி
அன்னமுணு மாறென் றறி (க௪௦)

(ப - ரை) ஆகம் = உடல், மனம், மூடம் = அஞ்ஞானம் என்பவை, நான் அன்று = நான் அல்ல, என்பது = எனும் நிச்யம், தானம் = ஸ்நானமாம், ஏகம்யான் சித்தே = நான் ஞான சொரூபியாகிய ஏகனே, எனல், மேல்செய் = ஸ்நானத்தின் பின் செய்கிற, மாகருமம் = நல்ல கிரியைகளாம், தன்னிடத்தில், தோன்றுவன = தோற்றுவனவெல்லாம், தானே எனும் உறுதி, அன்னம் உணும் ஆறு = உணவு களுண்ணும் விதமாம், என்று, அறி = அறிக.

(போ - ரை) உடல் மனம் அஞ்ஞானமென்பவை நானல்ல எனும் நிச்சயம் ஸ்நானமாம், நான் ஞானசொரூபமாகிய ஏகனே எனல் ஸ்நானத்தின் பின் செய்கிற நல்ல கிரியைகளாம். தன்னிடத்தில் தோற்றுவன வெல்லாம் தானே எனும் உறுதி உணவுகளுண்ணும் விதமாம் என்று அறிக.

அறுசீர் விருத்தம்.

சத்துவச் சிந்தை நற்போசனங்குரு மார்க்க நெய்யால்
துய்த்திடின் விருத்தி மெய்யிற் றோற்றமாய் நாம ரூபத்
தத்துறு சலமலங்க டரித்திடா தொழிப்ப வான்ம
வித்தையாஞ் சீரமாகும் மேவிடா மாயை நோயே. (கசுக)

(ப - ரை) சத்துவச் சிந்தை = சாத்வீகமான சிந்தனை என்னும், நல் = நல்ல, போசனம் = போசனத்தை, குருமார்க்க நெய் =யால் குரு உபதேசித்த மார்க்கத்திற் செல்லுதல் என்கிற நெய்யும் சேர்த்து, துய்த்திடின் = புசித்தால், விருத்திமெய்யில் = மனமாகிய சரீரத்தில், தோற்றமாம் = ஏற்படுகிற, நாமரூப = நாமம்

ரூபம் என்னும், தத்து உறு = ஆபத்திற்கிடமான, சலமலங்கள் = சலமலங்களை, தரித்திடாது = நிறுத்தாமல், ஒழிப்ப = நீக்கவேண்டும்; அவ்வாறு நீக்க, ஆன்மவித்தை ஆம் = ஆத்மஞானமாகிய, சாரம், ஆகும் = நிலைத்திடும், மேவிடா மாயை நோய் (ஏ) = மாயையென்னும் நோய் வாாது (ஏ, அசை)

(பொ - ரை) சாத்வீகமான சிந்தனை யென்னும் நல்ல போசனத்தைக் குரு உபதேசித்த மார்க்கத்திற் செல்லுதலென்கிற நெய்யும் சேர்த்துப் புசித்தால் மனமாகிய சரீரத்தில் ஏற்படுற நாமம் ரூபம் என்னும் ஆபத்திற்கிடமான சலமலங்களை நிறுத்தாமல் நீக்கவேண்டும் அவ்வாறு நீக்க ஆத்மஞானமாகிய சாரம் நிலைத்திடும், மாயையென்னும் நோய் வராது.

கலி நிலைத்துறை.

சத்து மாச் சித்துச் சருக்கரை யானந்தத் தனிநெய்
ஒத்த தன்சத்தி யுருவுல காமபூ பங்கள்
சித்தி ரம்பெறச் செய்துதன் னுட்கொளு மனுதி
முத்த னதிமுத் தருக்குமுட் கொளத்தரு முறையால் (கஉ௨)

(ப - ரை) சத்து = இருப்பு என்னும், மா = மாவும், சித்து விளக்கமென்கிற, சருக்கரை = சர்க்கரையும், ஆனந்தத் தனிநெய் = சுகமாகிய ஒப்பற்ற நெய்யும், ஒத்த = கலந்த, தன்சத்தி = தனது சக்திகளின், உரு = வடிவமான, உலகு ஆம் = உலகங்கள் எனும், ஆபூபங்கள் = பலகாரங்களை, சித்திரம் பெற = விசித்திரங்களாக, செய்து, தன் உள்கொளும் = மறுபடியும் தன்னில் அடங்கும்படி உட்கொள்ளும், அனுதி முத்தன் = இயல்பாகவே முத்த சொரூபியாகிய ஈசுவரன், ஆதி முத்தருக்கும் = ஒவ்வொரு காலத்தில் முத்தர்களாகிற ஞானிகளுக்கும், உள்கொள = உட்கொள்ளும்படி, தரும் முறையால் = முறையாகக் கொடுப்பான்.

(பொ - ரை) இருப்பு என்னும் மாவும் விளக்கமென்கிற சர்க்கரையும் சுகமாகிய ஒப்பற்ற நெய்யும் கலந்த தனது சக்திகளின் வடிவமான உலகங்களெனும் பலகாரங்களை விசித்திரங்களாகச் செய்து மறுபடியும் தன்னில் அடங்கும்படி உட்கொள்ளும் இயல்பாகவே முத்த சொரூபியாகிய ஈசுவரன் ஒவ்வொரு காலத்தில் முத்தர்களாகிற ஞானிகளுக்கும் உட்கொள்ளும்படி முறையாகக் கொடுப்பான்.

## கலி விருத்தம்.

வியன்மறைப் பசுவின் விளங்குசற் கன்ம
மயமுபா சனையா மாசலத் திதய
நயமனை சுசியே ஞானமாம் பாலைக்
கயமுற விசாரக் காய்ச்சல்செய் துணலாம். (கஃரு)

(ப-ரை) வியன்மறை = பெருமை பொருந்திய வேதமென்னும், பசுவின் = பசுவினிடத்து, விளங்கு=விளங்குகிற, சற்கன்ம மயம் = நிஷ்காம புண்ணிய கர்மமாகிய சாணத்தாலும், உபாசனை ஆம் = ஈசுவர உபாசனை யென்கிற, மா = பெருமையுற்ற, சலத்து = கோசலத்தாலும், இதய நயமனை = உள்ளமென்னும் நல்லவீடு, சுசியே = சுத்தமாகும், ஞானமாம் = பின்பு ஞானமாகிய, பாலை, கயம் உற=மேன்மையாக, விசார = விசாரமென்னும், காய்ச்சல்= காய்ச்சுதலை, செய்து, உணல்ஆம் = உண்ணலாம்.

(பொ-ரை) பெருமை பொருந்திய வேதமென்னும் பசுவினிடத்து விளங்குகிற நிஷ்காம புண்ணிய கர்மமாகிய சாணத்தாலும் ஈசுவர உபாசனை யென்கிற பெருமையுற்ற கோசலத்தாலும் உள்ளமென்னும் நல்லவீடு சுத்தமாகும் பின்பு ஞானமாகிய பாலை மேன்மையாக விசாரமென்னும் காய்ச்சுதலைச் செய்து உண்ணலாம்.

ஆன்ம ஞான வமுதிற் பரோட்சநீர்
தான்மு டிந்து தனியப ரோட்சத்தேம்
மேன்மி குப்ப விசாரணைக் காய்ச்சல்செய்
பான்மை பானம் பரபத்தி சீனியே. (கஃசு)

(ப-ரை) ஆன்மஞான = ஆத்மஞானமென்னும், அமுதில் = பாலில், பரோட்சநீர் = பரோக்ஷத் தன்மையாகிய நீர், (தான்), முடிந்து = இல்லாதுவற்றி, தனி=ஒப்பற்ற, அபரோட்சத்தேம்= அபரோக்ஷமென்கிற சுவை, மேல் மிகுப்ப=நன்றாய் அதிகப்பட, விசாரணை=விசாரணையென்னும், காய்ச்சல் செய்பான்மை=காய்ச்சுதலைச்செய்யும் விதமே, பானம் = அப்பாலை உண்ணுதலாம், பரபத்தி, சீனியே = நல்ல சர்க்கரையாம், (தான் சாரியை) (பரோட்சம் = அனுபவமில்லாமை) (அபரோட்சம் = அனுபவம்).

(போ - ரை) ஆத்மஞானமென்னும் பாலில் பரோக்ஷத் தன்மையாகிய நீர் இல்லாது வற்றி ஒப்பற்ற அபரோக்ஷ மென்கிற சுவை நன்ருய் அதிகப்பட விசாரணை யென்னும் காய்ச்சுதலைச் செய்யும் விதமே அப்பாலை உண்ணுதலாம் பரபத்தி நல்ல சர்க்கரையாம்.

அறுசீர் விருத்தம்.

சீவனெனுஞ் சுதைநிட்கா மியகன்மக் காய்ச்சலுறத்
தேசி கன்சொல்
மேவலெனும் பிரையிடப்பெற் றப்யாசி யாந்ததியாய்
விவேக மத்தால்
வீவரிய விசாரமெனுங் கடைதலில்யான் சான்றெனுமவ்
வெண்ணெய் தானுய்த்
தேவையகண் டாகாரவிருத்தியெனும் முருக்கலுறிற்
சிவமாம் நெய்யே. (கசுரு)

(ப - ரை) சீவனெனும், சுதை = பால், நிட்காமிய, கன்ம = கர்மமென்கிற, காய்ச்சல்உற = காய்ச்சுதலை யடைந்தால், தேசிகன் சொல் = குருவின் உபதேசத்தை, மேவல் எனும் = பொருந்துதலாகிய, பிரையிடப்பெற்று, அப்யாசி, ஆம்ததியாகி = என்கிற தயிராகி, விவேகமத்தால் = விவேகமான மத்தினுல், வீவுஅரிய = கெடாத, விசாரமெனும், கடைதலில் = கடைதலைச் செய்தலால், யான்சான்று எனும் = நான்சாக்ஷி யென்கிற, அவ்வெண்ணெய் (தான்) ஆய் = அத்தன்மையுடைய வெண்ணெயாகி, தேவை = அவசியமான, அகண்டாகார விருத்தியெனும், உருக்கல் உறில் = உருக்குதலை யடைந்தால், சிவமாம் = சிவமென்கிற, நெய்யே = நெய்யாகும். (தான், சாரியை)

(போ - ரை) சீவனெனும் பால் நிஷ்காமிய கர்மமென்கிற காய்ச்சுதலையடைந்தால் குருவின் உபதேசத்தைப் பொருந்து தலாகிய பிரையிடப்பெற்று அப்யாசி யென்கிற தயிராகி விவேகமான மத்தினுல் கெடாத விசாரமெனும் கடைதலைச் செய்தலால் நான்சாக்ஷி யென்கிற அத்தன்மையையுடைய வெண்ணெயாகி அவசியமான அகண்டாகாரவிருத்தி யெனும் உருக்குதலையடைந்தால் சிவமென்கிற நெய்யாகும்.

## கலி விருத்தம்.

இதய பாத்திரத் திற்பிர பஞ்சமாம்
ததியை யுண்மைவி சாரக் கடைதல்செய்
விதமு றிற்றுரி யப்பர வெண்ணெய்தான்
எதிரு மாங்குமுன் னிற்கல வாதரோ. (க௪௬)

(ப - ரை) இதய = உள்ளமென்னும், பாத்திரத்தில்=பாத்திரத்திற் பொருந்திய, பிரபஞ்சம், ஆம் ததியை = ஆகிய தயிரை, உண்மைவிசார = உண்மையான விசாரமென்கிற, கடைதல், செய் விதம்=செய்யும் விதம், உறில் = ஏற்பட்டால், துரியப்பர = மேலான துரியசொரூபமாகிய கூடஸ்தரெனும், வெண்ணெய்(தான்), எதிரும் = தோன்றும், ஆங்கு அப்போது அப்பிரபஞ்சத்தில் அது, முன்னில் = முன்போல், கலவாது, (அரோ, அசை) (தான், சாரியை)

(பொ - ரை) உள்ளமென்னும் பாத்திரத்திற் பொருந்திய பிரபஞ்சமாகிய தயிரை உண்மையான விசாரமென்கிற கடைதல் செய்யும் விதம் ஏற்பட்டால் மேலான துரியசொரூபமாகிய கூடஸ்தரெனும் வெண்ணெய் தோன்றும், அப்போது அப்பிரபஞ்சத்தில் அது முன்போலக் கலவாது.

## கோச்சகக்கலிப்பா

பொருந்தியமா கர்த்தன்மகா போகிமகாத் தியாகி
ஒருங்கிநிகழ் நவநீத முருகியநெய் யுறைநெய்
வரும்பிரம வித்துவரன் வரியானே வரிட்டன்
கரும்பிரசம் பாகினிய கட்டிசருக் கரையே (க௪௭)

(ப - ரை) பொருந்திய, மா = மகா, கர்த்தன், மகாபோகி, மகாத்தியாகி, (என்பவர் முறையே), ஒருங்கிநிகழ் = ஒன்றுபட்டு விளங்கும், நவநீதம் = வெண்ணெய், உருகிய நெய், உறை = உறைந்த, நெய் = நெய் எனலாம், வரும் = முத்திநிலையில் வருகின்ற, பிரமவித்து, வரன்=பிரமவரன், வரியான் (ஏ) = பிரமவரியான், வரிட்டன் = பிரம வரிட்டனென்பவர் முறையே, கரும்பு இரசம்=கரும்பின் சாறு, பாகு, இனிய கட்டி = வெல்லக்கட்டி, சருக்கரை (ஏ)=சர்க்கரை எனலாம் (ஏ, ஏ, (அசைகள்)

(போ - ரை) பொருந்திய மகா கர்த்தன் மகாபோகி மகாத்தியாகி என்பவர் முறையே ஒன்றுபட்டு விளங்கும் வெண்ணெய் உருகிய நெய் உறைந்த நெய் எனலாம். முத்திநிலையில் வருகின்ற பிரமவித்து பிரமவரன் பிரமவரியான் பிரம வரிட்டனென்பவர் முறையே கரும்பின் சாறு பாகு வெல்லக்கட்டி சர்க்கரை எனலாம்.

வஞ்சி விருத்தம்.

சவிகற்ப சமாதிகள் கற்கண்
டவியற்கை யலர்நிர்வி கற்பம்
துவியற்ற சுவைப்படிவப்பா
கிவிதச்சுவை யேபர மான்மா (௧௮௪)

(ப - ரை) (௧) சவிகற்பசமாதிகள், கற்கண்டு = கற்கண்டாம், அ இயற்கை அலர் = அத்தன்மையல்லாத, நிர்விகற்பம் = நிர்விகற்ப சமாதி, துவியற்ற = இரண்டற்ற, சுவைப்படிவ = உருசி வடிவமான, பாகு = பாகாம், (௩) இவித = இவ்விரண்டு விதத்திலுமுள்ள, சுவையே = உருசியேயாம், (௨) பரமான்மா = பிரமம்.

(போ - ரை) சவிகற்ப சமாதிகள் கற்கண்டாம்; அத்தன்மையல்லாத நிர்விகற்ப சமாதி இரண்டற்ற உருசி வடிவமான பாகாம்; பிரமம் இவ்விரண்டு விதத்திலு முள்ள உருசியேயாம்.

கலி நிலைத்துறை.

சுதை கற்கண்டுதேன் முக்கனி சீனிசந் தோடம்
மதிபச் சைக்கருப் பூரஞ் சந்தனந்தென் றன் மலர்கள்
திதிகொள் சாந்தியாழ் வேய்ங்குழல் சோதிநிட் சேபம்
ததிவி சாரணை யமிர்தங்கற் பகஞ்சாது சங்கம் (௧௮௫)

(ப - ரை) சுதை = பால், கற்கண்டு தேன், முக்கனி, சீனி = சீனிச்சர்க்கரையாகிய இவைகள், சந்தோடம் = சந்தோஷமாம், மதி = பூரணசந்திரன், பச்சைக்கருப்பூரம், சந்தனம், தென்றல், மலர்கள் = புஷ்பங்கள் எனுமிவை, திதிகொள் = நிலைமையான, சாந்தி = சாந்தமாம், யாழ் = வீணை, வேய்ங்குழல் = புல்லாங்குழல், சோதி = பிரகாசம், நிட்சேபம் = புதையல்

என்கிற இவைகள், தநி = சமயத்திலான, விசாரணை = விசாரணை யாம், அமிர்தம், கற்பகம் = கற்பக விருக்ஷமென்னுமிவை, சாதுசங் கம் = சாது சங்கமாம்.

(பொ - ரை) கற்கண்டு தேன் முக்கனி சீனிச்சர்க்கரை ஆகிய இவைகள் சந்தோஷமாம்; பூரணச்சந்திரன் பச்சைக் கருப் பூரம் சந்தனம் தென்றல் புஷ்பங்கள் எனுமிவை நிலைமையான சாந்த மாம்; வீணை புல்லாங்குழல் பிரகாசம் புதையல் என்கிற இவைகள் சமயத்திலான விசாரணையாம்; அமிர்தம் கற்பகவிருக்ஷ மென்னு மிவை சாது சங்கமாம்.

வெண்பா.

தூநாக வல்லி துவர்ப்பாகு நற்சுண்ணம்
பூநாற மெல்லிற் பொறிமகிழ்தல்—ஆறாத
சீடப் பிரஞ்ஞை தெளிகலையூ கங்குரு சொல்
கூடத் துரியநிலைக் கோள் (ககூ0)

(ப - ரை) தூ = சுசியான, நாகவல்லி = வெற்றிலை, துவர்ப் பாகு = துவரானபாக்கு, நற்சுண்ணம் = நல்லசுண்ணம் என்னு மிவற்றை, பூநாற = நன்றாக மணக்கும்படி, மெல்லில் = மென் றால், பொறி = புத்தியும் இந்திரியங்களும், மகிழ்தல் = மகிழ்ச்சி யடைதல், ஆறாத = நீங்காத, சீடப்பிரஞ்ஞை = சீஷனது உணர்ச்சி, தெளிகலையூகம் = தேர்ந்த சாஸ்திரயுக்தி, குருசொல் = குருவாக் கியம் ஆகிய இவைகள், கூட = பொருந்தி விளங்க, துரிய நிலைக் கோள் = துரிய நிலையைச் சேர்தலாம்.

(பொ - ரை) சுசியான வெற்றிலை துவரான பாக்கு நல்ல சுண்ணம் என்னுமிவற்றை நன்றாக மணக்கும்படி மென்றால் புத்தியும் இந்திரியங்களும் மகிழ்ச்சியடைதல் நீங்காத சீஷனது உணர்ச்சி தேர்ந்த சாஸ்திர யுக்தி குருவாக்கியம் ஆகிய இவைகள் பொருந்தி விளங்கத் துரிய நிலையைச் சேர்தலாம்.

ஞானத் தருப்பணத்தி னல்விருத்திக் கண்ணாற்சு
வானுபவ மாந்தன் னழகினைக்கண்—டானே
நிரதிசயா னந்தமகிழ் நேர்வனக்கண் ணாடி
நாதனுவாஞ் செப்பிசையு நன்கு. (ககக)

(ப - ரை) (க) ஞானத் தருப்பணத்தில்=ஞானமென்கிற கண்ணுடியில், நல்விருத்திக்கண்ணுல்=சத்துவ விர்த்தியென்னுங்கண்ணினுல், சுவானுபவம், ஆம் தன் அழகினை=ஆகிய தனது அழகை, கண்டானே=கண்டவனே, நிரதிசயானந்த, மகிழ் = மகிழ்ச்சியை, சேர்வன்=அடைவான், அக்கண்ணுடி=அந்தஞானமென்கிற கண்ணுடி, (ங) நரதனு ஆம்=மனித சரீரமென்னும், செப்பு இசையும்=கூட்டிற் பொருந்தியிருக்கும், (உ) நன்கு=நன்ருக.

(பொ - ரை) ஞானமென்கிற கண்ணுடியில் சத்துவ விர்த்தியென்னுங் கண்ணினுல் சுவானுபவமாகிய தனது அழகைக்கண்டவனே நிரதிசயானந்த மகிழ்ச்சியை அடைவான்; அந்த ஞானமென்கிற கண்ணுடி நன்ருக மனிதசரீரமென்னுங் கூட்டிற் பொருந்தியிருக்கும்.

### கலி விருத்தம்.

சாத்து வீக மனநற் றருப்பணம்
வாய்த்தஞானி தெரிவன் மகிழ்ந்ததில்
ஆத்த மான வகண்ட விருத்தியாங்
கூர்த்த சாயை கொடுதன் சொரூபமே. (கசஉ)

(ப - ரை) (க) சாத்துவீக, மனநல் தருப்பணம் = மனமாகிய நல்ல கண்ணுடியை, வாய்த்தஞானி=அடைந்த ஞானி, (ச) தெரிவன்=காண்பான், (ங) மகிழ்ந்து=மகிழ்ச்சியாய், (உ) அதில் = அக்கண்ணுடியில், ஆத்தமான = உண்மை உறவாகிய, அகண்ட விருத்திஆம் = அகண்டாகார விர்த்தியென்னும், கூர்த்த=சூட்சும மான, சாயைகொடு=பிரதி பிம்பத்தைக்கொண்டு, தன்சொரூபம் (ஏ)=தனது உருவத்தை (ஏ, அசை)

(பொ - ரை) சாத்துவீக மனமாகிய நல்ல கண்ணுடியை அடைந்த ஞானி, அக்கண்ணுடியில், உண்மை உறவாகிய அகண்டாகார விர்த்தியென்னும் சூட்சுமமான பிரதிபிம்பத்தைக் கொண்டு, தனது உருவத்தை மகிழ்ச்சியாய்க் காண்பான்.

இராச தந்தம சேய்ந்த விதயமாம்
விராவு பன்மை விகாரத் தருப்பணம்
வராக மூடமனேவிருத் திச்சகம்
பராவ ேநாக்கிப் பலவுயிர் மாழ்குமால். (கசங)

(ப - ரை) (உ) இராசதம், தமசு = தாமதம், ஏய்ந்த = பொருந்திய, இதயம் ஆம் = மனமென்னும், விராவு பன்மை விகார = பல விகாரம் சேர்ந்த, தருப்பணம் = கண்ணாடியில், வராக = பன்றிபோலும், மூட, மனோவிருத்தி = மனோவிருத்தியாகிய, சகம் = உலகத்தை, பராவநோக்கி = விரிவாகப்பார்த்து, (க) பலஉயிர் = பல ஜீவர்கள், (ங) மாழ்கும் = வருந்தியுழல்வார்கள் (ஆல் அசை).

(பொ - ரை) பல ஜீவர்கள் இராசதம் தாமதம் பொருந்திய மனமென்னும் பலவிகாரம் சேர்ந்த கண்ணாடியில் பன்றிபோலும் மூட மனோவிருத்தியாகிய உலகத்தை விரிவாகப்பார்த்து வருந்தியுழல்வார்கள்.

பஞ்ச பூதம் பவுதிக மிவ்வுடல்
முஞ்சு யிர்ப்பிந் தியமன மூடமும்
விஞ்சு மாயை விசேடக் கண்ணாடியிற்
செஞ்செ வேயான் றெரியுமென் சாயையே (கககச)

(ப - ரை) பஞ்சபூதம், பவுதிகம் = பூதங்களின் காரியம், இவ்வுடல், முஞ்சு = முதிர்ந்த, உயிர்ப்பு = பிராணவாயு, இந்தியம் = இந்திரியங்கள், மனம், மூடமும் = அஞ்ஞானமென்னும் இவைகள், விஞ்சுமாயை = பெரியமாயை யென்கிற, விசேட = சுபாவமல்லாத, கண்ணாடியில், செஞ்செவே = மிகவும் திடமாய், யான் தெரியும் = நான் பார்க்கிற, என்சாயையே = எனது பிரதி பிம்பமே தான்.

(செவே, செவ்வே என்பதன் இடைக்குறை)

(பொ - ரை) பஞ்ச பூதம் பூதங்களின் காரியம் இவ்வுடல் முதிர்ந்த பிரணவாயு இந்திரியங்கள் மனம் அஞ்ஞான மென்னுமிவைகள் பெரிய மாயையென்கிற, சுபாவமல்லாத கண்ணாடியில் மிகவும் திடமாய் நான் பார்க்கிற எனது பிரதி பிம்பமேதான்.

வெண்பா.

சிற்சத்திச் சூதஞ் சிவனும் பரப்பிரமத்
தற்பணத்திற் புந்தித் தகைவிழியான்—முற்பரவக்
காணுஞ் சகத்தைக் கனவா சனமயமாய்ப்
பூணு முயிர் புறம்பே போல். (ககரு)

(ப-ரை) (௩) சிற்சத்திச் சூதம் = ஞானசத்தியென்னும் இரசம். சிவணும் = பொருந்திய, பரப்பிரமத் தற்பணத்தில் = மேலான பிரமமாகிய கண்ணாடியில், (உ) புந்தி=புத்தி என்கிற, தகைவிழியால் = ஒப்பற்ற நேத்திரத்தினுல் (௯) முன்பரவ = எதிரே விஸ்தாரமாக, (அ) காணும் = பார்க்கும், (ரு) சகத்தை= உலகத்தை (ப) கனவாசனைமயமாய் = திடவாசனையின் வடிவமாய், (க) பூணும் உயிர் ="பற்றுகின்ற ஜீவன், (எ) புறம்பேபோல்= வேறு போலவே.

(பொ-ரை) பற்றுகின்ற புத்தியென்கிற ஒப்பற்ற நேத்திரத்தினுல் ஞானசத்தியென்னும் இரசம் பொருந்திய மேலான பிரமமாகிய கண்ணாடியில் திடவாசனையின் வடிவமாய் உலகத்தை எதிரே விஸ்தாரமாக வேறு போலவே பார்க்கும்.

கலி நிலைத்துறை.

இணக்கில் வான்சிவ மது சற்சிற் சுகசத்தி யெனுந்தர்ப்
பணத்தில் வேறறத் தன்னையே தானெனப் பார்க்கும்
அணுக்கள் பொய்சடந் துயர்மனத் தருப்பணத் தனந்த
வணத்தெ திர்த்தொன்றை யானென்ப ரதுவும் பொய்
மயக்கே (௧௯௯)

(ப-ரை) இணக்கு இல் = பற்றில்லாத, வான்சிவம் (அது) = மேலானசிவம், சத்சித்சுக = சச்சிதானந்த, சத்தியெனும், தர்ப்பணத்தில் = கண்ணாடியில், வேறு அற = பேதமின்றி, தன்னையே தானெனப்பார்க்கும், அணுக்கள் = ஜீவர்கள், பொய், சடம்= அறியாமை, துயர் = துன்பம் என்பனவாகிய, மனத்தருப்பணத்து மனமெனும் கண்ணாடியில், அனந்த வணத்து = அநேகவிதமாக, எதிர்த்து = தன்னை எதிரேபார்த்து, ஒன்றை = அவற்றிலொவ்வொரு சரீரத்தை, யானென்பர் = நானென்று அபிமானிப்பார்கள், அதுவும்,பொய்மயக்கே=பொய்யான மயக்கமேயாம்.

(அது, சொல்லுருபு)

(பொ-ரை) பற்றில்லாத மேலான சிவம் சச்சிதானந்த சத்தியெனுங் கண்ணாடியில் பேதமின்றித் தன்னைத் தானெனப் பார்க்குஞ் சீவர்கள் பொய், அறியாமை, துன்பம், என்பனவாகிய

மனமெனுங் கண்ணுடியில் அநேகவிதமாகத் தன்னை எதிரே பார்த்து அவற்றிலொவ்வொரு சரீரத்தை நானென்று அபிமானிப்பார்கள். அதுவும் பொய்யான மயக்கமேயாம்.

கலி விருத்தம்.

ஆரணத் தேர்ச்சியா மபர ஞானத்தர்
ஊரணி மணலின்வீட் டுவத்தல் செய்மகார்
பூரணன் மானுபூ தியைப்பொ ருந்தினோர்
தோரணப் பெருமனை சுகிக்கு மாந்தரே. (கஆள)

(ப - ரை) ஆரணத்தேர்ச்சி ஆம்=வேதசாஸ்திரத்தை யறிந்த தேர்ச்சியாகிய, அபரஞானத்தர்=பரோக்ஷஞான முடையவர், ஊர் அணி=ஊரையடுத்து, மணலின்வீட்டு=மணலாற் செய்தவீட்டில், உவத்தல்செய்=விளையாடி மகிழ்கின்ற, மகார் = சிறுவர்களாம், பூரண, ஆன்ம அனுபூதியை = ஆத்ம அனுபவத்தை, பொருந்தினோர்=பொருந்திய அபரோக்ஷ ஞானிகள், தோரண = தோரணங்கள் கட்டிய, பெருமனை=பெரிய வீட்டில், சுகிக்கும் மாந்தர் (ஏ)= வாழ்ந்து சுகிக்கும் மனிதராம். (ஏ அசை) (அணி, அண்ணி என்பதன் இடைக்குறை.)

(பொ - ரை) வேதசாஸ்திரத்தை யறிந்த தேர்ச்சியாகிய பரோக்ஷ ஞானமுடையவர் ஊரையடுத்து மணலாற் செய்த வீட்டில் விளையாடி மகிழ்கின்ற சிறுவர்களாம். பூரண ஆத்ம அனுபவத்தைப் பொருந்திய அபரோக்ஷ ஞானிகள் தோரணங்கள்கட்டிய பெரிய வீட்டில் வாழ்ந்து சுகிக்கும் மனிதராம்.

அறுசீர் விருத்தம்.

மிகுதம சினர்சி சுக்கண் மிருகவோர் வினரே பாலர்
இகலவாச் சற்கன் மத்த ரெழில்விளை யாட்டு மைந்தர்
உகளுநிட் காம கன்மத் துறுபவர் கல்வி கற்போர்
பகர்முமூட்சு க்கண் மேலாம் பயன்பெறற் குரிய மாந்தர் (கஆஅ)

(ப - ரை) மிகுதமசினர்=மிகுந்த தமோகுணத்தை யுடையவர், சிசுக்கள் = குழந்தைகளாம், மிருக ஓர்வினர் (ஏ) = மிருகத்தின் உணர்வைப் பெற்றோர், பாலர் = சிறுவர்களாம், இகல் = மாறுன, அவாச் சற்கன்மத்தர்=காமிய புண்ணிய கர்மங்களைச் செய்வோர்,

எழில் விளையாட்டுமைந்தர்=அழகிய விளையாட்டுப் பிள்ளைகளாம், உகளும்=தாண்டுகின்ற, நிட்காம, கன்மத்து உறுபவர் = புண்ணிய கர்மத்தைப் பொருந்தினோர், கல்விகற்போர் = கல்விகற்போராம், பகர்=சொல்லப்படுகின்ற, முமூட்சுக்கள், மேலாம்பயன்=மேலான பிரயோஜனத்தை, பெறற்கு உரிய மாந்தர் = அடையத்தக்க புருஷராம். (ஏ, அசை).

(போ - ரை) மிகுந்ததமோ குணத்தையுடையவர் குழந்தைகளாம், மிருகத்தின் உணர்வைப் பெற்றோர் சிறுவர்களாம், மாறுனகாமிய புண்ணிய கர்மங்களைச் செய்வோர் அழகிய விளையாட்டுப் பிள்ளைகளாம். தாண்டுகின்ற நிஷ்காம புண்ணிய கர்மத்தைப் பொருந்தினோர் கல்விகற்போராம், சொல்லப்படுகின்ற முமூட்சுக்கள் மேலான பிரயோஜனத்தை அடையத்தக்க புருஷராம்.

தத்துவ ஞானப் யாசி தக்ககா ரியஞ்செய் பூமான்
அத்தமாம் பிரம வித்தே யடையவேண் டியத டைந்தோன்
ஒத்துள வரன்மா செல்வன் னுயர்வரி யான்றான் மன்னன்
சத்துவ வரிட்டன்னேக சக்கர வர்த்தி யன்றே. (கககூ)

(ப - ரை) தத்துவஞான அப்பியாசி, தக்ககாரியம், செய்பூமான் =செய்கின்ற புருஷனும், அத்தம் ஆம்=பொருளாகிய, பிரமவித்து (ஏ), அடையவேண்டியது, அடைந்தோன் = அடைந்தவனும், ஒத்துஉள=பொருந்தியிருக்கின்ற, வரன்=பிரமவரன், மாசெல்வன் =மகாசெல்வ முடையோனும், உயர்வரியான் (தான்) = உயர்ந்த பிரமவரியான், மன்னன்=அரசனும், சத்துவ=சுத்த சத்துவமான, வரிட்டன்=பிரமவரிட்டன், ஏகசக்கரவர்த்தி = ஒருவனாகிய சக்கர வர்த்தியாம்.

(அன்று ஏ, அசைகள்) (தான்சாரியை) மேற்கவியும் இதுவும் ஒரு தொடர்ச்சி.

(போ - ரை) தத்துவஞான அப்பியாசி தக்ககாரியம் செய்கின்ற புருஷனும்; பொருளாகிய பிரமவித்து அடையவேண்டியதை அடைந்தவனும்; பொருந்தியிருக்கின்ற பிரமவரன் மகா செல்வ முடையோனும்; உயர்ந்த பிரமவரியான் அரசனும்; சுத்த சத்துவ மான பிரமவரிட்டன் ஒருவனாகிய சக்கரவர்த்தியாம்.

## கட்டளைக் கலிப்பா.

ஓவியன்செய் யுருக்களு மெய்யெனு தோர்நரர்க்கு விருப்பு
[வெறுப்பற
மாவினோதம தாமவை மெய்யெனு மாலின்வேட்பு வெறுப்
[புறுமைந்தர்துன்
பாவரென்றல் பரன்செய்சகமுமெய் யன்றெனத்தெளி ஞானிக்
[கவாவெறுப்
போவவாதல் வினோதமெய்யென்றுமால் வோர்விருப்பு
[வெறுப்புற்றுலைவதே. (௨௦௦)

(ப - ரை) ஓவியன் = சித்திரிகன், செய் உருக்களும் = செய்கின்றபலவித உருவங்களையும், மெய் எனுது = உண்மையென்று நினையாமல், ஓர் = தெரிகின்ற, நரர்க்கு = மனிதர்க்கு: விருப்பு வெறுப்பு, அற = இல்லாமல், மா = மகா, வினோதம் (அது) ஆம், அவை = அவ்வுருவங்களை, மெய் எனும் = உண்மையென்று நினைக்கும், மாலின் = மயக்கத்தால், வேட்பு = விருப்பு, வெறுப்பு, உறும்மைந்தர் = அடைகின்ற சிறுவர், துன்பு ஆவர் = துன்பமுறுவார், என்றல் = எனல், பரன் = ஈசுவரன், செய் = தோற்றுவிக்கிற, சகமும் = உலகமும், மெய் அன்று என = உண்மையல்லவென்று, தெளி = தேர்ந்த, ஞானிக்கு, அவா = விருப்பு, வெறுப்பு, ஓவ = இன்றி, ஆதல் வினோதம் = வினோதமாகும், மெய்யென்று = உண்மையென, மால்வோர் = மயங்குவோர், விருப்பு வெறுப்பு, உற்று = அடைந்து, உலைவது (ஏ) = வருந்துவர் என்பதாம்.

(ஏ. அசை) (அது, சொல்லுருபு)

(பொ - ரை) சித்திரிகன் செய்கின்ற பலவித உருவங்களையும் உண்மையென்று நினையாமல் தெரிகின்ற மனிதர்க்கு விருப்பு வெறுப்பு இல்லாமல் மகா வினோதமாம், அவ்வுருவங்களை உண்மையென்று நினைக்கும் மயக்கத்தால் விருப்பு வெறுப்பு அடைகின்ற சிறுவர் துன்பமுறுவார் எனல், ஈசுவரன் தோற்றுவிக்கிற உலகமும் உண்மை அல்ல வென்று தேர்ந்த ஞானிக்கு விருப்பு வெறுப்பு இன்றி வினோதமாகும், உண்மையென மயங்குவோர் விருப்பு வெறுப்பு அடைந்து வருந்துவர் என்பதாம்.

வெண்பா.

சச்சிதா னந்தசிவந் தானுய மாந்திரிகன்
வைச்சுளதன் சத்தியா மந்திரத்தா—லச்சோ
திகழொருதா னேகால தேசம்வத் தென்ன
நிகழுருமூன் றாமே நெடிது (உ0௧)

(ப - ரை) சச்சிதானந்த=சச்சிதானந்த சொரூபமாகிய, சிவம் (தான்), ஆய=என்னும், மாந்திரிகன், வைச்சு உள=அபேதமாக வைத்திருக்கின்ற, தன்=தனது, சத்தி, ஆம்=ஆன, மந்திரத்தால், (அச்சோ), திகழ்=விளங்குகின்ற, ஒருதானே ஒப்பற்ற ஏகமாகிய தானே, கால தேசம் = காலமும் இடமும், வத்து = வஸ்துக்களும், என்ன = என, நிகழ் = தோன்றுகிற, உருமூன்று = மூவகைத் தோற்றமாக, ஆம் (ஏ) நெடிது = விஸ்தாரமாய்க் காணப்படும். (தான் சாரியை) (அச்சோ, ஆச்சரியக் குறிப்பு) (ஏ அசை)

(போ - ரை) சச்சிதானந்த சொரூபமாகிய சிவம் என்னும் மாந்திரிகன் அபேதமாக வைத்திருக்கின்ற தனது சத்தியான மந்திரத்தால் விளங்குகின்ற ஒப்பற்ற ஏகமாகிய தானே காலமும் இடமும் வஸ்துக்களும் எனத்தோன்றுகிற மூவகைத் தோற்றமாக விஸ்தாரமாய்க் காணப்படும்.

எழுசீர் விருத்தம்.

பிரமமாம் விரைதன் னிடத்ததி சயமாய்ப்
பின்னமில் சத்தியா மையால்
அரியவீச் சுரனுந் தாருவா யவதா
ரம்பல வாங்கிளைகளு மாய்த்,
திருவிளை யாடற் றழைகளாய்ச் சீவத்
திரண்மல ராய்க்குருப் பழமாய்ப்
பரவியே சகப்புல் லுருவியாய்த் தோற்றம்
படினுமோர் பரிணமிப் பிலதே (உ0உ)

(ப - ரை) பிரமம், ஆம்விரை = ஆகிய விதை, தன்னிடத்து அதிசயமாய், பின்னம் இல் = பேதமில்லாதிருக்கின்ற, சத்தி, ஆம் = எனும், மையால் = மையினால், அரிய = அருமை

யான, ஈச்சுரன் ஆம் = ஈசுவரன் என்கிற, தாரு ஆய் = விருக்ஷ மாகி, அவதாரம் பல ஆம் = பல அவதாரமான. கிளைகளும் ஆய், திரு=தெய்வீகமாகிய, விளையாடல் = விளையாட்டென்கிற, தழைகள், ஆய்= ஆகி, சீவத்திரள் மலர் = சீவர்கூட்ட மென்னும் மலர்கள், ஆய், குருப்பழம் ஆய்=குருவென்னும் பழமுமாகி, பரவி (ஏ) =விஸ்தாரமய்த் தோன்றி, சக=உலகமென்னும், புல்உருவி ஆய், தோற்றப்படினும், ஓர்பரிணமிப்பு = சிறிது மாறுபாடும், இலதே= இல்லாததேயாகும். (ஏ, அசை)

(பொ - ரை) பிரமமாகிய விதை தன்னிடத்து அதிசயமாய்ப் பேதமில்லாதிருக்கின்ற சத்தி எனும் மையினால் அருமையான ஈசுவரன் என்கிற விருக்ஷமாகிப் பல அவதாரமான கிளைகளுமாய்த் தெய்வீகமாகிய விளையாட்டென்கிற தழைகளாகிச் சீவர்கூட்ட மென்னும் மலர்களாய்க் குருவென்னும் பழமுமாகி விஸ்தாரமாய்த் தோன்றி உலகமென்னும் புல்லுருவியாய்த் தோற்றப்படினும் சிறிது மாறுபாடு மில்லாததேயாகும்.

### அறுசீர் விருத்தம்.

தந்திர மாயா சத்தி தன்வச முடைய வீசன்
இந்திர சால வித்தை யினனதைக் கண்டு மெய்யாச்
சிந்தையுற் றவாவெ றுப்புச் செய்யுமஞ் ஞானியோர்வில்
மைந்தர்பொய் வினோத மாக்காண் மனிதர்மெய்ஞ் ஞானத்
[தோரே. (உ0ரு)

(ப - ரை) (க) தந்திர=அலங்கரிப்பாய, மாயா, சத்தி = சத்தியை, தன்வசம்=தனது வசமாக, உடைய=கொண்ட, ஈசன்=ஈசுவரன், இந்திரசால, வித்தையினன் = வித்தையை யுடையவனும், அதைக்கண்டு= அவனது வித்தையைக்கண்டு, மெய் ஆ=உண்மையாக, சிந்தை உற்று=நினைத்து, அவா=விருப்பு, வெறுப்பு, செய்யும் அஞ்ஞானி = அடைகின்ற அஞ்ஞானிகள், ஓர்வுஇல் = அறிவற்ற, மைந்தர்=சிறுவர்களாம், (ந) பொய்வினோதம் ஆ = பொய்யாகவும் வினோதமாகவும், காண்மனிதர்=அவ்வித்தையைக் காணும் அறிவுடைய மனிதர், (உ) மெய்ஞ்ஞானத்தோரே = மெய்ஞ்ஞானிகளே.

(போ - ரை) அலங்கரிப்பாகிய மாயாசத்தியைத் தனதுவசமாகக் கொண்ட ஈசுவரன் இந்திரசால வித்தையை யுடையவனும்; அவனது வித்தையைக்கண்டு உண்மையாக நினைத்து விருப்பு வெறுப்பு அடைகின்ற அஞ்ஞானிகள் அறிவற்ற சிறுவர்களாம். மெய்ஞ்ஞானிகளே பொய்யாகவும் விநோதமாகவும் அவ்வித்தையைக் காணும் அறிவுடைய மனிதராம்.

கலி நிலைத்துறை.

விண்ட வீசனும் வித்துவா னுக்கவன் வித்தை
கண்ட ஞானசம் பன்னர்தங் கட்பிரா ரத்த
மண்டு பொன்னைநின் னுடைத்தென லாயசன் மானம்
தண்ட லின்றியே செய்துவீ டெனும்புகழ் தரிப்பார் (உ0ச)

(ப - ரை) விண்ட = சொல்லப்பட்ட, ஈசன் ஆம் = ஈசுவரனாகிய, வித்துவானுக்கு = வித்தையாடிக்கு, அவன் வித்தை = அவனது வித்தையை, கண்ட = அறிந்துகொண்ட, ஞான, சம்பன்னர் = செல்வர்கள், தம்கண் = தம்மிடத்துத் தோன்றுகிற, பிராரத்த = பிராரத்துவ அனுபவமாகிய, மண்டுபொன்னை = மிகுந்த திரவியத்தை, நின்னுடைத்து = உன்னுடையது, எனல் = என்று அர்ப்பித்தல், ஆய = ஆகிய, சன்மானம் = சன்மானத்தை, தண்டல் இன்றியே = தடையில்லாமலே, செய்து, வீடுஎனும் = மோக்ஷமென்கிற, புகழ் தரிப்பார் = புகழைப் பெறுவார்.

(போ - ரை) சொல்லப்பட்ட ஈசுவரனாகிய வித்தையாடிக்கு அவனது வித்தையை யறிந்துகொண்ட ஞானச்செல்வர்கள் தம்மிடத்துத் தோன்றுகிற பிராரத்துவ அனுபவமாகிய மிகுந்த திரவியத்தை உன்னுடையது என்று அர்ப்பித்தலாகிய சன்மானத்தைத் தடையில்லாமலே செய்து மோக்ஷமென்கிற புகழைப் பெறுவார்.

வெண்பா.

சிற்சோதிப் பார்ப்பான் செடப்பிரபஞ் சப்புலையன்
றற்போலும் வேடந் தரித்தலவிப்—பிற்பாடவ்
விர்த்திவே டங்கழன்றம் மெய்ப்பிரமவிப்பிரனும்
திர்த்தியா லாமிச் செயல் (உ0ரு)

(ப-ரை) சித்சோதிப் பார்ப்பான்=ஞான விளக்கமாகிய பிராமணன், செடப்பிரபஞ்சப் புலையன் (தன்) போலும் = அறியாமை வடிவமான உலகமென்னும் புலையனைப்போலும், வேடம், தரித்து= பூண்டு, உலவி = சஞ்சரித்து, பிற்பாடு, அவ்விர்த்தி = அந்நினைவு ரூப, வேடம் கழன்று = வேடத்தை விட்டு, அம்மெய்ப்பிரம = அந்த மெய்ஞ்ஞான விளக்கமாகிய பிரமமென்னும், விப்பிரனும் = பிராமணனுவான், திர்த்தியால்=தனது ஆனந்த வடிவக்களிப்பினுல், ஆம் இச்செயல்=இச்செய்கை தோன்றப்படும்.

(தன், தான் என்றும் சாரியையின் முதற்குறுக்கம்)

(திர்ப்தி, திர்த்தி எனவாயிற்று.)

(போ-ரை) ஞான விளக்கமாகிய பிராமணன் அறியாமை வடிவமான உலகமென்னும் புலையனைப்போலும் வேடம்பூண்டு சஞ்சரித்துப் பிற்பாடு அந்நினைவு ரூபவேடத்தைவிட்டு அந்தமெய்ஞ்ஞான விளக்கமாகிய பிரமமென்னும் பிராமணனுவான், தனது ஆனந்த வடிவக்களிப்பினுல் இச்செய்கை தோன்றப்படும்,

சுயஞ்சோதி யாந்தானே சூழ்சாக் கிரப்பேர்
நயங்காணுஞ் சொப்பனமா நாமம்—வயங்கும்
துரியநடஞ் செய்தே சுழுத்தியபி தானத்
தரியவதீ தச்சாந்த மாம். (உ0சு)

(ப-ரை) சுயம் சோதி ஆம் = தானுக விளங்கும் பிரமமாகிய, தானே=ஆத்மாவே, சூழ்= பரவிய, சாக்கிரப்பேர் = சாக்கிரமென்னும் பேரும், நயங்காணும் = நன்றாகத் தோற்றுகிற, சொப்பனம் ஆம் நாமம் = சொப்பனமென்கிற பேரும், வயங்கும் = விளங்குகிற, துரியநடம்=துரிய அனுபவமென்னும் நிர்த்தனத்தை, செய்து (ஏ), சுழுத்தி அபிதானத்து = சுழுத்தியெனும் பெயரையுடைய, அரிய அதீத=அருமையான துரியா தீதமென்னும், சாந்தமாம் = சும்மாவிருப்பதாகிய நிலையை அடையும். (ஏ, அசை).

(போ-ரை) தானுக விளங்கும் பிரமமாகிய ஆத்மாவே பரவிய சாக்கிரமென்னும் பேரும் நன்றாகத் தோற்றுகிற சொப்பனமென்கிற பேரும் விளங்குகிற துரிய அனுபவமென்னும் நிர்த்தனத்தைச் செய்து சுழுத்தியெனும் பெயரையுடைய அருமையான துரியாதீதமென்னும் சும்மாவிருப்பதாகிய நிலையை அடையும்.

சொல்லுயிர்நாண் சங்கற்பஞ் சூட்ச முடல்பட்டம்
ஒல்லுபிரா ணன்வா லுளம்வீணை—தொல்லேவினே
மென்காற்று மாயை வெளிசீ விதம்பறத்தல்
நன்காற்று வோனிதையண் ணல். (உ0எ)

(ப - ரை) (க) சொல் உயிர் = சொல்லப்படுகிற ஜீவன், நாண் = நீண்டகயிறும், சங்கற்பம், சூட்சம் = சூக்ஷக்கயிறும், உடல், பட்டம் = பட்டமாம், ஒல்லு = பொருந்திய, பிராணன் = பிராணவாயு, வால் = வாலாம், உளம் = உள்ளம், வீணை = வீணைபோற்பாடுங் கயிறும் தொல்லேவினை = பழமையான கர்மம், மென்காற்று = மிருதுவான காற்றும், மாயை, வெளி = வெளியிடமாம், சீவிதம் = ஜீவித்திருக்கு, தல், பறத்தல் = பறத்தலாம், (ங) நன்கு = நன்றாக, ஆற்றுவோன் இதை = இச்செயலேச் செய்வோனும், (உ) அண்ணல் = ஈசுவரன்.

(போ - ரை) சொல்லப்படுகிற ஜீவன் நீண்ட கயிறும், சங்கற்பம் சூக்ஷக்கயிறும், உடல் பட்டமாம் பொருந்திய பிராணவாயு வாலாம், உள்ளம் வீணைபோற் பாடுங்கயிறும், பழமையான கர்மம் மிருது வான காற்றும், மாயை வெளியிடமாம், ஜீவித்திருக்குதல் பறத்த லாம் ஈசுவரன் நன்றாக இச்செயலேச் செய்வோனும்.

## கலிவிருத்தம்.

அடைய வுந்தே ரகமுயர் சான்றெனுந்
திடநன் னீந்த றெளிந்தோர் கடந்திடும்
விடய நீரின் மிகுமவ் வுணர்விலான்
முடிவி லாவகை மூழ்கியுண் மாழ்குமால். (உ0அ)

(ப - ரை) அடையவும் = எல்லாம், தேர் அகம் = அறியும்நான், உயர் = மேலான, சான்று எனும் = சாக்ஷிவடிவன் எனும், திடம் = திடமான, நல் நீந்தல் = நல்ல நீந்துதலே, தெளிந்தோர் = தேர்ந்தவர்கள், கடந்திடும் = கடக்கின்ற, விடயநீரின் = சத்தாதி விஷயமென்னும் நீரில், மிகும் அவ்வுணர்விலான் = மேலான அந்தச்சாக்ஷி யுணர்வு என்னும் நீந்துதலே அறியாதவன், முடிவு இலாவகை = இறவாதபடி, மூழ்கி = அமிழ்ந்தி, உள் மாழ்கும் = மனதில் துன்பமடைவான். (ஆல், அசை)

(போ - ரை) எல்லாம் அறியும் நான் சாக்ஷிவடிவன் எனும் திடமான நல்லநீந்து தலைத்தேர்ந்தவர்கள் கடக்கின்ற சத்தாதி விஷயமென்னும் நீரில் மேலான அந்தச் சாக்ஷியுணர்வென்னும் நீந்துதலை அறியாதவன் இறவாதபடி அமிழ்ந்தி மனதில் துன்பமடைவான்.

வெண்பா.

அகஞ்சான் றெனுநீந்த லப்பியா சத்தின்
மிகுஞ்சீவன் விர்த்தியலே மேவு—தொகுஞ்சித்த
வெள்ளத்தின் மூழ்கானம் மிக்கதிட நிச்சயமே
கொள்ளற்கைத் தெப்பமுமாங் கூறு. (உ0கூ)

(ப - ரை) அகம் சான்று எனும் = நான் சாக்ஷியென்னும், நீந்தல் அப்பியாத்தின் = நீந்தும் அப்பியாசத்தில், மிகும் சீவன் = மிகுந்துற்ற சீவன், விர்த்தி = விர்த்திகளாகிய, அலைமேவு = அலைகளோடு கூடிய, தொகும் சித்தவெள்ளத்தின் = ஆழ்ந்த சித்தமென்னும் வெள்ளத்தில், மூழ்கான் = அமிழான், அம்மிக்க = அந்தச்சாக்ஷி விர்த்தியின் மேலான, திடநிச்சயமே = திடநிச்சயத்தையே, கொள்ளல் = பெறல், கைத்தெப்பமும், ஆம் = ஆகும், கூறு = என்று தெரியும்படிசொல்.

(போ - ரை) நான் சாக்ஷியென்னும் நீந்தும் அப்பியாசத்தில் மிகுந்துற்ற சீவன் விர்த்திகளாகிய அலைகளோடு கூடிய ஆழ்ந்த சித்தமென்னும் வெள்ளத்தில் அமிழான், அந்தச்சாக்ஷி விர்த்தியின் மேலான திடநிச்சயத்தையே பெறல் கைத்தெப்பமும் ஆகும் என்று தெரியும்படிசொல்.

வஞ்சி விருத்தம்.

புகலு மான்ம புருடனுக்—கிகலு மூர்த்தி யெழின்மனை
யகமு மங்கி யடிமையும்—உகளு மிந்த வுடலரோ. (உஉ0)

(ப - ரை) புகலும் ஆன்ம புருடனுக்கு = சொல்லப்படுகின்ற ஆத்மா வென்னும் புருஷனுக்கு, இகலும் ஊர்தி = எதிர்க்கும் வாகனமும், எழில் = அழகிய, மனை அகமும் = வீடும், அங்கி = சட்டையும், அடிமையும், உகளும் = தாண்டுகிற, இந்த உடல் = இச்சரீரமாம். (அரோ, அசை)

(போ - ரை) சொல்லப்படுகின்ற ஆத்மா வென்னும் புருஷனுக்கு எதிர்க்கும் வாகனமும் அழகிய வீடும் சட்டையும் அடிமையும் தாண்டுகிற இச்சரீரமாம்.

கலி விருத்தம்.

பிரபு வான்மாப் பெருமதி சாரதி
இரத மாமுட லிந்தியங் கந்துகம்
கருது நெஞ்சங் கலினம் விடயமே
புரிசெய் வீதிமெய்ப் போத முலாவரோ. (உகக)

(ப - ரை) பிரபு ஆன்மா = ஆன்மா பிரபுவாம், பெருமதி = பெரிய புத்தி, சாரதி = சாரதியாம், இரதம் ஆம் உடல் = சரீரம் தேராம், இந்தியம் = இந்திரியங்கள், கந்துகம் = குதிரைகளாம், கருதுநெஞ்சம் = நினைக்கும் மனம், கலினம் = கடிவாளமாம், விடயம் (ஏ) = சத்தாதி விஷயங்கள், புரிசெய் வீதி = விரும்பும் வீதியாம், மெய்ப்போதம் = மெய்ஞ்ஞானம், உலா = உலாவுதலாம். (அரோ, ஏ, அசைகள்)

(போ - ரை) ஆன்மா பிரபுவாம், பெரியபுத்தி சாரதியாம், சரீரம் தேராம், இந்திரியங்கள் குதிரைகளாம், நினைக்கும் மனம் கடிவாளமாம், சத்தாதி விஷயங்கள் விரும்பும் வீதியாம், மெய்ஞ்ஞானம் உலாவுதலாம்.

விசைம னப்பரி மீதுகூ டத்தர்சிற்
குசைபொ ருத்திக் குறைவில் விவேகமாங்
கசைபி டித்துக் கடிந்து பகிர்முகத்
திசைவி சாரணைச் செண்டுய்த் துலாவுவார். (உகஉ)

(ப - ரை) விசை = வேகமுள்ள, மனப்பரிமீது = மனமென்னுங் குதிரையின்மீது, கூடத்தர் = இருக்கிற கூடஸ்தர், சிற்குசை = ஞானமாகிய கடிவாளம்; பொருத்தி = பூட்டி, குறைவுஇல் = குறைவற்ற, விவேகம், ஆம்கசை = ஆகிய சாட்டையை, பிடித்து, கடிந்து பகிர்முகத்திசை = வெளிநாட்டமாகிய வேறு இடத்தைத் தடுத்து, விசாரணைச்செண்டு = விசாரணை யென்னும் வையாளி வீதியில், உய்த்து = நடத்தி, உலாவுவார்.

(பொ - ரை) வேகமுள்ள மனமென்னுங் குதிரையின்மீது இருக்கிற கூடஸ்தர், ஞானமாகிய கடிவாளம் பூட்டிக் குறைவற்ற விவேகமாகிய சாட்டையைப் பிடித்து வெளிநாட்டமாகிய வேறு இடத்தைத் தடுத்து விசாரணை யென்னும் வையாளிவீதியில் நடத்திஉலாவுவார்.

அறுசீர் விருத்தம்.

சகவி லட்சணன் யானெனு நாசியின் தன்மையொன்றி
நிகிலம் யானென வுற்ற துதிக்கை நெருங்குஞான
முகமு டைப்பர மாமகங் கார முனைக்களிற்றின்
மகிழு மான்ம புமான்மிசை யுற்று வயங்குமன்றே. (உகரு)

(ப - ரை) சகவிலட்சணன் யான் = நான் உலகங்களுக்கு வேறானவன், எனும் நாசியின், தன்மை ஒன்றி = இயல்பைப் பொருந்தியே, நிகிலம் யான் என உற்ற = எல்லாம் நானே யென்று விளங்குகிற, துதிக்கை நெருங்கும் = துதிக்கையைப் பெற்ற, ஞான முகம் உடை = ஞானமாகிய முகத்தையுடைய, பரமாம் அகங்கார = பரமாகங்காரமென்னும், முனைக்களிற்றின் = முதன்மையான யானையினிடம், மகிழும் = திருப்தனயிருக்கின்ற, ஆன்மபுமான் = கூடஸ்தராகிய புருடன், மிசை உற்று = மேலேயமர்ந்து, வயங்கும் = விளங்குவன். (அன்று, ஏ, அசைகள்).

(பொ - ரை) நான் உலகங்களுக்கு வேறானவன் எனும் நாசியின் இயல்பைப் பொருந்தியே எல்லாம் நானே என்றுவிளங்குகிற துதிக்கையைப்பெற்ற ஞானமாகிய முகத்தையுடைய பரமாகங்காரமென்னும் முதன்மையான யானையினிடம் திருப்தனயிருக்கின்ற கூடஸ்தராகிய புருஷன் மேலேயமர்ந்து விளங்குவன்.

வெண்பா.

நாளமரொத் துப்பிரம நாகசுரஞ் சிற்சத்தி
தாளமன தாமிச்சா சத்தியதே மேளத்
தவில்பொறியென் னுங்கிரியா சத்திபிர மத்தோ
டவிர்பிறசீ வன்னெடுட லாம். (உகசு)

(ப - ரை) அமர் = நல்லநாளில் விரும்பப்படுகின்ற, ஒத்து, பிரமம் = பிரமமாம், நாகசுரம், சிற்சத்தி = ஞானசத்தியாம், தாளம் மனது ஆம் = மனதென்னும், இச்சாசத்தி (அது, ஏ) இச்சாசத்தி

யாம், மேளத்தவில் = தவில் என்கிற வாத்தியம், பொறி = இந்திரியங்கள், என்னும், கிரியாசத்தி = கிரியாசத்தியாம், பிரமத்தோடு = பிரமமும், அவிர் பிற = விளங்கும் மற்றவைகளும் முறையே, சீவன் ஒடு = சீவனும், உடல் ஆம் = சரீரமுமாம்.

(அது, சொல்லுருபு). (ஏ, அசை).

(போ - ரை) நல்ல நாளில் விரும்பப்படுகின்ற ஒத்து பிரமமாம் நாகசுரம் ஞானசத்தியாம் தாளம் மனமென்னும் இச்சாசத்தியாம்; தவில் என்கிற வாத்தியம் இந்திரியங்களென்னும் கிரியாசத்தியாம். பிரமமும் விளங்கும் மற்றவைகளும் முறையே சீவனும் சரீரமுமாம்.

விருத்தியிரா விற்சவ் விகற்பானு பூதி
நிருத்தமதி தப்பகலி னீத்துத் தெரித்த
நிருவிகற்ப மெய்ந்நிலைமை நேரும் பிரமம்
ஒருவனகோ சொப்பனம்போ லும் (உகரு)

(ப - ரை) விருத்தி இராவில் = நினைவு என்கிற இரவில் ஏற்படும், சவ்விகற்ப அனுபூதி = சவிகற்ப நிஷ்டையனுபவமாகிய, நிருத்தம் = கூத்தை, அதீதப்பகலில் = அதீதம் என்னும் பகலில், நீத்து = விட்டு, தெரித்த = தெரிவிக்கப்பட்ட, நிருவிகற்ப மெய்ந் நிலைமை = நிருவி கற்ப நிஷ்டையென்கிற உண்மை நிலையை, நேரும் = அடைகின்ற, பிரமம், ஒருவன் = ஒப்பற்றவனும், (அகோ) சொப்பனம் போலும் = அச்சவிகற்ப அனுபவமாகிய கூத்தும் சொப்பனத்தைப் போலவாம்.

(போ - ரை) நினைவு என்கிற இரவில் ஏற்படும் சவிகற்ப நிஷ்டையனுபவமாகிய கூத்தை அதீதமென்னும் பகலில் விட்டுத் தெரிவிக்கப்பட்ட நிருவிகற்ப நிஷ்டையென்கிற உண்மைநிலையை யடைகின்ற பிரமம் ஒப்பற்றவனும்; அச்சவிகற்ப அனுபவமும் சொப்பனத்தைப் போலவாம்.

அறுசீர் விருத்தம்.

உடம்பென் றுரைக்கு மரங்கினிடை யுயர்ந்த வசங்கா ரம்பிரபு
அடர்ந்து நிற்கும் விடயங்க ளவையே பரிசா ரகர் புந்தி
நடஞ்செய் கணிகை யிந்தியங்க ணவிலுந் தாள மத்தளிகர்
ஒடுங்கு மிவையாவும் விளக்கி யொளிருஞ் சாட்சி தீபமரோ (உகசு)

(ப - ரை) உடம்பு என்று உரைக்கும் = சரீரமென்று சொல்லப்படுகிற, அரங்கினிடை = சபையினிடத்து, உயர்ந்த அகங்காரம் = மேலான அகங்காரம்; பிரபு = பிரவுவாம், அடர்ந்து நிற்கும் விடயங்கள் = சூழ்ந்திருக்கின்ற விஷயங்கள், (அவை, ஏ), பரிசாரகர் = பரிசாரகராம், புந்தி = புத்தி, நடஞ்செய் கணிகை நிர்த்தனஞ்செய்கின்ற வேசியாம், இந்தியங்கள் = இந்திரியங்கள், நவிலும் = ஒலித்தலைச் செய்யும், தாளமத்தளிகர் = தாளமத்தளக்காரராம், ஒடுங்கும் இவையாவும் = ஒடுங்குகின்ற இவையாவையும், விளக்கி ஒளிரும் சாட்சி = விளக்கிக்கொண்டு பிரகாசிக்கின்ற சாக்ஷி, தீபம் (அரோ) = தீபமாம்.

(அவை, சொல்லுருபு) (ஏ, அரோ, அசைகள்)

(பொ - ரை) சரீரமென்று சொல்லப்படுகிற சபையினிடத்து மேலான அகங்காரம் பிரபுவாம், சூழ்ந்திருக்கின்ற விஷயங்கள் பரிசாரகராம், புத்தி நிர்த்தனஞ்செய்கின்ற வேசியாம், இந்திரியங்கள் ஒலித்தலைச் செய்யும் தாளமத்தளக்காரராம், ஒடுங்குகின்ற இவை யாவையும் விளக்கிக்கொண்டு பிரகாசிக்கின்ற சாக்ஷி தீபமாம்.

### கலிவிருத்தம்

அன்றை நிர்விகற் பானு பவத்தினேன்
ஒன்று றுங்கடத் துள்ளமர் தீபமாம்
தன்று ணைச்சக சானு பவியுயர்
குன்றின் மீது குலாவும் விளக்கரோ (உகள)

(ப - ரை) அன்றை = மனம் அடங்கிய அக்காலத்திலுண்டாகிற, நிர்விகற்ப அநுபவத்தினேன் = நிர்விகற்ப நிஷ்டையுடையவன், ஒன்றும் = பொருந்திய, கடத்துள் அமர் = குடத்துள்ளிருக்கிற, தீபமாம், தன் துணை = தனக்குத் தானே சமானமாகிய, சகச அநுபவி = சகச நிஷ்டையுடையவன், உயர்குன்றின்மீது உயர்ந்த = மலையின் மேல், குலாவும் விளக்கு = விளங்குகிற தீபமாம். (அரோ, அசை)

(பொ - ரை) மனம் அடங்கிய அக்காலத்திலுண்டாகிற நிஷ்டையுடையவன் பொருந்திய குடத்துள்ளிருக்கிற தீபமாம், தனக்குத்தானே சமானமாகிய சகச நிஷ்டையுடையவன் உயர்ந்த மலையின்மேல் விளங்குகிற தீபமாம்.

### அறுசீர்விருத்தம்.

அந்தக் கரண மடிப்புறஞ்சா ராம லகங்கா துடல்பார்வை
தொந்தத் தாலு நாசிபுடை சூழுஞ் செம்மை மஞ்சள்பசுஞ்
சந்தத் தொடூழு தாக்கருமைத் தருப்பணங்கண் மாயைமிசைப்
பந்தத் துளைவெண் சுதரிசனம் பகர்கூடத்த ருட்சுடரே.
(உகஅ)

(ப - ரை) அந்தக்கரணம் = உள்ளம், அடிப்புறம் = அடிப் பக்கத்தில், சார் = பொருந்திய, ஆமலகம் = கண்ணாடியாம், காது உடல், பார்வை, தொந்தத்தாலு = பற்றியிருக்கிற நாவு; நாசி = நாசியாகிய இவைகள் முறையே, = சூழும் பக்கத்தில் சூழ்ந்திருக் கின்ற, செம்மை = சிவப்பு, மஞ்சள், பசுஞ் சந்தத்து (ஓடு, உம்) = பச்சை நிறம், ஊதா, கருமை = கருமையென்னும் வகைகளாகிய, தருப்பணங்கள் = கண்ணாடிகளாம், மாயை = மாயையானது, மிசை = மேலுள்ள, பந்தத்துளை பந்தமான துளையையுடைய, வெண்சு தரிசனம் = வெள்ளைக்கண்ணாடியாம், பகர் = சொல்லப் படுகிற, கூடத்தர், உள்சுடரே = உள்ளே இருக்குந் தீபமாம்.

(ஓடு, உம், உடனிகழ்ச்சிப் பொருள் உருபுகள்)

(பொ - ரை) உள்ளம் அடிப்பக்கத்திற் பொருந்திய கண்ணாடி யாம் - காது உடல் பார்வை பற்றியிருக்கிற நாவு நாசியாகிய இவை கள் முறையே பக்கத்திற் சூழ்ந்திருக்கின்ற சிவப்பு மஞ்சள் பச்சை நிறம் ஊதா கருமை யென்னும் வகைகளாகிய கண்ணாடிகளாம்; மாயையானது மேலுள்ள பந்தமான துளையையுடைய வெள்ளைக் கண்ணாடியாம், சொல்லப்படுகிற கூடஸ்தர் உள்ளே யிருக்குந் தீபமாம்.

### வெண்பா.

சரீர வகலிற் றமோகுண நீ ரோடும்
இராசதவ ழுக்கு மிலதாய்ப்—பராவிய நெய்
சத்துவவி ருத்தி யுயிர் தான்வத்தி வன்னிபர
வித்தை துரியம் விளக்கு (உகக)

(ப - ரை) (க) சரீர அகலில் = சரீரமென்னும் அகலில், (ரு) தமோகுண நீரோடும் = தமோகுணமென்னும் நீரும், இராசத குணமென்கிற, அழுக்கும்; இலதாய் = இல்லாமல், பராவிய =

நிறைந்த, நெய் = நெய்யாம், (உ) சத்துவவிருத்தி = சத்துவ விர்த்தியானது, (ந) உயிர் (தான்) = சீவன், வத்தி = திரியாம், வன்னி பரவித்தை = மேலான ஞானம் நெருப்பாம், துரியம், விளக்கு = விளக்காம். (தான் சாரியை)

(போ - ரை) சரீரமென்னும் அகலில் சத்துவ விர்த்தியானது தமோகுணமென்னும் நீரும் இராசத குணமென்கிற அழுக்கும் இல்லாமல் நிறைந்த நெய்யாம், சீவன் திரியாம், மேலான ஞானம் நெருப்பாம், துரியம் விளக்காம்.

கலி விருத்தம்.

நிருவிகற்ப சமாதி நிவாதவெளித்
துரியதீபம் விருத்தி சுருக்கமெனும்
ஒருநுணுக்க மருத்தி னொளிர்ந்ததற
நெரிவியோம நெருப்பி னதீதமதே. (உஉ0)

(ப - ரை) நிருவிகற்ப, சமாதி = நிஷ்டையாகிய, நிவாத வெளி = ஸ்தூலமான காற்றில்லாத ஸ்தலத்திலுள்ள, துரிய தீபம் = துரியமென்னுந்தீபம், விருத்தி சுருக்கமென்னும் = சூட்சுமமான விர்த்தியென்கிற, ஒரு நுணுக்கமருத்தின் = ஒப்பற்ற நுட்பமான காற்றினால், ஒளிர்ந்து = பிரகாசித்து, அது அற = அந்நுட்பக்காற்றும் ஒழிவதனால், நெரி = முன் பிரகாசித்தலையில் லாததாக்கி, வியோம நெருப்பின் = வியோமாக்கினியாதல் போல, அதீதம் = துரியாதீதம். (ஏ, அசை)

(அது, சொல்லுருபு)

போ - ரை நிர்விகற்க நிஷ்டையாகிய ஸ்தூலமான காற்றில் லாத ஸ்தலத்திலுள்ள துரியமென்னுந் தீபம் சூட்சுமமான விர்த்தி யென்கிற ஒப்பற்ற நுட்பமான காற்றினால் பிரகாசித்து அந்நுட் பக்காற்றும் ஒழிவதனால் முன் பிரகாசித்தலையில்லாததாக்கி வியோ மாக்கினியாதல் போலத் துரியாதீதமாம்.

கலித்தாழிசை

ஆன்மா ஞெகிழி யதன்சத்தி தான்சுற்றல்
மான்மாப் பிரபஞ்சம் வட்ட வனற்கீற்றே (உஉக)

(ப - ரை) ஆன்மா = ஆத்மா, ஒளுகிழி = தீக்கொள்ளியாம், அதன் சத்தி (தான்) = அவ்வாத்மசக்தி விளங்கல், சுற்றல் = அக்கொள்ளியைச் சுற்றுதலாம், மால் = மயக்கஞ் செய்கின்ற, மா = பெரிய, பிரபஞ்சம், வட்ட = வட்டமான, அனல்கீற்று (ஏ) = அக்கினிக்கோடாம். (தான், சாரியை) (ஏ, அசை)

(பொ - ரை) ஆத்மா தீக்கொள்ளியாம், அவ்வாத்மசக்தி விளங்கல் அக்கொள்ளியைச் சுற்றுதலாம், மயக்கஞ் செய்கின்ற பிரபஞ்சம் வட்டமான அக்கினிக் கோடாம்.

கலி விருத்தம்.

பிழைப்ப தாமப் பியாசஞ் சிரவணம்
நழுக்கி லாமன னந்நிதித் யாசனம்
தழைச்ச மாதி சகச மிலக்கணம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பணி யைந்தரோ. (உஉஉ)

(ப - ரை) பிழைப்பு (அது) ஆம் = உய்தற்கிடமாகிய, அப்பியாசம் = அப்பியாசமாவது, சிரவணம் = ஆத்மாவைப் பற்றிய, கேள்வி, நழுக்கிலா = தவறாத, மனனம் நிதித்தியாசனம், தழை = பெருக்கமான, சமாதி, சகசம் = சாக்ஷாத்காரமாம் எனல், இலக்கணம் = இலக்கணமாவது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி = அலங்காரமென்னும், ஐந்து = ஐந்தாகுமென்பதாம்.

(அரோ, அசை) (அது, சொல்லுருபு) (தழை, முதனிலைத் தொழிற் பெயர்) (யாப்பு = பாடலின் கிரமம்).

(பொ - ரை) உய்தற்கிடமாகிய அப்பியாசமாவது ஆத்மாவைப் பற்றிய கேள்வி, தவறாத மனனம், நிதித்தியாசனம், பெருக்கமான சமாதி, சாக்ஷாத்காரமாம் எனல், இலக்கணமாவது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரமென்னும், ஐந்தாகுமென்பதாம்.

உயிரு மெய்யு முயிர்மெயு மாய் தமும்
பெயர்கொ ளக்கரம் பேசிடிற் சித்துடன்
செயிர்ச டத்தொடுஞ் சிற்சட மென்பதும்
அயரு மாயையு மாகுஞ் சவணமே. (உஉஈ)

(ப - ரை) உயிரும் மெய்யும் உயிர், மெயும் = மெய்யும், ஆய்தமும், பெயர்கொள் அக்கரம் = எழுத்தின் பெயர் வகைகளாம் எனல், பேசிடில் = சொல்லுமிடத்து, சித்துடன் = சித்தும்,

செயிர் = குற்றமுள்ள, சடத்தொடும் = சடமும், சித்சடமென்ப தும் = சித்சடமும், அயரும் = தளரும், மாயையும், ஆகும் சவ ணம் (ஏ) = சிரவணத்தின் விபரமாகு மென்பதாம். (ஏ, அசை).

(போ - ரை) உயிரும் மெய்யும் உயிர்மெய்யும் ஆய்தமும் எழுத் தின் பெயர் வகைகளாமெனல் சொல்லுமிடத்துச் சித்தும் குற்ற முள்ள சடமும் சித்சடமும் தளரும் மாயையும் சிரவணத்தின் விபர மாகு மென்பதாம்.

பெயரு டன்வினை பேசு மிடையுரி
நயம தாம்பிரஞ் ஞானம் பிரமநன்
மயவ கம்பிர மாஸ்மி தத் வம்மசி
அயலி லாவய மான்மாப் பிரமமே. (உஉ௪)

(ப - ரை) பெயர் உடன் = பெயர்ச் சொல்லும், வினை = வினைச் சொல்லும், பேசும் = பேசப்படுகிற, இடை = இடைச்சொல்லும், உரி = உரிச்சொல்லும் முறையே, நயம் (அது) ஆம் = நன்மையாகிய, பிரஞ்ஞானம் பிரமம், நல்மய = இன்பவடிவமான, அகம்பிரமாஸ்மி, தத்வம்மசி = தத்துவமசி, அயலிலா = அன்னிய மில்லாமையைக் குறிக்கும், அயம் ஆன்மாப் பிரமம் (ஏ) = அயமாத் மாப்பிரமமென் னும் நான்கு மகாவாக்கியங்களாம். (அது, சொல்லுருபு ஏ, அசை)

(போ - ரை) பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் பேசப்படுகிற இடைச்சொல்லும் உரிச்சொல்லும் முறையே நன்மையாகிய பிரஞ் ஞானம் பிரமம் இன்பவடிவமான அகம் பிரமாஸ்மி தத்துவமசி அன் னியமில்லாமையைக் குறிக்கும் அயமாத்மாப் பிரமம் என்னும் நான்கு மகாவாக்கியங்களாம்.

## வஞ்சி விருத்தம்.

ஆட்சியோங் ககப்பொருள்—பூட்சியாம் புறப்பொருள்
சாட்சியான் சகத்தியான்—காட்சியீண்டு கற்கவே. (உஉ௫)

(ப - ரை) ஆட்சி ஓங்கு = உரிமை மிகும், அகப்பொருள் = அகப் பொருளும், பூட்சி ஆம் = பூணப்படுகின்ற, புறப்பொருள் = புறப் பொருளும் முறையே, சாட்சி, யான் = நான், சகத்து = சருவ மும், யான் = நான் என்னும் நிலைகளாம், காட்சியீண்டு = அறிவை யிவ்விதமாக, கற்க (ஏ) = தெரிந்து கொள்க. (ஏ, அசை.)

(போ - ரை) உரிமை மிகும் அகப்பொருளும் பூணப்படுகின்ற புறப்பொருளும் முறையே சாக்ஷி நான் சருவமும் நான் என்னும் நிலைகளாம் அறிவை யிவ்விதமாகத் தெரிந்துகொள்க.

கட்டளைக் கலித்துறை.

சத்தானு வித்தஞ்சத் தானனு வித்தஞ் சவிகற்பமாம்
நத்தாய சம்பிரஞ் ஞாத மசம்பிரஞ் ஞாதமெனல்
தத்தா நிருவிகற் பந்தா னவையாஞ் சதுர்வகைய
சித்தாஞ் சமாதிக ணாற்றிறத் தோதிடுஞ் செய்யுட்களே. (உஉகூ)

(ப - ரை) சத்தானு வித்தம், சத்தானனு வித்தம், சவிகற்பமாம், நத்து ஆய = விரும்பப்படுகிற, சம்பிரஞ்ஞாதம், அசம்பிரஞ்ஞாதம், எனல் = என்பன, தத்தா = சங்கற்பியாத, நிருவிகற்பம் (தான்) = நிருவிகற்பமாம், அவையாம் = அப்படிப்பட்ட, சதுர் வகைய = நால் வகைகளான, சித்து ஆம் = ஞான சொரூபமாகிய, சமாதிகள், நாற்றிறத்து = நான்கு வகைகளாக, ஓதிடும் = சொல்லப்படுகிற, செய்யுட்கள் = செய்யுட்களாம். (ஏ, அசை)

(போ - ரை) சத்தானு வித்தம் சத்தானனு வித்தம் சவிகற்பமாம் விரும்பப்படுகிற சம்பிரஞ்ஞாதம் அசம்பிரஞ்ஞாதம் என்பன சங்கற்பியாத நிருவிகற்பமாம் அப்படிப்பட்ட நால்வகைகளான ஞான சொரூபமாகிய சமாதிகள் நான்கு வகைகளாகச் சொல்லப்படுகிற செய்யுட்களாம்.

வெண்பா.

தனிநிகழ்முப் பத்தாறுந் தத்துவமாந் தானே
இனிசகச நிட்டையினைந் தேழாப்—புனைசெய்பிற
தத்துவங்க ளாயுந் தயங்கிடன்முப் பானைந்தா
வைத்தவலங் கார வகை. (உஉஎ)

(ப - ரை) தனி நிகழ் = தனிமையாக விளங்குகிற, முப்பத்தாறுந் தத்துவமாம் = முப்பத்தாறுவது தத்துவமாகிய, தானே, இனி = இனிமையான, சகச, நிட்டையின் = நிஷ்டையில், ஐந்தேழா = முப்பத்தைந்தாக புனைசெய் = சிறப்பிக்கப்படுகிற, பிற = மற்றைய, தத்துவங்கள், ஆயும் = போலவும், தயங்கிடல் = தோற்றுதல், முப்பான் ஐந்து ஆ = முப்பத்தைந்தாக, வைத்த = ஏற்பட்ட, அலங்கார, வகை = வகைகளாம்.

(போ - ரை) தனிமையாக விளங்குகிற முப்பத்தாறுவது தத்துவமாகிய தானே இனிமையான சகச நிஷ்டையில் முப்பத்தைந்தாகச் சிறப்பிக்கப்படுகிற மற்றைய தத்துவங்கள் போலவும் தோற்றுதல் முப்பத்தைந்தாக ஏற்பட்ட அலங்கார வகைகளாம்.

நீதச் சவிகற்ப நிர்விகற்ப மென்னுமனு
பூதிப் பெயர்கொளிரு பூவையரைச்—சோதிப்
பிரமமெனுந் தேவன் பிரியாது தன்னை
மருவியிடப் பூணு மகிழ்ந்து. (உஉ௭)

(ப - ரை) நீதியான, சவிகற்பம் நிர்விகற்பம் என்னும், அனுபூதிப் பெயர்கொள் = அனுபூதிகளாகிய பெயரையுடைய, இரு பூவையரை = இரண்டுதேவிகளை, சோதி = விளக்கசொரூபமான, பிரமமெனும் தேவன், பிரியாது = பிரியாமல், தன்னை, மருவியிட = பொருந்தியிருக்கும்படி, பூணும் மகிழ்ந்து = மகிழ்ந்து தரித்திருப்பான்.

(போ - ரை) நீதியான சவிகற்பம் நிர்விகற்பம் என்னும் அனுபூதிகளாகிய பெயரையுடைய இரண்டு தேவிகளை விளக்க சொரூபமான பிரமமெனுந் தேவன் பிரியாமல் தன்னைப் பொருந்தியிருக்கும்படி மகிழ்ந்து தரித்திருப்பான்.

### கோச்சகக்கலிப்பா

அதீதநிலைச் சிவலோகத் தமர்பிரம மாமரனே
பதாகைநிரு விகற்பானு பவமேரு வுச்சியின்மேய்க்
கதாதிசக சானுபவக் கயிலையுறைந் தருள்புரிவான்
விதானகசாத் தீகவுயிர் வெள்விடைமேற் றிகழ்தருமால் (உஉ௮)

(ப - ரை) அதீத நிலையென்னும், சிவலோகத்து = சிவலோகத்தில், அமர் = எழுந்தருளியிருக்கும், பிரமம் ஆம் அரனே = பிரமமாகிய சிவமே, பதாகை = குறிப்பான, நிருவிகற்ப அனுபவ = நிர்விகற்ப அனுபவமென்னும், மேரு உச்சியின் = மகாமேருபருவதத்தின் உச்சியில், மேய் = அமர்ந்து, கத = வல்லமையின், ஆதி முதன்மையான, சகச அனுபவ = சகசானுபவ மென்கிற, கயிலை உறைந்து = கயிலாயத்தில் வீற்றிருந்து, அருள்புரிவான் = பக்தர்களுக்கு அனுக்கிரகஞ்செய்யும் பொருட்டு, விதான = குவிந்த, சாத்

தீக உயிர் = உயிர் சத்துவகுணமுடைய சீவனென்னும், வெள் விடைமேல் = வெண்மையான ரிஷபவாகனத்தின்மேல், திகழ் தரும் = விளங்குவார். (ஆல், அசை)

(போ - ரை) அதீத நிலையென்னும் சிவலோகத்தில் எழுந் தருளியிருக்கும் பிரமமாகிய சிவமே குறிப்பான நிர்விகற்ப அனுபவ மென்னும் மகாமேரு பருவதத்தின் உச்சியில் அமர்ந்து வல்லமை யின் முதன்மையான சகசானுபவ மென்கிற கயிலாயத்தில் வீற் றிருந்து பக்தர்களுக்கு அனுக்கிரகஞ் செய்யும்பொருட்டுக்குவிந்த சத்துவகுணமுடைய சீவனென்னும் வெண்மையான ரிஷபவாகன தின்மேல் விளங்குவார்.

கலி விருத்தம்.

அஞ்ச வத்தை யகத்துயர் சாட்சியாம்
பஞ்ச வத்திரன் பத்துத் திசைப் புயன்
வஞ்ச மோக மகிடத் தெழுந்துயில்
வெஞ்ச மற்கொலும் வித்தைக் கழலினே. (உ௱௦)

(ப-ரை) அஞ்சு அவத்தை அகத்து = ஐந்து அவஸ்தைக ளிடத்தும் விளங்குகிற, உயர்சாட்சி ஆம் = உயர்வான சாக்ஷித் தன்மையென்னும், பஞ்சவத்திரன் = ஐந்து முகத்தையுடையவ னும், பத்து, திசை = திசைகளான, புயன் = புயங்களைக்கொண்ட வனுமாகிய பரமசிவன், வஞ்ச = வஞ்சகமான, மோகம கிடத்து = மோகமென்னும் எருமைக் கடாவின்மேல், எழும் = இருக்கும், துயில் = அஞ்ஞானமாகிய, வெம்சமன் = கொடிய யமனை, கொலும் வித்தைக் கழலின் (ஏ) = ஞானமென்னும் பாதத்தால் கொல்வான். (ஏ. அசை) (கொலும், கொல்லும் என்பதன் இடைக்குறை)

(போ - ரை) ஐந்து அவஸ்தைகளிடத்தும் விளங்குகிற உயர்வான சாக்ஷித் தன்மையென்னும் ஐந்து முகத்தையுடையவ னும் பத்துத் திசைகளான புயங்களைக் கொண்டவனுமாகிய பரம சிவன் வஞ்சகமான மோகமென்னும் எருமைக்கடாவின் மேல் இருக்கும் அஞ்ஞானமாகிய கொடிய யமனை ஞானமென்னும் பாதத்தால் கொல்வான்.

வெண்பா.

சவிகற்ப ஞானமதி தானிருவி கற்ப
நவவித்தை வெய்யவனே நாடிற்—குவியுஞ்
சொரூபஞா னங்கனலோன் சொல்லு மிவையே
நிருமலன்முக் கண்க ணிலை (உ௬க)

(ப - ரை) சவிகற்பஞானம், மதி (தான்) = சந்திரனாகிய இடக்கண், நிருவிகற்ப = நிர்விகற்பமாகிய, நவவித்தை = புதுமையான ஞானம், வெய்யவன், (ஏ) = சூரியனாகிய வலக்கண், நாடில் ஆராயுங்கால், குவியும் = சர்வமும் அடங்கிய, சொரூபஞானம் = அதீத ஞானம், கனலோன் = அக்கினியாகிய நெற்றிக்கண், சொல்லும் இவையே = சொல்லப்பட்ட இவைகளே, நிருமலன் = மலத்தை நீக்குபவனாகிய சிவனது, முக்கண்கள் நிலை = திரிநேத்திரங்களின் நிலைமையாம்.

(தான், சாரியை) (ஏ, அசை) (சவிகற்பஞானம் = மித்தியா திருஷ்டி) (சொரூப ஞானம் = தன்மய திருஷ்டி)

(போ - ரை) சவிகற்பஞானம் சந்திரனாகிய இடக்கண், நிர்விகற்பமாகிய புதுமையான ஞானம் சூரியனாகிய வலக்கண், ஆராயுங்கால் சர்வமும் அடங்கிய அதீதஞானம் அக்கினியாகிய நெற்றிக்கண், சொல்லப்பட்ட இவைகளே மலத்தை நீக்குபவனாகிய சிவனது திரிநேத்திரங்களின் நிலைமையாம்.

அறுசீர் விருத்தம்.

சலட்சண விர்த்திவாமத் தாளதாம் வலப்பா தந்தான்
விலட்சண விர்த்தி மேலாய் விளங்கிய மௌனஞ் சென்னி
சுலட்சண ஞான மேனி துலங்கிட விடப்பாற் சித்தாம்
இலட்சண வுமையை யேற்ற வெழிற்சிவஞ் சத்தா மன்றே (உ௬உ)

(ப - ரை) (க) சலட்சண விர்த்தி = சர்வமுந்தானென்கிற விர்த்தி, வாமத்தாள் (அது) ஆம் = இடப்பாதமாம், (௩) வலப்பாதம் (தான்) = வலப்பாதமாம் (உ) விலட்சண = சர்வ சாக்ஷி நானென்னும், விர்த்தி, (௪) மேலாய் விளங்கிய, மௌனம் = மௌனநிலை, சென்னி = சிரசாம், சுலட்சண = தன்மயமான, ஞானம், மேனி = திருமேனியாம், துலங்கிட = விளங்கும்படியாக, இடப்பால் = இடப்பாகத்தில், சித்து ஆம் இலட்சண = ஞானமாகிய

இலக்ஷணத்தையுடைய, உமையை = உமாதேவியை, ஏற்ற = அபின்னமாகக்கொண்ட, எழில் = மங்களகரமான, சிவம் சத்தாம் = சத்துச்சிவமாம்.

(அன்று, ஏ, அசைகள்) (அது, சொல்லுருபு) (தான், சாரியை)

(போ - ரை) சர்வமும் தானென்கிற விர்த்தி இடப்பாதமாம், சர்வசாக்ஷி நானென்னும் விர்த்தி வலப்பாதமாம், மேலாய் விளங்கிய மௌனநிலை சிரசாம், தன்மயமான ஞானம் திருமேனியாம், விளங்கும்படியாக இடப்பாகத்தில் ஞானமாகிய இலக்ஷணத்தை யுடைய உமாதேவியை அபின்னமாகக் கொண்ட மங்களகரமான சத்துச் சிவமாம்.

### கோச்சகக்கலிப்பா

சிற்சத்தி யோர்பாகன் சிறிதுமெனை யலதில்லையென்
பொற்புச்செஞ் சடைமீது புகல்கிரியா சத்திநதி
நிற்பக்கொண் டாயிடையே நிகழ்தருமிச் சாசத்திச்
சொற்பச்சோ மனையணிந்தான் துரியவனன் மேனியனே. (உகரு)

(ப - ரை) (உ) சிற்சத்தி = ஞானசத்தியை, ஓர்பாகன் = ஒரு பாகமாக உடையவன், சிறிதும் = அற்பமும், எனை அலது இலை = என்னைத்தவிர இல்லை, என் = என்கிற, பொற்புச் செஞ்சடை மீது = அழகிய சிவந்த சடைமேல், புகல் = சொல்லப்படுகிற, கிரியா சத்தி நதி = கிரியாசத்தியாகிய கங்காநதி, நிற்பக்கொண்டு = நிலைத்திருக்கும்படி வைத்து, ஆயிடையே = அவ்விடத்திலேயே, நிகழ்தரும் விளங்குகிற, இச்சாசத்தி = இச்சாசத்தியாகிய, சொற்பச்சோமனை = பிறைச்சந்திரனை, அணிந்தான் = தரித்திருக்கின்ருன், (க) துரிய = துரியமென்னும், அனல்மேனியன் (ஏ) = அக்கினி சொரூபனுகிய பரமசிவன். (ஏ, அசை)

(போ - ரை) துரியமென்னும் அக்கினிசொரூபனுகிய பரமசிவன் ஞானசத்தியை ஒருபாகமாகவுடையவன் அற்பமும் என்னைத் தவிர இல்லையென்கிற அழகிய சிவந்த சடைமேல் சொல்லப்படுகிற கிரியாசத்தியாகிய கங்காநதி நிலைத்திருக்கும்படி வைத்து அவ்விடத்திலேயே விளங்குகிற இச்சாசத்தியாகிய பிறைச்சந்திரனைத் தரித்திருக்கின்ருன்.

## கலி விருத்தம்.

சலன மற்றுயர் சத்துவ சித்தமாம்
உலவு வெள்ளிவெற் போங்கிய சான்றரன்
இலகு மங்களத் தேற்றசிற் சத்தியாங்
குலவு பொன்மலர்க் கொன்றைத் தொடையனே (உ௲௪)

(ப - ரை) சலனம்=அசைவு, அற்று = இல்லாமல், உயர் உயர்ந்த, சத்துவசித்தம் ஆம்=சாத்வீகமனமாகிய, உலவு=உலாவு தற்கிடமான, வெள்ளி வெற்பு = கயிலாயமலையில், ஓங்கிய = மேலாய் வீற்றிருக்கின்ற, சான்று அரன் = சாக்ஷியென்னும் பரமசிவன், இலகு = விளங்குகிற, மங்களத்து ஏற்ற = மங்களகர மாகத் தரித்திருக்கும், சித்சத்தி ஆம் = ஞானசத்தியாகிய, குலவு கொண்டாடப்படுகிற, பொன்மலர் = பொன்நிறமான மலர்களாகிய, கொன்றைத் தொடையன் (ஏ) = கொன்றைமாலையைத் தரித் திருப்பவனும், (ஏ, அசை)

(போ - ரை) அசைவில்லாமல் உயர்ந்த சாத்விக மன மாகிய உலாவுதற்கிடமான கயிலாயமலையில் மேலாய் வீற்றிருக் கின்ற சாக்ஷியென்னும் பரமசிவன், விளங்குகிற மங்களகரமாகத் தரித்திருக்கும் ஞான சத்தியாகிய கொண்டாடப்படுகிற பொன்நிற மான மலர்களாகிய கொன்றை மாலையைத் தரித்திருப்பவனும்.

சீவன் முத்தனாத் திகழ்த்திடு நந்தி
தேவ னின்னருள் செறிவுறு மவர்க்கித்
தாவி லாவதீ தப்பிர மந்தான்
சேவை தந்திடு சிவபெரு மானே (உ௲௫)

(ப - ரை) (க) சீவன் முத்தன் ஆ = சீவன் முத்தனாக, திகழ்த்திடு = சொல்லப்படுகிற, நந்தி, தேவன் = தேவருடைய, இன் அருள் = இனிய கிருபையை, செறிவு உறும் அவர்க்கு = பெற்றவர்க்கு, (ந) தா இலா = கேடில்லாத, அதீதப்பிரமம் தான், (உ) சேவை தந்திடு = அனுக்கிரகஞ் செய்கின்ற (ச) சிவ பெருமான் (ஏ)=பரமசிவனும். (ஏ, அசை) ஆ, ஆகவென்பதன் கடைக்குறை. (தான், சாரியை)

(போ - ரை) சீவன் முத்தனாகச் சொல்லப்படுகிற நந்தி தேவருவடைய இனிய கிருபையைப் பெற்றவர்க்கு அனுக்கிரகஞ் செய்கின்ற கேடில்லாத அதீதப் பிரமம் பரமசிவனும்.

### வெண்பா.

அன்னியமொன் றின்றி யனைத்துந்தா னோக்கும்
உன்னியசங் கார வுருத்திரனர் தன்னதுவில்
மோகப் பகைஞான மொய்க்கணையே வுஞ்சாத்து
வீகப் பினகமது வே. (உுசு)

(ப - ரை) அன்னியம் ஒன்று இன்றி = அன்னியமென்பது ஒன்றுமில்லாமல், அனைத்துந் தானு = சர்வமும் தானுக, நோக்கும் = பார்க்கின்ற, உன்னிய = தியானிக்கப்படுகிற, சங்கார, உருத்திரனர் தன்னது = உருத்திர மூர்த்தியினுடைய, வில் = வில்லானது, மோகப்பகை = மோகத்துக்குப்பகையான, ஞான மொய்க்கணை = ஞானமாகிய யுத்தத்துக்குரிய அம்பை, ஏவும் செலுத்துகின்ற, சாத்துவிக = சத்துவ குணமென்னும், பினகம் (அது) (ஏ) = பினகமாம். (அது, சொல்லுருபு) (ஏ, அசை)

(பொ - ரை) அன்னியமென்பது ஒன்றுமில்லாமல் சர்வமுந் தானுகப் பார்க்கின்ற தியானிக்கப்படுகிற சங்கார உருத்திரமூர்த்தியினுடைய வில்லானது, மோகத்துக்குப் பகையான ஞானமாகிய யுத்தத்துக் குரிய அம்பைச் செலுத்துகின்ற சத்துவ குணமென்னும் பினகமாம்.

### கலி விருத்தம்.

மாயை மேரு வளைத்தவன் யாவையு
மாய மர்ந்த வகண்ட விருத்திமால்
மேய பாகன் விசுத்த சங்கற்பமாம்
நேய கல்வட நீழலின் மன்னரோ (உுஎ)

(ப - ரை) மாயை மேரு = மாயை யென்னும் மகாமேரு பருவ தத்தை, வளைத்தவன் = தன்வசமாக வளைத்தவனும், யாவையும் ஆய் அமர்ந்த = சர்வமுமாயிருக்கின்ற, அகண்ட விருத்திமால் = அகண்டாகார விர்த்தியென்னும் விஷ்ணுவானவர், மேயபாகன் = பொருந்திய ஒருபாகத்தை யுடையவனும், விசுத்த சங்கற்பமாம் = சுத்த சங்கற்பமாகிய, நேய = பிரியமான, கல், வடநீழலின் = ஆல விருக்ஷத்தின் மூலத்தில், மன் (அரோ) = அமர்ந்திருக்கும் தலைவனுகிய பரமசிவனும். (அரோ, அசை)

(போ - ரை) மாயை யென்னும் மகாமேரு பருவதத்தைத் தன் வசமாக வளைத்தவனும் சர்வமுமாயிருக்கின்ற அகண்டாகாரவிர்த்தி யென்னும் விஷ்ணுவானவர் பொருந்திய ஒருபாகத்தை யுடையவனும் சுத்தசங்கற்பமாகிய பிரியமான கல்லால விருக்ஷத்தின் மூலத்தில் அமர்ந்திருக்குந் தலைவனாகிய பரமசிவனும்.

வெண்பா.

மனமாங் கமட மதியெ றுழி சிந்தைச்
சினமீனத் தோடகந்தைச் சீய—மெனுமிவற்றின்
சாத்தீகக் கூறுந் தனியோடு கோடுவிழி
மாத்தோல் போர்த் தேயணிந்தான் மன். (உஙௐ)

(ப - ரை) மனம் ஆம் கமடம்=மனமாகிய ஆமை, மதி எறுழி =புத்தியென்கிற வராகம், சிந்தைச் சினமீனம் = சித்தமென்னும் கோபமுடைய மச்சம், (ஓடு), அகந்தைச் சீயம் = அகங்காரமாகிய சிங்கம், எனும் இவற்றின், சாத்தீகக்கூறு ஆம் = சத்துவகுணப் பகுதியாகிய, தனி=ஒப்பற்ற, ஓடு, கோடு=கொம்பு, விழி=கண், மா=பெரிய, தோல் = தோல் என்பவைகளை, போர்த்து (ஏ) = போர்த்தெடுத்து, அணிந்தான்மன்=பிரமமாகிய பரமசிவன் தன்மீது தரித்துக்கொண்டார். (ஏ, அசை) (ஓடு, மூன்றும் வேற்றுமையுருபு)

(போ - ரை) மனமாகிய ஆமை புத்தியென்கிறவராகம் சித்தமென்னும் கோபமுடைய மச்சம் அகங்காரமாகிய சிங்கம் எனுமிவற்றின் சத்துவ குணப்பகுதியாகிய ஒப்பற்ற ஓடு, கொம்பு, கண், பெரியதோல், என்பவைகளைப் போர்த்தெடுத்துப் பிரமமாகிய பரமசிவன் தன்மீது தரித்துக்கொண்டார்.

அறுசீர் விருத்தம்.

எதிருஞ் சத்தப் பிரமவிதி யிடநால் வேதச் சிரமொழியத்
ததைவிற் கிள்ளும் பரவுணர்வாந் தலையோ டருட்கை யுழியேந்தி
இதய மனைக டொறுநிகழ்ந்தே யியல்கற்பனைமின் னார்களுடைச்
சிதைவில் வலிக ளெலாம்பலியாச் சேரக் கவர்ந்தோன் சிற்பரனே.
(உங௧)

(ப - ரை) எதிரும்=தோன்றுகிற, சத்தப்பிரம விதி=சத்தப் பிரமமெனும் பிரமதேவன், இடம், நால்வேதச் சிரம் ஒழிய=நான்கு வேதங்களென்னும் சிரசுகளைத்தவிர, ததைவில்=அடுத்தலால், கிள்

ளும் = கிள்ளப்பட்ட, பரஉணர்வு ஆம்=மேலான ஞானமாகிய, தலையோடு=தலையோட்டை, அருள்கைஉழி = அருளென்னும் கையி னிடத்து, ஏந்தி = ஏந்திக்கொண்டு, இதயமனைகள் தொறும் = இருதயமென்னும் வீடுகள்தோறும், நிகழ்ந்து (ஏ) = விளங்கி, இயல்=பொருந்திய, கற்பனை மின்னார்களுடை = கற்பனைகளாகிய பெண்களுடைய, சிதைவுஇல் = கெடாத, வலிகள் எலாம் = வல் லமைகள் யாவையும், பலியா=பிச்சையாக, சேர, கவர்ந்தோன் = கவர்ந்து கொண்டவன், சித்பரனே=ஞான சொரூபியாகிய பரம சிவனே. (ஏ, அசை)

(பொ - ரை) தோன்றுகிற சத்தப் பிரமமென்னும் பிரமதேவ னிடம் நான்கு வேதங்களென்னும் சிரசுகளைத்தவிர அடுத்தலால் கிள்ளப்பட்ட மேலான ஞானமாகிய தலையோட்டை அருளென்னுங் கையினிடத்து ஏந்திக்கொண்டு இருதயமென்கிற வீடுகள்தோறும் விளங்கிப்பொருந்திய கற்பனைகளாகிய பெண்களுடைய கெடாத வல்லமைகள் யாவையும் பிச்சையாகச் சேரக்கவர்ந்து கொண்டவன் ஞான சொரூபியாகிய பரமசிவனே.

வேதமாம் விரிஞ்சன் சத்தப் பிரமமாம் விகங்க மாயும்
ஏதுவின் மனமா மாயன் விவேகமா மெறுழி யாயும்
நாதனும் பரஞா னத்தீ வரையது நண்ணு மந்தம்
ஆதியாஞ் சிரந்தாள் காணார் திசைவரம் பறிவா ருண்டோ. (உ௪0)

(ப - ரை) வேதம், ஆம் விரிஞ்சன்=ஆகிய பிரமதேவன், சத் தப் பிரமம், ஆம்விகங்கம்=என்னும் அன்னப்பக்ஷி, ஆயும் = ஆகி யும், ஏதுவின் = காரணமான, மனம் ஆம் மாயன் = மனமாகிய விஷ்ணு, விவேகம், ஆம் எறுழி ஆயும் = எனும் வராகமாகியும், நாதன் ஆம்=பரமசிவனாகிய, பரஞான=மேலான ஞானமென்னும், தீவரையது=அக்கினி மலையினுடைய, நண்ணும் அந்தம் ஆதி ஆம் =பொருந்திய அந்தம் ஆதியென்கிற, சிரம்தாள்=சிரசையும் பாதத் தையும், காணார்=தேடிக்காணார், திசைவரம்பு = திசையின் முடிவு களை, அறிவாருண்டோ.

(பொ - ரை) வேதமாகிய பிரமதேவன் சத்தப் பிரமமென்னும் அன்னப்பக்ஷியாகியும் காரணமான மனமாகிய விஷ்ணு விவேக மெனும் வராகமாகியும் பரமசிவனாகிய மேலான ஞானமென்னும்

அக்கினி மலையினுடைய பொருந்திய அந்தம் ஆதியென்கிற சிரசையும் பாதத்தையும் தேடிக்காணார் திசையின் முடிவுகளை யறிவாருண்டோ.

### கலி நிலைத்துறை.

பகுதி நள்ளிரு ளினுமக மகமெனும் பசாசத்
தொகுதி சூழ்தரப் பரவகங் கரநடத் தொழிலால்
நிகழ்ப ரன்சுசி மாயையாஞ் சுடலையி னின்று
திகழ்சொ ரூபஞா னக்கன லாடுதல் செயுமே. (உசக)

(ப - ரை) பகுதி = பிரகிருதி என்னும், நள் இருளினும் = மிகுந்த இருளிலும், அகம் அகம் எனும் = நான் நான் என்கிற, பசாசத் தொகுதி = பேய்க்கூட்டம், சூழ்தர = சூழ, பர அகங்கர = பரம அகங்காரமெனும், நடத்தொழிலால் = கூத்தாடுதலால், நிகழ்பரன் = நிகழ்கின்ற பரமசிவன், சுசிமாயை ஆம் = சுத்தமாயையாகிய, சுடலையில் நின்று = மயானத்தில் நின்று. திகழ் = விளக்கமான, சொரூப, ஞானக்கனல் = ஞானமென்னும் அக்கினி, ஆடுதல் செயும் (ஏ) = விளையாடலைச் செய்வன். (ஏ, அசை)

(பொ - ரை) பிரகிருதி யென்னும் மிகுந்த இருளிலும் நான் நான் என்கிற பேய்க்கூட்டம் சூழப்பரம அகங்காரமெனுங் கூத்தாடுதலால் நிகழ்கின்ற பரமசிவன் சுத்தமாயையாகிய மயானத்தில் நின்று விளக்கமான சொரூப ஞானமென்னும் அக்கினி விளையாடலைச் செய்வன்.

### எழுசீர் விருத்தம்.

கைப்புடன் மூன்றின் சாட்சியா னெனுஞ்சங்
கற்பமா மூவரை யொழிய
முப்புர மதிலோ டவற்றபி மான
முதிர்ந்தசங் கற்பமொய் யசுரர்
கைப்பற வழிய விருத்திஞா னப்புன்
னகைகொளு மரன்பர ஞான
வைப்பதா நுதற்கண் ணுற்சீர் ரப்பெண்
மயல்செய்வா தனைமதக் காய்ந்தான். (உசஉ)

(ப - ரை) கைப்பு = வெறுப்பான, உடல்மூன்றின் = மூன்று தேகத்தின், சாட்சியான் எனும், சங்கற்பம் ஆம் = சங்கற்பங்க ளென்கிற, மூவரை ஒழிய = பத்தர்களாகிய மூன்று அசுரர்கள் தவிர, முப்புர = மூன்று சரீரமெனும், மதிலோடு = மும்மதில்களோடு, அவற்று அபிமான = அவைகளில் அபிமானம், முதிர்ந்த = மிகுந்த, சங்கற்ப = சங்கற்பங்களின், மொய் = கூட்டமாள, அசுரர், கைப்பு அற = வருத்துதல் ஒழிய, அழிய = நாசமாகும்படி, விருத்தி, ஞான = ஞானமாகிய, புன்நகை கொளும் = பின்சிரிப்புச் செய்த, அரன் = பரமசிவன், பரஞான = மேலான அனுபவஞான வைப்பு (அது) ஆம் = திடமாகிய, நுதல்கண்ணால் = நெற்றிக்கண்ணால், சீர = சீரமென்கிற, பெண்மயல் செய் = பெண்களின் இச்சையை யுண்டாக்குகின்ற, வாதனை = வாசனையெனும், மதன் = மன்மதனை, காய்ந்தான் = எரித்தழித்தான், (அது, சொல்லுருபு)

(பொ - ரை) வெறுப்பான மூன்று தேகத்தின் சாக்ஷி என்னும் சங்கற்பங்களென்கிற பக்தர்களாகிய மூன்று அசுரர்கள் தவிர மூன்று சரீரமென்னும் மும்மதில்களோடு அவைகளில் அபிமானம் மிகுந்த சங்கற்பங்களின் கூட்டமான அசுரர் வருத்துதலொழிய நாசமாகும்படி விருத்தி ஞானமாகிய புன்சிரிப்புச் செய்த பரமசிவன் மேலான அனுபவஞான திடமாகிய நெற்றிக்கண்ணால் சீரமென்கிற பெண்களின் இச்சையை யுண்டாக்குகின்ற வாசனையெனும் மன்மதனை எரித்தழித்தான்.

சுடர்ப்பர விசாரப் பாற்கட லெழுந்த
சூனிய பாவனை விடத்தை
விடுத்ததன் சாயை யாகிய வகண்ட
விர்த்தியாஞ் சுந்தரன் றூனுற்
றெடுக்கியே கொணரச் சாட்சிவிர்த் தியதா
மொருமிடற் றடக்கிய பரமன்
கடத்தகங் கரமா வுரித்ததைப் பரமாங்
காரமாம் போர்வையாக் கொளுமே (உசு)

(ப - ரை) சுடர் = விளக்கமான, பரவிசார = பிரமவிசாரமென்னும், பால்கடல் எழுந்த = பாற்சமுத்திரம் கடையும்போதெழுந்த, சூனிய, பாவனைவிடத்தை = பாவனையாகிய விஷத்தை,

விடுத்த = அனுப்பிய, தன்சாயை ஆகிய = தனது சாயையாகிய, அகண்ட விர்த்தி ஆம் = அகண்டாகார விர்த்தி என்னும், சுந்தரன் = சுந்தரமூர்த்தியானவர், (தான்), உற்று = சென்று, ஒடுக்கி (ஏ) = திரட்டி, கொணர = கொண்டுவர, சாட்சி விர்த்தி (அது), ஆம் = ஆகிய, ஒரு மிடற்று = ஒப்பற்ற தனது கண்டத்தில், அடக்கிய பரமன் = உட்கொண்டு அடக்கிய பரமசிவன், கடத்து அகங்கரமா = சரீரத்தை யானென்னும் அகங்காரமாகிய யானையை, உரித்து, அதை = அவ் வகங்காரத்தையே, பரமாங்காரம், ஆம் = ஆன போர்வை, ஆ = ஆக, கொளும் (ஏ) = தரித்துக்கொண்டான்.

(தான், சாரியை) (அது, சொல்லுருபு) (ஏ, ஏ, அசைகள்)

(பொ - ரை) விளக்கமான பிரமவிசாரமென்னும் பாற்சமுத்திரங் கடையும்போதெழுந்த சூனியபாவனையாகிய விஷத்தை, யனுப்பிய தனது சாயையாகிய அகண்டகார விர்த்தியென்னும் சுந்தரமூர்த்தியானவர் சென்று திரட்டிக் கொண்டுவரச் சாக்ஷி விர்த்தியாகிய ஒப்பற்ற தனது கண்டத்தில் உட்கொண்டு அடக்கிய பரமசிவன், சரீரத்தை யானென்னும் அகங்காரமாகிய யானையை உரித்து அவ்வகங்காரத்தையே பரமாங்காரமான போர்வையாகத் தரித்துக் கொண்டான்.

## எண்சீர்விருத்தம்

மண்டுசமா தியின்ஞானி யயன்சகச ஞானி
மாலிவர்பல் லோர்தமச ரீரனிரிந் திரியன்
எண்டகுமப் பிராணனுட னிர்க்குணனிர் மோகன்
எனும்விருத்தி யென்புகளோ டியர்சாட்சி விர்த்தி
வெண்டலைகள் சிற்சத்தி நாண்கொடுமா லைகளா
வேய்ந்தகண்ட விர்த்திக்கங் காளமதன் மேலாக்
கொண்டுதனே யலதொன்று மிலையெனும்விர்த் திகளாங்
குந்தளசூத் திரம்புனைகங் கோன்பிரம மொன்றே. (உசச)

(ப-ரை) மண்டு = மிகுந்த, சமாதியின் = நிர்விகற்பசமாதியை யுடைய, ஞானி, அயன் = பிரமன், சகசஞானி, மால் = மகாவிஷ்ணு, இவர் பல்லோர் (தம்) = இவ்வகையாகிய அநேகருடைய, அசரீரன் = நான் சரீரமல்லாதவன், நிரிந்திரியன் = இந்திரியங்களில்லாதவன், எண்தகும் = எண்ணத்தகுந்த, அப்பிராணன் =

பிராணனல்லாதவன், (உடன்), நிர்க்குணன் = குணங்களற்றவன், நிர்மோகன் = மோகமற்றவன், எனும், விருத்தி என்புகளோடு = விர்த்திகளாகிய எலும்புகளோடு, உயர் = உயர்ந்த, சாட்சி, விர்த்தி = விர்த்தி என்னும், வெண் தலைகள் = வெண்மையான தலையோடுகளை யும், சித்சத்தி = ஞானசத்தி யென்கிற, நாண்கொடு = கயிற்றினால், மாலைகளா = மாலைகளாக, வேய்ந்து = செய்து தரித்துக்கொண்டு, அகண்ட விர்த்தி = அகண்டாகார விர்த்தியென்னும், கங்காளம் = முழு எலும்பை, அதன் மேலாகக்கொண்டு = அதன் மேலாகப்பூண்டு, தனை அலது ஒன்றும் இலை = தன்னைத்தவிர அன்னிய மொன்று மில்லை, எனும், விர்த்திகளாம் = விர்த்திகளான, குந்தள = உரோமக் கூட்டத்தை, சூத்திரம் = பூணூலாக, புனை = அணிந்த, நம்கோன் = நமது தலைவனாகிய பரமசிவன், பிரமம் ஒன்றே = பிரமமாகிய ஒரே வஸ்துவாம். (தம், சாரியை) (உடன், மூன்றும் வேற்றுமையுருபு.)

(பொ - ரை) மிகுந்த நிர்விகற்பசமாதியையுடைய ஞானிபிரமன், சகசஞானி மகாவிஷ்ணு இவ்வகையாகிய அநேகருடைய நான்சரீர மல்லாதவன் எண்ணத் தகுந்த பிராணனல்லாதவன் குணங்களற்ற வன் மோகமற்றவன் எனும் விர்த்திகளாகிய எலும்புகளோடு உயர்ந்த சாக்ஷி விர்த்தியென்னும் வெண்மையான தலை ஓடுகளையும் ஞானசத்தி யென்கிற கயிற்றினால் மாலைகளாகச் செய்து தரித்துக் கொண்டு அகண்ட விர்த்தியென்னும் முழுவெலும்பை அதன்மேலா கப் பூண்டு தன்னைத்தவிர அன்னிய மொன்றுமில்லை எனும் விர்த்தி களான உரோமக் கூட்டத்தைப் பூணூலாக அணிந்த நமது தலைவ னாகிய பரமசிவன் பிரமமாகிய ஒரே வஸ்துவாம்.

### வெண்பா.

ஐந்து விருத்தியுடை யந்தக் கரணத்தான்
முந்து விளங்கு முறையான்மாச்—சந்ததமும்
பஞ்ச முகநாகப் பாம்பு தனைச்சூடி
விஞ்சு பரசிவமா மே. (உசரு)

(ப - ரை) ஐந்து, விருத்தியுடை = விருத்திகளையுடைய, அந்தக் கரணத்தால், முந்து = முதன்மையாக, விளங்கும் = விளங்குகின்ற, முறை = ஒழுங்குள்ள பழமையான, ஆன்மா = ஆத்மா, சந்ததமும் = எப்போதும், பஞ்சமுக = ஐந்து முகங்களையுடைய, நாகப்பாம்பு

தனே = நாகசர்ப்பத்தை, சூடி = தரித்துக்கொண்டு, விஞ்சு = மேன்மையாக வீற்றிருக்கிற, பரசிவம் ஆம் (ஏ) = பரமசிவமாம் (ஏ, அசை).

(பொ - ரை) ஐந்து விர்த்திகளையுடைய அந்தக் கரணத்தால் முதன்மையாக விளங்குகின்ற ஒழுங்குள்ள பழமையான ஆத்மா எப்போதும் ஐந்து முகங்களையுடைய நாகசர்ப்பத்தைத் தரித்துக் கொண்டு மேன்மையாக வீற்றிருக்கிற பரமசிவமாம்.

அறுசீர் விருத்தம்.

பெருத்தசுசி மாயைமகா மேருவத னுற்றோன்றும்
பிரம ஞான
உருத்திரைசேர் சிவன்பிரமஞ் சமத்துவமாந் தென்றலுட
னுவகைச் சந்தார்
அருப்பொதிகை சாத்தீக வுள்ளமிதிற் கூடத்த
வகத்தி யற்கே
விருப்புறுகற் புலோபாமுத் திரையான்ம வுணர்விவர்சா
மியமன் னூர்க்கே. (உசசு)

(ப - ரை) (க) பெருத்த = பெரிய, சுசிமாயை = சுத்தமாயை, மகாமேரு = மகாமேருவாம், அதனல் தோன்றும், பிரமஞான = பிரமஞானமாகிய, உருத்திரை சேர் = உமாதேவியைப் பொருந்திய, சிவன் பிரமம் = பிரமம் சிவனும், சமத்துவம் ஆம் = சமத்தன்மையாகிய, தென்றலுடன் = தென்றற் காற்றும், உவகைச் சந்து ஆர் = மகிழ்ச்சி என்னும் சந்தனமுந்தோன்றுகின்ற, அரு = அருமையான, பொதிகை சாத்தீக உள்ளம் = சாத்துவீக உள்ளம் பொதிகை மலையாம், இதில் = இதில் தோற்றுகிற, கூடத்த அகத்தியற்கே = கூடஸ்தராகிய அகத்தியரையே, விருப்பு உறுகற்பு = விரும்புகிற கற்பு நிறைந்த, உலோபா முத்திரை ஆன்ம உணர்வு = ஆத்ம ஞானம் உலோபா முத்திரையாம், இவர் = இந்தக் கூடஸ்தராகிய அகஸ்தியரும் ஆத்மஞானமாகிய உலோபா முத்திரையும், (௩) சாமியம் = சமமாவார்கள், (உ) அன்னூர்க்கு (ஏ) = அந்தப் பிரமமென்கிற சிவனுக்கும் பிரமஞான மென்னும் உமாதேவிக்கும். (ஏ, அசை)

(பொ - ரை) பெரிய சுத்தமாயை மகாமேருவாம், அதனல் தோன்றும் பிரமஞானமாகிய உமாதேவியைப் பொருந்திய பிரமம் சிவனும், சமத்தன்மையாகிய தென்றற் காற்றும் மகிழ்ச்சியென்னும்

சந்தனமுந் தோன்றுகின்ற அருமையான சாத்விக உள்ளம் பொதிகை மலையாம், இதிற்றோற்றுகிற கூடஸ்தராகிய அகஸ்தியரையே விரும்புகிற கற்பு நிறைந்த ஆத்மஞானம் உலோபா முத்திரையாம், இந்தக் கூடஸ்தராகிய அகஸ்தியரும் ஆத்மஞானமாகிய உலோபா முத்திரையும் அந்தப் பிரமமென்கிற சிவனுக்கும் பிரமஞான மென்னும் உமாதேவிக்கும் சமமாவார்கள்.

வெண்பா.

பிரகிருதி யீசனுயிர் பேசுமை வைந்தாங்
கரணம் பொறிபுலன்கள் காண வருபூதத்
தோடும் பிராண னுடலிவ் விருபத்தைந்
தாடுமகே சன் மூர்த்த மாம். (உசஎ)

(ப - ரை) பிரகிருதி, ஈசன் = ஈசுவரன், உயிர் = ஜீவன், பேசும் = சொல்லப்படுகிற, ஐவைந்து = ஐந்து ஐந்தாகிய, கரணம் = அந்தக்கரணங்கள், பொறி = இந்திரியங்கள், புலன்கள் = தன்மாத்திரைகள், காண = காணும்படி, வருபூதத்தோடும் = வருகின்ற பூதங்கள், பிராணன், உடல் = சரீரமாகிய, இவ்விருபத்தைந்து = இவ்விருபத்தைந்தும், ஆடும் = நிர்த்தனம் செய்கின்ற, மகேசன் மூர்த்தம் ஆம் = பிரமமாகிய மகேசுவரனுடைய வடிவங்களாம்,

(பொ - ரை) பிரகிருதி ஈசுவரன் ஜீவன் சொல்லப்படுகிற ஐந்து ஐந்தாகிய அந்தக்காணங்கள் இந்திரியங்கள் தன்மாத்திரைகள் காணும்படி வருகின்ற பூதங்கள் பிராணன் சரீரமாகிய, இவ்விருபத்தைந்தும் நிர்த்தனம் செய்கின்ற பிரமமாகிய மகேசுவரனுடைய வடிவங்களாம்.

கலி நிலைத்துறை.

சுத்த மாயைக்கல் லாலின்மூ லத்தினிற் றோன்றும்
சித்து ரூபமாந் தட்சிணா மூர்த்தியின் றிருநோக்
கொத்து நன்மன முதற்சதுர்க் கரணமென் றுரைக்கும்
உத்த மச்சன காதிநான் முனிவர ருய்ந்தார் (உசஅ)

(ப - ரை) சுத்த, மாயை = மாயையாகிய, கல்லாலின் = கல்லால விருக்ஷத்தின், மூலத்தினில் = அடியில், தோன்றும் = தோன்றுகிற, சித்து ரூபமாம் = ஞானவடிவமாம், தக்ஷிணாமூர்த்தியின்

திருநோக்கு = திவ்விய திருஷ்டியை, ஒத்து = பொருந்தி, நல் மனம் முதல்=நல்ல மனம் முதலாகிய, சதுர்க்கரணம் என்று உரைக்கும்=நான்கு கரணங்களென்று சொல்லப்படுகிற, உத்தம = தீவிர தரபக்குவர்களாகிய, சனகாதி நால்முனிவரர்=சனகர் முதலாகிய நான்கு முனி சிரேஷ்டர்கள்; உய்ந்தார் = முக்தியடைந்தனர்.

(போ - ரை) சுத்தமாயையாகிய கல்லால விருக்ஷத்தினடியில் தோன்றுகின்ற ஞானவடிவமாம் தக்ஷிணாமூர்த்தியின் திவ்விய திருஷ்டியைப் பொருந்தி நல்ல மனம் முதலாகிய நான்கு கரணங்கள் என்று சொல்லப்படுகிற தீவிர தரபக்குவர்களாகிய சனகர் முதலாகிய நான்கு முனி சிரேஷ்டர்கள் முக்தியடைந்தனர்.

அறுசீர் விருத்தம்.

சருவ விலட்சணத்துவசிந் தனையாம் வரரணாசிநகர்
பரம்யாம் யாமப் பரமென்னும் பயிற்சி பாகீ ரதிசத்தின்
விரிவு விசுவேச்சுரன் சித்து விசாலாட் சித்தாய் பிரமசுகம்
பிரிவி லன்ன பூரணியம்பிகையா முணர்வு தரிசனையே (உசுக)

(ப - ரை) சருவ விலக்ஷணத்துவ =சகல தத்துவமும் கடந்தநிலையின், சிந்தனை ஆம் வாரணாசி நகர் = சிந்தனை காசி நகராம், பரம் யாம்=பிரமமேநான், யாம் அப்பரம்=நானே அந்தப்பிரமம், என்னும், பயிற்சி=நிதித்தியாசனமாகிய அப்பியாசம், பாகீரதி=கங்கா நதியாம், சத்தின், விரிவு=வியாபகம், விசுவேச்சுரன் = விசுவநாத சுவாமியாம், சித்து, விசாலாட்சித்தாய்=விசாலாட்சி யம்மையாம், பிரமசுகம், பிரிவு இல்=பேதமில்லாத, அன்னபூர்ணி அம்பிகைஆம், உணர்வு= இதனை அறிதல், தரிசனை (ஏ)=தரிசனையாம். (ஏ,அசை) (சத்து =இருப்பு) (சித்து =விளக்கம்.)

(போ - ரை) சகல தத்துவமுங் கடந்த நிலையின் சிந்தனை காசி நகராம், பிரமமே நான் நானே அந்தப்பிரம மென்னும் நித்தியாசன மாகிய அப்பியாசம் கங்காநதியாம் சத்தின் வியாபகம் விசுவநாத சுவாமியாம், சித்து விசாலாக்ஷி யம்மையாம், பிரமசுகம் பேதமில்லாத அன்னபூரணி யம்பிகையாம், இதனையறிதல் தரிசனையாம்.

கலி விருத்தம்.

ஞான தேசிக னற்சரண் காசியவ்
வான வன்மொழி வாய்மை பகீரதி
யான தன்னவ வாருளெய்திடு
மேன லன்விசு வேச்சுரன் பூசையே (உ௫௦)

(ப - ரை) ஞான, தேசிகன் = குருவின், நல்சரண் = நல்ல சரணம், காசி = காசியாம், அவ்வானவன் = அந்தமேலான குரு வானவர். மொழிவாய்மை = சொல்லுகிற உண்மை, பகீரதியானது = கங்கையாம். அன்னவன் = அந்தக்குருவின், ஆருள் = நிறைந்த அருளை, எய்திடும் = அடையத்தக்க, மேல்நலன் = மேன்மை யானகுணம், விசுவேச்சுரன் = விசுவேச்வரருடைய, பூசை (ஏ) பூசையாம். (ஏ, அசை)

(போ - ரை) ஞான குருவின் நல்லசரணம் காசியாம்; அந்த மேலான குருவானவர் சொல்லுகிற உண்மை கங்கையாம் அந்தக் குருவின் நிறைந்த அருளை யடையத்தக்க மேன்மையான குணம் விசுவேச்வரருடைய பூசையாம்.

இருபத்துநான்கு சீர் ஆசிரியவிருத்தம்.

மாயையாந் தாருகா வனமேவு சங்கற்ப
மாமுனிவர் பிரவிருத்தி
மார்க்கமாந் தீயவேள் வியினின்று விடுசுட்டு
மதியரா வினைவிவேக
வான்பணிக ளாவணிந் துஞ்சினப் புலிதனை
வலித்துரித் துச்சாந்தமாம்
வத்திர மெனக்கொண்டு மஞ்ஞான முயலகனை
மன்சருவ சாட்சியானென்
றுயசவ் வியமாம் பதத்தான் மிதித்தே
யகங்கார மழுவைச்சுய
வறிவாக வுஞ்சத்த கேர்டிமனு வாந்துடி
யதைச்சப்த பிரமமெனவும்
அநிர்தசட துக்கவிர்த் திச்சூல மதுசச்சி
தானந்த வுணர்வாகவும்
அலைதீ மனத்துழை தனைச்சாத்து விகமன
மாகவும் சிந்தையனலைத்

தூயவிர்த் திப்போத மாயுமிச் சாபாச
சுருளேயரு ளென்னவு மொரு
தொழிலுமிலி யான்யா னனைத்துஞ்செய் வேனெனச்
சுடர்வல மிடக்கரங்கள்
தோன்றவைத் தேமறதி யாயகரு வெண்டலே
துலங்கமவு னச்சிரத்திற்
சூடிமற் றைக்கு ணப் பூதங்க ணற்குணத்
தொகையெனச் சூழவுமெலாம்
ஏயநா னெனுமிடத் தாளெடுத் தயலல்ல
வெனுமபய மிவ்வாறுணர்ந்
திலகுநீ யேபொரு ளெனும்வரத முந்திகழ
விதயசிற் றம்பலத்தின்
இடைப்பிரஞ் ஞாசத்தி மகிழ்துரிய நடமே
விடுப்பர சிவத்தையென்னும்
இயன்ஞானி யாம்வியாக் கிரபாதர் சிவயோகி
யென்பதஞ் சலிகாண்பரே. (உருக)

(ப - ரை) மாயை, ஆம் = ஆகிய, தாருகாவனம் = தாருகாவனத்தில், மேவு = வசிக்கின்ற, சங்கற்பம், ஆம் முனிவர் = ஆனமுனிவர், பிரவிர்த்திமார்க்கம், ஆம் = என்னும், தீய = கெடுதலைச் செய்யும், வேள்வியில் நின்று = யாகத்திலிருந்து, விடு = அனுப்பிய, சுட்டுமதி = சுட்டுகின்ற புத்தியாகிய, அராவினை = சர்ப்பங்களை, விவேக = விவேகமெனும், வான் = மேலான, பணிகளா = ஆபரணங்களாக, அணிந்தும் = தரித்தும், சினப்புலிதனை = கோபமென்னும் புலியை, வலித்து = இழுத்து, உரித்து, சாந்தம், ஆம் = என்கிற, வத்திரம் எனக்கொண்டும் = வஸ்திரமாக உடுத்தும், அஞ்ஞான = அஞ்ஞானமென்கிற, முயலகனை, மன் = நிலைபெற்ற, சருவசாட்சி, யான்என்று ஆய = நான் என்பதாகிய, சவ்வியம் ஆம்பதத்தால் = வலப்பாதத்தால், மிதித்து (ஏ), அகங்கார = அகங்கார மெனும், மழுவை, சுய அறிவாகவும் = தனது விளக்கமாகவும், சத்த = ஏழு, கோடி, மனு ஆம் துடி அதை = மந்திரங்களான உடுக்கையை, சப்தபிரமமென வும் = சப்தப் பிரமமாகவும், அநிர்த = அசத்து, சட துக்க, விர்த்தி = விருத்தியான, சூலம் (அது) = சூலத்தை, சச்சிதானந்த உணர்வு ஆகவும் = சத்துச்சித்து ஆனந்த உணர்ச்சி யெனவும், அலே = அலேகின்ற, தீமனத்து உழைதனை = தீயமனமாகிய மானை, சாத்துவிக

மனமாகவும், சிந்தை அனலை = சிந்தையான அக்கினியை, தூய = பரிசுத்த, விர்த்தி, போதம் ஆயும் = ஞானமெனவும், இச்சாபாச சுருளை = இச்சை யென்னும் பாசத்தின் சுருளை, அருள் எனவும் = அருளாகவும், ஒரு தொழிலும் இலியான் = நான் ஒரு செய்கையு மில்லாதவன், யான் அனைத்தும் செய்வோன்என, சுடர் = விளங்கு கின்ற, வலம் இடக்கரங்கள் = வலக்கரத்திலும் இடக்கரத்திலும், தோன்றவைத்து (ஏ) = தோன்றும்படி வைத்து, மறதி, ஆய = ஆன, நகுவெண்தலை = சிரிக்கும் வெள்ளைத்தலையை, துலங்க மௌனச் சிரத்தில் = மௌன நிலையெனும் தனது சிரசில் பிரகாசிக்க, சூடி, மற்றைக்குண = தீயகுணங்களென்கிற, பூதங்கள், நற்குணத் தொகை என = சற்குணங்களின் கூட்டமாக, சூழவும், எலாம் ஏய நான் எனும் = பொருந்தும்படி எல்லாம் நான் என்னும், இடத்தாள் எடுத்து = இடப்பாதத்தைத் தூக்கி, அயல் அல்ல எனும் அபயம் = அன்னியம் அல்ல வென்பதைக் குறிக்கும் அபயகரமும், இவ்வாறு உணர்ந்து = இவ்விதம் அறிந்து, இலகு = நிற்கும், நீயேபொருள், எனும் வரதமும் = என்பதைக் குறிக்கும் வரதகரமும், திகழ = தோன்ற, இதய சிற்றம்பலத்தின் = இருதயமாகிய சிறிய சபை யின், இடை = இடத்து, பிரஞ்ஞாசத்தி = பிரஞ்ஞை என்னும் தனது சத்தி, மகிழ் = அறிந்து மகிழ்கின்ற, துரிய நடம்மேவிடும் = துரியமான நடனத்தைப் பொருந்திய, பரசிவத்தை = மேலானசிவத் தை, என்றும் = எப்போதும், இயல் ஞானி ஆம் = இயல்பானஞானி யாகிய, வியாக்கிரபாதர் = வியாக்கிரபாத முனிவரும், சிவயோகி, என் = என்னும், பதஞ்சலி = பதஞ்சலி முனிவரும், காண்பர் (ஏ) = தரிசிப்பார்கள். (ஏ, ஏ, ஏ, அசைகள்) (அது சொல்லுருபு)

(பொ-ரை) மாயையாகிய தாருகாவனத்தில் வசிக்கின்ற சங் கற்பமான முனிவர் பிரவிர்த்தி மார்க்க மென்னும் கெடுதலைச் செய் யும் யாகத்திலிருந்து அனுப்பிய சுட்டுகின்ற புத்தியாகிய சர்ப்பங் களை விவேகமெனும் மேலான ஆபரணங்களாகத் தரித்தும், கோப மென்னும் புலியை இழுத்து உரித்துச் சாந்தமென்கிற வஸ்திரமாக உடுத்தும், அஞ்ஞான மென்கிற முயலகனை நிலைபெற்ற சர்வசாக்ஷி நான் என்பதாகிய வலப் பாதத்தால் மிதித்து, அகங்கார மென்னும் மழுவைத் தனது விளக்கமாகவும் ஏழுகோடி மந்திரங்களான உடுக் கையைச் சப்தப் பிரமமாகவும், அசத்துச் சடதுக்க விர்த்தியான சூலத்தைச் சத்துச் சித்து ஆனந்த உணர்ச்சி யெனவும், அலைகின்ற

தீயமனமாகிய மானைச் சாத்விக மனமாகவும், சிந்தையான அக்கினியைப் பரிசுத்த விர்த்திஞான மெனவும் இச்சை, யென்னும் பாசத்தின் சுருளை அருளாகவும், நான் ஒரு செய்கையுமில்லாதவன் நான் அனைத்துஞ் செய்வோனென விளங்குகின்ற வலக்கரத்திலும் இடக்கரத்திலுந் தோன்றும்படி வைத்து, மறதியான சிரிக்கும் வெள்ளைத் தலையை மௌனநிலை யென்னும் தனது சிரசில் பிரகாசிக்கச் சூடித் தீய குணங்களென்கிற பூதங்கள் சற்குணங்களின் கூட்டமாகச் சூழவும், பொருந்தும்படி எல்லாம் நானென்னுமிடப் பாதத்தைத் தூக்கி, அன்னியமல்ல வென்பதைக் குறிக்கும் அபயகரமும் இவ்விதம் அறிந்து நிற்கும் நீயே பொருள் என்பதைக் குறிக்கிற வரதகரமுந்தோன்ற இருதயமாகிய சிறிய சபையினிடத்துப் பிரஞ்ஞை யென்னும் தனது சத்தி அறிந்து மகிழ்கின்ற துரியமான நடனத்தைப் பொருந்திய மேலான சிவத்தை எப்போதும் இயல்பான ஞானியாகிய வியாக்கிர பாதமுனிவரும் சிவயோகி யென்னும் பதஞ்சலி முனிவரும் தரிசிப்பார்கள்.

### கலி நிலைத்துறை.

கல்லு தத்துவத் திரள்செறி முமூட்சுவின் காயத்
தில்லை யின்கணே மாயைமா லினிநனி செருக்கச்
சொல்லின் யானதீ தன்னெனு மோர்கழற் றூக்கால்
வெல்லு மீசர்பொன் மேனிமெய்ஞ் ஞானமா விளங்கும் (உ௫உ)

(ப - ரை) கல்லு = விசாரிக்கப்படுகிற, தத்துவத்திரள் செறி = தத்துவக்கூட்டம் சேர்ந்த, முமூட்சுவின், காயத்தில்லையின் கண் (ஏ) = சரீரமாகிய தில்லைவனத்தில், மாயைமாலினி = மாயை என்னும் காளி, நனிசெருக்க = மிகவும் கர்வமடைய, சொல்லின் = சொல்லுமிடத்து, யான் அதீதன் எனும் = நான் சர்வமும் கடந்தவன் என்னும் நிச்சயமாகிய, ஓர் கழல் தூக்கால் = ஓர் பாதத்தை மேலே தூக்குதலால், வெல்லும் = அம்மாயையாகிய காளியை வென்ற, ஈசர் பொன்மேனி = பரமசிவத்தினுடைய பொன் போன்ற திருமேனி, மெய்ஞ்ஞானம், ஆ = ஆக, விளங்கும். (ஏ, அசை.)

(போ - ரை) விசாரிக்கப்படுகிற தத்துவக்கூட்டஞ் சேர்ந்த முமூட்சுவின் சரீரமாகிய தில்லைவனத்தில் மாயையென்னும் காளி மிகவும் கர்வமடையச் சொல்லுமிடத்து நான் சர்வமுங் கடந்தவ

னென்னும் நிச்சயமாகிய ஓர் பாதத்தை மேலே தூக்குதலால் அம் மாயையாகிய காளியை வென்ற பரமசிவத்தினுடைய பொன் போன்ற திருமேனி மெய்ஞ்ஞானமாக விளங்கும்.

எழுசீர் விருத்தம்.

தன்னில்யாவும் விளங்கமற்றவை தம்மின்மேவுத லூன்விசும்
பென்னவேகமு மாயனேக மெனக்குலாவல் கனநிகர்
இன்னயாவு மியற்றியொன் று மியற்றிடாது நடேசனும்
நன்னிலைப்பிர மஞ்சிதம்பர ஞானபூரண நண்ணுமே. (உருஎ)

(ப-ரை) (உ) தன்னில் யாவும் = ஞானசொரூபமாகிய தன்னிடத்தில் சர்வமும், விளங்க, மற்று அவை தம்மில் = அந்தச் சர்வத்திலும், மேவுதல்தான் = தான்விளங்குதலும், (க) விசும்பு என்ன = ஆகாயத்தைப் போல, (ச) ஏகமும் ஆம் அநேகம் என = ஏகமாகியும் அநேகமாகவும், குலாவல் = விளங்கலும், (ஈ) கன நிகர் = கனவைப்போல, (ரு) இன்னயாவும் இயற்றி = இவ்வித மாக யாவையும் செய்தும், ஒன்றும் இயற்றிடாது — ஒன்றும் செய்யாமலும், நடேசன் ஆம் = நடராஜாவாகிய, நல்நிலைப்பிரமம் = நல்ல நிலைமையான பிரமம், சிதம்பர ஞான பூரணம் = ஞானபூரண மென்னுஞ் சிதம்பரத்தில், நண்ணும்(ஏ) = விளங்கிக்கொண்டிருக் கும். (ஏ, அசை)

(பொ-ரை) ஆகாயத்தைப்போல ஞான சொரூபியாகிய தன்னிடத்தில் சர்வமும் விளங்க அந்தச்சர்வத்திலும் தான் விளங்கு தலும் கனவைப்போல ஏகமாகியும் அநேகமாகவும் விளங்கலும் இவ்விதமாக யாவையும் செய்தும் ஒன்றுஞ் செய்யாமலும் நடராஜா வாகிய நல்ல நிலைமையான பிரமம் ஞான பூரணமென்னுஞ் சிதம் பரத்தில் விளங்கிக்கொண்டிருக்கும்.

கலிவிருத்தம்.

நிருவி கற்பநன் னிட்டைபொன் மன்றவன்
துரிய நிர்த்தனஞ் சூழும் பரசிவ
தரிச னத்தைச் சகச சமாதியாம்
இரச தச்சபை யின்கணு மெய்துவார் (உருஅ)

(ப - ரை) நிருவிகற்ப நல்நிட்டை=நல்ல நிர்விகற்ப நிஷ்டையாவது, பொன்மன்று=கனக சபையாம், அவண் = அவ்விடத்தில், துரிய நிர்த்தனம்=துரிய அனுபவமாகிய நடனத்தை, சூழும்= பொருந்திய, பரசிவ=மேலான சிவத்தின், தரிசனத்தை=தரிசனத்தையே, சகச சமாதி, ஆம்=என்னும், இரசதச்சபையின்கணும்= வெள்ளியம்பலத்திலும், எய்துவார்=பெறுவார்கள்.

(கணும்=கண்ணும் என்பதனிடைக்குறை)

(பொ - ரை) நல்ல நிர்விகற்ப நிஷ்டையாவது கனகசபையாம், அவ்விடத்தில் துரிய அனுபவமாகிய நடனத்தைப் பொருந்திய மேலான சிவத்தின் தரிசனத்தையே சகசசமாதியென்னும் வெள்ளியம்பலத்திலும் பெறுவார்கள்.

### வஞ்சித்துறை.

உயர்தன்னுண ருயிருக்—கயலன்றெனு மபயம்
வயநீயெனும் வரதஞ்—செயுமோர்பர சிவமே. (உருரு)

(ப - ரை) (உ) உயர்=உயர்வான, தன்உணர் = தன்னை அறிகின்ற, உயிருக்கு = சீவனுக்கு, அயல் அன்று எனும் = தான் வேறல்ல வென்று உணர்த்துவதாகிய, அபயம்=அபயமும், வயம் நீ எனும்=வசமாகிய நீயே என்று உணர்த்துவதாகிய, வரதம்=வரதமும், செயும்=செய்வார், (க) ஓர் பரசிவம் (ஏ) = ஒப்பற்ற பரமசிவம். (ஏ, அசை.)

(பொ - ரை) ஒப்பற்ற பரமசிவம், உயர்வான தன்னை யறிகின்ற சீவனுக்குத்தான் வேறல்ல வென்று உணர்த்துவதாகிய அபயமும், வசமாகிய நீயே என்று உணர்த்துவதாகிய வரதமும் செய்வார்.

### கலிநிலைத்துறை.

எஞ்சு றூநனுக் கனுத்துயி லுரிய நான் கினைச்சார்
கைஞ்ச சீவனீச் சுரன்சிவ னவத்தைமுந் நான்காம்
மஞ்சின் மேற்சுகந் துவாதசாந் தத்தல மதுரை
பஞ்ச கோசமெய் விவேகமா மைந்நதிப் பதியே. (உருசு)

(ப - ரை) எஞ்சுறு=குறையாத, நனு=சாக்கிரம், கனு=சொப்பனம், துயில்=சுழுத்தி, துரியம் என்னும், நான்கினைச்சார்=நான்கையுந் தனித்தனிப் பொருந்திய, கைஞ்ச = தளர்ந்த, சீவன்,

ஈச்சுரன் = ஈசுவரன், சிவன் = சிவம் என்னும் இம் மூவருடைய, அவத்தை = அவஸ்தை, மூன்னான்காம் = பன்னிரண்டாம், மஞ்சின் = அழகிய இவற்றின், மேல்சுகம் = மேல்விளங்கும் சுகநிலை, துவாத சாந்த, தலமதுரை = ஸ்தலமாகிய மதுரையாம், பஞ்சகோச = அன்னமயமுதலிய ஐந்து கோசங்களின், மெய்விவேகம் = உண்மை விவேகம், ஆம் ஐந்நதிப்பதி (ஏ) = திருவையாறு எனும் ஸ்தலமாம். (ஏ, அசை.)

(போ - ரை) குறையாத சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்னும் நான்கையும் தனித்தனிப் பொருந்திய தளர்ந்த சீவன் ஈசுவரன் சிவம் என்னுமிம்மூவருடைய அவஸ்தை பன்னிரண்டாம்; அழகிய இவற்றின்மேல் விளங்கும் சுகநிலை துவாத சாந்தஸ்தலமாகிய மதுரையாம்; அன்னமய முதலிய ஐந்து கோசங்களின் உண்மை விவேகம் திருவையாறு எனும் ஸ்தலமாம்.

கலி விருத்தம்.

பூசு பஞ்சக பூருவ கோசமும்
வீசு சாட்சி விருத்திநல் லுத்தர
கோச மங்கைக் குழக னகண்டமாப்
பேசும் விர்த்திப் பெருந்துறை நாதனே. (உருஎ)

(ப - ரை) பூசு = மூடுகிற, பஞ்சக பூருவ கோசமும் = கீழான கோசம் ஐந்தின் கூட்டத்தையும், வீசு = நானல்ல வென்று எறியும், சாட்சி, விருத்தி = விர்த்தியாகிய, நல் = நல்ல, உத்தரகோச மங்கைக் குழகன் = உத்தரகோசமங்கை என்கிற ஸ்தலத்தில் விளங்குகின்ற அழகன், அகண்டமாப் பேசும் விர்த்தி = அகண்டாகார விர்த்தி என்பதாகச் சொல்லப்படுகிற, பெருந்துறை நாதன் (ஏ) = பெருந்துறை யென்னும் ஸ்தலத்தில் அமர்ந்த தலைவனாகிய பரமசிவமாம். (ஏ, அசை) (உத்தரகோச மங்கை = மேலான கோசமென்னும்சத்தி)

(போ - ரை) மூடுகிற கீழான கோசம் ஐந்தின் கூட்டத்தையும் நானல்ல வென்றெறியும் சாக்ஷி விர்த்தியாகிய நல்ல உத்தரகோச மங்கை யென்கிற ஸ்தலத்தில் விளங்குகின்ற அழகன், அகண்டாகார விர்த்தி என்பதாகச் சொல்லப்படுகிற பெருந்துறை யென்னும் ஸ்தலத்திலமர்ந்த தலைவனாகிய பரமசிவமாம்.

நிருவி சேட நிலைமையுற் றேகமாஞ்
சொருப ஞானஞ் சுடர்சிவ லிங்கமே
சருவ மாய சகச வனுபவத்
துரிய போதந் தொழும்விக் கிரகமால் (௨௫௪)

(ப - ரை) நிருவிசேட=விசேஷமில்லாத, நிலைமை உற்று= பொதுநிலை யடைந்து, ஏகமாம்=ஒரே விதமாகிய, சொருபஞானம் = தன்மயமான ஞானமானது, சுடர்=விளங்குகிற, சிவலிங்கம் (ஏ) =சிவலிங்கமாம், சருவம் ஆய=சகலமுமாகிய, சகச அனுபவ = சகச அனுபவமென்னும், துரிய, போதம்=ஞானமாவது, தொழும் விக்கிரகம் (ஆல்) = வணங்கத்தக்க விக்கிரகமாம். (ஆல், ஏ, அசைகள்.)

(போ - ரை) விசேஷமில்லாத பொது நிலையடைந்து, ஒரேவித மாகிய தன்மயமான ஞானமானது, விளங்குகிற சிவலிங்கமாம். சகலமுமாகிய சகச அனுபவமென்னும் ஞானமாவது, வணங்கத் தக்க விக்கிரகமாம்.

எண்சீர் விருத்தம்.

ஆனந்த மயகோச சான்றேவிஞ் ஞானம்
அமருமனோ மயம்வாயு மயமன்ன மயமவ்
வூனின்சார் வெளிப்பொருண்மற் றெச்சகத்தும் விளங்கும்
ஒருங்குணர்சான் றுய்ப்பின்னை யொருதான்மட் டொளிர்தல்
ஈனந்தீ ருள்ளமரு மூலசிவ மேயொன்
றிரண்டாதி யாவரண மேழும்விசே டமதாய்
மேனின்ற மூர்த்தியுமாய்த் தானேயா வருக்கும்
விளங்கியபின் மூலசிவ மாய்நிதமே வுதலே. (௨௫௫)

(ப - ரை) ஆனந்தமய, கோச சான்றே=கோசத்தின் சாக்ஷியே, விஞ்ஞானம்=விஞ்ஞான மயகோசம், அமரும்=பொருந்திய, மனோ மயம்=மனோமயகோசம், வாயுமயம் = பிராணமயகோசம், அன்ன மயம்=அன்னமயகோசங்களிலும், அவ்வூனின் சார்=அந்த அன்ன மயகோச மென்னும் உடலைச் சார்ந்தனவாகிய, வெளிப்பொருள் = வெளியிலுள்ள பொருள்களிலும், மற்று எச்சகத்தும் = மற்றவை யாகிய எவ்வுலகங்களிலும், விளங்கும், ஒருங்கு உணர் = எல்லாவற்

றையும் அறிகின்ற, சான்றுஆய் = சாக்ஷியாகி, பின்னர் = பின்பு, ஒருதான் மட்டு=ஒன்ருகியதான் மாத்திரமாய், ஒளிர்தல் = அமர்த லாவது, ஈனம்தீர்=குற்றமற்ற, உள்அமரும் = கர்ப்பக் கிரகத்தி லிருக்கிற, மூலசிவமே=முதன்மையான சிவமே, ஒன்று இரண்டு ஆதி=ஒன்ருவது இரண்டாவது முதலிய, ஆவரணம் ஏழும் = ஏழு பிரகாரங்களிலும், விசேடம் (அது) ஆய் = விசேஷமாய், மேல் நின்ற மேன்மையாயுள்ள, மூர்த்தியும் ஆய் = மூர்த்திகளுமாகி, தானே, யாவருக்கும் விளங்கியபின்=அனேவோர்க்குந் தோன்றிய பின்பு, மூலசிவம் ஆய்=மூலமாத்திரமான சிவமாகி, நிதம்மேவுதல் (ஏ)=எப்போதும் இருத்தலாம். (ஏ, அசை) (அது, சொல்லுருபு)

(போ-ரை) ஆனந்தமய கோசத்தின் சாக்ஷியே விஞ்ஞானமய கோசம் பொருந்திய மனோமயகோசம் பிராணமயகோசம் அன்ன மயகோசங்களிலும் அந்த அன்னமய கோசமென்னும் உடலைச்சார்ந் தனவாகிய வெளியிலுள்ள பொருள்களிலும் மற்றவையாகிய எவ் வுலகங்களிலும் விளங்கும் எல்லாவற்றையும் அறிகின்ற சாக்ஷி யாகிப் பின்பு ஒன்ருகித் தான்மாத்திரமாய் அமர்தலாவது குற்ற மற்ற கர்ப்பக்கிரகத்திலிருக்கிற முதன்மையான சிவமே ஒன்ருவது இரண்டாவது முதலிய ஏழுபிரகாரங்களிலும் விசேஷமாய் மேன்மை யுள்ள மூர்த்திகளுமாகித்தானே அனேவோர்க்குந் தோன்றிய பின்பு மூலமாத்திரமான சிவமாகி எப்போதும் இருத்தலாம்.

அறுசீர் விருத்தம்.

எல்லாந்தா னுய்ப்பார்த்தும் பார்க்கப்பட் டுளவனைத்து
மிலங்கத் தன்போல்
நல்லாகா ரம்பெறுவித் தும்பரமா னந்தவரு
ணாட்டம் பெற்றும்
கல்லாமை யகற்றும்விசா லாட்சியுயர் மீனாட்சி
காமாட் சிப்பேர்
புல்லாநில் சித்துருவாஞ் சத்தியினு லதீதபரம்
பொருந்து மான்மா. (உகூ0)

(ப-ரை) எல்லாம் = எல்லாவற்றையும், தானுய்ப்பார்த்தும், பார்க்கப்பட்டுஉள=பார்க்கப்பட்டதாயிருக்கிற, அனைத்தும்=சர்வ மும், இலங்கத்தன்போல்=தன்னைப்போல விளங்க, நல் ஆகாரம்=

நல்ல ஞானவடிவம், பெறுவித்தும்=பெறச்செய்தும், பரமானந்த= மேலான ஆனந்தமாகிய, அருள்நாட்டம் = ஞான நோக்கத்தை, பெற்றும்=அடைந்தும், கல்லாமை = முறையே அறியாமையை, அகற்றும்=அகற்றுகிற, விசாலாட்சி, உயர் = மேலான, மீனாட்சி, காமாட்சிப்பேர் = காமாக்ஷி யென்னும் பேர்களை, புல்லா நில் = பொருந்துகின்ற, சித்து உருவாம் = ஞானவடிவமாகிய, சத்தி யினால், அதீதபரம்=எல்லாவற்றையுங் கடந்த பிரமத்தை, பொருந் தும் ஆன்மா=ஆத்மா அடையும்.

(போ - ரை) எல்லாவற்றையுந் தானாய்ப்பார்த்தும் பார்க்கப் பட்டதாயிருக்கிற சர்வமும் தன்னைப்போல விளங்க நல்ல ஞான வடிவம் பெறச்செய்தும் மேலான ஆனந்தமாகிய ஞானநோக்கத்தை யடைந்தும் முறையே அறியாமையை யகற்றுகிற விசாலாக்ஷி மேலான மீனாக்ஷி காமாக்ஷி யென்னும் பேர்களைப் பொருந்துகின்ற ஞானவடிவமாகிய சத்தியினால் எல்லாவற்றையுங் கடந்த பிரமத்தை ஆத்மா அடையும்.

## வெண்பா.

அநுபூதி ஞானவுமை யாள்கலைக ளாகும்
துனிதீர்வை ராக்கியமாந் துர்க்கை—தனிமை
உபரதியாங் காளியுமின் னோர்வா கனங்கள்
தபதைரி யத்தொடுபேட் சை. (உகுக)

(ப - ரை) (உ) அநுபூதி ஞான = அநுபவ ஞானமாகிய, உமை யாள் = உமாதேவியின், கலைகள் ஆகும் = அம்சங்களாகும், (க) துனிதீர் = துன்பத்தைத் தீர்க்கின்ற, வைராக்கியம், ஆம் = என் னும், துர்க்கை=துர்க்கா தேவியும், தனிமை=ஒப்பற்ற, உபரதி, ஆம்=ஆன, காளியும்=காளியம்மனும், (ங) இன்னோர்=துர்க்கை காளி யென்னுமிவர்களின், வாகனங்கள், தப=முறையே தவத்திற் குக் காரணமாகிய, தைரியத்தொடு = தைரியமும், உபேட்சை = உபேக்ஷையுமாம். (உபரதி=விடுதல்) (உபேக்ஷை=விருப்பு வெறுப் பின்மை).

(போ - ரை) துன்பத்தைத் தீர்க்கின்ற வைராக்கிய மென்னும் துர்க்காதேவியும், ஒப்பற்ற உபரதியான காளியம்மனும், அநுபவ ஞானமாகிய உமாதேவியின் அமிசங்களாகும். துர்க்கை காளி

யென்னும் இவர்களின் வாகனங்கள் முறையே தவத்திற்குக் காரண மாகிய தைரியமும் உபேக்ஷையுமாம்.

சத்துச் சிவஞ்சித்தே சத்தி நிருவிகற்பத்
தொத்துளவா னந்தமே யொற்றைக்கொம்—பத்தன்
சகசானந் தந்தானே சண்முகவன் வன்னி
மகிழ்சூடு செம்மை யொளி மற்று. (உகூஉ)

(ப-ரை) (க) சத்து = இருப்பு, சிவம் = சிவமாம், சித்து (ஏ) விளக்கம், சத்தி = சத்தியாம், நிருவிகற்பத்து ஒத்துஉள = நிர்வி கற்பமாகப் பொருந்தியிருக்கின்ற, ஆனந்தம் (ஏ), ஒற்றைக்கொம்பு அத்தன் = ஒருகொம்பை யுடைய மேலோனாகிய விநாயகராம், சகச ஆனந்தம்,(தான்) (ஏ) = சகச நிஷ்டையிலுள்ள ஆனந்தம், சண்முக வன் = ஆறுமுகத்தை யுடைய சுப்பிரமண்ணியராம், (௩) வன்னி = அக்கினி, மகிழ்சூடு = மகிழ்கின்ற உஷ்ணம், செம்மை = சிவப்பு நிறம், ஒளி = பிரகாசம் என்பனவுமாம், (உ) மற்று = இன்னும் அந்தச்சத்து முதலிய நான்கும் முறையே. (தான், சாரியை) (ஏ, அசை).

(பொ-ரை) இருப்புச் சிவமாம், விளக்கம் சத்தியாம், நிர்வி கற்பமாகப் பொருந்தியிருக்கின்ற ஆனந்தம் ஒரு கொம்பையுடைய மேலோனாகிய விநாயகராம், சகச நிஷ்டையிலுள்ள ஆனந்தம் ஆறுமுகத்தையுடைய சுப்பிரமண்ணியராம். இன்னும் அந்தச்சத்து முதலிய நான்கும் முறையே அக்கினி, மகிழ்கின்ற உஷ்ணம், சிவப்பு நிறம், பிரகாசம் என்பனவுமாம்.

கலி நிலைத்துறை.

சத்தி யுட்டணம் விக்கினேச் சுரநிறந் தானும்
வைத்து றுஞ்சிவா தித்தனிற் சுப்பிர மண்ய
நித்தி யப்பிர காசமே யவித்தையன் னீக்கும்
சித்த வீட்டினு ளகங்கரக் கதவினைத் திறப்பின். (உகூ௩)

(ப-ரை) (உ) சத்தி உட்டணம் = சத்தியாகிய உஷ்ணமும், விக்கினேச்சுர நிறம் (தான்) உம் = விக்கினேசுவர னென்னும் நிற மும், வைத்து உறும் = பொருந்தியிருக்கின்ற, சிவாதித்தனில் = சிவம் என்கிற சூரியனிடத்து விளங்கும், சுப்பிரமண்ய நித்தியப்

பிரகாசமே = நித்தியமான சுப்பிரமண்ணிய ரெனும் பிரகாசமே, (சு) அவித்தை அல் = அஞ்ஞானமாகிய இருளை, நீக்கும், (ரு) சித்த வீட்டினுள் = சித்தம் எனப்படும் வீட்டினுள்ளிருக்கிற, (க) அகங் காரக் கதவினை = அகங்காரமென்னும் கதவை, திறப்பின் = திறந் தால். (தான், சாரியை.)

(போ-ரை) அகங்கார மென்னுங் கதவைத் திறந்தால், சத்தி யாகிய உஷ்ணமும், விக்கினேசுவர னென்னும் நிறமும், பொருந்தி யிருக்கின்ற சிவமென்கிற சூரியனிடத்து விளங்கும் நித்தியமான சுப்பிரமண்ணிய ரென்னும் பிரகாசமே, சித்தமெனப்படும் வீட்டி னுள்ளிருக்கிற அஞ்ஞானமாகிய இருளை நீக்கும்.

கலி விருத்தம்.

சருக்கரை யுருச்சுவை தனிற்பின மிலாமை
அருட்பரனு ஞானியு மமைந்ததயிர் பாகின்
இருப்பென லரன்சிவையு மேகர்சுவை ஞானி
தருச்சுரர் முதன்முடிவு சர்வகண நாதன் (உகூச)

(ப-ரை) சருக்கரை உரு = சர்க்கரை வடிவம், சுவை தனில் = உருசியிலிருந்தும், பினம் இலாமை = பேதமில்லாமை யாவது, அருள் பரனும் = கருணையுடைய ஈசனும், ஞானியும், அமைந்தது = ஐக்கியமானதாம், அயிர் = வெல்லம், பாகின் இருப்பு, எனல் = என்பது, அரன் சிவையும் = சிவன்சத்தி, ஏகர் = ஒருமையாம், சுவை ஞானி, அவ்வெல்லத்திலும் பாகினு முள்ள உருசியான ஞானி; தருச்சுரர் = தாவரமுந் தேவரும், முதல் முடிவு = முறையே முதலும் முடிவுமாகிய, சர்வகணநாதன் = சர்வ கணங்களுக்கும் பதியாவன்.

(பினம், பின்னம் என்பதனிடைக்குறை)

(போ-ரை) சர்க்கரை வடிவம் உருசியிலிருந்தும் பேதமில் லாமையாவது கருணையுடைய ஈசனும் ஞானியும் ஐக்கியமானதாம். வெல்லம் பாகின் இருப்பென்பது சிவன்சத்தி ஒருமையாம். அவ் வெல்லத்திலும் பாகினும் உள்ள உருசியான ஞானி, தாவரமுந் தேவரும் முறையே முதலும் முடிவுமாகிய சர்வகணங்களுக்கும் பதியாவன். (சர்வகணம் - ஏழ்பிறப்பிலுள்ள சகலமும்)

கலிவிருத்தம்

மண்மெய் யிலின்யான் யானெனமலறைவுற் றது விழ
எண்மன்னு மகங்கார வியன்மூடிக மீதே
வண்மைச் சவிகற் பாநிர்வி கற்பக் கரநாசி
வண்மைப் பரவக மாமுக வரன்ஞா னபுமானே (உகூரு)

(ப - ரை) மண் மெய் இலின் = மண்ணாகிய சரீரமெனும் வீட்டில், யான் யான் என மறைவு உற்று = நான் நான் என்று மறைந்து, அது, விழ = விழவே, எண் = நினைவாக, மன்னும் = இருக்கும், அகங்கார, இயல் = சுபாவமாகிய, மூடிகம் மீது (ஏ) = மூஷிகத்தின்மேல், விண்மை = ஆகாயத்தன்மையாக, சவிகற்பு ஆம் = சவிகற்பஞானமே, நிர்விகற்ப நிலையாகக் கொள்ளலாகிய, கரம் நாசி = கையே மூக்காக உடைய, வண்மை = திடமான, பர அகம் = பரமாகங்காரமென்னும், மாமுக = யானைமுகங்கொண்ட, வரன் = சிரேஷ்டனே, ஞானபுமான் (ஏ) = ஞானவானுவன்.

(இலின், இல்லின் என்பதனிடைக்குறை) (ஏஎ, அசைகள்) (சவிகற்பு, சவிகற்பம் என்பதன் கடைக்குறை)

(போ - ரை) மண்ணாகிய சரீரமெனும் வீட்டில் நான் நான் என்று மறைந்து அது விழவே நினைவாக இருக்கும் அகங்கார சுபாவமாகிய மூஷிகத்தின்மேல் ஆகாயத்தன்மையாகச் சவிகற்ப ஞானமே, நிர்விகற்ப நிலையாகக் கொள்ளலாகிய கையே மூக்காக வுடைய திடமான பரமாகங்கார மென்னும் யானைமுகங்கொண்ட சிரேஷ்டனே ஞானவானுவான்.

எழுசீர்விருத்தம்.

அனுபவப் பிரம வல்லபை கணேசன்
அமர்சவி கற்பநிர் விகற்பம்
எனுமிரு ஞான சித்திபுத் திகளுக்
கிறையவன் சகசநிட் டைப்பேர்
வனமுகுந் தன்பாற் றேன்றமுந் நான்கு
வகையவத் தானுபூ திப்பந்
தனையர்கோன் சுசிமா யைப்பணிப் பந்தஞ்
சார்நிறை மதியகட் டினனே. (உகூகூ)

(ப - ரை) அனுபவப்பிரம = அனுபவப் பிரமமென்னும், வல்லபை, கணேசன் = விநாயகர், அமர் = பொருந்திய, சவிகற்பம் நிர்விகற்பம், எனும் இருஞான = ஆகிய இரண்டுவித ஞானமென்கிற, சித்திபுத்திகளுக்கு, இறையவன் = நாயகன், சகச, நிட்டைப்பேர் = நிஷ்டை எனும் பெயரையுடைய, வனம் = துளசிமாலையைத் தரித்த, முகுந்தன் பால் = விஷ்ணுவினிடத்து, தோன்றும், மூந்நான்கு = பன்னிரண்டு, வகை, அவத்தானுபூதி = அவஸ்தைகளின் அனுபவமென்னும், பந்தனையர் = புத்திரிகளின், கோன் = தலைவன், சுசி = சுத்த, மாயை = மாயையான, பணிப்பந்தம் = சர்ப்பக்கட்டு, சார் = பொருந்திய, நிறைமதி = பரிபூரண அறிவென்னும், அகட்டினன் (ஏ) = வயிற்றையுடையவனுவன். (ஏ, அசை)

(போ - ரை) அனுபவப் பிரமமென்னும் வல்லபை விநாயகர், பொருந்திய சவிகற்பம் நிர்விகற்பமாகிய இரண்டுவித ஞானமென்கிற சித்தி புத்திகளுக்கு நாயகன், சகசநிஷ்டையெனும் பெயரையுடைய துளசிமாலையைத் தரித்த விஷ்ணுவினிடத்துத் தோன்றும், பன்னிரண்டு வகை அவஸ்தைகளின் அனுபவமென்னும் புத்திரிகளின் தலைவன், சுத்த மாயையான சர்ப்பக்கட்டுப் பொருந்திய பரிபூரண அறிவென்னும் வயிற்றையுடையவனுவன்.

### அறுசீர் விருத்தம்.

யாவையுந்தன் னுள்ளாக்கொள் பூன்றமதி கனவுதரம்
  யாக்கை தானுத்
தாவகந்தைக் கயாசுரனைக் கொலும்விருத்தி ஞானமொசி
  தந்தம் விர்த்தி
ஓவநின்ற பரஞான நிலையேக தந்தமியா
  னென்ருய் மேலா
மேவுகின்ற சித்தெனும்போ தகவதனப் பரமான்மா
  விநாய கன்ருன். (உகூஎ)

(ப - ரை) யாவையும் = எல்லாவற்றையும், தன்உள் ஆ = தனது உள்ளாக, கொள்பூன்ற மதி = கொண்ட பூரண அறிவே, கன உதரம் = பெரிய வயிறும், யாக்கை சரீரமே, தாஞ = தானென, தாவு அகந்தை = பற்றும் அகங்காரமாகிய, கயாசுரனை = கஜமுகாசுரனை, கொலும் = கொன்ற, விருத்திஞானம், ஒசி தந்தம் =

ஒடித்த கொம்பாம், விர்த்தி, ஒவ = ஒழிய, நின்ற = மிஞ்சிய, பரஞான நிலை, ஏக தந்தம் = ஒற்றைக்கொம்பாம், யான் ஒன்றாய் = யானே யேகமாய், மேலா மேவுகின்ற = மேலாக விளங்குகின்ற, சித்து எனும் = ஞான சொரூபியென்னும் நிச்சயமாகிய, போதக வதன = யானைமுகத்தையுடைய, பரமான்மா விநாயகன் (தான்) = ஈசனே விநாயகமூர்த்தியாம். (தான், சாரியை)

(போ - ரை) எல்லாவற்றையுந் தனதுள்ளாகக் கொண்ட பூரண அறிவே பெரியவயிறும், சரீரமே தானெனப் பற்றும் அகங்காரமாகிய கஜமுகாசுரனைக்கொன்ற விருத்தி ஞானம் ஒடித்த கொம்பாம், விர்த்தியொழிய மிஞ்சிய பரஞான நிலை ஒற்றைக்கொம்பாம், யானே யேகமாய் மேலாக விளங்குகின்ற ஞான சொரூபி யென்னும் நிச்சயமாகிய யானைமுகத்தையுடைய ஈசனே விநாயக மூர்த்தியாம்.

### எழுசீர் விருத்தம்.

தத்துவ ஞான மங்குசஞ் சீவ
தயையது பாசமா மினிய
சத்துவ விருத்தி பலவபூ பங்கள்
சாந்தநன் மோதகம் வாத
மித்தைதன் மயமுக் கண்சதுர் மறைதோள்
விக்கின மாயையாம் விளையாட்
டத்தனுக் கதீத முடன்றுரி யத்தி
னபேதஞா னந்துதிக் கையே (உசஅ)

(ப - ரை) தத்துவஞானம், அங்குசம் = அங்குசமென்கிற ஆயுதமாம், சீவதயை (அது), பாசமாம், இனிய = மகிழ்ச்சிக்குக் காரணமாகிய, சத்துவவிருத்தி = சாத்துவீக விருத்திகள், பல அபூபங்கள் = பலகாரவகைகளாம், சாந்தம், நல்மோதகம் = நல்ல மோதகமாம், வாதம் மித்தை தன்மயம் = வாததிருஷ்டி மித்தியா திருஷ்டி தன்மயதிருஷ்டி என்பவைகள், முக்கண் = மூன்று கண்களாம், சதுர் மறை = நான்குவேதங்கள், தோள் = தோள்களாம், விக்கின மாயை ஆம் = விக்கினம் செய்தலாகிய மாயை யென்னும், விளையாட்டு = விளையாட்டையுடைய, அத்தனுக்கு = தலைவனுக்கு,

அதீதம் உடன் = துரியா தீதம், துரியத்தின் = துரியமென்னு மிவற்றின், அபேத ஞானம் = ஏகத் தன்மையையுணரும் ஞானம், துதிக்கை (ஏ) = துதிக்கையாம். (ஏ, அசை) (அது, சொல்லுருபு)

(போ - ரை) தத்துவஞானம் அங்குசமென்கிற ஆயுதமாம், சீவதயை பாசமாம், மகிழ்ச்சிக்குக் காரணமாகிய சாத்துவீக விருத்திகள் பலகார வகைகளாம், சாந்தம் நல்ல மோதகமாம், வாத திருஷ்டி மித்தியாதிருஷ்டி தன்மய திருஷ்டி என்பவைகள் மூன்று கண்களாம் நான்கு வேதங்கள் தோள்களாம், வீக்கினம் செய்தலாகிய மாயையென்னும் விளையாட்டையுடைய தலைவனுக்குத் துரியாதீதம் துரியமென்னு மிவற்றின் ஏகத்தன்மையை யுணரும் ஞானம் துதிக்கையாம்.

வெண்பா.

சுத்தப் பிரமமெனச் சொல்லும் விநாயகனுக்
கத்தமா மீரா றவத்தைகளான் மெய்த்துநிகழ்
சாட்சித் துவங்க டமைப்பன் னிரண்டாய
காட்சியவ தாரமெனக் காண் (உகூக)

(ப - ரை) (க) சுத்தப்பிரமமென, சொல்லும் = சொல்லப் படுகிற, விநாயகனுக்கு = விநாயகமூர்த்திக்கு, அத்தம் ஆம் = பொருள்களாகிய, ஈராறு அவத்தைகளால் = பன்னிரண்டவஸ்தைகளால், மெய்த்து நிகழ் = மெய்போல் விளங்குகிற, சாட்சித்துவங்கள் தமை = சாக்ஷித் தன்மைகளை, (௩) பன்னிரண்டு, ஆய = ஆகிய, (உ) காட்சி = தரிசிக்கத்தக்க, (ச) அவதாரம் என = அவதாரங்களென்று, காண் = அறி.

(போ - ரை) சுத்தப் பிரமமெனச் சொல்லப்படுகிற விநாயக மூர்த்திக்குப் பொருள்களாகிய பன்னிரண் டவஸ்தைகளால், மெய் போல் விளங்குகின்ற சாக்ஷித் தன்மைகளைத் தரிசிக்கத் தக்க பன்னிரண்டாகிய அவதாரங்களென்று அறி.

அறுசீர் விருத்தம்.

தெரிவுறுமா காமியவித் தற்றசுப வாசனைசேர்
சித்த மாகுஞ்
சரவணப்பொய் கையிற்றோன் றிப் பிரமான்ம சாமியபோ
தங்க ளென்னும்

பொருவிழியில் விரண்டுதிக ழறுவகைய சமாதியனு
　　பூதி யாய
திருமுகங்கொண் டுயர்மாயை மயூரமிசை விளங்குபரஞ்
　　செவ்வேண் மன்னே. (உஎ௦)

(ப - ரை) தெரிவு உறும் = அறியப்படுகின்ற, ஆகாமிய வித்து அற்ற = ஆகாமிய கர்மங்களென்னும் விதைகளில்லாத, சுபவாசனே, சேர் = பொருந்திய, சித்தம், ஆகும் = ஆகிய, சரவணப் பொய்கையில் தோன்றி, பிரமான்ம சாமியபோதங்கள் என்னும் = பிரமம் ஆத்மா என்பவற்றின் சமத்தன்மை அறிவுகள் என்னும், பொருவிழி = ஒத்தநேத்திரங்கள், இவ்விரண்டு திகழ் = இரண்டு இரண்டு விளங்குகிற, அறுவகைய சமாதி = ஆறுவகைச் சமாதி, அனுபூதி ஆய = அனுபவங்களான, திருமுகம்கொண்டு = திவ்விய முகங்களைப் பெற்று, உயர்மாயை = சுத்தமாயை என்னும், மயூரமிசை = மயிலின்மேல், விளங்குபரம் செவ்வேள் (மன்னே) = விளங்குகின்ற பிரமமே முருகனும்.

(மன்னே, அசை)

(போ - ரை) அறியப்படுகின்ற ஆகாமிய கர்மங்களென்னும் விதைகளில்லாத சுபவாசனை பொருந்திய சித்தமாகிய சரவணப் பொய்கையிற் றோன்றிப் பிரமம் ஆத்மா என்பவற்றின் சமத் தன்மை அறிவுகளென்னும் ஒத்த நேத்திரங்கள் இரண்டிரண்டு விளங்குகிற ஆறுவகைச் சமாதியனுபவங்களான திவ்விய முகங் களைப் பெற்றுச் சுத்தமாயை யென்னும் மயிலின்மேல் விளங்கு கின்ற பிரமமே முருகனும்.

அறுதிசைப் பொருட்சான் றல்ல தாறத்து வாவின் சாட்சி
அறுமதத் தவர்க்கு மீச னறங்கப் பொருளு மானேன்
அறுதொழி லாளர்க் குண்மை யறுகுண னெவர் சத்தி
அறுவரா யாறு தார னறுமுக னறு ரனே. (உஎக)

(ப - ரை) (க) அறுதிசை = ஆறு திசைகளிலுள்ள, பொருட்சான்று = பொருள்களுக்கெல்லாம் சாக்ஷியும், அல்லது, ஆறு அத்துவாவின் = ஆறு அத்துவாக்களின், சாட்சி = சாக்ஷியும், அறுமதத்தவர்க்கும் = ஆறுவகை மதஸ்தர்களுக்கும், ஈசன் = ஈசுவரனும், ஆறு அங்கப்பொருளும் ஆனேன் = ஆறு அங்கங்க

னுக்கும் பொருளாயிருப்பவனும், அறு தொழிலாளர்க்கு = ஆறு வகைத் தொழிலையுடைய பிராமணர்களுக்கு, உண்மை = அடையத்தக்க மெய்ப்பொருளும், அறுகுணன் = ஆறு குணங்களை யுடையவனும், ஐவர்சத்தி = பஞ்சமூர்த்திகளும் பராசத்தியுமாகிய, அறுவராய் = ஆறுவடிவங்களா யிருப்பவனும், ஆறுதாரன் = ஆறு ஆதாரங்களிலும் விளங்குபவனும், (ங) அறுமுகன் = ஆறு முகக்கடவுளாவர், (உ) ஆறு ஊரான் (ஏ) = ஆறுபடை வீடு களில் எழுந்தருளியிருப்பவனும். (ஏ, அசை)

(பொ - ரை) ஆறு திசைகளிலுள்ள பொருள்களுக் கெல்லாம் சாக்ஷியும் அல்லது ஆறு அத்துவாக்களின் சாக்ஷியும் ஆறுவகை மதஸ்தர்களுக்கும் ஈசுவரனும் ஆறு அங்கங்களுக்கும் பொருளா யிருப்பவனும் ஆறுவகைத் தொழிலையுடைய பிராமணர்களுக்கு அடையத்தக்க மெய்ப்பொருளும் ஆறு குணங்களை யுடையவனும் பஞ்சமூர்த்திகளும் பராசத்தியுமாகிய ஆறு வடிவங்களா யிருப்ப வனும் ஆறு ஆதாரங்களிலும் விளங்குபவனும் ஆறுபடைவீடுகளில் எழுந்தருளியிருப்பவனும் ஆறுமுகக் கடவுளாவர்.

சீவனுக்கும் பரனுக்குஞ் சிவத்தினுக்குந் தனித்தனியே
திகழ்நனவும்
பாவுகன வுஞ்சுழுத்தி யுந்துரிய மும்மவத்தை
பன்னி ரண்டாந்
தாவுமிவற் றின்ஞானம் பன்னிருகண் ணவைமுழுதுந்
தானக் கண்ட
மாவிருத்தி யாறிருதோள் சமத்துவமாங் கடப்பமலர்
வனைசிற் சேய்க்கே. (உஎஉ)

(ப - ரை) (உ) சீவனுக்கும், பரனுக்கும் = ஈசுவரனுக்கும், சிவத்தினுக்கும், தனித்தனியே, திகழ் = விளங்குகின்ற, நனவும் = சாக்கிரமும், பாவு = பரவிய, கனவும் = சொப்பனமும், சுழுத்தியும், துரியமும் = துரியமுமாகிய, அவத்தை = அவஸ்தைகள், பன்னிரண் டாம், தாவும் = கவனிக்கத்தக்க, இவற்றின் ஞானம் = இவைகளின் சாக்ஷித்தன்மை ஞானம், பன்னிருகண் = பன்னிரண்டு கண்களாம், அவைமுழுதும் = அப்பன்னிரண் டவஸ்தைகளையும், தானக்கண்ட = தன்மயமாக வறிந்த, மாவிருத்தி = அகண்டாகார விருத்தி, ஆறிரு தோள் = பன்னிரண்டு தோள்களாம், (க) சமத்துவம் ஆம் = சமத்

தன்மை யென்னும், கடப்ப மலர்வனை = கடப்பமலர் மாலையைத் தரித்த, சித்சேய்க்கு (ஏ) = ஞான சொரூபியாகிய சுப்பிரமண்ய ருக்கு. (ஏ, அசை)

(போ - ரை) சமத்தன்மை யென்னுங் கடப்பமலர் மாலையைத் தரித்த ஞான சொரூபியாகிய சுப்பிரமண்யருக்குச், சீவனுக்கும் ஈசு வரனுக்கும் சிவத்தினுக்கும், தனித்தனியே விளங்குகின்ற சாக்கிர மும் பரவிய சொப்பனமும் சுழுத்தியும் துரியமுமாகிய அவஸ்தை கள் பன்னிரண்டாம். கவனிக்கத்தக்க இவைகளின் சாக்ஷித்தன்மை ஞானம் பன்னிரண்டு கண்களாம் அப்பன்னிரண் டவஸ்தைகளையுந் தன்மயமாக வறிந்த அகண்டாகார விருத்தி பன்னிரண்டு தோள் களாம்.

எண்சீர்விருத்தம்

கிடைப்பலதத் துவமயக்கா வரண மென்னுங்
கிரவுஞ்ச கிரியதனை யவித்தை யாய
திடக்கரியா சியனழியப் பகுந்திட் டேவிட்
சேபமெனுஞ் சிங்கவத னனைம டித்தும்
வடுப்பெருக்கு மாயைச்சூ ரனைவ தைக்க
வருமகண்ட வுணர்ச்சிமயில் சாட்சி விர்த்தி
நடைக்குருகும் வாகனமாய்க் கொடியாய்க் கீழ்மேல்
நண்ணநடு நிகழ்பரம்வேண் ஞான வேலோன். (உ௯)

(ப - ரை) கிடைப்பல = கிடைக்கின்றபல, தத்துவமயக்கு = தத் துவங்களின் மயக்கமான, ஆவரண மென்னும் = ஆவரணசத்தி என்கிற, கிரவுஞ்ச கிரியதனை = கிரவுஞ்ச கிரியை, அவித்தையாய = அவித்தை என்னும், திட = பலமுள்ள, கரியாசியன் = கஜமுகாசுரன், அழிய = அழியும்படி, பகுந்திட்டு (ஏ) = பிளந்தும், விட்சேபமெனும் = விட்சேப சக்தியாகிய, சிங்கவதனனை = சிங்கமுகாசுரனை, மடித் தும் = கொன்றும், வடுப்பெருக்கும் = குற்றத்தைப் பெருக்குகின்ற, மாயைச்சூரனை = மாயாசக்தி என்னும் சூரபதுமனை, வதைக்க = கொல்ல, வரும் = உடனே எதிர்த்து மாறிவந்த, அகண்டவுணர்ச்சி = அகண்டாகார விர்த்தியென்கிற, மயில் = மயிலையும், சாட்சிவிர்த்தி = சாட்சி விர்த்தி யென்னும், நடைக்குருகும் = ஒழுக்கமுள்ள சேவ லையும், வாகனமாய் = முறையே வாகனமாகவும், கொடியாய் =

கொடியாகவும், கீழ்மேல் நண்ண = கீழாகவும் மேலாகவும் பொருந்த, நடுநிகழ்பரம் = நடுநிலையில் விளங்குகின்ற பிரமமாகிய, வேள் = சுப்பிரமணியர், ஞானவேலோன் = ஞானமென்னும் வேலாயுதத்தை யுடையவராம். (ஏ, அசை)

(பொ - ரை) கிடைக்கின்ற பல தத்துவங்களின் மயக்கமான ஆவரண சக்தி என்கிற கிரவுஞ்சகிரியை அவித்தை என்னும் பல முள்ள கஜமுகாசுரன் அழியும்படி பிளந்தும் விட்சேப சக்தியாகிய சிங்கமுகாசுரனைக் கொன்றும் குற்றத்தைப் பெருக்குகின்ற மாயா சத்தியென்னும் சூரபதுமனைக்கொல்ல உடனே எதிர்த்து மாறிவந்த அகண்டாகார விர்த்தியென்கிற மயிலையும் சாட்சி விர்த்தி யென்னும் ஒழுக்கமுள்ள சேவலையும் முறையே வாகனமாகவும் கொடியாகவும், கீழாகவும் மேலாகவும் பொருந்த நடுநிலையில் விளங்குகின்ற பிரமமாகிய சுப்பிரமணியர் ஞானமென்னும் வேலாயுதத்தை யுடையவராம்.

அறுசீர் விருத்தம்.

சடவகந்தைக் கிரவுஞ்ச கிரிதுளைத்தே யிழிசிந்தைத்
தாருகன் றன்
னெடுமயக்க மதிச்சிங்க முகனையுங்கொன் றிருமைமனத்
தொருசூ ரைப்போழ்ந்
திடவெழுந்த பராங்காரச் சேவல்சுத்த சங்கற்பத்
தெழின்ம யூரங்
கொடியுடன்வா கனமாக்கொள் பரமிறைவ னகத்தியனுங்
கூடத் தற்கே. (உஎச)

(ப - ரை) (க) சட அகந்தை = அறியாமையுடைய அகங்காரமெனும், கிரவுஞ்சகிரி = கிரவுஞ்சகிரியை, துளைத்து (ஏ), இழிசிந்தை = இழிந்த சித்தமென்கிற, தாருகன் தன்னெடு = தாருகாசுரனையும், மயக்கமதி = மயங்கும் புத்தியாகிய, சிங்கமுகனையும் கொன்று, இருமை மனத்து = இருதன்மையுள்ள மனமென்னும், ஒருசூரை = ஒப்பற்ற சூரனை, போழ்ந்திட = பிளக்க, எழுந்த = உடனே மாறியெழுந்த, பர ஆங்கார = பரமாகங்காரமான, சேவல் = சேவலையும், சுத்த சங்கற்பத்து = சுத்த சங்கற்பம் என்கிற, எழில் மயூரம் = அழகிய மயிலையும், கொடியுடன் = முறையே கொடியாகவும்,

வாகனம் ஆ=வாகனமாகவும், கொள்பரம்=கொண்ட பிரமமாகிய சுப்பிரமணியர், (௩) இறைவன்=குருவாவார், (௨) அகத்தியனும் கூடத்தற்கு (ஏ)=கூடஸ்தரென்னும் அகஸ்திய முனிவருக்கு. (ஏ, ஏ, அசைகள்)

(போ - ரை) அறியாமையுடைய அகங்காரமெனுங் கிரவுஞ்சகிரியைத் துளைத்து இழிந்த சித்தமென்கிற தாருகா சுரனையும் மயங்கும் புத்தியாகிய சிங்கமுகனையும் கொன்று இருதன்மையுள்ள மனமென்னும் ஒப்பற்ற சூரனைப்பிளக்க, உடனே மாறியெழுந்த பரமாகங்காரமான சேவலையும், சுத்தசங்கற்ப மென்கிற அழகிய மயிலையும் முறையேகொடியாகவும் வாகனமாகவும் கொண்ட பிரமமாகிய சுப்பிரமணியர் கூடஸ்தரென்னும் அகஸ்திய முனிவருக்குக் குருவாவார்.

### கோச்சகக் கலிப்பா

நிவர்த்தி நெறிப் பொன்னுலகி னிகழ்ந்த நிரு விகற்பானு
பவச்சுரகுஞ் சரிக்கிறைவன் பன்னுபிர விர்த்திவினைத்
தவக்குறவர் பால்வளர்ந்த சகசானு பவவள்ளி
உவப்புறுவோன் சலிப்பறியா வுளவரைதோ றாடுவனே. (௨௫)

(ப - ரை) நிவர்த்திநெறி = நிவர்த்தி மார்க்கமெனும், பொன்னுலகில் = தேவலோகத்தில், நிகழ்ந்த = விளங்கிய, நிரு விகற்ப அனுபவ = நிர்விகற்ப நிஷ்டை அனுபவம் என்கிற, சுர குஞ்சரிக்கு = தெய்வயானையம்மைக்கு, இறைவன் = தலைவனாகிய சுப்பிரமணியர், பன்னு = கிரமமாகச் சொல்லப்படுகிற, பிர விர்த்திவினை = பிரவிர்த்திச் செய்கை மார்க்க மென்னப்படும், தவக் குறவர் = தவநிலையான குறவர்களின், பால் வளர்ந்த = இடத்தில் வளர்ந்த, சகச அனுபவ வள்ளி = சகச நிஷ்டை அனுபவமென்னும் வள்ளியம்மைக்கும், உவப்பு உறுவோன் = மகிழ்ச்சியைத் தரும் நாயகனாகி, சலிப்பு அறியா = சலனமற்ற, உளவரை தோறு = உள்ளமென்னும் மலைகள்தோறும், ஆடுவன் (ஏ) = விளையாடி அமர்ந்திருப்பார். (ஏ, அசை)

(போ - ரை) நிவர்த்தி மார்க்கமெனுந் தேவலோகத்தில் விளங்கிய நிர்விகற்ப நிஷ்டை அனுபவமென்கிற தெய்வயானையம்மைக்குத் தலைவனாகிய சுப்பிரமணியர் கிரமமாகச் சொல்லப்படுகிற பிரவிர்த்திச் செய்கை மார்க்கமென்னப்படுந் தவநிலையான குறவர்

களினிடத்தில் வளர்ந்த சகச நிஷ்டை யனுபவமென்னும் வள்ளியம் மைக்கும் மகிழ்ச்சியைத் தரும் நாயகனுகிச் சலனமற்ற உள்ள மென்னும் மலைகள் தோறும் விளையாடி அமர்ந்திருப்பார்.

### கலி விருத்தம்.

விசித்திரம னேமயின்மி சைக்கரிவி சாகன்
உசிப்பரவ கக்குருகு யர்த்துணர்வு வேல்கொண்
டிசைப்பிரவி ருத்திதெரு ளின்னெடுநி விர்த்தி
வசத்தெருளென் வள்ளிசுர வாரணம கிழ்ந்தான் உஎசு

(ப - ரை) விசித்திர = ஆச்சரியமான, மனேமயில் = மனமென்னும் மயிலின், மிசைக்கரி = மேலான சாட்சியாகிய, விசாகன் = சுப்பிரமணியர், உசி = உயர்ந்த, பர அக = பரமாகங்கார மென்கிற, குருகுஉயர்த்து = சேவலை மேலேபிடித்து, உணர்வுவேல் = ஞான மென்னும் வேலாயுதத்தை, கொண்டு = தரித்து, இசை = முறையே புகழ்ச்சியுடைய, பிரவிருத்தி = பிரவிர்த்தி மார்க்கத்தின், தெருளின் ஒடு = தெளிவும், நிவிர்த்திவச = நிவர்த்தி மார்க்கத்தின், தெருள் என் = தெளிவும் என்று சொல்லப்படுகிற, வள்ளி = வள்ளியம்மை யையும், சுரவாரணம் = தெய்வயானை யம்மையையும், மகிழ்ந்தான் = விரும்பியடைந்துள்ளார்.

(பொ - ரை) ஆச்சரியமான மனமென்னும் மயிலின் மேலான சாட்சியாகிய சுப்பிரமணியர் உயர்ந்த பரமாகங்காரமென்கிற சேவலை மேலேபிடித்து ஞானமென்னும் வேலாயுதத்தைத் தரித்து முறையே புகழ்ச்சியுடைய பிரவிர்த்தி மார்க்கத்தின் தெளிவும் நிவிர்த்தி மார்க்கத்தின் தெளிவும் என்று சொல்லப்படுகிற வள்ளியம்மையையும் தெய்வயானை யம்மையையும் விரும்பியடைந்துள்ளார்.

ஓர்வ போலுற்று மோர்விலா நினைவு
சார்ம னத்தொளிர் சாட்சியா மான்மாப்
பார்வை போனின்றும் பார்க்கிலாக் கண்கள்
சேர்ம யின்மிசைத் திகழ்முரு கோனே. (உஎஎ)

(ப - ரை) ஓர்வபோல் = உணர்பவைபோல், உற்றும் = இருந்தும், ஓர்விலா = உணராத, நினைவு = நினைவுகள், சார்மனத்து = பொருந்திய மனதில், ஒளிர் = விளங்குகிற, சாட்சியாம் ஆன்மா = சாட்சியாகிய ஆத்மா, பார்வைபோல் = பார்ப்பவைபோல, நின்றும் = இருந்தும்,

பார்க்கிலா = பாராத, கண்கள் = தோகைக் கண்கள், சேர்மயில் மிசை=சேர்ந்த மயிலின்மேல், திகழ்முருகோன் (ஏ) = அமர்ந்த முருகக்கடவுளாவார். (ஏ, அசை.)

(போ - ரை) உணர்பவை போல இருந்தும் உணராத நினைவுகள் பொருந்திய மனதில் விளங்குகிற சாட்சியாகிய ஆத்மா, பார்ப்பவை போல இருந்தும் பாராத தோகைக்கண்கள் சேர்ந்த மயிலின்மேல் அமர்ந்த முருகக்கடவுளாவார்.

கலித்தாழிசை

உலகஞ் சரீர முயர்ப்பவய வத்தால்
இலகு மனமயின் மீ தேறுகுகன் சிற்சுடரே. (உஎ௫)

(ப - ரை) உலகம் சரீரம், உயிர்ப்பு=பிராணன் என்னும், அவய வத்தால்=அவயவங்களால், இலகும்=விளங்குகிற, மனமயில்மீது =மனமென்கிற மயிலின்மேல், ஏறுகுகன் சித்சுடரே=சாட்சியாய் அமர்ந்த ஞானப்பிரகாசமே முருகக்கடவுளாவார்.

(போ - ரை) உலகம் சரீரம் பிராணன் என்னும், அவயவங்களால் விளங்குகிற மனமென்கிற மயிலின்மேல் சாட்சியாய் அமர்ந்த ஞானப்பிரகாசமே முருகக்கடவுளாவார்

எழுசீர் விருத்தம்.

உறுமுத லிறுதி யேகரூ பத்வம்
உபக்கிர மோபசம் மாரம்
அறிவினப் பியாச மடிக்கடி பயிலல்
அபூர்வதை யலவுகீ கத்வம்
உறைபல மோட்சந் துதியர்த்த வாதம்
உபபத்தி யனுகூல வுவமை
மறைமொழிப் பொருடே ரிலிங்கமிவ் வாறும்
மஞ்ஞையோன் பிரதானத் தலமே. (உஎகூ)

(ப - ரை) (உ) உறுமுதல்=பொருந்திய முதல், இறுதி=முடிவு களின், ஏகரூபத்வம்=ஒருவடிவாந் தன்மையாகும், (௧) உபக்கிரம உபசம்மாரம், (௩) அறிவின் அப்பியாசம் அடிக்கடி, பயிலல்=பழகு தலாம், அபூர்வதை, அலவுகீகத்வம்=இலவு கீகத்தன்மை யின்மை

யாம், உறைபலம் = திடமான பலம், மோட்சம் = முத்தியாம், (சு) துதி அர்த்தவாதம் = அர்த்தவாதம் புகழ்ச்சியாம், (ரு) உபபத்தி, அனுகூலஉவமை = அனுகூலமான திருஷ்டாந்தமாம், மறைமொழி = வேதவாக்கியங்களின், பொருள்தேர் = பொருளையறியும், இலிங்கம் இவ்வாறும் = யுக்தி ஏதுக்களாகிய இவ்வாறு வகையும், மஞ்ஞையோன் = மயில்வாகனமுடைய முருகக்கடவுளின், பிரதானத்தலம் (ஏ) = பிரதானமான ஸ்தலங்களாம் (ஏ, அசை).

(பொ - ரை) உபக்கிரம உபசம்மாரம், பொருந்திய முதல் முடிவுகளின் ஒருவடிவாந் தன்மையாகும். அறிவின் அப்பியாசம், அடிக்கடி பழகுதலாம். அபூர்வதை, இலவுகிகத்தன்மையின்மையாம். திடமான பலம், முத்தியாம், அர்த்தவாதம், புகழ்ச்சியாம். உபபத்தி, அனுகூலமான திருஷ்டாந்தமாம். வேதவாக்கியங்களின் பொருளையறியும் யுக்தி ஏதுக்களாகிய இவ்வாறு வகையும் மயில்வாகனமுடைய முருகக்கடவுளின் பிரதானமான ஸ்தலங்களாம்.

### கலி நிலைத்துறை.

வேறு பாவனைக் கிடமின்ஞா னச்சுவா மிசையே
ஏறி மாயைமால் சத்தை நெய்த்தோர்கவர்ந் தியலும்
பாறி லாவனு பவபா லத்தினன் பரமாத்
தேறு சம்புமூர்த் தக்குரு வைரவத் தேவே (உ௲௦)

(ப - ரை) வேறு பாவனைக்கு = அன்னியமான பாவனைகளுக்கு, இடம் இல் = இடங்கொடாத, ஞானச்சுவா = ஞானமென்னும் சுவானத்தின், மிசை (ஏ) = மேல், ஏறி = சாட்சியாயமர்ந்து, மாயைமால் = மாயையென்னும் விஷ்ணுவின், சத்தை நெய்த்தோர் = இருப்புத் தன்மையான இரத்தத்தை, கவர்ந்து = கிரகித்துக்கொண்டு, இயலும் = விளங்குகின்ற, பாறிலா = நீங்காத, அனுபவ கபாலத்தினன் = அனுபவம் என்கிற கபாலத்தையுடையவர், பரம் ஆ = பிரமமென, தேறு = தெரியத்தக்க, சம்புமூர்த்த = சிவ அவதாரமாகிய, குரு = குருவெனும், வைரவத் தேவே = வைரவக்கடவுளே. (ஏ அசை)

(பொ-ரை) அன்னியமான பாவனைகளுக்கு இடங்கொடாத ஞானமென்னுஞ் சுவானத்தின்மேல் சாட்சியாயமர்ந்து மாயையென்னும் விஷ்ணுவின் இருப்புத் தன்மையான இரத்தத்தைக் கிரகித்

துக்கொண்டு விளங்குகின்ற நீங்காத அனுபவமென்கிற கபாலத்தை யுடையவர் பிரமமெனத் தெரியத் தக்க சிவ அவதாரமாகிய குருவென்னும் வைரவக் கடவுளே.

தனைய லாதுல கிலையெனு மரன்சினத் தாலாம்
தினையில் பூரண விர்த்தியே வீரபத் திரதேச்
சனிப ரோட்சமோ கினியினற் சிவத்தது சத்தை
இனிதி லங்குமெய்ந் நிச்சய மையனு ரெனவே (உ௲க)

(ப - ரை) தனை அலாது = தன்னைத்தவிர, உலகு இலை எனும் = உலகம் இல்லையென்னும் நிச்சயமாகிய, அரன் சினத்தால் = உருத்திரமூர்த்தியின் கோபத்தினால், ஆம் = தோன்றிய, தினை இல் = அற்பமல்லாத, பூரண விர்த்தியே = அகண்டாகார விர்த்தியே, வீரபத்திரதே = வீரபத்திரக் கடவுளாம், சனி = உண்டாகின்ற, பரோட்ச மோகினியினால் = பரோட்ச ஞானமென்னும் மோகினியால், சிவத்தது சத்தை = சிவத்தினுடைய இருப்புத் தன்மை, இனிது இலங்கு = நன்றாக விளங்குகின்ற, மெய்நிச்சயம் = உண்மை நிச்சயமே, ஐயனர் எனல் (ஏ) = அரிகர புத்திரனும் என்றறிக.

(ஏ, அசை) (தே = கடவுள்)

(பொ - ரை) தன்னைத்தவிர உலகம் இல்லை என்னும் நிச்சயமாகிய உருத்திர மூர்த்தியின் கோபத்தினால் தோன்றிய அகண்டாகார விர்த்தியே விரபத்திரக் கடவுளாம். உண்டாகின்ற பரோட்ச ஞானமென்னும் மோகினியால் சிவத்தினுடைய இருப்புத் தன்மை நன்றாக விளங்குகின்ற உண்மை நிச்சயமே அரிகர புததிரனுமென்றறிக.

கட்டளைக் கலித்துறை.

முரணில் விவேகம் வயிராகஞ் சாந்த முமூட்சுத்துவம்
குருவழி பாடு சிரவண ஞானக் குறிப்பழக்கம்
நரர்செய் மனன நிதித்தி யுடன்மன நாசமொடே
உரைவாச ஞக்ஷய மேகா தசப்பே ருருத்திரரே. (உ௲உ)

(ப - ரை) முரண் இல் = மாறுபாடற்ற; விவேகம் = நித்தியா நித்திய வஸ்து விவேகம், வயிராகம் = இகபரபோக வயிராக்கியம், சாந்தம் = சமதம உபரதி திதீக்ஷை சிரத்தை சமாதானம் என்னும்

சமாதி சட்க சம்பத்தி, முமூட்சுத்துவம் = மோக்ஷ இச்சை, குருவழிபாடு, சிரவணம், ஞானக் குறிப்பழக்கம்=ஞானுப்பியாசம், நர்செய் = மனிதர் செய்யவேண்டிய, மனனம், நிதித்தியுடன் = நிதித்தியாசனம், மனநாசம் ஒடு (ஏ) = மனோநாசம், உரை சொல்லப்படுகிற, வாசனுக்ஷயம் = ஜன்மவாசனைகளைக் கெடுத்தல் என்னும் இவைகள், ஏகாதசப்பேர் = பதினொரு பெரிய, உருத்திரர் (ஏ) = உருத்திரர்களாம். (ஏ, ஏ, அசைகள்)

(போ - ரை) மாறுபாடற்ற நித்தியா நித்தியவஸ்து விவேகம், இகபரபோக வயிராக்கியம், சமதம உபரதிதி தீக்ஷை சிரத்தை சமாதானம் என்னும் சமாதி சட்கசம்பத்தி, மோக்ஷ இச்சை, குருவழிபாடு, சிரவணம், ஞானுப்பியாசம், மனிதர் செய்யவேண்டிய மனனம், நிதித்தியாசனம், மனோநாசம், சொல்லப்படுகிற ஜன்மவாசனைகளைக் கெடுத்தல் என்னும் இவைகள் பதினொரு பெரிய உருத்திரர்களாம்.

### கலிவிருத்தம்

வெளிய சத்துவ விர்த்திப் பயோததி
உளிமி சைக்கரி யோனுக் கபினையாந்
தெளித ரும்பொற் றெரிவையும் பின்னையாம்
ஒளிசெய் பூமினு மோரிரு சத்தியே (உஅரு)

(ப - ரை) வெளிய = வெண்மையான, சத்துவவிர்த்தி = சாத்துவீக விருத்தியென்னும், பய உததி உளி=பாற்கடலிடத்து, மிசைக்கரியோனுக்கு = மேலான சாக்ஷியாகிய விஷ்ணுவுக்கு, அபினையாம் = அபின்ன சத்தியென்னும், தெளிதரும் = தெளிவான, பொன் தெரிவையும் = இலட்சுமி தேவியும், பின்னசத்தியாகிய, ஒளிசெய் பூமினும் = விளங்குகின்ற பூமி தேவியும், ஓர் இருசத்தி (ஏ) = ஒப்பற்ற இரண்டு சத்திகளாவார், (ஏ, அசை)

வெளிய, வெள்ளிய என்பதன் இடைக்குறை. அபினை, அபின்னை என்பதன் இடைக்குறை. (உளி = இடம்) (தெரிவை = பெண்) (மின் = பெண்) கரி = சாக்ஷி, கருமை)

(போ - ரை) வெண்மையான சாத்துவீக விருத்தியென்னும் பாற்கடலிடத்து மேலான சாக்ஷியாகிய விஷ்ணுவுக்கு அபின்ன சத்தியென்னும் தெளிவான இலக்ஷுமி தேவியும் பின்னசத்தியாகிய விளங்குகின்ற பூமி தேவியும் ஒப்பற்ற இரண்டு சத்திகளாவார்.

## வெண்பா.

சத்திகளா மெண்ணில் சரங்கள் வெளியாகும்
சுத்தசங் கற்பச் சுடர்ச்சாரங்—கத்துடனே
மன்விருத்தி ஞானவாள் வாய்த்தோ னதீதநிலை
நன்மைதரும் வைகுந்த நாடு (௨௭௪)

(ப - ரை) சத்திகளாம் = அனந்த சத்திகளாகிய, எண் இல் சரங்கள் = கணக்கற்ற பாணங்கள், வெளியாகும் = வெளிப்படுகின்ற, சுத்த சங்கற்ப = சுத்தசங்கற்பமெனும், சுடர்ச்சாரங்கத்துடன் (ஏ) = பிரகாசமான சாரங்கமென்கிற வில்லும், மன் = நிலைத்த, விருத்திஞான வாள் = விர்த்திஞானமெனும் வாளாயுதமும், வாய்த்தோன் = கொண்ட பகவான் அமர்ந்திருக்கும், அதீத நிலை, நன்மைதரும் = மங்களத்தைச் செய்யும், வைகுந்தநாடு = வைகுண்டபதமாம்.

(போ - ரை) அனந்த சத்திகளாகிய கணக்கற்ற பாணங்கள் வெளிப்படுகின்ற சுத்த சங்கற்பமெனும் பிரகாசமான சாரங்கமென்கிற வில்லும் நிலைத்த விர்த்திஞானமெனும் வாளாயுதங் கொண்ட பகவான் அமர்ந்திருக்கும் அதீத நிலை மங்களத்தைச் செய்யும் வைகுண்ட பதமாம்.

சத்தியோ முத்திநெறி சக்கரஞா னங்கிரம
முத்திமார்க் கஞ்சங்க முற்பிரண—வத்தின்
தியானுப தேசந் திகழ்பரமொன் றென்னுந்
தயாபோத கந்தண்டு தான் (௨௭௫)

(ப - ரை) சத்தியோ முத்தி, நெறி = மார்க்கமாகிய, சக்கரம் ஞானம் = ஞானமெனும் சக்கரமும், கிரமமுத்தி, மார்க்கம் = மார்க்கமென்கிற, சங்கம் முன் பிரணவத்தின் தியான உபதேசம் = முதன்மையான பிரணவத்தியான உபதேசமாகிய சங்கும், திகழ்பரம் = விளங்குகின்ற பிரமம், ஒன்று என்னும் = ஒன்றே உளது என்னும், தயாபோதகம் = தயையுடைய போதனையான, தண்டு (தான்) = கதாயுதமும் அப்பகவான் தரித்திருப்பார்.
(தான் - சாரியை)

(போ - ரை) சத்தியோ முத்தி மார்க்கமாகிய ஞானமெனும் சக்கரமும், கிரம முத்திமார்க்கமென்கிற முதன்மையான பிரணவத் தியானுேப தேசமாகிய சங்கும், விளங்குகின்ற பிரமம் ஒன்றே யுள்ளதென்னும் தயையுடைய போதனையான கதாயுதமும் அப்பக வான் தரித்திருப்பார்.

(உ௫௯, உ௬௰ ஆகிய இருகவிகள் ஒரே தொடர்ச்சி)

பிரகிருதி யைத்தனுவாய்ப் பெற்றதுபோற் றோன் றுந்
தருமமும்வே றாகாது தானுங் — கரியோனுக்
கிச்சையாஞ் சத்தி யிலீலைதுழாய் மாலிகையே
விச்சைபீ தாம்பரமோர் மின் (உ௬௯)

(ப - ரை) பிரகிருதி எனும் சத்தியை, தனுவாய் = திருமேனி யாக, பெற்றதுபோல் தோன்றும், தருமமும் = தன்மையும், வேறாகாது = அன்னியமாகாமல், தானும் = தானாகவே விளங்கு கின்ற, கரியோனுக்கு = கரிய நிறத்தையுடைய சாக்ஷியான மகா விஷ்ணுவுக்கு, இச்சையாம் சத்தி = இச்சாசத்தியாகிய, இலீலை = கிரீடை, துழாய்மாலிகை (ஏ) = துளசிமாலையாம், விச்சை = ஞானசத்தி, பீதாம்பரம் = பொன்வஸ்திரமாம் என, ஓர்மின் = அறியுங்கள். (ஏ - அசை)

(போ - ரை) பிரகிருதியென்னுஞ் சத்தியைத் திருமேனி யாகப் பெற்றதுபோல் தோன்றுந் தன்மையும் அன்னியமாகாமல் தானாகவே விளங்குகின்ற கரிய நிறத்தையுடைய சாக்ஷியான மகா விஷ்ணுவுக்கு இச்சாசத்தியாகிய கிரீடை துளசிமாலையாம் ஞான சத்தி பொன் வஸ்திரமாமென அறியுங்கள்.

கலி விருத்தம்.

ஏதில்யாவு மெனதெனும் விர்த்தியே
ஆதிசேட னதுவு மெனையலாற்
பேத மன்றெனும் பேண றிருமறு
மாத வன்பர ஞான வாதனே (உ௭௰)

(ப - ரை) ஏதில் = அன்னியமான, யாவும், எனது எனும் = எனது சத்தியே எனும், விர்த்தியே, ஆதிசேடன் = ஆதிசேஷனும், அதுவும், எனை அலால் = என்னைத்தவிர, பேதம் அன்று எனும் =

வேறல்லவென்கிற, பேணல் = கருத்து, திருமறு = ஸ்ரீவச்சமாம், மாதவன் பரஞான வரதன் (ஏ) = மேலான அனுபவஞானத்தைக் கொடுக்கும் அதீத ஞான சொரூபியே மகாதவநிலையால் அடையத் தக்க பகவானும். (ஏ - அசை)

(போ - ரை) அன்னியமான யாவும் எனது சத்தியே யெனும் விர்த்தியே ஆதிசேஷனும், அதுவும் என்னைத்தவிர வேறல்லவென்கிற கருத்து ஸ்ரீவச்சமாம், மேலான அனுபவஞானத்தைக் கொடுக்கும் அதீதஞான சொரூபியே மகாதவ நிலையால் அடையத்தக்க பகவானும்.

எனை யொழிந்தொன் றிலையெனும் விர்த்தியாம்
இனிய வாலிலை யிற்பர மாறு யில்
நனவி னிற்சுழுத்திப்பத நானெலாம்
பினம தன்றெனும் பெற்றி கருடனே (உஅ௪)

(ப - ரை) எனை ஒழிந்து = எனைத்தவிர ஒன்று இல எனும் = சிறிதும் இல்லையெனும், விர்த்தியாம் = விர்த்தியாகிய, இனிய ஆலிலையில் = நல்ல ஆலிலையின்மேல், பரமால் = பிரமமாகிய விஷ்ணுவின், துயில் = நித்திரையாவது, நனவினில் = சாக்கிரத்திலேயே, சுழுத்திப்பதம் = சுழுத்தி நிலையை அடைதலாம், நான் எலாம் = நானே யாவும், பினம் (அது) அன்று எனும் = அன்னியம் அல்லவென்ற, பெற்றி = நிச்சயத்தன்மையே, கருடனே = கருடனும். (அது சொல்லுருபு)

(போ - ரை) என்னைத்தவிரச் சிறிதுமிலையெனும் விர்த்தியாகிய நல்ல ஆலிலையின்மேல் பிரமமாகிய விஷ்ணுவின் நித்திரையாவது சாக்கிரத்திலேயே சுழுத்திநிலையை யடைதலாம், நானே யாவும், அன்னியமல்லவென்ற நிச்சயத்தன்மையே கருடனும்.

தனதுஞான சமுத்திரத் தூடுபோய்ப்
பனிசெய் மாயையென் பஞ்சச னைச்செகுத்
தனைய சாரசத் தப்பிர மம்மதாம்
இனிய பாஞ்சசன் யத்தரி யேகனே. (உஅரு)

(ப-ரை) தனது ஞான = தன்னை அறிதலென்னும், சமுத்திரத்தூடு போய் = சமுத்திரத்துள்ளே சென்று, பனிசெய் = துன்பத்தைச்

செய்யும், மாயையென் = மாயையென்கிற, பஞ்சசனேச் செகுத்து = பஞ்ச ஜனன் என்னும் அசுரனேக் கொன்று, அனேயசார = அம்மாயை யின் சாரமான, சத்தப்பிரமமாகிய, இனிய பாஞ்சசன்யத்து = நல்ல பாஞ்ச ஜன்னியமென்னும் சங்கைத் தரித்த, அரி = மகா விஷ்ணு. ஏகனே = ஒன்ருகிய பிரமமே, (அது - சொல்லுருபு)

(பொ - ரை) தன்னேயறித லென்னுஞ் சமுத்திரத்துள்ளே சென்று துன்பத்தைச் செய்யும் மாயை யென்கிற பஞ்சஜன னென்னும் அசுரனேக்கொன்று அம்மாயையின் சாரமான சத்தப் பிரமமாகிய நல்லபாஞ்ச ஜன்னியமென்னும் சங்கைத்தரித்த மகா விஷ்ணு ஒன்ருகிய பிரமமே.

பன்னிரு சீர் விருத்தம்.

தாமதகுணத்தரா நிருதர்தம் மோடிரா சதனீர ராமசுரரும்
சாத்தீக ராஞ்சுரரு முயர்ஞானி யாமரி தனுற்சித்த நிலவைநாட்டி
மாமறை யெனும்பயோ ததியிடைப் புத்தியெனு மந்தர நிருத்திமன [மாம்
வாசுகியினுல் விசாரணேயெனுங் கடைதல்செய வந்தெழச் [சூனியவிடம்
ஏமகுரு வாஞ்சம்பு பாலுறச் சாட்சியுணர் வெனுமிடற் றுட்கொள [வவர்
இனிதுமுய லப்பினும் பரஞான வமிர்தமெழ விதனேமுன் னுறு [மவ்வரி
நாமிசை யதீதமன வும்பேசி விடும்பர ஞானமோ கினியாசமால்
நண்ணுமவ் வசுரர்க் கிலாதுணர்வை யிமையாத நல்லமர ருக்கரு [ளுமே (௨௧௦)

(ப - ரை) தாமத குணத்தர் ஆம் = தமோ குணத்தை யுடையவ ரென்னும், நிருதர் தம்மொடு, = இராக்ஷதரும், இராசதனீரர் ஆம் = இரஜோகுணத்தின ரென்கிற, அசுரரும் =, சாத்தீகராம் = சத்துவ குணத்தினரான, சுரரும் = தேவர்களும், உயர்ஞானியாம் = மேலான ஞானியாகிய, அரிதனுல் = விஷ்ணுவின் சகாயத்தால், சித்தநிலவை = சித்தமென்னும் சந்திரனே, நாட்டி = துணைநிறுத்தி, மாமறை யெனும் = பெரிய வேதமென்கிற, பயஉததியிடை = பாற்சமுத்திரத் தில், புத்தியெனும் = புத்தியாகிய, மந்தரம் நிறுத்தி = மந்தர பரு வதத்தை மத்தாக நாட்டி, மனம் ஆம் = மனமான, வாசுகியினுல் =

வாசுகியைக் கயிறுகக்கொண்டு, விசாரணை எனும் = ஆத்ம விசாரமெனும், கடைதல் செய = கடைதலைச் செய்ய, வந்து எழச்சூனியவிடம் = அதில் சூனியம் எனும் விஷம்தோன்றி வருத்தஞ்செய்ய அப்போது, ஏம = காவலான, குருவாம்சம்பு = குருவாகிய சிவன், பால்உற = இடத்துச்சேர, சாக்ஷி உணர்வு எனும் மிடற்று உள்கொள அவர் = அவர் அவ்விஷத்தை சாக்ஷி ஞானம் என்னும் கண்டத்தினுள் கிரகித்துக்கொள்ள, இனிது முயலப்பினும் = மறுபடியும் நன்றாக முயன்று விசாரிக்க, பரஞான அமிர்தம் எழ = மேலான ஞானமென்கிற அமிர்தம் விளங்க, இதனை = இதை, முன்உறும் அவ்அரி = முன்சகாயமாய் நின்ற அந்தஞானி யெனும் விஷ்ணுவானவர், நாமிசை = வாக்குமாத்திரமாய். அதீதம் அளவும் = துரியாதீதம் வரையும், பேசிவிடும் = சொல்லிவிடுகின்ற, அபர ஞான = பரோக்ஷ ஞானமாகிய, மோகினியாக = மோகினியாகத் தோன்ற, மால்கண்ணும் = அப்போது அங்கே ஆசைகொண்ட, அவ் அசுரர்க்கு இலாது = அவ்விராக்ஷதர்க்கும் அசுரர்க்கும் இல்லாமல், உணர்வை இமையாத = விசாரத்தை விடாத, நல் அமரருக்கு = சத்துவ குணத்தினராகிய தேவர்களுக்கு, அருளும் = அனுக்கிரகித்தார். (ஏ-அசை) பினும்—பின்னும் என்பதனிடைக்குறை.

(போ - ரை) தாமத குணத்தையுடையவரென்னும் இராக்ஷதரும் இரஜோகுணத்தினரென்கிற அசுரரும் சத்துவகுணத்தினரான தேவர்களும் மேலான ஞானியாகிய விஷ்ணுவின் சகாயத்தால் சித்தமென்னுஞ் சந்திரனைத் தூணாக நிறுத்திப் பெரிய வேதமென்கிற பாற்சமுத்திரத்தில் புத்தியாகிய மந்தரப் பருவதத்தை மத்தாக நாட்டி மனமான வாசுகியைக் கயிறுகக்கொண்டு ஆத்ம விசாரமெனுங் கடைதலைச்செய்ய அதில் சூனியமெனும் விஷந்தோன்றி வருத்தஞ்செய்ய அப்போது காவலான குருவாகிய சிவனிடத்துச் சேர அவ்விஷத்தை அவர் சாக்ஷி ஞானமென்னுங் கண்டத்தினுள் கிரகித்துக்கொள்ள மறுபடியும் நன்றாக முயன்று விசாரிக்க மேலான ஞானமென்கிற அமிர்தம் விளங்க இதை, முன்சகாயமாய் நின்ற அந்த ஞானியெனும் விஷ்ணுவானவர், வாக்குமாத்திரமாய்த் துரியாதீதம் வரையுஞ் சொல்லிவிடுகின்ற பரோக்ஷ ஞானமாகிய மோகினியாகத்தோன்ற, அப்போது அங்கே ஆசைகொண்ட அவ்விராக்ஷதர்க்கும் அசுரர்க்குமில்லாமல், விசாரத்தை விடாத சத்துவ குணத்தினராகிய தேவர்களுக்கு அனுக்கிரகித்தார்.

அறுசீர்விருத்தம்

அனைத்து மியானன்றென்னுமுஞ்சிறிய திருவடியா மாஞ்சனேயன்
கனப்படவெல்லா நானெனன் பதுபெரிய திருவடியாங் கலுழனொன்றாய்
உனத்துரிய மாம்யானே யதீதமெனன்மேனோக்கு மொருமைக்
கோபிவனப்பரமாந் தன்னிடைச் சாரான்மநிலை கவுத்துவமா -
மணிமா லுக்கே (உகூக)

(ப - ரை) அனைத்தும் = எல்லாம், யான் அன்று என்னும் உரம் = நான் அல்லவென்னும் ஞானமே, சிறிய திருவடி, ஆம் = என்கிற, ஆஞ்சனேயன் = அனுமானும், கனப்பட = மேன்மையுற, எல்லாம், நானென்பது = நானே எனும் ஞானம், பெரிய திருவடி, ஆம் = ஆன, கலுழன் = கருடனும், ஒன்றாய் = ஒன்றே என, உன = நினைக்க, துரியமாம் = துரியசொரூபியாகிய, யானே, அதீதம் எனல் = துரியாதீத நிலையாம் என்னும் நிச்சயம், மேல் நோக்கும் = மேலே நோக்கியிடப்படும், ஒருமைக் கோபி = கோபி மண்ணாகிய ஒரு நாமமாம், வன = நல்ல, பரமாம் = பிரமமாகிய, தன்னிடை = தன்னிடத்து, சார் = அபேதமாகப் பொருந்திய, ஆன்மநிலை = ஆத்மாவின் நிலைமையே, கவுத்துவமாமணி = கவுஸ்துவரத்தினமாம், (I) மாலுக்கு (ஏ) = மகாவிஷ்ணுவுக்கு.

(ஏ - அசை) (உன = உன்ன என்பதனிடைக்குறை)

(பொ - ரை) மகாவிஷ்ணுவுக்கு எல்லாம் நானல்லவென்னும் ஞானமே சிறிய திருவடியென்கிற அனுமானும், மேன்மையுற எல்லாம் நானேயெனும் ஞானம் பெரிய திருவடியான கருடனும். ஒன்றேயென நினைக்கத் துரிய சொரூபியாகிய யானே துரியாதீத நிலையாமென்னும் நிச்சயம் மேலே நோக்கியிடப்படும் கோபிமண்ணாகிய ஒரு நாமமாம். நல்லபிரமமாகிய தன்னிடத்து அபேதமாகப் பொருந்திய ஆத்மாவின் நிலைமையே கவுஸ்துவரத்தினமாம்.

பகர்சுத்தப் பிரமமெனும் விட்டுணுவே பரப்பிரமம் பரமானந்தர்
தொகுதேசோ மயர்பரிபூரணரவ்வி யாகிருதர் சுவர்ண கர்ப்பர்
மிகவுற்ற விராட்டுடனே பிராஞ்ஞன்றை சதனேடு விசுவனுகும்
தகுபத்தா மவதாரஞ் சுவானுபவ'மெனுமூலகோத் தாரத்திற்கே
(உகூஉ)

(ப - ரை) (க) பகர் = சொல்லப்படுகிற, சுத்தப்பிரமம் எனும், விட்டுணுவே = மகாவிஷ்ணுவே, (௩) பரப்பிரமம், பரமானந்தர், தொகு = கூடிய, தேஜோமயர், பரிபூரணர், அவ்வியாகிருதர், சுவர்ண கர்ப்பர் = இரணிய கர்ப்பர், மிகஉற்ற = சர்வமாக விளங்குகிற, விராட்டு (உடன்) (ஏ), பிராஞ்ஞன், தைசதன் (ஓடு), விசுவன் ஆகும் = என்பவை ஆகிய, தகு = தகுந்த, பத்தாம் அவதாரம் = பத்து அவதாரம் ஆவர், (உ) சுவானுபவம் எனும், உலக உத்தா ரத்திற்கு (ஏ) = உலகரக்ஷைக்காக. (ஏ, ஏ, அசைகள்) (உடன், ஓடு =, மூன்றும் வேற்றுமை யுருபுகள்.)

(போ - ரை) சொல்லப்படுகிற சுத்தப்பிரமமெனும் மகாவிஷ்ணு வே சுவானுபவம் எனும் உலகரக்ஷைக்காகப் பரப்பிரமம் பரமானந் தர் கூடிய தேஜோமயர் பரிபூரணர் அவ்வியாகிருதர் இரணியகர்ப்பர் சர்வமாக விளங்குகிற விராட்டு பிராஞ்ஞன் தைசதன் விசுவன் என்பவையாகிய தகுந்த பத்து அவதாரமாவர்.

பிரம வரிட்ட மீனுய்ப் பெருந்தத் துவவா ரியினு
டுருவிச் சிரத்தை யின்மை யுருச்சோ முகனை வதைத்துப்
பரிவிற் றிரும்பா நிட்டா பரனுய்ச்சமாதி நிலையைத்
தெரிவி யாதுதெரித்த திகழ்மா மறையுத் தரிப்பே, (உ௩௩)

(ப - ரை) பிரமவரிட்ட = பிரமவரிட்டன் என்னும், மீன் ஆய் = மச்சமாகி, பெரும் தத்துவவாரியின் ஊடுஉருவி = தத்துவங் களின் கூட்டமெனும் பெரிய சமுத்திரத்தினுள்ளேபோய், சிரத்தை யின்மை உரு = சிரத்தை இல்லாமையே வடிவமாகிய, சோமுகனை = சோமுகாசுரனை, வதைத்து = கொன்று, பரிவில் = அன்பினுல், திரும்பா = மீளாத, நிட்டாபரனுய் = நிஷ்டையிலேயே அழுந்தின வனுய், சமாதி நிலையை, நிர்விகற்பசமாதி நிலைமையை, தெரிவியாது தெரித்தல் = உணர்த்தாமல் உணர்த்துதலே, திகழ்மாமறை = மேன் மையாக விளங்கும் வேதங்களை, உத்தரிப்பு (ஏ) = மீட்டுவந்ததாம். (ஏ-அசை)

(போ - ரை) பிரமவரிட்ட னென்னும் மச்சமாகித் தத்துவங் களின் கூட்டமெனும் பெரிய சமுத்திரத்தினுள்ளே போய்ச்சிரத்தை யில்லாமையே வடிவமாகிய சோமுகாசுரனைக் கொன்று அன்பினுல் மீளாத நிஷ்டையிலேயே அழுந்தினவனுய் நிர்விகற்பசமாதி நிலை

மையை உணர்த்தாம லுணர்த்துதலே மேன்மையாக விளங்கும் வேதங்களை மீட்டுவந்ததாம்.

### கலி விருத்தம்.

வலியச் செய்யு மகான்கள் பணிச்செயல்
மலியு மந்தர மற்றோ ரனுபவ
அலையுண்மூழ்க லறவரி யானெனும்
உலைவில் கூர்ம முவகையிற் றாங்குமால். (உ௬௪)

(ப-ரை) வலியச்செய்யும் = நல்லோர் தாமே சென்று செய்யும், மகான்கள் = பெரியோர்களின், பணிச்செயல் = ஏவற்றொழில் என்னும், மலியும் மந்தரம் = பெரிய மந்தர மலையானது, மற்றோர் அனுபவ=மற்றவர்களுடைய அனுபவமென்னும், அலையுள் மூழ்கல் அற = சமுத்திரத்தில் மூழ்கிப்போகாதபடி, வரியான் எனும் = பிரமவரியானெனும், உலையில் கூர்மம் = கேடில்லாத கூர்மமானதும், உவகையில் = பிரியமாய், தாங்கும் (ஆல்) = ஏற்றுக்கொள்ளும், (ஆல் - அசை)

(போ = ரை) நல்லோர் தாமே சென்று செய்யும் பெரியோர்களின் ஏவற்றொழிலென்னும் பெரிய மந்தர மலையானது மற்றவர்களுடைய அனுபவமென்னுஞ் சமுத்திரத்தில் மூழ்கிப் போகாதபடி பிரமவரியானெனுங் கேடில்லாத கூர்மமானது பிரியமாயேற்றுக்கொள்ளும்.

(கருத்து) மிகுதியாய்ச் சமாதி சுகத்திலேயே இருக்கிறபடியால் தானே போய்த் தேடிக்கொள்ளாமல் பிறர் வலியவந்து கொடுக்கும் உணவு உடை முதலிய முக்கியமானவற்றை மாத்திரம் ஏற்றுக்கொள்வோன் பிரமவரியானும்,

### கலி நிலைத்துறை.

மருவு மூடவாரிதியுளே கவர்ந்துசென் மான
இரணி யாக்கனை வீட்டியே பயிக்கமென் றியம்பு
தரணி தன்னைமே னிறுவிடும் வரனெனுந் தனிச்சூ
கரம கிழ்ந்துசா தகர்மூமூட் சுயிரெலாங் களிப்பான் (உ௬௫)

(ப-ரை) (உ) மருவு மூடவாரிதியுள் (ஏ) = பொருந்திய மூடத்தன்மை எனும் சமுத்திரத்தினுள்ளே, கவர்ந்து செல் =

கிரகித்துக்கொண்டுபோன, மான = இவ்வெளிமைத்தொழில் செய்கிறதா என்றுண்டாகும் நினைவாகிய, இரணியாக்கனை = இரணியாக்ஷனை, வீட்டி (ஏ) = கொன்று, (ச) பயிக்கம் = பிச்சை அல்லது பிச்சை ஏற்கும் எண்ணம், என்று இயம்பு = என்று சொல்லப்படுகிற, தரணிதன்னை = பூமியை, மேல் நிறுவிடும் = மேலாகஸ்தாபிக்கும், (க) வரன் எனும் = பிரமவரன் என்னும், தனிச்சூகரம் ஒப்பற்றவராகமானது, (ரு) மகிழ்ந்து = தானும் மகிழ்ந்து, சாதகர் முமூட்சு = அப்பியாசிகள் முமூட்சுக்கள் என்னும், உயிரெல்லாம் = சீவர்களெல்லாம், களிப்பான் = மகிழும்படி (ஏ - ஏ = அசைகள்)

(போ - ரை) பிரமவரன் என்னும் ஒப்பற்ற வராகமானது பொருந்திய மூடத்தன்மையெனுஞ் சமுத்திரத்தினுள்ளே கிரகித்துக்கொண்டுபோன இவ்வெளிமைத் தொழில் செய்கிறதாவென்றுண்டாகும் நினைவாகிய இரணியாக்ஷனைக் கொன்று தானும் மகிழ்ந்து அப்பியாசிகள் முமூட்சுக்களென்னுஞ் சீவர்களெல்லாம் மகிழும்படி பிச்சை அல்லது பிச்சையேற்கும் எண்ணமென்று சொல்லப்படுகிற பூமியை மேலாக ஸ்தாபிக்கும்.

வேண்பா.

அறியாமைத் தூணின் றகமலதின் றென்று
தெறிஞானுங் காரநர சிம்மக்—குறிமேவித்
தெட்பிரம வித்தாமால் சீவ விரணியற் கொன்
றுட்பிரக லாதனையா ளும் (உ௬௫)

(ப - ரை) அறியாமை = அஞ்ஞானமென்னும், தூண் நின்று = தூணிலிருந்து, அகம் அலது இன்று என்று = அதற்குச் சாக்ஷியாகிய நானல்லாமல் லொன்றும் இல்லையென்று, தெறி = வெளிப்பட்ட, ஞானுங்கார = ஞான அகங்காரமென்னும், நரசிம்மக்குறி மேவி = நரசிங்க உருவைப் பொருந்தி, தெள் = தெளிந்த, பிரமவித்து ஆம் மால் = பிரமவித்தென்கிற விஷ்ணுவானவர், சீவ இரணியற் கொன்று = சீவனாகிய இரணிய கசிபுவைக்கொன்று, உள் பிரகலாதனை = உள்ளமெனும் பிரகலாதனை, ஆளும் = ஆள்வார்.

(போ - ரை) அஞ்ஞானமென்னுந் தூணிலிருந்து அதற்குச் சாக்ஷியாகிய நானல்லாம லொன்று மில்லையென்று வெளிப்பட்ட ஞான அகங்காரமென்னும் நரசிங்க உருவைப் பொருந்தித் தெளிந்த பிரமவித்தென்கிற விஷ்ணுவானவர் சீவனாகிய இரணிய கசிபுவைக் கொன்று உள்ளமென்னும் பிரகலாதனையாள்வார்.

கலிநிலைத்துறை.

சாட்சி விர்த்திவா மனனனுக் கனுவெனுந் தலம்விண்
சூட்சச் சீவனு மாவலி யடங்கிடச் சுழூத்திக்
காட்சிப் பாதல முள்வெளி வியாபகக் கழலான்
ஆட்சியாயளந் தகண்டவோர் விந்திரற் களிக்கும் (உகூஎ)

(ப - ரை) சாட்சிவிர்த்தி = சாக்ஷி விர்த்தியெனும், வாமனன் = வாமன மூர்த்தியானவர், நனு = சாக்கிரம், கனு = சொப்பனம், எனும் = என்கிற, தலம் = மண்ணையும், விண் = விண்ணையும், சூட்ச = சூட்சும ரூபியான, சீவனும் = ஜீவனாகிய, மாவலி = மகா பலி, அடங்கிட = அடங்கும்படி, சுழூத்தி = சுழூத்தியெனும், காட்சிப்பாதலம் = காக்ஷியாகிய பாதாளத்தையும், உள் வெளி வியாபக = உள்வியாபகம் வெளிவியாபக மென்னும், கழலால் = பாதங்களால், ஆட்சியாய் = உரிமையாக, அளந்து, அகண்ட ஓர்வு இந்திரற்கு = அகண்ட விருத்தியெனும் இந்திரனுக்கு, அளிக்கும் = கொடுப்பார்.

(போ - ரை) சாக்ஷி விர்த்தி யெனும் வாமன மூர்த்தியானவர் சாக்கிர சொப்பன மெனும் மண்ணையும் விண்ணையும் சூட்சுமரூபி யான ஜீவனாகிய மகாபலியடங்கும்படி சுழூத்தியெனுங் காக்ஷியாகிய பாதாளத்தையும் உள்வியாபகம் வெளிவியாபக மெனும் பாதங் களால் உரிமையாக அளந்து அகண்ட விருத்தியெனும் இந்திர னுக்குக் கொடுப்பார்.

அறுசீர் விருத்தம்.

பின்னையெனுந் திதிக்குமிறை யாகியசா சிபனென்னும்
பிரமத் தின்கண்
உன்னலுறு மபின்னையெனு மதிதியினல் வருங்குருவா
மூபேந்தி ரன்றான்

இன்னலுயிர் மாவலிபான் மூன்றவத்தை யுலகுகவர்ந்
தீச னென்னும்
அந்நிகழ்தே வேந்திரற்கீந் தவனையக மமதையினே
டடக்கிக் காக்கும் (உகூ௩)

(ப - ரை) பின்னையெனும் = பின்னுசத்தியென்கிற, திதிக்கும் = திதி தேவிக்கும், இறையாகிய காசிபன் என்னும் = தலைவனாகிய காசிப முனிவரென்கிற பிரமத்தின்கண் = பிரமத்தினிடத்து, உன்னலுறும் = நினைக்கத்தக்க, அபின்னை எனும் = அபின்னுசத்தியென்கிற அதிதியினால் = அதிதிதேவியினால், வரும் குருவாம் = தோன்றிய குருவாகிய, உபேந்திரன் (தான்) = இந்திரனுக்கு இளையவாமன மூர்த்தியானவர், இன்னல் உயிர் = துன்பமுறுகின்ற ஜீவனை =, மாவலிபால் = மகாபலியிடத்து, மூன்றவத்தையுலகு = சாக்கிர சொப்பன சுழுத்தி யவஸ்தைகளென்கிற உலகங்களை, கவர்ந்து = கிரகித்து, ஈசன் எனும் = ஈசுவரன் என்னும், அம்நிகழ் = அழகு விளங்கும், தேவேந்திரற்கு = தேவேந்திரனுக்கு, ஈந்து = கொடுத்து, அவனை = அந்தச் சீவனாகிய மகாபலியை, அகமமதையினோடு = அகங்கார மமகாரங்களோடு, அடக்கி, காக்கும் = காப்பார், (தான், சாரியை).

(போ - ரை) பின்னுசத்தி யென்கிற திதி தேவிக்கும் தலைவனாகிய காசிபமுனிவ ரென்கிற பிரமத்தினிடத்து நினைக்கத்தக்க அபின்னுசத்தி யென்கிற அதிதிதேவியினாற் றோன்றிய குருவாகிய, இந்திரனுக்கிளையவாமன மூர்த்தியானவர் துன்பமுறுகின்ற ஜீவனை மகாபலியிடத்துச் சாக்கிர சொப்பன சுழுத்தியவஸ்தைகளென்கிற உலகங்களைக்கிரகித்து ஈசுவரனென்னும் அழகுவிளங்குந் தேவேந்திரனுக்குக் கொடுத்து அந்தச்சீவனாகிய மகாபலியை அகங்கார மமகாரங்களோடடக்கிக் காப்பார்.

### கலி விருத்தம்.

சித்த பூன்றவிர்த் திப்பர சிராமன்
தத்து பேதமாஞ் சத்திரி யரைக்கொன்
றெத்த சிந்தையென் றுரைக்குஞா லத்தைத்
தத்த றும்பர காசிபற் களித்தான். (உகூ௪)

(ப - ரை) சித்த=திடமான, பூன்றவிர்த்தி = அகண்ட விர்த்தி யெனும், பரசிராமன், தத்து=தாவுகின்ற, பேதமாம் சத்திரியரை =பேத கற்பனைகளென்னும் சத்திரியரை, கொன்று, ஒத்தசிந்தை என்று உரைக்கும்=சமசித்தமென்று சொல்லப்படும், ஞாலத்தை= பூமியை, கத்து அறும்=சங்கற்பமற்ற, பரகாசிபற்கு = பிரமமென னுங் காசிப முனிவருக்கு, அளித்தான்=கொடுத்தான்.

(போ - ரை) திடமான அகண்ட விருத்தியெனும் பரசிராமன் தாவுகின்ற பேத கற்பனைகளென்னும் சத்திரியரைக்கொன்று சம சித்தமென்று சொல்லப்படும் பூமியைச் சங்கற்பமற்ற பிரமமென்னுங் காசிபமுனிவருக்குக் கொடுத்தான்.

அறுசீர் விருத்தம்.

மறையுணர்வா மிரேணுகையைச் சுதனுன்மாய் வித்துப்பின்
வருவித் திட்ட
இறை விசுவா சஞ்சமதக் கினியிவனுற் றெளிவுநல
மிசைந்து மன்னேற்
கறையுறக்கொல் லகந்தையர சைக்குலத்தோ டொழியகண்டா
கார விர்த்தி
அறைகொள்பர சிராமன்றுன் பரமான்ம விராகவன்முன்
னடங்கு மன்றே. (௩00)

(ப - ரை) மறை உணர்வு ஆம் = சாஸ்திர விசுவாச மெனும், இரேணுகையை, சுதனுல்=புத்திரனுல், மாய்வித்து = கொல்லச் செய்து, பின் = பின்பு, வருவித்திட்ட = விளங்கும்படி வைத்த, இறை விசுவாசம் = குருவிசுவாசம், சமதக்கினி = ஜமதக்கினி முனிவராம், இவனுல் = இம்முனிவரால், தெளிவுநலம் = நல்ல தெளிவை, இசைந்தும்=அடைந்தும், அன்னேற் கறையுறக்கொல் =அம்முனிவரைக் குற்றமுறக் கொன்ற, அகந்தை அரசை=சகல சாஸ்திரமும் தெரியவேண்டு மென்னும் அபிமானமுடைய அகங்கார மெனும் கார்த்த வீரியார்ச்சுனராசனை, குலத்தொடு, ஒழி=ஒழித்த, அகண்டாகார விர்த்தி=அகண்டாகார விருத்தியென்கிற, அறை கொள்=மலைக்குகையை இடமாகக்கொண்ட, பரசிராமன் (தான்), பரமான்ம=பரமாத்மாவாகிய, இராகவன் முன்=இராம மூர்த்தியின் சந்நிதியில், அடங்கும் (அன்று) (ஏ)=அடங்கினன். (அன்று ஏ, அசைகள்) (தான், சாரியை).

(போ - ரை) சாஸ்திர விசுவாசமெனும் இரேணுகையைப்புத்திரனாற் கொல்லச்செய்து பின்பு விளங்கும்படி வைத்த குருவிசுவாசம் ஜமதக்கினி முனிவராம். இம்முனிவரால் நல்ல தெளிவையடைந்தும் அம்முனிவரைக் குற்றமுறக் கொன்ற சகல சாஸ்திரமும் தெரிய வேண்டுமென்னும் அபிமானமுடைய அகங்காரமெனுங் கார்த்தவீரியார்ச்சுன ராசனைக் குலத்தோடொழித்த அகண்டாகார விருத்தியென்கிற, மலைக்குகையை இடமாகக்கொண்ட பரசிராமன் பரமாத்மாவாகிய இராமமூர்த்தியின் சந்நிதியில் அடங்கினன்.

வெண்பா.

கமித்தலுறு ஞானஞ்சங் கற்பங் கருமம்
கிமித்தயராக் கோசலைகை கேசி—சுமித்திரையே
முன்னவளுக் கேகனடு மொய்குழலா ளுக்கொருவன்
பின்னவட்கு மைந்தரிரு பேர். (ருOக)

(ப - ரை) கமித்தல் = பொறுமை, உறுஞானம் = உற்றஞான சத்தி, சங்கற்பம் = சங்கற்ப சத்தி, கருமம் = கருமசத்தியென்னுமிவைகள் முறையே, கிமித்து = புழுவும், அயரா = தன்னால் வருந்தாத நடையுடைய, கோசலை = கௌசலை, கைகேசி, சுமித்திரை (ஏ) = சுமித்திரையுமாம், முன்னவளுக்கு = முன்னவளான கௌசலைக்கு, ஏகன் = ஒருபுத்திரன், நடுமொய் குழலாளுக்கு = நடுவினளாகிய கைகேசிக்கு, ஒருவன் = ஒரு குமாரன், பின்னவட்கு = பின்னவளான சுமித்திரைக்கு, மைந்தர் இருபேர் = இரண்டு மைந்தராவார். (ஏ, அசை).

(போ - ரை) பொறுமையுற்ற ஞானசத்தி சங்கற்ப சத்தி கரும சத்தி யென்னுமிவைகள் முறையே புழுவுந்தன்னால் வருந்தாதநடையுடைய கௌசலை, கைகேசி, சுமித்திரையுமாம்; முன்னவளான கௌசலைக்கு ஒருபுத்திரன் நடுவினளாகிய கைகேசிக்கு ஒரு குமாரன் பின்னவளான சுமித்திரைக்கு இரண்டு மைந்தராவார்.

ஆன்மா விராம னமர்விவே கம்பரதன்
மேன்மா றிலாத விருத்தியுரந்—தான்மெய்
இலக்குமணனகு மெழில்யூகந் தானே
நலக்குரிய சத்துருக்க னன். (ருOஉ)

(ப - ரை) ஆன்மா = ஆத்மா, இராமன் = இராம மூர்த்தியாம், அமர் = பொருந்திய, விவேகம், பரதன் = பரதனும்; மேல்மாறிலாத = மாறிலாத மேலான, விருத்தி, உரம் (தான்) = ஞானம், மெய் இலக்குமணன் = உண்மையுள்ள இலட்சுமணனும், எழில் = அழகிய நல்ல, யூகம் (தான்) (ஏ) = யுக்தி, நலக்கு உரிய = நன்மைக்குரிய சத்துருக்கனன் = சத்துருக்கனனும். (தான், தான் சாரியைகள்) (ஏ-அசை.)

(போ - ரை) ஆத்மா இராமமூர்த்தியாம், பொருந்திய விவேகம் பரதனும், மாறிலாத மேலான விருத்திஞானம் உண்மையுள்ள இலட்சுமணனும், அழகிய நல்ல யுக்தி நன்மைக்குரிய சத்துருக்கனனும்.

கலி நிலைத்துறை.

பொலன்வி தேகநாட் டிற்குருச் சனகன் முன் புந்தி
யலம தால்விசா ரணையுழ விருதய மாமோர்
நிலனி யற்றவே காக்கிரச் சாலினுண்ணிகழ்ச்சி
நலமென் பெட்டகத் தனுபவ சானகி நண்ணும் (௩0௩)

(ப - ரை) (க) பொலன் = அழகிய, விதேகநாட்டில் = தேகத்திற்கு வேறுந்தன்மை யென்னும் விதேக தேசத்தில், குருச்சனகன் = குருவாகிய ஜனகராசன், முன் = முன்பு, (௩) புந்தி அலம் (அது) ஆல் = புத்தியென்கிற கலப்பையினால், விசாரணை = ஆத்மவிசாரமென்னும், உழவு = உழுதலை, (உ) இருதயம் ஆம் ஓர் = இருதயமென்னும் ஒப்பற்ற, நிலன் = நிலத்தில், (௪) இயற்ற = செய்ய, ஏகாக்கிரச்சாலின் = ஏகாக்கிரமென்னும் படைச்சாலில், உள் நிகழ்ச்சி = உள்நாட்டமெனும், நல = நல்ல, மென்பெட்டகத்து = மிருதுவான பெட்டியில், அனுபவசானகி = அனுபவமென்கிற சீதாதேவி, நண்ணும் = கிடைத்தாள். (அது - சொல்லுருபு)

(போ - ரை) அழகிய தேகத்திற்கு வேறுந் தன்மையென்னும் விதேக தேசத்தில், குருவாகிய ஜனகராசன், முன்பு இருதயமென்னும் ஒப்பற்ற நிலத்தில் புத்தியென்கிற கலப்பையினால் ஆத்ம விசாரமென்னும் உழுதலைச்செய்ய, ஏகாக்கிர மென்னும் படைச்சாலில் உள்நாட்டமெனும் நல்ல மிருதுவான பெட்டியில் அனுபவமென்கிற சீதாதேவி கிடைத்தாள்.

அறுசீர் விருத்தம்.

ஈசனும் யாசகற்கு நித்தியம்பூ ரணமுதலா
விசைக்குந் தன்சீர்த்
தேசெலாந் தருபிரம மிரகுவதீ தத்தவத்தோன்
றிறத்தில் வேறுப்
பேசொணுக் கூடத்தரகுராமன் றனையலது
பிறிதொன் றின்றென்
றாசுசூனியச் சிலையை முறித்தனுபூ திச்சீதை
யணங்கை யுற்ருன் (௩௦௪)

(ப - ரை) ஈசன் ஆம் = ஈசுவரனுகிய, யாசகற்கு = யாசகனுக்கு, நித்தியம் பூரணம் முதலா = நித்தியத்தன்மை பூரணத்தன்மை முதலாக, இசைக்கும் = சொல்லப்படுகிற, தன்சீர்த்தேசு எலாம் = தனது சிறந்த செல்வங்களையெல்லாம், தரு = கொடுத்த, பிரமம் = பிரமமாகிய, இரகு = இரகு மகாராசன், அதீதத்தவத்தோன் = அதீத நிலையென்னும் தவத்தையுடையவனும், திறத்தில் = அவனது சுபாவத்திலும், வேறுப் பேசொணு = வேறுகச் சொல்லமுடியாத, கூடத்த ரகுராமன் = கூடஸ்தனென்கிற இராகவனுகிய ஸ்ரீராமன், தனை அலது = சாக்ஷியான தன்னைத்தவிர, பிறிது ஒன்று = வேறென்றும், இன்று என்று = இல்லையென நிச்சயித்தலால், ஆசு = சீக்கிரத்தில், சூனியச்சிலையை = சூனியத் தன்மையெனும் வில்லை, முறித்து, அனுபூதிச் சீதை அணங்கை = சுவானுபவமென்கிற சீதா தேவியை, உற்ருன் = அடைந்தான்.

(பொ - ரை) ஈசுவரனுகிய யாசகனுக்கு நித்தியத் தன்மை பூரணத்தன்மை முதலாகச் சொல்லப்படுகிற தனது சிறந்த செல்வங்களையெல்லாங் கொடுத்த பிரமமாகிய இரகுமகாராசன் அதீதநிலையென்னுந் தவத்தையுடையவனும். அவனது சுபாவத்திலும் வேறுகச் சொல்லமுடியாத கூடஸ்தனென்கிற இராகவனுகிய ஸ்ரீராமன், சாக்ஷியான தன்னைத் தவிர வேறென்றுமில்லையென நிச்சயித்தலால், சீக்கிரத்தில் சூனியத்தன்மையெனும் வில்லைமுறித்துச் சுவானுபவமென்கிற சீதாதேவியை யடைந்தான்.

## கலி நிலைத்துறை.

மனமென் மாருதிக் கருளுமான் மாவிரா மன்றான்
குனிசெய் புத்தியாஞ் சுக்கிரீ வனுக்கவன் சூர்மை
மனைவியைக்கவர் கருமமாம் வாலியை மடித்துத்
தனிம றைப்பயில் வாயகிட் கிந்தையைத் தந்தான் (௩௦௫)

(ப - ரை) மனம், என் = என்கிற, மாருதிக்கு = அனுமானுக்கு அருளும் = அருள் செய்த, ஆன்மா = ஆத்மாவென்னும், இராமன் (தான்), குனிசெய் = வணங்குகின்ற, புத்தி, ஆம் = ஆகிய, சுக்கிரீவனுக்கு, அவன் சூர்மை = அவனது சூட்சுமத்தன்மையான, மனைவியை, கவர் = கவர்ந்துகொண்ட, கருமம், ஆம் = என்னும், வாலியை, மடித்து = கொன்று, தனி = ஒப்பற்ற, மறைப்பயில்வு ஆய = வேதாந்தப் பழக்கமாகிய, கிட்கிந்தையை = கிஷ்கிந்தாபுரியை, தந்தான் = கொடுத்தான். (தான் - சாரியை)

(பொ - ரை) மனமென்கிற அனுமானுக்கு அருள்செய்த ஆத்மாவென்னும் இராமன், வணங்குகின்ற புத்தியாகிய சுக்கிரீவனுக்கு அவனது சூட்சுமத்தன்மையான மனைவியைக் கவர்ந்துகொண்ட கருமமென்னும் வாலியைக்கொன்று ஒப்பற்ற வேதாந்தப் பழக்கமாகிய கிஷ்கிந்தாபுரியைக் கொடுத்தான்

கன்ம வாலிமைந்தன் சித்த சுத்தியங் கதனோ
டின்ம திச்சுக்கி ரீவநின் யூகநல் லினமாம்
வன்மை சேர்படை சூழவத் யான்மநூல் வழக்கின்
நன்மை யாயகிட் கிந்தைவாழ் கென்றன னாதன் (௩௦௬)

(ப - ரை) கன்மவாலி = கர்மமென்னும் வாலியின், மைந்தன் = புத்திரனாகிய, சித்தசுத்தி = சித்தசுத்தியென்னும், அங்கதனோடு, இன்மதி = நல்லபுத்தியெனும், சுக்கிரீவ = சுக்கிரீவனே, நின் யூக = உனது யுக்திகளின், நல் இனம் ஆம் = நல்ல கூட்டமான, வன்மை சேர் படை = பலம் பொருந்திய சேனை, சூழ, அத்தியான்மநூல் = வேதாந்த சாஸ்திர, வழக்கின் = வழக்கமென்னும், நன்மை, ஆய கிட்கிந்தை = ஆகிய கிஷ்கிந்தையில், வாழ்க என்றனன் = வாழ்வாய் என்று அருள் செய்தான், நாதன் = ஸ்ரீராமன்.

(போ - ரை) கர்மமென்னும் வாலியின் புத்திரனாகிய சித்த சுத்தியென்னும் அங்கதனோடு நல்லபுத்தியெனும் சுக்கிரீவனே உனது யுக்திகளின் நல்ல கூட்டமான பலம்பொருந்திய சேனைசூழ வேதாந்த சாஸ்திர வழக்கமென்னும் நன்மையாகிய கிஷ்கிந்தையில் வாழ்வாயென்றருள் செய்தான் ஸ்ரீராமன்.

### வெண்பா.

மனமாங்கோ தண்டம் வளைத்திட்டே சிந்தைத்
தனிநாண்பூட் டிப்போதத் தன்னம்—பினையேவத்
தீம்பண் பிராக்கதரைச் செற்றுப் பரவாரி
நாப்பண் படிந்துவரு நன்கு (௩௦௭)

(ப - ரை) மனம், ஆம் கோதண்டம் = ஆகிய கோதண்டத்தை, வளைத்திட்டு (ஏ), சிந்தை = சித்தமென்னும், தனி நாண் = ஒப்பற்ற நாணை, பூட்டி, போதத்தன் அம்பினை = ஞானமென்கிற தனது பாணத்தை, ஏவ = செலுத்த, தீப்பண்பு = தீய குணங்களான, இராக்கதரைச்செற்று = இராக்ஷதர்களைக்கொன்று பரவாரி நாப்பண் = பிரமமென்னும் சுத்த சமுத்திரமத்தியில், படிந்துவரும் நன்கு = நன்றாக மூழ்கித் திரும்பிவரும். (ஏ) அசை.

(போ - ரை) மனமாகிய கோதண்டத்தை வளைத்திட்டுச் சித்தமென்னும் ஒப்பற்ற நாணைப்பூட்டி ஞானமென்கிற தனது பாணத்தைச் செலுத்தத் தீயகுணங்களான இராக்ஷதர்களைக் கொன்று பிரமமெனும் சுத்த சமுத்திர மத்தியில் நன்றாக மூழ்கித் திரும்பி வரும்.

### கலி நிலைத்துறை.

ஞான சாதகயூகவா னரர்திர ளலங்கொண்
டான பாதக குணவிராக் கதர்படை யழித்தோன்
பான பூருவ வாசனை மூலமா பலத்தைத்
தான ழித்தனன கண்டபோ தப்பெருஞ் சரிப்பால் (௩௦௮)

(ப - ரை) (க) ஞானசாதக = ஞானத்திற்கு அனுகூலமாகிய, யூக = யுக்திகளான, வானரர்திரள் = வானரர்களின் கூட்டமாகிய சேனையின், நலம் கொண்டு = சகாயத்தைக் கொண்டு, ஆனபாதக குண = ஞானத்திற்கு விரோதமான குணங்களென்னும், இராக்கதர்

படை = இராக்ஷதர் படையை, அழித்தோன் = அழித்தவனுகிய ஸ்ரீராமன், பான = வெளிப்பட்ட, பூருவ வாசனை = முன்சன்ம வாசனைகளென்கிற, மூலமாபலத்தை = மகாமூலபல சேனைக்கூட்டங்களை, தான், (தான்) (ரு) அழித்தனன் = சங்கரித்தான், (உ) அகண்டபோத = அகண்டஞானமென்னும், பெருஞ்சரிப்பால் = எவ்விடத்தும் வேகமாகச் சுழன்று சஞ்சரித்தலான தன்மையில் (தான் - சாரியை)

(போ - ரை) ஞானத்திற்கனுகூலமாகிய யுக்திகளான வானரர்களின் கூட்டமாகிய சேனையின் சகாயத்தைக்கொண்டு ஞானத்திற்கு விரோதமான குணங்களென்னும் இராக்ஷதர் படையையழித்தவனுகிய ஸ்ரீ ராமன் வெளிப்பட்ட முன்சன்ம வாசனைகளென்கிற மகா மூலபல சேனைக்கூட்டங்களை அகண்ட ஞானமெனும் எவ்விடத்தும் வேகமாகச்சுழன்று சஞ்சரித்தலான தன்மையினுற் சங்கரித்தான்.

வெண்பா.

பத்திந்தியச்சிரங்கள் பற்றிநிகழ் கோளகமே
ஒத்த மிடறுகு முள்வெளியா—வைத்திடுமவ்
விந்தியத்தி னேர்வோரிருபானு நேத்திரங்கள்
செந்தகவி ராவணற்குத் தேர் (ருOக)

(ப - ரை) (உ) பத்து, இந்திய = இந்திரியங்களென்னும், சிரங்கள் = தலைகள், பற்றி நிகழ் = பொருந்தி விளங்குகின்ற, கோளகமே, ஒத்தமிடறு ஆகும் = சமமான கழுத்துகளாம், உள்வெளியா வைத்திடும் = உள்ளிலும் வெளியிலும் ஏற்பட்டிருக்கிற, அவ் இந்தியத்தின் = அந்த இந்திரியங்களின், ஓர்வு ஓர் இருபானும் = ஒப்பற்ற உணர்ச்சிகள் இருபதும், நேத்திரங்கள் = கண்களாம், (க) செந்தகவு = சிவப்பு நிறமுடைய இராசத குணமென்னும், இராவணற்கு = இராவணனுக்கு, (ரு) தேர் = இதை அறி.

(போ - ரை) சிவப்வு நிறமுடைய இராசத குணமென்னும் இராவணனுக்குப் பத்து இந்திரியங்களென்னுந் தலைகள்பொருந்தி விளங்குகின்ற கோளகமே சமமான கழுத்துகளாம். உள்ளிலும் வெளியிலும் ஏற்பட்டிருக்கிற அந்த இந்திரியங்களின் ஒப்பற்ற உணர்ச்சிகள் இருபதும் கண்களாம், இதையறி.

அறுசீர் விருத்தம்.

தசவிந் திரிய சிரத்தனிரா சதமா மிராவ ணாதிமருள்
வசவெங் குணவா சனைநிருதர் மடியச் சிந்தை யிலங்கையதன்
மிசைசாத் தீக விபீடணன்றான் விளங்கு நிவர்த்தி வனத்தீரேழ்
அசைவாங் கரண வாண்டுகழி யான்ம விராம னருளாலே. (௩௧௦)

(ப - ரை) (உ) தச இந்திரிய சிரத்தன் = பத்து இந்திரியங்களென்னும் தலைகள் உடையோனாகிய, இராசதம் ஆம் = இராசதகுணமென்கிற, இராவணாதி = இராவணன் முதலிய, மருள்வச = மயக்கத்தின் வசமான, வெங்குண வாசனை நிருதர் = தீய குணங்களுடன் தீய வாசனைகளின் வடிவ இராக்ஷதர்கள், மடிய = அழிய, சிந்தை இலங்கை அதன் மிசை = சித்தமென்னும் இலங்கையினிடத்து, சாத்தீக விபீடணன் (தான்) = சாத்வீக குணமென்கிற விபீஷணன், விளங்கும் = வாழ்வான், (க) நிவர்த்தி வனத்து = நிவிர்த்தி மார்க்கமாகிய வனத்தில், ஈரேழ் = பதினான்கு வகை, அசைவாம் கரண = அசைவுகளுடைய கரணங்களின் வேகமென்னும், ஆண்டுகழி = வருஷங்களைப் போக்கிய, ஆன்ம இராமன் அருளால் (ஏ) = ஆத்மராமன் அருளினால். (தான் = சாரியை) (ஏ, அசை).

(போ - ரை) நிவர்த்தி மார்க்கமாகிய வனத்தில் பதினான்குவகை யசைவுகளுடைய கரணங்களின் வேகமென்னும் வருஷங்களைப் போக்கிய ஆத்மராமனருளினால் பத்து இந்திரியங்களென்னுந் தலைகளுடையோனாகிய இராசதகுணமென்கிற இராவணன் முதலிய மயக்கத்தின் வசமான தீயகுணங்களுடன் தீய வாசனைகளின் வடிவ இராக்ஷதர்களழியச் சித்தமென்னும் இலங்கையினிடத்துச் சாத்வீக குணமென்கிற விபீஷணன் வாழ்வான்.

பன்னிரு சீர் விருத்தம்.

ஈசனாந் தசரதன் சேயாத்து மாவா
மிராமனனு பூதிஞானம்
என்றசீ தையைமணந் தேவிர்த்தி யுணர்வா
மிலக்குமண னுடனிவிர்த்தி
நேசநெறி யாந்தண்ட காரணிய மேவிமுன்
னின்றசற் கன்மமான்பின்
நேர்ந்துகுரு வீகையா மச்சனகன் மின்னொழிய
நேடிவை ராகவனுமான்

தேசினுற் சங்கற்ப சிந்தினே காக்கிரத்
திருவணே புரிந்துசித்தத்
தென்னிலங் கையின்மரீஇச் சத்துவ விபீடணன்
சேர்ந்திடக் கொண்டுதமசாம்
வாசனேக் கும்பகன் னனேயிரா சதவிரா
வணனேயுஞ் சாட்சி நோக்காம்
வன்கணேயின் மாய்த்துச் சுவானுபவ மாதொடு
வருஞ்சகச நிட்டைநாடே. (௬கக)

(ப-ரை) ஈசனும் = ஈசுவரனுகிய, தசரதன் சேய் = தசரதனது புத்திரனுன, ஆத்துமா ஆம் இராமன் = ஆத்மாராமன், அனுபூதி = அனுபவ, ஞானம் என்ற சீதையை, மணந்து (ஏ) = விவாகம் செய்துகொண்டு, விர்த்தி, உணர்வாம் = ஞானமெனும், இலக்குமணன் உடன் = இலட்சுமணனேடு, நிவிர்த்தி நேச நெறியாம் = பிரியமான நிவிர்த்தி மார்க்கமாகிய, தண்டகாரணியம், மேவி = அடைந்து, முன்நின்ற = முன்னே தோன்றிய, சற்கன்ம மான்பின் = புண்ணிய கர்மமென்னும் பொன்மானின் பின்னே, நேர்ந்து = சென்றதால், குருஈகையாம் = குருவினுல் அருளப்பட்டதாகிய, அச்சனகன் மின் ஒழிய = அந்த அனுபவமென்னும் ஜானகி பிரிந்துவிட, நேடி = தேடிப்போய், வைராக = வைராக்கிய மென்கிற, அனுமான் தேசினுல் = அனுமானுடைய பலத்தினுல், சங்கற்பசிந்தின் = சங்கற்பமென்னும் சமுத்திரத்தில், ஏகாக்கிரத்திரு அணேபுரிந்து = ஏகாக்கிரத் தன்மையெனும் திவ்விய சேதுவைச் செய்து, சித்தத் தென் இலங்கையின் மரீஇ = சித்தம் என்கிற தென்னிலங்கையை யடைந்து, சத்துவ விபீடணன் = சத்துவ குணமாகிய விபீஷணன், சேர்ந்திடக்கொண்டு = வந்துசேர அங்கீகரித்துக்கொண்டு, தமசாம் வாசனேக் கும்பகன்னனே = தமோகுண வாசனேயெனும் கும்பகர்னனேயும், இராசத = இரஜோகுண வாசனேயான, இராவணனேயும், சாட்சிநோக்காம் = சாக்ஷி விருத்தி யென்கிற, வன்கணேயின் = வலிமையுள்ள பாணத்தினுல், மாய்த்து = கொன்று, சுவானுபவமாதொடு = சுவானுபவ மென்னும் சீதாதேவியோடு, வரும் சகசநிட்டைநாடு (ஏ) = சகச நிட்டையென்னும் தனது நாட்டை வந்தடைந்தான் (ஏ, ஏ = அசைகள்) (ஈகை = கொடை) (சனகன்மின் = சனகன் பெண் = சானகி) (நேடி = தேடி) (மரீஇ = மருவி) (வரும் என்பதனுல், முக்காலமுமிவ்வாறே நடக்கிறதென்பது குறிப்பிக்கப்பட்டது

(ப - ரை) ஈசுவரனாகிய தசரதனது புத்திரனான ஆத்மாராமன், அனுபவஞான மென்ற சீதையை விவாகஞ் செய்துகொண்டு, விர்த்திஞானமெனும் இலட்சுமணனோடு பிரியமான நிவிர்த்தி மார்க்க மாகிய தண்டகாரணிய மடைந்து, முன்னே தோன்றிய புண்ணிய கர்மமென்னும் பொன்மானின் பின்னே சென்றதால், குருவினால் அருளப்பட்டதாகிய அந்த அனுபவமென்னும் ஜானகி பிரிந்துவிடத் தேடிப்போய் வைராக்கிய மென்கிற அனுமானுடைய பலத்தினால் சங்கற்பமென்னுஞ் சமுத்திரத்தில், ஏகாக்கிரத் தன்மையெனுந் திவ்விய சேதுவைச் செய்து, சித்தமென்கிற தென்னிலங்கையை யடைந்து, சத்துவகுணமாகிய விபீஷணன் வந்துசேர அங்கீகரித்துக் கொண்டு, தமோகுண வாசனையெனுங் கும்பகர்னனையும் இரஜோ குண வாசனையான இராவணனையும் சாக்ஷி விருத்தியென்கிற வலிமையுள்ள பாணத்தினாற்கொன்று, சுவானுபவமென்னுஞ் சீதா தேவியோடு சகசநிட்டை யென்னுந் தனது நாட்டை வந்தடைந் தான்.

வெண்பா.

சருவாதா ரச்சுத்த சத்துவவெண் மேனி
நரனோர்சாட் சித்துவமா நாஞ்சிற்—பெருமானே
ஆகத்தஞ் ஞானநினை வாய வசுரரைக்கொல்
மாகத்த னும்பலரா மன் (நுகஉ)

(ப - ரை) சருவாதார = சருவத்துக்கும் ஆதாரமாகிய, சுத்த சத்துவ = சத்துவ குணமென்னும், வெண்மேனி = வெளுத்த சரீரத்தையுடைய, நரன் = மனிதனாகவந்த, ஓர் = ஒப்பற்ற, சாட்சித் துவம் ஆம் = சாக்ஷித்தன்மை யென்கிற, நாஞ்சில் = கலப்பையாயுதந் தரித்த, பெருமான் (ஏ) = பெரியோன், ஆகத்து = சரீரத்திலுள்ள, அஞ்ஞான, நினைவு ஆய = கர்மசங்கற்பங்களான, அசுரரை, கொல் = கொன்ற, மாகத்தனும் = மஹாகர்த்தன் என்னப்படுகிற, பல ராமன் = பலராமனும். (ஏ, அசை).

(பொ - ரை) சருவத்துக்கும் ஆதாரமாகிய சுத்த சத்துவகுண மென்னும் வெளுத்த சரீரத்தையுடைய மனிதனாகவந்த ஒப்பற்ற சாக்ஷித்தன்மை யென்கிற கலப்பையாயுதந் தரித்த பெரியோன், சரீரத்திலுள்ள அஞ்ஞான கர்மசங்கற்பங்களான அசுரரைக்கொன்ற மஹாகர்த்தனென்னப்படுகிற பலராமனும்.

### அறுசீர் விருத்தம்.

சாட்சி யுணர்வாம் யதுவமிசந் தனின்முற்
றோன்றி யகண்டமெனும்
மாட்சி விருத்தி யிடைக்குலத்தில் வளர்மா
போகிக் கிருட்டினன்றான்
காட்சி யுறுவா சனைகளெனுங் கடியவசுர
ரனேகரைக் கொன்
றாட்சி யகந்தைக் கஞ்சனையு மழித்தான்
ஞான விநோதனரோ. (௩௪௩)

(ப - ரை) சாட்சியுணர்வாம் = சாக்ஷி விருத்தியென்னும், யது வமிசம் தனில் = யதுகுலத்தில், முன்தோன்றி = முன் அவதரித்து, அகண்டமெனும் மாட்சி விருத்தி = மாக்ஷிமை பொருந்திய அகண்ட விருத்தியென்கிற, இடை = இடையர், குலத்தில், வளர் = வளர்ந்த, மாபோகி = மஹாபோகியெனும், கிருட்டினன் (தான்) = ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியாவார், காட்சியுறு = காணப்படுகிற, வாசனைகளெனும், கடிய அசுரர் அனேகரை = அனேகம் கொடிய அசுரர்களை, கொன்று, ஆட்சி = ஆளுகையையுடைய, அகந்தைக் கஞ்சனையும் = அகங்காரமென்கிற கம்ஸனையும், அழித்தான் = சம்ஹரித்தவராகிய, ஞானவிநோதன் (அரோ) = ஞான விநோத சொரூபியானவர். (தான் = சாரியை) (அரோ = அசை.)

(போ - ரை) சாக்ஷி விருத்தியென்னும் யதுகுலத்தில் முன் அவதரித்து மாக்ஷிமை பொருந்திய அகண்ட விருத்தியென்கிற இடையர் குலத்தில் வளர்ந்த மாபோகியெனும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாவார், காணப்படுகிற வாசனைகளெனும் அனேகங் கொடிய அசுரர்களைக்கொன்று, ஆளுகையையுடைய அகங்கார மென்கிற கம்சனையும் சம்ஹரித்தவராகிய ஞானவிநோத சொரூபியானவர்.

### எண்சீர் விருத்தம்

ஞானப்பி யாசியராங் கோபிகைக ளிதய
கன்மனைக்கு ளுள்ளமெனு மேற்பாகத் திசைந்த
வானுங்கா ரச்சிதரின் மனம்புத்தி சித்த
வகைப்பாண்டத் துளசாத்து வீகவிருத் திப்பால்

ஆறுத சவிகற்ப வாசனையாந் ததியோ
டரியநிரு விகற்பானு பவநவநீ தத்தைத்
தானய பிரமமெனுங் கிருட்டினனுட் கொண்டு
சாற்றியவவ் வுறிதகர்த்தே சரித்திடுமெங் கணுமே (ஙகச)

(ப - ரை) ஞானப்பியாசியர் ஆம் = ஞானப்பியாசிகளென் கிற, கோபிகைகள் = கோபிகாஸ்திரீகள், இதய நன்மனைக்குள் = இருதயமென்னும் நல்ல வீட்டினுள், உள்ளம் எனும் மேற்பாகத் திசைந்த = உள்ளமாகிய மேற்பாகத்திற் பொருந்திய, வான் ஆங் கார = பெருமையுடைய அகங்காரமென்கிற, சிதரில் = உறியில், மனம் புத்தி, சித்தவகை = சித்தமெனும் வகைகளான, பாண்டத்து உள = பாண்டங்களிலுள்ள, சாத்துவீக விருத்திப்பால் = சத்துவ விருத்தியாகிய பாலையும், ஆறுத = நீங்காத, சவிகற்ப வாசனையாம் = சவிகற்ப நிட்டையின் வாசனையென்னும், ததியோடு = தயிரையும், அரிய, நிருவிகற்பானுபவ நவநீதத்தை = நிர்விகற்ப நிட்டை யனுபவமென்கிற வெண்ணெயையும், தானய = தான் என்பதன் பொருளான, பிரமமெனும், கிருட்டினன் = ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி யானவர், உட்கொண்டு = சாப்பிட்டுவிட்டு, சாற்றிய = சொல்லப் பட்ட, அவ் உறிதகர்த்து (ஏ) அவ்வுறிகளை அடித்து அவற்றி லுள்ள பாண்டங்களையும் உடைத்து, சரித்திடும் எங்கணும் (ஏ) = எவ்விடத்தும் சஞ்சரித்து விளங்கினர். (ஏ - ஏ = அசைகள்)

(போ - ரை) ஞானப்பியாசிகளென்கிற கோபிகாஸ்திரீகளின் இருதயமென்னும் நல்ல வீட்டினுள் உள்ளமாகிய மேற்பாகத்திற் பொருந்திய பெருமையுடைய அகங்காரமென்கிற உறியில் மனம் புத்தி சித்தமெனும் வகைகளான பாண்டங்களிலுள்ள சத்துவ விருத்தியாகிய பாலையும், நீங்காத சவிகற்ப நிட்டையின் வாசனை யென்னுந் தயிரையும், அரிய நிர்விகற்ப நிட்டையனுபவ மென்கிற வெண்ணெயையும், தான் என்பதன் பொருளான பிரமமெனும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர், சாப்பிட்டுவிட்டுச் சொல்லப்பட்ட அவ்வுறிகளையடித்து அவற்றிலுள்ள, பாண்டங்களையுமுடைத்து எவ்விடத்துஞ் சஞ்சரித்து விளங்கினர்.

## எழுசீர் விருத்தம்.

சிரவணச் சோலை மனனவொண் சரசுத்
திரள்வழி நிதித்தியாங் கண்ணன்
தரிசனத் தோடு சமாதிலீ லைகள்சாட்
சாத்கரித் திடற்கல வியுமேல்
பிரமசா தகராங் கோபிகா மணிகள்
பெற்றன மெளிதனு பவம்யாம்
அரியரோ வெமக்கின் னவரென வெண்ணிற்கா
ணார்கிருட் டினபர மான்மா (௩கரு)

(ப - ரை) சிரவணச் சோலை = சிரவண மென்னுஞ் சோலைகளி லும், மனன = மனனமென்கிற, ஒண்சரசு = அழகிய தடாக, திரள்வழி = கூட்டங்களிடத்தும், நிதித்தியாம் = நிதித்தியாசன மாகிய, கண்ணன் தரிசனத்தோடு = ஸ்ரீகண்ணபிரான் தரிசனை யையும், சமாதி லீலைகள் = சமாதியான கிரீடைகளையும், சாட்சாத் கரித்திடல் = சாட்சாத்காரமெனும், கலவியும் = கலவியையும், ஏல = பொருந்துகின்ற, பிரமசாதகராம் = பிரமாப்பியாசிகள் என் கிற, கோபிகா மணிகள் = கோபிகாஸ்திரீகள், பெற்றனம் எளிது யாம் = நாம் இலேசாகக் கிருஷ்ண அனுபவத்தை யடைந்தோம், அரியரோ எமக்கு இன்னவர் = இத்தன்மைய இவர் நமக்கு அரிய வரோ, என எணில் = என்று சங்கற்பித்தால், காணார் கிருட்டின பரமான்மா = ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உடனே மறைந்துவிடுவார்.

(பொ - ரை) சிரவணமென்னுஞ் சோலைகளிலும், மனனமென் கிற அழகிய தடாகக்கூட்டங்களினிடத்தும், நிதித்தியாசனமாகிய ஸ்ரீ கண்ணபிரான் தரிசனையையும், சமாதியான கிரீடைகளையும் சாட்சாத்காரமெனுங் கலவியையும், பொருந்துகின்ற பிரமாப்பியாசி களென்கிற கோபிகாஸ்திரீகள், நாம் இலேசாகக் கிருஷ்ண அனுப வத்தையடைந்தோம், இத்தன்மைய இவர் நமக்கு அரியவரோ வென்று சங்கற்பித்தால், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா உடனே மறைந்து விடுவார்.

அனுதிஞான கோசவீச னச்சுதப் புமானெரு
வனுதிஞான சின்னமின்ன மன்விராக முபரதித்
தனுதிகாரி கோபிமின் சமத்தர்நெஞ்ச விற்றுறும்
உனுதியல் பரானுபூதி யொண்கிரீடை செய்வனே (௩கசு)

(ப - ரை) அனுதிஞான = அனுதியெனும் சுபாவீக ஞானமாகிய கோச ஈசன் = கோசத்தையுடைய ஈசுவரன், அச்சுதப்புமான் = ஸ்ரீகண்ணபிரான் புருஷோத்தமன், ஒருவன் = ஒருவனே அவன், ஆதிஞான = ஒருகாலத்திலடையும் ஞானமாகிய, சின்னம் மின்ன = நிதம்பம்விளங்க, மன் = நல்ல, விராகம் உபரதி = வைராக்கியம் உபரதியென்கிற, தன அதிகாரி = ஸ்தனங்களையுடைய அதிகாரிகளென்னும் ஜீவர்களாகிய, கோபிமின் சமத்தர் = கோபஸ்திரீகள் எல்லாருடைய, நெஞ்ச இல்தோறும் = இருதயமென்கிற வீடுகள்தோறும், உனுது இயல் = நினையாது பொருந்துகின்ற, பரானுபூதி = மேலான சுவானுபவமாகிய, ஒண்கிரீடை = உயர்ந்த லீலையை, செய்வன் (ஏ). (ஏ - அசை)

(மின் = ஸ்திரீ) சமஸ்த = சமத்தம்) (சமத்தர் - எல்லார்)

(பொ - ரை) அனுதியெனும் சுபாவீக ஞானமாகிய கோசத்தையுடைய ஈசுவரன் ஸ்ரீ கண்ணபிரானுன புருஷோத்தமனொருவனே, அவன், ஒரு காலத்தில் அடையும் ஞானமாகிய நிதம்பம் விளங்க, நல்ல வைராக்கியம் உபரதியென்கிற ஸ்தனங்களையுடைய அதிகாரிகளென்னும் ஜீவர்களாகிய கோபஸ்திரீகள் எல்லாருடைய இருதயமென்கிற வீடுகள்தோறும் நினையாது பொருந்துகின்ற மேலான சுவானுபவமாகிய உயர்ந்த லீலையைச் செய்வன்.

அறுசீர் விருத்தம்.

இழைத்திடப்பட் டகங்கரக்கஞ் சனுக்குளநல் வாசனையென்
றிடுஞ்சந் தத்தை
குழைத்தவுயிர்க் கூனியின்பாற் றூன்கொடுசீ வத்துவமாங்
கூனெழித்துத்
தழைத்திடுமீச் சுரனுய கிருட்டினனவ் வகந்தைக்கஞ்
சனைக்கொன் றேபின்
கழைத்துணையான் மாவெனுநோர் வடிவினளோ டைக்கியமாங்
கலவி யுற்றுன். (௬௧௭)

(ப - ரை) இழைத்திடப்பட்டு = அமைக்கப்பட்டு, அகங்கரக் கஞ்சனுக்கு = அகங்கார மெனும் கம்ஸனுக்காக, உள = இருக்கிற, நல் = நல்ல, வாசனை, என்றிடும் = என்கிற, சந்தத்தை = சந்தனத்தை,

குழைத்த = குழைக்கின்ற, உயிர்க் கூனியின் பால் = ஜீவனாகிய கூனியினிடத்து, தான்கொடு = தான் கிரகித்துக்கொண்டு, சீவத்துவமாம் = ஜீவத்தன்மை யென்னும், கூன் ஒழித்து = கூனைநீக்கி, தழைத்திடும் = விளங்குகின்ற, ஈச்சுரன் ஆய = ஈசுவரனாகிய, கிருட்டினன் = ஸ்ரீ கிருஷ்ணபகவான், அவ் அகந்தைக் கஞ்சனை = அந்த அகங்காரமெனும் கம்ஸனை, கொன்று (ஏ), பின் = பின்பு, கழைத்துணை = கரும்புபோல இனிய, ஆன்மா எனும் = கூடஸ்தரென்கிற, நேர்வடிவினளோடு = நேர்மையான உருவமுடைய அவளோடு, ஐக்கியம் ஆம் = ஐக்கிய மென்னும், கலவி உற்றான் = கலவியைச் செய்தான். (ஏ - அசை) (ஐக்கியம் = ஏகத்தன்மை) (ஈச்சுரன் = பிரமம்)

(பொ - ரை) அமைக்கப்பட்டு அகங்காரமெனும் கம்ஸனுக்காகவிருக்கிற நல்ல வாசனையென்கிற சந்தனத்தைக், குழைக்கின்ற ஜீவனாகிய கூனியினிடத்துத் தான் கிரகித்துக்கொண்டு, ஜீவத்தன்மையென்னுங் கூனைநீக்கி விளங்குகிற ஈசுவரனாகிய ஸ்ரீகிருஷ்ண பகவான், அந்த அகங்காரமெனும் கம்ஸனைக்கொன்று, பின்பு, கரும்புபோல வினிய கூடஸ்தரென்கிற நேர்மையான உருவமுடைய அவளோடு ஐக்கியமென்னுங் கலவியைச் செய்தான்.

கருமேந் திரிய சமுகவுடற் கதியா மிடும்பா சுரற்கொன்று
பிரியா வசபை நலமுடைய பிராண னாகு மிடும்பியைச்சேர்ந்
தொருகான் மனவீ மன்பயந்தா னுறுசத் தியசங் கற்பமெனும்
பரியாக் கடோற்க சனையவன்பின் பட்டான் மறதி வேல்வரவே
(௬௧௪)

(ப - ரை) (க) கருமேந்திரிய = கர்மேந்திரியங்களின், சமுகஉடல் = கூட்டமான சரீரத்தின், கதியாம் = போக்காகிய, இடும்பாசுரற் கொன்று = இடும்பாசுரனை மாய்த்து, பிரியா = நீங்காத, அசபை = அஜபா நிலையென்கிற, நலம் = கற்பு, உடைய பிராணன், ஆகும் = எனும், இடும்பியைச் சேர்ந்து, ஒருகால் = ஒருகாலத்தில், மன = மனமென்கிற, வீமன், (௩) பயந்தான் = பெற்றான், (௨) உறு = பொருந்திய, சத்திய சங்கற்பமெனும், பரியா = பின்னிடாத, கடோற்கசனை, (௪) அவன், பின் = பின்காலத்தில், பட்டான் மறதிவேல்வர (ஏ) = மறதியெனும் வேலாயுதத்தினால் இறந்தான். (ஏ- அசை)

(போ - ரை) கருமேந்திரியங்களின் கூட்டமான சரீரத்தின் போக்காகிய இடும்பாசுரனை மாய்த்து, நீங்காத அஜபா நிலையென்கிற கற்புடைய பிராணனெனும் இடும்பியைச் சேர்ந்து, ஒருகாலத்தில் மனமென்கிற வீமன், பொருந்திய சத்திய சங்கற்பமெனும் பின்னிடாத கடோற்கசனைப் பெற்றான். அவன் பின்காலத்தில் மறதியெனும் வேலாயுதத்தினாலிறந்தான்.

கட்டளைக் கலித்துறை.

கந்தஞ் சுவையுரு வூறொலி யென்னுங் கடியசரா
சந்தன் பகாசூரன் வன்மணி மாலன் றனிக்கீசகன்
வெந்துரி யோதன னுமிவர்க் கொன்மன வீமனவர்
தந்திறல் யாவும்பெற் றானோரே காக்கிரத் தண்டினனே (௩கக)

(ப - ரை) கந்தம், சுவை = இரசம், உரு = ரூபம், ஊறு = பரிசம், ஒலி = சத்தம், என்னும் = என்று முறையே சொல்லப்படுகிற, கடிய = கொடிய, சராசந்தன் பகாசூரன், வல் = வலிய, மணிமாலன், தனி = ஒப்பற்ற, கீசகன், வெம் துரியோதனன் ஆம் = தீயதுரியோதனனென்னும், இவர்க்கொல் = இவர்களைக்கொன்ற, மன = மனமென்கிற, வீமன், அவர் தம் திறல்யாவும் = அவர்களுடைய பலமெல்லாவற்றையும், பெற்றான் = அடைந்தான், ஓர் = ஒப்பற்ற, ஏகாக்கிரத் தண்டினன் (ஏ) = ஏகாக்கிரமாகிய கதாயுதத்தையுமுடையவனாவன். (ஏ-அசை)

(போ - ரை) கந்தம் இரசம் ரூபம் பரிசம் சத்தம் என்று முறையே சொல்லப்படுகிற கொடிய சராசந்தன், பகாசூரன், வலிய மணிமாலன், ஒப்பற்ற கீசகன், தீயதுரியோதன னென்னுமிவர்களைக் கொன்ற மனமென்கிற வீமன், அவர்களுடைய பலமெல்லாவற்றையு மடைந்தான், ஒப்பற்ற ஏகாக்கிரமாகிய கதாயுதத்தையுமுடையவனாவன்.

பன்னிருசீர் விருத்தம்.

சூனியச் சிலையினை யடக்கியுணர் வளைவுசெய்
சுடர்மதிப் பார்த்தனிதய
சுபகுண கடாரத்து மஞ்சணீ ரதனிடைத்
தோன்றும் பரோட்சநிழலான்

மேனிலைச் சாட்சிநோக் கம்புதொட் டேநனவு
மின்கனவு துயின்மீமிசை
விட்டமூன் றிற்றனித் தனிதெளிவு சலனமயன்
மேவுமுத் துளைவழிவிடத்
தானறும் பிரமமோடு கூடத்த ஞானமாஞ்
சக்கரத்துடன் மீன்குறி
தமையகண் டாகார விர்த்தியாம் வேறுகணை
தனைவிடுத் தினிதேற்றுமெய்ஞ்
ஞானமாங் கற்பணங் கைக்குருவி னருளாக
நாட்டுதுரு பதன்மகடனை
நற்பர விசாரயா கக்கன லுதித்தவளை
நண்ணல்சுக் குமசுகிர்தமே, (௩௨௦)

(ப - ரை) சூனியச் சிலையினை = அஞ்ஞானமென்னும் வில்லை, அடக்கி உணர் = வியாபித்து அறிதலாகிய, வளைவுசெய் = வளைத்தலைச் செய்த, சுடர்மதிப் பார்த்தான் = விளக்கமான புத்தியென்கிற, அர்ச்சுனன், இதய சுபகுண = இருதயத்துள்ள சற்குணமென்னும், கடாரத்து மஞ்சள் நீர் அதனிடை = கடாரத்திலிருக்கிற மஞ்சள் நீரில், தோன்றும் = தோன்றுகிற, பரோட்ச நிழலால் = பரோக்ஷமாகிய நிழலைக்கொண்டு, மேல்நிலை = மேலாயுள்ள, சாட்சி நோக்கு = சாக்ஷிவிர்த்தியென்கிற, அம்புதொட்டு (ஏ) = பாணத்தைத் தொடுத்து, நனவு = சாக்கிரம், மின்கனவு = விளங்குகிற சொற்பனம், துயில் = சுழூத்தியெனும், மீமிசை = மேலுக்கு மேலுள்ள, விட்டம் மூன்றில் = மூன்று உத்திரமாக்கில், தனித்தனி = ஒவ்வொன்றிலுமுள்ள, தெளிவு, சலனம் = சஞ்சலம், மயல் = மயக்கமென்ன மேவு = பட்ட, முத்துளை வழிவிட = மூன்று துவாரங்கள் வழியே விடவும், தான் அறும் = பரோக்ஷத் தன்மையபற்ற, பிரமம் ஓடு கூடத்த ஞானம் ஆம் = பிரமஞானம் கூடஸ்தஞானமென்கிற, சக்கரத்துடன் மீன்குறி தமை = சக்கரக்குறி மீன் குறிகளை, அகண்டாகார விர்த்தி, ஆம் = ஆன, வேறுகணைதனை = வேறு பாணத்தை, விடுத்து = விட்டு, இனிது எற்று = இனிமையாய்ப்பற்றி, மெய்ஞ்ஞானம், ஆம் = என்கிற, கற்பு அணங்கு = கற்புடையபெண்ணு கிற, ஐ = நல்ல, குருவின் அருளாக, நாட்டு = சொல்லப்படுகிற, துருபதன் மகள்தனை = துருபத ராஜபுத்திரியான திரோபதையெனும் பெயருடன், நல் = சிறந்த, பர = பிரம, விசார, ஞானக்கனல்

ஞானமென்கிற அக்கினியில், உதித்தவளை = பிறந்தவளை, நண்ணல் = அடைதல், சூக்கும சுகிர்தம் (ஏ) = சூட்சுமத்தன்மையெனும் புண்ணிய பலமாம். (ஏ - ஏ - அசைகள்)

(போ - ரை) அஞ்ஞானமென்னும் வில்லை, வியாபித்தறிதலாகிய வளைத்தலைச் செய்த விளக்கமான புத்தியென்கிற அர்ச்சுனன், இருதயத்துள்ள சற்குணமென்னுங் கடாரத்திலிருக்கிற மஞ்சள்நீரிற் றோன்றுகிற பரோக்ஷமாகிய நிழலைக் கொண்டு, மேலாயுள்ள சாக்ஷி விர்த்தியென்கிற பாணத்தைத் தொடுத்துச் சாக்கிரம் விளங்குகின்ற சொற்பனம் சுழுத்தியெனும் மேலுக்கு மேலுள்ள மூன்று உத்திர மரத்தில் ஒவ்வொன்றிலுமுள்ள தெளிவு சஞ்சலம் மயக்கமென்னப் பட்ட, மூன்று துவாரங்கள் வழியே விடவும், பரோக்ஷத்தன்மை யற்ற பிரமஞானம் கூடஸ்தஞானமென்கிற சக்கரக்குறி மீன்குறிகளை, அகண்டாகார விர்த்தியான வேறுபாணத்தைவிட்டு இனிமையாய்ப்பற்றி, மெய்ஞ்ஞானமென்கிற கற்புடைய பெண்ணாகிய நல்ல குருவினருளாகச் சொல்லப்படுகிற துருபதராஜபுத்திரியான திரௌபதையெனும் பெயருடன் சிறந்த பிரம விசாரஞானமென்கிற அக்கினியிற் பிறந்தவளையடைதல், சூட்சுமத்தன்மையெனும் புண்ணிய பலமாம்.

எழுசீர் விருத்தம்.

இனியசாத் தீக வைங்கர ணங்க
ளெனப்படும் பாண்டவ ரைவர்
அனுபவத் துறுமெய்ஞ் ஞானபாஞ்சாலி
யறிவெனுந் துகிலையா வரணம்
எனவருந் துச்சா தனனுரி காலை
எழில்கொள்ஞா னத்துரோ பதைக்கே
முனியிறை யாங்கண் ணனதருட் பலத்தான்
முடிந்தில தறிவெனுந் துகிலே (௬உக)

(ப - ரை) இனிய சாத்தீக=நல்ல சத்துவகுணசம்பந்த, ஐங்கரணங்கள் = உள்ளம் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் ஐந்து கரணங்கள், எனப்படும் = என்று சொல்லப்படும், பாண்டவர் ஐவர் பாண்டுபுத்திரர் ஐவருடைய, அனுபவத்துறு = அனுபவத்திலும் பொருந்திய, மெய்ஞ்ஞான பாஞ்சாலி = மெய்ஞ்ஞான

மென்கிற துரோபதையின், அறிவெனும் துகிலை = விளக்கமென் னுஞ் சேலையை, ஆவரணம் = ஆவரண வாசனை, எனவரும் = எனப்படும், துச்சாதனன், உரிகாலை = உரிந்தகாலத்தில், எழில் கொள் = அழகையுடைய, ஞான = ஞானமென்னும், துரோப தைக்கு (ஏ), முனி இறையாம் = மன்ன சீலராகிய குருவென் னும், கண்ணனது = ஸ்ரீகண்ணபிரானுடைய, அருள்பலத்தால் = அருளின் பலத்தினால், முடிந்திலது அறிவெனும் துகில் (ஏ) = ஞான விளக்கமென்னும் சேலை வளர்ந்துகொண்டேயிருந்தது (ஏ - அசை)

(போ - ரை) நல்ல சத்துவகுணசம்பந்த உள்ளம் மனம் புத்தி சித்தம் அகங்கார மென்னுமைந்து கரணங்களென்று சொல்லப்படும் பாண்டு புத்திரர் ஐவருடைய அனுபவத்திலும் பொருந்திய மெய்ஞ் ஞானமென்கிற துரோபதையின் விளக்கமென்னுஞ் சேலையை ஆவரண வாசனையெனப்படுந் துச்சாதனன் உரிந்தகாலத்தில் அழகையுடைய ஞானமென்னுந் துரோபதைக்கு மன்ன சீலராகிய குருவென்னும் ஸ்ரீகண்ணபிரானுடைய அருளின் பலத்தினால் ஞான விளக்கமென்னுஞ் சேலை வளர்ந்துகொண்டேயிருந்தது.

### வெண்பா.

அப்பிரமே யப்பிரம மாகுங் கிருட்டினனைச்
செப்புலகெல் லாமாய்ந்து சித்தத்துட் —டுப் புறநான்
ஆகினன்வே றின்றெனக் கொண் டானல் லகங்கரமாம்
வாகியல்ச காதேவன் மன் (௩உஉ)

(ப - ரை) அப்பிரமேய அளக்கப்படாத, பிரமம், ஆகும் = ஆகிய, கிருட்டினனை = ஸ்ரீகிருஷ்ணபகவானை, செப்பு = சொல் லப்படுகிற, உலகு எல்லாம் = உலகம் யாவையும், ஆய்ந்து = விசாரித்து, (௩) சித்தத்துள் = சித்தத்தினுள்ளே, துப்புற = திட அனுபவமாக, நான் ஆகினன் = நான் ஆனேன், வேறு இன் றெனக் கொண்டான் = அன்னியமில்லையென்று அறிந்துகொண் டான், (உ) நல் அகங்கரமாம் = சத்துவ அகங்காரமென்னும், வாகு இயல் = அழகுடைய, சகாதேவன். (மன் - அசை)

(போ - ரை) அளக்கப்படாத பிரமமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவா னைச் சொல்லப்படுகிற உலகம் யாவையும் விசாரித்துச் சத்துவ

அகங்காரமென்னும் அழகுடைய சகாதேவன் சித்தத்தினுள்ளே திட அனுபவமாக நான் ஆனேன் அன்னியமில்லை யென்றறிந்து கொண்டான்.

### கலி விருத்தம்.

விருத்தி ஞான விதுரனுண் ணோக்ககங்
கிருட்டி னன்போங் கிளர்ந்தவன் யுத்தியின்
முரித்து மாயைமன் முற்றுற, மோனயாத்
திரைக்கு றற்கவன் சிந்தனைக் கூழ்க்கரோ (௩உ௩)

(ப-ரை) (க) விருத்தி, ஞான=ஞானமென்னும், விதுரன்= விதுரனுடைய, உள்நோக்கு அகம் = உள்நோக்கமென்னும் வீட்டிற்கு, (உ) கிருட்டினன் போம் கிளர்ந்து = பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் மகிழ்ந்து சென்றார், (௩) அவன், யுத்தியில்= தனது யுக்தியாகிய வில்லை, முரித்து, மாயை=மாயையான, மன்= துரியோதனராஜன், முற்றுற = இறக்கும்படி, மோன = மௌன மென்கிற, யாத்திரைக்கு = யாத்திரையை, உறற்கு = அடையவும், (௪) அவன், சிந்தனைக்கூழ்க்கு (அரோ) = சிந்தனையெனும் கஞ்சியைத் தான் சாப்பிடவும், (அரோ=அசை)

(போ-ரை) விருத்தி ஞானமென்னும் விதுரனுடைய உள் நோக்கமென்னும் வீட்டிற்கு, அவன் சிந்தனையெனும் கஞ்சியைத் தான் சாப்பிடவும், அவன் தனது யுக்தியாகிய வில்லை முரித்து மாயையான துரியோதன ராஜன் இறக்கும்படி மௌனமென்கிற யாத்திரையை யடையவும், பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் மகிழ்ந்து சென்றார்.

### கலி நிலைத்துறை.

அருளி னிறை யாகிய வாதரா யணன்றான்
பருவ வாசனை யாயகாந் தாரியின் பதியாங்
கரும பாவனைத் திரிதராட் டிரற்கியோ கத்தோ
டொருமை ஞானநேத் திரந்தர மறுத்தன னேர்கால் (௩உ௪)

(ப-ரை) (க) அருளினால், இறை ஆகிய வாதராயணன் (தான்) = குருவென்னும் வியாசர், (உ) பருவ வாசனை ஆய = சமயங்களில் தோன்றுகிற வாசனையெனும், காந்தாரியின், பதி

யாம்=தலைவனை, கருமபாவனை=நல்ல கருமபாவனையாகியாகிய, திரிதராட்டிரற்கு=திரிதராஷ்டிரனுக்கு, யோகத்தோடு, ஒருமை= ஏக ஒற்றுமையான, ஞானநேத்திரம்தர = ஞான நேத்திரத்தைக் கொடுக்க, மறுத்தனன் = அதைப்பெற்று மறுத்துவிட்டான், (உ) ஓர்கால் = ஒருகாலத்தில் (தான் = சாரியை)

(பொ - ரை) அருளினால் குருவென்னும் வியாசர் ஒருகாலத்தில், சமயங்களிற் றோன்றுகிற வாசனையெனுங் காந்தாரியின் தலைவனை நல்ல கரும பாவனையாகிய திரிதராஷ்டிரனுக்கு யோகத்தோடு ஏக ஒற்றுமையான ஞானநேத்திரத்தைக் கொடுக்க அதைப்பெற்று மறுத்துவிட்டான்.

எழுசீர் விருத்தம்.

தத்துவக் குலத்திற் கிறுதிவிட் சேப
சகுனியைப் பரவகங்கார
கத்தனுஞ் சகாதே வன்கொலு மவித்தைக்
கன்னனை யுயர்மதிப் பார்த்தன்
னைத்தழித் திடுமா வரணதுச் சாத
னனைச்செகுத் தொளிர்மன வீமன்
சத்துரு மாயை யாகிய துரியோ
தனனையு மாய்த்தனன் றானே. (௬௨௫)

(ப - ரை) தத்துவ = தத்துவங்களின் கூட்டமாகிய, குலத்திற்கு, இறுதி = நாசகாரணமான, விட்சேப=விட்சேபமென்னும் சகுனியை, பர = பரம, அகங்கார, கத்தன் ஆம் = கர்த்தாவென்கிற, சகாதேவன், கொலும்=கொன்றான், அவித்தைக் கன்னனை = அஞ்ஞானமெனுங் கர்னனை, உயர்மதி = சத்துவ புத்தியாகிய, பார்த்தன் = அர்ச்சுனன், நைத்து = வருத்தி, அழித்திடும் = அழித்தான், ஆவரண = ஆவரணமென்கிற, துச்சாதனனை, செகுத்து = மாய்த்து, ஒளிர் = விளங்குகின்ற, மன=மனமாகிய, வீமன், சத்துரு = அசுத்த, மாயையாகிய, துரியோதனனையும் மாய்த்தனன் (தான்) (ஏ). (தான்=சாரியை) (ஏ-அசை)

(பொ - ரை) தத்துவக் கூட்டமாகிய குலத்திற்கு நாசகாரணமான விட்சேபமென்னுஞ் சகுனியைப் பரம அகங்கார கர்த்தாவென்கிற சகாதேவன் கொன்றான். அஞ்ஞானமெனுங் கர்னனைக்

சத்துவ புத்தியாகிய அர்ச்சுனன் வருத்தியழித்தான். ஆவரண மென்கிற துச்சாதனனை மாய்த்து விளங்குகின்ற மனமாகிய வீமன் அசுத்த மாயையாகிய துரியோதனனேயும் மாய்த்தனன்.

பன்னிரு சீர் விருத்தம்.

ஆவரண சத்தியாந் துச்சாதனன்மற்று
மளவுதீக் குணசோதரர்
அடருயிர்த் துரியோத னன்னவித் தைக்கன்ன
னறையும்விட் சேபசகுனி
மேவுதத் துவசமுக மாமரசர் பலகுழு
விளங்கலா னிதயபூமி
மிகுபார மொழியும்வண ஞானத் துரோபதையை
விரவுமுள் ளத்தறமகன்
ஏவுமன வீமன் மதிப்பற் குனன்சித்த
மெனுநகுல னுங்காரமென்
றிடுசகா தேவனெனு மிவரால் விசாரமா
விசைகுருக் கேத்திரத்தே
மூவறு வகைப்பனுப வின்கருத் தாய்வா
மொழிந்தபதி னெட்டுநாளின்
முதிராறுதி யமர்முடித் தருளுங் குருக்கண்ணன்
முத்தியுட் டருமனுக்கே. (௩௨௬)

(ப - ரை) (க) ஆவரண சத்தி, ஆம் = ஆகிய, துச்சாதனன், மற்றும் = இன்னும், அளவு = கலந்துள்ள, தீக்குண சோதரர் = தீய குணங்களான சகோதரர், அடர் = முதன்மையாகப் பொருந்திய, உயிர் = ஜீவனென்னும், துரியோதனன், அவித்தை = அஞ்ஞான மென்கிற, கன்னன் = கர்னன், அறையும் = சொல்லப்படும், விட் சேப = விட்சேபமென்னும், சகுனி, மேவு = பொருந்திய, தத்துவ, சமுகமாம் = கூட்டமாகிய, அரசர் பலகுழு = அனேக இராஜாக்களின் திரளுடன், விளங்கலான் = விளங்குதலால், இதயபூமி = இருதய மென்னும்பூமி, மிகு = மிகுந்த, பாரம், ஒழியும் வணம் = நீங்கும்படி, ஞானம் = ஞானமென்கிற, துரோபதையை, விரவும் = அடைந்தவர் களான, உள்ளத்து அறமகன் = உள்ளமெனும் தர்மராஜன், ஏவு = நன்மையிற் செலுத்துகின்ற, மன = மனமான, வீமன், மதி = புத்தி

யாகிய, பற்குனன் = அர்ச்சுனன், சித்தமெனும், நகுலன், ஆங்காரம் என்றிடு = அகங்கார மெனகிற, சகாதேவன், எனும் இவரால் = ஆகிய இவர்களால், விசாரமா = ஆத்ம விசாரமென, இசை = பொருந்திய, குருக்கேத்திரத்து (ஏ) = குருக்ஷேத்திரத்தில், மூ அறுவகை = பதினெட்டுவித, பனுவலின் = வித்தைகள் அல்லது புராணங்களின், கருத்து = கருத்தை, ஆய்வா = ஆராய்தலாக, மொழிந்த = சொல்லப்பட்ட, பதினெட்டுநாளின், முதிர் அறுதி = உயர்ந்த தீர்மான மென்னும், அமர்முடித்து = யுத்தத்தைச் செய்துமுடித்து, (௩) அருளும் குருக்கண்ணன் = குருவென்கிற ஸ்ரீ கண்ணபிரான் அருளினர், (௨) முத்தி உள்தருமனுக்கு (ஏ) = உள்ளமாகிய தர்மராஜனுக்கு முத்தியெனும் வைகுண்ட பதவியை (ஏ-ஏ-அசைகள்).

(பொ - ரை) ஆவரண சத்தியாகிய துச்சாதனன் இன்னும் கலந்துள்ள தீயகுணங்களான சகோதரர் முதன்மையாகப் பொருந்திய ஜீவனென்னுந் துரியோதனன், அஞ்ஞானமென்கிற கர்னன், சொல்லப்படும் விட்சேப மென்னுஞ் சகுனிபொருந்திய தத்துவக்கூட்டமாகிய அனேக இராஜாக்களின் திரளுடன் விளங்குதலால் இருதய மென்னும்பூமி மிகுந்த பாரம் நீங்கும்படி ஞானமென்கிற துரோபதையை யடைந்தவர்களான உள்ளமெனும் தருமராஜன், நன்மையிற் செலுத்துகின்ற மனமான வீமன், புத்தியாகிய அர்ச்சுனன், சித்தமெனும் நகுலன், அகங்காரமென்கிற சகாதேவன் ஆகிய இவர்களால் ஆத்ம விசாரமெனப் பொருந்திய குருக்ஷேத்திரத்தில், பதினெட்டுவித வித்தைகள் அல்லது புராணங்களின் கருத்தை யாராய்தலாகச் சொல்லப்பட்ட பதினெட்டு நாளின், உயர்ந்த தீர்மானமென்னும் யுத்தத்தைச் செய்துமுடித்து, உள்ளமாகிய தருமராஜனுக்கு முத்தியென்னும் வைகுண்ட பதவியைக் குருவென்கிற ஸ்ரீ கண்ணபிரானருளினர்.

வெண்பா.

வியன்பிரமா கார விருத்தித் திடமென்
றியம்பிடுசங் கார வியல்பின்—வயங்குனி
மாத்தியா கிப்பெயர்கொள் வான்கற்கி சங்கற்பத்
தீத்தொழிலோர் மாய்ந்திடவந் தே. (௩௨௭)

(ப - ரை) (௨) வியன் = சிறந்த, பிரமாகார விருத்தித்திடம் என்று, இயம்பிடு = சொல்லப்படுகிற, சங்கார, இயல்பின் = தன்மையால்,

(௬) வயங்கும் நனி=நன்ருக விளங்கும், (௬) மாத்தியாகி=மாத்தியாகி யென்னும், பெயர்கொள் =பெயரையுடைய, வான் =பெருமை பொருந்திய, கற்கி=கல்கியவதாரம், (க) சங்கற்ப=பலவித சங்கற்பங்க ளென்னும், தீத்தொழிலோர் = துஷ்டர்கள் எல்லாம், மாய்ந்திட வந்து (ஏ)=அழியும்படி தோன்றி (ஏ-அசை).

(பொ - ரை) பலவித சங்கற்பங்க ளென்னுந் துஷ்டர்களெல்லா மழியும்படி தோன்றிச் சிறந்த பிரமாகார விருத்தித் திடமென்று சொல்லப்படுகிற சங்காரத் தன்மையால் மாத்தியாகி யென்னும் பெயரையுடைய பெருமை பொருந்திய கல்கியவதாரம் நன்ருக விளங்கும்.

அறுசீர் விருத்தம்.

வேரியேழ் ஞான பூமி மேற்பரம் வேங்க டேசன்
ஓருணர் வொழிந்து மற்றோ ருணர்வுறி னிரண்டி ணுப்பண்
சாரு நிச் சலசித் தத்திற் றயங்குமான் மாக்கா வேரி
நேரில்கொள் ளிடநடுப்பா னிகழ்ந்தசீ ரங்க மாலே. (௬உ)

(ப - ரை) வேரி = நல்ல வாசனையை யுடைய, ஏழ் = ஏழு, ஞானபூமிமேல்=ஞானபூமிகளின் மேலேயமர்ந்த, பரம் = பிரமமே, வேங்கடேசன் = வேங்கடேசனும், ஓர் உணர்வு = ஒரு நினைவு, ஒழிந்து =நீங்கி, மற்று ஓர் உணர்வு = மற்றொரு நினைவு, உறின் = தோன்றினல், இரண்டின், நாப்பண்=மத்தியில், சாரும்=பொருந்துகிற, நிச்சல=சலனமற்ற, சித்தத்தில், தயங்கும் = விளங்குகின்ற. ஆன்மா=ஆத்மசொரூபம், காவேரி, நேர்இல் = ஒப்பற்ற, கொள்ளிடம் = கொள்ளிடங்களின், நடுப்பால் = மத்தியமான இடத்தில், நிகழ்ந்த= இருக்கிற, சீரங்கமால் (ஏ)=ஸ்ரீரங்க நாயகராம்.

(ஏ-அசை) (வேங்கடம்=ஏழுமலை.

(பொ - ரை) நல்ல வாசனையை யுடைய ஏழு ஞான பூமிகளின் மேலேயமர்ந்த பிரமமே வேங்கடேசனும் ஒரு நினைவுநீங்கி மற்றொரு நினைவு தோன்றினல் இரண்டின் மத்தியிற் பொருந்துகிற சலன மற்ற சித்தத்தில் விளங்குகின்ற ஆத்மசொரூபம் காவேரி, ஒப்பற்ற கொள்ளிடங்களின் மத்தியமான விடத்திலிருக்கிற ஸ்ரீரங்கநாயகராம்.

## கலி விருத்தம்

விடயம் பிரமம் வியன்வா சனையே
நடுவா நிசமே ஞானத் துடனே
கிடையான் மாமுக் கியமத் துவிதம்
மிடையுஞ் சுகமெண் விதலட் சுமியே. (௩௨௯)

(ப - ரை) விடயம், பிரமம், வியன் = சிறந்த, வாசனை (ஏ), நடுவாம் = சமமாகிய நிசம் (ஏ), ஞானத்துடன் (ஏ), கிடை = நிலைத்த, ஆன்மா = ஆத்மா, முக்கியம், அத்துவிதம், மிடையும் = எனப் பொருந்துகின்ற, சுகம் = ஆனந்தங்கள், எண்வித லட்சுமி (ஏ) = அஷ்டலக்ஷுமிகளாம். (ஏ-ஏ-ஏ-ஏ-அசைகள்)

(போ - ரை) விடயம், பிரமம், சிறந்த வாசனை, சமமாகிய நிசம், ஞானத்துடன், நிலைத்த ஆத்மா, முக்கியம், அத்துவிதமெனப் பொருந்துகின்ற ஆனந்தங்கள் அஷ்டலக்ஷுமிகளாம்.

(விஷய சுகம், பிரமசுகம், வாசனாசுகம், நிஜசுகம், ஞானசுகம், ஆத்மசுகம், முக்கியசுகம், அத்துவிதசுகம் என்பன அஷ்டவித ஆனந்தமாம்.) (நிஜசுகம் = உதாசீனசுகம்) (முக்கியசுகம் = சமாதிச் சுகம்.)

## வெண்பா.

சாந்த விருத்திச்செந் தாமரையின் ஞானப்பொற்
காந்தையினுன் மீளாக் கதித்திருவாம்—போந்தநசை
அத்திரியூர் மூடமன மாய முகடிதரும்
பெத்தநிலைத் துன்பம் பெரிது. (௩௩0)

(ப - ரை) சாந்தவிருத்தி = சத்துவ விர்த்தியென்னும், செந்தாமரைப் புஷ்பத்திலிருக்கின்ற, ஞான = ஞானமென்னும், பொருள் காந்தையினால் = இலக்ஷ்மி தேவியினால், மீளாக்கதி = மோக்ஷமாகிய, திரு ஆம் = செல்வமுண்டாகும், போந்தநசை = மிகுந்த ஆசையெனும், அத்திரியூர் = கர்த்தபத்தை நடத்துகின்ற, மூடமனம், ஆய = ஆகிய, முகடி = மூதேவி, தரும்பெத்த நிலைத்துன்பம் பெரிது = பந்தநிலைமையெனுந் துன்பத்தை மிகுதியாகக் கொடுப்பாள். (காந்தை பெண்)

(போ - ரை) சத்துவ விர்த்தியென்னுஞ் செந்தாமரைப் புஷ்பத்திலிருக்கின்ற, ஞானமென்னும், இலக்ஷுமி தேவியினால் மோக்ஷமாகிய, செல்வமுண்டாகும். மிகுந்த ஆசையெனுங் கர்த்த பத்தை நடத்துகின்ற மூடமனமாகிய மூதேவி, பந்தநிலைமையெனுந் துன்பத்தை மிகுதியாகக் கொடுப்பாள்.

கலி நிலைத்துறை.

பிரம னுக்குநான் மறைமுகஞ் சாத்திரம் பிறவோ
சரண மாதியங் கங்கரு மம்முபா சனையோ
டரிய ஞானகாண் டந்திரி மனைவிய ராவார்
மருவு மன்னவா கனமது சத்துவ மதியே (ருருக)

(ப -ரை) பிரமனுக்கு = பிரமதேவனுக்கு, நால்மறை = நான்கு வேதங்கள், முகம் = முகங்களாம், சாத்திரம் பிறவோ = மற்ற சாஸ்திரங்களோ, சரணம் ஆதி அங்கம் = கால முதலிய மற்ற அவயவங்களாம், கருமம் = கருமகாண்டமும், உபாசனையோடு உபாசனகாண்டமும், அரிய = அருமையான, ஞானகாண்டம், = ஞானகாண்டமும், திரி = காயத்திரி சாவித்திரி சரஸ்வதியென்னும் மூன்று, மனைவியர் = தேவிகள், ஆவார், மருவும் = பொருந்திய அன்னவாகனம் (அது) சத்துவமதி (ஏ) = சத்துவபுத்தி அன்ன வாகனமாம் (அது சொல்லுருபு) (ஏ, அசை).

(போ - ரை) பிரமதேவனுக்கு நான்கு வேதங்கள் முகங்களாம், மற்ற சாஸ்திரங்களோகால் முதலிய மற்ற அவயவங்களாம், கரும காண்டமும் உபாசனகாண்டமும் அருமையான ஞானகாண்டமும் காயத்திரி சாவித்திரி சரஸ்வதியென்னும் மூன்று தேவிகளாவார், பொருந்திய சத்துவ புத்தி அன்னவாகனமாம்.

பிரம வான்மஞா னங்களிவ் விரண்டுகட் பிரியா
மருவு நான்குமா வாக்கிய முகம்பிர மாணம்
கரமொ ரெட்டதாங் கருமஞா னத்துறை கழல்கள்
சரத வம்புய மீதமர் சுருதிபோ தனுக்கே (ருருஉ)

(ப - ரை) (உ) பிரம ஆன்ம ஞானங்கள் = பிரம ஞானமும், ஆத்ம ஞானமும், இவ்விரண்டு = இரண்டு இரண்டு, கண்பிரிவா = கண்களென்னும் பகுப்பாக, மருவு = பொருந்திய, நான்கு, மா = மகா,

வாக்கியம், முகம் = முகமாம், பிரமாணம் = அஷ்டப் பிரமாணங்களும், கரம் ஓர் எட்டு (அது) ஆம் = எட்டுக்கைகளாம், கரும ஞானத்துறை = கருமமார்க்கமும் ஞான மார்க்கமும், கழல்கள் = பாதங்களாம், (க) சரத அம்புயம் = சத்தியமென்னுந் தாமரை மலரின், மீது அமர் = மேல் அமர்ந்த, சுருதி போதனுக்கு (ஏ) = வேதமாகிய பிரமதேவனுக்கு (அது சொல்லுருபு)

(ஏ - அசை)

பிரத்தியக்ஷம், அனுமானம், உவமானம், சத்தம், அருத்தாபத்தி, அபாவம், ஐதீகம், சம்பவம்.

இவையே அஷ்டப் பிரமாணமாம்.

(சத்தம் = ஆகமம்) (அபாவம் = அநுபலப்தி)

(பொ - ரை) சத்தியமென்னுந் தாமரை மலரின்மேலமர்ந்த வேதமாகிய பிரமதேவனுக்குப் பிரமஞானமும் ஆத்மஞானமும் இரண்டிரண்டு கண்களென்னும் பகுப்பாகப் பொருந்திய நான்கு மகா வாக்கியம் முகமாம். அஷ்டப்பிரமாணங்களும் எட்டுக்கைகளாம் கருமமார்க்கமும் ஞானமார்க்கமும் பாதங்களாம்.

கலி விருத்தம்.

எண்டிசைப் பொருள் யாவையுந் தானெனக்
கண்டு மாயைக் கமலத் துயர்பரன்
தண்ட நாயகி சத்துவ சித்தவெண்
முண்ட கத்தெழு முத்தசங் கற்பமே. (ருரு)

(ப - ரை) எண்திசை = எட்டுத் திசைகளிலுள்ள, பொருள் யாவையும், தான் எனக்கண்டு = தானேயெனத் தெரிந்து, மாயைக் கமலத்து = மாயையென்னுந் தாமரைமலரின், உயர்பரன் = மேலமர்ந்த பிரமதேவனது, தண்டநாயகி = வணக்கமுள்ளதேவி, சத்துவ, சித்த = சித்தமென்கிற, வெண்முண்டகத்து எழும் = வெள்ளைத் தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும், முத்தசங்கற்பம் (ஏ) = முத்திக்குரிய சங்கற்பமான சரஸ்வதியாம். (ஏ-அசை)

(பொ - ரை) எட்டுத் திசைகளிலுள்ள பொருள் யாவையுந் தானேயெனத் தெரிந்து மாயையென்னுந் தாமரை மலரின்மேலமர்ந்த பிரமதேவனது வணக்கமுள்ளதேவி சத்துவ சித்தமென்கிற வெள்

ளைத்தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் முத்திக்குரிய சங்கற்ப மான சரஸ்வதியாம்.

கலி நிலைத்துறை.

சித்த விர்த்தியா மகிழ்நகை துயரமுஞ் சினமும்
தத்து வீரமும் பயமரு வருப்பதி சயமும்
பைத்த சாந்தமு மாமயன் மைந்தரொன் பதின்மர் (௺௬௪)
வைத்த வெண்ணில்சங் கற்பமாஞ் சிருட்டியை வகுப்பார்.

(ப - ரை) சித்த, விர்த்தியாம் = விர்த்திகளாகிய, மகிழ் = மகிழ்ச்சியும், நகை = சிரிப்பும், துயரமும், சினமும் = கோபமும், தத்து = தாவுகின்ற, வீரமும், பயம் = பயமும், அருவருப்பு = அருவருப்பும், அதிசயமும், பைத்த = மிருதுவான, சாந்தமும், ஆம் = ஆகிய, அயன்மைந்தர் = பிரமபுத்திரரான, ஒன்பதின்மர் = பிரஜாபதி ஒன்பது பேரும், வைத்த = ஏற்பட்டிருக்கிற, எண் இல் = கணக்கற்ற, சங்கற்பமாம் = சங்கற்பங்களென்கிற, சிருட்டியை வகுப்பார் = சிருஷ்டிகளைச் செய்வார்.

(போ - ரை) சித்தவிர்த்திகளாகிய மகிழ்ச்சியும் சிரிப்பும் துயரமும் கோபமும் தாவுகின்ற வீரமும் பயமும் அருவருப்பும் அதிசயமும் மிருதுவான சாந்தமும் ஆகிய, பிரமபுத்திரரான பிரஜாபதியொன்பதுபேரும், ஏற்பட்டிருக்கிற கணக்கற்ற சங்கற்பங்களென்கிற சிருஷ்டிகளைச் செய்வார்.

கலி விருத்தம்.

கரும மாமனங் கன்பழ வாதனை
இரதி யைம்புல னேவெனு மைந்தலர்
திரண்மெய் மாதர்விட் சேபங் கழைவிலா
வரண மோங்கிருண் மன்னுயிர் மைந்தரே. (௺௬௫)

(ப - ரை) கருமமாம் அனங்கன் = கருமம் மன்மதனும், பழ வாதனை = பூர்வவாசனை, இரதி = இரதிதேவியாம், ஐம்புலன் = சத்தம் முதலிய ஐந்துபுலன்கள், ஏ, எனும் = பாணங்களென்கிற, ஐந்து, அலர் = புஷ்பங்களாம், திரள்மெய் = சரீரக் கூட்டம், மாதர் = பெண்களாம், விட்சேபம், கழைவில் = கரும்பு வில்லாம், ஆவரணம், ஓங்கு

இருள் = மிகுந்த இருளாம், மன்உயிர் = நிலைத்த ஜீவர்கள், மைந்தர் (ஏ) = புருஷர்களாம். (ஏ-அசை)

(போ - ரை) கருமம் மன்மதனும், பூர்வவாசனை இரதிதேவியாம், சத்தம் முதலிய ஐந்து புலன்கள் பாணங்களென்கிற ஐந்து புஷ்பங்களாம். சரீரக்கூட்டம் பெண்களாம். விட்சேபம் கரும்புவில்லாம். ஆவரணம் மிகுந்த இருளாம். நிலைத்த ஜீவர்கள் புருஷர்களாம். (விட்சேபம் = விட்சேபசத்தி) (ஆவரணம் = ஆவரணசத்தி).

வெண்பா.

அஞ்ஞானங் கூற்ற னசத்துச் சடந்துக்கம்
எஞ்ஞான் றுங் கொள்சூல மிச்சையதே— இஞ்ஞாலத்
திற்பாசந் தேகோக வெண்ணந்தண் டாமாயை
தெற்காகுந் தாமதமே தி. (௩௯௬)

(ப - ரை) அஞ்ஞானம், கூற்றன் = யமனும், அசத்துச் சடம் துக்கம், எஞ்ஞான்றும் = எப்போதும், கொள்சூலம் = தரிக்கும் சூலாயுதமாம், இச்சை (அது) (ஏ) = ஆசை, இஞ்ஞாலத்தில் = இவ்வுலகில், பாசம் = பாசமாம், தேக அக எண்ணம் = தேகத்தை நான் என்னும் புத்தி, தண்டு ஆம் = தண்டாயுதமாம், மாயை, தெற்கு ஆகும் = தென்திசையாம், தாமதம் = தமோகுணம், மேதி = எருமைக்கடாவாம். (அது = சொல்லுருபு) (ஏ = அசை).

(போ - ரை) அஞ்ஞானம் யமனும். அசத்துச் சடந் துக்கம் எப்போதும் தரிக்குஞ் சூலாயுதமாம். ஆசை இவ்வுலகிற் பாசமாம். தேகத்தை நானென்னும் புத்தி தண்டாயுதமாம். மாயை தென்திசையாம். தமோகுணம் எருமைக்கடாவாம்.

அறுசீர் விருத்தம்.

ஆயிரக் கணக்காம் விர்த்தி யானன மனச்சே டன்றான்
மாயைஞா லத்தைத் தாங்கி மாயியா நெடுமா லுக்கும்
பாயலா யான்மாவென் னும் பரசிவத் தாற்பூ ணுகை
மேயிடத் தரிக்கப் பட்டு விளங்கிடும் பகுதி காணே. (௩௯௭)

(ப - ரை) ஆயிரக்கணக்காம் = அநேகமான, விர்த்தி ஆனன = விருத்தியென்னும் முகங்களுடைய, மனச்சேடன் (தான்) = மனமென்கிற ஆதிசேஷன், மாயை ஞாலத்தை = மாயையெனும்பூமியை

தாங்கி, மாயி ஆம்=மாயையை உடையவனுகிய, நெடுமாலுக்கும்= மகாவிஷ்ணுவுக்கும், பாயல் ஆய்=பாயாகி, ஆன்மா = ஆத்மா, என்னும், பாசிவத்தால் = பரமசிவனுல், பூண் ஆக = ஆபரணமாக, மேயிட=பொருந்த, தரிக்கபபட்டு, விளங்கிடும்=விளங்கும், பகுதி = பிரகிருதியையும், காண் (ஏ)=இவ்வாறறி. (தான்-சாரியை) (ஏ-அசை).

(போ-ரை) அநேகமான விருத்தி யென்னும் முகங்களுடைய மனமென்கிற ஆதிசேஷன் மாயையெனும் பூமியைத்தாங்கி மாயையையுடையவனுகிய மகாவிஷ்ணுவுக்கும் பாயாகி ஆத்மாவென்னும் பரமசிவனுல் ஆபரணமாகப் பொருந்தத் தரிக்கப்பட்டு விளங்கும் பிரகிருதியையும் இவ்வாறறி.

வஞ்சி விருத்தம்.

பள்ளியாய பயோததி, வெள்ளிவெற்பு விகங்கமும்,
விள்ளில்சத்துவ விர்த்திசான், றுள்ளின்மூவரு மோர்கவே (௩௩௨)

(ப-ரை) (க) பள்ளி ஆய=படுக்கையிடமாகிய, பயஉததி = பாற்கடலும், வெள்ளி வெற்பு = வெள்ளிமலேயும், விகங்கமும் = அன்னபக்ஷியும், விள் இல்=பிரிவற்ற, சத்துவ விர்த்தி=சாத்துவீக விர்த்தியாம், (௩) சான்று = இதன் சாக்ஷியே, (உ) உள்ளில்= நினைக்குமிடத்து, (ச) மூவரும்=திரிமூர்த்திகளுமாம், ஓர்க (ஏ)= என அறிக. (ஏ-அசை).

(போ-ரை) படுக்கை யிடமாகிய பாற்கடலும் வெள்ளிமலேயும் அன்னப்பக்ஷியும் பிரிவற்ற சாத்துவீக விர்த்தியாம், நினைக்குமிடத்து இதன் சாக்ஷியே திரிமூர்த்திகளுமா மெனவறிக.

கலி விருத்தம்.

சிரவ ணஞ்செய் சிருட்டித் தொழின்மதி
பிரம தேவன் பினர்மன னத்திதி
மருவு புங்கிரன் மாய னிதித்தியாம்
விரிசங் கார விவேகம தீசனே (௩௩௩)

(ப-ரை) சிரவணம், செய்தலாகிய, சிருஷ்டித்தொழில் = சிருட்டித்தொழிலேயுடைய, மதி=புத்தி, பிரமதேவன்=பிரமதேவனும், பினர் = பின்பு, மனனத்திதி = மனனமென்னும ஸ்திதிச்

செயலை, மருவுபுந்தி = பொருந்திய புத்தி, நல்மாயன் = மகாவிஷ்ணுவாம், நிதித்தி ஆம் = நிதித்தியாசனமெனும், விரி = விரிந்த, சங்கார விவேகம் (அது) = சங்காரமான விவேகமானது, ஈசன் (ஏ) உருத்திர மூர்த்தியாம். (அது = சொல்லுருபு) (ஏ-அசை)

(பொ - ரை) சிரவணஞ் செய்தலாகிய சிருஷ்டித் தொழிலையுடைய புத்தி பிரமதேவனும். பின்பு மனனமென்னும் ஸ்திதிச் செயலைப் பொருந்திய புத்தி மகாவிஷ்ணுவாம். நிதித்தியாசனமெனும் விரிந்த சங்காரமான விவேகமானது உருத்திர மூர்த்தியாம்.

வெண்பா.

மாகர்த்தன் வேதா மகாபோகி விண்டுவாம்
சேகிற் றிகழ்மாத் தியாகியரன் — மோகஞ்
சிதறுமதி வன்னுச் சிரமிமகே சன்றான்
திதி கொள்சதா நிட்டன் சிவன். (௫௪௦)

(ப - ரை) மாகர்த்தன் = மாகர்த்தன், வேதா = பிரமனும், மகாபோகி, விண்டு ஆம் = விஷ்ணுவாம், சேகில் = திடத்தினால், திகழ் = விளங்குகின்ற, மாத்தியாகி = மகாத்தியாகி, அரன் = உருத்திரனும், மோகம் சிதறும் = மயக்கத்தை நீக்கும், அதி வன்னுச்சிரமி, மகேசன் (தான்) = மகேசுவரனும். திதிகொள் = நிலையான, சதாநிட்டன் = சதா நிஷ்டையையுடையவன், சிவன் = சதாசிவனும். (தான் - சாரியை)

(பொ - ரை) மாகர்த்தன், பிரமனும், மகாபோகி விஷ்ணுவாம், திடத்தினால் விளங்குகிற மகாத்தியாகி உருத்திரனும், மயக்கத்தை நீக்கும் அதிவன்னுச்சிரமி மகேசுவரனும். நிலையான சதாநிஷ்டையையுடயவன் சதாசிவனும்.

விரிபிரம வித்து விரிஞ்சன் பிரம
வரன்மால் பிரம வரியான் — அரன்றான்
பிரமவரிட்டன் பெயருருவில் லாவீச்
சுரனென் றறிந்தே தொழு (௫௪௧)

(ப - ரை) விரி = வியாபகமுள்ள, பிரமவித்து, விரிஞ்சன் = பிரமதேவனும், பிரமவரன், மால் = மகாவிஷ்ணுவாம், பிரமவரியான், அரன் (தான்) உருத்திர மூர்த்தியாம், பிரமவரிட்டன்,

பெயர் உரு இல்லா = நாமரூபமற்ற, ஈச்சுரன் என்று = ஈசுவரனு மென்று, அறிந்து (ஏ), தொழு = வணங்கு. (தான் - சாரியை) (ஏ) (அ - சை)

(போ - ரை) வியாபகமுள்ள பிரமவித்துப் பிரமதேவனும். பிரமவரன் மகாவிஷ்ணுவாம். பிரமவரியான் உருத்திர மூர்த்தியாம். பிரமவரிட்டன் நாம ரூபமற்ற ஈசுவரனுமென்றறிந்து வணங்கு.

கலித்தாழிசை

கூய நூற்றெட்டா முபநிடம் விட்டுணு கோவில்
மேய வோர்பர மேவியாப கப்பொருள் விரிப்பின்
ஆயி ரத்தெட்டா முபநிட தஞ்சிவா லயங்கள்
ஏயு மோர்பொருள் பிரமமங் களவுரு வினதே (௩௬௪)

(ப - ரை) கூய = சொல்லிய, நூற்றெட்டு, ஆம் = ஆன, உபநிடம் = உபநிடதங்கள், விட்டுணுகோவில் = விஷ்ணுஸ்தலங்களாம், மேய = அங்கேவிளங்கிய, ஓர் = ஒப்பற்ற, பரமே = பிரமமே, வியாபகப்பொருள் = விஷ்ணுவாம், விரிப்பின் = சொல்லுமிடத்து, ஆயிரத்தெட்டு, ஆம் = ஆன, உபநிடதம், சிவாலயங்கள், ஏயும் = அங்கு விளங்குகின்ற, ஓர் பொருள் = ஓரேபொருளாகிய, பிரமம், மங்கள உருவினது (ஏ) = சிவசொரூபம், (ஏ - அசை)

(போ-ரை) சொல்லிய நூற்றெட்டான வுப நிடதங்கள் விஷ்ணு ஸ்தலங்களாம், அங்கே விளங்கிய ஒப்பற்ற பிர்மமே விஷ்ணுவாம். சொல்லுமிடத்து ஆயிரத்தெட்டான வுபநிடதம் சிவாலயங்கள். அங்கு விளங்குகின்ற ஓரே பொருளாகிய பிரமம் சிவசொரூபமாம்.

கலி விருத்தம்.

மொழிமன தவித்தை செயன் முற்றுமற நூலின்
வழிநிகழும் விக்கிரக மன்னியுயர் சான்றோய்ச்
செழியபல பூசனை செயப்புவனி தாமே
எழில்கொள்பரன் முத்தியிவ ணென்று திகழ்கின்றான் (௩௬௫)

(ப - ரை) (க) மொழி = வாக்கு, மனது = மனம், அவித்தை = அஞ்ஞானம், செயல் முற்றும் அற = செய்கை யென்பன முழுமையும் நீங்க, நூலின்வழி = சாஸ்திரத்தின் கிரமப்படி, நிகழும் =

அமைந்துள்ள, விக்கிரகம் = விக்கிரகத்தில், மன்னி = நிலைத்து, உயர்சான்றாய் = மேலான சாக்ஷியாய், (௩) செழிய பல பூசனை செயப் புவனி தாமே = உலகத்தார் சிறப்பான அனேகம் பூசைகளைத் தாங்களே செய்ய, (௨) எழில்கொள் = மேன்மையுள்ள, பரன் = ஈசன், முத்தி = முத்தியானது, இவண் என்று = இவ்விதந் தானெனக் குறிப்பினாலறிவித்து, (௫) திகழ்கின்றான் = விளங்குகின்றான்.

(போ - ரை) வாக்கு மனம் அஞ்ஞானம் செய்கை யென்பன முழுமையும் நீங்கச் சாஸ்திரத்தின் கிரமப்படி யமைந்துள்ள விக்கிரகத்தில் நிலைத்து, மேலான சாக்ஷியாய் மேன்மையுள்ள ஈசன், முத்தியானது இவ்விதந் தானெனக் குறிப்பினாலறிவித்து, உலகத்தார் சிறப்பான அனேகம் பூசைகளைத் தாங்களே செய்ய, விளங்குகின்றான்.

மயித்திரி கருணைநன் மகிழ்வு பேட்சையாம்
இயற்பொலி பிரமவித்தீரி ரண்டு நீள்
செயற்படு கோபுரந் திகழ்சி வாலயம்
கயத்தினங் கியங்கள்சிற் கலைவி சாரமே (௩௪௪)

(ப - ரை) மயித்திரி = நல்லோரிடத்துச் சினேகத்தன்மை கருணை = துன்பமுறுவோரிடத்து இரக்கம், நல்மகிழ்வு = மேன்மையடைந்தவரைப் பார்த்து நல்ல சந்தோஷ முறுதல், உபேட்சை = தீயோரிடத்து விருப்பு வெறுப்பு இல்லாமை, ஆம் = என்பனவாகிய, இயல் = குணங்கள், பொலி = விளங்கும், பிரமவித்து, ஈரிரண்டு = நான்கு, நீள் செயல்படு = உயர்ந்த வேலைகளமைந்த, கோபுரம் திகழ் = கோபுரங்கள் சூழ்ந்த, சிவாலயம் = சிவாலயமாம், கயத்தின் = மாக்ஷிமையுள்ள, அங்கு = அவ்விடத்து, இயங்கள் = வாத்தியங்கள், சிற்கலை விசாரம் (ஏ) = ஞானசாஸ்திர விசாரமாம். (ஏ - அசை)

(மகிழ்வு = முதிதை)

(போ - ரை) நல்லோரிடத்துச் சினேகத்தன்மை, துன்பமுறுவோரிடத்து இரக்கம், மேன்மையடைந்தவரைப் பார்த்து நல்ல சந்தோஷ முறுதல், தீயோரிடத்து விருப்பு வெறுப்பில்லாமை யென்பனவாகிய குணங்கள் விளங்கும் பிரமவித்து, நான்கு உயர்ந்த

வேலைகளமைந்த கோபுரங்கள் சூழ்சிவாலயமாம், மாக்ஷிமையுள்ள அவ்விடத்து வாத்தியங்கள் ஞானசாஸ்திர விசாரமாம்.

எழுசீர் விருத்தம்.

நான்குசா தனநாற் கோபுர மிதய
நண்ணுமா லயமுடன் மூன்றும்
வான்பிரா காரஞ் சிரவணந் துவச
மனனமென் பதுபலி பீடம்
தான்கிளர் நிதித்தி நந்தியின் சேவை
சமாதியீச் சுரதரி சனையாம்
தேன்புரை சாட்சாத் காரமே கருணைச்
செயலினு னந்தமுற் றிடலே (௬௪௫)

(ப - ரை) நான்கு சாதனம், நால் கோபுரம் = நான்கு கோபுரமாம், இதயம் = இருதயமானது, நண்ணும் ஆலயம் = அடையத்தக்க கோவிலாம், உடல் மூன்றும், வான்பிரகாரம் = பெரியபிரகாரமாம், சிரவணம், துவசம் = துஜஸ்தம்பமாம், மனனமென்பது, பலிபீடம் = பலிபீடமாம், (தான்) கிளர் = விளங்குகின்ற, நிதித்தி = நிதித்தியாசனம், நந்தியின், சேவை = சேவையாம், சமாதி, ஈச்சுர = ஈசுவர, தரிசனையாம், தேன், புரை = போலும், இனிய, சாட்சாத்காரமே, கருணைச் செயலின் = அருள் பெறலால், ஆனந்தம், உற்றிடல் (ஏ) = அடைதலாம்.

(தான் - சாரியை) (ஏ - அசை)

(போ - ரை) நான்கு சாதனம் நான்கு கோபுரமாம். இருதயமானது அடையத்தக்க கோயிலாம். உடல் மூன்றும் பெரியபிரகாரமாம், சிரவணம் துஜஸ்தம்பமாம், மனனமென்பது பலிபீடமாம். நிதித்தியாசனம் நந்தியின் சேவையாம், சமாதி ஈசுவர தரிசனையாம். தேன்போலுமினிய சாட்சாத்காரமே அருள்பெறலாம் ஆனந்தமடைதலாம்.

கலி விருத்தம்.

இதய மாலய மேபரந் தெய்வமாம்
கதவி ரண்டகங் கார மமதைதான்
பதிய ருச்சகன் பத்திநற் றக்கணை
திதிக ருப்புர தீபமெய்ஞ்ஞானமே (௬௪௬)

(ப - ரை) (க) இதயம் = இருதயம், ஆலயம் (ஏ) = கோவிலாம், பரம் = பரமாத்மா, தெய்வமாம், கதவு இரண்டு = இரண்டு கதவுகள், அகங்காரம் = நான் என்பதும், மமதை (தான்) = எனதென்பதும் ஆகும், பதி = குருவானவர், அருச்சகன் = அர்ச்சகராம், பத்தி = பக்தி, நல்தக்கணை = நல்ல தக்ஷணையாம், (ங) நிதி = அடைய வேண்டிய நிலைமையைத்தரும், கருப்புர தீபம் = கர்ப்பூர ஆராத்தியாம், (உ) மெய்ஞ்ஞானம் (ஏ), (ஏ-ஏ-அசைகள்) (தான்-சாரியை.)

(போ - ரை) இருதயம் கோவிலாம். பரமாத்மா தெய்வமாம். இரண்டுகதவுகள் நானென்பதும் எனதென்பதுமாகும். குருவானவர் அர்ச்சகராம், பக்தி நல்ல தக்ஷணையாம். மெய்ஞ்ஞானம் அடைய வேண்டிய நிலைமையைத்தரும் கர்ப்பூர ஆராத்தியாம்.

### கோச்சகக்கலிப்பா

தினமுயரு மிராசசபை தேவசபை நிருத்தசபை
கனகசபை சிற்சபைதான் காட்டுசிர வணமனனம்
தனிநிதித்தி யாசனமே சமாதிநற்சாட் சாத்காரம்
அனகதிரு வாசியகண் டாகார விருத்தியரோ. (ஙசஎ)

(ப - ரை) தினம் உயரும் = எப்போதும் உயர்வான, இராசசபை, தேவசபை, நிருத்தசபை = நிர்த்தனசபை, கனகசபை, சிற்சபை (தான்) = ஞானசபை யென்பன, காட்டு = அறிவிக்கிற, சிரவணம், மனனம், தனி = ஒப்பற்ற, நிதித்தியாசனம் (ஏ), சமாதி, நல் = நல்ல, சாட்சாத்காரம் = சாக்ஷாத்காரமாம், அனக திருவாசி = மாசற்ற திருவாசி, அகண்டாகார விருத்தி (அரோ) = அகண்டாகார விர்த்தியாம். (தான்-சாரியை) (ஏ, அரோ அசைகள்.)

(போ - ரை) எப்போதும் உயர்வான இராசசபை தேவசபை நிர்த்தனசபை கனகசபை ஞானசபை யென்பன அறிவிக்கிற சிரவணம், மனனம், ஒப்பற்ற நிதித்தியாசனம், சமாதி, நல்ல சாக்ஷாத்காரமாம். மாசற்ற திருவாசி அகண்டாகார விர்த்தியாம்.

### எழுசீர் விருத்தம்.

சிரவண முக்கி ராணமே மனனந்
திகழ்மடைப் பள்ளியா நிதித்தி
பரவுமா பூசைத் தலமது சமாதி
பயில்வுறு தரிச னைக் காலம்

அருமையாஞ் சாட்சாத் காரமே பள்ளி
யறையுயர் சகசநன் னிட்டை
விரவிய பள்ளி யெழுச்சிசிற் சுகமாம்
விருத்தியம் பிகைபரஞ் சுடரே. (௬௪௰)

(ப - ரை) சிரவணம், உக்கிராணம் (ஏ) = உக்ராணமாம், மனனம், திகழ் = விளங்குகின்ற, மடைப்பள்ளி ஆம், நிதித்தி = நிதித்தியாசனம், பரவும் = விசாலமான, மா = பெரிய, பூசைத்தலம் (அது) = பூசை செய்யுமிடமாம், சமாதி, பயில்வுறு = பழகுகின்ற, தரிசனைக் காலம் = தரிசனை செய்யுங் காலமாம், அருமை, ஆம் = ஆன, சாட்சாத்காரம் (ஏ), பள்ளி அறை = பள்ளியறையாம், உயர் = மேலாகிய, சகச நல்நிட்டை = நல்ல சகச நிஷ்டை, விரவிய பொருந்திய, பள்ளி யெழுச்சி = பள்ளியெழுச்சியாம், சித்சுகம் ஆம் விருத்தி = ஞான சுகானுபவம், அம்பிகை = சத்தியாம், பரம் = பிரமம், சிவம் (ஏ) = சிவமாம். (ஏ, ஏ, ஏ, அசைகள்) (அது — சொல்லுருபு) மடை — சமையல்.)

(பொ - ரை) சிரவணம் உக்ராணமாம். மனனம் விளங்குகின்ற மடைப்பள்ளியாம். நிதித்தியாசனம் விசாலமான பெரியபூசை செய்யுமிடமாம். சமாதி பழகுகின்ற தரிசனை செய்யுங்காலமாம். அருமையான சாட்சாத்காரம் பள்ளியறையாம். மேலாகிய நல்ல சகச நிஷ்டை, பொருந்திய பள்ளி யெழுச்சியாம். ஞான சுகானுபவம் சத்தியாம். பிரமம் சிவமாம்.

தெய்வமாஞ் சான்று யினருடல் கோவில்
சீரணோத் தாரணஞ் செயலாங்
கெய்பசி யகற்ற லுடைதரல் சுண்ண
மிழைப்பது தாகநீங் கிடநீர்
கைதரன் மெழுக்கா மலகிடல் புனலாற்
களிப்பகா னம்புரி வித்தல்
செய்பவ ரிவையத் தேவருள் பெற்றே
சேர்குவர் முத்திவிண் ணுலகே. (௬௪௧)

(ப - ரை) தெய்வம், ஆம் = ஆகிய, சான்று = சாக்ஷி, ஆயினர் உடல் = ஆனவருடைய தேகம், கோவில் = கோவிலாம், சீரணோத்தாரணம், செயல் = செய்தல், ஆங்கு அவ்விடத்து, எய்பசி = உற்ற

பசியை, அகற்றல் = தீர்த்தலாம், உடைதரல் சுண்ணம் இழைப்பது = சாந்து பூசுதல் வஸ்திரம் கொடுத்தலாம், தாகம் நீங்கிட நீர்கை தரல் மெழுக்கு ஆம் = மெழுகுதல் தாகம் நீங்கக்கையினால் ஜலம் தருதலாம், அலகிடல் = அலகிட்டுச் சுத்திசெய்தல், புனலால் களிப்ப = மகிழும்படி நீரினால், நானம் = ஸ்நானம், புரிவித்தல் = செய்வித்த லாம், செய்பவர் இவை = இத்திருப்பணியைச் செய்பவர், அத்தே அருள் = அந்தத் தெய்வத்தின் அருளை, பெற்று (ஏ), சேர்குவர் முத்திவிண் உலகு (ஏ) முக்தியென்னும் சொர்க்கத்தை யடைவார். (ஏ, ஏ அசைகள்) (தே = தெய்வம்) (எய் = இளைப்பைச் செய் கின்ற).

(போ - ரை) தெய்வமாகிய சாக்ஷியானவருடைய தேகம் கோவி லாம். சீரணோத்தாரணஞ் செய்தல் அவ்விடத்துற்ற பசியைத்தீர்த்த லாம், சாந்துபூசுதல் வஸ்திரங் கொடுத்தலாம். மெழுகுதல் தாகம் நீங்கக் கையினால் ஜலம் தருதலாம். அலகிட்டுச் சுத்திசெய்தல் மகிழும்படி நீரினால் ஸ்நானஞ் செய்வித்தலாம். இத்திருப்பணியைச் செய்பவர் அத்தெய்வத்தி னருளைப்பெற்று முக்தியென்னுஞ் சொர்க் கத்தை யடைவார்.

### கலி விருத்தம்.

தத்து வங்களைத் தள்ள லலகிடல்
ஒத்த சாந்தி யுணர்வு மெழுகலாம்
வைத்த நற்சுப வாசனை சேர்த்திடல்
கத்த மாலிகை கட்டி யணிதலே. (கூருo)

(ப - ரை) தத்துவங்களைத் தள்ளல் = இதுவல்ல இதுவல்ல வென்று நிச்சயித்தலால் தத்துவங்களைத் தள்ளுதல், அலகிடல் = அலகிட்டுச் சுத்திசெய்தலாம், ஒத்த = சமமான, சாந்தி உணர்வு = சாந்த விர்த்தி, மெழுகலாம், வைத்த = முத்திக்குரிய, நல்சுப வாசனை = நல்ல பழக்க வாசனைகளை, சேர்த்திடல், கத்தம் = சுகந்த மான, மாலிகை = மாலைகளை, கட்டி, அணிதல் (ஏ) = அணிதலாம். (ஏ, அசை) (கத்தம் = கந்தம் என்பதன் வலித்தல் விகாரம்.

(போ - ரை) இதுவல்ல இதுவல்ல வென்று நிச்சயித்தலால் தத்துவங்களைத் தள்ளுதல் அலகிட்டுச் சுத்திசெய்தலாம். சமமான சாந்த விர்த்தி மெழுகலாம். முத்திக்குரிய நல்லபழக்க வாசனை களைச் சேர்த்திடல் சுகந்தமான மாலைகளைக் கட்டியணிதலாம்.

அரிய நல்லியல் பாகிய வாசனைத்
திரவி யங்களைச் சிற்கன லோடுறப்
புரித தூபம் பொருட்குறி யாற்பர
சொருப சிந்தனை தோத்திர மாவதே. (ருக)

(ப - ரை) அரிய = அருமையான, நல் இயல்பு = நல்லசுபாவம். ஆகிய, வாசனைத் திரவியங்களை, சித்கனலோடு = ஞானமென்னும் அக்கினியோடு, உறப்புரிதல் = பொருந்தும்படி செய்தல், தூபம் = தூபமாம், பொருள் குறியால் = இலட்சியார்த்தத்தினுல், பர = பிரம, சொருபசிந்தனை = சொரூபத்தைச் சிந்தித்தல், தோத்திரம் ஆவது (ஏ) = ஸ்தோத்திரமாம். (ஏ, அசை).

(போ - ரை) அருமையான நல்ல சுபாவமாகிய வாசனைத் திரவி யங்களை ஞானமென்னும் அக்கினியோடு பொருந்தும்படி செய்தல் தூபமாம், இலட்சியார்த்தத்தினுல் பிரமசொரூபத்தைச் சிந்தித்தல் ஸ்தோத்திரமாம்.

தேவ தேவன் றிருமுன் னடியறு
தாவரத்தின்முக் கானனி தாழ்ந்திடல்
மூவு டற்கணு முற்றபி மானமற்
றோவி டப்பரத் தோடுமொன் றுதலே. (ருஉ)

(ப - ரை) தேவ தேவன் = மகாதேவனுகிய ஈசுவரனது, திரு முன் = சந்நிதியில், அடி அறுதாவரத்தின் = அடியற்றமரம் போல, முக்கால் = மூன்றுதரம், நனிதாழ்ந்திடல், நன்றாக வணங்கு தல், மூ உடற்கணும் = மூன்று சரீரத்தினிடத்தும், முற்று = மிகுந்திருக்கிற, அபிமானம் அற்று, ஓவிட = ஒழியும்படி, பரத் தோடும் = பிரம்மத்தோடும், ஒன்றுதல் (ஏ) = ஒரு தன்மையை அடைதலாம். (ஏ, அசை) (கணும் = கண்ணும் என்பதனிடைக் குறை)

(போ - ரை மகா தேவனுகிய ஈசுவரனது சந்நிதியில் அடியற்ற மரம்போல மூன்றுதரம் நன்றாக வணங்குதல் மூன்று சரீரத்தி னிடத்தும் மிகுந்திருக்கிற அபிமானமற்று ஒழியும்படி பிரமத் தோடும் ஒருதன்மையை யடைதலாம்.

### வெண்பா.

கோன்மிக்க மூவுடலைங் கோசம் விசாரித்தல்
தான்முக்கா லைந்து தரம்வலஞ்செய் — பான்மைத்தாம்
அவ்வுடலக் கோச மியானன்றென் றயல்காணல்
கவ்வியமூன் றைந்துவணக் கம் (௱௫௱)

(ப - ரை) கோல் = சூழ்தலில், மிக்க = ஒன்றுக்கொன்று வியாபகமாகிய, மூவுடல் = மூன்று தேகங்களையும், ஐங்கோசம் = ஐந்து கோசங்களையும், விசாரித்தல், (தான்) முக்கால் = முறையே மூன்றுதரமும், ஐந்து, தரம் = தரமும், வலம் செய் = பிரகாரங்களைப் பிரதக்ஷிணம் செய்கின்ற, பான்மைத்து ஆம் = தன்மையுடையதாம், அவ்வுடல் = அம்மூன்று சரீரத்தையும், அக்கோசம் = அந்த ஐந்து கோசத்தையும், யான் அன்று = நான் அல்ல, என்று, அயல் காணல் = வேறாக அறிதல் முறையே, கவ்விய = பற்றிய, மூன்று = மூன்றுதரம் நமஸ்கரித்தலும், ஐந்துவணக்கம் = ஐந்து தரம் நமஸ்கரித்தலும் ஆம். (கோலல் = சூழ்தல்) (கோல் = தொழிற் பெயர்) (தான் - சாரியை)

(பொ - ரை) சூழ்தலில் ஒன்றுக்கொன்று வியாபகமாகிய மூன்று தேகங்களையும் ஐந்து கோசங்களையும் விசாரித்தல் முறையே மூன்று தரமும் ஐந்து தரமும் பிரகாரங்களைப் பிரதக்ஷிணஞ் செய்கின்ற தன்மையுடையதாம், அம்மூன்று சரீரத்தையும் அந்த ஐந்து கோசத்தையும் நானல்லவென்று வேறாகவறிதல் முறையே பற்றிய மூன்றுதரம் நமஸ்கரித்தலும் ஐந்துதரம் நமஸ்கரித்தலுமாம்.

### கலி நிலைத்துறை.

சணத்தி னைம்பொறி யானல னென னல்பஞ் சாங்க
வணக்க மைம்புல னுடனகங் கரமதி மனமும்
தணக்கும் யானல னென்றலட் டாங்கவந் தனையாம்
மணக்கு மிச்செயல் சாந்தியாந் தயைதனை வளர்க்கும் (௱௫௪)

(ப - ரை) சணத்தின் = ஒரு நினைவினால், ஐம்பொறி = ஐந்து இந்திரியங்களும், யான் அலன் என்னல் = நான் அல்லவென்று நிச்சயித்தல், பஞ்சாங்க வணக்கம் = ஐந்து அங்கங்களால் நமஸ்கரித்தலாம், ஐம்புலன் = ஐந்து இந்திரியங்களோடு, அகங்கரம் = அகங்காரமும், மதி = புத்தியும், மனமும், தணக்கும் = நீங்கு

கின்ற, யான் அலன் = நான் அல்ல, என்றல் = என நிச்சயித்தல், அட்டாங்கவந்தனையாம் = எட்டு அங்கங்களால் நமஸ்கரித்தலாம், மணக்கும் இச்செயல் = விசேஷமாக விளங்கும் இச்செய்கை, சாந்தியாம் = உபசாந்தி என்கிற, தயைதனை = கிருபையை, வளர்க்கும் = விர்த்தியாக்கும். (ஐம்புலன் = சத்தம் முதலியவைகளுமாம்) (நீங்குகின்ற = அவற்றின் தன்மையை நீங்குகின்ற)

(போ - ரை) ஒரு நினைவினால் ஐந்து இந்திரியங்களும் நானல்லவென்று நிச்சயித்தல் ஐந்து அங்கங்களால் நமஸ்கரித்தலாம் ஐந்து இந்திரியங்களோடு அகங்காரமும் புத்தியும் மனமும், நீங்குகின்ற நானல்லவென நிச்சயித்தல் எட்டு அங்கங்களால் நமஸ்கரித்தலாம். விசேஷமாக விளங்குமிச் செய்கை உபசாந்தியென்கிற கிருபையை விர்த்தியாக்கும்.

## வஞ்சி விருத்தம்.

ஏந்த லோடுமி சைந்தவொன்—றுந்தி றந்தனி யஞ்சலி
சாந்த நீர்மைத யங்கிடல் — ஈந்த சீரபி டேகமே (ருடுடு)

(ப - ரை) ஏந்தலோடும் - தலைவணுகிய ஈசுவரனுடன், இசைந்த - கலந்த, ஒன்றும் திறம் = ஐக்கியத் தன்மை, தனி = ஒப்பற்ற, அஞ்சலி = கைகூப்பிக் கும்பிடலாம், சாந்த நீர்மை = சாந்த சுபாவம், தயங்கிடல் = விளங்குதல், ஈந்தசீர் = சிறப்பைத்தரும், அபிடேகம் (ஏ) = அபிஷேகமாம். (ஏ = அசை)

(போ - ரை) தலைவணுகிய ஈசுவரனுடன் கலந்த ஐக்கியத் தன்மை ஒப்பற்ற கைகூப்பிக் கும்பிடலாம். சாந்த சுபாவம் விளங்குதல் சிறப்பைத்தரும் அபிஷேகமாம்.

அடக்க மற்றைய ருங்குணம்—எடுத்தநற்செய லின்சொலும்
உடுக்கை பூடண மொண்மலர்—அடுத்தசந்தமு, மாமரோ. (ருடுகூ)

(ப - ரை) அடக்கம் = அடக்கமும், மற்றை அருங்குணம் = மற்ற அரிய சற்குணங்களும், எடுத்த = ஏற்றுக்கொண்ட, நற்செயல் = நல்ல செய்கைகளும், இன்சொலும் = இனிமையான சொல்களும், உடுக்கை = முறையே வஸ்திரமும், பூடணம் = ஆபரணங்களும், ஒண்மலர் = நல்லபுஷ்பங்களும், அடுத்த = பொருந்திய' சந்தமும் = சந்தனமும், ஆம் (அரோ) = ஆகும்.

(அரோ, அசை) (உடுக்கை = உடுப்பது)

(போ - ரை) அடக்கமும் மற்ற அரிய சற்குணங்களும் ஏற்றுக் கொண்ட நல்ல செய்கைகளும் இனிமையான சொற்களும் முறையே வஸ்திரமும் ஆபரணங்களும் நல்ல புஷ்பங்களும் பொருந்திய சந்தனமுமாகும்.

துன்னக்கமழ் தூபமி றைக்கே, யன்னத்தொடு மாவநி வேதிப்,
பென்னற்சுப வாசனை யேய, முன்னுற்றவை முற்றுமொர் தானே.
(௲ருஎ)

(ப - ரை) (உ) துன்னக்கமழ் தூபம் = வாசனை வீசுந் தூபம் பொருந்த, (க) இறைக்கு (ஏ) = ஈசுவரனுக்கு, (௲) அன்னத்தொடும் = சாதத்துடன், ஆய = இன்னும் வேண்டிய உணவுகளை, நிவேதிப்பு = சமர்ப்பித்தல், என்னல் = என்பது, சுபவாசனை = முக்திக்குரிய நல்ல வாசனைகள், ஏய = விளங்க, முன்னுற்றவை = எதிர்ப்பட்டவை, முற்றும் = முழுதும், ஓர்தானே = ஒன்றாகிய தானேயெனுந் திடமாம். (ஏ, அசை)

(போ - ரை) ஈசுவரனுக்கு வாசனை வீசுந் தூபம் பொருந்தச் சாதத்துடன் இன்னும் வேண்டிய உணவுகளைச் சமர்ப்பித்த லென்பது முக்திக்குரிய நல்ல வாசனைகள் விளங்க எதிர்ப்பட்டவை முழுதும் ஒன்றாகிய தானேயெனுந் திடமாம்.

வெண்பா.

நற்குணங்க ளோடறிவு நண்ண னறுந்தூபம்
அற்பமிலா தெல்லாந்தா னாவுணருஞ் - சற்சிந்தை
சாத நிவேதித்தல் சாந்தமனஞ் சிற்பரத் தொன்
றூதல் சசித்தீப மாம். (௲ருஅ)

(ப - ரை) நற்குணங்கள் ஓடு, அறிவு நண்ணல் = ஞானம் பொருந்துதல், நறுந்தூபம் = நல்லவாசனைத் தூபமாம், அற்பம் இலாது = சிறிதும் வேறில்லாமல், எல்லாம், தானா = தானாக, உணரும், சற்சிந்தை = நல்ல நினைவு, சாதம் = அன்னம் முதலியவை, நிவேதித்தல் = நிவேதனஞ்செய்தலாம், சாந்தமனம், சிற்பரத்து = ஞான சொரூபமாகிய பிரமத்தில், ஒன்றூதல் = ஐக்யமடைதல், சசித்தீபமாம் = கர்ப்பூரதீபமாம்.

(போ-ரை) நற்குணங்களோடு ஞானம் பொருந்துதல் நல்ல வாசனைத் தூபமாம். சிறிதும் வேறில்லாமல் எல்லாந் தானாக

வுணரும். நல்ல நினைவு அன்னம் முதலியவை நிவேதனஞ் செய்த லாம்; சாந்தமனம் ஞான சொரூபமாகிய பிரமத்தில் ஐக்கியமடை தல் கர்ப்பூர தீபமாம்.

மேனற் சசாதீய விர்த்தியாங் கண்டையொலி
தானுற்றிடவினிது சாத்தீக—ஞானக்
கருப்பூர தீபத்தாற் காண்பா ரசையா
இருப்பான்ம தெய்வத்தை யே. (௩௫௧)

(ப - ரை) (க) மேல் = மேலான, நல்சசா தீயவிருத்தி = நல்ல சசாதீய விருத்தி, ஆம் = ஆகிய, கண்டை ஒலி = மணியோசை, (தான்) உற்றிட இனிது = நன்றாக விளங்க, சாத்தீகஞான = சத்துவ குணத்திற் பொருந்திய ஞானமென்னும், கருப்பூர தீபத்தால், (௩) காண்பார் = தரிசிப்பார், (உ) அசையா = சங்கற்பமற்ற, இருப்பு = இருப்பு மாத்திரமாகிய, ஆன்ம தெய்வத்தை (ஏ) = ஆத்மாவெனும் தெய்வத்தை (சசாதீயவிர்த்தி = ஒரேவித தாரையான நினைவு) (இருப்பு = சத்தை) (கருப்பூரம் = கர்ப்பூரம்.)

(பொ - ரை) மேலான நல்ல சசாதீய விருத்தியாகிய மணியோசை நன்றாக விளங்கச் சத்துவகுணத்திற் பொருந்திய ஞானமென்னும் கருப்பூர தீபத்தால் சங்கற்பமற்ற இருப்புமாத்திரமாகிய ஆத்மா வெனும் தெய்வத்தைத் தரிசிப்பார்.

எண்சீர் விருத்தம்

இருதயத்துண் மகாவாக்கிய வனுசந்தா னம்பெற்
றியன்மனது பிறவிடய மறவேகாக் கிரமாய்
அரிதுநவ நவமாய பரஞான துரிய
வனுபவமுற் றுத்துரியா தீதநிலை பெறலே
பரிவுறுமா லயத்துட்கைம் மணியொலித்தல் செய்யப்
பராக்ககற்றிச் சாக்கிரதை யுடன்பலவாஞ் சுடரின்
உருவமொடு மொருமுடிவா கியசுடரி னேடும்
உறுதெய்வ தரிசனையா லுவகைபெறு மாறே. (௩௬௦)

(ப - ரை) இருதயத்துள் மகாவாக்கிய அனுசந்தானம், பெற்று இயல் = அடைந்துள்ள, மனது, பிறவிடயம் அற = அன்னிய விஷய சம்பந்த மில்லாமல், ஏகாக்கிரமாய் = ஒரேதன்மையாய், அரிது =

அருமையான, நவம் நவம் ஆய = புதிது புதிதாகிய, பரஞான = உயர்ந்த ஞானவடிவ, துரிய அநுபவம், உற்று = பெற்று, துரியாதீத, நிலைபெறல் (ஏ) = நிலையைப் பொருந்துதல், பரிவு = அன்பு, உறும் = மிகும், ஆலயத்துள், கைம்மணி ஒலித்தல் செய்ய = மணியடிக்கும் ஓசை விளங்க, பராக்கு அகற்றி = வெளிநோக்கமற்று, சாக்கிரதையுடன், பலவாம் = பலவிதமான, சுடரின் உருவமொடும் = தீபசொரூபங்களோடும், ஒருமுடிவாகிய சுடரினோடும் = முடிவிற் செய்யும் ஒரே தீபாராதனையுடன், உறு = மேலான, தெய்வதரிசனையால், உவகை பெறும் ஆறு (ஏ) = மகிழ்ச்சியடையும் விதமாம். (ஏ, ஏ, அசைகள்) (ஆறு = விதம்) (கைம்மணி = அடிக்குமணி.)

(போ - ரை) இருதயத்துள் மகாவாக்கியவநுசந்தானமடைந்துள்ள மனது அன்னியவிஷய சம்பந்தமில்லாமல் ஒரேதன்மையாய் அருமையான புதிது புதிதாகிய உயர்ந்த ஞானவடிவ துரியாநுபவம் பெற்றுத் துரியாதீத நிலையைப் பொருந்துதல், அன்புமிகும் ஆலயத்துள் மணியடிக்கும் ஓசை விளங்க வெளிநோக்கமற்றுச் சாக்கிரதையுடன் பலவிதமான தீபசொரூபங்களோடும் முடிவிற்செய்யும் ஒரே தீபாராதனையுடன் மேலான தெய்வ தரிசனையால் மகிழ்ச்சியடையும் விதமாம்.

### கலி நிலைத்துறை.

பிரம கண்டையிற் சத்திநா வசைந்திடிற் பிறிவின்
மருவு மோசைசவ் விகற்பநன் னிட்டையா மற்று
நரலு மவ்வசை வற்றிடி னொரேவகை நாதம்
நிருவி கற்பமா மஃதுமற் றதீதமெய்ந் நிலையே. (நகூக)

(ப - ரை) பிரமகண்டையில் = பிரமமெனும் மணியில், சத்திநா = சத்தியென்னும் நாவு, அசைந்திடில், பிறிவின் = ஆவிருத்தியாக, மருவும் = பொருந்துகின்ற ஓசை, சவ்விகற்ப நல் நிட்டையாம் = நல்ல சவிகற்ப நிஷ்டையாம், (மற்று) நரலும் = ஒலிக்கும், அவ் அசைவு, அற்றிடின் = அற்றால, ஒரேவகை, நாதம் = ஓசை விளங்குதல், நிருவிகற்பமாம் = நிர்விகற்ப நிஷ்டையாம், அஃதும் அற்று = அவ்வோசையு மடங்கி, அதீதம் = அதீதமாதல், மெய் நிலை = உண்மைநிலையாம். (ஏ) (மற்று, ஏ, அசைகள்) (ஆவிர்த்தி = ஒரேசெயல் திரும்பத் திரும்ப வருதல்.)

(போ - ரை) பிரமமெனும் மணியில் சத்தியென்னும் நாவு அசைந்திடில் ஆவிருத்தியாகப் பொருந்துகின்ற ஓசை நல்லசவிகற்ப நிஷ்டையாம். ஒலிக்கும் அவ்வசைவற்றால் ஒரேவகை ஓசை விளங்குதல் நிர்விகற்ப நிஷ்டையாம். அவ்வோசையுமடங்கிய தீதமாதல் உண்மை நிலையாம்.

கலி விருத்தம்.

சாத்து வீக விருத்திச் சசிதனில்
வாய்த்த ஞானக் கினியின் வடிவமாய்
மீத்து லங்கும் வியோமாக் கினிப்பர
மாத்து மாவா வதுசுடர்த் தீபமே. (ருசஉ)

(ப - ரை) சாத்துவீக விருத்தி = சத்துவ வீர்த்தியென்னும், சசி = கர்ப்பூரம், தனில் = தன்னிடத்தில், வாய்த்த = சேர்ந்த, ஞான = ஞானமென்கிற, அக்கினியின் வடிவம், ஆய் = ஆகி, மீ = பின்பு மேலாக, துலங்கும் = விளங்கும், வியோம அக்கினி = வியோமாக்கினியான, பரமாத்துமா ஆவது, சுடர் = பிரகாசமுள்ள, தீபம் (ஏ) = கர்ப்பூர தீபாராதனையாம் (ஏ-அசை) (ஆத்துமா = ஆத்மா) (வியோம அக்கினி = ஆகாயத்திலிருக்கும் கண்ணுக்குத் தோன்றாத அக்கினியணுக்கள்) (தனில் = தன்னில் என்பதனிடைக்குறை.)

(போ - ரை) சத்துவ வீர்த்தியென்னும் கர்ப்பூரம் தன்னிடத்திற் சேர்ந்த ஞானமென்கிற அக்கினியின் வடிவமாகிப் பின்பு மேலாக விளங்கும் வியோமாக்கினியான பரமாத்மாவாவது பிரகாசமுள்ள கருப்பூர தீபாராதனையாம்.

ஆசாரியனாகிய பூசகனால், ஏசாயவ வித்தையெனுந் திரையை
வீசாவொழிவித் துயர்ஞானமெனும், தேசார்பராதே வதைசேவை
[செயே. (ருசரு)

(ப - ரை) ஆசாரியன் = குரு, ஆகிய, பூசகனால் = பூஜிப்பவனால், ஏசு ஆய = குற்றமான, அவித்தை = அஞ்ஞானம், எனும் திரையை, வீசா ஒழிவித்து = நன்றாகநீக்கி, உயர் ஞானம் எனும் = உயர்ந்த ஞானமென்கிற, தேசு ஆர் = பிரகாசமிகுந்த, பராதேவதை

= பிரமமென்னும் தெய்வத்தின், சேவை செய் (ஏ) = சேவையைச் செய்க. (ஏ, அசை) (செயே = செய்யே என்பதன் இடைக் குறை) (வீசா = வீசி.)

(போ - ரை) குருவாகிய பூஜிப்பவனால் குற்றமான அஞ்ஞானமென்னும் திரையை நன்றாக நீக்கி உயர்ந்த ஞானமென்கிற பிரகாசம் மிகுந்த பிரமமென்னுந் தெய்வத்தின் சேவையைச் செய்க.

அறுசீர் விருத்தம்.

சத்துவவெண் பயன்விளங்கச் சுட்டுமதி நீரொழியத்
தகர்த்தல் செய்சீ
வத்துவத்தேங்காய்ச் சாந்த விருத்திகளா கியகனிகள்
மறையா ராய்ச்சி
யுத்தியொடு தன்பிரஜை வெள்ளிலைபா கும்போத
வொளித் தீபத்தோ
டத்தனெனு மர்ச்சகனாற் பரதெய்வத் தேற்பிப்போ
ரடைவர் வீடே (௩௯௫)

(ப - ரை) சத்துவ = சாத்துவீக விருத்தியென்னும், வெண் பயன் = வெண்மையான பருப்பு, விளங்க = விளங்கவும், சுட்டு மதி = சுட்டும் புத்தியென்கிற, நீர், ஒழிய = ஒழியவும், தகர்த்தல் செய் = உடைக்கின்ற, சீவத்துவ = ஜீவத்தன்மையாகிய, தேங்காய் = தேங்காயும், சாந்த விருத்திகளாகிய, கனிகள் = பழங்களும், மறை ஆராய்ச்சி = வேதத்தின் விசாரணை, யுத்தியொடு, தன் பிரஜை = தனது சிரத்தையான உணர்வென்னும், வெள்ளிலை பாகும் = வெற்றிலையுடன் பாக்கும், போதஒளி = ஞானப்பிரகாசமென்கிற, தீபத் தோடு = தீபாராதனையுடன், அத்தன் எனும் = குருவென்னும் அர்ச்சகனால், பர = பிரமமாகிய, தெய்வத்து = தெய்வத்தினிடத்தில், ஏற்பிப்போர் = சமர்ப்பிப்போர், அடைவர் வீடு (ஏ) முத்தியடைவார். (ஏ) அசை.

(போ - ரை) சாத்துவீக விருத்தியென்னும் வெண்மையான பருப்பு விளங்கவும் சுட்டும் புத்தியென்கிற நீர் ஒழியவும் உடைக்கின்ற ஜீவத்தன்மையாகிய தேங்காயும் சாந்தவிருத்திகளாகிய பழங்களும் வேதத்தின் விசாரணை யுத்தியொடு தனது சிரத்தையான

உணர்வென்னும் வெற்றிலையுடன் பாக்கும் ஞானப் பிரகாசமெனும் கிற தீபாராதனையுடன் குருவென்னும் அர்ச்சகனால் பிரமமாகிய தெய் வத்தினிடத்திற் சமர்ப்பிப்போர் முத்தியடைவார்.

## கலி விருத்தம்.

அகங்கர வோடுடைப் பளவும் பத்தியா
நிகழ்ந்திடு குடுமியை நிறீஇத்த கர்த்தலும்
இகந்துள விலாங்கலி யினைப்ப ரம்பரர்க்
குகந்தளிப் பார்க்கிடை யூறொன் றில்லையே (௩௯௫)

(ப-ரை) அகங்கர = அகங்காரமென்னும், ஓடு, உடைப்பள வும் = உடைக்குமட்டும், பத்தியா = பக்தியாக, நிகழ்ந்திடு = விளங்குகின்ற, குடுமியை, நிறீஇ = நிறுத்தி, தகர்த்தலும் = உடைத்தவுடன், இகந்து = அதையும் நீக்கி, உள = உள்ளமாகிய, இலாங்கலியினை = தேங்காயை, பரம்பரற்கு = பிரமமாகிய ஈசுவர னுக்கு, உகந்து = விரும்பி, அளிப்பார்க்கு = அர்ப்பணஞ் செய் வோர்க்கு, இடையூறு ஒன்று = ஒருவிக்கினமும், இல்லை (ஏ) (ஏ), அசை)

(பொ-ரை) அகங்கார மென்னும் ஓடு உடைக்குமட்டும் பக்தி யாக விளங்குகின்ற குடுமியை நிறுத்தி உடைத்தவுடன் அதையும் நீக்கி உள்ளமாகிய தேங்காயைப் பிரமமாகிய ஈசுவரனுக்கு விரும்பி அர்ப்பணஞ் சேய்வோர்க்கு ஒருவிக்கினமுமில்லை.

## கலி நிலைத்துறை.

சச்சி தானந்த மயம்பர மென்றசிந் தனைமுப்
பச்சி தழ்த்தவில் வங்கொடு சிவார்ச்சனை பண்ணல்
நிச்ச பூரண சச்சிதா னந்தமா நினைத்த
விச்சை யைந்திதழ் வில்வவர்ச் சனையென விரும்பே (௩௯௬)

(ப-ரை) சச்சிதானந்த, மயம் பரம்=சொரூபம் பிரமம், என்ற சிந்தனை, முப்பச்சிதழ்த்த = மூன்று பச்சையான இதழ்களை யுடைய, வில்வம், கொடு=கொண்டு, சிவார்ச்சனை, பண்ணல் = செய்தலாம், நிச்ச = நித்திய, பூரண = பரிபூரண, சச்சிதானந்தம், ஆ = ஆக, நினைத்த = பிரமத்தைச் சிந்தித்த, விச்சை=வித்தை,

ஐந்திதழ், வில்வ = வில்வங்களால், அர்ச்சனே = சிவத்தை அர்ச்சித்தலாம், எனவிரும்பு (ஏ) = என்று அதனே விரும்பிச் செய். (ஏ, அசை) (வித்தை = ஞானம்).

(பொ - ரை) சச்சிதானந்த சொரூபம் பிரமம் என்ற சிந்தனே மூன்று பச்சையான இதழ்களேயுடைய வில்வங்கொண்டு சிவார்ச்சனே செய்தலாம். நித்திய பரிபூரண சச்சிதானந்தமாகப் பிரமத்தைச் சிந்தித்த வித்தை, ஐந்திதழ் வில்வங்களால் சிவத்தையர்ச்சித்தலாம் என்று அதனே விரும்பிச்செய்.

### கலி விருத்தம்.

அகிஞ்சை யிந்திரி யங்க ளடக்கலும்
மிகுந்தி ரங்கன் மிகைபொறுத் தன்மனம்
தகைந்து நிற்ற றவமுந் தியானமும்
உகந்த சத்திய மும்மட்ட புட்பமே. (௬௬௭)

(ப - ரை) அகிஞ்சை = அகிம்சையும், இந்திரியங்கள் அடக்கலும், மிகுந்து இரங்கல் = மிகுந்த இரக்கமும், மிகைபொறுத்தல் = பிறர்செய் குற்றங்களேப் பொறுத்தலும், மனம் = மனதை, தகைந்து = அடக்கி, நிற்றல் = நிலேத்தலும், தவமும், தியானமும், உகந்த = உயர்ந்த, சத்தியமும், அட்டபுட்பம் (ஏ) = அஷ்ட புஷ்பமாம். (ஏ, அசை). (அகிம்சை = ஒருயிருக்கும் இம்சை செய்யாமை) (அஷ்டம்—எட்டு).

(பொ - ரை) அகிம்சையும் இந்திரியங்களடக்கலும் மிகுந்த இரக்கமும் பிறர்செய் குற்றங்களேப் பொறுத்தலும் மனதையடக்கி நிலேத்தலும் தவமும் தியானமும் உயர்ந்த சத்தியமும் அஷ்ட புஷ்பமாம்.

### வெண்பா.

இதயமனேக் கண்ணிழிவாம் வாதனேமா சியாவும்
புதையா விவேகத்தாற் போக்கித்—துதைசலமாம்
வாசனேச்சாந் தான்மெழுகி மன்னகண்ட விர்த்தியெனும்
ஆசனமிட் டார்சிவங்கண் டார். (௬௬௮)

(ப - ரை) இதய = இருதயமென்னும், மனேக்கண் = வீட்டில், இழிவு ஆம் = தீமையான, வாதனே = வாசனே யென்கிற, மாசு யாவும் = எல்லாமாசுகளேயும், புதையா = மறையாத, விவேகத்

தால், போக்கி, துதை = பொருந்திய, நலம் ஆம் = நன்மையாகிய, வாசனை = வாசனையென்னும், சாந்தால் = சாணத்தால், மெழுகி, மண் = திடமாக, அகண்ட விர்த்தியெனும், ஆசனம், இட்டார் = இட்டவர், சிவம்கண்டார் = அங்கே சிவத்தைத் தரிசிப்பார்.

(போ - ரை) இருதயமென்னும் வீட்டில் தீமையான வாசனை யென்கிற எல்லா மாசுகளையும் மறையாத விவேகத்தாற் போக்கிப் பொருந்திய நன்மையாகிய வாசனையென்னுஞ் சாணத்தால் மெழுகித் திடமாக அகண்ட விர்த்தியென்னும் ஆசனமிட்டவர் அங்கே சிவத்தைத் தரிசிப்பார்.

சிவமென்னல் சித்தே சிவோகஞ் சிவநீ
சிவமெல்லா மென்றுணர்நாற் சீராற்—சிவமல்லா
தொன்றுந் தெரியா வொருநிலையே மெய்வீடு
சென்ற சிவராத் திரி. (௩௬௯)

(ப - ரை) சிவம், என்னல்=என்பது, சித்தே=ஞானவடிவமே, சிவோகம்=அந்தச்சிவம் நான், சிவம்நீ = நீயும், அந்தச் சிவமாம், சிவம் எல்லாம் = எல்லாம் சிவமே, என்று, உணர் = நிச்சயித்து உணர்கின்ற, நால்சீரால் = நான்கு வகையால், சிவம் அல்லாது = சிவத்தைத்தவிர, ஒன்றும் = வேறொன்றையும், தெரியா = அறியாத, ஒரு = ஒப்பற்ற, நிலையே, மெய்வீடு = சத்தியமாகிய முக்தியில், சென்ற அடைந்திருத்தலாகிய, சிவராத்திரி = சிவராத்திரியாம்,

(போ - ரை) சிவமென்பது ஞானவடிவமே, அந்தச்சிவம் நான், நீயும் அந்தச் சிவமாம், எல்லாம் சிவமே யென்று நிச்சயித்துணர்கின்ற நான்கு வகையால் சிவத்தைத் தவிர வேறொன்றுமறியாத ஒப்பற்ற நிலையே சத்தியமாகிய முக்தியில் அடைந்திருத்தலாகிய சிவராத்திரியாம்.

பந்தவிர விற்கன்மம் பத்தியோ கம்போதச்
சந்தப் பயிற்சிநாற் சாமத்தும் — முந்துபரம்
ஆகுஞ் சிவம்பொருளென் றூய்தலா ராதனையால்
ஏகும்பந் தம்பகல்வீ டே (௩௭௦)

(ப - ரை) பந்த = பந்தமென்னும், இரவில், கன்மம் = கர்மம்' பத்தி, யோகம், போத = ஞானமென்கிற இவற்றின், சந்தப்

பயிற்சி = நல்ல பழக்கமெனும், நால் சாமத்தும் = நான்கு சாமத்திலும், முந்துபரம் = முதன்மையான பிரமம், ஆகும் சிவம் = ஆகிய சிவமே, பொருள் என்று, ஆய்தல் = அறிதல் என்னும், ஆராதனையால் = பூசனையினால், ஏகும்பந்தம் = பந்தமென்கிற இராத்திரி கழியும், பகல்வீடு (ஏ) = பகலாவது மோக்ஷமாம். (ஏ, அசை)

(போ - ரை) பந்தமென்னும் இரவில் கர்மம் பத்தி யோகம் ஞானமென்கிற இவற்றின், நல்ல பழக்கமெனும் நான்கு சாமத்திலும் முதன்மையான பிரமமாகிய சிவமே பொருளென்று அறிதலென்னும் பூசனையினால் பந்தமென்கிற இராத்திரிகழியும் பகலாவது மோக்ஷமாம்.

அறுசீர் விருத்தம்.

பதினோ ராமிந் தியமனமே பகரு மேகா தசித்திதியாம்
எதிரா மயற்சங் கற்பமொன்று மிசையா திருத்த லுபவாசம்
திதமா நிதித்தி யாசமரி சேவை மறதி யறறுயினீப்
பிதன்மேன் ஞானத் துவா தசியி லெலாந்தா ஞதல் பாரணையே
(௱௭௧)

(ப - ரை) பதினோராம் இந்தியம் = பதினோராவது இந்திரியமாகிய, மனமே, பகரும் = சொல்லப்படுகிற, ஏகாதசித்திதியாம், எதிர் ஆம் = எதிர்ப்படுகிற, அயல் = அன்னியமான, சங்கற்பம் ஒன்றும், இசையாது = பொருந்தாமல், இருத்தல், உபவாசம் = உபவாசமாம், திதமாம் = நிலையாகிய, நிதித்தியாசம் = நிதித்தியாசனம், அரிசேவை = ஸ்ரீ அரியைச் சேவித்தலாம், மறதி அறல் = அதனை மறவாதிருத்தல், துயில் நீப்பு = நித்திரையொழித்தலாம், இதன்மேல், ஞான = ஞானமாகிய, துவாதசியில், எலாம் = எல்லாம், தானதல் = தானக அறிதல், பாரணை (ஏ) பாரணை செய்தலாம். (ஏ, அசை)

(போ - ரை) பதினோராவது இந்திரியமாகிய மனமே சொல்லப்படுகிற ஏகாதசித்திதியாம், எதிர்ப்படுகிற அன்னியமான சங்கற்பமொன்றும் பொருந்தாமலிருத்தல் உபவாசமாம், நிலையாகிய நிதித்தியாசனம் ஸ்ரீ அரியைச் சேவித்தலாம், அதனை மறவாதிருத்தல் நித்திரை யொழித்தலாம், இதன்மேல் ஞானமாகிய துவாதசியில் எல்லாம் தானகவறிதல் பாரணை செய்தலாம்.

### வெண்பா.

புரமூன்றும் யானெனுந்தீப் புந்திதெறன் முக்காற்
சிரமூன்றக் குட்டிக்கொள் செய்கை—வருமூ
வவத்தையினெஞ் சோங்காதான் மாவிலொடுக் குஞ்சீர்
தவத்திரிதோப் புக்கரணந் தான் (ருஎஉ)

(ப - ரை) புரம் மூன்றும் = சரீரம் மூன்றையும், யானெனும் = நான் என்று நிச்சயித்திருக்கிற, தீப்புந்தி = தீயபுத்தியை, தெறல் = அடக்குதல், முக்கால் = மூன்றுதரம், சிரம் ஊன்ற = முன் தலையில் அழுந்த, குட்டிக்கொள் = குட்டிக்கொள்ளும், செய்கை = செய்கையாம், வரும்மூ அவத்தையில் = வருகின்ற மூன்று அவஸ்தையிலும், நெஞ்சு ஓங்காது = மனது பொருந்தி எழாமல், ஆன் மாவில் ஒடுக்கும், சீர் = சிறந்தசெயல், தவ = தவமாகிய, திரி = மூன்று, தோப்புக் கரணம் (தான்) = தோப்புக்கரணமாம். (தான், அசை.

(பொ - ரை) சரீரம் மூன்றையும் நானென்று நிச்சயித்திருக்கிற தீயபுத்தியை யடக்குதல், முன்றுதரம் முன்தலையி லழுந்தக் குட்டிக் கொள்ளுஞ் செய்கையாம். வருகின்ற மூன்றவஸ்தையிலும் மனது பொருந்தியெழாமல் ஆன்மாவிலொடுக்குஞ் சிறந்தசெயல், தவமாகிய மூன்று தோப்புக்கரணமாம்.

### கலி விருத்தம்.

சீவத்துவ மூலக்கன றீரற்குள சத்வ
மாவிர்த்தி யெனுந்தூர்வையின் மன்னர்ச் சனைமாயைத்
தீவிக்கின மோவும்வகை சித்தாய கணேசற்
கேவிர்த்தி யவன்மாயை யிலீலைக்கிறை யன்றோ. (ருஎரு)

(ப - ரை) (க) சீவத்துவ = ஜீவத்தன்மையாகிய, மூலக்கனல் = மூல உஷ்ணம், தீரற்கு = தணிய, உள = அவுஷதமாயிருக்கும், சத்வ மாவிர்த்தி = நல்ல சாந்தவிர்த்தி, எனும் தூர்வையின் = என்னும் அருகினால், மன் அர்ச்சனை = மிகுந்த அர்ச்சனையை, மாயை = மாயை யென்கிற, தீ = தீய, விக்கினம், ஓவும் வகை = ஒழியும்படி, சித்து ஆய = ஞானசொரூபமான ஆத்மா வென்னும், கணேசற்கே = கணபதிக்கே, வர்த்தி = பலதரமும் செய்க, அவன் = அவ்வாத்மா வாகிய கணேசன், மாயை இலீலைக்கு = மாயா சத்தியென்னும் இலீலைக்கு, இறை அன்றோ = தலைவன் அல்லவா.

(போ - ரை) ஜீவத்தன்மையாகிய மூலஉஷ்ணந்தணிய அவுஷத மாயிருக்கும் நல்ல சாந்தவிர்த்தி யென்னும் அறுகினால் மிகுந்த அர்ச் சனையை மாயை யென்கிற நீயவிக்கின மொழியும்படி ஞானசொரூப மான ஆத்மாவென்னுங் கணபதிக்கே பலதரமுஞ் செய்க. அவ்வாத் மாவாகிய கணேசன் மாயாசத்தியென்னும் இலீலைக்குத் தலைவ னல்லவா.

எண்சீர் விருத்தம்.

அந்தக்கரணத் தெங்கக்காய்சூ ழாசைப்பிணிநார் வீசிப்பொய்மூ
கந்துக்கமதா முக்கண்மதிநீர் கடநானெனுமோ டொடுசத்துவநற்
சிந்தைப்பயன்மே யதுபைமறியத் தேகங்காணற் றெறல்பின்றிகழ் [வெண்
சந்தத்ததுசிற் பரமொன்றுதலோ தனிமாமுகனுக் கினிதர்ப்பணமே.
(௱௪௪)

(ப - ரை) அந்தக்கரண = அந்தக்கரண மென்கிற, தெங்கக்காய் = தேங்காயை, சூழ் = சூழ்ந்திருக்கின்ற, ஆசை = ஆசையென்னும், பிணிநார் = கட்டாகிய நார்களை, வீசி = கழித்துவிட்டு, பொய் = அசத்து, மூகம் = சடம், துக்கம் (அது) ஆம் = துக்கமாகிய, முக் கண் = மூன்று கண்களும், மதிநீர் = புத்தியென்கிற ஜலமும், கடம் = சரீரம், நான் எனும், ஓடு = ஓடும், சத்துவ நற்சிந்தை = நல்ல சத்துவ விர்த்தியென்கிற, பயன்மேயது = பருப்பும் உடையது, பைமறிய = பையின் உட்பக்கம் வெளிப்படத் திருப்புதல்போல, தேகம் காணல் = சரீரத்தின் உட்பக்கம் வெளிப்பட மனிதனால் பார்த்தல், தெறல் = அந்தக்கரண மென்னுந் தேங்காயை உடைத்தலாம், பின் = பின்பு திகழ் = விளங்குகின்ற, வெண்சந்தத்தது = சத்துவ விர்த்தி, சித்பரம் = ஞானசொரூபமாகிய பிரமத்தில், ஒன்றுதல் (ஓ) = கலத்தல், தனி = ஒப்பற்ற, மாமுகனுக்கு = யானைமுகத்தையுடைய விநாயகருக்கு, இனிது = உடைத்தபின் விளங்கும் வெண்மையான பருப்பானது நன்றாக, அர்ப்பணம் (ஏ) = சமர்ப்பித்தலாம்.

(ஓ, ஏ, அசைகள்)

(வெண் சந்தத்தது = வெண்மைக் குணத்தினதாய சத்துவ விர்த்தி, வெண்ணிறத்தையுடைய பருப்பு.)

(போ - ரை) அந்தக்கரணமென்கிற தேங்காயைச் சூழ்ந்திருக் கின்ற ஆசையென்னுங் கட்டாகிய நார்களைக் கழித்துவிட்டு

அசத்துச் சடம் துக்கமாகிய மூன்று கண்களும், புத்தியென்கிற ஜலமும், சரீரம் நானென்னும் ஓடும், நல்ல சத்துவ விர்த்தியென்கிற பருப்பும் உடையது, பையின் உட்பக்கம் வெளிப்படத் திருப்புதல் போலச் சரீரத்தின் உட்பக்கம் வெளிப்பட மனதினுல் பார்த்தல், அந்தக்கரணமென்னுந் தேங்காயை யுடைத்தலாம். பின்பு விளங்குகின்ற சத்துவ விர்த்தி, ஞானசொரூபமாகிய பிரமத்திற் கலத்தல் ஒப்பற்ற யானைமுகத்தையுடைய விநாயகருக்கு உடைத்தபின் விளங்கும் வெண்மையான பருப்பானது நன்ருகச் சமர்ப்பித்தலாம்.

வெண்பா.

தெங்கக்காய் சீவன் செறிநார் சகத்தேயோ
டங்கம் பருப்புளம தன்சக்கை—சங்கற்பம்
பான்ஞான நெய்யே பரமுறைதல் பின்சகசம்
தான்ஞான் றுருகலதீ தம் (௩௭௫)

(ப - ரை) தெங்கக்காய், சீவன் = ஜீவனும், செறி நார் = அதைச் சூழ்ந்துகொண்டிருக்கும் நார்களின் கூட்டம், சகத்து (ஏ)=உலகவாசனையாம்; ஓடு, அங்கம்=சரீமாம், பருப்பு = உள்ளிருக்கும் வெண்மையான பருப்பு, உளம்=உள்ளமாம், அதன் சக்கை, சங்கற்பம் = சங்கற்பமாம், பால், ஞானம் = ஞானமாம், நெய் (ஏ), பரம் = மேலான ஆத்மாவாம், உறைதல் பின் = பின் நெய் உறைதல், சகசம் = சகசானுபவமாம், தான் (ஞான்று) = அது, உருகல் = பின் உருகின நெய்யாதல், அதீதம் = அதீத நிலையாம். (ஞான்று = இடைச்சொல்) (ஏ, அசை)

(பொ - ரை) தேங்காய் ஜீவனும், அதைச் சூழ்ந்துகொண்டிருக்கும் நார்களின் கூட்டம் உலகவாசனையாம். ஓடுசரீரமாம். உள்ளிருக்கும் வெண்மையான பருப்பு உள்ளமாம். அதன் சக்கை சங்கற்பமாம், பால்ஞானமாம். நெய்மேலான ஆத்மாவாம். பின் நெய் உறைதல் சகசானுபவமாம். அது பின் உருகின நெய்யாதல் அதீத நிலையாம்.

அறுசீர் விருத்தம்.

ஒன்று மோர்கில னெனும்பசு மலத்தையாங்
குணருஞா னத்தியால்
நன்று நீற்றிடச் சச்சிதா னந்தமா
நானலான் மற்றென்றும்

இன்றெ னத்திகழ் துரியவெண் ணீற்றையா
னேகபூ ரண னென்னத்
துன்ற மேவுமுத் தூளனத் தவர்சிவ
சொரூபமா யினர்தாமே (௩௭௫)

(ப - ரை) ஒன்றும் ஓர்கிலன் = ஒன்றையும் அறியேன், எனும், பசுமலத்தை = ஜீவனது அஞ்ஞானமாகிய பசுவின் சாணத்தை, ஆங்கு = அப்படியே, உணரும் = அறிகிற, ஞானத்தீயால் = ஞானமென்னும் அக்கினியினால், நன்று நீற்றிட = நன்றாகத்தகிக்க, சச்சிதானந்தம், ஆம் = ஆன, நான் அலால் = என்னைத் தவிர, மற்றொன்றும், இன்று எனத்திகழ் = இல்லையென விளங்குகின்ற, துரியவெள் நீற்றை = துரியமென்னும் விபூதியை, யான் ஏகபூரணன் = நான் ஒன்றாகிய பரிபூரண சொரூபி, என்ன, துன்ற மேவும் = பொருந்த விளங்குகின்ற, உத்தூளனத்தவர் = உத்தூளனமாகப் பூசிக்கொள்வோர், சிவசொரூபமாயினர் தாமே = தாமே சிவ சொரூபமாயினர். (உத்தூளனம் = நீரில் குழைக்காமல் விபூதியைப் பூசுதல்)

(பசுமலம் = சீவனது அஞ்ஞானம், பசுவின்சாணம்)

(பொ - ரை) ஒன்றையும் அறியேனெனும் சீவனது அஞ்ஞானமாகிய பசுவின் சாணத்தை அப்படியே அறிகிற ஞானமென்னும் அக்கினியினால் நன்றாகத் தகிக்கச் சச்சிதானந்தமான என்னைத் தவிர மற்றொன்று மில்லையென விளங்குகின்ற துரிய மென்னும் விபூதியை நான் ஒன்றாகிய பரிபூரண சொரூபியென்னப் பொருந்த விளங்குகின்ற உத்தூளனமாகப் பூசிக்கொள்வோர் தாமே சிவ சொரூபமாயினர்.

### கலி விருத்தம்.

சச்சி தானந்த தற்பரம் யானெனும்
விச்சை சத்துவ மெய்த்திரி புண்டரம்
நிச்சம் யானே நிருவிகா ரன்னெனும்
சொச்ச விர்த்தியுத் தூளன மாவதே (௩௭௭)

(ப - ரை) சச்சிதானந்த, தற்பரம் = பிரமம், யான் = நானே, எனும் விச்சை = என்னும் வித்தை, சத்துவ = சாத்துவீக விர்த்தியென்னும், மெய் = உண்மையுள்ள திரிபுண்டரம் = மூன்று

இரேகையாக விபூதி தரித்தலாம், நிச்சம் = நித்தியமாக, யானே நிருவிகாரன் = நான் நிர்விகார சொரூபியே, எனும், சொச்சவிர்த்தி = விளக்கமான விர்த்தி, உத்தூளனம், ஆவது (ஏ) = ஆம். (ஏ, அசை)

(போ - ரை) சச்சிதானந்தப் பிரமம் நானேயெனும் வித்தை சாத்துவிக விர்த்தியென்னு உண்மையுள்ள மூன்று இரேகையாக விபூதி தரித்தலாம், நித்தியமாக நான் நிர்விகார சொரூபியேயெனும் விளக்கமான விர்த்தி உத்தூளனமாம்.

எழுசீர் விருத்தம்.

சச்சிதா னந்த மாந்தனை யொழிந்து
சற்றுமொன் றிலையென வுணரும்
விச்சையா முருத்தி ராக்கநின் றுதித்து
விளங்கும்யான் நீயெனுங் கருணை
மெய்ச்சலப் பிழம்பாம் யாமெலா மென்னும்
விருத்தியின் றொடர்ந்ததா ரையதாம்
நச்சுகண் டிகைபூண் பவர்சிவ மெனவெண்
ணான்குப நிடதமும் நவிலும் (ருளஎவு)

(ப - ரை) சச்சிதானந்தம், ஆம்தனை = ஆகியதன்னை, ஒழிந்து = அல்லாமல், சற்றும் = சிறிதும், ஒன்று இலை = அன்னிய மொன்றுமில்லை, என உணரும், விச்சையாம் = வித்தையான, உருத்திர அக்கம் நின்று = உருத்திரனது கண்களிலிருந்து, உதித்து = உண்டாகி, விளங்கும், யான் நீ எனும் = நான் நீயே யென்னும், கருணை = கிருபையென்கிற, மெய் = உண்மையாகிய, சலப்பிழம்பு ஆம் = நீர்க்கட்டியான, யாம் எலாம் என்னும் = நானே எல்லாமென்னும், விருத்தியின் தொடர்ந்த தாரை (அது), ஆம் = ஆன, நச்சு = விரும்பப்படுகின்ற, கண்டிகை = உருத்தி ராக்ஷமணி மாலையை, பூண்பவர் = தரிப்பவர், சிவம் என = சிவ மாவரென்று, எண்நான்கு = முப்பத்திரண்டு, உபநிடதமும், நவி லும் = சொல்லுகின்றன. (அது = சொல்லுருபு)

(போ - ரை) சச்சிதானந்தமாகிய தன்னையல்லாமற் சிறிதுமன் னியமொன்று மில்லையென வுணரும் வித்தையான உருத்திரனது கண்களிலிருந்துண்டாகி விளங்கும் நான் நீயே யென்னும் கிருபை

யென்கிற உண்மையாகிய நீர்க்கட்டியான நானே எல்லாமென்னும் விருத்தியின் தொடர்ந்த தாரையான விரும்பப்படுகின்ற உருத்திராக்ஷமணி மாலையைத் தரிப்பவர் சிவமாவரென்று முப்பத்திரண்டு உபநிடதமும் சொல்லுகின்றன.

வெண்பா.

கண்மணிவெண் ணீறுமுடி காவியுடை யைந்தெழுத்தும்
உண்மையுணர்ந் தேற்றல் உலகிற்கு—வண்மையதா
மெய்க்கருணை சாத்திகம் வேறின்மை ஞானமயம்
ஐக்கநிலைப் போதகமு மாம். (ருஎகூ)

(ப - ரை) கண்மணி = உருத்திராக்ஷ மணியும், வெண்ணீறு = திருநீறும், முடி = முண்டிதமும், காவி, உடை = வஸ்திரமும், ஐந்தெழுத்தும் = பஞ்சாக்ஷரமும், உண்மை உணர்ந்து, ஏற்றல் = தரித்துக்கொள்ளல், உலகிற்கு = முறையே உயர்ந்தோருக்கு, வண்மை (அது) ஆம் = திடமாகிய, மெய்க்கருணை = உண்மையான இரக்கமும், சாத்தீகம் = சத்துவகுணமும், வேறு இன்மை = அன்னிய சங்கற்ப மில்லாமையும், ஞானமயம் = ஞானவடிவமா யிருத்தலும், ஐக்கநிலை = ஏகத்தன்மையாகிய நிலையின், போதகமும் = உபதேசமும் ஆம் = ஆகும். (அது = சொல்லுருபு.)

(போ - ரை) உருத்திராக்ஷ மணியும், திருநீறும், முண்டிதமும், காவிவஸ்திரமும், பஞ்சாக்ஷரமும், உண்மையுணர்ந்து தரித்துக்கொள்ளல் முறையே உயர்ந்தோருக்குத் திடமாகிய உண்மையான இரக்கமும், சத்துவகுணமும், அன்னிய சங்கற்ப மில்லாமையும், ஞானவடிவமாயிருத்தலும், ஏகத்தன்மையாகிய நிலையின்உபதேசமுமாகும்.

கலி நிலைத்துறை.

திருச்சிற் றம்பல மெனும்பதத் தின்பொருள் சிறந்த
சுருக்க மாஞ்சபை யெனல்மெய்யா யெளிதினிற் றோன்றும்
கருத்திற் சோதிநீ யுணரெனல் பயன்முதல் கடையும்
பொருத்த லிவ்வியல் ஒருங்குமப் பயனெனப் புகறல். (ருஅ0)

(ப - ரை) திருச்சிற்றம்பலம் எனும் பதத்தின், பொருள் = பொழிப்புரை, சிறந்த சுருக்கமாம் சபை, எனல் = எனலாம், மெய்யாய் எளிதினில் தோன்றும் கருத்தில் சோதி, நீஉணர், எனல், பயன் =

கருத்துரையாம், முதல்கடையும்=முதலிலும் முடிவிலும், பொருத்தல்=திருச்சிற்றம்பலம் மென்பதைச் சேர்த்தல், இவ்இயல் ஒருங்கும் = இவ்வதிகாரம் முழுதும், அப்பயன் = அக்கருத்துரையே, எனப்புகறல்=என்று தெரிவித்தலாம். (திரு=சிறந்த, சிறு=சிறிய, அம்பலம்=சபை.)

(போ-ரை) திருச்சிற்றம் பலமெனும் பதத்தின் பொழிப்புரை சிறந்த சுருக்கமாம் சபையெனலாம், மெய்யாய் எளிதினிற்றோன்றும் கருத்தில் சோதி நீயுணரெனல் கருத்துரையாம். முதலிலும் முடிவிலும் திருச்சிற்றம்பல மென்பதைச் சேர்த்தால், இவ்வதிகாரம் முழுதும் அக்கருத்துரையே யென்று தெரிவித்தலாம்.

வெண்பா.

அவித்தைப் பிசாசமுடன் ஆவரண மென்னப்
பவித்தவிடம் விட்சேபப் பன்மைக்—கவர்ப்பிணியைச்
சச்சிதா னந்தசிவந் தானென்னு மஞ்செழுத்தின்
நிச்சற் றியானத்தால் நீக்கு. (௩௮௧)

(ப-ரை) அவித்தை = அஞ்ஞானமென்கிற, பிசாசமுடன் = பிசாசையும், ஆவரணம், என்னப்பவித்த = எனப்பட்ட, விடம் = விஷத்தையும், விட்சேப=விக்ஷேபமென்னும், பன்மை=பல, கவர் = பிரிவான, பிணியை=வியாதியையும், சச்சிதானந்த சிவம் தான் என்னும் அஞ்செழுத்தின், நிச்சல் தியானத்தால்=சந்ததத்தியானத்தினல், நீக்கு = நீக்குக. (பவித்த = பட்ட, தோன்றிய.)

(போ-ரை) அஞ்ஞான மென்கின்ற பிசாசையும், ஆவரண மெனப்பட்ட விஷத்தையும், விக்ஷேபமெனும் பலபிரிவான வியாதியையும், சச்சிதானந்த சிவம் தான் என்னும் அஞ்செழுத்தின் சந்ததத்தியானத்தினல் நீக்குக.

ஏகம் அசியைக் கியமாம் பிரணவந்தான்
சோகமது நான்தத் துவமாகும்—யோக
சிவத்தின் பொருட்டாகச் சீவன் வணக்கம்
தவத்தக் கரமஞ்சு தான். (௩௮௨)

(ப-ரை) ஏகம்=ஒன்றே என்பதைக் குறிக்கின்ற, அசி=தத்துவம் என்பதின் அது நீயாக இருக்கிறுய் எனும் அர்த்தத்தில் அசி

என்கிற பதத்தின் பொருளே, ஐக்கியம் ஆம் = ஏகத்தன்மையைக்காட்டும், பிரணவந்தான் = விசுவனையும் விராட்டையும் உணர்த்தும் அகரமும், தைசசனையும் இரணிய கர்ப்பனையும் உணர்த்தும் உகரமும், பிராஞ்ஞனையும் ஈசுவரனையும் உணர்த்தும் மகரமும், முறையே இவற்றை விளக்கும் துரியமென்னும் கூடஸ்தரும் பிரமமும், அமாத்திரை என்னும் சுத்தஞான சொருபமும் ஒன்றேயென்பதை யுணர்த்தும் ஓங்காரமாம், சோகம் அது நான் = சோகம் என்பதன் அர்த்தமாகிய அது நான் என்பதே, தத்துவம் ஆகும் = அது நீ என்பதற்கும் பொருளாம், யோக = உயர்வான, சிவத்தின் பொருட்டாக = சிவத்திற்காக, சீவன் வணக்கம் = ஜீவனது வணக்கமே, தவத்து = தவத்துக்குரிய, அக்கரம் அஞ்சுதான் = பஞ்சாக்ஷரம் ஆம், (சோகம் = அதுநான், சிவோகம் என்பதுபோல)

(சிவாய = சிவத்திற்குச் சீவனது, நம = வணக்கம்)

(போ - ரை) ஒன்றே என்பதைக் குறிக்கின்ற தத்துவமசியென்பதின் அது நீயாக இருக்கிறாய் எனும் அர்த்தத்தில் அசியென்கிற பதத்தின் பொருளே ஏகத்தன்மையைக் காட்டும், விசுவனையும் விராட்டையு முணர்த்தும் அகரமும், தைசசனையும் இரணியகர்ப்பனையு முணர்த்தும் உகரமும், பிராஞ்ஞனையும் ஈசுவரனையு முணர்த்தும் மகரமும், முறையே இவற்றை விளக்கும் துரியமென்னும் கூடஸ்தரும் பிரமமும், அமாத்திரை யென்னும் சுத்தஞானசொரூபமும் ஒன்றே யென்பதை யுணர்த்தும் ஓங்காரமாம். சோகம் என்பதன் அர்த்தமாகிய அது நான் என்பதே அது நீ என்பதற்கும் பொருளாம். உயர்வான சிவத்திற்காக ஜீவனது வணக்கமே தவத்துக்குரிய பஞ்சாக்ஷரமாம்.

### எண்சீர் விருத்தம்

திகழ்யாமே பரமெனுந்து லத்தி யானஞ்
செய்தான்ம ஞானமுழைஞ் சுறின்ம டக்காற்
றகையாது பரமேயா மெனுஞ்சூக் கத்தால்
அமைபரஞா னக்கனல்வா தனைப்ப ணிக்குப்
பகைதானே பரம்யாம்யாம் பரமென் றெண்ணப்
பட்டவிரு தலைமணிச்சாந் தாற்றி யைக்க
சுகஞான விளங்காற்றூற் சிந்தை வெப்பந்
தொலைந்துபரம் யாவுமென மாயை போமே (௬௫)

(ப - ரை) திகழ் = விளங்குகின்ற, யாமே = நானே, பரம் = பிரமம், எனும், தூல = ஸ்தூலமான, தியானம் செய்து, ஆன்ம ஞான = ஆத்மஞானமென்னும், முழைஞ்சு = குகையில், உறின் பொருந்தினுல், மட = அஞ்ஞானமென்கிற, காற்று, அசையாது = அடியாது, பரமே = பிரமமே, யாம் = நான், எனும், சூக்கத்தால் = சூட்சுமத் தியானத்தால், அமை = அடைந்த, பரஞானக்கனல் = மேலான ஞானுக்கினி, வாதனை = வாசனையாகிய, பணிக்கு, பகை (தான்) (ஏ) = பகையாம், பரம்யாம் = பிரமமேயான், யாம் பரம் = நானே பிரமம், என்று எண்ணப்பட்ட, இருதலை, மணி = மாணிக்கமென்கிற, சாந்தாற்றி = விசிறியின், ஐக்கசுக ஞான = ஐக்கிய ஞானசுக மென்னும், இளங்காற்றால், சிந்தை வெப்பம், தொலைந்து = நீங்கி, பரம்யாவும் = எல்லாம் பிரமம், என = என்று நிச்சயித்தலால், மாயை, போம் = நிவர்த்தியாம்.

(தான் = சாரியை) ஏ, ஏ, அசைகள்)

(போ - ரை) விளங்குகின்ற நானே பிரமமென்னும் ஸ்தூல மான தியானஞ் செய்து ஆத்மஞானமென்னுங் குகையிற் பொருந்தி ஞல் அஞ்ஞானமென்கிற காற்றடியாது பிரமமே நானெனும் சூட்சுமத்தியானத்தாலடைந்த மேலான ஞானுக்கினி, வாசனையாகிய பணிக்குப் பகையாம். பிரமமே நான் நானே பிரமம் என்றெண்ணப் பட்ட இருதலை மாணிக்கமென்கிற விசிறியின் ஐக்கிய ஞானசுக மென்னும் இளங்காற்றால், சிந்தை வெப்பம் நீங்கி, எல்லாம் பிரம மென்று நிச்சயித்தலால், மாயை நிவர்த்தியாம்.

## வெண்பா.

சச்சிதா னந்தத் தகைமையோங் காரத்திற்
செச்சைசோர் சத்தகரஞ் சித்துகரம் — அச்சுரு
ஆனந்தமாம்மகரம் அர்த்தமான் மாவாய
தானென் றுணரத் தகும். (௬௮௪)

(ப- ரை) சச்சிதானந்த = சச்சிதானந்தமென்னும், தகைமை = பெருமை பொருந்திய, ஓங்காரத்தில், செச்சைசோர் = உதயசந்திரன் போன்ற, சத்து, 'அகரம் = அகரமாம், சித்து, உகரம் = உகரமாம், அச்சு உரு = பயமற்ற, ஆனந்தம், ஆம்மகரம் = மகரமாம், அர்த் தம் = அமாத்திரையெனும் அர்த்தம், ஆன்மா ஆய = ஆத்மா வான, தான் = பிரமம், என்று, உணரத்தகும் = அறியவேண்டும்.

(போ - ரை) சச்சிதானந்தமென்னும் பெருமை பொருந்திய ஓங்காரத்தில் உதயசந்திரன் போன்ற சத்து அகரமாம், சித்து உகரமாம், பயமற்ற ஆனந்தம் மகரமாம், அமாத்திரையெனும் அர்த்தம் ஆத்மாவான பிரமமென்றறியவேண்டும்.

தண்மலர்ப்பொற் றாளைத் தரிப்பித்தல் மாணவனுக்
குண்மலத்தைப் போக்கல் உவன்சிரமேல் — வண்மைக்
கரமமைத்தல் மெய்ஞ்ஞானக் கண்ணை யளிக்கும்
வரமெனத்தான் சாற்றும் மறை (௲௫)

(ப - ரை) தண் = குளிர்ந்த, மலர்ப்பொன் = பொன்மலர் போன்ற, தாளை = தனது பாதத்தை, தரிப்பித்தல் = சிரசில் சூட்டுதல், மாணவனுக்கு = சீடனுக்கு, உள்மலத்தை = உள்ளத்தி லுள்ள அஞ்ஞானத்தை, போக்கல் = தீர்த்தலாம், உவன் = நடு நிலைமை உடைய அவனது, சிரமேல் = சிரசின்மேல், வண்மை = கொடைத் தன்மையுடைய, கரம் = தனது கையை, அமைத்தல் = வைத்தல், மெய்ஞ்ஞானக் கண்ணை, அளிக்கும் = கொடுக்கும், வரம் = அனுக்கிரகமாம், என தான், சாற்றும் மறை = வேதஞ் சொல்லும் (தான் - சாரியை)

(போ - ரை) குளிர்ந்த பொன்மலர் போன்ற தனது பாதத்தைச் சிரசிற் சூட்டுதல் சீடனுக்கு உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தைத் தீர்த்தலாம், நடுநிலைமையுடைய அவனது சிரசின்மேல் கொடைத் தன்மையுடைய தனது கையைவைத்தல் மெய்ஞ்ஞானக் கண்ணைக் கொடுக்கும் அனுக்கிரகமாமென வேதம் சொல்லும்.

கலி விருத்தம்.

தக்கணத் திற்சிவ போகந் தந்துவாய்
மைக்குரு கிருபையா லவித்தை மாயையற்
றுக்கவைக் கும்வலி தீட்சை யுண்மையாம்
புக்கவொன் றென்றினுட் புகல் வணக்கமே. (௲௬)

(ப - ரை) தக்கணத்தில் = அந்தக்ஷணத்தில், சிவபோகம் = சிவானுபவத்தை, தந்து, வாய்மைக்குரு = உண்மையுள்ள குருவானவர், கிருபையால், அவித்தை = அஞ்ஞானமும், மாயை = மாயையும், அற்று = நீங்கி, உக்க = ஒழிய, வைக்கும்வலி = செய்யும்

௩௬

வல்லமை, தீட்சை உண்மையாம் = மெய்ம்மையான தீக்ஷையாம், புக்கல் ஒன்று ஒன்றினில் = ஒன்று மற்றொன்றில் அடங்குதல், புகல்வணக்கம் (ஏ) = சொல்லப்படும் வணக்கமாம் (ஏ, அசை) (உக்க=உகஎன்பதன் விரித்தல்விகாரம்) (உக=விழ) (புக்கல்=புகல் என்பதன் விரித்தல் விகாரம்.)

(பொ - ரை) அக்கணத்தில் சிவானுபவத்தைத்தந்து உண்மையுள்ள குருவானவர் கிருபையால் அஞ்ஞானமும் மாயையும் நீங்கியொழியச்செய்யும் வல்லமை மெய்ம்மையான தீக்ஷையாம். ஒன்று மற்றொன்றிலடங்குதல் சொல்லப்படும் வணக்கமாம்.

வெண்பா.

மொழிதூலஞ் சூக்கமுடன் மூலவுடல் நீப்பில்
ஒழியாத கூடத்த ரோடும்—அழியாப்
பிரமமது மொன்றென்று பேசாது பேசும்
கரமுறுசின் முத்திரையின் காட்டு. (ருஅஎ)

(ப - ரை) மொழி = சொல்லப்படுகிற, தூலம் = ஸ்தூலசரீரம், சூக்கம் = சூக்ஷ்மசரீரம், மூலவுடல் = காரண சரீரம் என்னும் இம்மூன்றையும், நீப்பில் = நான் அல்லவென நிச்சயித்துணர்ந்தால், ஒழியாத = விடாது விளங்கும், கூடத்தரோடும் = கூடஸ்தரும், அழியா = முடிவில்லாத, பிரமம் (அது) உம்=பிரமமும், ஒன்று என்று = ஒன்றுமென, பேசாது பேசும் = சொல்லாமற் குறிப்பினாற் சொல்வதாகிய, கரம் உறு = கையிற் பொருந்திய, சின்முத்திரையின், காட்டு = குறியாம். (காட்டு — காட்டுதல்) (அது— சொல்லுருபு.)

(பொ - ரை) சொல்லப்படுகிற ஸ்தூலசரீரம் சூக்ஷ்மசரீரம் காரண சரீரமென்னும் இம்மூன்றையும் நானல்லவென நிச்சயித் துணர்ந்தால், விடாது விளங்கும் கூடஸ்தரும் முடிவில்லாத பிரமமும் ஒன்றுமெனச் சொல்லாமற் குறிப்பினாற் சொல்வதாகிய கையிற்பொருந்திய சின்முத்திரையின் குறியாம்.

கலி விருத்தம்.

இந்தக் கைகூப் பிருவரு மொன்றெனல்
வந்தித் தாரை மறுத்துவ ந்தித்திடல்
உந்தத் தேரின் ஒருவர்க் கொருவர்தாம்
சொந்தத் தெய்வத் துவவுப தேசமே. (ருஅஅ)

(ப - ரை) இந்த = இவ்விதமான, கைகூப்பு = கும்பிடல், இருவரும் ஒன்று, எனல் = என்பதாம், வந்தித்தாரை = வணங்கினவரை, மறுத்து = திரும்ப, வந்தித்திடல் = வணங்குதல், உந்த = உயர்வாக, தேரின் = ஆராயுமிடத்து, ஒருவருக்கொருவர் (தாம்) = ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும், சொந்த = உரிமையான, தெய்வத்துவ = தெய்வத் தன்மையின், உபதேசமே, (தாம்-சாரியை.)

(போ - ரை) இவ்விதமான கும்பிடல் இருவரும் ஒன்றென்பதாம், வணங்கினவரைத் திரும்ப வணங்குதல் உயர்வாக ஆராயுமிடத்து ஒருவர்க்கொருவர் செய்துகொள்ளும் உரிமையான தெய்வத்தன்மையின் உபதேசமே.

அறுசீர்விருத்தம்.

தேகோக புத்திவிடல் அன்னமொழித் ததுசாந்த
சித்தந் தண்ணீர்
ஏகாவா றெதிர்ப்படுவ சருகுகள்யா னெனுஞ்சூக்க
வெண்ணம் மூலம்
வாகார்சற் குணங்கனிசங் கற்பம்வளி யிவற்றினியல்
மதித்தோர்ந் தேவே
றூகாது வியாபகத்தாற் றானுக்காண் பதுபுசித்த
லவற்றைத் தானே (ரு௪௧)

(ப - ரை) தேகோக = தேகம் நான் என்னும், புத்திவிடல் = புத்தியை விடுதல், அன்னம் = அன்னத்தை, ஒழித்தது = உண்ணுமல் விட்டதாம், சாந்த சித்தம், தண்ணீர் தண்ணீராம், ஏகா ஆறு = நீங்காத விதம், எதிர்ப்படுவ = எதிர்தோன்றுவன, சருகுகள் = சருகுகளாம், யான் எனும் = நான் என்னும், சூக்க எண்ணம் = சூக்ஷ்மமான நினைவு, மூலம் = கிழங்காம், வாகு ஆர் = அழகுபொருந்திய, சற்குணம், கனி = பழமாம், சங்கற்பம், வளி = காற்றும், இவற்றின், இயல் = தன்மைகளை, மதித்து ஓர்ந்து (ஏ) = நிச்சயித்தறிந்து, வேறுகாது, வியாபகத்தால் = வியாபகத் தன்மையினுல், தானு = ஞானசொரூபியான தானுக, காண்பது = உணர்வது, புசித்தல் அவற்றைத்தான் (ஏ) = தான் அவைகளைப் புசித்தலாம். (ஏ, ஏ, அசைகள்)

(போ - ரை) தேகம் நானென்னும் புத்தியை விடுதல் அன்னத்தையுண்ணுமல் விட்டதாம், சாந்தசித்தம் தண்ணீராம், நீங்காத

விதம் எதிர்தோன்றுவன சருகுகளாம், நானென்னும் சூக்ஷ்மமான நினைவு கிழங்காம், அழகு பெருபொருந்திய சற்குணம் பழமாம், சங்கற்பம் காற்றும், இவற்றின் தன்மைகளை நிச்சயித்தறிந்து வேறாகாது வியாபகத்தன்மையினால் ஞான சொரூபியான தானாக வுணர்வது தான் அவைகளைப் புசித்தலாம்.

எழுசீர் விருத்தம்,

தனைப்பிறர் கோபித் திடலிக ழுதலாங்
  தனிவெயில் காற்றினிற் சகிப்பும்
இனிப்பென வலிய வரும்விட யப்பே
  ரிமத்தில்வேட் பறலெனுங் கமிப்பும்
அனைத்துளார் தன்னைத் துதித்தலாம் மழையில்
  அகந்தைமே வாமையாம் பொறையும்
வனப்புறக் கொடுசிற் பரனையே நாடும்
  மாதவ மனம்முனி வரனே. (௩கூ0)

(ப - ரை) தனை தன்னை, பிறர் = மற்றவர், கோபித்திடல், இகழுதல், ஆம் = ஆகிய, தனி = ஒப்பற்ற, வெயில் காற்றினில் = வெயிலிலும் காற்றிலும், சகிப்பும் = சகித்திருத்தலும், இனிப்பு என = இனிமையாக, வலியவரும் = தானேவருகின்ற, விடய = விஷயமென்கிற, பேர் இமத்தில் = பெரும்பனியில், வேட்பு அறல் = ஆசை நீங்கல், எனும், கமிப்பும் = பொறுமையும், அனைத்துளார் = யாவரும், தன்னைத்துதித்தல், ஆம் = ஆகிய, மழையில், அகந்தை = அகங்காரம், மேவாமையாம் = அடையாதிருத்தல் என்னும், பொறையும் = அடக்கமும், வனப்பு உறக்கொடு = அழகாகக்கொண்டு, சிற்பரனையே = ஞான வடிவமாகிய பிரமத்தையே, நாடும் = சிந்திக்கின்ற, மாதவம் = மகாதவத்தையுடைய, மனம், முனிவரன் (ஏ) = முனிசிரேஷ்டனும். (ஏ- அசை.)

(பொ - ரை) தன்னைமற்றவர் கோபித்திடல் இகழுதலாகிய ஒப்பற்ற வெயிலிலுங் காற்றிலுஞ் சகித்திருத்தலும், இனிமையாகத் தானே வருகின்ற விஷயமென்கிற பெரும் பனியில் ஆசை நீங்கலெனும் பொறுமையும், யாவருந்தன்னைத் துதித்தலாகிய மழையில் அகங்காரமடையா திருத்தலென்னும் அடக்கமும், அழகாகக்

கொண்டு ஞானவடிவமாகிய பிரமத்தையே சிந்திக்கின்றமகாதவத்தை யுடைய மனம், முனிசிரேஷ்டனும்.

### வெண்பா.

ஐங்கோசச் சான்றா யமர்தல்பஞ் சாக்கினியுள்
தங்காநிற் கின்ற தவமாகும்—சிங்காத
சாந்த விருத்தி தழைந்துமதன் சான்றாதல்
போந்தசலத் துட்டவஞ்செய் பொற்பு. (௩கூக)

(ப - ரை) ஐங்கோச = ஐந்து கோசங்களுக்கும், சான்றாய் = சாக்ஷியாய், அமர்தல் = இருத்தல், பஞ்சாக்கினியுள் = ஐந்து அக்கினியின் மத்தியில், தங்கா நிற்கின்ற = வசிக்கும், தவமாகும், சிங்காத = குறையாத, சாந்தவிருத்தி, தழைந்தும் = மிகுந்து விளங்கியும், அதன் சான்று ஆதல் = அதற்குச் சாக்ஷியாய் இருத்தல், போந்த = தகுந்த, சலத்துள் = சலத்துள்ளிருந்து, தவம், செய் = செய்கின்ற, பொற்பு = வல்லமையாம்.

(போ - ரை) ஐந்து கோசங்களுக்கும் சாக்ஷியாயிருத்தல் ஐந்து அக்கினியின் மத்தியில் வசிக்குந்தவமாகும், குறையாத சாந்த விருத்தி மிகுந்து விளங்கியும் அதற்குச் சாக்ஷியாயிருத்தல் தகுந்த சலத்துள்ளிருந்து தவஞ்செய்கின்ற வல்லமையாம்.

தன்னை யுணர்தற் றவத்திற் கிடமுண்ணோக்
கென்னுங் குகைசாட்சி யின்விருத்தி—மன்னுகிரி
ஆசனஞ்சாந் தத்தருப்பை யாம்விரா கப்புலித்தோல்
தூசில் உபரதிமான் றோல் (௩கூஉ)

(ப - ரை) தன்னை, உணர்தல் = அறிதல் என்னும், தவத்திற்கு, இடம் = இடமாவது, உள்நோக்கு = அந்தர் முகம், என்னும், குகை = குகையும், சாட்சியின், விருத்தி = விர்த்தியாகிய, மன்னுகிரி = நிலைத்தமலையுமாம், ஆசனம் = ஆசனமாவன, சாந்தத்தருப்பை = சாந்தம் என்னும் தர்ப்பையும், ஆம்விராக = திடமாகிய வைராக்கியமென்னும், புலித்தோல் = புலித்தோலும், தூசு இல் = குற்றமற்ற, உபரதி = உபரதி யென்னும், மான்தோல் = மான்தோலுமாம்.

(போ - ரை) தன்னையறித லென்னும் தவத்திற்கிடமாவது அந்தர் முகமென்னுங் குகையும், சாக்ஷியின் விர்த்தியாகிய நிலைத்த

மலையுமாம், ஆசனமாவன :—சாந்தமென்னுந் தர்ப்பையும், திடமாகிய வைராக்கிய மென்னும் புலித்தோலும், குற்றமற்ற உபரதியென்னும் மான் தோலுமாம்.

கலி நிலைத்துறை.

யான சங்கனு தலினென தென்பதொன் றிலையென்
றேந யந்துணர் தெளிவொரு காலினின் றிடல்மேல்
தான லாதுவே றின்மைதேர்ந் தியானெனுந் தகைபோய்
மோன மாம்நிலை சிரசில்நின் றிடுந்தவ முதிர்வே. (௩௯௩)

(ப - ரை) யான்=நான், அசங்கன் ஆதலின் = ஒன்றிலும் சம்பந்த மில்லாதவன் ஆதலால், எனதென்பது, ஒன்றிலை=ஒன்றுமில்லை என்று (ஏ); நயந்து உணர்=நன்றாக அறிகிற, தெளிவு=தெளிவே, ஒருகாலில் நின்றிடல்=ஒருகாலில் நின்று தவம் செய்தலாம், மேல் =இன்னும், தானலாது=தன்னைத்தவிர, வேறு இன்மை = அன்னியமில்லாத தன்மையை, தேர்ந்து, யான் எனும் தகைபோய் = நான்என்னும் சங்கற்பமற்று, மோனமாம் நிலை = மௌனமாகிய நிலையே, சிரசில் நின்றிடும்=தலையால் நிற்கும், தவம்முதிர்வு (ஏ)= பெருந்தவமாம். (ஏ-அசை)

(போ - ரை) நான் ஒன்றிலும் சம்மந்தமில்லாதவனுதலால் எனதென்பதொன்றுமில்லையென்று நன்றாக அறிகிற தெளிவே ஒருகாலில் நின்று தவஞ்செய்தலாம். இன்னும் தன்னைத்தவிர அன்னியமில்லாத் தன்மையைத் தேர்ந்து நானென்னும் சங்கற்பமற்றுமௌனமாகிய நிலையே தலையால் நிற்கும் பெருந்தவமாம்.

வெண்பா.

எண்ணம் மறதி யிருபுருவத் தூடுகரி
வண்ணச் சுழுமுனையின் வாய்ப்பவுளக்—கண்ணை
நிறுவிற் பராங்கார நெற்றிக்கு நேரே
எறிசிற் சுயஞ்சுட ரொன் றே. (௩௯௪)

(ப - ரை) எண்ணம் மறதி=நினைப்பு மறப்பு என்கிற, இருபுருவத்து ஊடு=இரண்டு புருவங்களின் மத்தியில், கரிவண்ண=சாக்ஷிவடிவமாகிய, சுழுமுனையில், வாய்ப்ப=பொருந்த, உளக்கண்ணை = உள்ளமென்னும் கண்ணை, நிறுவில்=நிறுத்தினுல், பராங்கார நெற்

றிக்கு, நேரே = நேரில், எறி = பிரகாசிக்கிற, சிற்சுயம் சுடர் = ஞான வடிவமான சுயஞ்சோதி, ஒன்று (ஏ) = ஏகமாக விளங்கும். ஏ, அசை.

(போ - ரை) நினைப்பு மறப்பென்கிற இரண்டு புருவங்களின் மத்தியில் சாக்ஷிவடிவமாகிய சுழுமுனையில் பொருந்த உள்ளமென்னும் கண்ணை நிறுத்தினுல், பரம அகங்கார மென்னும் நெற்றிக்கு நேரில், பிரகாசிக்கிற ஞானவடிவமான சுயஞ்சோதி, ஏகமாக விளங்கும்.

புந்தி விருத்திப் புகழ்நாசி யின்னுனியிற்
சிந்தையெனும் பார்வை செலுத்துங்கால்—தொந்தமிலா
ஞானச் செழுஞ்சோதி நன்கு பிறங்குமதில்
வானத் தெலா மொடுங்கும் மன். (௲௬௫)

(ப - ரை) புந்தி விருத்தி = புத்தி விருத்தி என்று, புகழ் = புகழப்படுகிற, நாசியின் நுனியில், சிந்தை எனும், பார்வை = பார்வையை, செலுத்துங்கால் = வைக்குமிடத்து, தொந்தமிலா = இரு தன்மைகளில்லாத, ஞானச் செழுஞ்சோதி = அழகிய ஞானப்பிரகாசம், நன்குபிறங்கும் = நன்ருக விளங்கும், அதில், வானத்து = ஆகாயத்திற்போல, எல்லாம் ஒடுங்கும் (மன்) எல்லாம் அடங்கியிருக்கும். (மன், அசை.)

(போ - ரை) புத்தி விர்த்தியென்று புகழப்படுகிற நாசி நுனியில் சிந்தையெனும் பார்வையை வைக்குமிடத்து இருதன்மைகளில்லாத அழகிய ஞானப்பிரகாசம் நன்ருக விளங்கும். அதில் ஆகாயத்திற் போல எல்லாம் அடங்கியிருக்கும்.

அறுசீர் விருத்தம்.

சங்கற்ப விகற்பப்பிங் கலையிடைநா டியில்மனமாம்
 தனிப்பி ராணன்
பொங்குற்ருே டாதுசம பாவனையாஞ் சுழுமுனையிற்
 போக்கிற் சித்தப்
பங்கிற்சத் துவமூலக் கனல்ஞானக் குண்டலியைப்
 பயின்றெ ழுப்பும்
துங்கத்தாற் றுரியாதீ தப்பிரம ரந்திரத்திற்
 ருேய்தல் வீடே (௲௬௬)

(ப - ரை) சங்கற்ப, விகற்ப = விகற்பமென்கிற, பிங்கலை இடை நாடியில் = பிங்கலை இடை நாடிகளில், மனம், ஆம் = என்னும், தனி =

ஒப்பற்ற பிராணன், பொங்குற்று=விரிந்து, ஓடாது=ஓடாமல், சம பாவனை, ஆம் = எனும், சுழுமுனையில், போக்கில் = செலுத்தினால், சித்தப்பங்கில் = சித்தத்தின் பாகத்திலுள்ள, சத்துவ = சத்துவவிர்த்தியாகிய, மூலக்கனல்=மூலாக்கினி, ஞானக்குண்டலியை = ஞானமென் கிறகுண்டலி சக்தியை, பயின்று=கூடி, எழுப்பும் எழுப்புகின்ற, துங்கத்தால் = உயர்ந்த தன்மையால், துரியாதீத = துரியாதீதமென்னும், பிரமரந்திரத்தில், தோய்தல் = கலத்தல், வீடு (ஏ) மோக்ஷமாம் (ஏ, அசை)

(பொ - ரை) சங்கற்ப விகற்பமென்கிற பிங்கலைநாடி இடைநாடிகளில் மனமென்னும் ஒப்பற்ற பிராணன் விரிந்து ஓடாமல் சம பாவனையென்னும் சுழுமுனையிற் செலுத்தினால், சித்தத்தின் பாகத்திலுள்ள சத்துவ விர்த்தியாகிய மூலாக்கினி, ஞானமென்கிற குண்டலி சக்தியைக்கூடி யெழுப்புகின்ற உயர்ந்த தன்மையால் துரியாதீதமென்னும் பிரமரந்திரத்திற் கலத்தல் மோக்ஷமாம்.

மேலைநிதித் தியாசனமாம் பிராணயா மச்செயலால்
விருத்தி ஞான
மூலவனல் எழத்துரியா தீதமதி மண்டலத்தின்
முகிழ்த்துத் தோன்றுஞ்
சீலதுரி யானந்த வமிர்தமுணில் ஆன்மாவாந்
தேகஞ் சிந்தைச்
சாலவியா தியுமவித்தை மரணமுமற் றுயர்ஞான
சார மாமே— (௩௬௯)

(ப - ரை) மேலை=மேலான, நிதித்தியாசனம், ஆம்=எனும், பிராணயாம, செயலால்=செய்கையால், விருத்தி, ஞான = ஞானமென்கிற, மூல அனல்=மூலாக்கினி, எழ, துரியாதீதமாகிய, மதி= சந்திர, மண்டலத்தில், முகிழ்த்து=இளகி, தோன்றும்=உண்டாகின்ற, சீல=நல்ல, துரிய, ஆனந்த=சுகமென்னும, அமிர்தம் = அமிர்தத்தை, உணில் = உண்டால், ஆன்மா, ஆம் = என்கிற, தேகம், சிந்தை = சிந்தையெனும், சாலவஞ்சக, வியாதியும், அவித்தை=அஞ்ஞானமாகிய, மரணமும், அற்று=நீங்கி, உயர்= உயர்ந்த, ஞானசாரமாம். (ஏ - அசை)

(பொ - ரை) மேலான நிதித்தியாசனமெனும் பிராணயாமஞ் செய்கையால், விருத்திஞான மென்கிற மூலாக்கினியெழ, துரியாதீத

மாகிய சந்திரமண்டலத்தில், இளகியுண்டாகின்ற நல்ல துரியசுக மென்னும் அமிர்தத்தை யுண்டால், ஆன்மாவென்கிற தேகம், சிந்தையெனும் வஞ்சக வியாதியும், அஞ்ஞானமாகிய மரணமும், நீங்கி, உயர்ந்த ஞானசாரமாம்.

சிரவணமூ லாதாரஞ் சுவாதிட்டா னம்மனனந்
தியானந் தானே
கருதுமணி பூரகஞ்சோ பாதிகச மாதியநா
கதம் விசுத்தி
நிருவிகற்ப சமாதிசாட் சாத்கார மாஞ்ஞையிந்த
நிலையிற் றேர்ந்த
சொரூபம்விநா யகனயன்மால் உருத்திரனீச் சுரன்சிவனுந்
துவக்கு நெஞ்சே (ருகஉ)

(ப - ரை) சிரவணம், மூலாதாரம் = மூலாதாரமாம், சுவாதிட்டானம், மனனம் = மனனமாம், தியானம் (தான்) (ஏ) = நிதித்தியாசனம், கருது = நினைக்கப்படுகிற, மணிபூரகம் = மணிபூரகமாம், சோபாதிக = சவிகற்ப, சமாதி, அநாகதம் = அநாகதமாம், விசுத்தி நிருவிகற்பசமாதி = நிர்விகற்பசமாதி விசுத்தியாம், சாட்சாத்காரம், ஆஞ்ஞை = ஆஞ்ஞையாம், இந்த நிலையில் = முறையே இந்த நிலைகளில், தேர்ந்த, சொரூபம் = ஞானசொரூபம், விநாயகன், அயன் = பிரமன், மால் = விஷ்ணு, உருத்திரன், ஈச்சுரன் = மகேசுவரன், சிவன் = சதாசிவன் ஆம் = என்பவர்களாம், துவக்கு = சரீரமாவது, நெஞ்சே = மனமேயாம். (தான் = சாரியை) (ஏ, அசை)

(போ - ரை) சிரவணம் மூலாதாரமாம். சுவாதிட்டானம் மனனமாம். நிதித்தியாசனம் நினைக்கப்படுகிற மணிபூரகமாம். சவிகற்ப சமாதி அநாகதமாம். நிர்விகற்ப சமாதி விசுத்தியாம். சாட்சாத்காரம் ஆஞ்ஞையாம், முறையே இந்த நிலைகளில் தேர்ந்த ஞான சொரூபம் :-விநாயகன், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்பவர்களாம். சரீரமாவது மனமேயாம்.

வெண்பா.

நிராகார நிட்கிரிய நிர்மோக ஞான
சொரூபான்மா யானென்னுஞ் சூழ்ச்சி—பராவும்
இயமமே பூரணன்யான் ஏகசுகி யென்றல்
நியமமாம் மேன்மை நிலை (ருகஙு)

(ப - ரை) நிராகார = உருவமற்றதும், நிட்கிரிய = கிரியை யற்றதும், நிர்மோக = அஞ்ஞானமற்றதுமான, ஞான, சொரூபம் = சொரூபமாகிய, ஆன்மா = ஆத்மாவே, யான் = நான், என்னும், சூழ்ச்சி = ஆராய்ச்சியானது, பராவும் = பரவிய, இயமம் (ஏ) = இயமமாம், பூரணன்யான் = நான் பரிபூரணன், ஏகசுகி = ஏகமான ஆனந்தவடிவன், என்றல் = என்றறிதல், நியமமாம் மேன்மை நிலை = மேன்மை நிலையாகிய நியமமாம். (ஏ, அசை)

(பொ - ரை) உருவமற்றதும் கிரியையற்றதும் அஞ்ஞானமற்றதுமான ஞானசொரூபமாகிய ஆத்மாவே நானென்னும் ஆராய்ச்சியானது பரவிய இயமமாம். நான் பரிபூரணன் ஏகமான ஆனந்த வடிவனென்றறிதல் மேன்மையான நிலையாகிய நியமமாம்,

அறுசீர் விருத்தம்.

சற்சங்கங் கோமுகம்நல் மனனமயூ ராசனமாம்
சாட்சி விர்த்தி
அச்சந்தீர் கேசரிவே தாந்தவிசா ரஞ்சுவத்தி
காச னங்காண்
நிச்சிந்தை சுகாதனமே யேகபா வனைபதுமம்
நிதித்தி யாசம்
மெச்சும்பத் திரம்நேதி விவேகமுத்தம் பராங்காரம்
வீரந் தானே. (சூ00)

(ப - ரை) சற்சங்கங்கம், கோமுகம் = கோமுக ஆசனமாம், நல் = நல்ல, மனனம், மயூராசனமாம், சாட்சி விர்த்தி, அச்சந்தீர் = பயமற்ற, கேசரி = சிங்காதனமாம், வேதாந்த விசாரம், சுவத்திகாசனம் (காண்) = சுவஸ்திகாசனமாம், நிச்சிந்தை, சுகாதனம் (ஏ) = சுகாசனமாம், ஏகபாவனை, பதுமம் = பத்மாசனமாம், நிதித்தியாசம் = நிதித்தியாசனம், மெச்சும் = மெச்சுகின்ற, பத்திரம் = பத்திராசனமாம், நேதி = இதுவல்லவென்னும், விவேகம், முத்தம் = முத்தாசனமாம், பராங்காரம் = பரமாகங்காரம், வீரம் (தான்) (ஏ) = வீராசனமாம். (காண், முன்னிலையசை) (ஏ, ஏ, அசைகள்) (தான், சாரியை)

(பொ - ரை) சங்கற்பம் கோமுகாசனமாம், நல்லமனனம் மயூராசனமாம், சாட்சிவிர்த்தி பயமற்ற சிங்காதனமாம், வேதாந்த விசாரம் சுவஸ்திகாசனமாம், நிச்சிந்தை சுகாசனமாம், ஏகபாவனை பத்மாசனமாம், நிதித்தியாசனம் மெச்சுகின்ற பத்திராசனமாம், இதுவல்லவென்னும் விவேகம் முக்தாசனமாம், பரமாங்காரம் வீராசனமாம்.

### கலி நிலைத்துறை.

ஏக சாட்சியா னேயெவைக் குங்கரி யெனுந்தேர்
வாகிரேசகம் எவற்றினுங் கரியதாம் அதுவித்
தேக சாட்சியா னெனுமுரம் பூரகந் திடத்திச்
சோக பாவனை நிலைத்திடல் கும்பகத் தொழிலே (௩௦௧)

(ப-ரை) ஏகசாட்சி = ஒருதேகத்தில் சாக்ஷியாகிய, யானே = நானே, எவைக்கும் = சர்வத்துக்கும், கரி = சாக்ஷி, எனும், தேர்வு = தேர்ச்சி, ஆகு = நன்மையாகிய இரேசகம் = இரேசகமாம், எவற்றினும் = சர்வத்திற்கும், கரி (அது) ஆம் = சாக்ஷியாகிய, அது = அந்தப்பிரமமே, இத்தேகசாட்சி = இத்தேகத்தின் சாக்ஷியாகிய கூடஸ்தனை, யான் = நான், எனும் உரம் = என்னும் ஞானம், பூரகம் = பூரகமாம், திடத்து = திடமாக, இச்சோக பாவனை = இவ்விதமான அது நான் எனும் பாவனை, நிலைத்திடல், கும்பகத்தொழில் (ஏ) = கும்பகமாம்.

(அது, சொல்லுருபு) (ஏ, அசை)

(போ-ரை) ஒருதேகத்தின் சாக்ஷியாகிய நானே சர்வத்துக்குஞ் சாக்ஷியெனுந் தேர்ச்சி நன்மையாகிய இரேசகமாம், சர்வத்திற்குஞ் சாக்ஷியாகிய அந்தப் பிரமமே இத்தேகத்தின் சாக்ஷியாகிய கூடஸ்தனை நான் என்னும் ஞானம் பூரகமாம், திடமாக இவ்விதமான அது நான் எனும் பாவனை நிலைத்திடல் கும்பகமாம்.

### கலி விருத்தம்.

தனதி டத்தெழும் யாவையுந் தானெனும்
பினமில் ஞானம் பிரத்தியா காரமாம்
வினையில் சத்துவ விர்த்தி பரத்திடைத்
தினம் நிலைத்தல் தியான வியோகமே (௩௦௨)

(ப-ரை) தன்திடத்து, எழும் = தோன்றுகின்ற, யாவையும், தான் = தானே, எனும், பினம் இல் = பேதமில்லாத, ஞானம், பிரத்தியாகாரமாம், வினை இல் = தீமையற்ற, சத்துவவிர்த்தி, பரத்திடை = பிரமத்தில், தினம் = சதா, நிலைத்தல், தியானம், இயோகம் = (ஏ) யோகமாம் (ஏ - அசை)

(பினம் = பின்னம் என்பதன் இடைக்குறை)

(போ - ரை) தனதிடத்துத் தோன்றுகின்ற யாவையும் தானே யெனும் பேதமில்லாத ஞானம் பிரத்தியாகாரமாம், தீமையற்ற சத்துவ விர்த்தி பிரமத்தில் சதாநிலைத்தல் தியான யோகமாம்.

சருவா தாரத் தனிப்பரம் யானெனுந்
திருஞா னத்தின் திடமது தாரணை
தெரியா நின்ற தியேதாத் தியானமில்
பரமா நிற்றல் பழுதில் சமாதியே. (௩0௩)

(ப - ரை) சருவதார = சர்வத்திற்கும் ஆதாரமாகிய, தனி = ஒப்பற்ற, பரம் = பிரமம், யான் = நான், எனும், திரு = சிறந்த, ஞானத்தின், திடம் (அது) = திடமே, தாரணை = தாரணையாம், தெரியா நின்ற = தெரிகின்ற தியேதா = தியானிப்பவனும், தியானம் = தியானமும், இல் = இல்லாத, பரம் ஆ = பிரமமாக, நிற்றல் = நிலைத்திருத்தல், பழுதுஇல் = குற்றமற்ற, சமாதி (ஏ) = சமாதியாம், (அது, சொல்லுருபு) (ஏ, அசை.)

(போ - ரை) சர்வத்திற்கும் ஆதாரமாகிய ஒப்பற்ற பிரமம் நானெனும் சிறந்தஞானத்தின் திடமே தாரணையாம், தெரிகின்ற தியானிப்பவனும் தியானமுமில்லாத பிரமமாக நிலைத்திருத்தல் குற்றமற்ற சமாதியாம்.

கலி நிலைத்துறை.

அகில கோடியண் டங்களு மைம்புலத் தவையும்
இகலு மைம்பொறி யிடையிவை நினைவகத் திதுவும்
தகும றப்பினி லடங்குமிம் மறதியுஞ் சாட்சி
புகுமி தேயணி மாவெனுஞ் சித்தியற் புதமே. (௩0௪)

(ப - ரை) அகில = சகல, கோடி அண்டங்களும், ஐம்புலத்து = சத்தம் முதலிய ஐந்து உணர்ச்சிகளில், அடங்கும், அவையும் = அவ்வைந்து புலன்களும், இகலும் = எதிர்க்கின்ற, ஐம்பொறி இடை = செவிமுதலிய ஐந்து இந்திரியங்களில் அடங்கும், இவை = இவ்வைந்து இந்திரியங்களும், நினைவு அகத்து = நினைவில் அடங்கும், இதுவும் = இந்த நினைவும், தகும மறப்பினில் = பொருத்தமான மறதியில் அடங்கும், இம்மறதியும் = இந்த மறப்பும், சாட்சி = சாக்ஷியாகிய ஆத்மாவில், புகும் = அடங்கும், இதே = இத்தன்மையே, அணிமா எனும், சித்தி அற்புதம் (ஏ) = அற்புதமான சித்தியாம். (ஏ, அசை.)

(போ - ரை) சகலகோடி யண்டங்களும் சத்தம் முதலிய ஐந்து உணர்ச்சிகளிலடங்கும், அவ்வைந்து புலன்களும் எதிர்க்கின்ற செவி முதலிய ஐந்து இந்திரியங்களிலடங்கும், இவ்வைந்து இந்திரியங் களும் நினைவிலடங்கும், இந்த நினைவும் பொருத்தமான மறதியி லடங்கும். இந்தமறப்பும் சாக்ஷியாகிய ஆத்மாவிலடங்கும், இத் தன்மையே அணிமாவெனும் அற்புதமான சித்தியாம்.

காய மண்மன னப்புன லதனிடைக் கரைந்தே
தூய ஞானவக் கினியினுற் சுவறிடத் துரியம்
ஆய காற்றதை யுண்டுமே லதீதவிண் ணகத்தே
ஏய நின்றடங் கிடல்மகி மாவெனு மெழிலே. (௬0௫)

(ப - ரை) காய=சரீரமென்னும், மண், மனனப்புனல் அதனிடை =நினைவென்கிற நீரினிடத்து, கரைந்து (ஏ), தூய=பரிசுத்தமான ஞான = ஞானமெனும், அக்கினியினுல், சுவறிட = சுவறிப்போக, துரியம், ஆய=ஆகிய, காற்று, அதை உண்டு, மேல் = மேலான, அதீத விண் அகத்து (ஏ) = துரியாதீத மென்னும் ஆகாயத்தில், ஏய=பொருந்த, நின்று அடங்கிடல் = அடங்கி நிற்குதல், மகிமா எனும், எழில் (ஏ) = வல்லமையுள்ள சித்தியாம். (ஏ, ஏ, ஏ, அசைகள்.)

(போ - ரை) சரீரமென்னும் மண் நினைவென்கிற நீரினிடத்துக் கரைந்து, பரிசுத்தமான ஞானமெனும் அக்கினியினுற் சுவறிப்போ கத் துரியமாகிய காற்று, அதையுண்டு, மேலான துரியாதீதமென்னு மாகாயத்திற் பொருந்த அடங்தி நிற்குதல் மகிமாவெனும் வல்லமை யுள்ள சித்தியாம்.

கலி விருத்தம்.

மாயை யாற்சண்ட மாருதத் தாற்சிறி
தாயி னுஞ்சலித் தற்கரி யாக்கனத்
தூய ஞான சொரூப விளக்கமே
ஏய சித்தி யிடைக்கிரி மாவரோ. (௬0௬)

(ப - ரை) மாயையால்=மாயாசத்தியாலும், சண்டமாருதத்தால் =பிரசண்ட வாயுவினுலும், சிறிதாயினும், சலித்தற்கு அரியா = அசைதலே அறியாத, கன=கனமுள்ள, தூய = பரிசுத்த, ஞான சொரூப விளக்கமே, ஏய=பொருந்திய, சித்தியிடை = சித்திகளில், கிரிமா (அரோ)=கிரிமா எனப்படுவதாம், (அரோ, அசை).

(போ - ரை) மாயா சத்தியாலும் பிரசண்ட வாயுவினாலும் சிறிதாயினும் அசைதலேயறியாத கனமுள்ள பரிசுத்த ஞானசொரூப விளக்கமே, பொருந்திய சித்திகளில் கிரிமாவெனப் படுவதாம்.

தம்ப மும்விண் ணுஞ் சங்க முறுவகை
உம்ப ரும்மவற் றுள்ளும் விளங்கிடும்
பம்பு சூக்குமப் பான்மைப் பிரமமாஞ்
செம்ப தத்தின் றிகழ்ச்சி யிலகிமா. (௬0எ)

(ப - ரை) தம்பமும் = ஸ்தம்பப் பூச்சியும், விண்ணும் = ஆகாய மூன்றும், சங்க முறுவகை = கலவாதபடி, உம்பரும் அவற்றுள்ளும் = அவைகளின் உள்ளும் வெளியும், விளங்கிடும், பம்பு = பரவிய, சூக்குமப்பான்மை = சூட்சுமத் தன்மையுடைய, பிரமம், ஆம் = ஆகிய, செம்பதத்தின் = நல்ல நிலைமையின், திகழ்ச்சி = விளக்கமே, இலகிமா = இலகிமா என்னும் சித்தியாம், (பூதாகாயம், மனகாயம், அஞ்ஞானகாயம் என்னும் மூன்றும் சம்மந்தப்படாதது சிதாகாயம் என்பதாம்.)

(போ - ரை) ஸ்தம்பப் பூச்சியும் ஆகாய மூன்றுங் கலவாதபடி அவைகளின் உள்ளும் வெளியும் விளங்கிடும் பரவிய சூட்சுமத் தன்மையுடைய பிரமமாகிய நல்ல நிலைமையின் விளக்கமே இலகிமாவென்னும் சித்தியாம்.

வெண்பா.

மனுடானந் தாதி மருவுபதி னொன்றும்
பினமாகா தெந்தப் பிரமத்—தனிவாரிக்
கண்ணே துளிகளெனக் காணப் படுமதுவாந்
தெண்ணீர்மை யோர்வு பிராத்தி. (௬0அ)

(ப - ரை) மனுட ஆனந்தாதி = மனித ஆனந்தம் முதல், மருவும் = பொருந்திய, பதினொன்றும் = பதினொருவகை ஆனந்தமும், பினம் ஆகாது = பேதமாகாமல், எந்த, பிரம = பிரமமென்னும், தனி வாரிக்கண் (ஏ) = ஒப்பற்ற சமுத்திரத்தினிடத்தில், துளிகள், என = என்னும்படி, காணப்படும் = காணப்படுமோ, அது ஆம் = அந்தப் பிரமமாகும், தெள்நீர்மை = தெளிந்த தன்மையின், ஓர்வு = உணர்ச்சியே, பிராத்தி = பிராப்தி யென்னும் சித்தியாம். (ஏ, அசை) (பினம், பின்னம் என்பதன் இடைக்குறை.)

(போ - ரை) மனிதானந்தம் முதல் பொருந்திய பதினொருவகை யானந்தமும் பேதமாகாமல் எந்தப் பிரமமென்னும் ஒப்பற்ற சமுத்

திரத்தினிடத்தில் துளிகளென்னும்படி காணப்படுமோ அந்தப்பிரம மாகும் தெளிந்த தன்மையின் உணர்ச்சியே பிராப்தியெனும் சித்தியாம்.

எல்லாந் தனதுள் ளிருப்பத்தான் யாவையினும்
புல்லாநின் றானந்த பூரணமாய்ச்—சொல்லாதி
யந்த மிலதா யறிவுருவாய் நின்றிடலே
விந்தைப் பிராகா மியம் (௬௦௯)

(ப - ரை) எல்லாம், தனது உள் இருப்ப = தனக்குள் இருக்க, தான் யாவையினும் = எல்லாவற்றுள்ளும் தான், புல்லா நின்று = பொருந்தி, ஆனந்த பூரணமாய் = பூரணானந்த சொரூபமாகி, சொல் = சொல்லப்படுகிற ஆதி அந்தம் இலதாய் = ஆதியும் அந்தமும் இல்லாததாய், அறிவு உருவாய் = ஞானவடிவமாக, நின்றிடலே = இருப்பதே, விந்தை = அற்புமான, பிராகாமியம் = பிராகாமியசித்தியாம்—

(போ - ரை) எல்லாம் தனக்குள்ளிருக்க எல்லாவற்றுள்ளுந் தான் பொருந்திப் பூரணானந்த சொரூபமாகிச்சொல்லப்படுகிற ஆதியு மந்தமுமில்லாததாய் ஞானவடிவமாக விருப்பதே அற்புதமான பிராகாமிய சித்தியாம்.

காந்தம் நிகர்தருமென் கண்ணே கருந்தாதிற்
போந்த சருவ புவனங்கள்—வாய்ந்து
செயற்படும்யா னொன்றுஞ் சேயேனென்னுந் தேர்வே
துயக்கிலதா மீசத் துவம் (௬௧௦)

(ப - ரை) காந்தம் நிகர்தரும் = காந்தத்துக்குச் சமமான, என் கண்ணே = எனதிடத்திலேயே, கருந்தாதில் = இரும்பைப் போல, போந்த = விஸ்தாரமான, சருவ புவனங்கள் = சகல உலகங்களும், வாய்ந்து = தோன்றி, செயற்படும் = காரியப் படும், யான் = நான், ஒன்றும் செயேன் = ஒன்றையும் செய்கிற தில்லை, என்னும் தேர்வே = என்னும் தேர்ச்சியே, துயக்கு இலது ஆம் = தளர்வு அற்ற, ஈசத்துவம் = ஈசத்துவம் எனும் சித்தியாம். (செயேன் = செய்யேன் என்பதனிடைக்குறை)

(போ - ரை) காந்தத்துக்குச் சமமான என்னிடத்திலேயே இரும்பைப் போல விஸ்தாரமான சகல உலகங்களுந் தோன்றிக் காரியப்படும். நான் ஒன்றையுஞ் செய்கிறதில்லை யென்னுந் தேர்ச்சியே, தளர்வற்ற ஈசத்துவமென்னும் சித்தியாம்.

பிரமன் முதலாய்ப் பிபீலிகையந் தங்கள்
பரமப் பிரேமாஸ் பதமாய்க்—கருதுமணு
ஆதிபகி ரண்டமுடி வாயசரு வாத்துமக
போதம் வசித்துவமாம் பொற்பு. (௬௧௧)

(ப - ரை) பிரமன் முதலாய் = பிரமதேவன் முதலாக, பிபீலிகை = சிற்றெறும்பு, அந்தங்கள் = முடிவாகவுள்ள பிராணிகளுக்கெல்லாம், பரம = மேலான, பிரேமாஸ்பதம் ஆய் = அன்பிற்கு இடமாய், கருதும் = நினைக்கப்படுகிற, அணு ஆதி = அணுமுதல், பகிரண்டம் = வெளியண்டங்கள், முடிவு ஆய = முடிபாகிய, சருவாத்துமக = எல்லாம் தானுயிருக்கும், போதம் = ஞானமே, வசித்துவம் ஆம் பொற்பு = அழகான வசித்துவமென்னும் சித்தியாம்.

(போ - ரை) பிரமதேவன் முதலாகச் சிற்றெறும்பு முடிவாகவுள்ள பிராணிகளுக்கெல்லாம் மேலான அன்பிற்கிடமாய் நினைக்கப்படுகிற அணுமுதல் வெளியண்டங்கள் முடிவாகிய எல்லாம் தானுயிருக்கும் ஞானமே அழகான வசித்துவமென்னும் சித்தியாம்.

குறள் வெண்பா.

யானின்று தானே யெனதின்று தன்னதே
தானென்ற லீசன் சரண். (௬௧௨)

(ப - ரை) யான் இன்று = நான் என்பதில்லை, தானே = தானாகிய சிவமே உள்ளது, எனது இன்று = எனதென்பதும் இல்லை, தன்னதே தான் = எல்லாம் அந்தச்சிவத்தின் சக்தியே தான், என்றல் = என்னும் நிச்சயமே, ஈசன் சரண் = ஈசனது அடைக்கலமாம்.

(போ - ரை) நானென்பதில்லை, தானாகிய சிவமேயுள்ளது, எனதென்பதுமில்லை எல்லாம் அந்தச்சிவத்தின் சத்தியேதானென்னும் நிச்சயமே, ஈசனுக்கு அடைக்கலமாம்.

ஞானலோகம் என்னும் யுக்தி சாகரம் முற்றிற்று.

ஸ்ரீகுருவே நம:

லாலி எலெக்டிரிக் அச்சுக்கூடம், தஞ்சாவூர்.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் அடியிற்கண்டவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் :—

---

1. ஸ்ரீ T. K. இராமசாமி நாயுடு, மண்டி, கரூர்.
2. „ V. R. துரைசாமி நாயுடு, இரும்பு வியாபாரம், கரூர்.
3. „ ரே. வேங்கடசாமி நாயுடு. வாங்கல், பழையவூர், கரூர்வழி.

---

புத்தகத்தின் விலை ரூ ௫

[தபால் வி. பி. கட்டணம் தனி.]